# திருக்குறள்

## உரைக்களஞ்சியம்

பொருட்பால் - அங்கவியல்

பகுதி - 2

ச. தண்டபாணி தேசிகர்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

# திருக்குறள்
# உரைக்களஞ்சியம்

(பொருட்பால் - அங்கவியல்)

பகுதி - II

பத்மபூஷன் டாக்டர் மகாவித்துவான்

ச. தண்டபாணி தேசிகர்

முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

உதவி :

டாக்டர் திருமதி. சலஜா கோபிநாத்

இணைப்பேராசிரியர்

தலைவர்

திருக்குறள் ஆய்வகம்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை-625 021

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

© Publications Division
Madurai Kamaraj Univarisity
Madurai - 615 021.

நூலகக் குறியீட்டு எண் : 031, 1 C 5 : g

பதிப்பு எண் : 141

திருக்குறள் ஆய்வக வெளியீட்டு எண் : 17

பதிப்பு விவரங்கள் :

1. உரைக்களஞ்சிய ஆசிரியர் : பத்மபூஷண் டாக்டர்
மகாவித்துவான்
ச. தண்டபாணி தேசிகர் (1905)
(Padma Booshan Mahavidwan
S. Dhandapani Desigar)
முன்னாள் விரிவுரையாளர்
திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

2. தலைப்பு : திருக்குறள் - உரைக்களஞ்சியம்
பொருட்பால்-அங்கவியல் பகுதி II
(Thirukkural variorum Edition)

3. பதிப்பு :

அ. படம் : மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(Madurai Kamaraj University)

ஆ. பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.
(Publications Division)
Madurai Kamaraj University
Madurai

இ. ஆண்டு : முதற்பதிப்பு 1999

4. மொத்த பக்கங்கள் : 20 + 478

5. பொருள் : அங்கவியல்

6. அச்சும் பதிப்பும் : மேக்ஸி பிரிண்டர்ஸ், மதுரை
போன் : 604702

7. விலை - ரூ. 70-00

# துணைவேந்தர் அணிந்துரை

களஞ்சியம் என்றால் பயன்படும் பொருள்களை நீண்ட காலத்திற்குச் சேமித்து வைக்கும் இடம் என்பது பொருள்: அதாவது களஞ்சியத்தில் தேவையான பொருள்கள் இருப்பில் இருக்கும்; தேவைப்படும் போது அவற்றை எடுத்து மக்கள் பயன் கொள்வர். நெற்களஞ்சியம், பொற் களஞ்சியம் என வரும் வழக்காறுகள் நமக்கு இதனை உணர்த்துகின்றன. மக்களின் புதுத் தேவைகளை நிறைவு செய்யும் இத்தகைய களஞ்சியங்கள் ஒரு பால் இருக்க, மக்களின் அறிவுத் தேவைகளை நல்லுணர்வுத் தேடல்களை நிறைவு செய்பவைதான் கலைக்களஞ்சியங்கள்! அறிவுத் தேடலில் ஈடுபடும் ஒருவனுக்குத் தேவையான ‘எல்லாப் பொருளும்’ கலைக்களஞ்சியங்களில் கிடைக்கும்.

கலைக்களஞ்சியங்கள் பல்பொருள் பற்றியவை; ஒரு பொருள் குறித்த பல சிந்தனைகளை விளக்கும் நூல்கள் தமிழில் உண்டா? ஆம்! உண்டு! என்பதை உரைக்-களஞ்சியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. தமிழ் இலக்கிய மரபில் மிகுதியான உரைகளைப் பெற்ற ஒரே தனிப்பெரும் நூல் திருக்குறள்தான்; ஒவ்வொரு காலத்திலும் உரை-யாசிரியர்கள் பலரின் புலமை விளையாட்டுக்குரிய களத்தினைத் திருக்குறள் அமைத்துக் கொடுத்துள்ளது. திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள் ஒவ்வொன்றும் அதனதன் அளவில் தனித்திறன் வாய்ந்தவை. குறளினைப் பயிலும் ஒரு தமிழன் அதன் உரைகளையும் பயில்வது இன்றியமையாததாகும்; உரைகளை ஒருவன் தனி முயற்சியில் தேடிக் கண்டு படிப்பது மிகுந்தஇடர்ப்பாடுடைய செயல் என்பதால், அனைத்து உரைகளும் ஒரே இடத்தில் கிடைக்கத்தக்க வகையில் உரைக்களஞ்சியம் என்ற நூல் வகை அமைகின்றது.

திருக்குறள் உரைக்களஞ்சியம் - அங்கவியல் பகுதி இரண்டு என்ற இந்நூலும் திருக்குறள் உரைக்களஞ்சிய வரிசையில் வெளிவருகிறது. மகாவித்துவான் முனைவர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் இந்நூலை யாத்திருக்கின்றார்.

திருக்குறளுக்கு எழுதப்பட்ட பல்வேறு உரைகளைத் தொகுத்துக் கூறுவதுடன் அவற்றின் நுட்பங்களையும் இந்நூலாசிரியர் அலசி ஆராய்கின்றார். 'தொகுப்பும் குறிப்பும்' என்ற தலைப்பில் ஒவ்வொரு குறளுக்கும் மகாவித்துவான் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் பகுதி மிகுந்த நுட்பம் வாய்ந்ததாகும். சான்றாக, 'பேதைமை' என்ற சொல் பல உரையாசிரியர்களால் அறியாமை என்ற பொருளில் விளக்கப்படுவதை எடுத்துக்காட்டி விளக்கும் பாங்கு மிக நுண்மையானதாகும். பேதைமை என்பது 'நல்லது-கெட்டது ஊதியம் பயப்பது என்பவற்றை உய்த்துணரமாட்டாத மயக்க உணர்வேயாகும்' என்று பல சான்றுகளைச் சுட்டி நிறுவுகின்றார் மகாவித்துவான் அவர்கள்.

முதிர்ச்சி பெற்ற அறிஞர் எதனையும் மறுத்துக் கூறும் போதும் தமது சால்பினை விட்டு விலகமாட்டர். மகாவித்துவான் அவர்கள் தனக்கு முந்தைய உரையாசிரியர்களின் கருத்துக்களை மறுத்துப் புதிய விளக்கம் தரமுற்படும் போது, ''ஆகவே அறியாமை என்று எழுதும் ஆசிரியர்களின் கருத்து முற்றும் அறியாமையைக் குறிப்பதாகாது'' என்று நயம்படக் கூறுகின்றார்; மறுப்புக்குரிய கருத்துக்களின் வழியே சென்று மறுத்துத் தன் கருத்தை நிறுவும் ஆய்வு நாகரிகம் போற்றுதலுக்குரியது; முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கது.

'' ஒப்புமைப் பகுதி '' '' மேற்கோள்பகுதி '' என்ற பகுதிகள் மிகுந்த பயனுடையவை. பல நூல்களை ஒருவன்

முயன்று கற்றுப் பெறக்கூடிய அறிவையும் அனுபவத்தினையும் இந்த உரைக்களஞ்சிய நூல்களைப் பயில்வதன் மூலம் பெறலாம்.

திருக்குறள் முழுமைக்கும் உரைக்களஞ்சிய நூல்கள் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் எழுதப்பட்டு, மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையின் மூலமாக வெளியிடப்படுகின்றன. இத்தகைய அரிய அறிவுக் கருவூலங்கட்கு உரிய ஏற்பினைத்தந்து ஆக்கமளிப்பது தமிழ் கூறு நல்லுலகத்தின் தலையாய கடமையாகும்.

கு. ஆளுடைய பிள்ளை

3—9—97

# பதிப்புரை

திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால் - அங்கவியல் (பகுதி இரண்டு) என்னும் இந்நூல் திருக்குறள் ஆய்வகம் வெளியிட்டுள்ள திருக்குறள் உரைக்களஞ்சிய வரிசையில் இடம் பெற்ற எட்டாவது தொகுதியாகும். மகாவித்துவான் டாக்டர் தண்டபாணி தேசிகர் அவர்களும் அவருக்கு உதவியாக நானும் இணைந்து பத்தாண்டுகள் பணியாற்றியதன் பயனாகவே இந்நூல் முழுமைத்துவம் பெற்றுள்ளது.

இத்தொகுதியில் திருக்குறளில் இடம்பெறும் 79-வது அதிகாரமான 'நட்பு' முதல் 95-வது அதிகாரமான 'மருந்து' ஈறாகப் பதினேழு அதிகாரங்களுக்குரிய குறட்பாக்களும் விளக்கவுரையும் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் தம் அறிவாற்றலையும் இலக்கிய, இலக்கணப்புலமையையும் பண்பையும் பறைசாற்றும் விதத்தில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் எல்லா தொகுதிகளைப் போலவே பழைய உரைகள் நிரல்பட கொடுக்கப்பட்டு உரைவிளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன. தேசிகர் ஐயா அவர்கள் வழங்கிய தொகுப்பும் குறிப்பும் பகுதியில புத்துரைகளை வேண்டுமிடத்து வழங்கி அவற்றின் சிறப்பினை விளக்கியுள்ளார் இதுவரை வெளிவந்துள்ள பல்வேறு உரைகளை நுணுகி ஆராய்ந்து அவற்றின் சிறப்பையும் சிறப்பின்மை போன்ற கருத்துக்களைத் தக்க காரணகாரியங்களுடன் விளக்கியுள்ளார்.

எடுத்துக்காட்டாகப் 'பேதைமை' அதிகாரத்திற்கு அவர்தம் தொகுப்பும் குறிப்பும் பகுதியில் எழுதும் விளக்கத்தைக் குறிப்பிடலாம் (பக். 143 - 144).

மேலும் ஐயா அவர்கள், தொகுப்பும் குறிப்பும் பகுதியில் தாம் கல்வி கற்றபோது தம் ஆசிரியர் மட்டுவில் வேற்பிள்ளை அவர்கள் நவின்ற விளக்கத்தையும் கூறி விளக்குவதை 839-ஆம் குறள் விளக்கத்தில் காணும்போது அவரது நினைவாற்றலையும், ஆழ்ந்த புலமைத் திறந்தையும் உணரமுடிகிறது.

"பெரியாரைப் பிழையாமை" என்னும் அதிகாரத்தில் அமைந்த இரண்டாம் குறட்பாயில் இடப்பெறும் 'ஆற்றுவார் என்பதற்கு "முனிவர்' சாத்திரநீதி தவநெறிகளாலே பெரியோர்" என்று மணக்குடவரும் கவிராசரும உரை வகுத்திருக்க ஐயா அவர்கள் முனிவர் தவசிகளை மட்டும் பெரியார் என்றல் இயல் நோக்கிற்கு இயையாமையை விளக்குவர்.

இந்நூலைக் காணும்போது வள்ளுவரின் சிந்தனை மேன்மேலும் பல மடங்காகப் பல்கிப் பெருகி வளர்வதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் ஒவ்வொரு அதிகாரத்தின் பின்னும் குறள் வைப்பு முறை தரப்பட்டுள்ளது குறிப்பிட தக்கது.

இக்களஞ்சியத்தைப் படைத்த முதுபெரும் பேரறிஞர் தமிழ்ச் செம்மல் ஐயா அகர்கள் இன்று நம்மிடையே இல்லை. ஆயின் அவர் வழங்கிய கருத்துக்கள் நம் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக விளங்கு கின்றன என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

இந்நூலை வெளிக்கொணர பலவகையில் உதவி செய்த முன்னாள் பதிப்பாளர் டாக்டர் விநாயகமூர்த்தி அவர்களுக்கும் தற்போதைய பதிப்பாளர் டாக்டர் ம. திருமலை அவர்களுக்கும் எங்கள் நன்றி.

கடந்த நான்காண்டு காலமாக இந்நூலின் அச்சுப்பணியை மேற்கொண்ட மேக்ஸி அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

ஜலஜா கோபிநாத்
தலைவர்
திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை - 21.

மதுரை - 21.
21—1—98

# முன்னுரை

இப்பணி வளர்ந்து மலர ஏடுகள், பழைய சட்டுரைத்தாள்கள், ஆய்வு மலர்கள் தந்துதவிய, பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரித் தாளாளர் சிவத்திரு இராமசாமி அடியார் அவர்களுக்கும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்களுக்கும், செந் தமிழ், செந்தமிழ்ச்செல்வி. வள்ளுவர், குறளியம் போன்ற தாள்களின் தாளாளர்கள் பலருக்கும் என்னுடைய பணிவான நன்றி என்றும்உரிய தாகும்.

இப்பணியில் என்னை ஈடுபடுத்திய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கும், வழிவழித் துணை வேந்தர்களான டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் அவர்களுக்கும், டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கட்கும், பேராசிரியர் ஜா. இராமச் சந்திரன் அவர்களுக்கும், இந்நாள் துணைவேந்தர், விஞ்ஞானக்கலை வேந்தர், கல்வியுலகிலும் சமுதாய சமயப் பணிகளிலும் பேராதரவு காட்டிவரும் டாக்டர் சீனி. கிருட்டிணசாமி அவர்களுக்கும் மன நிறைந்த நன்றி. வழக்கம்போல உரைக்களஞ்சியம் சிறப்புடன் வரப் பல்லாற்றானும் வழிதுறைகளை வகுத்துக் கொடுத்து ஊக்கம் தந்து உதவும் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தமிழண்ணல் அவர் களுக்கும் நன்றி. உற்றுழி உதவியுறுதுணையாக இருக்கும் திருக் குறள் ஆய்வுத் துறைத் தலைவர் டாக்டர் தி. முருகரத்தனம் அவர் களுக்கும் நன்றி. அயரா அன்போடு படியெடுத்தும், ஒப்பு நோக்கி யும, மேற்கோட்பகுதி ஒப்புமைப் பகுதிகளை மூலநூலோடு ஒப்பு நோக்கிச் செப்பனிட்டும், தந்த ஆய்வுத்துறை உதவியாளர் திருமதி சலசா கோபிநாத், எம். ஏ, அவர்களுடைய முழுநேர உழைப்பும் உதவியும் பாராட்டிற்குரியன. இவர் மேன்மேலும் இத்தகைய பணி களில் வளர்ந்து தமிழன்னையின் அருளுக்கு இலக்காகி வாழ்வாராக.

பல ஆண்டு உழைத்த உழைப்பும், அமைப்பாளர் குழு தந்த ஆணையின் வண்ணம் உருவாக்கிய அருமையும் அவ்வப்போது செந்தமிழ் செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், குறளியம், பல ஆண்டுமலர்கள், விழாமலர்களில் வந்த கட்டுரைகள் இவற்றால் களஞ்சியம் நிரம்பி வழிகிறது. அறிவுப்பசியைப்போக்கி ஆய்வு வன்மையை அளிக்கிறது. இதில் நிறை குறைகண்டு காட்டுபவர்களே இந்நூலை ஊன்றிப் படித்தவர்கள்; பணியாளன் அறிவைப் பதஞ்செய்பவர்கள்; ஆகையால், குணங்கூறிப் பாராட்டுவானினும், குறைகூறி என்னை வளர்ப்பவர்களே 'எண்ணின் எனக்கினிய' ராவார். ஆதலால் அவர்கள் உதவி இப்பதிப்பு முடியும் வரையில் எனக்கு மிகத்தேவை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருள் துணைநிற்கும். விரைவில் உரைக்களஞ்சியம் முற்றுப் பெற்று நிறைவு விழாப்பெறும் என்று எதிர்நோக்கி அங்கயற் கண்ணியம்மையின் திருவடிகளைப் போற்றி அமைகின்றேன்.

இங்ஙனம்

ச. தண்டபாணி தேசிக

குறிப்பு : 'அறத்துப்பால் — துறவறவியலி'ல் உள்ள முகவுரைப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது

# இதனுள் அடங்கியவை


துணைவேந்தர் அணிந்துரை 3-5

பதிப்புரை 6-7

முன்னுரை — தண்டபாணி தேசிகர் 8-9

சுருக்க விளக்கம் 17-20

அங்கவியல்

79. நட்பு 1

79.1 செயற்கரிய 3

79.2 நிறைநீர 7

79.3 நவில்தொறும் 11

79.4 நகுதற் 13

79.5 புணர்ச்சி 15

79,6 முகநக 20

79.7 அழிவினவை 22

79.8 உடுக்கை 25

79.9 நட்பிற்கு 28

79.10 இனையர் 30

80. நட்பாராய்தல் 33

80.1 நாடாது 34

80.2 ஆய்ந்தாய்ந்து 37

80.3 குணனும் 39

80.4 குடிப்பிறந்து 42

80.5 அழச்சொல்லி 44

80.6 கேட்டினும் 47

80.7 ஊதியம் 49

80.8 உள்ளற்க 51

80.9 கெடுங்காலை 54

80.10 மருவுக 58

81 பழமை 62

81.1 பழமை எனப்படுவது 64

81.2 நட்பிற்கு உறுப்பு 66

81.3 பழகிய 69

81.4 விழைதகையான் 70

81.5 பேதைமை 72

81.6 எல்லைக்கண் 77

81.7 அழிவந்த 79

81.8 கேளிழுக்கம் 81

81.9 கெடாஅ 83

81.10 விழையார் 85

82. தீ நட்பு 87

82.1 பருகுவார் 90

82.2 உறின் நட்டு 92

82.3 உறுவது 94

82.4 அமரகத்து 97

82.5 செய்தேமம் 100

82,6 பேதை 102

82.7 நகைவகையர் 105

82.8 ஒல்லும் கருமம் 109

82.9 கனவினும் 111

82.10 எனைத்தும் 113

83. கூடா நட்பு 116

83.1 சீரிடம் 118

83.2 இனம் போன்று 120 அ

83.3 பல நல்ல 124

83.4 முகத்தின் 125

83,5 மனத்தின் 128

83,6 நட்டார் 130

| | | |
|---|---|---|
| 83.7 | சொல் வணக்கம் | 132 |
| 83.8 | தொழுதகை | 134 |
| 83.9 | மிகச்செய்து | 137 |
| 83.10 | பகைநட்பாம் | 139 |
| **84.** | **பேதைமை** | 142 |
| 84.1 | பேதைமை என்பது | 144 |
| 84.2 | பேதைமையுள் | 147 |
| 84.3 | நாணாமை | 148 |
| 84.4 | ஓதிஉணர்ந்தும் | 151 |
| 84.5 | ஒருமைச் | 153 |
| 84.6 | பொய்படும் | 157 |
| 84.7 | ஏதிலார் | 160 |
| 84.8 | மையல் | 162 |
| 84,9 | பெரிதினிது | 164 |
| 84.10 | கழாஅக்கால் | 167 |
| **85.** | **புல்லறிவாண்மை** | 170 |
| 85.1 | அறிவின்மை | 171 |
| 85.2 | அறிவிலான் | 174 |
| 85.3 | அறிவிலார் | 176 |
| 85.4 | வெண்மை | 178 |
| 85.5 | கல்லாத | 179 |
| 85.6 | அற்றம் | 181 |
| 85 7 | அருமறை | 184 |
| 85.8 | ஏவவும் | 186 |
| 85.9 | காணாதற் | 189 |
| 85.10 | உலகத்தார் | 194 |
| **86.** | **இகல்** | 198 |
| 86.1 | இகலென்ப | 199 |
| 86.2 | பகல் கருதிப் | 202 |

86.3 இகலென்னும் . 203

86.4 இன்பத்துள் 206

86.5 இகலெதிர் 207

86.6 இகலின் 209

86.7 மிகன் மேவல் 212

86.8 இகலிற்கு 214

86.9 இகல் காணான் 215

86.10 இகலானாம் 217

87. பகைமாட்சி 221

87.1 வலியார்க்கு 225

87.2 அன்பிலன் 228

87.3 அஞ்சும் 231

87.4 நீங்கான் 233

87.5 வழிநோக்கான் 235

87.6 காணாச் 237

87 7 கொடுத்தும் 239

87.8 குணனிலவாய்க் 241

87.9 செறுவார்க்குச் 243

87.10 கல்லான் 245

88. பகைத்திறம தெரிதல் 249

88.1 பகைஎன்னும் 251

88.2 வில்லேர் 253

88.3 ஏமுற்றவரினும் 256

88 4 பகைநட்பாக் 258

88.5 தன்துணை 260

88.6 தேறினும் 263

88.7 நோவற்க 265

88.8 வகை அறிந்து 267

88.9 இளைதாக 270

88,10 உயிர்ப்ப 273

89. உட்பகை 276

89.1 நிழல் நீரும் 277

89.2 வாள்போல் 280

89.3 உட்பகை 282

89.4 மனம்மாணா 285

89 5 உறல் முறையான் 287

89.6 ஒன்றாமை 289

89.7 செப்பின் 291

89.8 அரம்பொருத 239

89.9 எட்பக 295

89.10 உடம்பாடு 296

90. பெரியாரைப் பிழையாமை 300

90.1 ஆற்றுவார் 303

90.2 பெரியாரைப் 305

90.3 கெடல் வேண்டின் 308

90.4 கூற்றத்தைக் 311

90.5 யாண்டுச்சென்றி 313

90.6 எரியால் 315

90 7 வகைமாண்ட 317

90.8 குன்றன்னார் 319

90.9 ஏந்திய 322

90.10 இறந்தமைந்த 324

91. பெண்வழிச்சேறல் 327

91.1 மனைவிழைவார் 329

91,2 பேணாது 331

91.3 இல்லாள்கண் 334

91.4 மனையாளை 336

91.5 இல்லாளை 337

91.6 இமையாரின் 339

| | | |
|---|---|---|
| 91.7 | பெண் ஏவல் | 341 |
| 91.8 | நட்டார் | 343 |
| 91.9 | அறவினையும் | 345 |
| 91.10 | எண் சேர்ந்த | 347 |
| 92. | வரைவின் மகளிர் | 350 |
| 92.1 | அன்பின் விழையார் | 352 |
| 92.2 | பயன் தூக்கிப் | 355 |
| 92.3 | பொருட்பெண்டிர் | 357 |
| 92.4 | பொருட்பொருளார் | 360 |
| 92.5 | பொதுநலத்தார் | 365 |
| 92.6 | தந்நலம் | 366 |
| 92.7 | நிறைநெஞ்சம் | 369 |
| 92.8 | ஆயும் அறிவினர் | 371 |
| 92.9 | வரைவிலா | 373 |
| 92.10 | இருமனப் | 375 |
| 93. | கள்ளுண்ணாமை | 380 |
| 93.1 | உட்கப்படாஅர் | 381 |
| 93,2 | உண்ணற்க | 384 |
| 93.3 | ஈன்றாள் | 385 |
| 93.4 | நாணென்னும் | 387 |
| 93.5 | கையறியாமை | 389 |
| 93.6 | துஞ்சினார் | 391 |
| 93.7 | உள்ளொற்றி | 395 |
| 93.8 | களித்தறியேன் | 397 |
| 93.9 | களித்தானை | 399 |
| 93.10 | கள்ளுண்ணாப் | 402 |
| 94. | சூது | 405 |
| 94.1 | வேண்டற்க | 406 |
| 94.2 | ஒன்றெய்தி | 408 |
| 94.3 | உருளாயம் | 409 |

94.4 சிறுமை 412
94.5 கவறும் 415
94.6 அகடாரார் 418
94.7 பழகிய செல்வமும் 420
94.8 பொருள் கெடுத்துப் 422
94.9 உடைசெல்வம் 423
94.10 இழத்தொறூஉம் 425

95. மருந்து 430

95.1 மிகினும் 432
95.2 மருந்தென 435
95.3 அற்றால் 437
95.4 அற்றதறிந்து 440
95.5 மாறுபாடில்லாத 442
95.6 இழிவறிந்து 445
95.7 தீயளவன்றித் 447
95.8 நோய்நாடி 449
95.9 உற்றான் 451
95.10 உற்றவன் 453
நூலோதி 459
குறள்முதற்குறிப்பகராதி 468
பிழைத்திருத்தம் 473

# சுருக்க விளக்கம்

1. **ஆசிரியர்கள் :**

| | |
|---|---|
| இராம. | நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை |
| இளம். | இளம்பூரணர் |
| கவிராசர். | கவிராச பண்டிதர் |
| கா.சு. | கா.சுப்பிரமணியபிள்ளை |
| காரி. | காரி ரத்னக்கவிராயர் |
| காளி. | காளிங்கர் |
| குழந்தை. | புலவர் குழந்தை |
| கோ.வ. | கோ.வடிவேலு செட்டியார் |
| சங்கர. | சங்கர நமச்சிவாயர் |
| சபாபதி. | ஈக்காடு சபாபதிமுதலியார் |
| சாமி.சிதம். | சாமி சிதம்பரனார் |
| சி.இ. | சி. இலக்குவனார் |
| சுவாமி. | சுவாமி. நாததேசிகர் |
| சேனா. | சேனாவரையர் |
| தெ.பொ.மீ. | தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் |
| தெய்வ. | தெய்வச்சிலையார் |
| தேவநேயர். | தேவநேயப்பாவாணர் |
| நச்சி. | நச்சினார்க்கினியர் |
| பரிதி. | பரிதியார் |
| பரிப். | பரிப்பெருமாள் |
| பரிமேல். | பரிமேலழகர் |
| பழைய 2 | பழைய உரை 2 |
| பெரியாழ். | பெரியாழ்வார் |
| மணக். | மணக்குடவர் |
| மயிலை. | மயிலைநாதர் |
| மு.கோ. | மு.கோவிந்தசாமி |

| | |
|---|---|
| மு.ரா.அரு. | மு.ரா. அருணாசலக்கவிராயர் |
| மு.ரா.கந்த. | மு.ரா. கந்தசாமிப்புலவர் |
| மு.வ. | மு.வரதராசனார் |
| வ.சுப.மா. | வ.சுப.மாணிக்கம் |
| வரத. | ஜி.வரதராசன் |

**நூல்கள்**

| | |
|---|---|
| அகம். | அகநானூறு |
| ஆத்தி. | ஆத்திச்சூடி |
| அறநெறி. | அறநெறிச்சாரம் |
| இன்னா. | இன்னாநாற்பது |
| கச்சி. | கச்சிக்கலம்பகம் |
| கந்த. | கந்தபுராணம் |
| அசமுகிபுலம். | அசமுகிபுலம்புறுபடலம் |
| சூரானமைச். | சூரனமைச்சியற்படலம் |
| கம்ப. | கம்பராமாயணம் |
| கலி. | கலித்தொகை |
| காஞ்சி. | காஞ்சிப்புராணம் |
| நகரப். | நகரப்படலம் |
| குறுந். | குறுந்தொகை |
| கொன்றை. | கொன்றைவேந்தன் |
| சம்பந்தர். | ஞானசம்பந்தர்தேவாரம் |
| சிலம்பு. | சிலப்பதிகாரம் |
| பதி. | பதிகம் |
| சிவஞான. | சிவஞானசித்தியார் |
| சிறுபஞ்ச. | சிறுபஞ்சமூலம் |
| சீவக. | சீவகசிந்தாமணி |
| சுக்கிர. | சுக்கிரநீதி |

| | |
|---|---|
| சூளா. | சூளாமணி |
| திருநாவுக். | திருநாவுக்கரசர் தேவாரம் |
| தண்டி. | தண்டியலங்காரம் |
| தனிப். | தனிப்பாடல் திரட்டு |
| திருவெங்கை | திருவெங்கையுலா |
| தணிகை. | தணிகைப்புராணம் |
| தமிழ். | தமிழ்விடுதூது |
| திரி. | திரிகடுகம் |
| திருக்கோவை. | திருக்கோவையார் |
| திருவெங்கை. | திருவெங்கையுலா |
| தொல். | தொல்காப்பியம் |
| எழுத்து. | எழுத்ததிகாரம் |
| செய்யுள். | செய்யுளியல் |
| சொல். | சொல்லதிகாரம் |
| பொருள். | பொருளதிகாரம் |
| விருத்தி. | விருத்தியுரை |
| நள. | நளவெண்பா |
| நற். | நற்றிணை |
| நன். | நன்னூல் |
| நாலடி. | நாலடியார் |
| நான்மணிக். | நான்மணிக்கடிகை |
| நீதி., நீதிநெறி. | நீதிநெறிவிளக்கம் |
| நீல. | நீலகேசி |
| பரி. | பரிபாடல் |
| பழ. நா. | பழமொழிநானூறு |
| பிங்கலந்தை. | பிங்கலநிகண்டு |
| பிரபு. | பிரபுலிங்கலீலை |

| | |
|---|---|
| பு.வெ. | புறப்பொருள்வெண்பாமாலை |
| புறம். | புறநானூறு |
| பெரிய. | பெரியபுராணம் |
| பெருங். | பெருங்கதை |
| மணி. | மணிமேகலை |
| மதுரைக். | மதுரைக்காஞ்சி |
| மாற. | மாறனலங்காரம் |
| மனு. | மனுநீதிசாத்திரம் |
| மனோ. | மனோன்மணியம் |
| முதுமொழிக். | முதுமொழிக்காஞ்சி |
| யசோ. | யசோதரகாவியம் |
| யா.கா. | யாப்பருங்கலக்காரிகை |
| யா.வி. | யாப்பருங்கலவிருத்தி |
| வளை.,வளையா. | வளையாபதி |
| வாக்கு. | வாக்குண்டாம் |
| விநா.அரசி. | விநாயகர் அரசியல்புராணம் |
| வில்லி. | வில்லிபாரதம் |
| வீர. | வீரசோழியம் |

3. பிற :

| | |
|---|---|
| அத். | அத்யாயம் |
| அதி. | அதிகாரம் |
| சூ. | சூத்திரம் |
| தொ.கு. | தொகுப்பும் குறிப்பும் |
| பக். | பக்கம் |

# 79. நட்பு

அ) மணக் ·: நட்பாவது நட்பாமாறு கூறுதல். அமைச்சு, நாடு, அரண், பொருள், படை ஐந்துங்கூறினார். இனி நட்பாமாறு கூறுகின்றார். மன்னருள் படையும் பொருளும் உள்ளிட்டன நிலை நின்று வளர்வதும்[1] இனநலன் அழிவு[2] பெறாத நட்பையுடையவனுக்கல்லது கூடாதாதலின் அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி ·: நட்பாவது நட்பின் முறைமை சொல்லுதல் எ-று.

இ) பரிப் ·: நட்பியலாவது அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றின்கண்ணும் நின்று நன்னெறிக்கண் உய்க்கும். ஆதலின் அதன் இலக்கணம் கூறுதல். அரசன் தானும் திருந்தித் திருந்தினாரையும் கூட்டிக் கொண்டு நாடு முதலான பொருளையும் பெற்று அதனை அழியாமல் காக்கும் படையை உடையனாயினும், காமத்தானாதல் மயக்கத்தானாதல் பிறழ ஒழுகுவானாயின் இவை எல்லாப் பொருளையும் கெடுத்துத் தானும் கெடுவன் என்று அவ்வாறு ஒழுகுங்கால் தன்னில் பெரியர் ஆகிய மந்திரி புரோகிதரை ஒளித்தும் தன் ஏவல் வழி வரும் அமாத்தியரையும் கேளாதும் ஒழுகுவன்

---

1. உள்ளிட்டன என்றது படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று கூறப்பட்ட ஆறனுள் நட்பு நீங்க ஏனைய ஐந்தனையும். நட்பு ஈண்டுக் கூறுகின்றாராதலின் அவையொழிந்த ஐந்து அமைச்சு முதலியன இவ்வைந்துள் படையும் கூழ் என்ற பொருளும் உள்ளிட்டன வளர்வதற்கு நட்பு இன்றியமையாதது என்றும் விளக்கப் பொருளியலின் பின் நட்பியல் வைக்கப்பட்டது என முறைவைப்பிற்குக் காரணம் காட்டி விளக்குவர்.

2. இனநலன் அழிவு – நட்பு அழிவதற்குக் காரணம் இனநலன் என்றும், இனநலன் அழியாமையே நட்பு உடையவனுக்கு இன்றியமையாதது என்பர்.

ஆதலின், அவ்விடத்து உடன்பட்டு நின்று பாதுகாப்பர் வேண்டும் என்று இப்பொருள் கூறப்பட்டது. அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்பட நட்பு இலக்கணம் ஓர் அதிகாரத்தாலும், அவரை ஆராயும் ஆறு ஓர் அதிகாரத்தானும் நட்கப்பட்டாதார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மனத்தினால் நட்பின்றி நட்டார் போன்று ஒழுகுவார் திறன் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் நட்பாவது நட்டோர் மாட்டுச் செய்யும் திறன் கூறுதல்.

உ) பரிமேல் :- இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும்[3] பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறைமுகத்தானும் கூறுவான் தொடங்கி விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக்கூறுகின்றனார். அஃதாவது[4] இன்னது என்பதும் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

ஊ) கவிராசர் :- அஃதாவது-அரசனுக்குத் தொழிலே உதவி செய்கிற சினேகம்.

ஏ) பழைய :- அஃதாவது படைபோல் அரசனுக்கு உதவி செய்வதாய நட்பு.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் : படைபோல அரசனுக்கு வினையிடத்துதவும், நட்பரசர் துணையும், குடிகட்குத் துன்பக் காலத்தில் உதவும் நண்பர் உறவும் ஆம்' என்றும், 'ஆசிரியர் இதனை நட்பும் பகையும் என்றும், அவை போன்ற குணங்களும் செயல்களும் நிலைமைகளும் என்றும் இரண்டாக வகுத்துக் கொண்டு, வெளிப்படையாகவுள்ள முன்னதை ஐந்ததிகாரங்களாலும், குறிப்பாகவுள்ள பின்னதைப் பன்னீரதிகாரங்களானும் கூறுகின்றார். வெளிப்படையான முற்பகுதியில்' முதலதிகாரம் நட்பு என்னும் இது' என்பர்.

வரத :- 'நல்லவனைத் தனக்கு உரியவனாகப் பெறுவது நட்பு. நட்பு கூடுதல், பழகுதல் உணர்ச்சி ஒத்தல் என பலதிறப்படும். தீ நெறியிற் செல்லாமற்றடுத்து நல்வழி நடத்த நட்பு மிக இன்றியமையாதது ஆதலால் மிகச்சிறந்த உறுப்பு இது' என்பர்.

---

3. விதிமுகத்தாலும் - உடன்பாட்டுவகையாலும், இதனைச் செய் என்று படிப்பது போல்வதாகிய உடன்பாட்டு முறை.

4. அதாவது — நட்பாவது.

இராம : 'ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவும் அன்புடனும் பழகுவது. இவ்வதிகாரம் நட்பில் விளையும் நன்மை, உயர்ந்த நட்பின் பெருமை. இவைகளைச் சொல்வது. இது அரசர்க்கு மட்டும் அன்று ; அனைவர்க்கும் பொது' என்பர்.

குழந்தைப் போக்கியரைப் பின்பற்றி நட்பியல் என ஒன்று கொண்டனர். இது அனைவர்க்கும் ஆம். முதல் 5 அதிகாரங்கள் (79-83) உடன்பாடாகவும், பின் 12 அதிகாரங்கள் (84-95) எதிர்மறையாகவும் கூறப்படுகின்றன. அதாவது நட்கப்படுவாரைப் பற்றியும் நட்கப்படாதவரைப் பற்றியும் என்க.

'தீ நட்பும், நட்பும் நட்டபின்னர் அறிந்து விலக்கப்படுவன ஆதலின் அவையும் நட்கப்படுவனவே. நட்கப்படாத இகல் முதலியன அறிவிலிகளால் மேற்கொள்ளப்படுதலின் நட்பியலில் இடம் பெற்றன.

எதிர்மறை பன்னிரண்டனுள் பேதைமையும் புல்லறி-வாண்மையும், அறியாமையால் ஏனையப்பத்துக்கும் அடிப்படை-யாவன. இகல் முதலிய ஐந்தும் வெகுளியானும், பெண்வழிச்-சேறல் முதலிய ஐந்தும் அவாவினால் வருவன' என விளக்கமும் தருவர்.

மு. ரா. அரு : போரிடத்துப் படை போல அரசற்கு உதவும் சிநேகத்தின் சிறப்பு என்பர்.

இயற்பாகுபாடுபற்றிக் கூறிய விளக்கங்களும் பிறவும் கொள்கை வேறுபாடு பற்றியன. நட்பு என்னும் அதிகார விளக்கத்தில், பரிமேலழகர் கூறும் வரைவிலக்கணமும், தேவநேயர் தரும் நட்புப் பகுப்பும் ஏற்புடையன.

79.1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. (எஅக)

உரைப் பகுதி :

அ மணக் : நட்புப்போல உண்டாக்குதற்கு அரியவான பொருள்கள் யாவை உள? அவ்வாறு உண்டாக்கப்பட்ட நட்புப் போல, பிற நல்வினை செய்தற்கு அரியவாகக் காக்கும் காவல்கள் யாவை உள எ-று.

இது நட்புத் தேடலரிது என்றது.

ஆ) பரிதி: அரியகாரியத்தில் அரியது நட்புப்போல் இல்லை: நட்புப் போலே உதவியும் இல்லை எ-று.

இ) பரிப்: நட்புப் போல உண்டாக்குதற்கு அரியன யானவ உள? அவ்வாறு உண்டாக்கப்பட்ட நட்புப்போலப் பிற நல்வினை செய்தற்கு அரிது ஆகக் காக்கும் காவல் யாவை உள? எ-று

இது நட்பும் தேடல் அரிது என்றது.

ஈ) காளி: நட்பினைப்போல ஒருவரால் செய்துபோடற்கு அரியன மற்று யா உள? எனவே யாவும் இல்லை; இனி நட்பினதுபோல வினைக்கு அரிய யா உள காப்பு? எனவே தாம் செய்து கொண்ட பொருள் முதலியவர்க்கங்களைப் புரைபடாமல்[1] காக்கின்ற காப்பு மற்று இந் நட்புக்குப் பழுதுபடாமல் காப்பது ஓர் காவல் வினை போலே வினைக்கு அரியன யாவும் இல்லை எ-று.

உ) பரிமேல்: நட்புப்போலச் செய்து கோடற்கரிய பொருள்கள் யாவை உள?செய்து கொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கு அரிய காவலாவன யாவை உள?

நட்புச் செய்தற்காவாரைப் பெறுதலும், பெற்றதால் செய்யும் உபாயமும், செய்தால் திரிபின்றி நிற்றலும் முதலிய அரியவாகலின், நட்பிற் செயற்கரியன இல்லை என்றும், செய்தால் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின், அதுபோல வினைவாராமைக்கு அரிய காவலில்லை[2] என்றும் கூறினார் நட்புத்தான் இயற்கை செயற்கை என வகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்புமுறையானாயதூஉம் தேயமுறையானாயதூஉம் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது[3] சுற்றமாகலின் அது சுற்றந்தழாலின்[4] அடங்கிற்று; ஏனையது[5] பகையிடையிட்ட[6] தேயத்ததாகலின், அது துணை வலி[7] என வலியறிதலுள் அடங்கிற்று. இனி ஈண்டுச் சொல்லப் படுவது முன்செய்த உதவிபற்றி வரும் செயற்கையே யாகலின், அதன் சிறப்பு இதனால் கூறப்பட்டது.

---

1. வர்க்கங்களைப் புரைபடாமல் — வர்க்கங்களைக் குற்றபடாமல்
2. 'அதுபோல் வினைக்குரிய காப்பு யாவுள' என்றும் பாடமுண்டு
3. முன்னையது — பிறப்பாலாகிய இயற்கை நட்பு
4. சுற்றந்தழாலின் — சுற்றத்தினைத் தழுவி நடத்தல்
5. ஏனையது — தேசமுறையால் உண்டாகிய இயற்கை நட்பு.
6. பகையிடையிட்ட — பகையால் விளைந்த

துணைவலி — துணைவரது வலி

ஊ) கவிராசர் : சிநேகத்தைப்போலச் செய்துகொள்ளுகிறதுக்கு அரியபொருள்கள் யாவை உள சிநேகம் பண்ணிக்கொண்டால் அது போலே பகைவர் செய்கிற உபத்திரவம்[8] புகுவதற்கு அரிய காவலான யாவை உள? எ-று.

எ) பழைய : நட்புப்போலத் துணையாகச் செய்து கொள்ளத் தக்க அரிய பொருள் யாது? நட்புச் செய்து கொண்டால் அந்நட்புப் போலப் பகைவர் செய்யும் வினைக்குத் தடுக்கவரிய காவல் யாது?.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

நட்பின் தோற்றக் காரணங்களுள் செயற்கை வகையினாய நட்பில் 'முன்செய்த உதவிபற்றி வரும் நட்பையே நட்பு' என்ற இவ்வதிகாரத்தாற் கூறினார் வள்ளுவர் என்ற பரிமேலழகருரைக் குறிப்பை, ''உயர்ந்த நட்பு உதவியின்றியும் தோன்றக் கூடுமாதலின் அங்ஙனம் கூறுதல் அமைவுடைத்தன்று'' என மறுப்பர் தேவநேயர்.

நட்பினையும் பகையினையும் வடநூற்றுணைகொண்டு வகுக்கின்ற பரிமேலழகர் 'பிறப்பு முறையான் ஆயதும், தேயமுறையானாயதும் இயற்கை. அவையொழிந்தன செயற்கை' என்றார். 'செயற்கை, உதவினால் நட்பு உதவியாகாத தீமைசெய்யின் பகை. அவற்றுள் உதவியினால் உண்டாகும் நட்பே ஈண்டுக் கூறப்பட்டது' எனக் கருதுகிறார் 'இயற்கை நட்பு தன்னாட்டை அடுத்துள்ள நாட்டோடு இருத்தல் இயலாது. யாதனும் மொரு ஏதுவான் பகையோ பகையுணர்ச்சியோ இருக்கத்தான் செய்யும். அதனையடுத்துள்ள நாட்டிற்கும் அந்நாட்டிற்கும் அங்ஙனமேயாம். ஆதலால், அடுத்ததையடுத்து நாடு இவனுக்கு நட்பாதல் இயற்கை என்று கருதி அவையிரண்டும் சுற்றந்தழாலினும்-துணைவலியினும் கூறப்பட்டமையின் ஈண்டு நட்பென்றது. செயற்கை நட்பையேயாம்' என்றனர் பரிமேலழகர்.

இஃதுண்மையாயின், ஆசிரியர் 'புணர்ச்சி பழகுதல் வேண்டா' என்ற குறளால் 'செயற்கையை ஒழித்து, உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்' என நட்பின் காரணம் உணர்ச்சி ஒத்தலே என்கின்

8. உபத்திரவம் — துன்பம்

நாரே: பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் உண்டாய நட்பு செயற்கையன்று எனபதைப் பரிமேலகழரே அக்குறளுரையில் விளக்குதலையும் காண்கிறோம்.

சுற்றம்- பிறப்புவகையானும், குருதிக்கலப்பானும் விளையும் பாசம் உணர்வு. துணை- உதவிவேண்டியும், பகை தணிக்கவும் வேண்டப்படும் காரணங்கருதிய பிணைப்பு. நட்பு- (புணர்ச்சி) ஒரு தேயத்தராதலும் இடைவிடாது பழகுதலாகிய ஏதுக்களானும் அன்றி, உணர்ச்சி யொத்தலாகிய இயற்கையான் விளைவது உறுதிப்பட்ட அன்பு. இவை மூன்றும் வேறாதல் காண்க. அதனாலேயே ஆசிரியர் சுற்றம்பற்றிய நிகழ்ச்சிகளையும் துணைவலியையும் அரசியலிலும், நட்புப்பற்றிய பலவேறு கருத்துக்களை விரிவாகத் தனியே ஓரியலாகவோ அன்றி அங்கவியலிற் கூறாகவே அமைத்தமையும் உன்னுக. பிற்கால வழக்கில், நட்பு உறவு, துணை யனைத்தும் பொருணோக்கில் ஒத்தனவாதலான் பரிமேலழகர் இங்ஙனம் எழுத நேர்ந்தது. தேவநேயரும் உதவிப்பேற்றுறவு நட்புறவு, மனவுறவு தொழிலுறவு முதலாகப் பலவற்றை உறவென்றே உரைப்பார். அவைகளும் சிந்தித்தற்குரியன.

இத்தனை சிந்தனையும், நட்பு, உறவு, துணை அனைத்தையும் பிணைத்து நட்பு எனக் கூறி அது இயற்கை செயற்கை என இருவகைப்படும். அவற்றுள் இயற்கை-சகசம். அது, பிறப்புதேயத்தாலானது என இருவகைப்படும். அவற்றுள் பிறப்பாலானது சகசம்[1]. தேயத்தாலானது பிராகிருதம்[2]. இவற்றுடன் செயற்கையான கிருத்திமம்[3] என்பதையும் கூட்டி நட்பு மூன்றென்றது மனு முதலிய வடநூல்கள். வள்ளுவர் காட்டிய புணர்ச்சி-பழகுதல்-உணர்ச்சி யொத்தல் என்ற காரணங்கள் இவற்றுள் அடங்கும் எனச் காட்ட முயன்ற விளக்க உரையாசிரியர்களின் முயற்சிக்கு இவ்வதிகாரம் செயற்கையின் பாற்படும் என்ற பரிமேலழகர் உரைக்குறிப்பே இடந்தந்தது செயற்கையன்று ஒருதவியும் செய்யாதிருக்கவும் விளைந்த இயற்கை நட்பே இங்குக் கூறப்பட்டது எனத் தேவநேயரையும் மறுக்கத் தூண்டியது. இவையனைத்தையும் எண்ணி, ஆசிரிய வசனத்தையும் துணைக்கொண்டு துணிதலே சிறந்தது.

1. பிறை நிறையும் நீர்மை போல — பிறையானது ஒரு நாளைக்கொரு நாள் வளர்வது போல.

இராம :  செயற்கு – செய்துகொள்ள வேண்டிய அரிய யாவுள – சிறப்புடையன எவை உள' என்று உரை கண்டு செய்துகொள்ள வேண்டிய சிறப்பினது சினேகமே எனப் புதுக்கருத்து தேடித்தருவர். ஏனையோர் நட்பு தேடுதற்கரிய பொருள்களுள் ஒன்றும் இல்லை என்பர். ஏற்பது கொள்க.

792. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. (எஅஉ)

உரைப்பகுதி :

அ) மணக் : பிறை நிறையும் நீர்மை[1] போல ஒரு நாளைக் கொரு நாள் வளரும் அறிவுடையார் கொண்ட நட்பு. மதியின் பின்னீர்மை[2] போல ஒரு நாளைக்கொருநாள் தேயும் பேதையார் கொண்ட நட்பு; எ-று.

இஃது அறிவுடையார் நட்பு வளருமென்றும் அறிவில்லாதார் நட்பு தேயுமென்றும் கூறிற்று.

ஆ) பரிதி : வளர்பிறை ஒப்பது நல்லோர் நட்பு ; தேய்பிறை ஒப்பது பொல்லாத நட்பு எ-று.

இ) பரிப் : பிறை நிறையும் நிர்மை போல ஒரு நாளுக்கு ஒரு நாள் வளரும் அறிவுடையாரோடு கொண்ட நட்பு ; மதியின் பின் நீர்மை போலத் தேயும் பேதையாரோடு கொண்ட நட்பு-எ-று.

இஃது அறிவு உடையார் நட்பு வளரும் என்பதூஉம் அறியாதார் நட்புத்தேயும் என்பதூஉம் கூறிற்று. பின் நட்பு ஆராய்தல் கூறுகின்றார் ஆதலின் இது பின் கூறப்பட்டது.

ஈ) காளி : 'பின்னீர்மை' பாடம்.

பிறை உருபு நாள்தோறும் நிறைந்து செல்லும் தன்மையது போலும் நீர்மை உடையார் கெழுமுதல் தன்மை[3] ; மற்று இனிப்பிறைநிறை மதியது பின்நாள் தொடங்கித் தேய்ந்து செலலும் நீர்மையது உடைத்து அறிவுகேடர் செய்யும் நட்பானது எ-று.

---

2. மதியின் பின்நீர்மை — நிறைமதியின் பின்தன்மை போல என்றது ஒரு நாளைக்கொரு நாள் தேய்ந்து கொண்டே வருகை.

3. கெழுமுதல் தன்மை — நட்பு கொள்ளும் தன்மை

உ) **பரிமேல்** :- அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மை போல நாடோறும் நிறையுந்தன்மையவாம். மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்தமதி பின் குறையுந்தன்மை போல நாடோறு குறையுந் தன்மையவாம்.

'நீரவர்' என்றார், இனிமை பற்றி. கேண்மை, நட்பு என்பன ஒருபொருள் கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்தன முன் சுருங்கிப் பின் பெருகற்கும், பேதையாரும் பேதையாரும் செய்தன முன் பெருகிப் பின் சுருங்கற்கும் காரணம் தம்முள் முன் அறியாமையும் பின் அறிதலுமாம்[4].

ஊ) **கவிராசர்** :- அறிவுடையவர்களுடனே உறவு பண்ணினால் வளர்பிறையைப்போல நாள் தோறும் அதிகமாம்; அறிவில்லாதவர்களுடனே நட்புச் செய்தால் தேய்பிறைச் சந்திரனைப் போலே நாள்தோறும் குறையும் (எ-று)

எ) **பழைய** :- அறிவுடையார் நட்புக்கள் வளர்பிறைபோல் வளர்ந்து நிறைதல் ; அறிவில்லார் நட்புத் தேய்பிறை போல் தேய்ந்து விடுதல் ; நிறைமதி முன்னீர வெளவும் குறைமதிப் பின்னீர வெனவுங் காண்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

உவமையும் பொருளும் செறிவான குறள் இது; ஆதலால் கருத்துமாற்றம் இல்லை, காலிங்கர் உரையாலே-அல்லது ஏட்டறிவினாலோ 'பின்னீர்மை பேதையார் நட்பு' என்பது அவர் கண்டபாடம் என்பர். அவர் இப்பகுதிக்கு எழுதும் உரை 'பின்-பின் நூலிலிருந்து (தேய்ந்து செல்லும்) நீர்மையதுடைத்து' என்பது. 'நீர்' என்பதே 'நீர்மையுடையது' எனப் பொருள் தரும் பலவின்பால் முற்று ஆதலின் 'நீர' என்பதே இயல்பான பாடம் ஆகலாம். ஆனால், உரை, ஒருமையாகவும் சொல் பன்மையாகவும் இருத்தல் நோக்கி 'நீரது' எனப் பாடம் இருந்திருக்கலாம். 'பின்னீரது- தேமாங்காயாய், காய் முன் நேர் வந்த வெண்சீர்வெண்டளையாய் வெண்பாவின் தளையாதற்-

4. முன் அறியாமையும் பின் அறிதலுமாம் — முன்னறியாமை அறிஞர்பாலும் பின்னறிதல் அறிவில்லாடரித்தும் முறையே கொள்க.

கிழக்குமின்று. 'நீர்மை' எனிலே 'நீர்மையுடையது' எனக் கொண்டு முடிக்குஞ் சொல் தந்து முடிக்கவேண்டியுள்ளது. ஆதலால் 'நீர' என்பதே பாடம் எனல் இயைபுடையதாம். கேண்மை-கெழுமுதல் தன்மை என்பர். இதுபொருளாகுமோ பாடம் வேறிருக்குமோ என்ற ஐயம் தோன்றுகிறது.

வரத.: உரை 'பிறை தோன்றுமுன் இருளும் தொடர்ந்து நாளாக ஆக இருள் விலக்கமும் ஒளி பெருக்கமும் உண்டாதல்' போன்ற விரிவுரை கவிநயம் புலப்படுப்பது.

தேவநேயர்: 'நீர்மை-சிறந்த தன்மை. 'நீர்மையுடையார்' (195) என்பது போல' என்ற குறிப்பு சுவையானது.

'கேண்மை நீர' எனப் பலவின்பாற் குறிப்பு முற்றுக் கொண்டு முடிதலின் 'கேண்மைகள் பிறை நீர்மையையுடையன' எனப் பொருள் கண்டு செய்தாரது யுன்மையால் நட்பும் பலவாயின என்று அமைதி கூற வேண்டியதாயிற்று.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பிறைநிறை நீர:

குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம். — மதுரைக்., 193-4

வளர்பிறை போல வழிவழிப் பெருகி. — குறுந்., 289

ஆநாள் நிறைமதி யலர் நிருபக்கம் போல்
நாளின் நாளின் நளி வரைச் சிலம்புதொட்டு
நிலவுப் பரந்தாங்கு நீர் நிலம் பரப்பி. — பரி., 11: 31-3

கடர்ப்பிறை போலப், பெருக்கம் வேண்டி — பெருங். 2:6:35-6

மதிப்பின் நீர:

குணமுதற் றோன்றிய ஆரிருள் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வா ஆக்கம் — மதுரைக்., 195-6

மதிநிறைவு போல் நிலையாது. — கலி., 17-7

முறைமையில் தேயும் நிறைமதி நீர்மை, பண்பு — பெருங். 1:46 :309

நீரவர் கேண்மை :

சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி
வலியாகிப் பின்னும் பயக்கும். — ஐந்திணைஎழுபது.,5

ஒருபகல் பூசின் ஓராண்டொழி வின்றி விடாது நாறும்
பெரியவர் கேண்மை போலும் பெறற் கரும் வாசம் — சீவக., 2737,

கொட்புறு கலினப் பாய்மா ......... மேலோர்
நட்பினின் இடையறா வாய். — கம்ப., 576,

பேதையார் நட்பு :

பின்இன்னா பேதையார் நட்பு. — பழ. நா., 139.

பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதும் செல்லாதே நந்தும் —
............ ....... ... ............ .............
பந்தமில ாளர் தொடர்பு. — நாலடி., 234.

செல்வர் மனத்தினோங்கித் திருவின் மாந்தர் நெஞ்சில்
எல்லை யிருளிற் றாகிப் பூந்தா தினிதி னொழுகிக்
கொல்லும் மரவின் மயங்கிச் சிறியார் கொண்ட தொடர்பிற்
செல்லச் செல்ல வஃகு நெறிசேர் நிலம்பு சேர்ந்தான்.
— சீவக., 1416.

நீரவர்கேண்மை - பேதையார் நட்பு :

கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு. — நாலடி., 138

நளிகடல் தண்சேர்ப்ப நாள்நிழற் போல
விளியும் சிறியவர் கேண்மை - விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புகழாளர் தொடர்பு. — நாலடி., 166.

உலகறியத் தீரக் கலப்பினும் நில்லா
சிலபகலாம சிற்றினத்தார் கேணமை - நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்கமி லாளர் தொடர்பு. — நாலடி., 204

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
குருத்தில் கரும்புதின் றற்றே - குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுர மிலாளர் தொடர்பு. — நாலடி., 211.

மூற்றும் :

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. — நாலடி., 125.

ஓ) மேற்கோள் பகுதி :

காரி : இடையிணை நிரல்நிறையணியாய் நீரவர் கேண்மைக்குப் பிறையும், பேதையார் நட்புக்கு மதியும் இயைந்ததற்கு மேற்கோள்.
— மாற., 178.

79.3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

உரைப்பகுதி:

அ) மணக்.: படிக்குந்தோறும் நூல்நயம்போல அறிவுதரும், பழகுந்தோறும் பண்புடையாளரது நட்பு எ – று.

இது குணவானோடு நட்புக்கொள்ளின், அறிவுண்டாம் என்றது.

ஆ) பரிதி.: கல்வியைப் பாராட்டப் பாராட்ட அறிவு ஊறும்; அத்தன்மை போல நட்பும் பழகப் பழக மகிழ்ச்சி கொடுக்கும் எ -று.

இ) பரிப்.: படிக்கும் தொறும் நூல் நயம்போல அறிவு தரும்: பழகும் தொறும் பன்புடையாளரது நட்பு எ – று.

மேல் பொதுவாக நட்டோர் செய்யும் திறன் கூறினார்: இது குணவானோடு நட்புக் கொள்ளின் அறிவு உண்டாம் என்று கூறியது.

ஈ) காளி.: கற்குந்தொறும் கற்குந்தொறும் கற்பவர்க்கு நூல் நயம் செய்யும் இனிமை போலும்: பயிலுந்தொறும் பயிலுந்தொறும் பன்புடையாளர் நட்பு எ – று.

இனி இவ்வாறு நட்பு வடு[1] இன்றி வளர்ந்து செல்லும் இடத்-துத் தகுதி ஆராய்ந்து நடக்க வேண்டுதலான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல் : நற்குணமுடைய மக்கள் தம்முள் செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கு இன்பஞ்செய்தல், நூற்பொருள் கற்குந்-தோறுந் கற்றார்க்கு இன்பஞ்செய்தலை ஒக்கும்.

நயத்தினைச் செய்தலான், 'நயம்' எனப்பட்டது. இருமையினும்[2] ஒருகாலைக்கொருகால் மிகும் என்பதாம். இவை இரண்டு பாட்-டாலும் அச்சிறப்பிற்கு[3] ஏது கூறப்பட்டது.

ஊ) கவிராசர் .: நற்குணமுடையவர்களுடனே கொண்ட உறவு நல்லறிருவக் கொடுக்குஞ் சாத்திரத்தைக் கற்கிறபோது பிரயாச மா[4]யிருந்து, கற்று அதன் பொருளை யறிந்தபிறகு, சுகத்தைக் கொடுக்கிறப்போலே-நட்புச் செய்யுமளவும் அருமையாயிருந்து பிறகு நல்ல பலத்தைக் கொடுக்கும் (எ—று.)

எ) பழைய .: நற்குணமுடைய மக்கள் தம்முட செய்த நட்பு, பயிலுந்தோறும் பயிலுந்தோறும் இன்பஞ் செய்தல், நூலைக் கற்குந் தோறுங் கறகுந்தோறும் இன்பம் பெருகுதல் போலாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் ;

'பண்புடையார் தொடர்பால் அறிவுண்டாம்' என்பர் மணக் .; 'மகிழ்ச்சி உண்டாம்; இன்பம் செய்தலை ஒக்கும்' என்பர் பரிமேலழகர் முதலானோர். பெரியோர் நட்பால் இவையனைத்தும் உண்டு என்றமைவோம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**நவில்தொறும் நூல்நயம் :**

கம்ப நாடன் கவிதையிற் போற் கற்றோர்க் கிதயங் களியாதே,

— கம்ப., சிறப்பு., 11

---

1. வடு-குற்றம்
2. இருமையினும் – உவமானமான நூற்பொருளிலும் உவமேயமான நன்மக்கள் நட்பிலும் (நாடோறும் இன்பம் மிகும்)
3. அச்சிறப்பிறகு - நட்பின் சிறப்பிற்கு
4. பிரயாசம் – முயற்சி

ஓதி யோதியுண ருந்தொறு முணர்ச்சி யுதவும். — கம்ப., 2605.

பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு :

நின்ற சொல்லர் நீடுதோ றினியர். — நற்றிணை., 1:1

கனைகடல் தன்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே. — நாலடி., 138.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே. — நாலடி., 211

முற்றும் :

நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதொறு ள்ளு தொறுள்ளம் இன்புற. — பெருங்.5:7:148-150

............ நூல் உணர்தொறும் உறுநயம் போலக்
கழிமகிழ் நாளும் பயில்தொறும் வளரக் கலப்பதே நட்பெனப் படுமால்
— விநா. அரசி., 125.

79.4. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (784)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருவனோடு ஒருவள் நட்புப்பண்ணுதல் நகுதற்பொருட்டன்று, மிகையாயின செய்யுமிடத்து முற்பட்டுக் கழறுதற்பொருட்டு[1] எ-று.

இது மனமகிழ நட்புக் கோடலன்றித் தீக்கருமங்கண்டால் கழறவும் வேண்டும் என்றது.

ஆ) பரிதி. : இடுக்கண் வந்தால் நிந்தித்துச்[2] சிரிக்கவும், நன்றான காலத்து மகிழ்ந்து சிரிக்கவும் அன்று துன்பம் வருமுன்னே பரிகாரம்[3] பண்ணுவது நட்பு எ-று.

---

1. கழறுதற் பொருட்டு – இடித்துரைத்தற் பொருட்டு
2. நிந்தித்து - இகழ்ந்து
3. பரிகாரம் – நீக்கும்வழிகள்

இ) பரிப் .: ஒருவனோடு ஒருவன் நட்புப் பண்ணுதல் நகுதல் பொருட்டு அன்று : மிகையாயின செய்யும் இடத்துக் கழறுதல் பொருட்டு எ-று.

இது மனம் மகிழ நட்டலே அன்றித் தீக்கருமம் கண்டால் கழறவும் வேண்டும் என்றது.

ஈ) காளி .: ஒருவரோடு ஒருவர் நட்டலாவது புறமே நகை செய்தல் பொருட்டு அன்று? மற்று யாதிற்கோ[4] எனின்? அவர் நடக்கும் முறைமைக்கும் இங்கு அமைவாது ஆகியது ஓர் குற்றம் கண்டால் அப்பொழுதே அவர் தம்மைப் பெரிதும் அடர்த்துக் கழறுதல் பொருட்டு ; எனவே அவர் கேடு தம் கேடு எ-று.

உ) பரிமேல் .: ஒருவனோடு ஒருவன் நட்புச் செய்தல் தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று, அவர்க்கு வேண்டாத செய்கை உளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு.

பழியும் பாவமும்[5] தரும் செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப் படுவதன்மையின் அதனை 'மிகுதி' என்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இன்சொற்கு மீளாமையின் 'இடித்தற்பொருட்டு' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் .: ஒருவனுடனே ஒருவன் சிநேகம் பண்ணுகிறது முகத்துமுன்னே சிரிப்பு வரத்தக்க வார்த்தைகளைச் சொல்லி நகைக்கிறதுக்கன்று ; அவனுக்கு வேண்டாத காரியங்கள் நடக்கிறதையறிந்தால், முந்தி[6] கண்டித்துப் புத்தி சொல்லுகிறதுக்கு (எ-று)

எ) பழைய .: ஒருவனோடு ஒருவன் நட்புச் செய்தல், நகைத்து விளையாடற் பொருட்டன்று ; அவற்குப் பொருந்தாத செய்கை யுண்டாய்விடத்து இடித்துச் சொல்லிதவர்த்தற பொருட்டு.

---

4. யாதிற்கோ – எதற்கு
5. பழியும் பாவமும் - இம்மைக்குரிய பழியும் மறுமைக்குரிய பாவத்தையும்
6. முந்தி - முதலாவதாக

79.4. தொகுப்பும் குறிப்பும் :

நகுதல்-மகிழ்தல். இது செல்வ நுகர்ச்சியாக, உவகைச் சுவையினும், எள்ளலும் மடமையுங் காரணமாக நகைச்சுவையினும் தோன்றுபமெய்ப்பாடு. உவகையிற்றோன்றும் போது உவகை மகிழ்வு. நகையுட்டோன்றும் போது எள்ளல் மகிழ்ச்சி. ஆதலால் இருநிலையுந் தோன்றப பரிதியார் 'இடுக்கண் வந்தால் நிந்தித்-துச் சிரித்தும், நன்றான காலத்து மகிழ்ந்து சிரித்தும்' என இரண்டனையும் இணைத்துக் கூறிய உரை நட்பின் இயல்புணரச் செய்வது.

ஏனோர் உரைகள் பொதுவகையாற் பொழுதுபோக்கிற்காகக் கூடிக்களித்தலைக் குறிக்கின்றன. மு.கோ. 'நட்டல் மிகுதிக்கண் நகுதல் பொருட்டன்று' எனக் கூட்டிக்குற்றம் புரிந்துழிச்சிரித்து அவரைத் தூண்டிவிடுவதற்கன்று என்பர். இதுவும் இயைவுடையதே.

ஒ) ஒப்புமைப்பகுதி :

நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு :

இடிக்கும் கேளிர் - குறுந்., 58 : 1
மேல்நின்று மெய்கூறும் கேளிர் - கலி., 3 : 21
தன்தீமை பலகூறிக் கழறலின் - கலி., 45 : 21
இடிக்கும் துணையாரை - குறள்., 447
இடிப்பாரை இல்லாத - குறள்., 448

காய உரைத்துக் கருமம் சிதையாதார்
தூயரோ டொவ்வாரோ தக்கார்க்கு. - அறநெறி., 47

கடிக்கும்வல் லரவுங் கேட்டு மந்திரங் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றான்ற வேதுவோ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளா ரெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ.

- கம்ப., 5310

79.5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (785)

உரைப்பகுதி :

அ) மணக் .: நட்பாதற்குப் பலநாள் பழகுதல் வேண்டா ; ஒருநாள் கண்டாராயினும் உணர்வுடையார்க்கு அவ்வுணர்வுடைமை தானே, நட்பாகும் உரிமையைத் தரும் எ-று.

அவ்வுணர்வுடைமை தானே நட்பாகும் என்றவாறு.

ஆ) பரிதி.: நட்புக்குப் பழமை என்று வேண்டாம் கூடின நல்ல நட்பாகில் அந்தக்காலம் பழகின பழமையாம் எ-று.

இ) பரிப் .: நட்பு ஆதற்குப் பலநாள் பழகுதல் வேண்டா : ஒரு நாள் கண்டாராயினும் உணர்வு உடையார்க்கு அவ்வுணர்வு உடைமை தானே நட்பு ஆகும் உரிமையைத் தரும் எ-று

மேல் குணவான் கண்ட அறிவு உண்டாகும் என்றார் : இது ஒத்த அறிவு உடையார்க்கும் அவ்வறிவு உடைமை தானே நட்பு ஆக்கும் என்று கூறப்பட்டது.

ஈ) காளி .: ஒருவரோடு ஒருவர் கலப்பு நெடுங்காலம் பழகுதல் வேண்டா ; மற்று என்னை எனின்? அவர் நல்ல என்று தாம் ஒருக்குற்று[1] உணர்ந்த உணர்ச்சிதானே நட்பு ஆகிய வேற்று மையற்ற உரிமையைத் தரும் எ-று

ஈண்டுக் கிழமை என்பது உரிமை.

உ) பரிமேல் .: ஒருவனோடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை இருவர்க்கும் ஒத்த உணர்ச்சி தானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும்,

புணர்ச்சி ஒருதேயத்தாராதல் ; “இன்றே போல்க நும்புணர்ச்சி[2]” என்றதும் அதனை[3]. பழகுதல் பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல், இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின் அதுவே உடலுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாகும். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல் உணர்ச்சியொத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனான் கூறப்பட்டது,

---

1. ஒருக்குற்று — ஆய்ந்து
2. புறம் .,58 : 28.
3. அதனை — புணர்ச்சி பழகுதல் வேண்டா என்றதனை.

ஊ) கவிராசர் .: ஒருவனோடொருவன் சினேகமாதற்குக் கூட்டுறவும்[4] பழகுகிறதும் வேண்டாம் ; இரண்டு பேருக்கும் அறிவு சரியாயிருந்தால் அதுதானே சினேகத்தைக் கொடுக்கும் எ-று.

எ) பழைய .: ஒருவனோடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலும் ஆகிய காரணம் வேண்டுவதில்லை ; இருவர்க்கும் ஒத்த மனதே நட்பாம் முறைமையைத் தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்., பரிதி., பரிப் 'புணர்ச்சிக்கு (நட்பாதற்கு)' என நான்கனுருபு விரித்துப் 'பழகுதல் வேண்டா; உணர்வொத்தலே போதும்' என உரைத்தனர். காளிங்கர் நான்கனுருபு விரியாமலே 'கலப்பு நெடுங் காலம் பழகுதல் வேண்டா' என்றனர். பரிமேலழகரும் பிறரும் 'நட்பாதற்கு' என ஒரு சொல் வருவித்துப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை' என்றனர்.

இவ்வதிகாரத்து முதற்குறளில் இயற்கை நட்பினை விளக்குங்கால் 'பகையிடையிட்ட தேசத்தினின்று துணையாவார்' என்று விளக்கந்தந்த பரிமேலழகரும், மு. ரா. அரு. முதலிய அவர் வழிவருவோரும் இக்குறளில் 'புணர்ச்சி ஒரு தேயத்தராதல்' என்கின்றனர் இப்பொருட்கு 'இன்றே போல்க நும்புணர்ச்சி' என மேற்கோளும் காட்டினர். இது முரணாகாதா? என்று ஆய்க.

அன்றியும் நட்புக் காரணம் மூன்றெனத் தொகை தந்து சகசம், ப்ராக்கிருதம், கிருத்திரிமம் என வகுத்த வடநூலார் மரபினின்று பிறழ்ந்து, சகசமும் ப்ராக்கிருதமும் இயற்கை எனல் எங்ஙனம் இயைவதாகும். சகசம்—இயற்கை. பிராகிருதம்-பெரும்பாலும் விளையக் கூடியது என்னும் பொருளதாய்ச் செயற்கையாமேயன்றி இயற்கையாகாது என்பதை வேறாகக் கூறியதே புலப்படுத்தும். அமையும் என வாதிடினும் அடுத்த நாடு பகையாதல் இயற்கையேயன்றி அதற்கடுத்த நாடு துணையாதல் இடைப்பட்ட நாட்டிலுள்ள பகைமைக் காரணத்தாலும், இந்நாட்டவன் கொடுத்தும்

4. கூட்டுறவும் — கூடியிருத்தல்

அடுத்தும் விரும்பியதாலும் விளைந்த செயற்கை நட்பாமேயன்றி இயற்கையாகாது. ஆகவே பகையிடையிட்ட அடுத்த நாட்டினை இயற்கை எனல் பொருந்தாது ஆசிரியர் துணைவலி என்றதும் செயற்கை என்பதையே காட்டும்.

இவற்றிற் சிக்காது வள்ளுவர் புணர்ச்சி-பழகுதல்-உணர்ச்சியொத்தல் மூன்றே நட்பின் விதை. அவற்றுள் உணர்ச்சியொன்றேயமையும் என்றது எத்துணைத் தெளிவும் தமிழ்மரபின் உறுதியும் உணர்த்துவதாகும். எண்ணுக.

இக்குறளிற் பரிமேலழகர், கா சு., மு.ரா அரு., பழைய உரை அனைத்தும் ஒருதேயத்தார் ஆதலே நட்புக்கு அடியெனல் இற்றை ஞான்று உலகிற் காணுங் காட்சியுமாம். தேவநேயர் 'ஒருதேயத்தாராதல் மட்டுமன்று கூட்டமும்' என்பர். ஆகவே 'ஒருதேயத்தாராயினும் கூடுதலும்-பின் பழகுதலும் வேண்டும் அவையில்லாவிடினும் உணர்ச்சி ஒத்தலேயமையும்' என்பர்.

வரத. 'புணர்ச்சியாலும் பழகுதலாலும் மட்டும் நட்பு விளையாது. உணர்ச்சியும் ஒத்தல் வேண்டும்' என உரைப்பர். ஏனையோர் 'முன்னைய இரண்டும் வேண்டா. உணர்ச்சியொன்றே போதும் 'என்று கூற இவர் 'அவை மட்டும் போதா உணர்ச்சியும் வேண்டும்' என்றல் இம்மூன்றன் தேவைகளையும் வேண்டும் என்கின்றது. அது மட்டுமன்றி உணர்ச்சி ஒத்தல் இல்லையாயின் அவையிரண்டும் இருந்தும் பயனில்லை என்ற கருத்தையும் தெளிவிக்கிறது. மற்றும் இவர் கூறும் 'உடல் ஒன்றுபடல்' அதாவது உடலாற் பழகுதல் வேண்டாம் என்றது எதனைக் கருத்துட் கொண்டு கூறியது என்பதை அறியக்கூடவில்லை. எண்ணி விடுக.

இராம. 'புணர்ச்சி-பொருத்தம்' எனப் பொருள் கண்டு அதற்கு எழுவாயாக நட்பு பொருந்துவது பழகுவதாலன்று உணர்ச்சியொத்தலால் என்கிறார். இதுவும் மணக்குடவர் கருத்தையே சார்கிறது.

மு கோ. உணர்ச்சி—புலனுணர்ச்சியாகிய ஒத்த விருப்பு வெறுப்பு என்றும் கோட்பாடு என்றும் கூறுவர். இவற்றான் நல்ல நட்பு விளைவதைக் காட்டிலும் கூடா நட்பே விளைதல் பெரும்பான்மை, இங்ஙனம் எண்ணத்தை விரிய விடாது பொதுமை-

யினிற்கும் பழைய உரைகள் சிறந்தவை. சாமி சிதம்,குழந்தை 'புணர்ச்சி ஒரிடத்திருத்தல்' என்பர். இவையனைத்தும் பரி-மேலழகர் அடிச்சுவட்டின் சுருக்கமே.

இவற்றுள் வள்ளுவர் உள்ளம் போல நட்பிற்கு அடிப்படை மூன்று, அவற்றுள் ஒன்றே போதும் அதுவே உறுதியானது என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

கேட்டன் மாத்திரை யல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகல்என்று
ஐயம் கொள்ளன்மின் ஆறறி வாளீர் —புறம், 216 : 1 : 5

பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேயவாயினுந் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலரர் பாலரா குபவே. — புறம்,. 218

செல்வுழிக் கண்ணொருநாள் காணினும் சான்றவர்
தொலவழிக் கேண்மையிற் தோன்றப் புரிந்தியாப்பர்
நலவரை நாட சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி. — நாலடி., 154

காண்டகைமை இன்றியும்முன் கலந்த பெரும் கேண்மையினார்
பூண்டபெருங் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள் பெற விருப்பினால்
ஆண்ட அரசு அமுது செயத் திருவமுதாம் படிஅமைத்து.
— பெரிய. திருநாவுக்., 203

.................... உளமும் உளமும்
நேர்பட அறிய என்றோ நினைத்தாய்
ஓர்வழிப் படரின் உணருமென் றுரைப்பார் — மனோ. 3:3.78-80

முன்புற அனையர்பானண்பு முற்றினை — கம்ப., 6496

சொல்லருங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்
— கம்ப., 6612

ஒன்றிய வுணர்வே யாய வோருயிர்த் துணைவ — கம்ப., 7018

நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன் — முதுமொழிக்., 5:5

79.6. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் (து)
அகநக நட்பது நட்பு. (786)

உரைப்பகுதி :

அ) மணக் .: முகத்தோடு முகமகிழக் கொள்ளும் நட்புநட்பன்று; மனதோடு மனமகிழக் கொள்ளும் நட்பே நட்பாவது எ-று.

ஆ) பரிதி .: முகம் மலரவும் காரியம் கெடவும் செய்வது நட்பல்ல; மனம் மகிழவும் காரியமாகவும் கூடுவது நட்பு எ-று.

இ) பரிப் .: முகத்தொடு முகம் மகிழக் கொள்ளும் நட்பு நட்பு அன்று : மனத்தொடு மனம் மகிழக் கொள்ளும் நட்பே நட்பு எ-று.

மேல் நட்பு அரிது என்றார் ; உலகத்துப் பலரும் தம்மில் கலந்தது காணாநின்றோம். அஃது அரிது ஆயினவாறு என்றார்க்குக் கூறப்பட்டது.

ஈ) காளி .: புறத்து உறுப்பு ஆகிய முகநகை மாத்திரம் செய்து நட்புக்கொள்ளும் நட்பது நட்பு அன்று : இனி அகத்து உறுப்பு ஆகிய நெஞ்சானது உள் மகிழ்வு உற நிற்கும் நட்பே நட்பானது எ-று.

உ) பரிமேல் .: கண்டவழி அகம் ஒழிய முகமாத்திரமே மலரும் வகை நட்குமது நட்பாகாது : அன்பால் அகமும் மலர நட்குமதே நட்பாவது.

நெஞ்சின்கண் நிகழ்வதனை 'நெஞ்சு' என்றார்.[1] இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.[2] இதனால்[3] இரண்டும் ஒருங்கே மலர வேண்டும் என்பது பெற்றாம்.

ஊ) கவிராசர் .: கண்டபொழுது முகம்மாத்திரம் மலரச் சொல்லுகிறது சினேகமன்று; மனசு சந்தோஷப்பட நடக்கிறதே சினேகம் (எ—று).

எ) பழைய.: 'அகநக நட்பதே' பாடம்.

கண்டவழி முகமலர்ச்சி நட்பு நட்பு அல்ல; நெஞ்சின்கண் அகமலர்ச்சியாவதே நட்பு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக் . 'நட்பதே நட்பு' பாடம். தேற்றேகாரம் பெற்ற இப்பாடம் சிறந்தது. உரையமைதி 'நெஞ்சத்தோ டகம் நக'' என்பது. அது சிறப்பிலது. பரிதி, 'முகம் நக நட்பது நட்பன்று என்றதால் 'முகமலரவும் காரியங்கெடவும் நட்பது கூடாது' என்றார் இதுவும் ஏற்புடையதே.

காளிங்கர் 'அகநக — உளமகிழ்வு எய்த' என்பர். நெஞ்சத்து அகம் என்பது நெஞ்சமானது என எழுவாய்ப் பொருள் கோடல் பொருந்துவதன்று. அத்துச் சாரியை ஏனை வேற்றுமையுருபு கோடற் கணணே வரும் ஆதலின்.

வரத. நெஞ்சத்தகம் என்பதனை ஒரு பொருட்பன்மொழியாகக் கருதி உயிர்த் தொடர்பு வேண்டும் எனச் சிறப்பு நயம் கூறுவர்.

இராம. உரை மணக்குடவர் கண்டதேயாம். 'முகத்தோடு முகம் குலவும் உறவு அறிமுகம். முழுமனமும் உள்ளுற விரும்பி மகிழும் உறவு நட்பு' என்பர்

நெஞ்சம் நினைத்ததே மெய்ப்பாடாகத் தோன்றும். நினைப்பின் வழியது தான செயல் ஆதலின். ஆயினும் ஒப்புரவுககாக நக வேண்டும் என்றெண்ணி நகுதலின் அந்நகை உண்மையாகாமல் போலியாயிற்று ஆதலால் முகமும் ஒருசேர மகிழ்க என்றதாம்.

---

1. நெஞ்சின் நிகழும் அன்பை நெஞ்சு என்றது இடவாகுபெயர்.
2. அகமும் நகு எனற்பாலது அகநக எனச் செய்யுள் விகாரத்தால் உம்மை தொக்கு வந்தது.
3. இதனால் — இறந்தது தழீஇய எச்சவும்மையால்.

79.7. அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. (787)

உரைப்பகுதி :

அ) மணக்.: நட்டார்க்கு அழிவுவந்தவிடத்து, அவர் துன்பத்தை நீககி, நல்ல நெறியின்கண் செலுத்தித் தாங்கி, தன்னால் செயலற்றவிடத்து அவரோடு ஒக்கத் தானும் துன்பம் உழப்பது[1] நட்பு எ—று.

ஆ) பரிதி.: அழிவு வந்த இடத்து நல்லவழியிலே செலுத்தித் துயரம் ஏற்பட்டால் கூட அநுபவிப்பது நட்பு எ—று.

இ) பரிப்.: அழிவு வந்த இடத்துத் துன்பத்தை நீக்கி இன்ப நெறியின் கண் நிறுத்திச் செயலற்ற அழிவு வந்த இடத்து அவரோடு கூட அல்லல் படுவது நட்பு எ—று.

இது துன்பம் கெடுக்க மாட்டாக்கால்[2] தானும் துன்பம் உற வேண்டும் என்றது.

ஈ) காளி.: தம்மொடு நட்டார்க்கு ஓர் இடுக்கண் வர்தவிடத்துக் குற்றத்தை நீக்கி மற்று இவர்க்கு நல்வழியைச் செலுத்திப் பின்னும் வருகிற அழிவின்கண் தாமும் கூட நின்று அவ்வல்லல் அனுபவிப்பதே நட்பாவது எ—று

உ) பரிமேல்.: கேட்டினைத்தரும் தீநெறிகளைச் செல்லுங்கால் விலக்கி ஏனை நன்னெறிகளைச் செல்லாக்கால் செலுத்தி, தெய்வத்தால் கேடு வந்துழி அது விலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடன் அனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது.

'ஆறு' என வருகின்றமையின், 'அழிவினைத்தருமவை'[3] என்றொழிந்தார். ''தெருண்ட அறிவினவர்''[4] என்புழிப்போல இன்சாரியை நிற்க[5] இரண்டனுருபு தொக்கது. இனி 'நவை' என்று

1. உழப்பது — வருந்துவது.
2. கெடுக்கமாட்டாக்கால் — கெடுக்க முடியாத போது
3. 'அழிவினவை' என்றும் பாடமுண்டு.
4. நாலடி. . 301.
5. தொகுப்பும் குறிப்பும் காண்க.

பாடமோதி, அதற்குப் போரழிவினும் செல்வ அழிவினும் வந்த துன்பங்கள் என்றும், அழிவின் கண் என்பதற்கு யாக்கை அழிவின் கண் என்றும் உரைப்பாரும் உளர்.

ஊ) கவிராசர்:. கேடுதருந் தீநெறிகளை விலக்கி, நன்னெறிகளைச் செலுத்தி, விலக்கவும் போகாத பொல்லாங்குகளைத் தானும் கூட அனுபவிக்கிறதே சினேகமாவது எ—று.

எ) பழைய: கேட்டினைத்தரும் நெறியிற் செல்லும்போது செல்லாமல் விலக்கி, நன்னெறிகளிற் செல்லாத போது நன்றியிற் செலுத்தி, ஊழ்வினைப் பயனாற் கேடு வந்த விடத்து அது விலக்கப் படாமையின் அத்துன்பத்தை உடனிருந்தனுபவிப்பதே ஒருவனுக்கொருவன் நட்பு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

''அழிவினவை நீக்கி'' என்ற தொடர்க்கு 'அழிவின் அவை நீக்கி' எனப் பிரித்துப் பரிமேலழகர் பொருள் கண்டனர் என்பதை 'ஆறு' என வருகின்றமையின் 'அழிவினைத் தருமவை என்றொழிந்தார்' என்ற குறிப்பும், 'தெருண்ட அறிவினவர்' நாலடி 301) என்புழிப்போல சாரியை நிற்க (ஐ) உருபு தொக்கது என்ற இலக்கணப் பகுதியும் தெரிவிக்கின்றன.

'அழிவின் நவைநீக்கி' எனப் பிரித்துப் பொருள் காண்பவர்கள் மணக்குடவரும் காளிங்கரும் ஆவர் என்பதைத் 'துன்பத்தை நீக்கி' 'குற்றத்தை நீக்கி' என்னும் அவர்களுரைகள் தெரிவிக்கின்றன. பரிமேலழகர் தரும் பிறருரையும் அதன் விளக்கமும் அங்ஙனம் கொள்வார் இவர்களேயன்றிப் பிறரும். உண்மையை உணர்த்தும்.

'அழிவினவை நீக்கி' எனப் பலவின்பாற் குறிப்பு வினைப்பெயராகக் கொண்டு 'தீயநெறிகளை நீக்கி' எனப் பொருள் காண்பர். மேலும் பரிமேலழகர் தரும் பிறர் உரையை எடுத்துக் காட்டி 'நன் மறுப்பாகும்' எனப் பரிமேலழகரைப் பாராட்டுவர். அது யாரை எங்ஙனம் மறுத்தது ஆகும என்பதை விளக்கிற்றிலர். உரைவேற்றுமையாசிரியர் முதலானோர் பரிமேலழகர் பிறருரையையுந் தழுவிக் கூறினர் என்பர்.

பரிமேலழகர் காட்டும் 'தெருண்ட அறிவினவர்' (நாலடி. 30:) என்பதைப்போன்ற ஆட்சி வள்ளுவராலேயே "இன்னா அறிவினவர்", "மாண்ட அறிவினவர்" (857, 914, 915) முதலிய பல இடங்களிற் காண்படுகின்றன. ஒரு சொன்னீர்மைத்தாக் கொண்டு "அறிவினையுடையவா" என வினையாலணையும் பெயராகவே உரை கண்ட பரிமேலழகர் ஈண்டு இருசொற்றொடராகக் கொண்டமையால் நேர்ந்தது என்க,

ஓ) ஒப்புமைப்பகுதி :

**அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு :**

ஒருபகல் பழகினா ருயிரை யீவரால் — கம்ப., 3429

அறமன் னானுட னெம்பி யன்பினோடு
உறவுன் னாவுயி ரொன்ற வோவினான்
பெறலவான் னாதநேர் பேறு பெற்றவற்கு
இறவென் னாமதி னிம்பம் யாவதோ — கம்ப., 4799

வவ்வி லங்கு வளர்த்தவர் மாட்டருள்
செல்வி லங்கலில் சிந்தையர் தீர்வரோ
இவ்வி லங்கலில் விடேமினி யென்பபோல்
அவ்வி லங்குவந் தெய்தின வேலையே — கம்ப., 6831

முற்றும் :

அழிதரு நெறியில் செலவினை விலக்கி
யாம்வழி செலுத்திஊழ் வினையால்
அழிவுவந் தடுப்பின் அதற்குடன் அல்லாந்து
ஆக்கைவே றின்றியா ருயிர்கள்
ஒழிவகை யின்றி உணர்ச்சிஒத் தருநூல்
உரைதொறும் உறுநயம் போலக்
கழிமகிழ் நாளும் பயில்தொறும் வளரக்
கலப்பதே நட்பெனப் படுமால். — விநா. அரசி., 125

ஓ) மேற்கோள்பகுதி :

இளம் .: பொருளாவது நாடும், பொருளும், அரணும் அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி நட்பு என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். — தொல். பொருள்., 75.

79.8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (788)

உரைப்பகுதி :

அ) மணக்.: உடைசோர[1] நின்றானுக்குக் கைசென்று உடை-சோரமல் காத்தாற்போல இடுக்கண்வந்தால் அப்பொழுதே அவ்-விடுக்கணை நீக்குவது நட்பாவது எ-று.

ஆ) பரிதி.: புடவை சோர்ந்தால் கைசென்று தாங்கும் முறைமை போல நட்பாளருக்கு இடுக்கண் வந்ததறுவாய்க்கு இடுக்கண் தீர்ப்-பது நட்பு எ-று.

இ) பரிப்.: உடை இழந்தவன் கை குறிப்பு இன்றித் தானே சென்று மறைக்குமாறு போல இடுக்கண் உற்ற அப்பொழுதே அதனைப் போக்க வல்லது நட்பு எ-று.

இது கழறுதலே அன்றித் துன்பம் துடைக்கவும் வேண்டும் என்றது.

ஈ) காளி.: உடை நழுவினவன் தனது கை கடிது பற்றித் தாங்கிக் கொண்டாற்போல அப்பொழுதே அவ்விடுக்கண் களைவது யாது? மற்று அதுவே நட்பாவது எ-று.

உ) பரிமேல்.: அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்று உதவி அவ்விளிவரல் களையுமாறுபோல, நட்ட-வனுக்கு இடுக்கண் வழி அப்பொழுதே சென்று உதவி அதனைக் களைவதே நட்பாவது.

அற்றங்[2]காத்தற்கண் கை தன் மனத்தினும் முற்படுதலின், அவ்விரைவு இடுக்கண் களைவுழியும் அதற்கொத்த தொழில் உவ-மையிலும் வருவிக்க[3]. உடையவன் தொழில் நட்பின்மேல் ஏற்றப்-பட்டது.[4]

---

1. சோர - நழுவ
2. அற்றம் - சோர்வு அல்ல மெலிவு,
3. உடுக்கை யிழந்தவன் கை மனத்தைக் காட்டிலும் முற்படுதலாகிய விரைவை நட்ட வன் துன்பத்தைக் களையுமிடத்தும், அத்துன்பத்தைக் களைதற் கொத்த உடுக்-கை யிழந்தவனுக்கு கை சென்று உதவுதலாகிய தொழில் உவமையிலும் வரு-வித்துக் கொள்க,
4. பொருளின் தொழிலை அப்பொருளின் பண்பின் மேல் ஏற்றிக் கூறினமையால் இது குணிவினை குண வினையாகிய உபசார வழக்கு.

ஊ) கவிராசர் .: உடுத்த ஆடை கழன்றபோது கைகள் போய் அதனைக் கெட்டியாய்க் கட்டியுடுத்து அவமானத்தை நீக்கியது போலே, சினேகிதனுக்குத் துக்கம் வந்தவுடனே தான்போய் அதனைத் தீர்ப்பதே நட்பாவது எ–று.

எ) பழைய .: அவையிடை ஆடை குலைந்தவன் கை விரைந்து உதவி செய்வதுபோல, ஒருவனுக்கு இடுக்கண் வந்தவிடத்துடனே சென்று உதவி செய்வதாம் நட்பு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவின் உரையில் தொல்லாசிரியர்கள் எவரும் மாறுபட்டிலர். வரத. 'கை உடலைப் பாதுகாப்பது போல நன்பன் காக்க வேண்டும்' என்றும், 'கை துன்பம் வரும்போதும் தடுக்கிறது. மானங்குலைய வரும்போதும் தடுக்கிறது இரண்டும் ஒருங்கி வருமானால் மானத்தைக் காத்துத் துனபத்தை ஏற்றுக் கொள்கிறது. அதுபோல நட்பு உதவவேண்டும்' என்பர். ஆசிரியர் 'உடுக்கை யிழந்தவன் கை மானங்காப்பதுபோல இடுககண் காப்பது நட்பு' என்றே கருதச் செய்கிறார். ஏணைய சிந்தனைகள் இககுறட்பாவின் சொல்லமைதிக்கு இயையுமாயிற் கொள்க.

தேவநேயர் ''மானங்காத்தற்கண் ஒருவன் கை தன்மனத்தினும் முற்படும்' என்னும் பரிமேலழகர் கூற்று உளநூற் கருத்துக்கு ஒவ்வாதென்று'' மறுப்பர். இதனை விரைவுமிகுதியைக் காட்ட வந்த இல்பொருள் உவமை போன்றதாகக் கொள்ளின் இக்குற்றத்திற்கு இடனுண்டோ என்பதும் சிந்தித்தற்குரியது. மு. கோ. இடிந்தவர் என ஒருபாடத்தைக் கற்பித்துக் கொண்டு பலபட நயம் உரைப்பர். இது வேண்டாத ஒன்று. உடுக்கையிழத்தற்குரியதல்லாத இடத்தைக குறிப்பிட்டு வரைவை மிகுதிபபடுககப பரிமேலழகர் 'அவையில்' என்பார். 'ஒருகூட்டத்தில்' என்பார் சாமி. சிதம் இங்ஙனம் பல.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

கை-நண்பன்

தோள்முதல் தோழனை — பெருங்., 2.13:43

நாளுற்று நம்பி பிறந்தான் திசைபத்தும் நந்தம்
தோளுற்று ஓர்தெய்வம் துணையாய்த் துயர்தீர்த்த வாறும்
— சீவக., 10

முற்றும் :

உடையழி காலை உதவிய கைபோல்
நடலை தீர்த்த நண்பனது — பெருங். 5:3:39-40

கடுக்கை யணிந்த முடியோன் திருவெங்கைக் காரிகையாய்
உடுக்கை இழந்தவன் கைஓர் பொருளை ஒழித்ததனைத்
தடுக்கை விரைந்தது போல்நட்ட வேந்தன் தனக்குதவி
அடுககை விழைந்து நினைவிடுத் தார்நட் பறிந்தவரே
— திருவெங்கை., 147

பொடிய ணிந்தெழில் பொங்குறும் அல்லன்
அடியர் தங்கள் அகத்திற் றுயரினை
உடையி ழந்தவன் ஒருவன் கரம்எனக்
கடித டைந்து களைந்தருள் செய்யுநாள் — பிரபு.முத்தாயி., 2

...... ...... வாரம் என்பது
அல்லல் அடையின் அவர்விழிக்கு வாரிமைபோல்
மெல்லுடைக்குக் கைபோல் விரைவதள்றோ
— கச்சி.,ஆனந்த., 382

உற்றசினேகம் உயிருக்கு அமுதாம் —பழ.,

இடுக்கண் களைவது [நட்பு :

என்றவக் குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
உன்றனக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந் துறுவன தீர்ப்ப ...... - கம்ப., 3913

துன்பு தோன்றிய பொழுதுடன் றோன்றுவ ...... - கம்ப., 3964

ஒ) மேற்கோள்பகுதி :

சிவஞான .: உடுக்கை என்பது உடுக்கப்படும் பொருளை உணர்த்துங்கால் ஐகார விகுதியை உடையது என்றும் உடுத்தல் எனப்புடைபெயர்ச்சியை உணர்த்துங்கால் கை என்பது விகுதி என்றும் கூறுவர். — தொல். விருத். பக்., 34

79. 9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. (789)

அ) மணக்.: நட்புக்கு மேம்பட இருக்கும் இடம் யாதெனின், மனத்தின்கண் ஐயுறவின்றிச் செல்லுமாற்றால் தளராமைத் தாங்கி நிற்கும் நிலை எ-று.

வீற்றிருத்தல்-தலைப்பட இருத்தல்.

ஆ) பரிதி.: நட்பாவது எது என்னில் இடையூறு படாமல் அக்காலம் பெற நடப்பதே நட்பு எ-று.

இ) பரிப்.: நட்புக்குச் சுழல்வு[1] இன்றி இனிது இருக்கலாவது யாது என்னில், அதுவும் இடத்து ஊன்றியாகி நிற்றல்[2] எ-று.

கொட்பு இன்றி வீற்றிருத்தல் எனக் கூட்டுக. இதனால் சொல்லியது நட்புத் திரிவின்றி இருத்தலாவது நட்டார்க்குத் தளர்ச்சிவந்தால் தாங்குதல் எனறவாறு ஆயிற்று. மேல் கூறின எல்லாம் ஒத்தார்மாட்டும் மிக்கார்மாட்டும் செய்யும திறன் கூறிற்று இது செல்வக் குறைபாட்டினால் தம்மில் தாழ்ந்தார் மாட்டும் செய்யும் திறன் கூறிற்று.

ஈ) காளிங்.: தாம் இவ்வாறு நட்ட நட்பிற்குப் பின் ஒரு குறை இன்றி இனிது வீற்றிருக்கை யாதோ எனின், அவர்க்கு உதவ வேண்டும் இடத்து எங்கும் புரிவு[3] இன்றித் தமக்கு இயலும் வழியெல்லாம் உதவி உரைத்து நிற்கும நிலைமை எ-று.

கொட்பு இன்றி என்றது புரிதல் இன்றி என்றது.

உ) பரிமேல்.: நட்பினுக்கு அரசிருக்கை யாது எனின். அஃது[4] எஞ்ஞான்றும திரிபின்றி இயலுமெல்லை எல்லாம் அறமபொருள்களின் தளராமைத் தாங்கும் திண்மை[5].

---

1 சுழல்வு - சுழற்சி
2. இடத்து ஊன்றியாகி நிற்றல் - இடத்து ஊன்றக்கூடிய கொம்பாய் இருத்தல். அஃதாவது நட்புக்குச் சுழற்சி ஏற்பட்டபோது ஊன்றுகோலாய் இருந்து உதவுதல்.
3. புரிவு - சுழற்சி
4. அஃது - வீற்றிருக்கை
5. திண்மை - உறுதிப்பாடு

ஒருஞான்றும் வேறுபடாது மறுமை இம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களில்[6] தளர்ந்துழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின்கண்[7] நிறுத்துதற்கு மேல் ஒருசெயலும் இன்மையின், அதனை நட்பிற்கு முடிந்த எல்லை[8] என்றார்.

ஊ) கவிராசர் .: சிநேகத்துக்கு ராச்சியமேதென்றால். எந்நாளுந் திரும்பாமலியல்பாகச் சிநேகம்பண்ணித் நருமத்திலேயும், பொருளிலேயும் குறைபடாமல் தாங்குகிறதே எ-று.

எ) பழைய .: நட்பிற் கரசிருக்கை யாதென வினவின் எஞ்ஞான்றும் மாறு பாடின்றி இயலும் எல்லையெல்லாம் அறம்பொருள் இன்பங்களில் தளராமல் தாங்குந் திண்மை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

பரிப்பெருமாள் 'நட்பிற்குக் கொட்பின்றி வீற்றிருக்கை' எனக் கூட்டி 'நட்பிற்குத் தீங்கின்றி இருத்தல்' எனப் பொருள் கண்டு விளக்கமுந் தருவர். 'கொட்பு' 'மனஐயறவு' 'இடையூறு' 'குறை' 'திரிபு', 'மாறுபாடு' என்றெல்லாம் ஆசிரியர்கள் உரை கூறுவர். இது பெரிதும் ஒத்த கருத்தினவாதல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

.......... .......... .......... மேலோர்
நட்பினி விடைய ராவாய் ............... —கம்ப., 576.

காக்கவுங் கிற்றிலன் காத னன்பரைப்
போக்கவுங் கிற்றில னொருவன் பொய்ப்பிணி
ஆக்கவுங் கிற்றிலன் வென்றி யாருயிர்
நீக்கவுங் கிற்றில னென்று நின்றதால் — கம்ப., 8612.

---

6. மறுமைக்கு உறுதி அறம்; இம்மைக்குறுதி பொருள் என்று கொள்க.
7. அவற்றின்கண் - அத்தகைய அறம் பொருள்களில்
8. 'நட்பிற்கு வீற்றிருக்கை' என்றார்.

79.10. இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. (790)

உரைப்பகுதி :

அ) மணக்:. இவர் நமக்கு இத்தன்மையர், யாமும் இவர்க்கு இத்தன்மையோம் என்று பேணிச் சொல்லினும், நட்புவாடும்[1]; ஆதலால், நட்பினைத் தன்னைத்தான் நினைக்குமாறு போல நினைக்க எ-று.

ஆ) பரிதி .: இவர் நமக்குச் சுற்றத்தினாலே இன்னமுறைமையாவார் என்று சொல்லி நட்பு வைத்தது நட்பல்ல எ-று.

இ) பரிப் .: இவர் நமக்கு இத்தன்மையர்; யாமும் இவர்க்கு இத்தன்மையேம் என்று பேணிச் சொல்லினும் நட்பு வாடும் ; ஆகலான் தன்னை நினைக்குமாறு போல நினைக்குதல் எ-று

இது மேற் கூறியவாறு செய்தலே அன்றித் தான் அவன் என்னும் வேற்றுமை இன்றி ஒழுகவேண்டும் என்றது. இத்துணையும் நட்பின் இலக்கணம் கூறப்பட்டது.

ஈ) காளி .: வேறு ஒருவர் வந்து தம்மொடு இவர் நுமக்கு யாவர்? என்று வினவினால், 'இவர் நமக்கு இன்ன தன்மையர், யாம் இவர்க்கு இன்ன தன்மையேம்' என்று இங்ஙனம் தம் கெழுமுதல் புனைந்து[2] உரைப்பினும் பொலிவு அழியும் நட்பு; எனவே பேதையார் நட்பின் பிழையினைப்[3] பெரிதும் கடிந்தவாறு[4] ஆயிற்று எ-று.

---

1. வாடும் — சுருங்கும்
2. கெழுமுதல் புனைந்து — பொருந்துதலால் அழகு செய்து
3. நட்பின் பிழை — நட்பின் தவறு,
4. கடிந்தவாறு — நீக்கியவாறு.

உ) பரிமேல்.: இவர் நமக்கு இத்துணை அன்பினர் யாம் இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரை ஒருவர் புனைந்து சொல்லினும், நட்புப் புல்லிதாய்த் தோன்றும்.

இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது. தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி வைத்துப் புனைந்துரைப்பினும்[5] வேற்றுமை உண்டாமாகலின், நட்புப் புல்லென்னும் என்றார். இவை ஐந்து பாட்டானும் நட்பினது இலக்கணம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: "இவர் நமக்கு இத்தனை தயையுடையவர்; நாம் இவர்க்கு இம்மாத்திரம் அன்பினர்" என்று சொன்னாலும், சினேகம் கொஞ்சமாய்ப்போகும் (எ-று).

எ) பழைய: இவர் நமக்கித்துணையன்பினர்; யாமிவர்க்கின்ன தன்மையம், என்று ஒருவரை யொருவர் வியந்து சொல்லினும் நட்பு அற்பமாய்த் தோன்றும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. 'இவர் எனக்கு மாமன் மைத்துனன் என்று சொல்லி கொள்வது நட்பல்ல' என்பர். 'யாம் இனையம்' என்பதை வாளா-விடுத்தனர். நட்பிற்குச் சுற்றமாயிருத்தல் ஏதுவாகாது என்க.
பரிப். 'இனையர் இன்னம் என்றல் நட்டார்க்குள் வேற்றுமை காட்டலாகும்' எனல் ஆழ்ந்த கருத்து. 'இனையர் இன்னம் என்று கூறுவார் பேதையர்' என்பர் காளிங்கர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்

முகனமர் கிளவி முன்னின்று உரைப்பின்
ஏதின்மை ஈனும் ஏனோர் மாட்டு. —பெருங். 4:8:6-7.

---

5. 'வைத்தும் புனைந்துரைப்பின்' என்றும் பாடமுண்டு.

# 79. நட்பு

| | செயற்கரிய | நிறைநீர | நவில்தொறும் | நகுதல் | புணர்ச்சி | முகநக | அழிவின் | உடுக்கை | நட்பிற்கு | இனையர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 9 | 7 | 3 | 8 | 2 | 10 | 4 | 5 | 6 |
| பரிதி. | 8 | 6 | 10 | 2 | 3 | 4 | 1 | 9 | 7 | 5 |
| பரிப். | 1 | 10 | 8 | 3 | 9 | 2 | 5 | 4 | 6 | 7 |
| காளி. | 8 | 3 | 10 | 6 | 7 | 5 | 1 | 2 | 9 | 4 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

79-வது அதிகாரம் 'நட்பு' முடிந்தது.

# 80. நட்பாராய்தல்

அ) மணக்.: நட்பாராய்தலாவது நட்பிற்கு ஆவாரை ஆராய்ந்து கொள்ளுமாறு கூறுதல். நட்குங்கால் ஆராய்ந்து நட்கவேண்டுமாத-லின், அதன்பின் இது கூறப்பட்டது,

ஆ) பரிதி : நட்பாராய்தலாவது ஆராய்ந்து நட்புப் பெறவேண்-டும் எ-று.

இ) பரிப்.: நட்பு ஆராய்தலாவது நட்புக்கு ஆவாரை ஆராய்ந்து கொள்ளுமாறு கூறுதல். இது நட்குங்கால் ஆய்ந்து நட்க வேண்டு-தலின் இதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது மேற்சொல்லிய[1] இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நட்கவேண்டுதலின், அவரை[2] ஆராயுந்திறம், அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

ஊ) கவிராசர்.: அஃதாவது—சினேகம் பண்ண வேண்டின பேரை அறிந்தே சினேகம் பண்ண வேண்டுதலின், அவரை ஆராயுந்திறம்.

எ) பழைய.: அஃதாவது, மேற்சொல்லிய நட்பினை நட்புச் செய்தற்கு ஆராய்தல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் 'மணவுறவு போன்று நட்புறவும் வாழ் நாள் முழுதும் நீடிப்பதொன்று. உண்மை நட்பால் ஆக்கமும் தீ நட்பால் கேடும் நிகழும் ஆகையால் முகநகையையும் குழைவான சொல்லையுங் கொண்டே யாரையும் நம்பிவிடாமல் எல்லாவகை யானும் ஆய்ந்து தெளிந்தபின் நட்புக் கொள்ளுதல் வேண்டும் என்பது கூறியவாறாம்' என்பர்.

இராம. 'நாம் யாரை நட்பாக்கிக் கொள்ள விரும்புகிறமோ அவருடையகுணநலத்தை ஆராய்ந்து அவர் குற்றமில்லாதவரா என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பது' என்பர்.

---

1. மேற்சொல்லிய — நட்பு அதிகாரத்தில் கூறிய

2, அவரை — நட்பினரை

வரத. 'ஒருவன் தன்னுடைய குணத்தோடும் அறிவோடும் செயலோடும் ஒன்றி இன்பத்துன்பக் காலத்துப் பிரியாமலிருப்பவனைத் தேர்ந்து எடுக்கவேண்டும்' என்பர். தன்னுடைய குணம் முதலியன பலராலும் நன்குமதிக்கப் படுவதாயிருந்தால் ஓததும், அங்ஙனமின்றித் தீயவனாயிருந்தால் திருத்தியும் என்றும் பிரியாதிருப்பவரை நட்புக் கோடல் வேண்டும் என்றிருந்தால் நல்லது. இவர் கூற்று நட்பின் பயனை முழுதும் பெறச் செய்வதாகாமை காண்க.

சாமி சிதம். 'நட்பினரை ஆராய்ந்தறிதல்' 'என்பர். 'நட்பின் விடில்லை' என்பராகலின் 'நட்பாவாரை ஆராய்ந்து' என்றல ஏற்புடையது.

குழந்தை. 'ஒருவருடைய குணம் செயல்களை ஆராய்ந்த பின்னரே அவரோடு நட்புக்கொள்ள வேண்டும்' என்பர்.

இவற்றுள் மணக்குடவர் தரும் விளக்கம் மிகச்சுருக்கமும் தெளிவும் உடையது பரிமேலழகரது முன்னதிகாரத்தோடு இயைபும் உடன் உரைப்பதால் சிறந்தது. ஏனையவை கருத்தால் மாறறமில்லாதனவே ஆயினும் செறிவானவையல்ல.

80.1. நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. (791)

உரைப்பகுதி :

அ) மணக்.: நட்பை விரும்பியாள்பவர்க்கு ஒருவனை ஆராயாது நட்புச் செய்வது போலக் கேடுதருவது இல்லை; நட்டபின் அவனை விடுதலில்லையாதலால் எ-று.

இது நட்பாராய்தல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: ஒருவன் குற்றத்தை விசாரியாமல் நட்புக்கொள்வது போலக் கேடு இல்லை; பின்பு அவன் பொல்லாத குணத்தைக கண்டு விடாமல் அவனை நட்புக் கொண்டிருப்பது பெருமை எ-று.

இ) பரிப்.: ஆராயாது நட்புப் பண்ணுதல் போலக் கெடுதல் வருதலில்லை; நட்டபின்பு அவர்க்கு விடுதல் இல்லையாதலால் எ—று.

இஃது ஆராய வேண்டும் என்றது.

ஈ) காளி : இங்ஙனம் ஆராய்ந்து கடிது நட்டலின் மேற்பட்ட கேடும் இல்லை; ஒருவாற்றான் நட்ட பின்பு விடுதியும்[1] இல்லை: யார்க்கு எனின், நட்பு அறிந்து ஆளும அவர்க்கு எ—று.

உ) பாிமேல்.: நட்பினை விரும்பி அதன் கண்ணே நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடுதலுண்டாகாது; ஆகலான், ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடுதருவது பிறி-தில்லை.

ஆராய்தல்-குணஞ்செய்கைகளது நன்மையை ஆராய்தல். கேடு—ஆகுபெயர்.[2] நட்கின் தாம் அவர் என்னும் வேற்றுமை இன்மையின் வீடில்லை என்றும், அவ்வேற்றுமை இன்மையான் அவன்கண் பழிபாவங்கள்[3] தமவாமாகலின் இருமையுங்கெடுவர் என்பது நோக்கி 'நாடாது நட்டலின் கேடில்லை' என்றும் கூறினார்,

ஊ) கவிராசர்.: நட்பினை விரும்பி அதில் நிற்பார்க்கு. ஒருவன் குணங்களை ஆராய்ந்து அறிந்து நட்புச் செய்தாற் பின்பு பிரிகிற தில்லையாம். ஆராய்ந்து விசாரியாமல நட்புச் செய்தாற் கேடு வரும் (எ-று).

எ) பழைய : 'நட்பாள் பவற்கு' பாடம்.

ஒருவன் குணங் குறியை நாடாமல் நட்புச் செய்வதுபோல் கேடு தருவது பிறிதில்லை; குணங்குறியை நாடி நட்புச் செய்தபின் அந்த நட்பினை விடப்படாது, நட்பினை யாள்பவற்கு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நட்டலின்' என்பதற்குப் பொருள் காணும் வகையில் 'இன்' என்னும் ஐந்தனுருபு ஒப்புப் பொருளில் வந்ததாகக் கொண்டு 'நட்புச் செய்தலைப்போல' என உரை கண்டவர்கள் மணக். பரிப், பழைய 2, பரிதி. முதலான எழுவர். 'நட்புச்செய்தால்' எனப் பொருள் காண்பவர் கவிராசர். இவற்றுள், 'நட்புச் செய்-தலைக் காட்டினும்' என உறழ்பொருள் கொள்ளின் சிறப்புடைத்தாம்.

---

1. விடுதி — விட்டு நீங்குதல்
2. கேடு தருவதைக் கேடு என்றதால் கூறிய ஆகுபெயர். கேடு தருவது நாடாது நட்டல்
3. பழிபாவங்கள் — பழி இம்மைக்கும் பாவம் மறுமைக்கும் உரியதாகலின் இரண்டையும் கூறுவர்.

'வீடு இல்லை' — 'விடுதியும் இல்லை' 'விடுதல் உண்டாகாது'; 'விடப்படாது,' என்றெல்லாம் உரை காண்பர் ஆசிரியர்கள். 'விடப்படாது' என்பது 'ஒன்றீந்தும் ஒருவுக ஒப்பிலா நட்பு' 'பேதையார் கேண்மை ஒரீஇ விடல்' என்பதனொடு முரணுமாற்றை எண்ணி, 'முகநட்டி அகநட்பு ஒரீஇ விடுக' எனத் தீயார் நட்பை அடியோடு விடின் தம் பெருமை கெடுமாதலின் முற்றவிடா தொழிக. முகத்தளவில் நட்புக்கொள்க என அளவை கூறி முரணகற்றியவாறு.

"வீடு இல்லை"-வீடு முதனிலை திரிந்த தொழிற்பெயராகக் கொண்டு 'விடுதல் இல்லை' என்றனர் பரிதி. இவர் உரை அழி-வந்த செய்யினும் என்ற குறட் கருத்தை நினைவிற்கொண்டு எழுதியதாகும்.

காலி. 'நாடாது' என்ற எதிர்மறை வினை எச்சத்திற்கு ஆராய்ந்து என உடன்பாட்டுப் பொருள் கொள்ளுதல் ஏற்புடையதன்று. இங்ஙனம் ஆராயாது என்ற சுட்டு முதற்குறட்கருத்தாகிய 'அழச்சொல்லி அல்லதிடித்து' என்பதன் கருத்தை வழி மொழிந்த-தாம். காலிங்கர் உரைப்பதிப்புக்களிற் காணப்படும் 'ஆராய்ந்து' என்ற உரைப்பாடம் பிழைபட்ட பாடமாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**நாடாது நட்டல் :**

......... ............... பனிநீர்ச் சேர்ப்பனொடு
நாடா தியைந்த நண்பின தளவே. —நற், 378 : 11-12

**முற்றும் :**

மரீஇப் பலரொடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செருக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇஇப் பின்னைப் பிரிவு - நாலடி, 22

இணக்கம் அறிந்திணங்கு - ஆத்தி., 19

**நட்டபின் விடில்லை :**

கெழீஇக் கலந்தபின் கீழ்காணார் —சிறுபஞ்ச.,37

பெரியோர் நண்படைந்தார் பெயர்பவோ —சீவக.,2589

நாடி நட்பின் அலலது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே - நற்., 32. 8-9

இன்னா செயிறு மினிய வொழிகென்று
தன்னையே தானோ வினல்லது – துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விளை லரிது - நாலடி.,76

கைப்புகு துறுசர ணருளிக் காத்துமேல்
பொய்க்கொடு வஞ்சனை புணர்த்த போதிலும்
மெய்க்கொள விளியினும் விடுது மென்னினும்
திக்குறு நெடும்பழி யறமுஞ் சீறுமால் - கம்ப., 6565

நல்லா தொழியின் அன்றிஅவள் நட்டா ளாயின் பிணைப்பேதம்
கொள்ளான் ஒருவர் மாட்டுமெனில் உயிர்போல் சிறப்பில் கொண்டவுனை
எள்ளான் என்ன வேண்டுமோ என்சொல் எல்லாம் இருந்தறிதி
வள்ளால் எனஇன் மொழிபுகன்றாள் மாற்ற மறிந்த மதமானி
பிரபு. பிரபுதேவர்., 42

ஓ) மேற்கோள் பகுதி :

சிவஞான .: நாடுதல்-ஆராய்தல் 'நாடாது நட்டலிற்கேடில்லை' என்பதனானும் உணர்க. — (கம்ப. சங்கோத்.பக்.10)

80.2. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். (792)

உரைப்பகுதி :

அ) மணக்:. குற்றமும் ஆய்ந்து குணமும் ஆய்ந்து கொள்ளாதான் கொண்ட நட்பு, பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும் எ-று.

இஃது ஆராயாமையால் வருங்குற்றம் கூறிற்று.

ஆ) பரிதி .: நாள்தோறும் புத்தியுண்டாகிய நட்பு ஆராய்ந்து கொள்ளாமல் களிப்பிலே ஒருவன் நட்புக் கொண்டால் பின்பு தனக்கு மானம் வந்தாற் போல் துயரம் வரும் எ-று.

இ) பரிப்.: குற்றம் ஆய்ந்து கொள்ளாதான் கொண்ட நட்புப் பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும் எ-று.

இஃது ஆராயாமையால் வரும் குற்றம் கூறிற்று.

ஈ) காளி.: ஒருவரோடு முதல் முறை நட்புச் செய்யும் இடத்து அவர் குணம் குற்றங்களைப் பலபடியும் தெரிந்து ஆராய்ந்து கொள்ளாதான் செய்யும் நட்பானது, பின் முறையே தனது உயிர்க்கு இறுதியாவது ஓர் உறுதுயரத்தைச்[1] செய்யும் எ-று.

உ) பரிமேல்.: குணமும் செய்கையும் நல்லன என்பது பலகாலும்[2] பலவாற்றானும் ஆராய்ந்து ஒருவனோடு நட்புக்கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்கு ஏதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளைக்க வேண்டாமல் தானே விளைக்கும்.

கடை முறைக்கண் என இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்க. குணமும் செயலும் தீயானொடு கொள்ளின் அவற்கு[3] வரும் பகைமையெல்லாம் தன்மேலவாய்ப் பின் அவற்றான்[4] இறந்துவிடும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் ஆராயாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: குணமும் நடத்தையும் நல்லன் என்கிறதைப் பலகாலும் பலவாற்றாலும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுக்கு கடைசியிலே தான் சாகத்தக்க துக்கம் வரும் எ-று.

எ) பழைய.: குணமும் செய்கையும் நல்லவனென்பது பலநாள் ஆராய்ந்தும், பலகாரியங்களில் ஆராய்ந்தும், ஒருவனோடொருவன் கொள்ளாத நட்பு, முடிவின்கண் தான் சாதற்கு ஏதுவாகிய துன்பத்தைத் தரும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆய்ந்து ஆய்ந்து' என்ற வினைஎச்ச அடுக்கைக் குற்றத்தையும் ஆய்ந்து குணத்தையும் ஆய்ந்து எனப் பங்கீடு செய்பவர் மணக்.; காளிங்கர் பலபடியுந்தெரிந்து எனப் பொருள் காண்பர். 'பல்லாற்றானும் பலவகையானும் ஆய்ந்து' என்பர் பரிமேல். கவிராசர், பழைய 2 ஆசிரியர்.

---

1. உறுதுயரம் — மிக்க துயரம்
2. 'நல்லனென்பதும் அல்லனென்பதும் பலகாலாராய்ந்தும்' என்னும் பாடமுண்டு.
3. அவற்கு — தீயவனுக்கு 4. அவற்றான் — அப்பகைகளால்

பரிதி. 'ஆய்ந்தாய்ந்து' என்பதற்கு 'நாள்தோறும் புத்தியுண்டாகிய' என ஒருவகையாற் கருத்துப் பொருள் காட்டினர்.

இராம. தாம் சாந்துயரந்தரும்.-தான் சாகுங்காலம் வரையில் துயரம் தரும் எனக் கால எல்லையை மேற்கூறுவர். ஏனோர் தாம்இறத்தற்கு காரணமான பெரிய துன்பத்தைத்தரும் என்பர். ஆய்ந்து-ஆராய்ச்சி செய்து, ஆய்ந்து - தேர்ந்தெடுத்து என இரண்டற்கும் இரு வேறு பொருள் கொள்வர். முதற்குறளில் 'வீடில்லை நட்பாள்பவர்க்கு' என்றதனால் கடைசிவரையில் துன்பந்தந்து கொண்டேயிருக்கும் என்றலே இயைபுடையது எனவும், வேறுபடவரும் பரிமேலழகர் உரை போன்றவை சிறப்பில எனவும் மறுப்பர். பரிமேலழகர் உரை உள்ளவரையில் துன்புறுத்தி வந்து இறுதிக்கண் சாகக் கூடிய பெரிய துன்பத்தையுந்தரும் என்ற இருநிலையையும் அறிவிப்பது. இவர் உரை சாகும்வரை துன்புறுத்தும் என ஒருநிலைத்துன்பத்தை யுணர்த்துவது. சிறந்தது கொள்க-தேவநேயர் 'கடைமுறை தான் சாந்துயர்-சாதல் அல்லது சாதற்கேற்ற துயர்' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்

விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்ச மொழியலோ வேண்டா
அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விரைந்து விடும். — பழ. நா., 42.

80. 3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. (793)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருவனுடைய குணமும், குடிப்பிறப்பும், குற்றமும், குறைவில்லாத சுற்றமும் முன்பே ஆரய்ந்து, பின்பு அவனை நட்பாகக் கொள்க எ–று.

இவையெல்லாம் ஒத்தனவாயின், உறவு நீளச்செல்லும்[1] என்றவாறாம்.

1. உறவு நீளச் செல்லும் - நட்பு தொடரும்

ஆ) பரிதி .: குணமும் குற்றமும் குடிப்பிறப்பும் விசாரித்து நட்புக் கொள்ளுக எ-று.

இ) பரிப் .: ஒருவனுடைய குணனும் குடிப்பிறப்பும் குற்றமும் குறை இல்லாத சுற்றமும் முன்பே ஆராய்ந்து பின்பு அவனை நட்பு ஆகப் பிணிக்க எ-று.

இவை எல்லாம் ஒத்தன ஆயின் உறவு நாள் செல்லும். இஃது ஆராய வேண்டுவன கூறிற்று.

ஈ) காளி.: குடிப்பண்பும், ஒழுக்கக்குறைபாடு இல்லாச் சுற்றமும், குணமும், குற்றமும் இவை நான்கினும் ஒருவரைச் சீர்தூக்கி அறிந்து மற்று அவரோடு செறிக[2] நட்பினைஎ-று.

உ) பரிமேல்.: ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்து அறிந்து, அவனோடு நட்புச் செய்க.

குற்றமில்லாதார் உலகத்து இன்மையின் உள்ளது பொறுக்கப் படுவதாயின் அவர் நட்பு விடற்பாற்றன்று என்பார் 'குற்றமும்' என்றும், சுற்றப் பிணிப்புடையார்[3] நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலின் 'குன்றா இனனும்' என்றும், விடப்படின் தம்குறையாம் என்பார் 'அறிந்துயாக்க' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் : ஒருவன் குணத்தினையும் அவன் வங்கிசப் பிறப்பையும் குற்றத்தையும் அவனுடைய சிநேகிதரையும் ஆராய்ந்து அவனோடு நட்புச் செய்க.

எ) பழைய: ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றததினையும் குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்து அவனோடு நட்புச் செய்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி.: இக்குறளில் குன்றா இனனும் என்பதற்குப் பொருள் காணாதொழிந்தனர். குடிமையில் அடங்கும் என்று ஒழித்தனர் போலும்.

---

2. செறிக - நெருங்கிப் பழகுக.
3. சுற்றப் பிணிப்புடையார் - சுற்றம் என்ற தொடர்புடையார்

காளி. குன்றா இனம்—ஒழுங்கால் குறையாத சுற்றம்' என்பர். தேவநேயர், 'குணநாடிக்குற்றமும் நாடி' என நாடற்குரிய இரண்டே என்றறிவித்த ஆசிரியர், ஈண்டு குடிமையும் குன்றா இனனுங் கூறியது. சுற்றத்தொடர்பு உடையவன் நட்புப் தொடர்பிற்கும் உரியவனாவன என்பதை வலியுறுத்த வேண்டி' என்பர். குன்றா இனம்— குறைவில்லாத சுற்றம்' மணக். ஈண்டு குறைவு என்பதை நிறைவின் எதிர் சொல்லன்று. பழியும் பாவமும் குடிக்குற்றமும் முதலான குறைகளை என்க. இதனையே காளிங்கர் 'ஒழுக்கக் குறைபாடில்லாத சுற்றம்' என்பர். 'அவனுடைய சினேகிதர்' என்பர் கவிராசர். இவற்றுள் சுற்றத்தைக் குடிப்பிறப்பிலும் நட்பை இனத்திலும் எண்ணும் உரைகள் சிறந்தன.

வள்ளுவர் குணம்நாடி, குற்றமும்நாடி, மிகைநாடி மிக்க கொளல் என்பராகலின் குற்றமும் அறிந்து என்றார்; நட்பும், காதன்மையும், மகன்மையும் போல்வதொரு பந்தமாதலின் 'யாக்க' என்றார்; யாத்தல்-கட்டுதல். குணமும் குடிமையும் 'குலத்தளவே யாகும் குணம்' என்றாங்கு என்றும் இயைபுபட்டு உடன்தோன்றியன-வாதலின் முதற்கண் கூறினார், குற்றம் இனம் பற்றியும் விளைவதோன்றாகலின் குற்றத்தையடுத்து அதுவராமல் தடுக்கக் குன்றா இனத்தைக் குறித்தார்; குறைவற்ற சுற்றம் என்பது சுற்றத்தின் பன்மை குறித்த தன்று ; குற்றமற்ற சுற்றம் என்பதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

**குணனும் குற்றமும் அறிந்தியாக்க நட்பு :**

குற்றமும் ஏனைக் குணனும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவானேல் - நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக — நாலடி.,230

வழிமுறை பயின்று வந்த மரபினர் மன்னர் கோமான்
விழுமலர் அடிக்கண் மிகக அன்பினார் வென்றி நீரார்
எழுவளர்த் தனைய தோளார் இளையவர் இன்ன நீரார்
உழையவ ராக வைத்தான் ஓடைமால் களிற்றி னானே
— சூளா.,98

முற்றும் :

நன்மதி உடைமை குடிகுணம் குற்றம்
நல்லினத் தானும் எனத் திறந்தும்
பன்முறை யாய்ந்து நட்பினைக் கொள்க
பாம்பொடு பழகினும் பிரிதல்
இன்மையாம் அதனால் ஆய்ந்தலால் ஒருவர்
இடத்துநட் புறேல்உறின் அவர்செய்
புன்மையும் பழியும் புணர்ந்திரு பயனும்
போக்குவ துண்மைபுக் திரனே. — விநா. அரசி.,126.

அறிந்தியாக்க நட்பு :

சிநேகம் செய்தபின்; சேதி தெரிந்தபின் — பழ.,

80.4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. (791)

உரைப்பகுதி :

அ) மணக் .: மேற் கூறியவற்றுள்[1] உயர்குடிபிறந்து, தன்மாட்டுப் பிறர் சொல்லும் பழிக்கு அஞ்சுமவனை, அவன் வேண்டியது ஒன்று கொடுத்தும் நட்பாகக் கொள்ளல் வேண்டும் எ-று.

ஆ) பரிதி .: நற்குலத்திலே பிறந்தவனாகவும் பழிக்கு அஞ்சுவா-னாகவும் அவன் இருப்பது கண்டால் அவனுக்கு வேண்டுவன கொடுத்தும் நட்புக் கொள்ளுக எ-று.

இ) பரிப் .: மேல் கூறியவற்றுள் உயர்குடிப் பிறந்து பிறர் சொல்லும் பழிக்கு அஞ்சும் அவனை அவன் வேண்டியது ஒன்று கொடுத்து நட்பு ஆகக் கொள்க எ-று.

கொடுத்தும் கொளல் வேண்டும் என்றமையால் அரசன் நட்பு ஆவாரைக் கூறிற்று.

ஈ) காளி .: ஒழுக்கம் குன்றாக் குலத்துப் பிறந்து தன்மாட்டு ஒரு பழி நாணுவானைச் சிறந்தன கொடுத்தும் நட்புக்கொள்ள-வேண்டும் எ-று.

---

1. மேற் கூறியவற்றுள் — முன் குணனும் குடிமையும் என்று கூறியவற்றுள்

உ) பரிமேல்.: உயர்ந்த குடியின்கண் பிறந்து தன்மாட்டு உலகர்சொல்லும் பழிக்கு அஞ்சுவானை, சில[2] கொடுத்தாயினும் நட்புக் கோடல் சிறந்தது.

குடிப்பிறப்பால் தான் பிழை[3] செய்யாமையும், பழிக்கு அஞ்சலால் பிழைத்தன[4] பொறுத்தலும் பெற்றாம். இவை இரண்டும்[5] உடையானைப் பெறுதல் அருமையின், அவன் நட்பை விலை கொடுத்தும் கொள்க என்பதாம்.

காரி.: வேண்டும் என்பது ஒருசொல் நீர்மைத்து உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்''[6] என்பதனை ஒக்கும் கொளல்

ஊ) கவிராசர்.: உயர்ந்த குடியிலே பிறந்து தன்னிடத்திலே உலகத்தார் சொல்லும் நிந்தைக்கு[7] அஞ்சுகிறவனைக்கண்டால், அவனுக்குச் சிலபொருள் கொடுத்தாயினும் நட்புக் கொள்ள வேணும் எ-று.

எ) பழைய.: 'கொள வேண்டு நட்பு' பாடம்.

உயர்ந்த குடியிற்பிறந்து, தன்னிடத்து உலகத்தாள் சொல்லிப் பழிக்கும் பழிக்கு நாணத்தையுடையானைச் சில பொருள் கொடுத்தாகிலும் நட்புக்கொள்ள வேண்டும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'குணனும் குடிமையும்' என்ற (793) குறள் தன்னிடம் வருவானை நட்புக் கொள்ளும் முறையையும் 'குடிப்பிறந்து' (794) இக்குறள் தானே சென்றும் பெற வேண்டியவனியல்பும் அறிவிப்பன என்பர். முன்னது 'அறிந்து' என வாளா கூறினமையின் 'தன்கண் வருவாரை ஆய்ந்து கோடல் வேண்டும்' என்பதைக் குறிப்பது. 'இது கொடுத்தும்' என்ற குறிப்பால் தாமே வலிய சென்று கோடல் வேணடும் எனபதைக் குறிப்பது எனக் கருதினர் போலும்: இக்கருத்தும் பாகுபாடும் ஏற்புடையன.

2. சில — அவன் விரும்பும் பொருள்களில் சிலவற்றை
3. பிழை — குற்றச் செயல்கள்.
4. பிழைத்தன — பிறர் செய்த குற்றங்களை
5. இவை இரண்டும் — பிழை செய்யாமையும் பிழைத்தன பொறுத்தலும்
6. குறள்., 703. 7. நிந்தைக்கு — பழிச்சொல்லுக்கு

ஒ) ஒப்புமைப்பகுதி :

பழிநாணுவான் :

எந்தைமற் றவனின்வந் துதித்த யானுளேன்
வெந்துயர்க் கொடும்பழி வில்விற் றாங்கினேன் —கம்ப., 4027

கரும்பழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன். ……….. ………… —கம்ப., 4028

கொடுத்தும் கொளல் :

……… கொடுத்துங் கொளல் —குறள்., 703

80.5. அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். (795)

உரைப்பகுதி :

அ) மணக். : குற்றம் கண்டால் அழுமாறு சொல்லி, நெறியல்லாதன[1] வற்றிற்குக் கழறி[2], உலகவழக்கறிய வல்லாரது நட்பை ஆராய்ந்து கொள்க எ-று.

இது மந்திரிகளுள் நட்பாகற்பாலரைக்[3] கூறிற்று.

ஆ) பரிதி .: அழச்சொல்லிக் காரியம் உறுதியிட்டு நெறியில்லாத காரியம் தள்ளி உலகவழக்கறிய வல்லார் நட்பு ஆய்ந்து கொள்ளுக எ-று.

இ) பரிப் .: குற்றம் கண்டால் அழுமாறு சொல்லி நெறி அல்லாதனவற்றிற்குக் கழறி, உலக வழக்கு அறிய வல்லாரது நட்பை ஆராய்ந்து கொள்க எ-று.

இது மந்திரிகளின் நட்பு ஆவாரைக் கூறிற்று. அரசர் அல்லாதார்க்குத் தம்மில் உயர்ந்தாரை நட்பு ஆக வேண்டும் என்று கொள்ளப்படும்.

---

1. நெறியல்லாதன - நீதிநெறியல்லாதன 2. கழறி - இடித்துரைத்து
3. நட்பாகற் பாலரை – நட்பாக ஏற்றுக் கொள்ளத்தக்காரை

ஈ) காளி .: நட்பானவன் இங்ஙனம் காரியமானது நிகழுமாறு சொல்லியும், நெறி யல்லது செய்யும் இடத்து நெருக்கியும்[4], செய்யத் தரும் முறைமை இது என்று அறிதலும் இம்மூன்று நெறியும் வல்லவர் யாவர் சிலர் நல்லறிவாளர் ; அவரது நட்பினை ஆராய்ந்மி கொள்க நட்கும் இடத்து எ-று.

உ) பரிமேல் : தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதின் சோகம்[5] பிறக்கும்வகை சொல்லி விலக்கியும், செய்தக்கால் பின்னும் செய்யா வகை நெருக்கியும், அவ்வழக்குச்[6] செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை, ஆராய்ந்து நட்புக்கொள்க.

அழச்சொல்லி இடித்து எனவந்த பரிகாரவினைகளான்[7] அவற்றிற்கு ஏற்ற குற்றவினைகள்[8] வருவிக்கப்பட்டன. வழக்கு-உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மொடு நட்டாரும்[9] அறியும்வகை அறிவித்தல் அரிதாகலின் 'அறியவல்லார்' என்றார். இரண்டாவது இறுதிக்கண் தொக்கது.

ஊ) கவிராசர் .: தான் உலகவழக்கமல்லாத காரியத்தைச் செய்ய நினைத்தால் ஆழத்தக்க கடின வார்த்தைகளைச் சொல்லி விலக்கவும், செய்தாற் பின்பும் செய்யவொட்டாமல் நெருக்கிப் பிடிக்கவும், நல்ல காரியங்களைச் செய்யாவிட்டால் அதட்டிச் செய்விக்கவும் வல்லவர்களை ஆராய்ந்துபார்த்து நட்புக் கொள்ள வேணும் எ-று.

எ) பழைய .: தாமுலக வழக்கல்லது செய்யக் கருதிய வழி, கிலேசம்[10] பிறக்கும் வகை சொல்லி விலக்கிப் பின்னுஞ்செய்யாவகை-யிடித்துக் காட்டி அப்படிச் செய்விக்கும் வழக்கறிய வல்லவரை ஆராய்ந்து நட்புக் கொள்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'வழக்கு அறிய வல்லார்' என்பதற்குப் பரிமேலழ-கரும் அவர் 'வழிவந்த பின்னோரும்' உலகவழக்கை அறியச்செய்து செய்விக்கவும் வல்லார்' என உரை காண்பர். முன்னோர் 'உலக

4. நெருக்கி - ஒறுத்து 5. சோகம் - துன்பம்

6. அவ்வழக்கு – உலக வழக்கு 7. பரிகார வினைகள் - நீக்கும் உபாயங்கள்

8. குற்றவினைகள் – நெறியல்நெறிகளைச் செய்யக் கருதியவரை அழச்சொல்லியும், செய்தவரை இடித்தும் பேசுதல் என்க.

9. 'தாமறிதலே யன்றித் தம்மொடு நட்டாரும்' என்றும் பாடமுண்டு.

10. கிலேசம் - துன்பம்.

வழக்கை யறிய வல்லார்' என உரை காண்பர் இவ்விருவகை யாருள் வேறுபாடு; மணக்குடவர் முதலிய தொல்லோர் கூற்று 'தாம் அறிய வல்லார் நட்பைக் கொள்க' என்பதே; பரிமேலழகர் போன்றோர் கருத்து 'தாம் அறியவும், அறிவிக்கவும் செய்விக்கவும் வல்லார் நட்பைக் கொள்ளுக' என்பது.

மணக்குடவர் முதலானோர் குறட்பாவின் இடக்கை முறையிலேயே பொருள் காண்பர். பரிமேலழகர் முதலானோர் 'அல்லது (கருதின்) அழச்சொல்லி, (செய்யின்) இடித்தும் அறிய-தான் அறிந்துசெய்விக்க' எனக் கூட்டிப் பொருள் தருவர். இவற்றுள் கொண்டு கூட்டிப் பொருள்தரும் முறையே தெளிவானது. இதனையே பின்னுள்ள தேவநேயரும் பிறரும் கொண்டமையுங் காண்க.

பரிப்பொருள் இக்குறள் அமைச்சருள் நட்பாவாரைக் கூறிற்று என்பர். ஏனையோர் 'சிறப்புடைமையான் அரசர்க்குக் கூறியதாயினும் ஏனோர்க்கும் கொள்க' என்பர். அமைச்சருள்ளிட்ட ஐம்பெருங்குழுவிற்கும் ஏற்றதாகலாம் எனவும் எண்ணலாம் ஆயினும் அவருள் அமைச்சரே நட்பும் ஆதற்குரியர் எனப் பரிப்பொருள் கருதினர் போலும்.

நட்புக் கொள்வதற்கு முன் இத்துணையும் ஆய்ந்து கோடல் இயலா தாகலின் தம்மால் நட்கப்படுவார் பிறரிடமும் தம்மிடைச் சில போதும் பழகு நெறியிலிருந்து ஆய்ந்து தெளிக என்பதாம். வரத. 'பின்னரும் தீமை நிகழாதபடி அழச்சொல்லுதலும், தீமையால் வரும் துன்பத்தைக் காட்டிப் பயமுறுத்தலால் இடித்துரைத்தலும் ஆம்' என்பர். பரிமேலழகர் 'கருதும்போதே நீக்கப் பயன்படுவது அழச்சொல்லுதல். செய்தக்கால் மீண்டும் செய்யாவகை தடுத்தல் இடித்துச் சொல்லுதல்' என்பர்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

அழச் சொல்லி :

உளைய உரைத்து விடினும் —பழ. நா :, 354.

அழஅழச் சொல்லுவார் தன்மனிதர் —பழ.,

80. 6. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். (796)

உரைப்பகுதி :

அ) மணக். : கேடுவந்தவிடத்தும் ஒரு பயனுண்டாம்; அக்கேடு நட்டாரது தன்மையை நீட்டி அளந்தறிதற்கு ஒரு கோலாமாதலால் எ-று.

மேல் கெடுங்காலைக் கைவிடுவாரை விடவேண்டுமென்றார் அவரை அறியுமாறு என்னை என்றார்க்கு, கேட்டாலல்லது அறிதல் அரிதென்றார்.

ஆ) பரிதி .: தனக்கு வந்த விதனம், தனக்கு ஆன மனிதரை-யும் ஆகாதவர்களையும் அறிவிக்க வந்த அளவு கோல் எ-று.

இ) பரிப் .: கேடு வந்த இடத்தினும் ஒரு பயன் உண்டாம். அக்கேடு நட்டாரது தன்மையை அளந்து அறிதற்கு ஒரு கோல் ஆம் ஆதலால் எ-று.

மேல் கெடுங்காலைக் கைவிடுவாரை விட வேண்டும் என்றார், அவரை அறியுமாறு என் என்றார்க்குக் கேட்டால் அல்லது அறிதல் அரிது என்று கூறிற்று.

ஈ) காளி .: ஒருவர்க்கு வறுமை முதலிய கேடு வந்து உற்ற இடத்துத் தளர்ச்சி[1] அல்லது ஓர் உறுதி இன்று அன்றே, மற்று அக்கேட்டின் பெரியதோருறுதிப்பாடு[2] அஃது யார்க்கோ எனின்? இவர் எமக்கு இனிய துணையாவர் என்று இங்ஙனம் தமக்குச் சிறந்த கிளைஞரைக்[3] காலம் நெடுக விட்டு அளப்பது ஓர்கோல் எ-று.

இனி மற்று இங்ஙனம் நெடுக நிலைநிற்பதே நட்பு என்றார் ஆகலின் காலம் நீட்டி மற்று இதன் பின்னரே பழைமையை அறி-விக்கின்றது மேலையதிகாரம்.

1. தளர்ச்சி - மன்ந்தளர்தல்
2. உறுதிப்பாடு - துணிவு
3. கிளைஞர் - சுற்றத்தார்

உ) **பரிமேல் .:** ஒருவனுக்குக்கேடு என்பது தன் நட்டாராகிய புலங்களை எஞ்சாமல் அளப்பதோர் கோல்; ஆகலின் அதன்கண்ணும் அவனால் பெறப்படுவதோர் நல்லறிவு உண்டு.

தத்தம் நட்பெல்லைகள் சுருங்கி இருக்கவும், செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றாமல் போந்தார்,[4] பின் கேடுவந்துழிச் செயல்வேறுபடுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படும் என்பது பற்றிக் கேட்டினைக்கோலாக்கியும், அதனால் அவரை அளந்தறிந்தால், ஆவாரையே கோடலின், அவ்வறிவை 'உறுதி' என்றும் கூறினார். கிளைஞர் ஆகுபெயர்[5]. இஃது ஏகதேசவுருவகம்[6]. இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவர் என்பதூஉம் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர் :** ஒருவனுக்குக்கேடு என்பது, தன்னுடைய சுற்றத்தார் மனதுகளை எஞ்சாமல் அளப்பது ஒரு கோல்: அக்கேட்டிலும் ஒரு நல்லறிவு பிறக்கும் எ-று.

எ) **பழைய : 'அளப்பதாங் கோல் பாடம்'**
ஒருவனுக்குச் செல்வமன்றிககேடு வந்தவிடத்து ஓர் உறுதியுண்டாம்; அஃது யாதெனில்தன் நாடீராகிய நிலத்தை நீட்டி அளப்பாதாகிய அறிவு என்னும் கோல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**கவிராசர் 'கிளைஞரை - கிளைஞரது மனத்தை' என்பர்.** ஆனால் அவருரை மனதுகளை என்றுள்ளது. 'மனது' என்பது 'மனசு' என்ற வட சொல் திரிபேயன்றித் தமிழகாமையையும், மனம் மகரஈற்றுப் பெயர்ச் சொல்லாதலையும் அது ஐயுருபேற்கின் மனங்களை மனத்தை என ஏற்குமேயன்றி மனசுகளை என வாராது என்பதும காண்க.

---

4. புறத்துத் தோன்றாமல் போந்தார் - தமக்குள் நட்பின்மையை வெளிக்குக் காட்டாமல் பழகியவர்.
5. கிளை என்னும் முதற்பொருளின் பெயர் அதன் பண்பாகிய நட்பை உணர்த்துதலின் பொருளாகுபெயர்.
6. கேட்டினைக் கோல் என்றவர் கிளைஞரை நிலம் என உருவகம் செய்யாமையால் இக்குறள் ஏகதேச உருவகமாயிற்று.

இராம: நீட்டி-கோணலின்றி நேராக' என்பர். 'நீட்டி' என்ற சொல் நீட்டலளவை என்பதைக் குறிக்க வந்தமை 'கோல்' என்ற ஆட்சியானும் துணியப் பெறும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

கேட்டினும் உண்டோர் உறுதி :

கேட்டிலுறுதி கூட்ட முடைமை —கொன்றை., 21

ஆபத்தில் அறியலாம் அருமைச் சிநேகிதனை -பழ.,

முற்றும் :

சொல்லிய அறநெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்த நம்பி ...... - கம்ப., 3551

......நிலையாத நிலையுடையே னேய நெஞ்சின்
நலங்காண நடந்தனையோ நாயகனே தீவினையே னன்பி னின்றும்
விலங்கானே னாகலினால் விலங்கினே னின்னுமுயிர் விட்டிலேனால்
- கம்ப., 2802

80.7. ஊதியம் என்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். (797)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருவனுக்கு இலாபமென்று சொல்லப்படுவது அறிவில்லாதாரோடு நட்பாகுதலை நீங்கி விடுதல் எ-று.

இது பேதையார் நட்பைத் தவிர்க என்றது.

ஆ) பரிப் : ஒருவர்க்கு லாபமானது பொல்லாதார் நட்பை விடுதல் எ-று

இ) பரிப்.: ஒருவற்கு இலாபம் ஆவது அறிவிலாதாரோடு நட்பு ஆகுதலை நீங்கி விடுதல் எ-று.

இது பேதையார் நட்புத் தவிர்க என்றது.

ஈ) காளி .: உலகத்து உணர்வுடை ஒருவனுக்குப் பெறும்பேறு[1] என்று எடுத்து உரைக்கப்படுவது யாதோ எனின்? அறிவு கேடரது[2] கெழுழுதலைச் செய்யாது தப்பிப்போதல் எ-று.

ஒரீஇ என்பது நீங்கி யொழிதல் என்பது.

1. பெறும்பேறு – அடையும் செல்வம் 2. அறிவுகேடரது - அறிவு திரிந்தவனது

உ) பரிமேல் .: ஒருவனுக்குப் பேறு என்று சொல்லப்படுவது, அறிவிலாரோடு நட்புக்கொண்டானாயின் அதனை ஒழிந்த அவரின்[3] நீங்குதல்.

நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் ''வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே''[4] மாறுபோலத் தீங்கு வருதலின்[5] 'விடல்' என்றும், நீங்கியவழித் தீங்கொழிதலேயன்றி இருமையின்பத்திற்குரிமை எய்தலும் உடைமையின அதனை[6] 'ஊதியம்' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் .: ஒருவனுக்குப்பெறப்பட்ட பேறாவது, அறிவில்லாதவனுடனேயே சிநேகம்பண்ணினால், அதைக் கழியவிட்டு[7] அவரின் நீங்குதல் எ-று.

எ) பழைய : ஒருஎனுக்கு ஆதாயம் என்று சொல்லப்படுவது, அறிவில்லானோடு நட்புக் கொணடானாகில் அதனையொழிந்து அவனோடு நீங்கி விடல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

'ஓரீஇவிடல்' என்பதனை 'நீக்கிவிடல்' என்பதுபோல ஒரு சொல்லாகக் கொண்டு பொருள் உரைப்பவர்கள் மணக்., பரிதி., இராமலிங்கனார் முதலியோர் 'விடுஒழி விகுதிகள் தமக்கென வேறுபொருளின்றிப் பகுதிப் பொருளாய் வருதலியல்பாதலை' எண்ணி இவர்கள் இங்ஙனம் கொண்டனர். இருசொல்லாகக் கொண்டு, 'கெழுமுதலைச் செயயாது தப்பிப் போதல்' எனவும்; 'ஒழிந்து அவரின நீங்குதல்' எனவும் உரை கண்டவர்கள் பரி-மேலழகர், காளிங்கர் முதலானோர். ஒருவுதல் தீமைகண்டுழி விலகுதலையும், விடல்-பின்னர் இணைய நேரினும் இணையாது துவரத்துறத்தலையும் உணர்த்துவனவாகக் கோடல தகும்.

''பேதைப்படுக்கும் இழவூழ்'' என்புழி ஊழ்வயத்தால் அறிவு இருந்தும் செய்தக்க செய்யாமையும் தகாதன செய்தலும் பேதைமையாதல் போல முறுகிய நட்புணர்விருந்தும் உடுக்கையிழந்தவன் கைபோல உதவ வேண்டிய இவன் உதவாதிருத்தல பேதைமையானாம் ஆதலின் பேதையார் என்றதாம் என்ற கருத்தமைநத உரைகள் சிறந்தன.

---

3. அவரின் - அறிவிலாரிடத்தினின்றும்
4. நாலடி.. 180.
5. தீங்குவருதலின் - கேடுவருதலின்
6. அதனை - பேதையாரினின்று நீங்குதலை
7. கழியவிட்டு - நீங்கச் செய்து.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பேதையார் கேண்மை ஒரீஇ விடல் :**

தீயவரொ டொன்றிய திறத்திரு நலத்தோர்
ஆயவரை யந்நிலை யறிந்தனர் துறந்தாங்கு — கம்ப., 917

80.8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. (798)

உரைப்பகுதி:

அ) மணக்.: தான் சிறுகுமவற்றை[1] உள்ளத்தால் நினையா-தொழிக; அதுபோல, அல்லல் வந்தவிடத்து வலியாகாதாரது நட்பினைக் கொள்ளாதொழிக எ—று.

இது தீக்குணத்தார் நட்பைத் தவிர்க என்றது.

ஆ) பரிதி.: நினைக்கக் கடவானல்லன் தன் செல்வம் குறையின் காரியத்தை; அதுபோலத் தனக்கு விதனம் செய்தார் நட்புச் செய்யக் கடவானல்லன் எ—று.

இ) பரிப்.: தான் சிறுகும் அவற்றை உள்ளத்தால் நினையாது ஒழிக: அதுபோல அல்லல் வந்த இடத்து வலியறுப்பாரது நட்பைக் கொள்ளாது ஒழிக எ—று.

இஃது இழிகுணத்தார் நட்புத் தவிர்க என்றது.

ஈ) காளி.: சிறுமை உள்ளனவற்றை எஞ்ஞான்றும் உள்ளம் கருதற்க; அல்லல் உற்ற இடத்துக் கீழ் அறுப்பாரது[2] நட்பினையும் கொள்ளற்க எ—று.

உ) பரிமேல்.: தம் ஊக்கம் சுருங்குதற்குக் காரணமாய வினை-களைச் செய்ய நினையாதொழிக, அதுபோலத் தமக்கு ஒருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக.

---

1. சிறுகுமவற்றை — பெருமை குறைப்பவைகளை
2. கீழ் அறுப்பாரது — மறையை வெளிப்போக்கிப் பிறர் அறியாதபடி தீங்கு செய்வர்.
3. தொகுப்பும் குறிப்பும் காண்க. 4. 'வலியறுப்பார் என்றும் பாடமுண்டு.
5. 'உள்ளம் சிறுகுவ உள்ளற்க' என்ற உவம வாக்கியத்திற்கும் நட்பு கொள்ளற்க என்ற வாங்கியத்திற்கும் இடையே அதுபோல என்ற உவம உருபு இல்லாமையால் இச்செய்யுள் எடுத்துக்காட்டு உவமையாயிற்று.

உள்ளம் சிறுகுவவாவன தம்மின்வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவும் ஆம். ஆற்று என்பது முதனிலைத்தொழிறபெயர். முன்னெல்லாம் வலியராவர் போன்று ஒழிதலின், 'ஆற றுப்பார்'[6] என்றார். எடுத்துக்காட்டுவமை[7]. கொள்ளின் அழிநதேவிடும் என்பதாம்.

காரி.: ஆற்றறுத்தல்-கைவிடுதல். "அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா" வும் அது.

ஊ) கவிராசர்: தன்னுடைய ஊக்கம் குறைந்து போகிறதற்குக் காரணமாகிய காரியங்களைச் செய்ய நினைக்க வேண்டாம். அதுபோல, தனக்கொரு துக்கம் வந்தபோது விட்டுப் போகிறவனுடனே சிநேகம் பண்ணவேண்டாம் எ—று.

எ) பழைய: 'சிறுகுப' பாடம்

தம் மனவெழுச்சி சுருங்குதற்குக் காரணமாகிய வினைகளைச் செய்ய நினையாதொழிக; அதுபோலத் தமக்கு ஒருதுன்பம் வந்தவிடத்துக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளதொழிக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

'சிறுகுவ உள்ளம் உள்ளற்க' எனக் கூட்டிப் பொருள் காண்பர் மணக்., காளி. முதலியோர்.

'உள்ளம் சிறுகுவ உள்ளற்க' எனக் கட்டி "ஊக்கம் சுருங் குததற்குக் காரணமான வினைகளைச் செய்ய நினையாதொழிக' என்பர் பரிமேலழகர் முதலியோர் 'உளளற்க என்ற எதிர்மறை வியங்கோளே 'உள்ளத்தால்' என்ற கருத்தைத் தருதலின் 'உள்ளஞ்-சிறுகுவ' எனக் கூட்டி உரைத்த பரிமேலழகர் உரையே சிறந்தது. பரிதியின் 'தன் செல்வம் குறையின் காரியத்தை நினைக்கக் கடவனல்லவன்' என்ற உரை அவர் கொண்ட பாடம் உள்ளற்க செல்வம் சிறுகுவ' எனறிருக்குமோ என்று எண்ணதலை விளைவிக்கிறது. 'உள்ளம்' என்ற சொற்கு 'ஊக்கம்' 'மனம்' என்ற பொருளன்றிச் 'செல்வம்' என்ற பொருளின்மையான் என்க.

6. கொள்ளின் — கொண்டால் 7. குறள்., 814.

இராம 'உள்ளத்தைக் குறுக்கிவிடக்கூடிய அற்பச் செயல்களை' என்பர். இவ்வுரைக்கு 'உள்ளம் சிறுக்குவ' என்றிருப்பின் நன்று. 'சிறுகுவ' என்றிருப்பதால் 'உள்ளம் சுருங்குதற்குக் காரணமாய' என்ற உரை அமைவுடைத்து.

'சிறுகுவ' என்ற அஃறிணைப் பன்மை தன்வினைப்பெயர் எதிர்காலங் காட்டும் இடைநிலை பெற்றது ஆதலால் 'சுருங்குதற்கு ஏதுவான வினை' என ஏதுப் பொருண்மை விரித்தலே இயைபுடையது

'ஆற்றறுப்பார்' வலியாகாதார் மணக்., 'விதனஞ் செய்வார்' பரிதி., கீழறுப்பார்' காளி., 'கைவிடுவார்' பரிமேல் விட்டுப் போகிறவர்' கவிராசர். பின்னுரைகாரர்களிற் பலா கைவிடுவார் என்றே பரிமேலழகரின் வழிச்செல்கின்றனர். காரிரத்தினகவிராயர் 'அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா' (814) என்பதை மேற்கோள் காட்டிப் பரிமேலழகருக்கு விளக்கந்தருவர். அங்கு 'ஆற்றறுத்தல்-களத்திடை வீழ்த்துப் போதல்' என்பர் பரிமேலழகர். இராம ஆற்று அறுப்பார்-அறுதல் சொல்லக்கூட இல்லாதவர்கள்' என்பர். தேவநேயர் ஆற்றறுத்தல்-வலியறுத்தல் ஆற்று-ஆற்றல் என்ற தொழிற்பெயரின் விகுதி கெட்டு 'ஆற்று' என நின்றது என்பர். வரத. 'மீளாத்துயரத்தில் தள்ளுவார்' என்பர்.

இங்ஙனம் ஆற்றறுத்தல் பலநோக்குடைய ஒரு தொடராகிறது பரிமேலழகர் ஆற்றறுத்தலை ஒருசொல்லாகக் கொண்டு கைவிடுதல் என்றவர் ஆற்று. முதனிலைத் தொழிற்பெயர்' என்றனர். அங்ஙனமாயின் ஆற்றுதல் தாங்குதல் என்னும் பொருட்டாய்க் 'கைவிடுதல்' கருத்துப் பொருளாகிறது. மணக். 'ஆற்றல்-அறுப்பார் வலிமையில்லாதவர்' என்றனர் இதனைக் கொண்டே தேவநேயர் முதனிலைத் தொழிலாகு பெயர் என இலக்கணங்கூறி இப்பொருளையே கொண்டனர். இராம. ஆறு-ஆறுதல்' ஆற்றறுப்பார்-ஆறுதலும் சொல்லாதவர் 'என்றனர் நுண்பொருண்மாமலையுடையார் காட்டிய மேற்கோளோ ஆறு-இடம். அதாவது போர்க்களம். அதில் விட்டொழிவார்' என்னுங் கருத்தினது. இவ்வளவும் அன்றி ஆறு - வழி ஆற்றுப்பார் வழியில் பிரிந்து போகின்றவர்கள், வழித்துணையாவார் போல் வந்து நடுவழியிற் பிரிபவர் என்ற உலகியல் 'நட்டாற்றில் விட்ட துணை' என்ற

பலமொழியை ஒட்டி 'ஆறு - ஆழமும் ஈர்ப்பும் உடைய ஆறு' எனலுமாம். எங்ஙனமாயினும் கருத்தில் மாற்றமின்று. ஏற-புடையதேற்க இலக்கணத் துணை கொண்டு கருத்தினை யமைத்துப் போகாமல் உலகியலனுபவப் பழமொழிக் கருத்தமைந்தது எனல் உலகியலையும் வள்ளுவருள்ளத்தையும் ஒட்டியதாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஆற்றறுப்பார்:

அமரகத் தாற்ற றுக்கும் —குறள்., 814

............ ............ தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி ............ ......... —கம்ப., 4165

80.9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். (779)

உரைப்பகுதி :

அ) மணக்.: கெடும்பொழுது கைவிடுவாரது நட்பைத் தன்னைப் பிறர் கொல்லுங்காலத்து நினைப்பினும் நினைத்த மனத்தினை அந்நட்புச் சுடும்; அவர் சொல்லுமதனினும் எ-று.

இது கேட்டிற்கு உதவாதார் நட்பைத் தவிர்க்க என்றது.

ஆ) பரிதி.: தனக்கு ஒரு விதனம் வந்த இடத்திலே கைவிடுவான் நட்பு தன் மரணாந்த மட்டும்[1] நெஞ்சினைச் சுடும் எ-று.

இ) பரிப்.: கெடும் பொழுது கைவிடுவாரது நட்பைத் தன்னைப் பிறர் கொள்ளும் காலத்து நினைப்பினும் நினைத்த மனத்தினை அந்நட்புச் சுடும் அவர் சொல்லுதலினும் எ-று.

இதுகேட்டிற்கு உதவதார் நட்பைத் தவிர்க என்றது.

ஈ) காளி.: வாழும் காலத்து உடன்கூடி நட்புச்செய்து கெடும் காலத்துக் கைவிடுவாரது நட்புக் கூற்றுவன் வந்து அடுங்காலத்து[2] நினைப்பினும் உள்ளம் சுடும் எ-று.

1. மரணாந்த மட்டும் - இறப்பு வரை 2. அடுங் காலத்து - கொல்லுங் காலத்து

உ) பரிமேல் .: ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீ கு-வார் முன் அவனோடு செய்த நட்பு; தன்னைக் கூற்று அடுங்-காலத்து ஒருவன் நினைப்பினும், அந்நினைத்த உள்ளத்தைச் சுடும்.

நினைத்த துணையானே இயைபில்லாத பிறனுக்கு கூற்றினும் கொடிதாம் என்க. கைவிடெண்ணிச்[3] செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்தானே ஆக்கிய கேடு தன்னை அடுங்-காலை உள்ளினும் அக்கேட்டினும் சுடும் என்று உரைப்பாரும் உளர்[4]. இவை மூன்று பட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதரார் இவர் என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : ஒருவனோடொருவன் சிநேகமாய் இருக்கை-யிலே ஒருவனுக்குக் கேடு வந்தபோது அவனைவிட்டுப்போனால் அவனுடைய சிநேகத்தைப் பிராணன் போகிற போது நினைத்-தாலும் நெஞ்சு சுடும் எ-று.

எ) பழைய : 'கைவிடுவான்' பாடம்.

ஒருவன் கெடுங்காலத்து அவனைக் கைவிட்டு நீங்கினான், முன் அவனோடு செய்த நட்பை, தன்னைக் கூற்றுவன் வந்தடுங்காலத்து நினைப்பினும் உள்ளத்தைச் சுடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நண்பனால் கெடுங்காலைக் கைவிடப்பட்டவன் ஒருவன். அவனை வேறொருவன் கொல்ல வருகிறான். அப்போது கைவிட்ட-வன் நட்பை நினைத்துக் கொள்ளுகிறான். அவனுக்குத்தனக்குப் பிறனால் நேர இருக்கும் கொலைத் துன்பத்தைக் காட்டிலும் கெடுங்காலைக் கைவிட்டவன் நட்பு நெஞ்சினைச்சுடுகிறது' என்பது மணக்குடவர் உரை தரும் கருத்து, இதன் உட்கிடை சீதை சிறையில் இருக்கும்போது ''அருந்தும் மெல்லடகு யாரிட அருந்தும் விருந்துகண்ட போது என்னுறுமோ என அயிர்க்கும்'' என்றது போலப் பிறன் கொல்ல வரும்போது தன் பழைய நண்பன் என்னைக் கைவிடாமலிருந்து இருந்தால்? என்று எண்ணுகிறான். அவன் கைவிட்ட கொடுமை இப்போது கொள்ளிக் கட்டையாய் நெஞ்சைச் சுடுகிறது என்றார்.

3. கைவீடு - கைவிட்டுவிடுதலை.
4. மணக்குடவர் இவ்வாறு உரைப்பர்.

கைவிடப்பட்டவன் நிலையை வேறொருவன் நினைத்துப் பார்க்கிறான் அவனோ மரணப்படுக்கையில் கிடப்பவன் 'ஆவியகத்ததோ புறத்ததோ' என்று ஊசலாடுதல் நேரத்திலிருப்பவன். அவனுக்குத் தன்னிலைமையைக் காட்டிலும் காலத்தில கைவிடப்பட்டவன் நிலை பெரிதாகி நினைக்கிற மனத்தையே சுடுகிறது என்பது பரிமேலழகர் உரைக்கருத்து. இதில் கை விடப்பட்டவனுக்கும் இரங்குபவனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. அந்நிலையிலே மிக வருந்துகிறான் என்பர் பரிமேலழகர்.

இவர் கூறும் வேறுரை மணக்குடவரதாதலை ஊன்றி நோக்கியறிக. 'பழகிய இருவரில் ஒருவர்க்குக் கேடுவந்த காலத்து மற்றவர் கைவிட்ட கொடுமையை அயலான் ஒருவன் தற்கொலை செய்து கொண்டு துன்புறுங்காலத்து அதனை நினைப்பினும் தன் உயிர் நீங்குந்துன்பத்திலும் கைவிடப்பட்ட அவன் நிலை கொடிதாக வருத்தும்' என்பதும் வேறுரையின் கருத்தாக விளக்ந்தருவர். பரிமேலழகர் 'தன்னையடுங்காலை' என எழுவாய் இயைத்து எழுதாத சூழல் இங்ஙனம் தோன்றியவாறு விளக்கம் தரச்செய்திருக்கிறது. பரிமேலழகர் மணக்குடவர் உரையை ஒட்டியே உரை காண்பவர். இககுறளில் அவர் காட்டிய பிறர் கொல்லுங் காலத்து என்பதனைச் சுருக்கித் 'தன்னையடுங்கலை' என்றார். விளக்கம் செய்தார் 'தற்கொலை செய்து கொண்டகாலை' என்று மயங்கினர்,

பரிதி. 'கெடுங்காலைக் கைவிட்டவன் நட்பு (வினைவழி) தான் இறக்குமட்டும் சுடும்' என்றார். இவர் கருத்து 'அத்தகைய கொடியோன் நட்பு கைவிடப்பட்டவனால் மரணத்தின் பின்தான் மறக்கும். அதுவரை நினைக்கிற போதெல்லாம் நெஞ்சைச்சுடும்' என்பர். காளிங்கர் உரை பரிமேலழகரை முழுதும் ஒத்தது. கவிராசர் 'கொல்வானைக் குறிக்காமல் பொதுவாகப் பிராணன் போகிறவரையில் நினைத்தாலும் நெஞ்சு சுடும்' என்றனர். இராம. கெடுங்காலை கைவிடுவார் கேண்மை அடும்; காலை உள்ளினும உள்ளம் சுடும் எனக் கட்டிக் 'காலை-விடியற்காலம்' என்பர்; பரிமேலழகர் உரையை மறுப்பர். கெடுங்காலை, அடுங்காலை என்பன ஒருநிகரனவாய சொல்லாட்சி. இங்ஙனம் கூறுவதன் பயனாக அவர் காட்டுவது காலன் வந்து உயிர் கொள்ளுந் தருணத்தில் இவற்றை எண்ண இயலாது என்பதுதான். ஏனோர் கருதுவது அக்காலத்தும் கைவிட்டவன் நட்புச்சுடும் என்று அதன் மிகுதி காட்டும் அணிபற்றிய கருத்து.

மு.கோ. 'கெடுங்காலை-தோற்குங்காலம். அடுங்காலை-வெல்லுங்காலம்' வெற்றியான்மகிழும் போதும் கெடுங்காலை கைவிட்ட நட்பு மறவாது என்பர். வெற்றியால் மகிழும்போது தான், "இவன் கைவிட்டால் நான் அழிந்தா போனேன். வென்றேன் பார்" என்று வீறு கொள்வானாதலின் அது சுடுவதாகாமையை எண்ணி விடுக.

தேவநேயர், பரிமேலழகர் "அடுங்காலை யுள்ளுதலைப்" பிறன் செயலாகக் கொண்டமைக்கு ஆசிரியர் 'கைவிட்டார்' எண்ணாது கைவிடுவார் எனப் பொதுப்படக் கூறினதே காரணம்' என்பர். இங்ஙனம் கொண்டது ஏற்புடையதே யாயினும் 'கைவிடுவார்' என்ற பலர்பாற்சொல் இங்ஙனம் செய்வதையே நட்பின் பழக்கமாக வைத்திருப்பவர் பலரைக் குறித்தலின் அடுங்காலையுள்ளுதலைப் பிறன் செயலாக்காது கைவிடப்பட்டவன் செயலாக்குதலும் ஏற்புடையது என்பர். உரைவேற்றுமையாசிரியர், பரிமேலழகர் உரையில் 'கைவிட்ட கேண்மையின் கொடுமை நன்கறியப்படுமாயினும், 'ஒருவன் கெடுங்காலத்து' எனவும் ஒருவன் உள்ளினும் என வினைமுதல் கொள்ள வேண்டியுள்ளது. அதற்குக் குறட்பாவில் இடமில்லை ஆதலால் மணக்குடவர் உரையே சிறந்தது. அங்ஙனமே கூற்றடுங்காலை என்பது பிறர் அடுங்காலை என்பதினும் சிறந்தது என்பர்.

சொல்லமைதிக்கேற்ப கைவிடுவார் கேண்மை விட்ட ஞான்று சுடுவதைக் காட்டிலும் சாஞான்று எண்ணினும் மிகச் சுடும் என்ற உரை சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**உள்ளினும் உள்ளம் சுடும் :**

உள்ளினும் உள்ளம் வேமே - நற்றிணை., 184.6
உள்ளின் உள்ளம் வேமே - குறுந்., 102 : 1
உள்ளின் உள்நோய் மல்கும் - குறுந்., 150 : 4
மறப்பின் என்னாவர் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும் - குறள்., 1207
கருதின்வேம் உள்ளமும் ...... ...... - கம்ப., 346
நினையு நெஞ்சமும் சுடுவது ...... ...... - கம்ப., 2125

முற்றும்:

கெட்டகாலை விட்டனர் என்னாது
நட்டோர் என்பது நாட்டினை - பெருங். 2:9:117-8

இடர்ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர் - நாலடி., 113

இன்னா கெடுமிடம் கைவிடுவார் நட்பு - இன்னா., 37

மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தாற்
ஒற்கம் கடைப் பிடியாதவர் - ஐந்திணையம்பது., 48

80.10. மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (800)

உரைப்பகுதி:

அ) மணக்.: குற்றமற்றாரது நட்பைக் கொள்க: ஒரு பொருளைக் கொடுத்தாயினும், தனக்கு நிகரில்லாதார் நட்பினின்று நீங்குக எ—று.

ஆ) பரிதி.: குற்றமற்றார் நட்பு வேண்டினது கொடுத்தும் கூட்டிக் கொள்க; பொல்லாதரர் நட்பு சில கொடுத்தும் கைவிடுக எ—று.

இ) பரிப்.: குற்றம் அற்றார் நட்பைக் கொள்க: ஒரு பொருளைக் கொடுததாயிலும தனக்கு நிகரில்லாதார் நட்பினின்றும் நீங்குக எ—று.

இது குறறம் அற்றார் நட்பைக் கொள்ள வேண்டும் என்பதூஉம் நிகர் அல்லாதார் நட்புத் தவிர வேணடும் என்பதூஉம் கூறிற்று.

ஈ) காளி.: மனம் மாசு அற்றார் கேண்மையை மருவுக; தமக்குச் சிறந்தது யாதானும் ஒன்று கொடுத்தும் தமது நீர்மைக்கு ஒவ்வாதாரது நட்பினைக் கொள்ளாது நீங்குக எ—று.

உ) பரிமேல்.: உலகோடு ஒத்துக்[1] குற்றமற்றார் நட்பினையே பயில்க; உலகோடு ஒத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர் வேண்டியது ஒன்றனைக் கொடுத்தாயினும் விடுக.

1. உலகோடு ஒத்து - உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றேயாதலின், அவர்கள் ஒழுகுகின்ற ஒழுக்கத்திற்கு மாறுபடாமல் என்றது.

உலகோடு ஒத்தார் நட்பு இருமை இன்பமும் பயத்தலின் 'மருவுக' என்றும், அதனோடு[2] மாறாயினார் நட்புத் துன்பமே பயத்தலின் 'அதனொழிவை விலைகொடுத்தும் கொள்க[3]' என்றும் கூறினார். இதனால் அவ்விருமையும்[4] தொகுத்துக் கூறப்பட்டன.

ஊ) **கவிராசர்.:** குற்றமற்றவர்களுடைய சிநேகத்தையே பண்ணவேணும் : அறிவில்லாதவர்களுடனே சிநேகம் பண்ணினாலும் அவர் வேண்டியதொன்றைக் கொடுத்தாகிலும், விட்டு விட வேண்டும் எ-று.

எ) **பழைய.:** உலகத்தோ டொத்துக் குற்றமற்றார் நட்பினையே மருவுக ; உலகத்தோடொத்த இயல்பில்லாதார் நட்பினை யறியாது கொண்டாராயின், யாதொன்றானுங் கொடுத்து, நட்பினை விடுக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

முன்னர் கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பைக் கூறிய ஆசிரியர் ஈண்டு 'ஒன்றீத்தும் ஒப்பிலார் நட்பு ஒருவுக' என்கிறார்; ஒப்பிலார் எனவே இழிந்தோராதல் பெறப்படுதலின் அவர்க்கு ஒன்று ஈத்தும் ஒருவுக என்றார். கடிக்கிற நாய்க்கு இறைச்சித்துண்டு போல ஒன்று என்பது இகழ்ச்சிப் பொருளைக் குறித்தது. ஈத்தல் என்பது இழிந்தோர்க்கு உயர்ந்தோர் உதவும் ஈகை. அங்ஙனமே கொடுத்தல் என்பதும் கொள்வோன் உயர்வையும் கொடுப்போன் அவனிற்றாழ்ந்தவனாதலையும் குறிக்கும். இதனை 'கொடுவென்கிளவியுயர்ந்தோன் கூற்றே' என்பதன் நச்சர்உரையாலறியலாம். ஆதலால் குடிப்பிறந்தமையானும், பழிக்கு நாணுதலானும் நட்புக் கொள்ளப்படுபவன் உயர்ந்தவனாகிறான். நட்புக்கொள்பவன் தாழ்ந்தவனாகிறான். கொடுத்து நட்புக் கொள்க என்கிறார் ஆசிரியர். "ஈ தா கொடு" என்பன கொடைப்பொருளில் பொதுமையின் வருமாயினும் இசப்புரையாங்கால் முறையே இழிந்தோனுக்கும், ஒப்போனுக்கும் உயர்ந்தோனுக்கும் உரிய சொற்

2. அதனோடு - உலகோடு. அதாவது உயர்ந்தோர் ஒழுக்கத்தோடு.
3. 'ஒன்றீத்து மொருவுக' என்றும் பாடமுண்டு.
4. அவ்விருமையும் – நட்புக்கொள்ளப்படுவார் மாசற்றார் என்பது கொள்ளப்படாதார் ஒப்பிலார் என்பதும் ஆகிய அவ்விரண்டும்.

களாகின்றன. இவையே பகுதியாய் விகுதி பெற்று வினைச்சொல்லாங்காலும் உயர்வு தாழ்வுப் பொருளையுணர்த்தலும் ஆம் என்பதைத் 'தொழிற்பொருண்மையாதலும்' என்ற தெய்வச்சிலையார் உரையான நியலாம் (தொல்-சொல்-437 தெய்வ. உரை).

ஒப்பிலார் என்பதற்கு ஏனையதொல்லாசிரியர்கள் 'நிகரில்லார்' 'தன்தன்மைக்கு ஒவ்வாதார்' என்று உரை கண்டிருக்கவும் பரிமேலழகர் 'உலகத்தோடு ஒத்தல் இல்லார்' என்றது உணர்ச்சியான் ஒத்தலை ஆசிரியர் முன்னரே கூறினமையாலும், ஒவ்வாவிடத்து மிகுதிக்கண் மேற் சென்றிடித்தலும், அழிவினவை நீக்கலும் ஆறு உய்த்தலும் வேண்டுமாதலானும், தன் தன்மைக்கு ஒவ்வாதார் என உரை காணாது உலகத்தோடு ஒத்து வாராதார் என்றது மிகமிகச் சிந்தித்துக் கண்டஉரையாகும். விளக்கத்தில் ஆசிரியர் பரிமேலழகர் அதற்குரிய காரணங்கள் கூறியிருத்தலையும் நோக்குக. முன்னர்ச் செய்ந்நன்றியறிதலில் "மறவற்க மாசற்றார் கேண்மை" (106) என்றவர், ஈண்டு மருவுக மாசற்றார் கேண்மை என்றனர். இவை எதிர்மறை முகத்தானும் உடன்பாட்டு முகத்தானும் வலியுறுத்தக் கூறியதாம்.

பரிதி 'ஒன்றீத்தும்' என்பதனை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு 'ஒன்றீத்தும் மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்றீத்தும் ஒப்பிலார் நட்பு ஒருவுக' என்றனர். மணக்குடவர் முதலானோர் 79ம் குறளில் கூறியிருத்தலான் கூறியது கூறலாகாமைப் பொருட்டு ஒருவுதற்கு மட்டும் ஒன்றீத்தும் ஒருவுக என்றனர். இந்நுண்மை பாராட்டுக்குரியது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

ஒருவுக ஒப்பிலார் நட்பு :

தீயவர்ச் சேர்க்கி லாது ...... ...... — கம்ப., 3798

முற்றும் :

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு — குறள்., 106

## 80. நட்பாராய்தல்

| | நாடாது | ஆய்ந்தாய்ந்து | குணனும் | குடிப்பிறந்து | அழச்சொல்லி | கேட்டினும் | ஊதியம் | உள்ளற்க | கொளுங்காலைக் | மருவுக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 10 | 2 | 3 | 4 | 9 | 6 | 7 | 8 | 5 |
| பரிதி. | 10 | 2 | 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 7 | 9 |
| பரிப். | 1 | 10 | 2 | 3 | 4 | 9 | 6 | 7 | 8 | 5 |
| காளி. | 2 | 3 | 9 | 8 | 1 | 10 | 4 | 5 | 6 | 7 |
| பரிமேல். | 1 | 3 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

80-வது அதிகாரம் 'நட்பாராய்தல்' முடிந்தது.

# 81. பழமை

அ) மணக். : பழைமையாவது நட்டோரது உரிமை கூறுதல். இஃது அவருரிமையால் செய்தனவற்றிற்குப் பொறுக்க வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி .: பழைமையாவது பழைமையை அறிந்து கொள்க என்று

இ) பரிப் .: 'பழமை' பாடம்

பழமையாவது நட்டோரது உரிமை கூறுதல். இஃது அவர் உரிமையால் செய்வனவற்றிற்குப் பொறுக்க வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: அஃதாவது நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர் காரியத்திற்கு ஆயிற்று[1] ஆராய்ந்து நட்கப்பட்டார் எனினும் பொறுக்கப்படும் குற்றமுடை-யராகலானும் ஊழ்வகையானும்[2] நட்டார்மாட்டுப் பிழையுளதாம் என்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர் .: அஃதாவது சிநேகிதருடைய பழமையினாலே அவர்கள் செய்த பிழைகளைப் பொறுத்தலாம்.

எ) பழைய .: அஃதாவது, பழைமையாய்ப் பாரம்பரியமாக வரும் நட்பு. நடபிற் பிழை பொறுத்தலென்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் .: 'பழைமையான நட்பின் சிறப்புரிமை. அது பழைமை பற்றி யவர் செய்த தவறுகளைப் பொறுத்துக்கொள்ளுதல், இடம் நோக்கிக் குறிப்பாற்றல் கொண்டு தலைப்புக்குருக்கியது' என்று விளக்கி அதிகார இயையும் கூறுவர்.

---

1 பழைமை என்பது பழைமையை உணர்த்தாது அதன் காரியமாகிய பழையோர் பிழைத்தன பொறுத்தலைக் காட்டலின் காரணவாகுபெயராம்.

2 ஊழ்வகையானும்—விதிவசத்தானும்.

குழந்தை 'நண்பரது பழைமை குறித்து அவர் பிழைபொறுத்தல்'

சாமி. சிதம். 'பழைய நண்பர்களின் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்'

இராம. 'பழைய நண்பர்கள் அந்தச் சிறப்பை இழந்து விடாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், அவர்கள் உரிமை பற்றித் தவறு செய்தாலும் தளளிவிடக் கூடாது என்பதையும் விளக்குவது' என்பர்.

வரத. 'நட்பின் பழக்கத்தால் உரிமை பாராட்டல் பழைமை. தொடர்பு, பிறப்பு, உரிமை, குணம் இவற்றாலும் பழைமை வேண்டும். பழைமை என்பதனடியாகப் பிறந்த சொல்தான் பழக்கம் என்பது' என்பர்.

சி.இ. 'நண்பரது பழைமை கருதி அவர் செய்த தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுதல்' இவற்றுள், பரிதி. தரும் விளக்கம் பொதுவானது. போதிய தெளிவுதராதது. மணக். 'நட்டோரது உரிமை' என்பர் பழைமை உரிமையாகாது. பழைமையால் விளைவது உரிமை. காரணகாரிய வேறுபாடின்மையின்மையின் இங்ஙனம் கூறினர் என்துமாகும்.

பரிமேலழகர் 'நட்டாரது பழையராந் தன்மை' என ஆறனுருபு விரித்ததன் நோக்கம் புலப்படவில்லை. நட்டார் பழையராந்தன்மை பற்றி என்பதே அக்கருத்தை வழங்கக்கூடுமே. பழைமை-பழையராந் தன்மை. நட்டாரது பழையராந்தன்மை எனின் நட்டாரது தன்மை பழையராந்தன்மை எனலே இயைவதாகும். அதுவென் உருபு உயர் திணையைக்கொண்டு முடியாதாகலின். ஆதலால் மணக். கவிராசர் தேவநேயர் உரைகள் தெளிவானவை. வள்ளுவர் கூறும் (801) இலக்கணத்தோடியைந்தவை. வரதராசபிள்ளை கூறுவது போல 'பழைமையின் விளைவு ஆகுமா பழக்கம்' என்பது ஆய்வுக்குரியது புதுமை என்பதின் எதிர்ச்சொல்லாகிய பழமை என்பது பண்புப்பெயர் அதுதொன்மை அதாவது தொன்று தொட்டுவருவது என்பதனைக் காட்டும். பழக்கம் 'பழகு' என்பதனடியாகப் பிறந்த பண்புப்பெயர் பழகு என்பது வினையடி. இதனடியாகப் பழகினன் என்பன போன்ற ஐம்பால் மூவிடங்களைப் பொருந்தும் வினைவேறுபாடுகளை உண்டாக்கலாம் பழைமையடியாகப் பழையன் முதலான குறிப்புவினை முற்றுகளையும். பண்புப் பெயரை மட்டுந்தான் தோற்றுவிக்கமுடியும் என இலக்கியப்பரப்பும் இலக்கணங்களும் தெரிவிக்கின்றன.

'ஒருவர்பொறை இருவர் நட்பு ஆதல்' போலப் பழைமை பாராட்டுதல் இருவர்க்கும் இன்றியமையாதது என்பதைத் தெரிவிப்பது இராமலிங்கனார் தரும் விளக்கம்,

புணர்ச்சி என்பது இருவரின் முடியும் ஒரு தொழில் ஆதல் போல நட்பு என்பதும் இருவரின் முடியும் ஒரு தொழில் இருவர் மாட்டும் உரிமைபற்றிய தவறுகள் நேரலாம். ஒருவரை ஒருவர் பழைமை பாராட்டிப் பொறுக்க வேண்டும் என்பதே இவ்வதிகார நோக்கு என்ற கருத்தே அமைப்புடையது ஆதல் தெளியலாம்.

81. 1. பழமை எனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. (801)

உரைப்பகுதி :

அ) மனக் : பழைமை என்று சொல்லப்படுவது யாது எனின், அது யாதொன்றிலும் உரிமையை அறுத்தலில்லாத[1] நட்பு எ—று.

இது பழையவன் செய்த உரிமையைச் சிறிதும் சிதையாது உடன்படுதல் நட்பாவது என்றது,

ஆ) பரிதி : பழைமை என்று சொல்லப்படுகின்றது யாது எனில் பழமையானவன் செய்த உரிமையைச் சிறிதும் சிதையாது உடன்பட்ட நட்பு எ—று.

இ) பரிப். : பழமை என்று சொல்லப்படுகின்றது யாது எனில் யாது ஒன்றினையும் உரிமை அறுத்தல் இல்லாத நட்பு எ-று.

இது பழைமையாவது இது என்று கூறிற்று.

ஈ) காளி. : ஒருவரோடு ஒருவர்க்கு உள்ள காலப்பழைமை என்று எடுத்து உரைக்கப்படுவது யாதோ எனின் தம்பொருட்கண் அவர் செய்யும் யாதானும் உரிமையை வேறிடாது விரும்பும் நட்பு எ-று.

உ) பரிமேல். : பழமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், அது[2] பழைமையோர் உரிமையால் செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது[3] அவற்றிற்கு உடம்படும்[4] நட்பு,

1. அறுத்தலில்லாத — நீக்காத 2. அது - பழைமை
3. சிதையாது — விலக்காமல்
4. அவற்றிற்கு உடம்படும் — பழைமையோர் உரிமையால் செய்யுங் காரியங்களை ஒப்புக்கொள்ளும்

கிழமை ஆகுபெயர்[5]. கெழுதகைமை எனவருவனவும் அது[6] உரிமையால் செய்வனவாவன கருமமாயின செய்யுங்கால் கேளாது செய்தல், கெடும்வகைசெய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணி[7] வச்சங்கள்[8] இன்மை என்று இவை முதலாயின,[9] சிதைத்தல் - விலக்கல். இதனால் பழைமையாவது காலஞ்சென்றதன்று இப்பெற்றித்தாய நட்பு என்பது கூறப்பட்டது.

காரி : கிழமை-உரிமையாலாயது: ஆகுபெயர். 'கெழுதகை' என வருவனவும் அது. கீழ்ந்திடுதல் — சிதைத்தல். ஆண்டிலெடுத்த என்னும் கோவையாருள் 'பஃறாமரை கீழும் பழனம்[1]' என்பதும் அது. 'மீள்வது செல்வதன்று' என்னும் கோவையாருள், 'கீள்வது செய்த கிழவோன்'[11] என்றதனாற் 'கீண்டல்' வேறு.

ஊ) கவிராசர். : (இ—ள்.) பழமையென்று சொல்லப்படுவது யாது என்றால், ஒருவனுக்குச் செய்ய வேண்டிய காரியததைச் சற்றும் குறைபடாமல் செய்ய உடன்படும் நட்பு எ-று.

எ) பழைய. : பழமையென்று சொல்லப்படுவது யாது என்று வினவின், அது பழமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது அவற்றிற்கு உடன்படும் நட்பு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நட்புக் கொண்டவன், தன்னால் நட்புக் கொள்ளப்பட்டவன் பழைமை பற்றி ஏதாவது செய்யினும், அதனைத்தான் செய்தது போலவே ஏற்றுக் கொள்கின்ற நட்பே பழைமை என்பர் முற்கால பிற்கால உரையாசிரியக்கள் அனைவரும். இராமலிங்கர் மட்டும் 'கிழமை — சலுகை யல்லது செல்வாக்கு' எனப் பொருள் கண்டு, தமக்கு அளிக்கப்பெற்றுள்ள எந்தச் சலுகையையும் தவறான முறையில் பயன்படுத்தி விடாமலிருக்க வேண்டும் என விளக்கம்

5 & 6. கிழமை என்னுங் காரணப்பெயர் அவரால் செய்யப்படும் காரியங்களை உணர்த்து தலால் காரணவாகுபெயர். பின்வரும் கெழுதகைமைக்கும் இவ்வாறே கொள்க.

7. பணி — அடக்கம்.

8. அச்சம் — பயம்.

9. முதலாயின என்றமையான் அரசனுக்கு ஒப்ப ஆடை அணி நடை உடை இவற்றை மேற்கொள்ளுதலும் அரசனோடு முறை பாராட்டி பழித்தலும் இழித்தலும் முதலாயவற்றைக் கொள்க.

10. திருக்கோவை., 249

11. திருக்கோவை., 247.

தருவர் நட்பு என்பது ஏதோ ஒருவகையானாவது ஒத்தாரிருவர் மாட்டு நிகழ்வது ஆகலின் இதில் உனக்கு இவ்வளவு என்று கொடுத்தலும் அதன்படி நடத்தலும் இல்லையாம். இருப்பின் அது நட்பாகாதாம. முதலாளியும பணியாளும் போல்வதாம். ஆதலால் பழைமையாளன் செய்பணிகளைத்தன் நட்பினன் மனப்போக்கை ஒட்டித் தானே வகுத்துக் கொள்வன். ஓரிரு வகையில் பரிமேலழகர் கூறுவதுபோலத் தவறு நேரின் அவற்றை உரிமைபற்றி முறிததுக் கொள்ளக் கூடாது என்பதையே இக்குறள் கருதுகிறது. ஆதலால் இராமலிங்கர் உரை சிந்திக்க வேண்டியதாகிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும் கொள்ளார்

நீதிநெறி., 47

81.2. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற் (கு)
உப்பாதல் சான்றோர் கடன். (802)

உரைப்பகுதி :

அ) மணக்.: நட்பிற்கு அங்கமாவது உரிமை: அவ்வுரிமையால் செய்யுமதற்கு உடன்படுதல் சான்றோர்க்கு இயல்பு எ-று.

இதுபேய்ச்சுரைக்காய்க்குப்[1] பல காயம்[2] அமைத்தாலும் இனிமை உண்டாகாததுபோல, உடன்படாராயின் இனிமை உண்டாகாதா-தலான் உடன்படல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: நட்புக்கு அலங்காரம் கூட்டுறவு உண்டாயிருப்பது. இது சானறோர் ஒழுக்கம் எ-று

இ) பரிப்.: நட்பிற்கு அங்கம் ஆவது உரிமை : அவ்வுரிமையால் செய்யும் அதற்கு உடம்படுதல் சான்றோர்கு இயலபு எ-று.

பல காயமும் அமைந்தாலும் உப்பு இன்றாயின் இனிமை உண்டாகாதது போல, உடன்படாராயின் இனிமை இன்றாம் ஆத-லான் உடம்பட வேண்டும் என்றது.

1. பேய்ச்சுரைக்காய் - கசக்கிற சுரைக்காய்
2. பல காயம் - பலவகையான இடுபொருள்கள். அவை மிளகு, சீரகல், இலவங்கப் பட்டை முதலாயின.

ஈ) காளி.: ஒருவரோடு ஒருவர் நட்டால் அந்நட்பிற்குச் சிறந்தது யாது எனின், என்றும் ஒருபடிப் படக்கெழுமிய கெழுதகைமையாகிய பழைமைக்கு என்றும் இனியர் ஆதல் சான்றோர் கடன் எ-று.

உப்பு என்பது இனிமை.

உ) பரிமேல்.: நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையால் செய்வன, அதனால் அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை.

வேறன்மைதோன்ற 'உறுப்பு' என்றார். உறுப்பு என்பது ஈண்டு இலக்கணையடியாக[3] வந்த குறிப்புச்சொல்[4]. அவயவமாதல் அறிந்தே இனியவராவர் என்பது தோன்றச் சான்றோர் மேல் வைத்தார்.

காரி.: உறுப்பு என்பது இலக்கணையடியாக வந்த குறிப்புச் சொல்: "அளிச்சப்பூக் கால்"[5] என்பதும் அது. வடநூலார் இலக்கணா மூலத் தொனி என்பர். வேறின்மை தோனற உறுப்பு என்றார்.

ஊ) கவிராசர்.: சிநேகிதத்துக்கு அவயவமாவது சிநேகிதருக்கு உரிமையாய்ச் செய்யப்பட்ட காரியம். அதனால், அவ்வுரிமைக்கு உரியராதல் சான்றோர்கசு முறைமை.

எ) பழைய.: நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையாற் செய்வனவாதல்; அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை.

---

3 இலக்கணையாவது ஒருபொருளின் இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பது. இங்கு முதலுக்குள்ள உறுப்பை குணத்திற்குத் தந்துரைத்தவாறு அறிக. குணம் பொருளல்ல வாயினும் பொருளாகக் கூறப்பட்டது உபசாரம்.

4. உறுப்பு என்பது நேரே உறுப்பினைக் காட்டாமல் இலக்கணைப் பொருள் நோக்கத்தால் நட்பினன் செய்த செயலைக் காட்டுகிறது. உறுப்பு குணம் தொழில் முதலியன பொருளினிடத்து இருக்குமேயன்றிக் குணத்து இரா. நட்பு என்னும் குணத்திற்கு உறுப்பு கூறியது இலக்கணை. இது குறிப்புச் சொல் உறுப்பு இல்லாத குணம் உறுப்புடையதாகக் கூறப்பட்டமை யறிக.

5. குறள்., 1115

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவில் 'கெழுதகைமை' 'உப்பாதல்' 'கடன்' என்ற மூன்று சொற்களின் பொருள் பலருரையினும் மாறுபடுகின்றது.

'கெழுதகைமை' — 'உரிமை', 'கூட்டுறவு', 'ஒருபடிப்படக் கெழுமிய கெழுதகைமையாகிய பழைமை', 'சிநேகிதருக்கு உரிமை யாகச் செய்யப்பட்ட காரியம்' என்பர். இவற்றுள் 'உரிமை' என்ற பொருளே ஏற்புடையது. முன்குறளில் கிழமைக்கு இலக்கணங்கூறும்போது பரிமேலழகர் கெழுதகைமை என்பதும் ஆகுபெயராக்கி 'கெழுதகைமையான் ஆய் உரிமையைக் காட்டியது,' என்றார். அதனையும் நோக்குக.

'உப்பாதல்' — 'உடன்படுதல்' 'இனியராதல்' 'உரியராதல்' என்பர். 'இவற்றுள்' உடன்படுதல் என்பதே இயைபுடையது. 'இனியராதல்' என்ற உரை 'ஊடலிற்றோன்றிய உப்பு' (1328) என்பதை நினைவில் கொண்டு எழுதியஉரை. 'உப்பமைந்தற்றால் புலவி' என்றாங்குத் தனக்கு விளையுந் தீங்களவில் பழைமை பாராட்டலாம். நாட்டின் நலனுக்கும் நீதிக்கும் தீமை பயக்கும் ஆயின் அங்குப் பழைமை எண்ணாது நீக்க வேண்டும். பழைமை பாராட்டி வாளா இருத்தலாகாது எனப் பழைமையின் அளவு உரைத்ததாகவும கொள்ளலாம் (1303)

'கடன்' — 'இயல்பு' 'ஒழுக்கம்' 'கடமை' 'முறைமை' என்பன உரையாசிரியர் தரும் பொருள்கள். இவற்றுள் 'கடமை', 'முறைமை' என்ற பொருள்களே இவ்விடத்தில் ஏற்புடையன. 'இயல்பு' என்பது ஒருவரின் இயற்கையான பண்பையும் 'ஒழுக்கம்' கடமையைத் தவறாமையாற் போந்த பயனையும், உணர்த்தும். 'கடமை' என்பது சிறிதும் சோராமல் உறுதியாக ஆற்றவேண்டிய பொறுப்புணர்ச்சியோடு கூடிய செயலைக்காட்டும். ஆதலால் பழைமை நோக்கிச் செய்யவேண்டிய இன்றியமையாத செயலையே 'கடன்' என்று கருதலாம் என்க.

தேவநேயர் 'கெழுதகைமை-விரும்பின செய்தற்குரிய உரிமை. உப்பாதல்-உப்பு சுவையூட்டுவது போல இனிமையாதல். கடன்-கடமை' என்பர். வரத. கெழுதகைமையான் செய்தசெயல் நன்றாகவும் இருக்கலாம். தீயதாகவும் இருக்கலாம். இரண்டையும் பழைமைபற்றித் தான்செய்ததுபோலக் கொள்ளுதலே பழமை'

என்பர். இராம. உறுப்பு-இலக்கணம். உப்பாதல்-இனினமதரா நடந்து கொள்வது என்பர். இவற்றுள் தேவநேயர் உரைசொற் பொருள் விரித்துக் காட்டுதலின் இயைபுடையது என்று சொல்லாம்.

81.3. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. (803)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவன் தனது உரிமையாலே இசைவில்லாதவற்றைச்[1] செய்தவிடத்து, தான் அமைவானாயின், பின் அவனோடு பழகிய நட்பு யாதினைச் செய்யும் எ—று.

இது மறுமையிற் பயன்படான் என்றது.

ஆ) பரிதி.: பழைமையான நட்பு என்னசெய்யும்? பழைமைக்குத் தக்க நல்லநெறியில் நடவானாகில் எ—று.

இ) பரிப்.: பழகிய நட்பால் பெறும் பயன் என்னை? உன் உரிமையால் ஒருவன் பிழை செய்த காலத்து அரசன் தான் அமையாத இடத்து எ—று.

ஈ) காளி.: அவரொடும்[2] நெடுங்காலம் பழகிய நட்பெல்லாம் என் செய்யும்? யாதும் இல்லை. எவ்விடத்து எனின்? கீழ்ச் சொன்ன படியே அவர் தமக்கு வேண்டும் கெழுதகைமை செய்து அமையா இடத்து எ—று.

உ) பரிமேல்.: தாம் உடம்படாதனவேனும் நட்டார் உரிமையால் செய்தனவற்றிற்குத் தாம் செய்தாற்போல உடம்படாராயின் அவரோடு பழையதாய் வந்த நட்புஎன்ன பயனைச் செய்யும்?

செய்தாற்போல உடம்படுதலாவது தாமும் அவரிடத்து உரிமையால் உடம்படுதல். இவை இரண்டு பாட்டானும் பழைமையான் வரும் உரிமையது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: நல்ல காரியங்களைச் செய்கிறதற்குத் தன்னால் கூடாவிட்டாலும், தன்னுடைய சிநேகிதர் தனக்குச் செய்யும் நல்ல காரியங்களுக்குத் தான் உடன்படா விட்டால், அவனுடைய சிநேகம் என்ன பலனாம்?

---

1. இசைவில்லாதவற்றை — ஒப்புக் கொள்ளாத வற்றை
2. அவரொடும் — நட்டவரோடும்

எ) பழைய.: பாரம்பரியமாக வந்த நட்பென்ன பயனைச் செய்யும்? தாம் உடன் படாத தேனும் நட்டாருரிமையாற் செய்வனவற்றிற்குத் தாமும் உடன்படாவிடத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''மறுமையிற் பயன்படான்'' என்றது என்பர் மணக், இக் கருத்தை இக்குறளிற் பெறுமாறு யாங்ஙனம்? என்பது ஆய்வுக்குரியது.

பரிப். அரசின் அங்கமாதலை உளங்கொண்டு 'அரசன் அமையாவிடத்து' என உரை எழுதுவர்.

பரிதி. பழைமைக்குத் தக்க நெறியின் நடவானாகில்' என்பர் இவ்வுரையும் காளிங்கர் உரையும் தெளிவு பெற அமையவில்லை.

'அவர் நம்மிடத்து வைத்த உரிமையால் செய்த தீமையையும் நாமும் அவர்பால் வைத்து உரிமையால் உடன்படல் வேண்டும்' என்பது கருத்து.

81.4. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின். (804)

உரைப்பகுதி:

அ) மணக்.: நட்டோர் தமது உரிமையாலே கேளாது இசைவில்லாதவற்றைச் செய்வாராயின், அதற்கு முனியாது[1] அதனையும் தாம் விரும்பும் தன்மையோடே கூட விரும்பி இருப்பர் மிக்கார் எ-று.

இஃது உடன்படுதலன்றி விரும்பவும் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: பழையவர் தம்மைக் கேளாமல் செய்த காரியத்தை வெறுப்பு வாரல்லது வேறு குணம்[2] காட்டார் எ—று.

இ) பரிப்.: நட்டோர் தமது உரிமையாலே கேளாது இசைவு இல்லாதவற்றைச் செய்வார் ஆயின் அதற்கு முனியாது[1] அதனையும் தாமே விரும்பும் தன்மையோடு கூட விரும்பி இருப்பார் மிக்கார் எ—று

1. முனியாது — சினக்காது
2. வேறுகுணம் — வெறுப்பு

ஈ) காளி : 'விழைதகையார்' பாடம்.

நட்டாரானோர் யாம் இப்பொருள் கைக்கொள்வோம்[3] என்று கொண்டவரைக் கேட்டுக்கொள்ளாது அவருடன் தமக்கு உள்ள பழைமை மிகுதியாலேயாதானும் ஒன்று செய்யின் அவருடன் நட்பின் கண் விழைதகையரானோர், அவர் அங்ஙனம் கேளாது செய்கின்ற உரிமையை மேன்மேலும் வேண்டியிருப்பர். என் எனில்? தாம் அவர் என்னும் வேற்றுமை இலர் ஆகலான் எ—று.

உ) பரிமேல்.: தன் கருமத்தை நட்டார் உரிமையால் கேளாது செய்தாராயின், அச்செயலது விழையப்படுந்தன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார்.

ஒருவர்க்குத் தம் கருமம் தாம் அறியாமல் முடிந்திருத்தலி-னூங்கு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறறிந்து[4] விரும்புதல் அறிவுடையார்க்கல்லது இன்மையின், அவர்மேல் வைத்துக் கூறினார். வேண்டியிருப்பார் என்பது எழுந்திருப்பர் என்பதுபோல் ஒருசொல் நீர்மைத்து[5]. இதனால் கேளாதுசெய்துழி அதனை விரும்புக என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: தன்னுடைய காரியத்தைச் சிநேகிதர் கேளாமற் செய்தால், அதற்குச் சந்தோசஷப்பட்டு விரும்பியிருப்பர் அறிவுடை-யவர் எ—று.

எ) பழைய: 'கெழுதகைமை' பாடம்.

யாதானுமோர் கருமத்தை நட்டார் உரிமையாற் கேளாது செய்தாராயின், தாம் அவரோடு பொருந்திய தன்மை பற்றி விரும்பியிருப்பர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் உரையில் இசைவில்லாதவற்றைச் செய்தா-ராபினும் என்பது ஏனையோர் உரைகளிலிருந்து இவருரையை ஏற்றம் பெறச் செய்கிறது. ஏனையோர் உரைகள், பழைமையும் உரிமையும் பற்றித் தன்நண்பன் தன்னைக் கேளாமலே செய்ததை

3. கைக்கொள்வோம் — எடுத்துக்கொள்வோம்
4. அவ்வாறறிந்து — விழையத்தக்கதாக அறிந்து
5. இரு, இடு என்பன தமக்கென ஒருபொருள் இன்றி முன் வினையைச் சார்ந்தி-ருத்தலின், வேண்டியிரு என்பது பகுதியாய் நின்று வினைமுற்றாயிற்று.

விரும்ப வேண்டும் என்கின்றன. மணக்குடவர் உரை கேளாமற் செய்தது இசைவில்லாததாக இருப்பினும். விரும்பவேண்டும் என்கிறது. ஆதலால் மணக். உரையே சிறந்தது.

வரத. பரிமேலழகரைச் சார்ந்து சொல்வராயினும், 'சொல்லிச் செய்தலும் கேட்டுச் செய்தலும் இரண்டும் ஒரு செயலுக்கு இன்றியமையாதன. இந்த இரண்டையுங் கடந்து நட்பால் கேளாமலே செய்தானாயினும் விரும்புக' என்பர். மணக். 'செய்தது விருப்பமில்லாத செயலாயினும் நட்புப் பற்றி விழைக' என்றார்.

காளி. 'விழைதகையார்' எனப்பாடங்கொண்டு விழைதகையராணோர் வேண்டியிருப்பர் எனப்பொருள் கூறுவர். ஏனையோர் 'விழைதகையான்' எனப்பாடங் கொண்டு விரும்பும தன்மையால் என வேண்டியிருத்தற்கு ஏது கூறுவர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

கிழமையிற் செய்தனன் கெழுதகை தருமென —பெருங்.4.8:76

81.5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (805)

## உரைப்பகுதி:

அ) மணக்:. தாம் நோவத்தக்கனவற்றை[1] நட்டோர் செய்தாராயின் அதற்கு முனியாது ஒன்றில்[2] அறியாமையாலே செய்தாரென்று கொள்க; ஒன்றில்[3] பெரிய உரிமையாலே[4] செய்தாரென்று கொள்க எ—று.

ஆ) பரிதி : பழையார் அறிவிலாமையினால் ஒரு குற்றம் செய்தாலும் அவர் குற்றத்தைப் பாராட்டார் எ—று

1. நோவத் தக்கனவற்றை — வருந்தத் தக்கனவற்றை
2. ஒன்றில்
3. ஒன்றில் } 'ஒன்று' என்றளவில் நின்றது.
4. பாராட்டார் — எண்ணமாட்டார்

இ) பரிப் .: தாம் நோவத் தக்கனவற்றை நட்டோர் செய்தாராயின் அதற்கு முனியாது ஒன்றில் அறியாமையாலே செய்தார் என்று கொள்க. ஒன்றில் பெரிய உரிமையாலே செய்தார் என்று கொள்க எ—று

ஈ) காளி : தம்மொடு நட்டார் இவ்வாறு அன்றித் தாம் பெரிதும் நோவத்தக்கனவற்றைச் செய்வாராயின ஒன்றோ அவர் அறியாமை என்று உணர்க : இனி ஒன்றோ அவர்க்குத் தம்மொடு வேற்றுமை அற[5] நின்ற பெரியதோர் உரிமை என்று அறிக எ—று.

உ) பரிமேல் : தாம் வெறுக்கத்தக்கன வற்றை நட்டார் செய்தாராயின், அதற்குக் காரணம் ஒன்றிற்பேதைமை என்றாதல் ஒன்றின் மிக்க உரிமை என்றாதல் கொள்க,

ஒன்றோ என்பது எண்ணிடச்சொல்[6]. 'செயின்' எனவே தம், இயல்பால் செய்யாமை பெற்றாம். இது[7] வருகின்றவற்றுள்ளும் ஒக்கும். இழவூழான்[8] வரும் பேதைமை யாவர்க்கும் உண்மையின் தமக்கு ஏதம் கொண்டார்[9] என்றாதல், ஊழ் வகையான்[10] எம்மின் வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின் வந்ததென்றாதல் கொள்வதல்லது அன்பின்மை என்று[11] கொள்ளப்படாது என்பதாம். கெடும் வகைசெய்யின் அதற்குக் காரணம்[12] இதனால் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : தாம் வெறுக்கதக்க காரியங்களைத் தன்னுடைய சிநேகிதர் செய்தால், அறிவில்லாமற் செய்தான் என்றாகிலும். சிநேகிதத்தினால் செய்தான் என்றாகிலும் நினைத்துக் கொள்ள வேண்டுமல்லாமல், பகையாற் செய்தான் என்று நினைக்கப் போகாது.

5. வேற்றுமை அற — வேறுபாடு நீங்க
6. தொகுப்பும் குறிப்பும் காண்.
7. இது — தம்மியல்பால் செய்யாமையாகிய இது
8. இழவுழ் — கைப்பொருள் இழத்தற்குக் காரணமாகிய வூழ்
9. ஏதங்கொண்டார் — தீங்கு செய்தார்
10. உரிமை வகையான் எனவும் பாடமுண்டு.
11. 'அன்பின்மையான் வந்ததென்று' என்று பாடமுண்டு.
12. அதற்குக்காரணம் — கெடும் பகை செய்தற்குக் காரணம்.

எ) பழைய : தாம் வெறுக்கத் தக்கவற்றை நட்டார் செய்தாராயின் அதற்குக் காரணம் ஒன்றிற் பேதைமை யென்றாதல், ஒன்றில் மிக்க உரிமை யென்றாதல் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் உரையமைதி 'நட்டார் நோதக்க செயின் பேதைமை உரிமை இவற்றுள் ஒன்றுபற்றிச் செய்தார்' என்றுணர்க. வெகுளற்க என்னுங்கருத்தினது. காளிங்கர், பரிமேலழகர் கருத்தும் இதுவே. வரத. அறியாமையால் மட்டும் செயதுவிட்டான் என்று எண்ணுதலாகாது. உரிமைபற்றிச் செய்ததாக எண்ண வேண்டும் என்பர். குழந்தை, சி.இ., சாமி. சிதம்பரனார் முதலியோரும் இங்ஙனமே கருதுவர். இராம. அறியாமைக்காக மட்டுமல்ல, மிகுந்த உரிமையால் என்பதையும் உணர்ந்து பொறுக்க என்பர். பரிதி. 'பழையர் அறிவின்மையாற் குற்றஞ் செய்பவர்., பாராட்டற்க' என்பர். பரிமேலழகர், 'பேதைமை இழவூழான் எவர்க்கும் வரக்கூடும்' என்ற ஆசிரிய வசனத்தைத் துணைக் கொண்டு எழுதப்பெறுவது. ஊழ் தன்வாயிலாகவும் தனக்கு வரலாம். பிறர் வாயிலாகவும் வரல்ாம். ஆதலின், தந்நட்பினன் வாயிலாக வந்து போகச் செய்தது என்ற உரை விளக்கம் சிறந்ததும் நுணுக்கமானதும் ஆம். இக்கருத்தை யரண் செய்வது செயின் என்ற வினையெச்சம். அது நட்டார் தீமை செய்யார். என்பதையே வலியுறுத்துகிறது என்பர்.

தேவநேயர் ஒன்றோ—ஒன்றுதானோ என்னும் பொருள தாதலின் எண்ணிடைச் சொல்லன்று' எனப் பரிமேலழகரை மறுப்பர். இதுவும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

1. எண் இடைச்சொல் என்பது எண்ணுப்பொருளைத்தரும் இடைச் சொல்லேயன்றி எண்ணையே யன்று. தொல்காப்பியமுதலான இலக்கண நூல்களனைத்தும் உம், என, என்று எனா என் பனவற்றையே எண்ணிடைச்சொல்லாகக் கூறுகின்றன.

2. 'ஒன்றோ' என்பது ஒன்று என்னும்எண்ணுப் பெயரையடுத்து ஒழிபிசை முதலிய பொருளில் வரும் ஓகாரம் புணர்ந்த பெயர்ச் சொல். இதனை எண்ணிடைச்சொல்எனக்குறியிட்டு ஆண்டவர்கள்

புறநானூற்றுப் பழைய உரையாசிரியரும் பரிமேலழகருமே ஆவார். சங்க இலக்கிய உலகில் புறநானூற்றில் ஆறிடங்களிலும், குறளில் ஐந்திடங்களிலும் காணப்படுகின்றன, ஏனைய சங்க நூல்களில் குறுந்தொகையில் 194ம் பாடலிலும், கலித்தொகையில் 116ம் பாடலிலும் சிந்தாமணியில் நான்கிடத்தும் காணப்பெறுகின்றன. இவற்றுள் நச்சினார்க்கினியர் முதலானோர் ஒன்றோ என்பது இடைச்சொல் என்றொழிந்தனரேயன்றி எண்ணிடைச் சொல் என்றிலர்.

சீவக சிந்தாமணியுள்'' இறத்தலொன்றோ.............. செய்தவ முயறலொன்றோ வந்ததால் நாளை என்றான்'' (1050) எனவும், ''மாநகர் சுடுதலொன்றோ மதனனையழித்தலொன்றோ, வாணிகரில்லா மைந்தர் கருதியது ''(1152) எனவும். "ஏவலான் அரசன் ஒன்றோ இருபிறப்பாளன்'' (1683) என்வும் இது அல்லது அது என்ற விகற்பப் பொருட்கண்ணேயே ஆட்சியில் உள்ளது. 'கவியின் கண்ணும் யசய் வருக ஒன்றோ பிறர் வருக" (116) என விகற்பப் பொருளிலே வருகிறது.

குறுந்தொகையில் 194 பாட்டில் ''வான் ஏர்பு இறங்கு மொன்றோ அதனெதிர் கானமஞ்ஞை கடிய ஏங்கும், ஏதில கலந்த இரண்டற்கும் என் பேதை நெஞ்சம் பெருமலக்குறுமே'' என எண்ணின்கண் வந்தது. ஈண்டும் மழை மட்டும் அன்று மயில்களும் ஏங்குகின்றன. அவ்விரண்டற்குமாக என் பேதை நெஞ்சம் பெரிதும் கலங்கும் எனத் தலைவி கூறுகிறாள். ஈண்டு எண்ணுப் பொருளில் வந்தமை வெளிப்படை.

அவை போலவே குறளிலும் எண்ணிடைச் சொல்லாயும் விகற்பப் பொருளதாயும் ஐயப்பொருளதாயும் வந்துள்ளன. அங்ஙனம் வந்தது ஒகார இடைச்சொல்லா? அதனையிறுதியிற் பெற்ற ஒன்றென்னும் பெயரா? என்பது அடுத்துச் சிந்தித்திற்குரியது.

இக்குறட்பாவில்'' பேதைமை தானோ உரிமையுமாம்" என விகற்பங் கூறுதற்கண்ணேயே வந்தது. ஒன்று என்னும் எண்ணை யடுத்துவந்தமையான் எண்ணிடைச் சொல்லாயின் ஏனைய எண்களை யடுதத ஆட்சியும் இலக்கிய உலகில் இருக்க வேண்டும், அங்ஙனம் காண்கிலாமையாலும் ஆய்தற்குரியது.

மணக்குடவரும் பரிமேலழகரும் இவரையொட்டிய ஏனோரும் ஒன்றோ—ஒன்றில் அல்லது ஒன்றின் என வேற்றுமை யுருபு விரித்துப் பொருள் செய்தலானும் வேற்றுமையுருபு பெயரைச் சார்ந்து வருமேயன்றி இடைச்சொல்லைச் சார்ந்து வராமையானும் இதுபோல்வனவற்றை விகற்பப்பொருளது எனவே இயைபுடைத் தாகலாம் ஆதலால் தேவநேயர் சிந்தனையும் சிறந்ததே. ஆதலால் ஒன்று என்ற எண்ணுப்பெயருடன் ஓகார இடைச்சொற் சார்ந்து ஐயநிலைக் களத்திற்றோன்றிய விகற்பப் பொருளைக் காட்டிற்று என்றே பரிமேலழகர் கூறியிருக்கக்கூடும். 'ஒன்றோ' என்ப தனைத்தும் எண்ணிடைச் சொல்லாகக் கூறியிருக்கமுடியாது என்பது தெளிவு.

'பொய்படுமொன்றோ' என்றவழி ஒகாரம் கழிவிரக்கத்தில் வந்து 'புனைபூணும்' என்பதையும் தழுவி நின்றது. இங்ஙனம் இச் சொல்லாட்சி பொருள் வேறுபடுதலைக் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

பேதைமையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்த தொன்றுடையேன் கொல்லோ — குறுந்., 230

தந்தீமை யில்லவர் நட்டவர் தீமையையும்
எந்தீமை என்றே உணர்ப தாம் — அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப
ஒருவர் பொறைஇருவர் நட்பு — பழ. நா., 247

இறப்பவே தீய செயினும்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ - நிறக்கோங் (கு)
உருவவண் டார்க்கும் உயர்வரை நாட
ஒருவர் பொறைஇருவர் நட்பு — நாலடி., 223

பழமையில் திரியார் பயன்தெரி மாக்கள்
கிழமையில் செய்தனன் கெழுத்கை தரும் — பெருங் 4:8:75-76

பேதைமைப் பாலி னாதல் பெருங்கிழ மையினா னாதல்
மேதக நட்டோர் மாட்டு விரவிடும் பிழைக ளெல்லாம்
காதுதற் பால அல்ல ... ... ... — தணிகை, வீரட்ட. 105

கெடுதியில் உதவ வல்லவர் நட்பால்
 கிளந்திடா தொன்றனைச் செயினும்
கெடும்வகை செய்தல் வேண்டின தாமே
 கெழுவுதல் டணிவச்சம் இன்மை
படுதரும் ஊழில் புரியிலும் அவற்றைப்
 பழமைஎன் றறிந்துளம் உவப்பின்
நெடுநில முழுதம் கேண்மையாம் மைந்தா
 நேரலார் தாமுக்கே ளாவர் —விநா. அரசி., 127

தொன்மை மறவேல் —ஆத்தி., 64

81.6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
 தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. (806)

உரைப்பகுதி :

அ) மணக். : பழைமையின்கண்ணே நின்றாரது நட்பை அவராலே தமக்கு அழிவு வந்தவிடத்தும் ஒழுக்கத்தின் கண்ணே நின்றார் விடார்[1] எ—று

எல்லை-வரம்பு.

ஆ) பரிதி . : இன்னரர் என்னும் தகுதி பெற்றார் பழையோரைக் கைவிடார் எ—று.

இ) பரிப் : பழமையின் கண்ணே நின்றாது நட்பை அவரானே தமக்கு அழிவு வந்த இடத்தும் விடார்கள் ஒழுக்கத்தின் கண்ணே நின்றார் எ—று.

எல்லையாவது வரம்பு. அஃது ஒழுக்கம் ஆயிற்று, மேல் கூறிய ஆற்றான்[1] அமைந்து விடுதல் அன்றி நட்பு விடுதல் உயர்ந்தோர் செய்யார் என்றது.

ஈ) காளி . : தம்மொடு நட்பினால் பழமைக்கண் நிலை நின்றார் தொலையும் இடத்தும்[2] அப்படிப் பழமை வரம்பின்கண் நின்றார் யாவர்? மற்று இவர் இவரோடு உண்டாகிய தொடர்பினை என்றும் கைவிடார் எ—று

1. மேல்கூறியஆற்றான்—'கிழமையைக் கீழ்ந்திட நட்பால்' என்று கூறியதால் பரிப் பெருமாள் முறைவைபபு 'பழைமை எனப்படுவது —' என்ற குறளை 9-வதாகக் கொள்வார்.

2. தொலையும் இடத்தும் — நீங்குமிடத்தும்

இவ்வாறன்றிக் கெழுமிக் கைவிடுவாரது தீங்கு உணர்த்து-கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல் .: நட்புவரம்பு இகவாது அதன் கண்ணே நின்றவர், தம்மோடு பழைமையில் திரியாது நின்றாரது நட்பினை அவரால் தொலைவு வந்தவிடத்தும் விடார்.

பழைமையின் திரியாமை—உரிமை ஒழியாமை. தொலைவு-பொருட்கேடும்[4] போர்க்கேடும்.[5]

ஊ) கவிராசர் : சிநேகம்வேண்டி இருக்கிறபேர், பழையவர்களாய் இருக்கிற சிநேகிதர் 'சிநேகம்விட்டுப போகிறோம்' என்றாலும், போகவொட்டாமற் நிறுத்திக்கொள்ளுவார்கள் எ—று.

எ) பழைய .: 'தொலைவிடத்துத்' பாடம்.

பழைய நட்பென்னும் எல்லைக்கண்ணே நின்றவர் நட்பினை விட்டு நீங்கார்; பொருட்கேடு செய்தவிடத்துப் பழமையாக நின்றவர் தொடர்பினை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

"எல்லைக்கண் நின்றார்" 'எல்லை—நட்பின் வரம்பு' மணக்., குழந்தை, சாமி. சிதம்., பரிப்.; 'பழைமை வரம்பின்கண் நின்றார்' காளி.; 'நட்புவரம்பு இகவாது நின்றார்' பரிமேல்., பழைய; 'பழைய நட்பின்வரை' இராம. 'நட்பின் அளவு மிகுதி' வரத.; இன்னார் என்னும் தகுதி மிகுதி பெற்றார்' பரிதி., 'உரிமை வாழ்வின் எல்லை 'மு.வ.;

தொலைவு

'அழிவு' மணக்.; 'தொலையுமிடம்' காளி.; 'பொருட்கேடும் போர்க்கேடும்' பரிமேல்., பழைய.

இவ்வுரைகளுள் வேறுபாடின்று. ஆதலால் **பரிமேலழகர்** தரும் விளக்கம் சிறந்தது. ஏற்புடையது.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

வவ்வி லங்கு வளர்த்தவர் மாட்டருள்
செல்வி லங்கலில் சிந்தையர் தீர்வரோ
இவ்வி லங்கல் விடேமினி யென்பபோல்
எவ்வி லங்குவந் தெய்தின வேலையே —கம்ப., 6831

4. பொருட்கேடு — உள்ள பொருளில் அழிவு
போர்க்கேடு — போரில் தோற்றால்

81.7. அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். (807)

உரைப்பகுதி :

அ) மணக் : தமக்கு அழிவுவரும் கருமங்களைப் பழைய நட்டோர் செய்தாராயினும், அவரோடு உள்ள அன்புவிடார்; முற்காலத்து அன்பின் வழியாக வந்த நட்பை உடையவர்கள் எ-று.

இது கேடு வருவன செய்யினும் அமையவேண்டும் என்றது.

ஆ) பரிதி : தம்முடைய செல்வம் அழியும் படியாகக் குற்றம் செய்தாலும் அதற்குப் பரிகாரம்[1] பண்ணுவாரல்லது பழையார்மேல் அன்புவிட்டார். எ-று

இ) பரிப் : தமக்கு அழிவு வரும் காரியத்தைப் பழைய நட்டோர் செய்தாராயினும் அவரோடு உள்ள அன்பு விடார் : முற்காலத்து அன்பின் வழியாக வந்த நட்பை உடையவர்கள் எ-று.

இது கேடு வருவன செய்யினும் அமைய வேண்டும் என்றது.

ஈ) காளி : தாம் அழிய[2] வந்தனவற்றைச் செய்தாராயினும் அன்பு விடார் : அன்பினாலே வழிவந்த கேண்மையை உடையோர் எ-று.

உ) பரிமேல் : நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட்டு அன்பு ஒழியார், அன்புடனே பழையதாய் வந்த நட்பினையுடையார்.

அழி என்பது முதனிலைத் தொழிற்பெயர்[3], அழிவு மேற்சொல்லிய கேடுகள். இவை இரண்டு பாட்டானும் கேடு செய்தற்கண்ணும் நட்பு விடற்பாற்றன்று என்பது கூறப்பட்டது,

ஊ) கவிராசர் : தன்னுடைய சிநேகிதர் தனக்கு அழிவு வரத் தக்க காரியங்களைச் செய்தாலும், அறிவுடையவர்சன் அவர்கள் சிநேகம் விடார் (எ-று)

---

1. பரிகாரம் - நீக்குகை
2. அழிய - கெட
3. அழிவு வந்த என்பது அழி வந்த என நின்றது. இதில் அழிவு என்பதில் 'வு' என்னும் தொழிற்பெயர் விகுதி கெட்டது, அதனால் இது பகுதி மாத்திரமாய் நின்ற முதனிலைத் தொழிற்பெயர்.

ஏ) பழைய.: நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும், அவரிடத்தன்பினை ஒழியார், அன்புடனே பழமையாக வந்த நட்பினையுடையார்.

## இ) தொகுப்பும் குறிப்பும்:

'அழிவந்த' என்பதற்குத் 'தமக்கு அழிவு வரும் கருமங்கள்' 'செல்வம் அழியும்படியான குற்றம்' என இருதிறப்படுகின்றனர் உரையாசிரியர்கள். வரத. 'அழிவந்த' - ஒருவருக்கு மருந்து கொடுத்தல் போலவும், புண்ணையறுத்தல் போலவும் போல்வன எனக் கருதி 'இவற்றையும் அன்புச் செயலே என்று கருதிப் பழைமையைப் போற்றுக' என்பர். இவ்வுரை அழிவந்த செய்தற்கு ஏற்ற தாகாது. ஆக்கத்திற்கே உரியதாம். மருத்துவன் சூடிடுதல், அறுத்தல், கசப்பு மருந்தளித்தல் இவற்றின் பயன் இறுதியில் நன்மையாகவே முடிதலின். அன்றியும் இது பேதைமை, உரிமை இவற்றான் நிகழ்வதகாது உரிமையானிகழ்வது செய்பவன் கருதியே அழிவந்த செய்திருப்பானாயின் அது நட்பிடை தீமை செய்ததேயாகும். அதனைப் பழைமை பற்றிப் பொறுத்தல் நட்கப்பட்டானுடைய பெருந்தன்மையும் கடமையுமாகும் என்பதே இக்குறளான் வலியுறுத்தப்படுவது என்க.

இராம. 'வேண்டுமென்றே அழிவுதரக்கூடிய காரியத்தைச் செய்யினுய' என்பர். இது மேலும் பழைமையான் பொறுக்குப் நண்பன் சிறப்பை மிகுவிப்பது.

குழந்தை. 'அழிவு - பொருட்கேடும் தொழிற்கேடும்' என்பர்.

ஏனையவற்றில் கருத்து வேறுபாடின்று. இவற்றுள், அறிந்தோ அறியாமலோ கேடுதரும் செயல்களை நண்பன் செய்துவிடடால் என்பது பழைமையின் பெருமை மிகுவிப்பதால் அக்கருத்துடையன சிறந்தன.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

**முற்றும்:**

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும் — நாலடி., 221

...... ...... இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர் — நாலடி., 227

தமரென்று தாங்கொளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயின் – அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல் — நாலடி., 229

நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட்டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய் யாருளரோ
தம்கன்று சாக்கறப் பார் — பழ,நா., 116

ஈரமில் லாதது கிளைநட் பன்று — முதுமொழிக்., 5:3

81.8. கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின். (808)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'நாளிழுக்கில்' பாடம்.

நட்டோரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமையை அறிய வல்லார்க்கு நட்டோர் தப்புச்செயின், அந்தநாள் நல்ல நாளாம். எ—று.

இது கோளது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமைய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: நட்பினால் குற்றத்தைக் கேளாத உறவை வல்லவர்க்கு நாள்போல நன்மை நட்டாராலே உண்டாம் எ—று.

இ) பரிப்.: நட்டாரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமை அறிய வல்லார்க்கு நட்டோர் தப்புச் செய்யில் அந்த நாள் நல்ல நாள் ஆம் எ – று.

இது கேளாது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமைய வேண்டும என்றது.

ஈ) காளி.: இவ்வாறு நல்லவும் தீயவும் அவரைக் கேளாது செய்தற்கு உரிய கெழுதகைமை வல்லாராகிய கிளைமையோர்க்கு[1]

1, கிளைமையோர்க்கு — சுற்றமாவார்க்கு

அவருடன் நட்டார் பின்னும் நட்பிடைக் குற்றம் செய்யின் அற்றை நாள் தமது வாணாள்[2] வரையுள் இழந்த நாள் ஆகும் எ—று.

கேள் இழுக்கம் என்பது நட்பில் குற்றம் என்றது.

உ) பரிமேல்.: நட்டார் செய்த பிழையைத் தாமாகவே அன்றிப் பிறர் சொன்னாலும் கொள்ளாத[3] உரிமை அறிய வல்லார்க்கு, அவர் பிழை செய்வாராயின், அது பயன்பட்ட நாளாம்.

பிழையாவன-சொல்லாது நற்பொருள் வௌவல்,[4] பணியாமை[5] அஞ்சாமை முதலாயின[6]. கேட்டல்-உட்கோடல்[7] கெழுதகைமை வல்லவர் என்பது ஒருபெயராய்க் கேளாத என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று[8]. செய்துபோந்துழியல்லது அவ்வுரிமை[9] வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின இதனால் பிழைபொறுத்தற சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: சிநேகிதர் செய்த குற்றங்களைத் தாங்களேயன்றிப் பிறர் சொன்னாலும் கொள்ளாத உரிமை அறியவல்லவர் களுக்கு, அவர்கள் குற்றம் செய்த நாள்களும் நன்மை செய்த நாள்களோடு ஒக்கும் எ—று.

எ) பழைய.: 'நாளிழுக்கல்' பாடம்.

நட்டார் செய்த பிழையைத் தாமாகவே யன்றிப் பிறர் சொல்லுங் கேளாத உரிமையறிய வல்லார்க்கு, நட்டார் பிழை செய்ய வல்லாராயின் அதுபயன்பட்ட நாளாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'.. ...வல்லார்க்கு நட்டார் இழுக்கஞ் செய்யின் நாளாம்' எனக் கூட்டிப் பொருள்கண்டவர்கள் மணக்., பரிமேல்., கவிராசர்., பழைய 2

காளி. 'கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு நட்டார் (குற்றம்) செயயின் நாள் இழுக்காய' என்று கொண்டு கூட்டிப

2 வாணாள் — வாழ்நாள்
3. கொள்ளாத — மனத்தில் ஏற்றுக்கொள்ளாத
4. நற்பொருள் வௌவல் — நல்ல பொருளைக் கவருதல்
5. பணியாமை — அடங்கி நடக்காமை.
6, முதலாயின என்றமையின் — எடுத்த காரியத்தில் தோற்றல் கேட்காமலே காரியஞ் செய்தல் முதலியனவற்றைக் கொள்க.
7. உட்கோடல் — மனத்தில் ஏற்றுக்கொள்ளல்.
8. முடிபாயிற்று — முடிக்குஞ் சொல்லாயிற்று.
9. அவ்வுரிமை — கேளாமலே செய்தலாகிய உரிமை.

பொருள் கண்டனராதல் வேண்டும். 'நாளிழுக்காம்' என்பது இவர் கொண்ட பாடம். இதற்கு அவர் உரை 'நட்டார் குற்றம் செய்யின் அந்நாள் வாழ்க்கையில் வழுவிய நாளாகும்'. என்பர். இது நேரிய உரையன்றாயினும் குற்றமுடையதன்று.

பரிதி. 'இவருக்கு ''நாள்செய்வன நல்லோர் செய்யார்'' 'நட்டோர் செய்யார்' என்ற பழமொழியின் கருத்து இவரை உந்த இங்ஙனம் உரைகண்டாராயினும் இது அதிகார இயைபின்மை கருதி ஏற்க இயலாததாகும். வரத. பரிமேலழகரை ஒட்டிய கருத்தினராயினும், உரை நடை தெளிவானது. இராம. பரிமேலழகர் போலக் கூட்டிப் பொருள் கண்டனராயினும் 'நாள் இழுக்கம்-கெட்ட காலம்' என உரைப்பர். பழையோர் செய்த குற்றங்களைக் கெழுதகைமையால் பொறுத்தலே அதிகாரக் கருத்தாதலின் அதற்கு மாறான இவ்வுரை ஏற்புடையதன்று.

ஒ) ஒப்புமைப்பகுதி:

**முற்றும்:**

**தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா ளாகிலும் சிதகு ரைக்குமேல்**
**என்னடியார் அதுசெயார் செய்தாரேல் நன்றுசெய்தார் என்பர்**
**போலும்.**

—பெரியாழ். திருமொழி., 4.9:2

81.9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. (809)

உரைப்பகுதி :

அ) மணக்.: 'கெடாஅர்' பாடம்.

குறறம் உண்டாயி அவ்விடத்தும் நட்பினிற் கெடாராய்க் குலத்தின்வழி வந்த நட்புடையாரது நட்பை விடுதலின்றி உலகத்தார் விரும்புவர் எ-று.

இது பழமையைக் கொண்டாடுவாரைஉலகத்தார் தாமும் நட்பு ஆடுதற்கு விரும்புவர் என்றது.

ஆ) பரிதி.: பழமையான் உறவை விடாதாரை உலகம் விரும்பும் எ-று.

இ) பரிப்.: குற்றம் உண்டான இடத்தும் நட்பினில் கெடாராய்க் குலத்தின் வழிவந்த நட்பு உடையாரது நட்பை விடுதல் இன்றி உலகத்தார் விரும்புவர் எ-று.

இது பழமையைக் கொண்டாடுவாரை உலகத்தார் தாமும் நட்பு ஆடுதற்கு விரும்புவர் என்றது.

ஈ) காளி.: ஒருபொழுதும் இடைவிடாது ஒரு வழிப்பட வந்த கேளின் தன்மையோர் நட்பினை ஒருகால் ஒழியாதே விரும்பி நிற்பர் உயர்ந்தோர் எ-று.

உ) பரிமேல்.: உரிமையறாது பழையதாய் வந்த நட்பினை உடையாரது நட்பினை, அவர் பிழைநோக்கி விடுதல் செய்யாதாரை உலகம் நட்புக் குறித்து விரும்பும்.

கெடாது என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது[1]. விடாதாரை எனவே, விடுதற்காரணம் கூறப்பட்டது[2]. நம்மாட்டும் இவர் இத்தன்மையரா்வர் என்று யாவரும் தாமே வந்து நட்பாவர் என்பதாம். 'கெடர்' என்று பாடமோதி, நட்புத தன்மையில் கெடாராகி என்று உரைப்பாரும் உளர்[3].

ஊ) கவிராசர்.: பழையவர்களான சிநேகிதர்கள் செய்த பிழையைப் பார்த்து அவர்கள் சிநேகத்தை விடாத பேர்களை உலகத்தார் விடாமற் சிநேகிப்பார்கள் எ-று.

எ) பழைய.: உரிமையறாது பழையதாய் வந்த நட்பினையுடையாரது நட்பினை, அவர் பிழைநோக்கி விடுதல் செய்யாதாரை உலகம் நட்புக் குறித்து விரும்பும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர்[4] 'கெடாஅர் வழிவந்த' எனப்பாடங்கொண்டு 'கெடாராய்' என முற்றெச்சமாக்குவர். 'விடாஅர்' என வருதலை எண்ணித் தொடையின்பம் கருதி இவர் கொண்ட பாடமும் ஏற்புடையதே.

---

1. கெடாது என்ற எதிர்மறை வினையெச்சத்தின் விகுதி விகாரத்தால் தொக்கு 'கெடா வழி' எனப் புணர்ந்தது.
2. 'விடாஅர்' எனவே விழைதற் காரணங் கூறப்பட்டது என்றும் பாடமுண்டு
3. மணக்குடவர் கொண்ட பாடம்.

'விடாரை உலகம் விழையும்' என்பர் பரிமேலழகர் முதலானோர். 'கேண்மையார் தம்மொடு கொண்ட கேண்மைவிடார். (அவரை) உலகுவிழையும் எனவும் பொருள் கோடல் தகும். இப்பொருளில் 'விடாஅர்' என்பது முற்று.

81.10 விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். (810)

உரைப்பகுதி :

அ) மணக் .: பழைய[1] நட்டோர்மாட்டுக் குணத்தினின்று நீங்காதார், விரும்பாதாராலும் விரும்பப்படுவார் எ-று.

இது பகைவரும் விரும்புவார் என்றது.

ஆ) பரிதி .: தாம் ஒன்றை விரும்பார் தம்மை எல்லாரும் விரும்பப்படுவார் : பழையாரை நட்புவிடாதார் குணம் எ-று.

இ) பரிப் .: விரும்பாதாராலும் விரும்பப்படுவார் : பழைய நட்டோர் மாட்டுக் குணத்தினின்று நீங்காதார் எ-று.

இது பகைவரும் விரும்புவர் என்றது.

ஈ) காளி .: விரும்பா மனத்தாராலும் விரும்பப்படுவர் : யார் எனின்? நட்பில் தமக்குப் பழையராய் உள்ளவர்மாட்டு மரபில் தலைப்பிரியா[2] மாட்சிமையோர் எ-று.

உ) பரிமேல் .: பழைய நட்டார் பிழைசெய்தாராயினும் அவர் மாட்டுத் தம் பண்பின் நீங்காதார், பகை வரானும் விரும்பபபடுவா.

தம் பண்பாவது செய்யாத முன்போல அன்புடையராதல், மூன்றனுருபும் சிறப்பும்மையும் விகாரத்தால் தொக்கன.[3] அத்திரிபின்மை[4] நோக்கிப் பகைவரும் நட்டாராவர் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் பழைமை அறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது.

---

1 பழையாரை — பழகிய நட்பினரை

2 தலைப்பிரியா — ஒருசொல். — பிரியாது என்று பொருள் தரும்.

3 பகைவராலும் என்பதிலுள்ள மூன்றாம் வேற்றுமை வுருபும் சிறப்பும்மையும் செய்யுள் விகாரத்தால் தொக்கன.

4 அத்திரிபின்மை — பிழை செய்த போதும் குணம் வேறுபடாமை,

ஊ) கவிராசர் .: பழைய சிநேகிதர் பிழையைப் பொறுத்து அவரிடத்திலே சிநேகம் விடாதாருடன் பகைவர்களும் சிநேகம் பண்ண நினைப்பர் எ—று.

ஏ) பழைய .: பழைய நட்டார் பிழை செய்தாராயினும் அவரிடத்துத் தம் பண்பு நீங்காதார் பகைவராலும் விரும்பப்படுவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் பண்பு, விழையார்; விழையப்படுப எனக்கூட்டிப்பொருள் காண்பர். இவருரை இவ்வதிகாரத்தியைந்த பொருளன்மை காண்க. பரிமேலழகர் கூறும் பொருள் 'கோளாரும் வேட்ப' 'ஒன்னார் விழையுஞ் சிறப்பு' என்பவற்றை எண்ணிக் கூறியதாம்.

## 81. பழைமை.

| | பழைமை | நட்பிற்கு | பழகிய | விழைதகையான் | பேதைமை | எல்லைக்கண் | அழிவந்த | கேளிழுக்கம் | கெடாஅ | விழையார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 2 | 4 | 3 | 7 | 8 | 6 | 5 | 9 | 10 |
| பரிதி. | 10 | 3 | 4 | 5 | 8 | 7 | 9 | 6 | 2 | 1 |
| பரிப். | 1 | 2 | 10 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 9 |
| காளி. | 9 | 2 | 7 | 4 | 8 | 10 | 5 | 6 | 3 | 1 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

81-வது அதிகாரம் 'பழைமை' முற்றிற்று.

# 82. தீ நட்பு

அ) மணக்.: தீ நட்பாவது தீயகுணத்தாரரகிய மாந்தரோடு நட்டதனால் வரும் குற்றங் கூறுதல்.

ஆ) பரிதி.: தீ நட்பாவது கூடினாலும் பொல்லாக்குணத்தார் நட்பு. அது விடவேண்டும்.

இ) பரிப்.: தீ நட்பு ஆவது தீய குணத்தர் ஆகிய மாந்தரோடு நட்டதனால் வரும் குற்றம் கூறுதல். மேல் நட்பு ஆராய்தல் கூறுகின்றுழி நட்கப்படாதாரைக் கூறி ஈண்டும் கூறுதல் ......... பிற எனில் அற்று அன்று : அதனுள் நட்கப்படாதாரைக்[1] கூறினார்; இதனுள் அவரால் பயன் இன்மை கூறினார் : ஆதலின் வேறு படுத்துக் கூறப்பட்டது என்க. மேல் நட்பினால் வரும் பயனும் அவரோடு ஒழுகும் திறனும் கூறினார். இது நட்பினால் வரும் பயன் கூறுகின்றது ; ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய நட்பு, நட்பாராய்தற்கண் சுருங்கச் சொல்லிய துணையான் அடங்காமையின் அதனை இருவகைப்படுத்து[2] இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் தீ நட்புக[3] கூறுகின்றார். அஃதாவது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு. குணத்தின் தீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற்றாய, அதுபின்

1. நட்கப்படாதார் — நட்புக்கொள்ளப்படாதார்
2. இருவகைப்படுத்து — தீ நட்பு, கூடா நட்பு என இரண்டாக்கி உடையானது தன்மையை உடைமைமேல் ஏற்றிய உபசார வழக்கு.
3. தீ நட்பு — தீயோர் நட்பு எனப் பொருள்படுவதலின் தீ என்னும் பண்புப் பெயர் பண்பையுடைய பொருளாகிய தீயோனைக் காட்டுதலால் பண்பாகுபெயர் ஆகவே தீ என்பதற்குத் தீயோன் என்பதே பொருள். அவனோடு கொள்ளும் நட்பு, தீ நட்பு ஆயிற்று.

அவரோடு செய்த நட்பின் மேற்றாயிற்று[4]. அதிகார முறைமை கூறாமையே விளங்கும்.

ஊ) கவிராசர் .: இனி, பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய் நட்பு, நட்பாராய்தற்கண் சுருங்கச் சொல்லிய துணையான் அடங்காமையின், அதனை இரண்டு வகைப்படுத்தி, முதற்கண் தீநட்புச் சொல்லுகிறார். தீநட்பாவது-பொல்லாத குணத்தாருடனே சிநேகம் பண்ணுகிறது.

ஏ) பழைய .: அஃதாவது, பொறுக்கப்படாத குற்றமுடைய பொல்லாதவரோடு நட்பு ஆகாதென்று கூறுதல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்.:

மணக்.: தீயகுணத்தினரோடு நட்டமையால் வருந்தீங்கு வரைபொருள் கொணரும் தீமை நட்பு 'தீநட்பு'—பண்புகள் நிலைமொழி வருமொழிகளாக நின்று பண்புத் தொகைபட அமைந்த சொற்றொடர்.

---

கோ.வ, குணத்தின் தீமை அதனையுடையவனை உணர்த்துதலால் பண்பாகு பெயர் பின் அத்தீக்குணம் உடையவருடன் செய்த நட்பினை யுணர்த்துதலால் இருமடியாகுபெயர் ஆம் என்பர்.

தீ என்னும் சொல் பண்பாகுபெயராய்த் தீயோனை உணர்த்தி அவனுடன் கொள்ளும் நட்பினை ஆறாம் வேற்றுமைத் தொகையாய் விசேடித்திருத்தலின் இரு மடியாமாறு இல்லை; பொருளாகுபெயர் ஆமாறும் இல்லை.

4. குணத்திற்கும் குணிக்கும் உள்ள இயைபு ஒற்றுமை நயம் பற்றிய உபசார வழக்கு அதாவது தீமை என்னும் குணம் அதனையுடைய பொருளைவிட்டுப் பிரியாததாய் இருத்தலின் நயம் பற்றிய உபசாரமாயிற்று. தீநட்பு என்புழி அது தீயோரது நட்புக்காதலின் இதுவும் உபசார வழக்கம்

இங்ஙனமன்றி குணத்தின் தீமை குணியையுணர்த்துதலான் பண்பாகுபெயர் பின் தீயோருடன் கொண்ட நட்பினை யுணர்த்துதலின் பொருளாகுபெயர், ஆகவே இது இருமடியாகு பெயர்என்லுமாம்.

அது பண்பாகு பெயராக நட்டாரைக் காட்டி, மீண்டும் பண்பாய் அவரோடு நட்டதால் விளைவும் தீமையைக் காட்டி, அவரறைக் கூறுதல் என தீமைகளைக் கூறும் அதிகாரம் என நூற்பகுப்பிறகுப் பெயராகிறது.

பரிதி 'கூடினாலும் தீயகுணத்தால் நட்பை விடவேண்டும்' என்று பொருள் கொள்வர். இது ஓராற்றான் கருத்தாகும். நேர் விளக்கமாகாது.

பரிப். மணக்குடவர் உரைக்கு விளக்கந் தருபவராகலின் முன் பின் உள்ள அதிகார முறைவைப்பில் நேரும் கூறியது கூறல் முதலிய குற்றங்களை விலக்கி அமைதிகாட்டுவர்.

பரிமேல். உரை பெரும்பான்மையும் மணக்குடவரை ஒட்டியதாயினும், பழகிய பழைமையாயினும் பொறுக்க இயலாத குற்றமுடைமையின் விடற்பாலது என்பதை விளக்குவது இவ்வதிகாரம் என்பர்.

கவிராசர் 'நட்பாராய்தலில் சுருங்கச் சொன்னது, ஆண்டடங்காமையின் ஈண்டும் இரண்டதிகாரத்தான் கூறுகிறார்' என அதிகார அமைதியும் கூறியது கூறலாகாமையும் காட்டுவார். பழைய உரை பரிமேலழகரின் நிழல் போல்வது. வரத. 'நட்பின் காரணமாகத் தீமை நிகழும்போது பழைமைபற்றிப் பிரிய முடியாது ஆதலால் கூடுவதற்குமுன் தீநட்பின் விளைவயறிய வேண்டும்' என்பர். வள்ளுவனார் உள்ளம் இதுவாயின் பெருங்கிழமை என்றுணரும் பழைமை நிலைத்தபின் கூடுவதற்குமுன் ஆய வேண்டுமெனின் 'கண்கெட்டபிறகு சூரிய வணக்கம்' செய்வது போலாம். நட்பாராய்ந்து வளர்ந்து முதிர்ந்த பழைமை தீ நட்பாயின் மீளவும் ஆய்தல் பிசைந்த மாவைப் பிசைவது போலாம். ஆதலான் இங்ஙனம் இயைபு காண்டல் இயையாததெனலாம்.

தேவநேயர். 'நட்பாராய்தலில் பேதையார் கேண்மை, அல்லற் கண்ணறுப்பார் கேண்மை, கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை முதலவாகச் சுருங்கச் சொன்ன ஆசிரியர் தீ நட்பைச் சிறப்பாகவும் விரிவாகவும், கூறப் பழைமையின் பின் வைத்தார்' என்பர். இவருரையமைதி 'பொறுக்கக் கூடிய பிழைசெய்தால் பழைமை பற்றிப் பொறுக்க; இல்லையேல் விடுக' என்ற கருத்தை வழங்குவதால் இவ்வுரை இயைபும் விளக்கமும் உடையது எனலாம்.

இராம. 'நட்பு நட்பாராய்தல் அதிகாரங்களாற் கூறப்பட்டவை பொதுவகையான் ஆராய்தலும் இலக்கணமும் ஈண்டு, தீநட்பென்று

உணர்ந்தபின் அதைதொடரக்கூடாது என்பதை வலியுறுத்துவது' என்பர். முன்னர் நட்புக்கொள்ளும் வகை கூறினார். ஈண்டு விலக்கு வனவற்றை விலக்கும் உபாயங் கூறுவர்.

இவ்வுரைகளுள் பரிப்பெருமாள் தரும் விளக்கமும் அதிகார இயைபும் ஏற்புடையன.

82.1. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது. (811)

உரைப்பகுதி :

அ) மணக் : கண்ணினால் பருகுவாரைப் போலத் தமக்கு அன்புடையராயிருப்பினும் குணமில்லாதார் நட்புப் பெருகுமதனினும் குறைதல் நன்று எ-று.

இது குணமில்லாதார் நட்புத் தீது என்றது.

ஆ) பரிதி .: புசிக்கிற அமிர்தம்போலே இதமானாலும்[1] பண்பிலார் உறவு பெருகுதலின் குறைவது நன்று எ-று.

இ) பரிப் .: கண்ணினால் பருகுவாரைப் போலத் தனக்கு அன்பு உடையராய் இருப்பினும் குணம் இல்லாதார் நட்புப் பெருகு மதனிலும் குறைதல் நன்று எ-று.

இது குணம் இல்லாதார் நட்புத் தீது என்றது.

ஈ) காளி : காணுந்தோறும் கண்ணினால் பருகிக் கொள்வார் போன்று இருப்பினும் நல்லொழுக்கம் இல்லாரது கேண்மை பெருகி வருதலின் தம் கருமம்[2] குறைபடுதல் சால இனிது எ-று.

உ) பரிமேல் .: காதன் மிகுதியால் பருகுவார் போன்றாராயினும் தீக்குணமுடையார் நட்பு, வளர்தலின் தேய்தல் நன்று.

"பருகு வன்ன அருகா நோக்கமொடு"[3] என்றார் பிறரும். நற்குணமில்லார்[4] எனவே, தீக்குணமுடையர் என்பது அருத்தாபத்யான்[5] வந்தது. பெருகினால் வருங்கேடு குன்றினால் வாராமையின், குன்றலினிது என்றார். இதனால் தீநட்பினது ஆகாமை பொது வகையான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையான் கூறுப.

---

1. இதமானாலும் - இனிமையானாலும் 2. கருமம் – செய்கை
3. பொருந., 78 4. 'பண்பிலார்' என்றும் பாடமுண்டு.
5. அருத்தாபத்தி - இங்ஙன மன்றாயின் இது கூடாது என்றுணர்வது, தீக்குண முடையார் அல்லராயின் பண்பிலராதல் கூடாது. பண்பிலராய் இருப்பதால் 'தீக்குணம் உடையார்' என்பது பெறப்பட்டது.

ஊ) கவிராசர்: வெகுவான சிநேகிதம் இருந்தாலும் பொல்லாத குணமுடையவர்களுடனே கொண்ட உறவு வளர்கிறதிலும் குறைந்துவிடுகிறதே நல்லது எ-று.

எ) பழைய.: காதல் மிகுதியாற் பருகுவார் போன்றார் ஆயினும் தீக்குணமுடையார் நட்பு வளர்தலின் தேய்தல் நன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பருகுவார் போலினும்' என்பதற்குச் செயப்படுபொருள் வருவித்து உரைப்பதில் ஆசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

'அமிர்தம்போல' பரிதி.; 'தோற்றத்தாலும் பேச்சாலும் தன்னை மயக்குக்கூடியவராய் இருந்தாலும்' வரத.; 'காதன் மிகுதியால் தன்னை விழுங்கிவிடுவார் போலத் தோன்றினும்' தேவநேயர்; இராம. 'கள் குடிப்பவருக்குக் கள் களிப்பை யுண்டாக்குவதுபோல' என்பர். கா. சு. 'அன்பினால் விழுங்குவார் போல இருந்தாலும்'; இவற்றுள் 'காதல் மிகுதியாற் கண்ணினாற் பருகுவார் போல்' என்ற உரை சிறந்தது.

'கேண்மை பெருகலிற் குன்றல் இனிது' என்றவர்கள் பழையஉரையாசிரியர்கள் அனைவரும் 'நாணுந்தோறும் கண்ணாற் பருகுவார் போல இருப்பினும்' என்பதில் ஏனையவற்றை விடப்பெருதலின் வினை முதலாகக் கேண்மையைக் கொள்ளுதல் சிறந்தது. கேண்மையின் முதிர்நிலை காதன்மை ஆதலால் அதனாற் பருகுவார் போல எனினும் இயைபுடையதேயாம். 'அமுதம்போல கள்ளைப் போல' என்றல் சிறப்பில. 'பருகுவார்' என்ற வினைக்குப் 'புசிப்பார்' எனல் சிறிதும் இயைபிலது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பருகுவார் போலினும் :

பருகு வன்ன காதல் - அகம்., 305 : 6 ; 399 : 4

பருகு காதலிற் பாடி ஆடினார் - சீவக., 1765

……… ……… உயிருக் கூற்றமாய்ப்
பருகின னென்கிலம் ……… ……… - கம்ப., 4008

82.2. உறின்நட் டறினொருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என். (812)

உரைப்பகுதி :

அ) மணக்.: செல்வம் மிக்க காலத்து நட்புக்கொண்டு, அஃது அற்ற காலத்து நீங்குகின்ற நிகரில்லாதார் நட்பைப் பெற்றதனால் வரும் நன்மை யாது? இழந்ததனால் வரும் தீமை யாது? எ-று.

மக்களுள் இவரோடு ஒத்த இழிவுடையார் இன்மையான் ஒப்பிலார் எனறார். இது காலபுருடர்[1] நட்புத் தீது என்றது.

ஆ) பரிதி.: பயன்கண்டால் உறவுசெய்து பயனில வந்தபோது உறவு விடுவார் நட்புப் பெற்றால் என்ன? பெறாவிடில் என்ன? எ-று.

இ) பரிப்.: செல்வம் மிக்ககாலத்து நட்டு அஃது அற்றகாலத்து நீங்குகின்ற நிகர் அல்லாதார் நட்பைப் பெற்ற அதனால் வரும் நன்மை யாது? இழந்த அதனால் வரும் தீமை யாது? எ-று.

மக்களுள் இவரோடு ஒத்த இழிவு உடையார் இன்மையான் ஒப்பு இல்லாதார் எ-று.

அன்றியும் தன்னோடு பொருத்தம் இல்லாதார் என்றும் ஆம். இது கால புருடர் நட்புத் தீது என்றது.

ஈ) காளி.: இங்ஙனம் தமக்கு உறுவது[2] பெறும் காலத்து மிகவும் நட்டு, தமக்கு உறுதி அறுமிடத்து[3] நீங்கும் இயல்பினராகிய இந்த ஒத்த நெறி இல்லாதார் கேண்மை பெறின் அதனால் வரும் இன்பம் யாது? இழப்பின் அதனால் வரும் சேதம்[4] யாது? மற்று ஒன்றும் இல்லை எ-று.

உ) பரிமேல் : தமக்குப் பயனுள்வழி நட்புச் செய்து அஃது இல்வழி ஒழியும் ஒப்பிலாரது[5] நட்பினை, பெற்றால் ஆக்கம்[6] யாது? இழந்தால் கேடு யாது? எ-று.

1 கால புருடர் – காலத்திற்கேற்றவாறு பழகுபவர்
2. உறுவது - தம்மை வந்தடையும் பொருள் முதலியன
3. அறுமிடத்து - நீங்குமிடத்து 4, சேதம்- அழிவு
5. ஒப்பிலார் - பயன்பெறும் காலத்தும் பயனில் காலத்தும் ஒப்ப ஒழுகாதார்
6. ஆக்கம் - செல்வம்,

தமக்குற்றன பார்ப்பார் பிறரோடு பொருத்தம் இலராகலின் அவரை 'ஒப்பிலார்' என்றார். அவர்மாட்டு நொதுமற்றன்மையே[7] அமையும் என்பதாம்.

ஊ) **கவிராசர்.:** தங்களுக்குப் பிரயோசனமான போது சிநேகம் பண்ணி, பிரயோசன மில்லாதபோது சிநேகம் விட்டுப்போகும் அறிவில்லாதாருடைய உறவைப் பெற்றதனால் என்ன பலன்? பெறாவிட்டால் என்ன பலன் இல்லாமற்போம்? எ-று.

எ) **பழைய.:** தமக்குப் பயனுள்ளவழி நட்புச் செய்தும், பயனில்லாவழி நட்பொழிந்தும், திரியும் ஒப்பில்லார் நட்பினைப் பெற்றால் அவரால் பெறுவது யாது, அவர் நட்பினை விட்டால் இழப்பது யாது?

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**'உறின் நட்டு'**

'செல்வமிக்க காலத்து நட்புக்கொண்டு' மணக்.; 'தனக்குத்துன்பம் வந்த காலத்து அதனை நீக்கிக்கொள்ள' மு.வ.; 'பயன் கண்டால் உறவு செய்து' பரிதி.; 'தமக்கு உறுவது பெறுங்காலத்து' காளி.: 'தமக்குப் பயன் உள் வழி' பரிமேல்., கவிராசர், சபாபதி, பழைய2. 'ஒரு நன்மை வேண்டும்போது நட்புக்கொண்டாடி' இராம., தேவநேயர், 'கையில் பொருள் உள்ளவரை நட்புச்செய்து' வரத.; இவற்றுள் 'செல்வமிக்க காலத்து நட்புக்கொண்டு' என்பதே சிறந்தது. இதனை அடியொற்றி எழுந்ததே வாக்குண்டாம் 17-ம் பாடல்.

**''ஒப்பிலார்''**

'நிகரில்லார்' மணக்.; 'ஒத்த நெறி நில்லார்' காளி.; 'பொருத்தமில்லாதார்' பரிமேல்., பழைய2; 'அறிவில்லாதார்' கவிராசர்; 'அறிவு கல்வி செல்வத்தால் தாழ்ந்தார்' மு. கோ.; 'தீயவர்' வ.சுப.மா.; 'நட்புக்குத்தகுதியற்றவர்' இராம.; 'உள்ளத்தாற் பொருந்தாதவர்' தேவநேயர்; 'இன்பத்துன்பங்களில் உடன் நில்லார்' வரத.; இவற்றுள் 'நட்புக்குத் தகுதியற்றவர்' 'உள்ளத்தாற் பொருந்தாதவர்' என்ற உரைகள் சிறந்தன. தந்நண்பன் செல்வக்காலத்தையும் வறுமைக்காலத்தையும் சமபுத்தி பண்ணாதவர்கள் எனினும் ஆம்,

7. நொதுமற்றன்மை - நட்பும் பகையுமின்றிப் பொதுமையிலிருக்கும் தன்மை

ஒ) ஒப்புமைப்பகுதி :

**உறின் நட்டறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை :**

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு - வாக்கு ,17

காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் - ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர் - நாலடி.,113

வேண்டுழி யினியன விளம்பி வெம்முனை
பூண்டுழி யஞ்சிவெஞ் செருவில் புக்குடன்
மாண்டொழி வின்றிநம் மருங்கு வந்தவன்
ஆண்டொழி லுலகினுக் காணி யாமன்றே - கம்ப.,6555

சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே புகுந்த போதிவன்
ஆர்க்குற வாகுவன் ... ... ... - கம்ப ,6555

புலையின் வாழ்க்கை யரக்கர் பொருப்புளார்
... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
நிலையி லேமென் றிலங்கை நெருங்கினார் - கம்ப.,6833

82.3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். (813)

உரைப்பகுதி:

அ) மணக்.: நட்டோர்க்கும் தமக்கும் வரும் நன்மை தீமைகளை ஒக்கப் பார்த்துத்[1] தமக்கு நன்மையாகுமதனைச் சீர்தூக்கும் நட்டோரும், பெற்றது கொள்ளும் கணிகையரும், கள்வரும் என்று கூறபபட்டவர்கள் தம்முள் ஒப்பார் எ—று.

ஆ) பரிதி.: பயன்கண்டு உறவு செய்வாரும், பரத்தையரும், கள்ளரும், நிகர் என்க. அது எப்படி என்றால் இம்மூவரும் பயன்கண்டால் உறவு கொள்வர்; பயனில்லாதபோது கைவிடுவார் எ—று.

இ) பரிப்.: நட்டோர்க்கும் தமக்கும் வரும் நன்மை தீமையை ஒக்கப் பார்த்துத தமக்கு நன்மை ஆகும் அதனைச் சீர்மை தூக்கும் ந டோரும், பெற்றது கொள்ளும் கணிகையரும், கள்வரும் மேற் கூறியவர்களோடு ஒப்பர் எ—று.

இம்மூவர் நட்பையும் ஆராயின் அவர்களும் தீமை தருவர் என்றது.

ஈ) காளி : தமக்கு உறுவது பார்த்து வந்து சார்ந்த நட்டாரும், பெறுவது கொள்ளும் பொது மகளிரும், பொருள் சோர்வு[1] பார்க்கும கள்வரும இம் மூவர்க்கும் வஞ்சனை தன்னில் ஒக்கும் எ—று.

உ) பரிமேல்.: நட்பளவு பாராது அதனால் வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும், கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரும், பிறர்கேடு நோக்காது அவர் சோர்வு நோககும் கள்வரும், தம்முள் ஒப்பர்.

நட்பு—ஆகுபெயர்[2]. பொருளையே குறித்து வஞ்சித்து ஒழுகலின் கணிகையர் கள்வர் என்றிவரோடு ஒப்பர் என்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் தமக்கு உறுவது பார்ப்பார் நட்பின் தீமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : சிநேகத்தை எண்ணமாற் பொருள் வருகிறதைப் பார்க்கிற சிநேகிதர்களும், கொடுப்பாரை எண்ணமாற் பொருளையே காரணமாக எண்ணுகிற வேசிகளும், பிறர் கெடுகிறதைப் பாராமல் அவர்கள் மறக்கப் பார்த்து அவர்கள் பொருளைத் திருடிக் கொள்ளுகிற கள்வரும் சரி எ—று.

எ) பழைய : தமக்கு நட்பினால் வரும் பயன் அளவு சீர்தூக்கிப் பார்க்கும் நட்பும், கொடுப்பாரைப் பாராது விலையைப் பார்க்கும் வேசியும், பிறரை வஞ்சித்துக் களவு செய்யுங் கள்வரும் மூவருந் தம்முள் ஒப்பர்.

நட்பு — ஆகுபெயர்[2]. பொருளையே குறித்து வஞ்சித்து ஒழுகலின் கணிகையர் கள்வர் என்றிவரோடு ஒப்பர் என்பதாயிற்று

---

1. சோர்வு — மறதி
2. நட்பு என்ற பண்புப்பெயர் நட்டாராகிய பண்பியின் மேல் நின்றதால் பண்பாகுபெயர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'உறுவது'

ஒருவனிடம் நட்புக் கொண்டதால் அவன் வாயிலாகப் பல்-லாற்றானும் அவனும் அறியாமல் தானே வந்து எய்தும் பொருள் மிகுதி.

'பெறுவது'

'அவன் சிற்றின்பத்தில் மயங்கி அவனே கொடுக்கப்பெறும் பொருள்' இவற்றிடை வேறுபாடு காண்க.

வரத. 'இம்மூவரும் உள்ளத்தாலன்றி உருவத்தாலும் ஒப்பர் என்பர். சுருங்க எண்ணின் உறுவது பெறுவார் - உடையவனுக்குத் தெரியாமலே ஊதியம் அடைவர். பெறுவார்-உடையவன் மயங்கிக் கொடுக்க பெறுபவர். கள்வர்-அடித்துப் பிடுங்குபவர். இம்மூவரும் பொருளைக் கவரும் நிலையில் ஒப்பாவர் என்பதாம்.

தேவநேயர் 'நண்பரின் நலத்தையும் அருமையையும் நோக்-காமல் தன்னலமே கருதும் நண்பரும் கொடுப்பவனை நோக்காமல் அவன் தரும் பொருள் அளவையே கருதும் பரத்தையும், பிறர் துன்பம் நோக்காது கேடு விளைத்துப் பணம் பறிக்கும் கள்வரும் ஒப்பாவர்' என ஏதுக்காட்டி விளக்குவர்.

இவ்விளக்கங்கள் ஒவ்வொருவகையிற் சிறந்தன.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**பெறுவது கொள்வர் :**

பெறுவது கொள்பவர் - நாலடி., 317

**முற்றும் :**

சாய உரைத்துக் கருமம் சிதையாதார்
தாயரோ டொவ்வாரோ தக்கார்க்கு - வாய்பணிந்து
உள்ளம் உருக உரைத்துப் பொருள்கொள்வார்
கள்ளரோ டொவ்வாரோ தாம். - அறநெறி., 98

கண்ணின் மணியேபோல் காதலால் நட்டாரும்
உண்ணும் துணையும் உளரா, பிறர் ஆவர்
எண்ணி உயிர்கொள்வான் ஏன்றுத் திரியினும்
உண்ணும் துணைக்காக்கும் கூற்று. - பழ.நா., 89

ஒ) மேற்கோள்பகுதி :

சிவஞான.: இதனுள் நேர் என்னும் முதனிலைத் தனிவினை முற்றாயிற்று என்பர். (நன்., 351)

82.4. அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. (814)

உரைப்பகுதி :

அ) மணக்.: தெருவின்கண் நெறிப்பட நடந்து அமரின்கண் நெறிப்படாமல் நடந்து ஏறினவன் வலிமையைக் கெடுக்கும் அறிவில்லாத குதிரையைப் போல்வார் தமராவதினும் ஒருவன் தனியனாதல் நன்று எ-று.

இது கயவர் நட்புத் தீமை பயக்கும் என்றது.

ஆ) பரிதி.: சமர்பூமியிலே[1] இராவுத்தன்[2] சேவகத்தைக் கெடுக்கிற திருந்தாக் குதிரையை[3] ஒத்தார் நட்பினும் தனிமை நல்லது எ-று,

இ) பரிப்.: தெருவின்கண் நெறிப்பட நடந்து அமரின்கண் ஏறினவன் வலியைக் கெடுக்கும் அறிவு இல்லாத குதிரையைப் போல்வார் தமர் ஆவதின் தனியன் ஆதல் நன்று எ-று.

தனிமை தீது என்பது முன்பே அமைந்து கிடந்தது. இந்நட்பின் கொடுமை யதுவும் நன்று ஆயிற்று. தீமைக்கு அளவு இன்மையின் இவ்வாறு கூறினார். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். இது கயவர் நட்புத் தீமை பயக்கும் என்றது.

ஈ) காளி : போர் செய்யும் இடத்து இடது சாரியும்,[4] வலது சாரியும்,[5] குறுக்கு அறுத்தலும்[6] நெடுகப் பாய்தலும்,[7] மற்றும் பலவும் கற்று அறியா மாவானது தன்னை நடாத்துவான் ஆற்றலை

---

1. சமர் பூமியிலே - போர்க்களம் 2. இராவுத்தன் - வீரன்
3. திருந்தாக் குதிரை - பாகன்படி நடவாத குதிரை
4. இடது சாரி - இடப்பக்கம் வளைந்து செல்லுதல்
5. வலது சாரி - வலப்பக்கம் வளைந்து செல்லுதல்
6. குறுக்கு அறுத்தல் - ஊடறுத்துச் செல்லுதல்
7. நெடுகப் பாய்தல் - நேராகப் பாய்ந்து செல்லுதல்

அறுக்குமாப் போல[8] அன்னர்[9] ஆகிய தமரின் தனிமையே மிகவும் தலை எ—று.

உ) பரிமேல் .: அமர் வாராத முன்னெல்லாம் தாங்குவது போன்று வந்துழிக் களத்திடை வீழ்த்துப்போம் கல்வியில்லாத புரவிபோல 'வாரது தமர்மையில்,[10] தனிமை சிறப்புடைத்து.

கல்லாமை கதி ஐந்தும்[11], சாரி பதினெட்டும்[12], பொருமுரணாற்றலும்[13] அறியாமை[14]. துன்பம் வாராதமுன்னெல்லாம் துணையாவார்போன்று, வந்துழி விட்டு நீங்குவர் என்பது உவமையால் பெற்றாம். அவர் தமரானால் வருமிறுதி தனியானால் வாராமையின், தனிமையைத் தலை என்றார் : எனவே, அதுவும் தீதாதல் பெறுதும்.

ஊ) கவிராசர் : பகைவர்சண்டை வாராதமுன்னேயெல்லாம் சிநேகமாய் இருந்து, சண்டையிலே போட்டுவிட்டு வருகிற குதிரையைப்போல, அறிவில்லாதவர்களுடைய சிநேகத்திலும் அவர் களைவிட்டு நீங்கித் தனியே இருக்கிறது மெத்த நல்லது எ-று.

எ) பழைய : முன் சுமந்துகொண்டு போய்ச் செருக்களங் கண்டவுடனே உதறி வீழ்த்தோடும் கல்வியில்லாப் புரவி போல்வசர் தமராதலில் தனியாதல் நன்று.

---

8. அறுக்குமாப்போல் - கெடுப்பதுபோல்
9. அன்னர் - அத்தகையர்
10. தமர் மையில் - தம்மைச் சேர்ந்தாரது தன்மை
11. கதி ஐந்து - விக்கிரம் வற்கிதம், உபகண்டம், ஜபம், மாஜபம் என்கிறது புறப்பொருள் வேண்பாமாலை. இதனை மல்ல கதி, மயூர கதி. வானர கதி, வல்லிய கதி, ரிஷப கதி என நிகண்டு கூறும்.
12. சாரி பதினெட்டு - 18 வகையான சுற்று வரவு. அதாவது வட்ட ஓட்டம் — வட்டமாக ஓடுதல்,
13. பொருமுரணாற்றல் – போர் செய்யும் வலிமை
14. ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும், கந்து மறமும் கறங்குளைமா; விக்கிதம் வற்கிதம், உபகண்டம், ஜவம், மாஜவம் என்னும் இப்பஞ்சதாரையயும் பதினெட்டு வகைப்பட்ட சுற்றுவர வினையும் கழியப் பாய்தலையும் கறுவுதலையும் ஒலிக்கும் தலையாட்டததினையும் உடைய குதிரை.

— பு பொ. வெ. மாலை, வென்றி,,13

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'ஆற்றறுத்தல்'

'வலிமையைக் கொடுக்கும்' மணக். பரிதி ; 'சேவுகம்- அதாவது வலிமையைப் பயன்படாமற் செய்தல்' என்பர். 'ஆற்றலையறுத்தல்' காளிங்கர்; 'ஒட்டமில்லாமற் போதல்' இராம ; 'கீழேதள்ளிய' வரத., தேவநேயர், கா.சு.; 'களத்திடை விழ்த்துய' பரிமேல்.; 'தள்ளிவிட்டு ஓடுதல்' சாமி. சிதம்.; 'வழிக்குத் துணையாக வந்தவன் நடுவழியிலே கழுத்தறுத்தது போல' என்ற முதுமொழிக் கருத்தை மனங்கொண்டு ஆகிரியர் சொல்லியிருந்த தல் 'வழியிலே தள்ளும்' என்ற உரை சிறந்தது.

ஒ ஒப்புமைப்பகுதி :

ஆற்றறுத்தல் :

எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக குதவலராய்ப் பைந்தொடீஇ
அச்சிடை இட்டுத் திரியின் அதுவன்றோ
மச்சேற்றி ஏணி களைவு — பழ நா.,291

பாப்புக் கொடியாற்குப் பால்மேனியான் போலத்
தாக்கி அமருள் தலைப்பெய்யார் — போக்கி
வழியராய் நட்டார்க்குமா தவம்செய் வாரே
கழுவிழாத தோளேற்று வார். — பழ.நா., 13

அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. — குறள்.,798

நாயகன் படநடந் தவனும் ..... ... ......... — கம்ப.,2297

அற்ற குளத்தறு நீர்ப்பற வைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்து
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டியு யுறுவார் உறவு — வாக்கு.,17

அமரகத்து ஆற்றறுத்தல் :

வேண்டுழி யினியன விளம்பி வெம்முனை
பூண்டுழி யஞ்சிவெஞ் செருவில் புக்குடன்
மாண்டொழி வின்றிநம் மருங்கு வந்தவன்
ஆண்டொழி லுலகினுக் காணி யாமன்றே. — கம்ப.,6543

சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே புகுந்த போதிவன்
ஆர்க்குற வாகுவன் ... ... ... — கம்ப.,6555

**82.5.** செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. (815)

உரைப்பகுதி :

அ) மணக் .: நட்புச் செய்து தனக்குப் பாதுகாவலாதல் இல்லாத புல்லியாரது[1] புல்லிய நடபைப் பெறுவதிலும், பெறாமை நன்று எ-று.

இது சிறியார் நட்புத் தீமைதரும் என்றது. சிறியார்-சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார்.

ஆ) பரிதி .: தமக்குத் துன்பமே செய்து நிலையற்ற குணத்தாரான பொல்லாதார் நட்பைப் பெறின் என்ன? பெறாவிடில் என்ன? எ-று.

இ) பரிப் .: நட்புச்செய்து தனக்குப் பாதுகாவல் ஆகாத புல்லியாரது புல்லிய நட்பைப் பெறுவதினும் பெறாமை நன்று எ-று.

இது சிறியார் நட்புத் தீமை பயக்கும் என்றது. சிறியராவார் சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார்.

ஈ) காளி .: பலநாளும் தமக்கு ஒருவர் பேருதவி செய்தவர்க்கும் தாம் சிறிதும் உறுதி சாராத[2] புல்லியர் ஆகிய நீசர்[3] நட்புப் பெறுதலின் பெறாமையே மிகவும் நன்று எ-று.

உ) பரிமேல் .: செய்து வைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது தீநட்பு, ஒருவர்க்கு[4] உண்டாதலின் இல்லையாதல் நன்று.

சிறப்பும்மை விகாரத்தால் ... தொக்கது[5] அரணாகாமை-தொலைவின்கண் விட்டுநீங்குதல். 'எய்தலின் எய்தாமை நன்று'[6] என்பதற்கு மேலுரைத்தாங்கு[7] உரைக்க, 'சாராத' என்னும் பெயரெச்சம் 'கேண்மை' என்னும் பெயர் கொண்டது ; சிறியவர் என்-

1 புல்லியார் — இழிந்தோர், கீழோரும் ஆம்.
2 உறுதி சாராத — கேடுவந்துழி உதவாத
3 நீசர் — கீழோர்
4 'ஒருவற்கு' என்றும் பாடமுண்டு
5 செய்தும் என்பதிலுள்ள சிறப்பும்மை செய்யும் விகாரத்தால் தொக்கது.
6 ஏமஞ்சாராச் சிறியவர் புன்கேண்மை ஒருவனுக்கு உண்டாதலால் வரும் அழிவு அவர் சிநேகியாது தனியாய் இருத்தலால் வாராமையால் சிறியவர் சிநேகம் இல்லாது இருத்தல் நன்று என்று கூறியவாறாம்.
7 மேல் — 814. ஆம் குறள்

பதனைக் கொள்ளின், செய்து என்பது நின்று வற்றும்[8]. இவை இரண்டு பாட்டானும் தொலைவில்[9] துணையாகாத நட்பின் தீமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: சிநேகிதரான துர்ச்சனருக்கு[10] உபசாரங்-களைச் செய்திருந்தும், துணையாகாதவர்களுடைய சிநேகம் உண்-டாகிறதிலும், இல்லாமற் போகிறது நல்லது.

எ) பழைய: நட்புச் செய்து வைத்தாலும் தமக்கு அரணாகாத கீழ்மக்கள் நட்பு ஒருவற்கு உண்டாதலின் இல்லையாதல் நன்று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதியார் உரையமைதி ''செய்தேமஞ் சாரார் சிறியவர் கேண்மை, எய்தலென் எய்தாமை எல்'' என்றுபாடங்கொண்டிருத்தல் கூடுமோ என்று எண்ணத்தோன்றுகிறது. அவருரையோடு இணைத்து எண்ணித் துணிக.

'செய்து'

'நட்புச் செய்து' மணக்.; 'தமக்குத் துன்பமே செய்து' பரிதி ; 'நெடுநாட்களாகத் தமக்கு உதவி செய்தவர்க்கும்' காளி.; 'செய்து வைத்தாலும்' பரிமேல்.; 'உபகாரங்களைச் செய்திருந்தும்' கவிராசர்.; 'நட்புச் செய்து வைத்தாலும்' பழைய 2 ; 'பாதுகாப்புத தரும் என்று செய்து வைத்தாலும்' தேவநேயர் ; எல்லாச்சிறப்புக்களையும் பெருமைகளையும் செய்-தாலும்' வரத.; 'நட்புச் செய்து வைப்பினும்' குழந்தை, சபாபதி; 'நன்மைசெய்தாலும்' சாமி.சிதம்.; 'உதவிகளைச் செய்து நன்மை-யினை அடையமுடியாத சி. இ.; 'பாதுகாப்பாகக் கருதி நட்பு செய்து வைத்தாலும்' கா. சு,

இந்த ஒருவினை எச்சத்திற்கு உம்மை விரித்து எழுதிய உரைகளே சிறந்தன. 'செய்து வைத்தாலும், 'நன்மை செய்தாலும்' என மயங்க வைக்கும் உரைகளைப் போலாது 'நட்புச் செய்து வைத்தும்', 'பாதுகாப்பாகும் என்று செய்துவைத்தும்' என்ற உரைகள் சிறந்தன.

---

8 நின்று வற்றும் — இருந்தும் பயனின்றிப்போம்

9 தொலைவில் — அழிவு வந்தவிடத்து 10 துர்ச்சனர் — தியர்

'ஏமஞ்சாராக்கேண்மை' 'ஏமஞ்சாராச்சிறியவர்' ஏமஞ்சாராச்சிறியவர் புன்கேண்மை' என மூன்றுவகையாக இயைத்துப் பொருள் கூறுவதைக் காணலாம், இதனாலேயே பரிமேலழகர் 'ஏமஞ்சாராச்சிறியவர்' எனக் கொள்ளின் 'செய்த' என்பது பொருளற்றதாகிவிடும் என எழுத நேர்ந்தது. வரத. 'நண்பன் செய்த உதவிகளைப் பெற்று அதன் பயனை யவன் அடைந்தான் என்ற மன அமைதியாவது சிறப்புச் செய்தவனுக்கு உண்டாக வேண்டும அதனையும் எய்தா' என்பர்.

இவற்றுள் 'செய்தும் ஏமஞ்சாராக் கேண்மை சிறியவர் புன்கேண்மை' எனத் தனித்தனி கூட்டிப் பொருள் காணும் பரிமேலழகர் உரையே சிறந்தது.

82.6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். (816)

உரைப்பகுதி :

அ) மணக் .: அறிவில்லதார் மிகவும் கொழுமிய நட்பாகுமதனினும் அறிவுடையார் பகைமை கோடி மடங்கு மிக்க நன்மையை உண்டாக்கும் எ—று.

இது பேதையார் நட்புத் தீமை பயக்கும் என்றது.

ஆ) பரிதி .: பேதையார் நட்பினும் அறிவுடையார் பகை இனிது எ—று.

இ) பரிப் .: அறிவு இல்லாதான் ஒருவன் வந்து பெருங்கெழுமுதல்[1] செய்து நட்பைச் செலுத்துவதிலும் அறிவுடையார் பகைமை கோடி உறும் எ—று.

இது பேதையார் நட்புத் தீமை பயக்கும் என்றது.

ஈ) காளி .: அறிவிலாதான் ஒருவன் வந்து பெருங்கெழுமுதல் செய்து நட்பைச் செலுத்துவதிலும் அறிவுடையார் பகைமை கோடி உறும்.[2]

உ) பரிமேல் .: அறிவிலானது மிகச் செறிந்த நட்பின், அறிவுடையானது பகைமை கோடி மடங்கு நன்று.

1. பெருங் கெழுமுதல் — மிகத் தழுவிக் கோடல்
2. கோடி உறும் — நூறுலட்சம் கொண்ட பேரெண். மிகப் பலவாய எண்ணிற்கு ஒன்று கூறுவதாம்.

கெழீஇய என்பதன் இறுதிநிலை விகாரத்தல் தொக்கது.[3] பன்மை உயர்த்தற்கண் வந்தது.[4] அறிவுடையான் பகைமை ஒரு தீங்கும பயவாமையானும், பேதை நட்பு எல்லாதீங்கும் பயத்தலாலும் 'கோடியுறும்' என்றார். பெருங் கழி நட்பு என்று பாடம் ஒதுவாரும உளர்.[5]

ஊ) கவிராசர் .: அறிவில்லாதவனுடைய நெருங்கிய சிநேகத்தினும் அறிவுள்ளவனுடைய பகை கோடியத்தனை நல்லது எ—று.

எ) பழைய .: அறிவில்லாதாநடன் பெரிதாகக் கலந்த நட்பினும் அறிவுடையார் பகை எண், கோடி மடங்கு நன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்குப் பழைய உரையாசிரியர் அனைவரும் 'பேதையாருடைய கெழுமிய நட்பினும் அறிவுடையார் பகைமை கோடி மடங்கு நல்லது' என்று 'ஏதின்மை—பகைமை' எனவே பொருள்காண்பர். 20ம் நூற்றாண்டு உரையாசிரியர்களும் அங்ஙனமே. இதனால் 'பெரியோர் பகைமை கோடிப் பங்கு நல்லது' என்னும் முடிபு கிடைக்கிறது. இது கருத்தாயின் ''நல்லார் தொடர்கைவிடல், பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே'' என்பதனோடு முரணும். ஆகலான் 'ஏதின்மை' என்ற சொல் சோதனைக்குள்ளாகிறது. ஏதின்மை—பகை, நட்பு. சுற்றம் யாதுமின்மை. அதாவது நொதுமலாயிருக்கும் அயன்மை'. இக்குறளில் வரும் நட்பிற்குப் 'பகைமை' எதிர்சொல்லாதல் ஏற்புடையதே. ஆனால் நட்பு முதலிய மூன்றன் பண்பும் அமையாமை ஏதின்மையாகிய அயன்மை. பரிமேலழகரே நடுவுநிலை அதிகார வரைவிலக்கணம் வகுக்கும் போது ''அஃதாவது பகை-நட்பு-நொதுமல் என்னும் மூன்று பகுதியினும்'' என ஏதின்மைக்கு இலக்கணம் கூறுவர். எதின்மைக்கு நொதுமல் என மறுபெயரும் உண்டு. 'ஏது' என்பது வினாவடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். உம் விகாரத்தால் தொக்கது. ஏதும் இன்மை ஏதின்மையாகிறது. நட்போ—பகையோ — சுற்றமோ ஆகாத அயன்மையார் எனவே

3. கெழீஇய என்ற இறந்தகாலப் பெயரெச்ச விகுதி செய்யும் விகாரத்தால் தொக்கு 'கெழீஇய நட்பின்' எனலாயிற்று.
4. பேதை என்பதற்கேற்ப அறிவுடையான் என ஒருமை வாய்ப்பாட்டால் கூற வேண்டியவர் அறிவுடையார் என்றார் தகுதியால் உயர்த்தற் பொருட்டு ஆம்.
5. இவ்வாறு உரைப்பர் யார் எனத் தெரிந்திலது.

பொருந்தும் எனலாம். ஆனால் 'யாதுந்தொடர்பில்லாதவர்' என்ற பொருளில் 188, 190 முதலான ஆறிடங்களிலும், 'அன்பில்லாதவர்' என ஈரிடத்தும், பகைமைப் பொருளில் 816, 862 ஆகிய இரண்டிடத்தும் விளங்குவதாகப் பரிமேலழகர் உரையால் உணருவோம். பகைமைப்பொருள் காணும் இரண்டிடத்தின் இயல்பும் நயமுங் காணலும் இருவர் மாறுகோள் ஒருதலை துணிதலும் இன்றியமையாதன ஆம். அறிவுடையார் ஏதின்மை பகைமை யென்ற பொருளை நேரே தருவதாகாது அயன்மையையே அறிவிக்கும். ஆசிரியர் ஆண்டும் 'பகைகொளல்' என்னாது 'தொடர் கைவிடல்' என்றது நுணுகி-யாய்ந்து இன்புறுதற்குரியது. தொடர் - துணையாகக் கொள்ளும் தொடர்பு. இதுகைவிடப்படின் பகைமையாகத்தான் ஆகவேண்டும் என்ற யாப்புறவின்று. அன்றியும் நல்லார், தொடர்கைவிடப்படின் பகையாகார். பகையாவரேல் நல்லார் எனப்படார். ஆதலால் தொடர் கைவிடப்பட்ட நல்லார் நொதுமலராதலே இயல்பு, இங்ஙனம் நயஞ்சிறக்க அளந்து கூறும் வள்ளுவர் உள்ளத்தை நோக்குக.

அங்ஙனமே "காதலரில்வழியும் உள்வழியும் வந்த மாலைக் காலம், என்பிலதற்கும் என்புள்ளதற்கும் பொதுநிலையிற் காயும் வெயில் போல நிறபது." நோதலும் தணிதலும் அவ்வவ் உயிரியல்பு. இக்குறளில் ஒரே உயிர்க்கு அதாவது தலைவிக்குச் சூழல்நோக்கி இருவேறு தன்மைத்தாயிற்று. இவன் (அனுபவநிலை) நுகர்நிலை மாறிய தேயன்றி, அது நட்பாகவும் இல்லை பகையாக மாறவும் இல்லை. ஆகவே ஈண்டும் அயன்மையாகிய பொதுமை நோக்கிலேயே ஏதிலார் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. 'கொலைக்களதது ஏதிலார் போல வரும்' என இடஞ்சுட்டியதன நோக்கம், உயிரிரக்கங் காட்டியுதவல் அனைவர்க்கும் பொது; அதுவும் செய்திலது; தீமையே செய்தது என்ற நயங் கருதி.

பிரசங்க நூல்களிலும் இடநோக்கியருகிப் பகைப்பொருளிலும் பெரும்பான்மையாக அயன்மை பொருளிலும் வருகின்றன இது போன்று ஆயின் பகைப்பொருளன்மையையும் வேறுபொருண்மையிற் காணல் கூடும். ஆதலால் வள்ளுவர் முன்னொடுபின் மலைவுபெற முரணாகக் கூறார் என்பதும் நோக்குக.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றுமை :

இசைந்த சிறுமை யியல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம் — அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறி வினார்கண்
பகையேயும் பாடு பெறும். — நாலடி., 187

இழிந்த மாக்களொடு இன்பம் ஆர்தலின்
உயர்ந்த மக்களொடு உறுபகை இனிது. — பெருங்., 4:21-22

82.7. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். (817)

உரைப்பகுதி :

அ) மணக் .: நகையின் பகுதியார்[1] செய்த நட்பினும், பகை-வராலே பத்துக்கோடி மடங்கு நன்மை மிகும் எ-று.

நகைவகையர்-காமுகர், வேழம்பர் முதலாயினர். இஃது இவர்கள் நட்புத் தீது என்றது.

ஆ) பரிதி .: தம்மில் குற்றத்தைத் தமக்கு வேண்டாதாரிடத்திலே தூற்றுபவர்[2] உறவின் பத்துக்கோடி பகை அழகு எ-று.

இ) பரிப் .: நகையின் பகுதியார் செய்த நட்பினும் பகைவராலே பத்துக் கோடி மடங்கு நன்மை மிகும் எ—று.

நகை வகையார் நட்பு ஆகிய அதனினும் பகைவர் ஆதல் நன்மை பயக்கும் என்று பொருள் உரைக்கினும் அமையும், நகை வகையார்-காமுகரும்வேழம்பரும் முதலாயினார் : இவர்கள் நட்புத் தீது என்றது. பின் கூடா நட்புக் கூறுவர் ஆதலின் இவர்களும் அதற்குரியர் என்பதற்கு ஈண்டுரைத்ததென்க.

1. நகையின் பகுதியார் — எப்போதும் நகைத்தலையே தொழிலாக் கொண்டவர்
2 தூற்றுபவர் — புறங்கூறுவார்

ஈ) காளி .: இவர் நகையர் ஆகி நட்டு ஒழுகலின் இவர் மாட்டு ஓர் அயிர்ப்பு[3] இல்லை : அதனால் பலகோடி படைவரினும் அவை புறத்தின் நின்று வருவன ஆகலான் அதனிடை ஓர் உபாயம் சிந்தித்து உய்யவும் கூடும். மற்று இவர் கூட நின்றே குடி முழுதும் கெடுப்பர் என்பது பொருள் எ-று.

உ) பரிமேல் : தாம் அறிதல் வகையராகாது[4] நகுதல் வகை யராதற்கு ஏதுவாகிய நட்பான் வருவனவற்றின், பகைவரான் வருவன பத்துக்கோடி மடங்கு நல்ல.

நட்பு ஆகுபெயர்[5]. அந்நட்பாவது விடமரும்[6] தூர்த்தரும்[7] வேழம்பரும்[8] போன்று பலவகையான் நகுவித்துத்[9] தாம் பயன் கொண்டொழிவாரோடு உளதாயது. பகைவரால் என்பது அவாய்-நிற்றலின், வருவன என்பது வருவிக்கப்பட்டது[10] பத்தடுத்தகோடி-பத்தாகத்தொகுத்த கோடி[11] அந்நட்பான் வரும் இன்பங்களின் அப்பகைவரான் வரும் துன்பங்கள் இறப்ப நல்ல என்பதாம். இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்தார்[12]

ஊ) கவிராசர் .: தாம் அறியத்தக்கவராகாது முகவிச்சையாய்[13] நகைக்கிறவர்களுடைய சிநேகத்தினாலே வருகிற பலத்தினும், பகை-வரால் வருவன பத்துக்கோடி மடங்கு நல்லவை எ-று.

எ) பழைய .: நகைவகைக்கு ஏதுவானவர் நட்பின் வருங்கேடு, பகைவர் செய்யுங் கேட்டிலும் பத்துக்கோடி மடங்கு வரும்.

---

3. அயிர்ப்பு — ஐயம்
4. அறிதல் வகையராகாது — அறிதற்குக் காரணமாகாமல் அறிதல் வகையராதலாவது அறிவுடையராதல்
5. நட்பால் ஆவனவற்றை நட்பு என்றமையின் நட்பு கருவியாகுபெயர்
6. விடமர் — காமுகர் 7. தூர்த்தர் — வஞ்சகர்
8. வேழம்பர் — களைக்கூத்தாடிகள் 9. நகுவித்து — சிரிக்கச் செய்து
10. பகைவரால் என மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லுக்கு வருவன என்பதை அவாவி நிற்றலின் அது வருவிக்கப் பெற்றது
11. பத்தாகத் தொகுத்த கோடி — பத்துக் கோடி
12. காளிங்கர் இவ்வாறு உரைப்பர்
13. முகவிச்சையாய் — முகத்தைக் கண்டு விரும்பக்கூடிய தாய்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் உரை 'நகைவகையர்-நகையின் வகையாராகிய காமுகர் வேழம்பர்' என்பதிலிருந்து பொழுது போக்கிற்கும் களிப்-பிற்குமாக நகைப்பார் கூட்டத்தைக் கருதுகிறது. அங்ஙனமே பரிமேலழகருரையும். அவரை ஒட்டி எழுந்த பின்னுரைகளும் கருதுகின்றன. இவை "நகுதற்பொருட்டன்று நட்டல்" என்ற ஆசிரிய வசனத்தை எண்ணி எழுந்த உரைகள். பரிதியுரை 'புறனழீஇப் பொய்த்து நகை' என்ற ஆசிரிய வசனத்தை எண்ணி எழுந்த உரை. ஆயினும் ஈண்டு இயைபுடையதன்று. பரிப்-பெருமாள் வேறுரை 'நகைவகையராகி நட்பாயிருப்பதிலும் அவர்கள் பகை வகையராதல் நன்மை பயக்கும். நீதீச்சுடும் என்று அஞ்சி விலகி நடத்தல்போல இவர்களை யஞ்சி ஒழுகலாம் ஆகலின்' என்ற கருத்தமையக் கூறும். பரிமேலழகர் உரை நட்புக் கோடல், அறிதற்கேயன்றி நகுதற்கன்று' என்ற உறுதிபயத்தலான் மணக்குடவரை ஒத்து எழுந்தது. மேலும் பரிமேலழகர் 'நகைவகையார் நட்பின் பகைவரால் உறும் பத்தடுத்த கோடி (நல்ல), என முடித்து 'நட்பான் வரும் இன்பத்திலும் பகைவரான் வரும் துன்பம் நல்ல' என்பர். முன்னைய உரைகளை மறுக்குமுகத்-தான் 'பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்-தார்' என்பர். இதற்கு விளக்கந் தாராமையின், பிறர் யார்யார்? அவருரைத்தன யாவை? அவற்றில் காணத்தகும் சொல்லிலக்கணக்-குறைகள் யாவை? அனைத்தையும் இவருரை எங்ஙனம் நீக்குவதாக அமைகின்றது என்பதனைக் குறித்தல் பின்வருவார் கடமைகளுள் ஒன்றாகிறது. விளக்கவுரை தெளிவுரை எழுதினார் பலரும் சொற் பொருள் கூறி வாளாவிடுத்தனர். வை. மு. கோ. சிறியதோர் துடுப்புத் தந்து ஐயக்கடலை நீந்த உதவினர் அதனை நோக்குவோம்:

நட்பின்-நட்பென்னும் காரணப்பெயர், அதனான் வருவன-வற்றைக் காட்டும் எனக் கொண்டு, அங்ஙனம் வருவன நகுங்-காலைக்கு உண்டாகும் அப்போதைய இன்பம் என்றும், பகைவரான் உறும் பத்தடுத்த கோடி துன்பங்கள் என்றும் அவ்வின்பத்தைவிட இத்துன்பம் நல்ல என ஒருசொல் வருவித்து முடிப்பர் பரிமேலழகர்

இப்பகுதிக்கு பிறர் உரைப்பது 'நகைவகையவரின் நட்பினை விடப் பகைவராற் பத்துக்கோடி நன்மை நேரும் என்பது' என்பர் வை மு.கோ. ஆனால், இது யாருடைய கருத்து என்று கூறிற்றிலர்.

மணக், 'நகைவகையர் நட்பினும் பகைவராய் பத்துக்கோடி நன்மை மிகும்' எனின் உறழ்ச்சி நட்புக்கும் நன்மைக்கும் ஆக உள்ளது. நகைவகையாரின் நட்பால் விளைவது தீமையே யன்றி நன்மையன்று; ஆதலால் இத்தீமையினும் பகைவரால் விளையும் தீமைபெரிதன்று என்ற கருத்துப் பெறப்படுதலின், 'அப்பொருளாகும் உறழ் துணைப்பொருளே' (தொல். சொல். கிளவி. 16) என்ற மரபின் வண்ணம் தீமைக்குத் தீமை உறழ்பொருளாக வந்து, சொல்லிலக்கணத்தோடு மாறுகொள்ளாமை பெறப்படும். மணக்-குடவரோ, 'நட்பினும்' என்பதற்கு 'நட்பான் வருநன்மையினும் என ஆகுபெயர்ப்பொருள் கொள்ளாது நட்பினும்நன்மைமிகும் என வாளா விடுத்தனர். அதனாற் சொல்லிக்கணத் தொடு மாறு-கொண்டதாயிற்று. பரிமேலழகரோ 'நட்பின் வருவன வற்றின் பகைவரான் வருவன பத்துக்கோடி மடங்கு நல்ல என வருவன தீமையே. அத்தீமையே இத்தீமையை விடப் பத்துக்கோடி மடங்கு நல்ல, என இலக்கணத்தோடு மாறுகொள்ளாது உரைப்பர். அங்ஙனமே பரிதி. 'உறவு — பகையழகு' என்பதும், பரிப்-பெருமாள் 'நகை வகையர் நட்பாதலினும் பகையாதல் நல்லது' என நகையும் பகையும் ஒருவர் தொழிலாகவே கருதச்செய்தலும், பரிதி. ஈண்டு இயைபில்லாத புறங்கூறலைப் பகுத்துதலும், சொல்லிக்கணத்தொடு மாறுகொளல் ஆதலை அறிந்தளந்து காட்டிய பரிமேலழகர் உரைக்குறிப்பும் உளங்கொளற்குரியதாகும்.

வரத. நட்பின் — நட்பினரைக் காட்டிலும் எனப் பண்பின்பெயர் உடையார் மேனின்றதாக்கி 'நட்பினரைக் காட்டிலும் பகைவர் பல கோடிமடங்கு நல்லவர்' என்றார். இதுவும் கருத்துப் பொருளாய் இலக்கணத்தொடு இயைக்க அவர் பட்ட அல்லலைக் காட்டுகிறது. இராம. 'நகைவகையர் - இகழ்ச்சிக்குரிய இனத்தவர்' எனப்புதுப் பொருள் காண்பர். 'ஏற்கனவே நிந்தனைக்கு ஆளாகி இகழப்பட்டு நிற்பவர்' என விளக்கமும் தருவர்.

பொதுவாக உரையாசிரியர்களில் 'நட்பான் வருவனவற்றின் பகைவரான் வருவன பத்துக்கோடி மடங்கு நல்ல' என நன்மை நல்ல : தீமைநல்ல என விதக்காது கூறிய பரிமேலழகர் தவிர மணக்குடவர் முதலியோர் உரைகளிற் சில 'தீமையினும் நன்மைமிகும் உறவின் பகையழகு' என்றாற்போல்வன உறழ்ச்சிக்

கண் கொல்லிமலையினும் பிறம்புமலை பெரிது என அப்பொருளையே கட்டாமல், நன்மையினும் தீமை நன்று என அதற்கு எதிரான பொருளைக் காட்டுதல் இயையுமாறறிக.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

வன்பாட்ட டவர்பகை கொளினும் மேலாயார்
புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே
கண்பாட்ட பூங்காவிக் கானலந் தண்சேர்ப்ப
வெண்பாட்டம் வெள்ளம் தரும். —பழ.நா., 71.

வழவழத்த உறவைப்பார்க்கிலும், வைரம் பற்றியபகைநன்று —பழ.,
வாயிலே உறவு மனதில் பகை. —பழ.,

82.8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். (818)

உரைப்பகுதி :

அ) மணக்.: தம்மால் இயலும் கருமத்தை முடியாது வருத்துமவர்[1] நட்பை, நட்பென்று சொல்லுவதும் செய்யாராய் வீழவிடுக[2] எ-று.

ஆ) பரிதி.: தனக்கு வேண்டின காரியத்தை முடியாமல் விக்கினம் பண்ணுவான் உறவை நழுவவிடுக எ-று.

இ) பரிப்.: தம்மால் இயலும் கருமத்தை முடியாது வருத்துமவர் நட்பை நட்பு என்று சொல்லுவதும் செய்யாராய் வீழவிடுக எ-று.

இஃது அழுக்காறு உடையார் நட்புத் தீது என்றது.

ஈ) காளி.: தமக்கு இயலும் கருமத்தையும் இயற்றாது கெடுப்பவர்[3] கேண்மையை நாவினாலும் உரையாடாராய்க் கழிய விடுக எ-று.

---

1. வருத்துமவர் - துன்பப்படுத்துபவர் 2. வீழவிடுக-நழுவவிடுக
3. 'கெடுபவர்' என்பது பாடம். 'உடற்றுபவர்' பிறவினை வாய்பாட்டுச் சொற்குப் பிறவினைப் பொருளே ஏற்புடைமை கண்டு இப்பாடம் கொள்ளப்பட்டது,

உடற்றுபவர் என்பது கெடுப்பவர் என்றது.

உ) பரிமேல்.: தம்மால் முடியும் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு[4] கொண்ட நட்பினை, அதுகண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக.

முடியாதாக்குதல்-முடியாதாக நடித்தல். சோரவிடல் விடுகின்றவாறு தோன்றாமல் ஒருகாலைக்கொருகால் ஓயவிடுதல்[5]. அறியச் சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப்[6] பின்னும் நட்பாய் ஒழுகக் கருதுவாராகலின், 'சொல்லாடார்' என்றும், 'சோரவிடல்' என்றும் கூறினார். இவை மூன்று பாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வது செய்யாதார் என்று இவர்கள் நட்பின்தீமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தம்மாலே முடியும் காரியத்தை முடியாதென்று சொல்லி ஆலஸ்யம்[7] பண்ணுகிறவர்களுடைய சிநேகத்தை, அவர்கள் அறியாமலேயே, விட்டுவிட வேண்டும் எ-று.

எ) பழைய: தம்மால் முடியுங் கருமத்தை முடியாதாகச் செய்வார் நட்பினை அவரைக் கண்டாற் சொல்லாதே சோர விடுக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒல்லும் கருமம்' என்பதற்குத் 'தமக்கு வேண்டின காரியத்தை' என உரைகாணும் பரிதியார் உரை ஏற்றதன்று. 'ஒல்லும்' என்ற சொல், ஆசிரியரால் முற்றும், எச்சமும் ஆகப் பலபொருளில் ஆளப்படுகின்றது. அவற்றுள் 'இயலும்' 'முடிந்தவரை' என்னும் பொருளனவே சிறப்புடையன. அதனை இச்சொல் ஆளப்பெற்றுள்ள பதினோரிடங்களிலும் ஆய்ந்து முடிவு காண்க.

'உடற்றுபவர்'

'முடியாது வருந்துபவர்' மணக்.; 'முடியாமல் விக்கினம் பண்ணுவான்' பரிதி.; 'இயற்றாமல் கெடுப்பவர்' காளி. 'முடிவதனையும் முடியாதாக்கிச் செய்யாதார்' பரிமேல்.; பழைய 2: 'முடியாதென்று சொல்லி ஆலஸ்யம் பண்ணுபவர்' கவிராசர்; 'தடைப்படுத்திக் கொண்டிருப்பவர்' வரத.; 'ஆகாதாக்கிக் கொடுப்பவர்' தேவநேயர்; 'முடியாதாக்கி நடிப்பவர்' குழந்தை; சபா

4. 'முடியாதாகக் செய்தாரோடு' என்றும் பாடமுண்டு. 6. பரிகரித்து - நீக்கி
5. ஓய விடுதல் - ஒழிய விடுதல் 7. ஆலஸ்யம் - அலட்சியம்

பதி; 'கொடுக்கின்றவர்' சாமி. சிதம்.; 'தன்னால் முடிவதனைச் செய்யாமையும்,' 'நண்பனால் முடிவதனைக் கெடுத்தலும்' என இருவகையானும் பொருள் காண்பர் மு.கோ.; 'கெட்ட எண்ணத்-தால் கெடுப்பவர்களல்லர்; தெரியாமல் பேசியும் செய்தும் சினந்தும் கெடுப்பவர்கள்' என்பர் இராம.; இவற்றுள் ஏதுக்கள் பலவாயினும் கெடுப்பவர் என்ற வகையில் அனைவரும் ஒத்த கருத்தினர்.

'சொல்லாடார்'

'நட்பென்று சொல்வதும் செய்யாது' மணக்.; 'நாவானும் உரையாடமல்' காளி.; 'அவரறியச் சொல்லாமல் அவரைக் கண்டாற் சொல்லாமல்' பழைய; அவரிடம் இது பற்றி ஒன்றும் சொல்லாமல்' வரத.; 'அவருக்கு ஒன்றும் சொல்லாமலே' தேவநேயர்; இவற்றுள் மணக்குடவர் உரை ஏனையவற்றை நோக்க அத்துணைச் சிறப்பினதன்று. பரிமேலழகர் சோரவிடு-தற்குக் கூறும் விளக்கம் சாலச்சிறந்தது.

ஓ) ஒப்புமைப்பகுதி :

ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை :

மூர்க்கரோடு இணங்கேல். - ஆத்தி., 93

கெடுவது செய்யின் விடுவது கருமம். - கொன்றை., 27

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூரவிடல். - நாலடி., 75

82.9. கனவினும் இன்னாது மன்னோ வினை வேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. (819)

உரைப்பகுதி :

அ) மணக் .: செய்யுந்தொழில் வேறாக, சொல்லுங்கூற்று வேறாக ஒழுகுவாரது நட்பு, பயன்படும் நனவின்கண்ணேயன்றிக் கனவின் கண்ணும் இன்னாது எ—று.

இது பொய் கூறுவார் நட்புத் தீது என்றது.

ஆ) பரிதி .: கனவினும் ஆகாது நினைப்பதொன்று செய்வதொன்று ஆனார் நட்பு எ—று.

இ) பரிப் .: பயன்படும் நனவின்கண்ணே அன்றிக் கனவின் கண்ணும் இன்னாது ஆம், செய்யும் தொழில் வேறு ஆகச் சொல்லும் கூற்று வேறு ஆக ஒழுகுவாரது நட்பு எ—று.

இது பொய் கூறுவார் நட்புத் தீது என்றது

ஈ) காளி .: நனவின்கணன்றியே கனவின்கண்ணும் இன்னாதது; எது எனின் தொழில் ஒன்றாய்ச் சொல் ஒன்றாய் வேறுபட்டு இருப்பர் நட்பு எ-று.

உ) பரிமேல் .: வினையும் சொல்லும் ஒவ்வாது வேறுவேறாய் இருப்பார் நட்பு நனவின் கண்ணே யன்றிக் கனவின்கண்ணும் இன்னாது.

வினை சொற்களது ஒவ்வாமை முதல்மேல் ஏற்றப்பட்டது.[1] அஃதாவது[2] வினையில் பகைவராய்ச் சொல்லில் நட்டாராயிருத்தல் நிகழ்வின்கண் உளதாயிருத்தலால் 'கனவினும் இன்னாது' என்றார்.[3] உம்மை எச்சவும்மை; இழிவு சிறப்பும்மையும் ஆம் மன்னும் ஓவும் அசைநிலை.

ஊ) கவிராசர் .: சொல்லுகிறதும் செய்கிறதும் ஒவ்வாமல் வேறாக இருக்கிறவர்களுடைய சிநேகம், நினைவிலேயல்லாமல், னவிலேயும் ஆகாது (எ—று)

எ) பழைய .: செய்யுங்காரியம் வேறு சொல்லுஞ் சொல் வேறு -பட்டார் நட்பு நனவின் கண்ணன்றிக் கனவின் கண்ணும் காணலாகாது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. 'நினைப்பின் வழியது வினையாதலின் வினைவேறு' என்பது கொண்டு 'நினைப்பதொன்று' என்றும், சொல்லின் வழியது செயலாதலின் 'சொல்வேறுபட்டார்' என்பதற்குச் 'செய்வதொன்று'

---

1. வினையும் சொல்லுமாகிய இவை தம்முள் ஒவ்வாதிருத்தலை தீநட்பினராகிய முதற் பொருளின்மேல் ஏற்றி 'வினைவேறு சொல்வேறு பட்டார்' எனப்பட்டது,
2. கனவிலும் அவர் தொடர்பு துன்பந்தருவது என்பதாம். கனவு — உறக்கநிலை,
3. கனவிலும் என்றபோது வேறுபட்டாரது இழிவை காட்டுதலால் இழிவு சிறப்பும்மையாம் கனவின் இழிவைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பும்மை என்பாருமுளர், இழிவும் உயர்வும் கனவுகளுக்கு இல்லை என்பதறிக.

என்றும் உரை கூறினர் போலும். ஆயினும் நேரிய பொருளாகாமை நினைத்தற்குரியது. வரத. 'கனவினும் இன்னாது' 'கனவில் நினைத்த மாத்திரத்திலும் கூடக் கொடுமையானது' என்பர். கனவு அந்தக் கரணங்களால் காணப்படுவதன்றி நினைக்கப் படுவதன்மை காண்க, அந்தக்கரணங்களாற் காண்டல் நினைத்தலேயாம் எனின், கனவு உருவாய்க் காட்சிக்கே புலனாதலின் 'நினைத்தல்' என்ற உரை நினைத்தற்குரியதே என்க.

இவற்றுள் 'கனவின் கண்ணும் துன்பந்தருவதாகும்' என்ற உரை சிறப்புத் தருவது ஆகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**வினைவேறு சொல் வேறுபட்டார் !**

யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் துணைமை உடையவர் — சாரல்
கனமணி நின்றிமைக்கும் நாடகேள் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு. —நாலடி., 127

மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும் — அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளும் ஒன்றே
கனமொனறு மேலவர்தம் கண், —நீதி., 7.5

நட்பிடைக் குய்யம்வைத்து எய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் — திட்பமா
நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து. —நீதிநெறி., 57

நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும். —கொன்றை, 48

82.10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. (820)

உரைப்பகுதி :

அ) மணக் .: மனையின்கண் நட்டோராயிருந்து, மன்றின்கண்[1] குற்றம் கூறுவாரது நட்பை, சிறிதும் செறிதலைத்[2] தவிர்க்க எ-று.

இது புறங்கூறுவார் நட்புத் தீது என்றது.

1. மன்றின்கண் – அவையின்கண்
2 செறிதல் - நெருங்கிப் பழகுதலை

ஆ) பரிதி.: அகத்திலே உவந்திருந்து[3] இரண்டற்றிருந்து[4] ஒருவர் குற்றம்செய்தால் அந்தக் குற்றத்தை மன்றிலே தூற்றுவான்[5] உறவு என்றென்றும் ஆகாது எ-று.

இ) பரிப்.: சிறிதும் செறிதலைத் தவிர்க: மனையின் கண் நட்டோராய் இருந்து மன்றின்கண் குற்றம் கூறுவாரது நட்பைத் தவிர்க எ-று.

இது குற்றம் கூறுவார் நட்புத் தீது என்றது.

ஈ) காளி.: எவ்வாற்றானும் சென்று அடைதலைப் பரிகரிக்க[6]; யாதினை எனின்? மனையிடத்துக் கெழுமி வைத்து[7] மன்றின்கண் சென்றே பழித்து உரைப்பாரது நட்பினை எ-று.

உ) பரிமேல்.: தனியே மனைக்கண் இருந்துழி நட்பாடிப் பல-ரோடு மன்றின்கண் இருந்துழிப் பழிகூறுவார் நட்பு, சிறிதாயினும் தம்மை நணுகுதலைப்[8] பரிகரிக்க.

மனைக்கண் கெழுமலும் மன்றின்கண் பழித்தலும் தீதாகலின் அவர் ஒருகாலும் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு[9] காக்க என்பார், அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினார்[10]. இவை இரண்டு பாட்டானும் வஞ்சகர்நட்பின் தீமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : தான் தனியே வீட்டிலே இருக்கிறபோது உறவாடி, பிறகு சபையிலே இருக்கிறபோது தன்னை இகழ்ந்து பேசிப் பழிக்கிறவர்களுடைய சிநேகம் சற்றும் பண்ணாமல் பரிகரித்து விட வேண்டும் எ-று.

எ) பழைய.: மனையின் வந்து பழகிப் பலருங் கூடிய மன்றிற் பழிப்பார் தொடர்பினைச் சிறிதாயினும் கொள்ளாது பரிகரித்து விடுக

---

3. உவந்திருந்து - கூடிக்குலாவி
4. இரண்டற்றிருந்து - இரண்டு பேராயல்லாமல் ஒன்றாயிருந்து
5. தூற்றுவான் - பழிகளைப் பலரறியச் சொல்லுவான்
6. பரிசுரிக்க - நீக்குக.
7. கெழுமி வைத்து - நட்புக்கொண்டு
8. நணுகுதல் - நெருங்குதல்
9. குறிக்கொண்டு – இலக்காக்கி
10. அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினார்-வஞ்சகரது சிநேகத்தின்மேல் குறுகுதலை வைத்து தொடர்பு குறுகுதல் ஒம்புக என்றார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்குக் கருத்துமாற்றம் சிறிதும் இல்லை. 'எனைத்தும் குறுகுதல் ஓம்புக' என்ற எச்சரிக்கை 'அவர்கள் பலவாற்றான் குறுக முயல்வார், அவற்றையறிந்து பரிகசித்தல் அருமை' என்பதனை விளக்குவதாம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

காதல ரேனும் விடுவிலை மாதர் கள்வரின் தமக்குறல் குறிப்போர்
பேதையர் கெடுதி யுற்றுழி உதவார் பெரும்பொருள் நகுவித்துப்
பறிப்பார்
ஆதரு கருமம் தம்மினா காத தாகவே நடப்பவர் உளமும்
ஓதலும் ஒவ்வார் மனைக்கெழீஇ மன்றி னுறப்பழிப் பார்இவர்
தமையே

- விநா. அரசி., 128

## 82. தீநட்பு

| | பருகுவார் | உறின்நட்டு | உறுவது | அமரகத்து | செய்தேமம் | பேதை | நகைவகைய | ஒல்லும் | கனவினும் | எனைத்தும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 4 | 9 | 10 | 1 | 2 | 3 | 5 | 6 | 8 | 7 |
| பரிதி. | 1 | 6 | 7 | 2 | 9 | 10 | 8 | 5 | 3 | 4 |
| பரிப். | 4 | 9 | 8 | 1 | 2 | 4 | 10 | 5 | 7 | 6 |
| காளி. | 1 | 5 | 6 | 4 | 7 | 10 | 2 | 8 | 3 | 9 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

82-வது அதிகாரம் 'தீ நட்பு' முற்றிற்று.

# 83. கூடாநட்பு

அ) மணக் .: கூடாநட்பாவது சுற்றத்தாராயினும் பிறராயினும் மனத்தினால் நள்ளாது[1] நட்டாரைப்போல ஒழுகுவாரது இயல்பும் அவர் மாட்டு ஒழுகுந்திறமும் கூறுதல். தமக்கு இனம்[2] அன்றிக் கருமம் காரணமாக நட்பாரும், பகைவராய் நட்பாரும் என அவ்-விருவகையாரையும் தீநட்புப் போலக் கடியவேண்டுமாதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி .: கூடாநட்பாவது புரையறக்[3] கூடியும் பிரிவான் எ-று,

இ) பரிப் .: கூடா நட்பு ஆவது சுற்றத்தார் ஆயினும் பிறர் ஆயினும் மனத்தினால் நள்ளாது நட்டாரைப் போல ஒழுகுவார் இயல்பும் அவர் மாட்டு ஒழுகும் திறனும் கூறுதல். அவர் தாம் இருவகையர் : தமக்கு இனம் அன்றிக் கருமம் காரணம் ஆக நட்பாரும், பகைவராய் நட்பாரும் என : அவ்விரு வகையராலேயும் தீய நட்புப்போலக் கடிய வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: இனி, ஏனைக் கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தால் கூடாதிருந்தே[4] தமக்கு வாய்க்குமிடம்[5] பெறுந் துணையும் புறத்தால் கூடி யொழுகுவார் நட்பு.

---

1. நள்ளாது - நட்புக்கொள்ளாமல்　　2. இனம் - உறவு
3. புரையற - குற்றமற
4. அகத்தால் கூடாதிருந்தே - மனத்தால் நட்புக்கொள்ளாமல்
5. வாய்க்குமிடம் - ஏற்ற காலம்

ஊ) கவிராசர் : அஃதாவது-மனத்திலே பகைவைத்துக்கொண்டு அந்தப் பகையைச் சாதிக்கப் பக்குவம் வரும் அளவும் பொய்யுறவு[6] பண்ணிக்கொண்டு இருக்கிறது என்பது.

எ) பழைய : அஃதாவது, பகையால் 'அக நட்பு கூடாமல் முக நட்புப் பாவித்துச் சதி செய்தற்குக் கூடியநட்பென்று பெயர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் 'கருமங் காரணமாக நட்பாரையும், பகையாயிருந்து இப்போது நட்பாவாரையும் கூடாநட்பு' என்பர். பரிதி 'பிளவுபடாமற் கூடியிருந்தும் பிரிபவன் எனக் கூடாத நட்பு கூடாநட்பு' என்பர். பரிமேல். 'பகை காரணமாக இதுவரை கூடாமலிருந்து, தமக்கு வாய்ப்புக் கிட்டும் வரை வெளியில் நட்டார் போலப் பழகி மனத்தில் நட்புக் கொள்ளார்' என்பர். கவிராசர், பழைய உரை இரண்டும் அங்ஙனமே.

இராமலிங்கனார் 'கூடாநட்பு - கூடவே கூடா நட்பு' எனப் பொருள் கண்டு, 'தீநட்புக்கும் கூடா நட்புக்கும்' வேறுபாடு தோன்ற விளக்கமுந்தருவர். 'தீயகுணம் உடையவர்கள் நமக்குத் தீமை செய்வதற்காகவே நட்புக் கொள்பவர்கள் அல்லர். அவர்களால் தீமைநேரலாம் என்பது உலக அனுபவம். அவர்களை நாமாகவே நீக்கிவிடுவது நலம் என்பதை அறிவித்தது தீநட்பு. இது, தீமை செய்வதற்கென்றே நட்புப் போல் பாசாங்கு செய்து காலம் பார்த்திருந்து கவிழ்ப்பவர்கள். இவர்களுடன் சில நாட்கள் கூட மனங்கலந்து பழகி ஏமாறக்கூடாது என்பதைச் சொல்வது இவ்வதிகாரம்' என வேறுபாடு காட்டுவர். இது சிந்தித்து அறிதற்குரிய அருமையான வேறுபாடு. வரத. 'எண்ணத்திற் பகையும், தோற்றத்தில் நட்பும் உடையவர் கூடா நட்பினர். அவர் நட்பை விடுக என்கிறது இவ்வதிகாரம்' என்பர். தேவநேயர் பரிமேலழகரை ஒத்து உரைப்பர். 'மனத்தொடு பழகாமல், காலம் பார்த்திருப்பவர் நட்பு, என்பர் மு.ரா.அரு., குழந்தை. 'சேரக் கூடாத பொருத்தமற்ற நட்பு' சாமி-சிதம்.; 'அகத்துட் கூடாது புறத்தில்மாத்திரம் காட்டும் நட்பு' கா.சு.

---

6. பொய்யுறவு - பொய்யாக நட்புக்கொண்டு

பரிமேல். அகத்தாற் கூடாமல் வாய்ப்பு வரும்வரையில் புறத்தார் கூடி ஒழுகுவார் நட்பு எனப்பொருள் காண்கின்றார். இது 'கூடார் நட்பு' என்று அதிகாரத்தலைப்பு இருக்குமாயின் பொருந்துவதாம். 'கூடா' என்னும் ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் நட்பினையே விசேடித்தலின் இவ்விளக்கம் சிந்தனைக்குரியதாகிறது.

இவற்றுள் தீநட்பு, நட்பாராய்தல், கூடாநட்பு, பழைமை முதலாயின கருத்தால் விராய பகுதிகள்; அவற்றின் வேறுபாடு நன்கு சிந்தித்து வரையறுத்தற்குரியன.

83. 1. சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. (821)

உரைப்பகுதி :

அ) மணக். : 'தீர்விடம்' பாடம்.

முடியுமிடங்காணின், மற்றொருவன் எறிதற்குப் பட்டடையாம்[1]; மனத்தினால் ஒவ்வாது புறத்து வேறுமிகச் செய்து ஒத்தார் போல ஒழுகுவாரது நட்பு எ—று.

இது கருமங்காரணமாக நட்டாரோடு கூடும் திறம் கூறிற்று. பட்டடை யாவது தான் தாங்குவதுபோல நின்று வெட்டுவார்க்கு உதவி செய்வது.

ஆ) பரிதி. : ஒருவனை நட்புக்கொண்டு அவன் உள்பாடெல்லாம் அறிந்து இவனுக்கு ஒரு குற்றம் வந்தால் அந்தக் குற்றமே முன்னாக எண்ணுவான் அது என்போல எனின்? பட்டடையும் கரும்பும் போல் தறிப்பர்[2] எ—று

இ) பரிப். : முடியும் இடம் காணில் மற்று ஒருவன் எறிதற்குப் பட்டடையும் மனத்தினால் நேராது புறம் ஒத்தார் போல ஒழுகுவாரது நட்பு எ—று.

---

1. பட்டடை-அடிக்கல்; கொல்லர் உலைக்களத்துப் பழுத்த இரும்பைத் தட்டி நீட்ட கிடக்கும் எனக்கு கல். 2. தறிப்பார் – வெட்டுவர்

பட்டடையாவது தான் தாங்குவது போல நின்று வெட்டு வார்க்கு உதவி செய்வது. இது கூடா நட்பினால் வரும் குற்றம் கூறிற்று.

ஈ) காளி.: தமக்கு ஏறத்[3] திருந்தின இடம்[4] காணின் அவரைத் தாம் கொல்லுதற்குப் பட்டடை யாது எனின்? தமது அகதது ஒவ்வாராய்ப் புறத்து ஒருவரோடு ஒத்தார் போன்று உள்ளவார் நட்பு எ-று.

உ) பரிமேல்.: கூடாதிருந்தே தமக்குவாய்க்குமிடம் பெறுந்—துணையும் கூடியொழுகுவார் நட்பு, அது பெற்றால், அற எறிதற்குத் துணையாய பட்டடையாம்.

எறியுமெல்லை வாராமுனெல்லாம் தாங்குவது போன்று இருந்து வந்துழி[5] அறஎறிவிப்பதாய[6] பட்டடைக்கும் அத்தன்மைத் தாய நட்பிற்கும் தொழிலொப்புமை உண்மையான், அதுபற்றி அந் நட்பினைப் பட்டடையாக உபசரித்தார்.[7] 'தீர்விடம்' என்று பாடம் ஓதி 'முடிவிடம்' என்று உரைப்பாரும் உளர்.[8]

காளி.: எறிதற்குப் பட்டடை-எறிவதற்குத் துணையாய பட்டடை. ''ஆரம்பரந்து''[9] என்னும் கோவையாருள் 'சீரம்பரம்-சீர்த்தவம்பரம்' என இறந்தகால வினைத்தொகையானது போல, ஈண்டும் சீரிடம் வாய்த்தவிடம். பரிபாட்டுள் ''புகர்வரிவண்டு''[10] புகர்த்த வரிவண்டு அமர்க்கட்டு[11] என்பனவும் அன்ன.

ஊ) கவிராசர்: மனத்திலே உறவில்லாமற் பகையாய், வெளி-யிலே உறவாயிருக்கிறவர்களுடைய சிநேகம், ஒன்றை வைத்து ஒன்றாலே வெட்டி நறுக்குவதற்கிடமான பட்டடையோடு ஒக்கும் எ-று.

ஏ) பழைய.: நட்புக் கூடாதிருந்தே தமக்கு வாய்க்கும் இடம் கூடுமளவும் நட்புக் கூடினவர் போல ஒழுகுவார் நட்பு, சம்மட்டி எடுத்து அடித்தற்குப் பட்டடைக்குறடாம்.

---

3. ஏற - வென்று முன்னேற 4. திருந்தின இடம் - வாய்த்த இடம்
5. வந்துழி — வெட்டுங்காலம் வந்தவிடத்து
6. அற எறிவிப்பதாய — துண்டு செய்வதாகிய
7. தாங்குவது போன்றிருந்து அறஎறிவிப்பதாய தொழில் ஒப்புமை பற்றி நட்பினைப் பட்டடையாக உபசரித்தார்.
8. மணக்குடவர் உரைப்பார் இவ்வாறு. 9. திருக்கோவை.,182
10. பரிபாடல் 22:39 11. குறள். 1083

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் பாடம் 'தீர்விடங்காணின்' என்பது. 'பொருள் முடியுமிடங்காணின்' என்பது. இதனையும் பரிமேலழகர் வேறுரையாக் கொண்டனர் மறுக்காமையால் என்க. மணக். உரையமைதி 'நிரந்தவர் நட்பு' இவர்கட்குள் தீர்விடங்காணின், மற்றொருவன் எறிதற்குபட்டடையாம்' என்பது. இதனால் 'இவர்கள் நட்பின் முடிவு மற்றவன வெல்லுதற்குத் துணையாகிறது என்பதாம். இவ்வுரை அயலான் வெற்றிக்கு ஏதுவாதலைக் கூறிற்றாம். பரிதி. 'அவன் உள்பாடெல்லாம் அறிந்து, அவனுக்கு ஒரு குற்றம் வந்தால்' என்பர். இது சொற்பொருள் அன்று, ஒருவகைக் கருத்துப் பொருள். காளி. 'தமக்கு ஏறத்திருந்தின இடம் காணின்' என்பர். இதன்கருத்து 'தமக்கு முன்னேறுதற்குரிய அல்லது நண்பனை வெல்லற்குரிய இடம்' என்பது போலும். பரிமேல். 'தமக்கு வாய்க்குமிடம் 'என்பர். இதன் விளக்கமாக நுண்பொருள்மாலையுடையார் தருவது, சீர் அம்பரம்-சீர்த்த அம்பரம் என இறந்த காலவினைத்தொகையானது போலச் சீரிடம்-சீர்த்த இடம் அதாவது வாய்ப்பான இடம் என்பது.

கவிராசர் உரையில் இப்பகுதிக்கு நேரியபொருளில்லை. பழைய 2 தமக்கு வாய்க்கும் இடம். இவ்வுரைகள் யாவும் சீர் + இடம் வாய்ப்பான இடம் என்றே கருதுவன. சீர்-சிறப்பு ; அதாவது தமக்கு வெற்றித்தரும் காலம், நண்பன் தோற்குங்காலம் என்றே கருதுகின்றன எனலாம்: பிற்கால உரைகளும் இங்ஙனமே கருதுகின்றன,

'நேரா நிரந்தவர்-நேராது நிரந்தவர் என ஈறுகெட்ட எதிர்மறை வினைஎச்சத் தொடராகவே பொருள் காண்பர் அனைவரும்.

எறிதற்குப் பட்டடை :

பரிதியாள் கரும்பை எறிதற்கு(வெட்டுதற்கு) அடியில் வைக்கும் பலகையைக் கருதுகிறார். ஏனையோர் உரைகள் சம்மட்டியால் அடித்தற்கு உதவும் கொல்லன் உலைக்களத்திலுள்ள இரும்பால் அல்லது உறுதியான கருங்கல்லாலான பட்டடைக் கல்லைக் கருதுகிறது. 'பட்டறை என்பது இன்று வழக்கில் 'பட்டரை' என வழங்குகிறது. பட்டு + அடை-பட்டு அடைவது. பட்டு+அறை—பட அடிக்கப்படுவது என யாண்டும் காரணப் பெயாரதல் காண்க.

'பட்டடையும் இரும்பும்போல' என்ற பாடம் 'கரும்பும்போல' எனப் படிக்கப்பட்டதால் நேர்ந்த பிழையுமாகலாம். இங்ஙனம் ஏடு படிப்பதால் பிழைநேருதலை ஏடுவாசிப்பார் அனைவரும் ஒப்புவர்.

83.2. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல் வேறு படும். (822)

அ) மணக் .: நட்டோர்போன்று மனத்தினான் நட்பில்லாதார் நட்பு பெண் மனம்போல வேறுபடும்; ஆதலால், அவருள்ளக் கருத்து அறிந்து கொள்க, எ-று.

இது நட்பாபொழுகு வாரது உள்ளக்கருத்தறிய வேண்டும் என்றது.

ஆ) பரிதி .: இனம் போல கூடியிருக்கையிலே மனம்பகையாயி-னார் உறவு இருமனப்பெண்டிர்போலும் எ-று.

இ) பரிப் : நட்டோர் போன்று மனத்தினான் நட்பு இல்லா-தார் நடபுப் பெண் மனம் போல வேறுபடும் ஆகலான் அவர் உள்ளக்கருத்து அறிந்து கொள்க எ-று,

இது நட்பாய் ஒழுகுவாரது உள்ளக் கருத்து அறிய வேண்டும் என்றது.

ஈ) காளி .: புறத்து ஒருவரோடு ஒத்தார் போன்று இருந்து அகத்து அவ்விடம் இல்லாதார் நடிக்கும் நடிப்பு மகளிர் தமது உள்ளம் போல் இ ம காணின் வேறுபட்டு விடும் எ-று.

பொதுமகளிர் என்னாது மகளிர் எனப்பொதுவகையால் கூறியது குலமகளிரும் குணம் கெடுதல் கூடும் என்பது குறிப்பு என்று அறிக.

உ) பரிமேல் : தமக்கு உற்றார்போன்று உறாதாரோடு உள-தாய நட்பு, இடப்பெற்றால் பெண்பாலார் மனம்போல வேறு-படும்.

அவர் மனம் வேறுபடுதல் 'பெண்மனம் பேதின் றொருப்-படுப்பே னென்னும், எண்ணில் ஒருவன்'[1] என்பதனானும் அறிக. நட்பு வேறுபடுதலாவது பழையபகையேயாதல். இவை இரண்டு பாட்டானும் கூடாநட்பினது குற்றம் கூறப்பட்டது,

ஊ) கவிராசர் : தனக்கு உற்றார்போல விருந்து மனத்திலே உறவில்லாதாருடைய சிநேகம், ஸ்திரீசனங்களின் மனதுபோல, தமக்கான இடம் பெற்றால் வேறுபடும் (எ-று).

ஏ) பழைய 2 : தமக்கு உற்றார் போன்று உற்றாரல்லாதார் நட்பு அவர்க்கு வாய்க்குமிடம் பெற்றால் சோரக் கணவனோடு கூடிய மகளிர் மனம் போல வேறுபடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்கு மகளிர் மனப்போல என்பதற்குத் பொது

1 வளையாபதி., 49

மையிற் பொருள் கொண்டவர்கள் மணக்., காளி, பரி-மேலழகர், கவிராசர், பழைய உரையாசிரியர் அனை-வரும், இருமனப் பெண்டிர் மனம்[2] என விதந்து கூறியவர் பரிதியார். 'மகளிர்[3] என்றதாற் குலமகளிர்க்கு இக்குற்றம் ஏற்குமாறு காட்டியவர் காளிங்கரும் பரிமேலழகரும்.

இராம. இனம் போன்று இனமல்லார் கேண்மை இனம் போன்று இனமல்லராகிய மகளிர் மனம்போல வேறு-படும் எனப்பொருட்குச் சொன்ன அடையை உவமத்திற்கும் கூட்டி 'மகளிர் விலைமகளிர்' என வரைசெய்வர். இதற்கு இயைய நண்பனைப் போல அன்புகாட்டி நடிக்கும் பகைவன் மனம், மனைவியைப்போல அன்புகாட்டி நடிக்கும் வேசியின் மனம்போன்றது என விளக்கமும் காட்டுவர்,

மூ. ரா. அரு. மகளிரின் பொதுமனநிலையையே கூறுவ-தாகக் கொண்டு, ''எண்ணிப் பத்தங்கையிட்டால் இந்திரன் மருளும் ஆங்கே, வெண்ணெய்க் குன்றெரியுற்றாற்போல் மெலிந்துபின் நிற்குமன்றே'' என்ற சிந்தாமணிப் பாடலைக் காட்டி நிறுவுவர்.

ஆயினும், இராமலிங்கனார் கருதுவது போலக்-கொண்டு கூட்டி இருமனப் பெண்டிர் மனம்போல என்றலே பொருந்துவதாகும். பிற நெஞ்சிற்பேணிப் புணர்பவர் என்னும் ஆசிரிய வசனம் துணைக்கொண்டு, பொருளையே நாடி, அது தீர்ந்தால் புறக்கணிக்கும் பொதுமகளின் மனம்போல வேறு படும் என்ற குழந்தையுரை நயமானது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**இனம்போன்று இனமல்லார் கேண்மை :**

உள்ளத்தான் நள்ளா துறுதித்தொழிலாய்க்
கள்ளத்தால் நட்டார் கழிகேண்மை .........
............ . ..............................
மனத்துக்கண் மாசாய் விடும். — நாலடி 1.8

அட்டாலும் பால்சுவையில் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும், – வாக்கு.,4

இனமாம் என்றுரைப் பினுமே தமெணான்
முனமா கியபான் மைமுளைத் தெழலால்
புனமா மலர்வேய் நறும்பூங் குழலாள்
மனமா நெறியோ டியமன் னவனே —சீவக-215

**மகளிர் மனம்போல மாறுபடற்கு:**

பள்ள முதுநீர்ப் பழகினும் மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறூஉம்
கள்ளவிழ் கோதையர் காம னோடாயினும்
உள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணீ. —வளையா.,8

தளிப்பெயற் றண்டுளி தாமரையின் மேல்
வளிப்பெற மாத்திரை நின்றற் றொருவன்
அளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லாற்
றுளக்கிலர் நில்லார் துணைவளைக் கையார் —வளையா.,11

நெண்ணீர் பரந்து திசைதொறும் போய்க் கெட்ட
எண்ணெய் கொண் டீட்டற் கிவறுதலென் னொக்கும்
பெண்மனம் பேதித் தொருப்படுப்பென் என்னும்
எண்ணி லொருவன் இயல் பெண்ணுமாறே. —வளை.,49

பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃதுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போவர் தம் மக்களும் ஓட்டார். —வளையா ,65

பெண்ணுயிர் அளியதாமே பெருந்திறலறிவும் பேராத்
திண்மையும் உடைய வலல. —யசோ.,47

வெளஎமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமு மொருவழி யோட நின்றவன் —கம்ப.,173

மெய்வரு யோக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் படுதலுங் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவும் கண்டார் —கம்ப.,579

குருடை நிலையெனத் தோய்ந்துந் தாய்கிலோ
வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
............ ............ ............ ............
பாரிடை மிதிக்கில பரியின் பந்தியே —கம்ப.,834

வருமுலை விலைக்கென மதித்தனர் வழங்குந்
தெரிவையர் மனமெனக் கறங்கெனத் திரிந்தான். —கம்ப.,846

......... ......... அறிதற்கு ஒவ்வா
நன்னுதல் மகளிர் சிந்தை ...... —கம்ப.,2872

மன்றலங் கோதை மாதர் மனமெனப் போயிற் றம்மா —கம்ப.,3407

83.3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது. (823)

உரைப்பகுதி :

அ) மணக். : நல்லவாகிய பல நூல்களைக் கற்றவிடத்தும், மனம் நல்லாராகுதல் மாட்சிமையில்லார்க்கு அரிது எ-று.

இது கல்வியால் அறிதல் அரிது என்றது.

ஆ) பரிதி. : பலநூல் கற்றாலும் மனம் திருந்தி நற்குணம் உண்டாதல் மாணார்க்கு அரிது எ-று.

இ) பரிப் : நல்ல ஆகிய பல நூல்களைக் கற்ற இடத்தும் மன்ன நல்லர் ஆகுதல் மாட்சிமை இல்லாதார்கது அரிது எ-று.

மனம் நன்மையாவது செம்மை; அஃது இவ்விடத்து இன்மையால் மன நன்மை இல்லாதார் ஆயினார். இது கல்வியான் அறிதல் அரிது என்றது.

ஈ) காளி : நல்ல நூல்கள் பலவற்றையும் பழுதறக் கற்ற இடத்தும், அக்கல்விச் சிறப்பால் தன் நெஞ்சு இனியர் ஆகுதல் உள்தூய்மை இல்லாதார்க்கு அரிது எ-று.

உ) பரிமேல் : நல்லன பலநூல்களைக் கற்றவிடத்தும், அதனான் மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க்கு இல்லை.

நல்லன மனக்குற்றம்[1] கெடுப்பன. மனம்நல்லர் எனச் சினை வினை முதன் மேல் நின்றது[2]. நல்லாராகுதல்-செற்றம் விடுதல்[3]. உள்ளே செற்ற முடையாரைக் கல்வியுடைமை பற்றி நட்பென்று கருதற்க என்பதாம்.

---

1. மனக்குற்றம் - காமம் வெகுளி கடும் பற்றுள்ளம் மாணம் உவகை முதலியன.
2. மனமாகிய சினையினது நன்றாகுதலாகிய வினை மனத்தையுடைய மக்களின்மேல் நின்றது. மனம் நன்றாதல் என்று கூறாது மனம் நல்லராகுதல் என்று கூறப்பட்டதால் என்பர்.
3. செற்றம் விடுதல் - நீராக்கோபத்தை ஒழித்தல்.

ஊ) கவிராசர் : நல்லனவாய பல நூல்களைக் கற்றவிடத்தும் அதனாலே மனந்திரும்பி சிநேகம் ஆகிறது பகைவர்களுக்கு இல்லை எ-று.

எ) பழைய.: 'மனநல்லார் ஆகுதன்' பாடம்.

நல்லன பல நூல்களைக் கற்றவிடத்தும் அதனால் மனந்-திருந்து நட்பாதல் பகைவர்க்கு இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'மாணார்'

'மாடசிமையில்லார்', 'உள்தூய்மையில்லார்' என்பர் முறையே மணக்குடவரும் காளிங்கரும். 'பகைவர்' எனபர் பரிமேல ழகரும் அவர் வழிப்பலரும். 'நல்லகுணங்களைப பெறாதவன ஒருவன்' வரத.; தேவநேயர் 'சிறவாதபகைவர்' எனபர். மு ரா. அரு. 'மாட்சிமையான குணமில்லாத பகைவர்? 'வஞ்சகர்' வ.சுப,மா.; 'தீயோர்' கா.சு.

'மாண்பு' 'மாட்சி' என்ற சொற்கள் வள்ளுவர் உள்ளத்தில் 'சிறப்பு' 'பெருமை' என்ற பொருளிலேயே நிலவியுள்ளன. 'பகைவர்' 'செற்றமுடையார்' என்ற பொருள்கள் கருத்துப் பொருளாக இட நோக்கி எழுந்தபொருள்களேயன்றி இயல்பாயின அன்று. ஆகை-யால், 'நுணணியநூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்' என்றாற்போலச் செயற்கையிற் செம்மைப்படுத்தும் நூலறிவு கற்கினும், இயல்பு அறிவே மிகும் என்ற வள்ளுவர் உள்ளத் தொடு ஒட்டிப் பயன்படும் 'நல்ல நூல்களைக்கற்றாலும், மாணாதார் ஆயின் நல்ல மனம் உண்டாகாது' என்ற உரையே சிறந்ததாகல் கூடும்.

83.4. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். (824)

உரைப்பகுதி :

அ) மணக்.: முகத்தால் இனியவாக நக்கு மனத்தால் இன்னாத வாக நனைக்கும் வஞ்சகரை அஞ்சவேண்டும் எ—று.

ஆ) பரிதி .: முகத்தில் சிரிப்பும் மனத்தில் கறுப்பும் உண்டான பேரை எமனிலும் அஞ்சப்படும் எ—று,

இ) பரிப் : முகத்தான் இனிய ஆகச் சிரித்து மனத்திலே பொல்லாங்கு நினைக்கும் வஞ்சரை அஞ்ச வேண்டும் எ—று.

மேல் நட்பாய் ஒழுகு வாரது உள்ளக் கருத்து அறிய வேணும் என்றார் இஃது அறியுங்கால் குறிப்பினாதல், சொல்லினாதல் அறிய வேண்டும் அன்றே அவை எல்லாவாற்றானும் அறிதல் அரிது என்பார். முற்படக் குறிப்பினான் அறிதல் அரிது என்பதூஉம கூறப்பட்டது

ஈ) காளி .: முகத்தினால் இனியவாக மகிழ்ந்து நகுதலும் செய்து மனத்தின்கண் இன்னாத வஞ்சரைக் காணின் அஞ்சப்படும் எ—று.

உ) பரிமேல் .: கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தால் இன்னாராய[1] வஞ்சரை, அஞ்சல்வேண்டும்.

நகையது வகைபற்றி 'இனிய' என்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின் 'வஞ்சர்' என்றும், அச்செற்றம் குறிப்பறிதற் கருவியாய முகத்தானும் தோன்றாமையின்[2] அஞ்சுதல் செய்யப்படும்[3] என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் குற்றத்திற்கு ஏதுவாய அவர் கொடுமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர் .: கண்டபொழுது முகத்துக்கு நல்லவனாகச் சிரித்து மனத்திலே பகையாய் இருக்கிற வஞ்சகரைக் கண்டால் பயப்படவேணும், எ—று.

எ) பழைய 2 .: கண்டபோது முகமலர்த்து இனியவாக நகைத்தாலும் மனத்திற் பகை வைத்திருக்கும் வஞ்சரை அஞ்சப்படும்.

---

1. இன்னாராய — தீயராகிய
2. 'முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினுங் காயினுந் தான் முந்துறும்' என்னும் குறள் இங்கறியற்பாலதாம்.
3. 'அஞ்சப்படும்' என்றும் பாடமுண்டு.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நெஞ்சங்கடுத்தது காட்டும் முகமாதலின், முகத்தாற் குறிப்பினாலும் அறிதல் அரிதாயின் சொல்லான் அறிதலும் இயலாத-தொன்றாம்' என்ற நயம் தோன்ற நிற்கும் பரிப்பெருமாள் விளக்கம் இன்புறுதற்குரியதொன்று.

வரதராசனார், 'மாணார்-இழிந்த குணங்களை இயல்பாகவே உடையவர். அவர் நல்ல நூல்களைக் கற்றாலும், அக்-கல்வியறிவைத் தன்இழிகுணங்களை மறைக்கவும் மேலுந் தீய செயல்களைத் திறம்படச் செய்யவுமே பயன்படுத்துவாரேயன்றி பண்பாட்டை வளர்த்து நல்லவனாகான்' என்ற விளககமும் தருவர். தேவநேயர் உரை நயத்தானும் பரிமேலழகரை முழுதும் ஒத்துள்ளது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்

முன்னின றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் துருகக் கலந்துரைத்துப்—பின்னின்று,
இழித்துரைக்கும் சான்றோருரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. — அறநெறி., 48

புறம்தட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டும்—கழிபெரும்
கண்ணோட்டம் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. — நீதிநெறி., 56

ஓ) மேற்கொள்பகுதி :

சிவஞான :. படும் என்னும் சொல்லும் ஐம்பால் மூவிடத்துக்குப் பொதுவாய் வரும் என்பதற்கு மேற்கோள். — நன்., 3?9

சுவாமி :. தொழிற்பெயராய் தேற்றப்பொருள்பட்டு நிற்கும் அஞ்சபபடும் என்ற சொற்குணம் தெரியாத பரிமேலழகர் தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சென்றனர் எனக்கூறி மறுப்பர். — இ,கொ., 84

83.5. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று. (825)

உரைப்பகுதி :

அ) மணக் .: மனத்தால் பொருத்தமில்லாதவரை ய.தொன்றன் கண்ணும் அவர் சொல்லினால் தெளிதற்பாலதன்று எ-று.

இது சொல்லினால் அறிதல் என்றது.

ஆ) பரிதி .: மனத்தில் அடக்கமும் நற்குணமும் இல்லாதவரை ஒன்றாலும் கூடப் படாது[1] எ-று.

இ) பரிப் :. மனத்தால் பொருத்தம் இல்லாதாரை யாது ஒன்றின் கண்ணும் அவர் சொல்லினால் தெளியற் பாற்று அன்று எ-று.

இது சொல்லினால் அறிதல் அரிது என்றது. நட்பியல் முடிந்தது.

ஈ) காளி .: இவ்வாறு நெஞ்சினால் நட்பு அமைவு[2] இல்லாதாரை அவர் சொல் பகுதியால் யாதானும் ஒன்று நட்குதல்[3] பகுதியினை உடைத்து அன்று; எனவே ஒன்றும்[4] குறிக்கொண்டு தம்மை ஓம்பிக் கொள்க என்பது பொருளாயிற்று.

இனி இவற்றினும் தீது பேதைமை என்பதனான் இவற்றின் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல் .: மனத்தால் தம்மொடு மேவாதாரை, யாதொரு கருமத்தினும் சொல்லாமல் தெளிதன்முறைமைத்தன்று நீதிநூல்.

நீதிநூல் என்பது அவாய்நிலையான்[5] வந்தது. பகைமை மறைத்தற் பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச் சொல்லைச் செவ்வியசொல்[6] எனக் கருதி அவரைக் கருமங்களில் தெளிதல் நீதிநூல் முறைமை அன்று என்பதாம்.

---

1. கூடப்படாது — நட்டல் கூடாது
2. அமைவு — அமைதி
3. நட்குதல் — நட்புக்கொள்ளுதல்
4. ஒன்றும் — பொருந்தும் வகையாராய்ந்து
5. தெளிதல் முறைமைத்தன்று தேறற்பாற்றன்று என்ற வினை முடிவிற்கு எழுவாய் இன்மையின் நீதிநூல் என்ற சொல் அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது.
6. செவ்விய சொல் — நேர்மையான சொல்

ஊ) கவிராசர் .: மனத்தினாலே உறவுகலவாதவரை யாதொரு காரியத்தினுஞ் சொல்லினாலேதெளிகிறது முறைமைத்தன்று எ-று.

ஏ) பழைய2 .: மனத்தால் தம்மொடு மேவாதாரை யாதொரு கருமத்தினும் சொல்லினாற் றெளிதல் நீதியன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அமையாதவர்'

'பொருத்தமில்லாதவர்' ''நட்பமைவு இல்லாதார்'' 'மேவாதார்' 'உறவுகலவாதவர்' என்பார்கள் தொல்லாசிரியர்கள். 'அடக்கமும் நற்குணமும் இல்லாதவர்' என்பர் பரிதி.; 'மனத்தில் நட்பை அமைத்துக் கொள்ளாதவர்' என்பர் வரத.; 'தம்மொடு ஒத்த அன்பில்லார்' என்பர் மு ரா. அரு.; 'மனத்திற்குப் பொருந்தாதவை' என்பர் இராம.; 'மனமொத்த நட்பில்லாதவர் அதாவது ஒருமித்த மனம் இல்லாதவர்' சபாபதி; 'சொல்லினால் எனைத் தொன்றும் தேறற்பாற்றன்று' என்பது அதிகாரத்தாற் பெற்ற பொருளாம். 'எனைத்தொன்றும்' என்பதில் 'ஒன்று' எண் குறியாது 'எவ்வளவும்' என அளவு குறித்த பெயராய் நின்றமை காண்க

இவற்றுள் இடைக்காலத்து வந்த பதிப்புக்கள் அனைத்தினும் இக்குறளின் பரிமேலழகர் உரையில் 'யாதொருக் எ-று' கருமத்தினும் சொல்லால் தெளிதல் முறைமைத்தன்று நீதி நூல் என்றுள்ளது வை மு. கோ. இத்தொடரில் பயனிலை இன்மையைக் கருதி 'நீதிநூல்' என்பதனை நகக்குறியில் அடைத்துக் காட்டினார். ஆறுமுக நாவலர் 1922ம் ஆண்டுப்பதிப்பில் 'சொல்லாற் றெளிதல் முறைமைத்தன்று என்று சொல்லும் நீதிநூல்' என்றுள்ளது. கோ. வ. பதிப்பிலும் அப்படி. நீதிநூல் சொல்லும் எனத்தொடர் நிறைவுற்றிருத்தலும் அதற்கே 'நீதிநூல்என்ற எழுவாய் அவாய்நிலையான் வந்தது என்ற இலக்கண அமைதியும் எற்புடைத்தாதல் கண்டு பரிமேலழகர் உரைப்பாடத்தைத் திருத்துக.

'எனைத்தொன்றும்'

''யாதொன்றன்கண்ணும்'' ''யாதொரு கருமத்தினும்'' என்ற மணக்குடவர் பரிமேலழகர் உரைக்குறிப்புக்கள் செயலினும்

தேறற்க என்ற இயைபும் கருத்துமே உடையன. பரிதியுரை 'யாதொன்றும் - ஒன்றானும்' என்ற அளவில் அமைகிறது. காலிங்கர் உரை 'எனைத்தொன்றும் சொல்லினால் தேறற்பாற்றன்று' என்றியைக்கப் பெற்று, 'அவர்சொல் பகுதியால் யாதானும் ஒன்று நட்குதல் பகுதியினை யுடைத்தன்று என்னும் பொருள் தரும். இதன் கருத்து : அவர் சொல்லும் சொல்லின் பகுதியால் எவ்வகை-யானும் நட்புக் கொள்ளுந் தகுதியை உடைத்தன்று என்பது. அதாவது ஒருவகை யானும் நட்புக்குரியதாகாது என்பதாம். இவரை இங்ஙனம் கூறச்செய்தது 'பாற்று' ன்னும் சொல், பாற்று - பகுதியினையுடையது.

தேவநேயர் 'அரசியல் நூல் கூறும்' என்பர். பரிமேலழகரும் பிறரும் 'நீதிநூல் கூறும்' என்று ஆசிரியர் பிறநூன் முடிபாகக் கூறிய அதனை சில ஆசிரியர் வள்ளுவர் கூற்றாகவே கருதி-யுரைப்பர். ஏனையோரினும் 'அமையாதவரைச் சொல்லினால் எனைத்தொன்றும் தேறற்பாற்றன்று' என்று கூட்டுவாரும் உளர். அப்போது 'எனைத்தொன்று' என்பது செயலையே உணர்த்தி நிற்றல் காண்க. 'எனைத்தொன்றும் சொல்லினால்' என இயைத்து 'எப்படிப்பட்ட சொல்லாலும்' என்பர் இராமலிங்கர். இங்ஙனம் அன்றிச் 'சொல்லினால் எனைத்தொன்றும் (எவ்வளவு சிறிதும்) தேறற் பாற்று அன்று' எனக் கூட்டினும் சிறிதும் என்பது தெளி-தலைச் சார்வதாய் நிற்கும். சிறிய காரியத்தினும் தெளிதல் கூடாது எனினும் இழுக்கின்று.

83.6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். (826)

உரைப்பகுதி :

அ) மணக்.: உற்றாரைப்போல நல்லவானவை சொன்னாராயி-னும், பகைவர் சொல்லுஞ் சொல் விரைந்து அறியப்படும் எ—று.

ஆ) பரிதி.: உற்றாரைப் போலே நல்லது சொன்னாலும் கூடா நட்பார் குணம் சடுதியிலே[1] அறியலாம் எ—று.

இ) பரிப்.: நட்டாரைப் போல நல்லவை ஆராய்ந்து சொல்லினும் மனத்தினால் பொருந்தாதார் சொல்லை இதுவும் ஒரு வினை உடைத்து என்று விரைய ஆராயப்படும் எ—று.

இது காரியமானவற்றைச் சொல்லினும் தேறல் அரிது என்றது.

ஈ) காளி.: தாமும் சிலரோடு நட்டார்போல் நடித்துச் செவிக்கு இனியனவே சொல்லினும் அகத்து ஓர் ஒட்டு[2] இல்லாதார் சொலலும் அச்சொல் தானும் விரைய ஆராய்ந்து கொள்ள அடுக்கும்[3] எ—று.

உ) பரிமேல்.: நட்டார் போன்று நன்மை பயக்கும் சொற்களைச் சொன்னராயினும், பகைவர் சொற்கள் அது பயவாமை அச்சொல்லியபொழுதே அறியப்படும்.

'சொல்லினும்' எனவே, சொல்லாமையே பெற்றாம்; ஒட்டாராதலான் தீமைபயத்தல் ஒருதலை என்பார் 'ஒல்லை உணரப்படும்' என்றார்.

ஊ) கவிராசர்.: உறவின் முறையாரைப்போல நல்ல வசனங்களைச் சொன்னாலும் பகைவர் வார்த்தைகளை மெய் என்று நம்பப்போகாது (எ—று).

ஏ) பழைய 2: நட்பானவரைப் போல நன்மை பயக்குஞ் சொற்களைச் சொன்னாராயினும், பகைவர் சொற்களை அவை நன்மை பயவாவென்று உடனே மனதிற் கருதவேண்டும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் போன்றார் உரையும் பரிமேலழகர் உரையும் ஒத்த கருத்தினவாயினும் பரிமேலழகர் உரை தெளிவும் விளக்கமும் பெற்றது.

'ஒட்டார்'

ஒட்டு+ஆ+ஆர் எனப் பிரித்து 'ஓர் ஒட்டும் இல்லாதவர்' என்பர் காளிங்கர். 'நட்டார்—உறவினர்' என்பர் கவிராசர்.

1. சடுதியிலே — விரைவிலே  2. ஒட்டு — பொருத்தம்
3. அடுக்கும் — பொருந்தும்

'ஒல்லை உணரப்படும்'

'வேறுகுறிப்புக்களான் வெளிப்படும்' மு. ரா. அரு. 'வினை-பயனால் விரைந்துணரப்படும், செயல்முறைகளால் விரைந்து உணரப் படும்' எனப் பலநோக்கில் விளக்கம் தருகின்றனர்.

'பால் நல்லதாயினும் கலத்தின் தீமையால் பாலின்குணமாறு-படுவது போல, இவர் நல்லனவே சொல்லினும், பயன் தீதாம்' என்பதும், 'அமுதம் பூசிய நஞ்சாக இருப்பதை விரைவில் அறியலாம்' என்பதும் ஆகிய இருவகைக் கருத்தும் அமையும்.

இராம.: 'நண்பரைப்போல நன்மைகளையே பேசினாலும், பகைவர் பேச்சின் உட்கருத்தை விரைவில் உணர்ந்து கொள்ள இயலும்' என்பர்.

வரத.: 'ஒட்டார் சொல் செயலை மேற்கொள்ளும் போது விரைவில் விளங்கிவிடும்' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய வாதல் அறிமினும். — கலி., 113:15—16

இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியு மொழியும் கடுவே — அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும். —நீதிநெறி., 59

83.7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க
வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (827)

உரைப்பகுதி :

அ) மணக்.: வில்லினது வணக்கம் தீமையைக் குறித்தமை ஏதுவாக, தாழச்சொல்லுஞ் சொல்லைப் பகைவர்மாட்டு நன்று சொன்னார் என்று கொள்ளாதொழிக எ-று

இது தாழச் சொல்லினும் தேறப்படார் என்றது.

ஆ) பரிதி .: துர்ச்சனன் வணங்குதலால் நல்லவன் என்று சொல்லுவர்; அவனை நம்பவேண்டா. அது எது போல் என்றால் கொலைசெய்வதற்கு வில் வளைத்தானாடு ஒக்கும். எ-று.

இ, பரிப் .: தாழச் சொல்லும் சொல் வல்ல பகைவர்மாட்டு நன்று சொன்னார் என்று கொள்ளாது ஒழிக; வில்லினது வணககம் தீமையைக் குறிததமை ஏதுவாக எ-று.

இது தாழச் சொல்லினும் தேறப்படாது என்றது.

ஈ) காளி .: முன்னரே வந்து சொல்லும் சொல் வணக்கத்தை அகம் பொருந்தார் மாட்டு என்றும் கைக்கொள்ளாது[1] ஒழிக; என் எனின்? வில் வளைந்த வணக்கம் எத்துணை உண்டு; அத்துணையும் கொலைக் குறித்து நின்றமையால் அது நினைக்க வேண்டும எ-று.

உ) பரிமேல் .: வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமை செய்தலைக் குறித்தமையால், பகைவர்மாட்டுப் பிறக்கும் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று கருதற்க.

தம் வணக்கமன்று என்பது தோன்றச் 'சொல்வணக்கம்' என்றும், 'வில்வணக்கம்' வேறாயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன் குறிப்பை ஏதுவாக்கியும் கூறினார். வில்லியது[2] குறிப்பு அவனினாய வில்வணக்கத்தின் மேல் நிற்றலான், ஒன்னராது குறிப்பும் அவரினாய சொலவணக்கத்தின் மேலதாயிற்று. இதுவும தீங்கு குறித்த வணக்கம் என்றேகொண்டு அஞ்சிக்காக்க என்பதாம். இவை மூனறு பாட்டானும் அவரைச் சொல்லால் தெளியறக எனபது கூறப்பட்டது.

ஊ) கவிராசர் .: வில்லுடைய வணக்கம் எதிர்த்தவர்களுக்குத் தீங்கு செய்யும்; அதுபோல, பகைவர் சொல்லும் சொல்லினுடைய வணக்கததையும் ''நமக்கு நன்மை செய்யும்'' என்று எண்ண வேண்டாம் (எ-று).

ஏ) பழைய 2.: வில் வணக்கம் எதிர்த்தவர்க்குத் தீங்கு செய்தல் திண்ணமாதலாற் சொல் வணக்கம் ஒன்னாரிடத்து வணக்கமாகக் கொள்ள வேண்டாம்.

1. கைக்கொள்ளாது - மேற்கொள்ளாமல்
2. வில்லி - வில்லையுடையவன

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

உரைகள் அனைத்திலும் இருக்கும் பொதுமைக்கருத்து, 'வில் எவ்வளவுக் கெவ்வளவு வளைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அம்பை விரைந்து செலுத்தும். ஆற்றலைத் தானும், சென்று தைக்கும் ஆற்றலை, அம்புக்குமாகத் தருகிறது. அது போல பகைவனுடைய வணக்கமும் வணக்கச்சொல்லினும் பயன்தரும் என்பதாம். "வில்லினுங்கடிதவர் சொல்லுட்பிறந்த நோய்" (நெய்தற்கலி 20. வரி 12) என்பதாலும் வில் வணக்கம் சொல் வணக்கம் இரண்டன் ஆற்றலையும் உணரலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி .:

சொல்வணக்கம் வில்வணக்கம் :

வில்லினும் கடிதவர் சொல்லினுட் பிறந்த நோய் — கலி.,17:12

வில் அம்போ, சொல் அம்போ. — பழ.,

83.8. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. (828)

உரைப்பகுதி :

அ) மணக் :. தொழுகையுள்ளும் கொலைக் கருவி ஒடுங்கும்[1] பகைவர் அழுத கண்ணீரும் அத்தன்மையதாம் என்று கொள்க எ—று.

மெல்லியராகத் தொழுதுவந்து ஒத்தார்போல ஒழுகுவது நட்பு என்றவாறு, இது கூடா நட்பினால்வரும் குற்றம் கூறிற்று. கூடா நட்பினர் வேறு காலத்திலும் அழுதகாலத்திலும் தேறப்படார்[2] என்க.

ஆ) பரிதி :. தொழுகையுள் ஆயுதம் அடக்கி, வஞ்சனை செய்யும் கண்ணீருமாக இருந்து சதிக்கும்[3] ஈனர்[4] உறவு விடுக எ—று.

இ) பரிப் :. தொழுகையுள்ளும் கொலைக் கருவி ஒடுங்கும். பகைவர் அழுத கண்ணீரும் அவ்வாறு கொள்க எ—று.

1. ஒடுங்கும்—மறைந்திருக்கும்
2. தேறப்படார்—தெளியப்படார்
3. சதிக்கும்—சதிசெய்யும்
4. ஈனர்—இழிந்தோர்

இது மெல்லியர் ஆகத் தொழுத காலத்தினும் அழுத காலத்திலும் தேறப்படார் என்பது. இத்துணையும் கூடா நட்பினது இயல்பு கூறப்பட்டது.

ஈ) **காளி .:** உள்ளம் பொருந்தாதார் புறமே தொழுதகையினைக் கண்டால் குறிக்கொண்மின் அதுதானே கொலைக்கருவி அறிந்து ஒடுங்கக் கொண்மின்; மற்றவர் ஒன்று உற்ற இடத்து அழுத கண்ணீரும் அத்தன்மைத்து எனவே அதுவும் உயிர்க்கு இறுதி செய்தற்கு அடிக்கொண்டதோர்[5] கருவி எ—று.

இங்ஙனம் தொழுதலும் அழுதலும் அன்றி அவர் நகுதலும் அன்னது என்பதனை அறிவிக்கின்றது வருங்குறள்[6].

உ) **பரிமேல் .:** ஒன்னார் குறிப்பை உணரவல்லாருக்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும், அவர் அழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனாம்.

தாம் நட்பு என்பதனைத் தம் கையானும் கண்ணானும் தேற்றிப் பின்கோறற்கு வாங்க இருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித்[7] தேற்றுகின்ற பொழுதே அவற்றுள்ளே தோன்றும என்பார், 'ஒடுங்கும்' எனறார். பகைவர் தம் மென்மை காட்டித் தொழினும் அழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்க என்பதாம். இதனால் அவரைச் செயலால் தெளியற்க என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர் .:** பகைவர் குறிப்பை அறியவல்லவர்களுக்கு அவர் கும்பிடுகிறபோதும் அந்தக் கைக்குள்ளே ஆயுதம் மறைவாய் இருக்கும; அழுகிற போதும் அப்படித்தானே ஆயுதம் மறைந்திருத்தற்கு இடனாகும்.

எ) **பழைய 2.:** தொழுதகையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும் அவ்வொன்னார் அழுத கண்ணீரும் அவ்வாறே யாம்; பகைவர் குறிப்பறிய வல்லார்க்கு.

---

5. அடிக்கொண்டதோர்—அடித்தளமிட்டது போல்
6. காளிங்கர் முறைவைப்பில் வருங்குறள் 'முகத்தினிய' என்பது.
7. உய்த்துணர்வுழி—உற்றறியுங்கால்

ஒ) ஒப்புமைப்பகுதி :

**தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் :**

வழிபடு வோரை வல்அறி தீயே. — புறம்., 10:1

தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும். — பழ.,

**முற்றும் :**

தொழுததங் கையி னுள்ளும் துறுமுடி அகத்தும் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
பழுதகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்றா
தொழிகயார் கண்ணும் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற் றாரே.
— சீவக., 1891

நல்லன பலநூல் கற்பினும் கூடா நட்பினர் மனநலன் எய்தார்
சொல்லின்முன் வணங்கும் வணக்கமும் தொழிலும் சொரிந்தகண் ணீரும்தப் பாது
கொல்லும்வன் படையா மாதலின் பகையுட் கொண்டவர்க் கவரென நீயும்
ஒவ்லுக அதுவு நீக்குறாக் கால முற்றுழி யல்லது வேண்டா.
— விநா. அரசி., 129

மெழுகி னால்நமக் காலயம் வகுத்தலும் விரகே
ஒழுகு கின்றதன் ஒழுக்கமும் வஞ்சனை ஒழுக்கே
எழுக டற்படை யாவையும் இவன்வழி யனவே
தொழுத கையுளும் படையுள சூழ்ச்சியும் பெரிதால்
— வில்லி, வாரணாவத., 119

ஓ) மேற்கோள்பகுதி :

**தச்சி.:** அரசர்க்கு ஒரு துன்பம் வந்தஇடத்து அவர் நட்புடையோர் போல அழுதகண்ணீரும் கொலைசூழ்தலின் கண்ணீரிலும் படை ஒடுங்கிற்றாம்; 'ஒன்னார் அழுதுகண்ணீரும் அனைத்து' என்றார் தேவரும்
— சீவக., 1881.

83.9. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. (829)

உரைப்பகுதி :

அ) மணக்.: ————————1

ஆ) பரிதி.: மிகையானது செய்து தம்மை இகழ்வார் நட்பு முகஞ் சிரிக்கச் சொல்லி மனத்தில நட்பு விடுவான் எ—று.

இ) பரிப்.: நட்டாரைப் போலச் செய்யும் அவற்றை மிகச் செய்து மனத்தினால் தம்மை இகழும் அவர்களைத் தாமும் மகிழுமாறு செய்து நட்பின்கண் நட்புச் சால நட்க எ—று.

இது கருமம் காரணம் ஆகி நட்டாரோடு ஒழுகும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: கீழ்ச் சொன்ன அவையே அன்றிப் பின்னும் மிகப் பல செய்தே தம்மை உள்ளத்தால் பெரிதும் இகழ்ந்திருப்பாரை ஓர்ந்து[2] தாம் புறமே முகத்தான் நகச் செய்தே அவரோடு நட்பினால் உள்ளுறச் செறியும்[3] பகுதியினை உடைத்து அன்று எ—று.

நட்பினுள் சாப்புல்லற் பாற்று என்பது தாம் அவரொடு நட்பின் கண் சாவப் புல்லுதல் என்றது. உள் புல்லற் பாற்று அன்று-தாம் அவரொடு உள்ளுற அணைக்கும் பகுதியினை உடைத்து அன்று எ—று.

உ) பரிமேல்.: பகைமை தோன்றாமல் புறத்தின்கண் நட்பினை மிகச் செய்து அகத்தின்கண் தம்மை இகழும் பகைவரை, தாமும் அந்நாட்பின்கண்ணே நின்று, புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணம் செய்து, அகத்தின்கண் அது சாம்வண்ணம்[4] பொருந்தற் பான்மையுடைத்து அரசநீதி எ—று.

---

1, உரை கிடைக்கவில்லை. 2. ஓர்ந்து — ஆய்ந்து

3 உள்ளுறச் செறியும் — மனத்துக்குள் நிறைந்திருக்கும்

4. அகத்தின்கண் அது சாம் வண்ணம் — மனத்தில் அது அழியும் வண்ணம்

நின்று என்பதூஉம் அரசநீதி என்பதூஉம் அவாய்நிலையான் வந்தன[5]. அகனொன்று புறனொன்றாதல்[6] ஒருவற்குத் தகாது எனினும் பகைவர் மாட்டாயின் தகும் எஙபது நீதிநூல் துணிவு என்பார், அதன்மேல்[7] வைத்துக் கூறினார். 'சாவ' என்பதன் இறுதி நிலை விகாரத்தால் தொகககது[8]; 'காட்டின் வாய்ச் சாக்குதத[9] என்புழிப் போல, எள்ளுவாரைப் புல்லல் எனக் கூட்டுக.

ஊ) கவிராசர் : பகையை அறியவொட்டாமல் புறத்திலே உறவை மெத்தச்செய்து, மனத்திலே தம்மை இகழும் பகைவரைத் தாமும் அப்படியே வெளியிலே உறவாய் மனத்திலே அந்த உறவை வையாமல் விட்டுவிடவேணும் (எ—று).

ஏ) பழைய 2 : புறத்துப் பகை தோன்றாமல் தொழுது வணங்கி மிகச் சிறப்புச் செய்து மனத்தின்கண் தம்மை எப்போது வெல்வோம் என்று இகழும் பகைவரை அவ்வாறு மகிழச் செய்து மனத்தின் அவர் நட்புச்சாம் வண்ணம் பொருந்தும் பான்மைத்தாம் அரசர்நீதி.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதியார் பாடம் 'மிகைசெய்து', 'நகைசெய்து' என்பது போலும். 'நட்பினுள் சா புல்லற்பாற்று' என்று இயைத்து 'மனத்தில் நட்பை அழிக்க' என்ற கருத்தை வழங்குவர். பரிப். 'தம்எள்ளுவார்' மனத்தால் தம்மை இகழும் அவர்களை' என்பர். காளி. 'நட்பின் உள் அலைக்கும் பகுதியையுடைத்து அன்று' என்பர். இதனால் இவர் கண்டபாடம் 'நட்பினுள் புல்லற்பாற் றன்று' ,என்பதாகலாம். ஏனையோர் கொண்ட 'நட்பினுள் சாப்புல்லற் பாற்று' என்ற பாடத்தையும் கொண்டு அதற்கும் ஏற்ப உரைவகுத்தமையும் காண்க. இத்தகைய நட்பைச் சாகுமவரை கொளளலாகாது எனபர் பரிமேல். நட்புச்சாம்வண்ணம் என்பர் பழைய. கவிராசர் கருத்தும் இது. 'நட்பு சாவப் புல்லற்பாற்று' என விரித்துப் பொருள காண்பர் பரிமேலழகரும் பிறரும், இராம. 'தம் மிகச் செய்து

---

5. நட்பினுள் என்பது நின்று என்பதையும் புல்லற்பாற்று என்பது அரசநீதி என்பதையும் அவாய் நிற்றலின் அவை வருவிக்கப்பட்டன.
6. அகனொன்று புறனொன்றாதல் — உள்ளே பகையும் உதட்டில் உறவுமாதல்
7. அதன்மேல் — அரச நீதிமேல்
8. சாவக்குத்தி — சாக்குத்தி; சாவ என்னும் உயிர்மை சாதலின் விதியாதலின்.
9. கலி., 105:35.

எள்ளுவாரை' என இயைத்துத் 'தம்மைத் தாமே அளவுக்கு மிச்சமாக இகழ்ந்து கொள்ளும் பகைவர்களைத் தழுவிக்கொண்டால் அது நாமே வலியச் சாவைத் தழுவிக் கொள்வது போலாம்' என்று புதிய உரை தருவர். வரத. 'சாப்புல்லல் — உடலாலும் உரையாலும் பழகுவதுபோலக் காட்டி உள்ளத்தாலும் உயிராலும் ஒன்றுபடாது விலகி நிற்றல்' என்பர்.

உரைகளின் முடிபு, 'உள்ளத்தால் நட்புக் கொள்ளற்க' என்பதே ஆயினும் சொற்களைப் பிரித்துக் கூட்டலானும், சொற்களை வருவித்து முடித்தலானும் வேறுபடுவார் போலத் தோன்றுவர். இவருள் இராம. 'தம்மைத் தாமே இழிவுபடுத்திக் கொண்டு நண்பனையே மிகுதியாகப் புகழுமவர் நட்பை' என ஒருவகைப் புதிய கருத்துக் கொணருவர். இவ்வுரையில் 'செய்து' என்ற சொல் பொருட்சிறப் பின்றி உள்ளது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**மிகச்செய்து தம்எள்ளுவாரை நகச்செய்து :**

புகையுடைத் தென்னில் உண்டு பொங்கனல் அங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால்.

—கம்ப., அரசி., 29

83.10. பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்(டு)
அகநட் பொரீஇ விடல். (830)

உரைப்பகுதி :

அ) மணக்.: பகைவர் நட்பாங்காலம் வந்தவிடத்து, முகத்தால் நட்பினைச் செய்து அகநட்பு நீங்கவிடுக. எ—று.

இது பகைவராய நட்டோர்மாட்டு ஒழுகும் திறன் கூறிற்று.

ஆ) பரிதி.: பகையான் உறவாக வந்தால் நல்லகாரியம் என்று கூடி மனத்துள் வார்த்தை சொல்லாமல் முகத்தில் வார்த்தை சொல்லவும் எ—று.

இ) பரிப்.: பகைவர் நட்பின் நட்பு ஆம் காலம் வந்த இடத்து முகத்தால் நட்பினைச் செய்து அகத்தால் நட்பினை நீங்கி விடுக எ—று.

இது பகைவோராய் நட்டோர் மாட்டு ஒழுகும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: இங்ஙனம் பகை நட்பு ஆம் காலம் வருங்கால் இது ஒன்று உடைத்து எனக் கருதிக் குறிக்கொண்டு தாமும் புறமே முகத்தினான் நட்புச்செய்து அகத்தான் இவரை நம்பி நள்ளாது[1] ஒழித்து விடுக எ—று.

உ) பரிமேல்.: தம் பகைவர் தமக்கு நட்டாராய் ஒழுகுங்காலம் வந்தால், தாமும் அவரோடு முகத்தால் நட்புச் செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின் அதுவும் தவிர்க, (எ—று.)

அக்காலமாவது-தம்மானும் பகை என்று வெளிப்பட நீக்கலாகாத அளவு இதனானே ஆமளவெல்லாம் நீக்குக என்பது பெற்றாம். இவை இரண்டு பாட்டானும் அந்நட்பிடை ஒழுகுமாறு கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : தன் பகைவர் தனக்குச் சிநேகிதராய் நடக்கிற காலம் வந்தால், தானும் அவரோடு முகத்தாலே உறவு பண்ணி மனத்திலே அந்த உறவை விடடுப் பிறகு அந்த முகத்துறவையும் தவிர்க்க வேணடும் (எ—று).

ஏ) பழைய 2 : பகைவர் தமக்கு நட்பாகுங் காலம் வந்தாலும், முகத்தால நட்புச் செய்து அகத்தால் நட்பினை ஒழித்துப் பின் முக நட்பையும் ஒழித்து விடுக, (எ—று).

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறளின் உரைவேற்றுமை "முகநட்டு அகநட்பு ஒரீஇ விடல்" என்பதில் மட்டும் உளது.

**மணக்.** "முகத்தால் நட்பினைச்செய்து அகநட்பு நீங்க விடுக" என்பர். பரிமேலழகர் 'தாமும் அவரோடு நட்புச்செய்து, அகத்தால் அதனை விடடுபபின் அதுவும் விடுக' என்பர். மணக்குடவரும் 'ஒரீஇவிடல்' ஒருசொல்லாகக் கொள்ளாது ஒரீஇ, விடல் இருசொல்லாகக் கொண்டு 'ஒரீஇ' என்னுஞ்செய்து என்னெச்சத்தைச் செயவென்னெச்சமாக்கி நீங்க விடுக. இங்ஙனம் இவர் கொண்டது 'ஒரீஇ' 'மரீஇ' என்பன தன்வினைப் பிறவினையிரண்டற்கும் பொதுவாதலை எணணாமல். ஒருவுதல் நட்பின் செயலாகவும் விடுதல் நட்புச் செய்வோன் வினையாகவும் இருத்தலைக் கருதி, செய்து

[1]. நள்ளாது - நட்பு கொள்ளாது.

எனஎச்சம் பிறவினைகொண்டு முடியாது என்பதையும் எண்ணி நீங்க விடுக என உரை வகுத்தனர்.

பரிமேலழகர் 'ஓரீஇ விடல்' என்பதனை இருசொல்லாகக் கொண்டு நட்பினை விட்டு, பின்முகநக நட்டலாகிய அதனையும் விடுக என்றனர். இதனை ஒட்டி உரைத்தவர்கள் கவிராசரும் பழையயாசிரியரும் ஆவர். தேவநேயரும், இராமலிங்கனாரும், சபாபதியும் குழந்தையும், மு. ரா. அரு.வும் இக்கருத்தினரேயாவர். வரத., சி,இ., வ. சுப. மா. இவர்கள் அனைவரும் 'ஒழித்துவிடுக' என ஒருசொல்லாகவே உரைப்பர்.

இவற்றுள் பரிமேலழகர் உரையமைதி எனைத்து வகை-யானும் ஏற்றமுடையது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீர
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால்.
— கம்ப., 4227

கள்ளிற் கரந்துறை காம மாதியாம்
உள்ளுரை பகைஒருக் கொதுங்கி வாழ்வோ.  — கம்ப., 1416

## 83. கூடா நட்பு

| | சீரிடம் | இனம்போன் | பலநல்ல | முகத்தின் | மனத்தின் | நட்டார் | சொல்வணக்கம் | தொழுதகை | மிகச்செய்து | பகைநட்பாம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 8 | 1 | 4 | 2 | 3 | 5 | 6 | 7 | — | 10 |
| பரிதி. | 1 | 3 | 4 | 5 | 6 | 8 | 7 | 2 | 10 | 9 |
| பரிப். | 8 | 1 | 5 | 2 | 3 | 4 | 6 | 7 | 9 | 10 |
| காளி. | 1 | 4 | 3 | 7 | 10 | 2 | 5 | 6 | 9 | 8 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

83-வது அதிகாரம் 'கூடாநட்பு' முற்றிற்று.

# 84. பேதைமை

அ) மணக்.: பேதைமையாவது கேட்டிற்குக் காரணமாகியவற்றை அறியாதாரியல்பு கூறுதல். இறைமாட்சி முதலாக் கூடாநட்பு ஈறாகப் பொருட்பகுதியாகிய அமைச்சும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்பும் கூறினார். இனி அவ்வரசர்க்கும் அவராலாக்கப்பட்ட பொருட்கும் கேடுவரும் நெறியை அறிந்து காக்குமாறு கூறவேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: பேதைமையாவது அறிவின்மையான குணம்; அதனை விடுக.

இ) பரிப்.: துன்ப இயலாவது கேட்டிற்குக் காரணம் ஆகியவற்றது இயல்பு கூறுதல். இறைமாட்சி முதல் ஆகக் கூடா நட்பு ஈறு ஆகப் பொருள் பகுதி ஆகிய அரசர்க்குரிய அமைச்சும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்பும் கூறினார்: இனி அவ்வரசர்க்கும் அவரால் ஆக்கப்பட்ட பொருட்கும் கேடுவரும் நெறியை அறிந்து காக்கும் ஆறு கூற வேண்டும் ஆதலின் இது கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது. அஃது யாங்ஙனம் கூறினார் எனின், அது கூறிய அதிகாரம் பன்னிரண்டிலும், அதன் முதல் ஆகப் பெரியாரைப் பிழையாமை ஈறு ஆகப் பிறரால் கேடு வரும் திறனும் அதனைக் காக்கும் ஆறும், தன்னான் வரும் துன்பப்பகுதி ஐந்து அதிகாரத்தானும் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: இனி அந்நட்பினை[1] எதிர்மறுத்துப் பகைமுகத்தால் கூறிய தொடங்கினார். அப்பகை தான் முற்றக்கடியும் குற்ற மன்மையின் உளவாய வெகுளியானும் காமத்தானும்[2] வருவதாம் அவற்றுள்[3] வெகுளியான் வருவன[4] ஐந்ததிகாரத்தானும் காமத்தான் வருவன[5] ஐந்ததிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப்படுத்து,[6] இரண்டதிகாரத்தான் கூறுவான், தொடங்கி, முதற்கண் பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதும் அறியாமை.

ஊ) கவிராசர் .: அஃதாவது யாதொன்றையும் அறியாமல் இருக்கிறது.

ஏ) பழைய 2: அஃதாவது யாதும் அறியாமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பேதைமை :

அறியாமை என உரையாசிரியர்கள் கருதுகின்றனர் இலக்கிய உலகில் இச்சொல் 'அறியாமை,' 'மயக்கம்', 'வருத்தம்' முதலான பல பொருள்களில் வருமாயினும் இந்த அதிகாரத்துப் பொருள் நோக்கம் வேறாயிருத்தலைக் காணலாம். 'பேதைமை' என்பது மாதர்க்கணிகலம்' எனின் அறியாமையாகி வேண்டாக்குணமாகாது. 'அணிகலம்' என்ற ஔவையார் கூற்றுப்படி வேண்டிய காலத்துக் கொண்டும் வேண்டாக்காலத்து நீக்கியும் ஆளவேண்டிய குணமாகிறது வள்ளுவரும் 'கையறியாமையே பேதைமை' என்பர். 'பேதைப் படுக்கும் இழவூழ்' என்பர். இவற்றால் அறிவிருந்தும் பயன்படாத தன்மையையே காட்டுவதாகும்.

---

1 அந்நட்பினை - தீநட்பு கூடா நட்புக்களை

2. வெகுளியானும், காமத்தானும் - கோபத்தாலும், இச்சையாலும்

3. அவற்றுள் - வெகுளி, காமம் என்னும் இரண்டனுள்

4. கோபத்தால் வருவன : கோள், துணிவு, துரோகம், பொறாமை, பிறர்குணத்தைச் சகியாமை, பிறன் பொருளைக் கவருதல் காரணமின்றி திட்டுதல், அடித்தல் ஆக எட்டு. மனு., அத்., 7.

5. காமத்தால் வருவன: வேட்டையாடுதல், சூதாடுதல், பகலில் தூங்குதல், பயனில கூறுதல், பெண் பின்னால் சுற்றுதல். குடித்தல், பாட்டு கூத்து வாத்தியம் இவற்றில் விருப்பமுள்ளவனாய் இருத்தல், வீணாகச் சுற்றுதல் ஆகப் பத்து.-மனு., அத்.,7.

6, இருவகைப்படுத்து - பேதைமை, புல்லறிவாண்மை என இரண்டு வகைப்படுத்தி

'அறியாமை' என்பதே ஆசிரியர் கருத்தாயின் அதிகார அடைவு செய்தே கல்வி, கல்லாமைகளைப் போல 'அறிவுடைமையை யடுத்தே அறியாமையையும் அமைத்திருப்பர். இதுவே அறியாமை வேறு பேதைமை வேறு என்பதை உணர்த்தும். நல்லனவே செய்யக் கடமைப்பட்ட நண்பன் தீமைசெய்வானாயின் 'அது பேதைமை ஒன்றோ பெருங்கிழமை' என்று உணர்க என்ற ஆசிரியர் விதந்த முறை பற்றி நட்பைப் பற்றிய பகுதியில் பேதைமை அமைவதால் இது முற்றும் அறியாமையாகாது என்பதும் தெளியப்படும்.

மணக்குடவர் உரை 'அரசுக்கும் பொருளுக்கும் கேடுவரும் நெறி' எனல் காண்க. பரிமேலழகர் கூறும் விளக்கம் 'காம வெகுளிகட்கு அடியாய மயக்க வகையுள் முதன்மையானது' என்னும். அங்ஙனமாயின் அது அடியோடு அறிவின்மையாகாது.

வள்ளுவர் கூறுவன, 'கார்தன்மையைக் கையல்லதன்கட் செய்தலும், ஏதங்கொண்டு ஊதியங் கைவிடலும்' போல்வன ஆகவே பேதைமை என்பது உய்த்துணர மாட்டாது தாம் எண்ணியதையே மெய்யாகக் கொண்டு மயங்கலாம்.

இதனைப் பேதைமைக்கும் மடமைக்கும் வேறுபாடு எழுதும் இளம்பூரணர் உரையானும் அறியலாம் (மெய்ப்பாட்டியல் 3 உரை).

ஆகவே 'அறியாமை' என்று எழுதும் ஆசிரியர்களின் கருத்து முற்றும் அறியாமையைக் குறிப்பதாகாது. நல்லது-கெட்டது, ஊதியம் பயப்பது-கேடு பயப்பது என்பவற்றை உய்த்துணரமாட்டாத மயக்க உணர்வேயாகும். 'பேதைக் குரைத்தாலும் தோன்றாதுணர்வு' என்ற பழமொழிப் பாடலைக் காட்டி அரண் செய்வர் தேவநேயர்.

84.1. பேதைமை என்பதொன் றியாதெனின்
ஏதங்கொண் (டு)
ஊதியம் போக விடல். (831)

உரைப்பகுதி :

அ) மணக். : அறியாமை என்று சொல்லப்படுவது ஒன்று யாதெனின், அது குற்றம் பயப்பனவற்றைக் கொண்டு நன்மை பயப்பனவற்றைப் போகவிடல் எ—று.

இது பேதைமையின் இலக்கணம் கூறிற்று.

ஆ) பரிதி : பேதைமை என்பது ஒன்று அது யாதெனில் குற்றங்களை விளைத்துத்[1] தனக்கு உண்டாகிய உதவியாளரைக் கெடுத்தல் எ—று.

இ) பரிப்.: அறியாமை என்று சொல்லப்படுவது யாது எனில் குற்றம பயப்பனவற்றைக் கைக்கொண்டு நன்மை பயப்பனவற்றை விடுதல் எ—று.

பேதைமையின் இலக்கணம் கூறுவார் முற்படத் தன் கருமம் அறியாமை என்று கூறினார்.

ஈ) காலி.: அறியாமை என்று சொல்லப்படுவது யாது எனின் குற்றமாகிய செயலைக் கொண்டு உறுதியாகிய செயலைச் செய்யாதே விடுதல் எ—று.

அல்லதூஉம் பேதைமை என்று சொல்லப்படுவதாகிய தீக்குணம் ஒன்று உண்டு; அஃது யாதோ எனில் பிறர் குற்றம் முழுவதும் கைக்கொண்டு[2] மற்று அவர் தமது நற்குணம் அனைத்தும் அழிய விடுதல் எ-று.

உ) பரிமேல்.: பேதைமை என்று சொல்லப்படுவது ஒருவனுக்கு எனைக்குற்றங்களெல்லாவற்றினும் மிக்கது ஒன்று; அதுதான் யாது என்று வினவில், தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல், (எ—று).

கேடு-வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம்-செல்வம், புகழ், அறங்கள். தானே தன் இருமையும்[3] கெடுத்துக்கோடல் என்பதாம்.

ஊ) கவிராசர்.: ஒருவனுக்குப் பேதை என்கிறது யாதென்றால், தனக்குக் கேடு வருகிற காரியத்தைச் செய்து, பலன் வருகிற காரியத்தை விடுகிறது (எ—று).

ஏ) பழைய 2 : பேதைமை யென்று சொல்லப்படுங் குற்றம் எல்லாக் குற்றத்தினுமிக்க குற்றம்; அது யாதென்று வினவில் தனக்குக் கேடு வருவனவற்றைக் கைக்கொண்டு செல்வம் வருவனவற்றைக் கைவிடுதல்.

---

1. விளைத்து - உண்டாக்கி 2. கைகொண்டு - பற்றிக்கொண்டு
3. இருமை - இம்மை, மறுமை,

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய உரைகள் அனைத்தும் 'பேதைமையாவது குற்றம் பயப்பனவற்றைக் கொண்டு, நன்மை பயப்பனவற்றை விடுதல்' என்ற கருத்துடையன.

காளிங்கர் இதனுடன், 'பிறர் குற்றங்களனைத்தையுங் கொண்டு, அவர் பாலுள்ள நல்லசெயல்களைக் கழியவிடுதல்' என்னும் மற்றொருரையும் தருவர்.

மணக்குடவர், கவிராசர் உரைகள் 'பேதைமை என்பது ஒன்று யாதெனின்' என்பது வரை ஒரு தொடராகக் கொண்டு, 'போகவிடல்' என்பதனொடு முடிப்பர். பரிமேலழகர் முதலா-னோர் 'பேதைமை என்பது ஒன்று; (அஃது) யாது எனின் ஏதங்-கொண்டு ஊதியங் கைவிடல்' என்பர்.

தேவநேயர் 'பேதைமையாவது தானே தனக்கு நேர இருக்-கும் இருமையின்பங்களையும் புறக்கணித்தல்' என்பர்,

வரத. 'ஊதியம் — அறிவாற் பெறும் இலாபம். ஏதம்— அறியாமையான் வரும் குற்றம்' எனச் சொல்விளக்கம் தருவர்.

இராம. 'பேதைமை — குணங்களைவிட்டுக் குற்றத்தைப் பிடித்துக்கொள்ளும் முட்டாள்தனம்' என்பர்,

மு கோ 'குணம் நாடி குற்றமும் நாடி, குற்றத்தை மட்டும் பிடித்துகொளல்' என்பர்.

பொதுவாக இவ்வுரைகளில் கருத்து மாற்றம் இன்று. 'பேதைமை என்பதொன்றியாது எனின்' என்பது முன்னர் 'இணைத் துணைத்தென்பதொன்று' என்றதைப்போன்ற தொடர் வழக்கு.

பேதைமை என்பது கேட்டதனை உய்த்துணராது உய்யாக் கோடல். மடம் என்பது பொருண்மை அறியாது திரியக் கூடல். தொல். நூற்பா 248 உரை.

ஒன்று என்றது, இழிதகைமையில் இதனோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்கது வேறு ஒன்றும் இல்லாமையால்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பேதைமை ஏதங்கொள்ளல் :

அஞ்சின மெனினும் மெய்யே அடையவந் தடையுமானால்
அஞ்சுத லதனின என்னை பயன் ...... ...... — யசோ., 33

பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார் — கம்ப., 1569

84.2. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல். (832)

உரைப்பகுதி :

அ) மணக்.: அறியாமை எல்லாவற்றுள்ளும் அறியாமையாவது தனக்குக் கைவாராத[1] பொருளின்கண் காதன்மை செய்தல் எ—று.

இது வருந்தினாலும் பெறாதற்குக் காதல் செய்தலும் பேதைமை என்றது.

ஆ) பரிதி: பேதைமையிற் பெரியபேதைமையாவது யாரிடத்திலும் விரோதம் இடுகை[2] எ—று.

இ) பரிப்.: அறியாமை எல்லாவற்றுள்ளும் அறியாமை ஆம்: தனக்குக் கை வாராத பொருளின்கண் காதன்மை செய்தல் எ-று.

இது வருந்தினாலும் பெறாததுக்குக் காதல் செய்தலும் பேதைமை என்றது.

ஈ) காளி.: அறியாமைகள் எல்லாவற்றினும் மிக்க அறியாமையாவது யாதோ எனின், செய்யும் முறையல்லவற்றின்கண் காதன்மை செய்தலே கீழ்ச்சொன்ன நரகாதிகட்குக்[3] காரணமாகிய பாவங்கள் எலலாம் விளைக்கும் இவன் காதன்மை என்பது பொருளாயிற்று, எ—று.

உ) பரிமேல்.: ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது, தனக்கு ஆகாத ஒழுக்கத்தின்கண் காதன்மை செய்தல், (எ—று.)

இருமைக்கும் ஆகாஎன்று நூலோர் கடிந்த[4] செயல்களை விரும்பிச் செய்தல் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் பேதைமையது இலக்கணம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: ஒருவனுக்குப் பேதைமையுள் எல்லாம் மிக்க பேதைமையாவது, தனக்காகாத ஆசார ஒழுக்கத்தின்மேலே ஆசைவைத்துச் செய்கிறது (எ—று).

---

1. கைவராத - பொருந்தாத 2. விரோதம் இடுகை - பகைத்தல்
3. நரகாதிகட்கு - நரகம் முதலியவைகளுக்கு 4, கடிந்த - விலக்கிய

ஏ) பழைய 2 ; ஒருவனுக்குப் பேதைமையெல்லா வற்றுள்ளும் பேதைமையாவது தனக்காகாத ஒழுக்கத்தின் கட் காதன்மை செய்தல்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'காதன்மை'

'காதலையுடையனாந்தன்மை' என்ற கருத்தின-பழைய ஆசிரியர்கள். பரிதி. 'பகைமை' என்பர். ஆனால் 'கையல்லதன்கண் செயல்' என்பதற்கு ஏற்ற உரையன்று, காளி. 'காதனமை-பொருள்' என்பர். கவிராசர் 'முறிந்த சொல்லையும் செய்கைகளையும் உடைமை' என்பர்.

'கையல்லதன்கண்'

'கைவராத பொருளின்கண்' மணக்.; 'செய்யும் முறைமை யல்லாதன' காளி.; 'தனக்கு ஆகாத ஒழுக்கத்தின்கண்' பரிமேல்,; 'தனக்கு ஆகாத ஆசார ஒழுக்கத்தின்மேல் ஆசைவைத்துச் செய்கிறது' கவிராசர். 'தனக்கு ஆகாத ஒழுக்கம்' பழைய உரை.

இவற்றுள் 'கையல்லதன்கண் காதன்மை செயல் பேதைமையுள் எல்லாம் பேதைமை' எனக்கூட்டி ஒழுக்கமற்ற காரியங்களிற் காதல் செய்தல் பெரும் பேதைமை என்ற கருத்தமைந்த உரைகளே சிறந்தன. 'கை-ஒழுக்கம்' ஆகுபெயர். பிற்கால உரைகளும் இக்கருத்தனவே.

ஒ) ஒப்புமைப்பகுதி :

காதன்மை :

காதன்மை — குறள்., 507

...... அவளை யுன்னிச் சிந்தனை தீர்ந்து தீராப்
பேதை ... ... ... ... ... —கம்ப., 8407

84.3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். (833)

உரைப்பகுதி :

அ) மணக்.: நாணம் இல்லாமையும், தெரிந்து உணராமையும், ஈரமின்மையும், யாதொரு பொருளையும் போற்றாமையும் பேதையர் தொழில் எ—று.

இது பேதையார் செயல் கூறிற்று.

ஆ) பரிதி.: நாணுதலின்மை, காரியம் எண்ணாமை கிருபை இன்மை, யாதொரு பண்டமும் பேணாமை, ஆகிய இந்நாலு குணமும் பேதை தொழில் எ—று.

இ) பரிப்.: நாணம் இன்மையும், தெரிந்து உணராமையும், ஈரம் இன்மையும், யாது ஒரு பொருளையும் போற்றாமையும் பேதையார் தொழில் எ—று.

இது பேதையார் தொழில் கூறிற்று. இவை நான்கினாலும் பேதையார் இலக்கணம் கூறியவாறு.

ஈ) காளி.: செய்யத் தகாதன செய்தால் பிறர் சிரிப்பர் என்று நாணம் இல்லாமையும், நன்மையும் தீமையும் ஆராயாமையும், யாவர் மாட்டும் தன் நெஞ்சத்தோடு நட்பும் நயமும் இல்லாமையும், தவமும் ஞானமும் கல்வியும் முதலிய பெரும் பேறுகளில் யாதாழும் ஒன்று தனக்கு வேண்டும் என்று பேணிக் கொள்ளாமையும் இப்படிச் சொல்லப்பட்டவை எல்லாம் மதிமயக்கை[1] உடையது யாது? மற்று அதுவே பேதை தன் தொழில் எ—று.

உ) பரிமேல்.: நாணாவேண்டுமவற்றுக்கு நாணாமையும், நாடவேண்டுமவற்றை நாடாமையும் யாவர் மாட்டும் முறிந்த சொற்-செயல் உடைமையும், பேணவேண்டுமவற்றுள் யாதொன்றனையும் பேணாமையும் பேதையது தொழில்.

நாண[2]வேண்டுமவை—பழி பாவங்கள். நாடவேண்டுமவை[3]—கருமங்களில் செய்வன தவிர்வன, முறிதல்—கண்ணறுதல்[4]. பேண-வேண்டுமவை—குடிப்பிறப்பு. கல்வி, ஒழுக்கம், முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றும் இயல்பாய் வருதலின், 'தொழில்' என்றார்.

ஊ) கவிராசர்: நாண வேண்டியதற்கு நாணாமையும், நாட வேண்டியதற்கு நாடாமையும், எல்லாரிடத்திலும் முறிந்த சொல்லையும் செய்கைகளையும் உடைமையும், யாதொன்றினையும் பேணாமையும் பேதையின் தொழில்.

1. மதி மயக்கை — அறிவை மயக்குவது
2. நாணம் — தமக்கு ஒவ்வாத செயல்களில் நாணுதல்
3. நாடவேண்டுமவை — ஆராயத் தக்கவை
4. கண்ணறுதல் — கண்ணோட்ட மில்லாமை

ஏ) பழைய 2: நாண வேண்டுவனவற்றிக்கு நாண மில்லாமையும், நாடவேண்டுவனவற்றிற்கு நாடுதலில்லாமையும், யாவருந் தன்னிடத்து அன்பில்லாமைக்கு ஏதுவாகிய செயலும், பேண வேண்டுவனவற்றைப் பேணுதலில்லாமையும் பேதையது தொழிலாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பேதை' ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுச்சொல். தேவநேயர் நாணாமை முதலியன எதிர்மறைத் தொழிற் பண்புப் பெயர்கள் 'மை' எதிர்மறைக்கண் வரும் தொழிற்பெயர் விகுதியாதல் காண்க. நாணாமையால் வளருவன தீச்செயல்கள். நாடாமையின் தொழில் அறியாது எதனையும் இயற்றுதல். நாணின்மையின் தொழில் 'நல்லார் தொடர் கைவிடல்'. யாதொன்றும் பேணாமையான் வரும் தொழில் வறியனாதல். ஆதலின் நாணாமை முதலியன அவற்றால் விளையும் தொழிற்பயனுக்கு ஆயினமையின் அவற்றையே தொழில் என்றதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

பழிமுதல் நாணார் செய்வன தவிர்வ பார்த்திடார் குடிப்பிறப் பொழுக்கம்
எழில்வளர் கல்வி யாதிகள் பேணார் எவரையும் முறிக்கும்சொல் செயலார். — விநா.அரசி., 130

ஓ) மேற்கோள்பகுதி :

தெய்வச் : வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா என்ற சூத்திரத்தில் தொகைபெறாது வந்ததற்கு மேற்கோள்
—தொல்.சொல்., 288

மயிலை ; நாண் என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். — நன்., 451

84.4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான டங்காப்
பேதையின் பேதையார் இல். (834)

உரைப்பகுதி :

அ) மணக் :. நூல்களைக் கற்றறிந்தும், அவற்றைப் பிறர்க்கு இசையச் சொல்லியும்,[1] தான் அடங்குதலைச் செய்யாத பேதையார் போலப் பேதையார் உலகத்தில் இல்லை எ—று.

ஆ) பரிதி :. சகல சாஸ்திரங்களையும்[2] ஓதி உணர்ந்தும் பிறர்க்குச் சொல்லியும் தாம் அடங்காத பேதையினும் பெரிதான பேதையில்லை எ—று.

இ) பரிப் :. நூல்களைக் கற்று அறிந்தும் அதனைத் பிறர்க்கு இசையச் சொல்லியும் தான் அடங்குதலைச் செய்யாத பேதையைப் போலப் பேதையார் உலகத்து இல்லை எ—று.

கல்வி உடையாரை அறிவு உடையார் என்று உலகத்தார் கூறுவர் ஆதலின் அதனை மறுத்துக் கூறார் ஆயினும் அடக்கம் இல்லை ஆயின் பேதையார் என்று கூறப்பட்டது.

ஈ) காளி :. கற்கக் கடவ நூல்கள்[3] அனைத்தையும் கற்றும் அவற்றின் பொருள் முழுவதும் உணர்ந்தும், மற்று அவை பிறர்க்கு இவ்வண்ணமே உரைத்தும் பின்னும் தான் அமைவு உடையா ஆகாதான் யாவன்? அவனைப்போலப் பேதைமை உடையார் உலகத்து யாவரும் இல்லை எ—று.

இனித் தமக்கு உள்ள மதிகொண்டு பழுதுடன் சில கற்றும் கல்லாதும் பேரறிவு உடையவராகப் பாவித்திருக்கும்[4] புல்லறிவாளர் அறிவும் பேதைமையின்கண் ஓர் பிரிபு உரு[5] ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

---

1 இசையச் சொல்லி — பொருந்தச் சொல்லி
2. சகல சாஸ்திரங்கள் — நூல்கள் அனைத்தும்
3. கற்கக் கடவ நூல்கள் — கற்றற்குரிய நூல்கள்
4. பாவித்திருக்கும் — எண்ணியிருக்கும்
5. பிரிவு உரு — வேறுபடுத்தும் உருவம்

உ) பரிமேல் .: மனமொழிமெய்கள் அடங்குதற்கு ஏதுவாய நூல்களை ஓதியும்[6] அவ்வடக்கத்தான் வரும் பயனை உணர்ந்தும், அதனை அறியலுறப் பிறர்க்கு உரைத்தும் தான் அவ்வயடங்கி ஒழுகாத பேதை போலப் பேதையார் உலகத்து இல்லை.

உம்மை முன்னும் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய[7] இவற்றால் தீராமையானும், வேற்றுமருந்து இன்மை-யானும்[8] 'பேதையிற்பேதையாரில்' என்றார். இவை இரண்டு பாட்டானும் பேதையது தொழில் பொதுவகையான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையான் கூறுவர்.

ஊ) கவிராசர் .: மனவசன காயங்கள்[9] அடங்குவதற்கு ஏதுவான சாத்திரங்களைக் கற்றும், அவ்வடக்கத்தான் வரும் பயனை அறிந்தும், அந்தப்பொருளைப் பிறருக்குச் சொல்லியும், தான் அடங்கி அந்த ஆசாரத்தின்[10] படியே நடவாத பேதையைப் போலப்-பேதையானவர்கள் உலகத்தில் இல்லை எ—று.

எ) பழைய 2 .: 'தாமடங்காப்' பாடம்.

மனம் வாக்குக் காயங்கள் அடங்குற்கு ஏதுவாய நூல்களை ஓதியும், அவ்வடக்கத்தான் வரும் பயனை உணர்ந்தும், அதனைப் பிறர்க்கு உரைத்தும் தாமடங்காத பேதையாரைப் போலப் பேதை-யார் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

ஒ) ஒப்புமைப்பகுதி :

தான் அடங்காப் பேதை :

தானைகயே யாயினும் தானடங்கா னாகுமேல்
[illegible] ணடைடையா னாதல் இனிது. —இனியவை., 8

---

6. ஓதியும் என உரை செய்தராதலின் உணர்ந்தும் என்பதில் உள்ள உம்மை முன்னுங் கூட்டப்பட்டது என்றார்.
7. மருந்தாய - பரிகாரமான
8. வேற்றுமருந்து இன்மையாலும்-பேதைமை ஒழிப்பதற்கு ஓதுதல் முதலியவன்றி வேறு மருந்து இல்லாமையாலும்.
9. மனவசன காயங்கள் - மனமொழி மெய்கள்
10. ஆசாரத்தின் - ஒழுகலாற்றின்

.......... .......... .......... பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணர்வு. —சிறுபஞ்ச ., 22

முற்றும் :

நற்பெருங் கல்விச் செல்வம் நவையறு நெறியை நண்ணி
முற்பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி முறைப்
பிற்பயன் உணர்தல் தேற்றாப் பேதை —கம்ப., 8957

பிறிந்தவர்க் குறுதுய ருணரும் பெற்றியால்
அறிந்திருந் தறிவில ரனைய ராமெனச்
செறிந்ததம் பெடைகளைத் தேடித் தீக்கொள
மறிந்தன கரிந்தன வாளப் புள்ளெலாம். —கம்ப ., 6754

கற்றுப் பிறர்க்குரைத்துத் தானில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுரைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல். —நீதிநெறி ,21

ஓதியுணர்ந்தும் :

ஓதலும் ஓதி உணர்தலும். —அறநெறி., 147

வேந்தன் பிறருக்கு உபதேசிக்கும் அளவில் திறனுடையனாக இருத்தல் கூடாது. அங்ஙனம் பிறர்க்கு உபதேசிக்கும் குணம்படைத்தும் ஒரோ அமையத்துத்திற் தவறுதல் கூடும். —சுக்கிர. அத்1:91

84.5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு. (835)

உரைப்பகுதி :

அ) மணக்.: 'தாம் புக்கழுந்தும்' பாடம்.

பேதை ஒரு பிறப்பின்கண் செய்யும் செயலாலே செய்ய வல்லவன், எழுபிறப்பினும் தாம்புக்கழுந்தும் நரகத்தை எ-று.

ஆ) பரிதி.: ஒரு சன்மத்திலே பேதைக்குணம் பெற்றால் எழு சென்மமும் நரகம் புகுவான் எ-று.

இ) பரிப்.: பேதை ஒரு பிறப்பின்கண் செய்யும் செயலானே செய்ய வல்லன் ஆம்: எழு பிறப்பினும் தான் புக்கு அழுந்தும் நரகத்தை எ-று.

எனவே அதற்குக் காரணம் ஆயின செய்யும் என்றவாறு ஆயிற்று. எழுபிறப்பினும் என்றது ஒருகால் அதன் அகத்திலே பிறந்தால் அவ்வுடம்பு நீங்கினாலும் பின்னும் அதன் உள்ளே பிறந்து அகலாது உறப் பேதை அறம் செய்யுமாறு கூறிற்று.

ஈ) காளி .: தான் பெற்று நின்ற ஒரு பிறவிக்கண்ணே செய்து கோடலை வல்லன் பேதையானவன் : யாதினையோ எனின்? இனி வரும் பிறப்பின்கண் எஞ்ஞான்றும் ஒரு கரையேற்றம் இல்லாத வண்ணம் தான் புக்கு அழுந்தும் கும்பி நரகத்தை[2] எ-று

உ) பரிமேல் : பேதையாயினான் வரும்பிறவிகளெல்லாம் தான்புக்கு அழுந்தும் நிரயத்தினை இவ்வொருபிறப்புள்ளே செய்து கொள்ள வல்லனாம், (எ-று.)

எல்லாப்பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்தும் நிரயம் அழுந்துதற்கு[3] இடனாய நிரயம். ஈண்டைப் பிறப்புக்களினும் கொடுவினை வயத்தால்[4] அந்நிரயத்துன்பமே உழந்து[5] வருதலின், 'எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு' என்றார். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத்துன்பம் உழத்தற்கு ஏதுவாம் கொடுவினைகளையே அறிந்து சிலகாலத்துள்ளே செய்துகோடல் பிறர்க்கு அரிது ஆகலின், 'ஆற்றும்' என்றார். இதனான் அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் .: ஒருபிறப்பிலே அறிவில்லாதானாய் இருப்பவன் எழுபிறப்புக்களிலே நரகத்திலே பிறந்து துக்கத்தை அனுபவிப்பான் (எ—று).

ஏ) பழைய2 : ஒருபிறப்பினுள்ளே செய்துகொள்ள வல்லனாம் பேதை, எழுபிறப்புந் தான் புக்கு அழுந்தும் நரகமெல்லாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மனக்., பரிமேல்., உரைகள், பேதை எழுமையும் தான்புக்கழுந்தும் அளறு, ஒருமைச்செயல் ஆற்றும் 'எனக் கூட்டிப்

1. அகல்ாதுற — நீங்காதிருக்க
2. கும்பி நரகம் — ஒருவகை நரகம்
3. அழுந்துதற்கு — மூழ்குதற்கு
4. கொடுவினை வயத்தால் — பாவத்தால்
5. உழந்து — வருந்தி

பொருள் கண்டவை. 'தாம் புக்கு' என்பது மணக். பாடம் போலும் பரிதியுரை 'ஒருமை பேதை செயலாற்றின் எழுமையும் அளறுபுக்-கழுந்தும்' எனக்கூட்டிப் பொருள் செய்திருப்பர் போலும். இவருரை இவர் கொண்ட பாடம் 'செயலாற்றின்' என்பதைத் தெரிவிக்கிறது. 'ஆற்றும் பேதை' எனவே பாடங்கொள்ளின் பெயரெச்சத்தை செயின் என்னும் வினை எச்சமாகப் பொருள் கோடும் வழுநிலை தோன்றும் எண்ணித்துணிக.

'ஏழுபிறப்பினும் என்றது ........... பேதை அறஞ்செய்யுமாறு கூறிற்று' என்ற பரிப். உரைபபகுதி தெளிவில்லதும், மரபுக்குழப்பம விளைப்பது மாகும். யாங்ஙனம் எனின? ஏழுபிறப்புக்கு நிரயம புகும் அளவுக்கு வினையாற்றாமல் இடையிலே வேறு ஒரு பிறவியை எடுத்தால், அவ்வுடம்பும் நீங்கிய பின்னும் அதனுவளே புகுந்து அகலாது உறுவதற்காகப் பேதையறஞ் செய்வன் என்பது கூறிற்று என்பர். 'ஏழுபிறப்புக்கு வேண்டிய அளவு நரகத்திற்கு ஏதுவான துன்பத்தைச் செய்யும்போதே இடையில் இறந்துவிட்டால், அக்குறை முடியும் வரை அவ்வுடம்பாற் புகுந்து மிச்சமுள்ள துன்பக் காரணங்-களைத் தேடிக் கொள்வான்' என்னும் கருத்தை வழங்குவர். இதன் கருத்து 'எடுத்த பிறவியின ஊழ் முடிவதற்கு முன்னே இறக்கக்கூடும் இறந்தால் மீண்டும் அந்தவுடமபில் புக்கு எஞ்சிய மூட்டைகளைக் கட்ட நேரும். அதன் பயனாக ஏழு பிறவிகளில் நரகத்தை நுகரும்' என்பது.

பிறவி என்பது ஆகாமிய சஞ்சித வினைகளில் நுகர்ச்சிக்குத் தகப்பழுத்த பிராரப்தமாக வருவது. அதன் இடையிலே மரணம் என்பது நியதிக்குமாறானது. மீளவும் அந்த உடம்பிலே நுழையும் என்பதும் அங்ஙனமாவதே. இது ஞான நூன் மரபுக்குப் புறம்பானது ஆதலால் பல வேறுபட்ட ஞான நூல்களை ஆய்ந்து முடிவு அறிக.

அதனினும் 'அகலாது உறப் பேதை அறம் செய்யுமாறு கூறியது' என்ற கருத்துரை மிகக் குழப்பமானது ஆதலால் 'பேதை அறஞ் செய்யுமாறு கூறிற்று' என்பது மறஞ்செய்யுமாறு கூறியது என்றிருப்பின நன்றாகும். நன்கு எண்ணுக.

காலிங்கரும் பரிமேலழகரும் கருத்தளவில் ஒருதன்மையர். பேதை எழுமையும் அளறுபுக்கு அழுந்தும் எனின் நிரயம் புகுவதற்காக (யாதனா சரீரத்துடன்) துன்பத்தை எய்தித் தொலைக்கும் உடலுடன்

நிரயம் புகுமாயின் துன்பங்களை நுகர்ந்து கழிக்குமளவரை வேறுடல் எடுத்தல் இல்லை ஆகவே எழுமையும் வருந்தும் என்பது பொருளற்றதாம் ஆகவே எழு பிறவிகளிற் பிறந்துழலுங் காலம் எனல் இயைபுடையதாகும் எனனுக.

இங்ஙனம் அன்றி 'அளறுபுகும்' என்பதை நரகத்தில் நுகர வேண்டிய துன்பம் போன்ற துன்பத்தை வரும் பிறவிகளில் எழு தலைமுறை நுகரும் என்றல் இயைபுடையதாகும்

**தேவநேயர்** 'வரும் பிறவிகளில் எல்லாம் நிரயத்தில் வருந்தும்' என்றும் 'அத்துணைக்காலம் நுகர்தற்குரிய கொடுவினைகளை' என்றும் **பரிமேலழகர்** கூறியது எல்லையிறந்திருத்தல் என்னும் குற்றம் உடைத்து. அன்றியும் எழுவகைப் பிறப்பினும் நரகம் புகும் என்பது உத்திக்குப் பொருந்துவதன்று: ஆகையால 'எழுமை' என்பதற்கு 'எழு' என்பதற்குத் தொகைப் பொருள் கோடலே தகும்: வகைப் பொருள் ஏலாது என்க. எழுமை நிறைவு குறித்து வந்த மரபெண்களுள் ஒன்று நீண்டகாலம் என்ற அளவிற் கோடலே தகுதி என்பர். வரத 'அளறு புக்கு அழுந்தும்' என்றது அத்துணைத் துன்பத்தை வரும் பிறவிகளில் எய்தும் என்பதே கருத்து. நேரே நரகத்தழுந்தி நுகருவன் என்பதன்று' என்பர்.

இராம. 'எழுபிறவிகளிலும் அனுபவிக்கக்கூடிய நரகத்தை உண்டாக்கிக் கொள்வன்' என்பர். நரகம் உண்டாக்க இயலாது ; அத்துணைப் பெரிய துன்பத்தைத் தேடிக்கொள்வன் என்னும் கருத்தினதாகக் கொள்க.

கா. சு. எழுபிறவியில் துய்க்கும் துன்பத்தைப் பேதை இந்த ஒரு பிறவியிற் தேடிக்கொள்வன் என்ற உரை தெளிவும், மரபுபிறழாமையும் உடையது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

இம்மையே வறுமை யெய்தி யெழுமையு மிழப்ப ரன்றே —கம்ப.,4431

**ஒருபுடை :**

பாப முற்றிய பேதை செய்த பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றி மிகச்சி வந்தன னொத்த னன்குண குன்றிலே.

—கம்ப ,1644

ஓ) மேற்கோள்பகுதி :

சங்கர .: 'ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்' இருமை என்பது 'ஒருமை ……… அளறு' என்றாற் போலக் குணியைக் குணமாகக் கூறுவதொரு மரயுவமுவமைதி — நன்.,162

84.6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். (836)

உரைப்பகுதி :

அ) மணக்.: ஒழுக்கமறியாத பேதையான் ஒருகருமத்தை மேற்கொண்டானாயின், பொய்யன்[1] எனவும்பட்டு, பிறர்க்குப்புனை பூணும்.

புனைபூணல்—சிறைப்படுதல்.

ஆ) பரிதி.: பேதை பொய் சொல்வான் என்றதும் ஒன்றோ! உன்னை நம்போம், வேறேயாம் புனையாகச் சொல்லி வை என்று வார்த்தையுங் கேட்பர்: பேதை ஒருகாரியம் செய்யப்புகின் எ—று.

இ) பரிப்.: பயன் அறியாப் பேதை ஒரு வினையை மேற்கொள்வன் ஆயின் அஃது ஒன்றில் தப்பும்; ஒன்றில் செய்ய வல்லாரைத் தேடும்: அல்லது தான் செய்து முடிக்க மாட்டான் எ—று.

இது பொருள் செய்யும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: அவ்வினை செய்யத்தகும் ஒழுக்கம் அறியாப்பேதையானவன் ஒரு வினை செய்ய ஒருப்படும் ஆயின்[2] அது பொய்யாய் விடும் ஒன்றோ; அன்றி இனி ஒன்றோ மேல் விளைவது அறியாது பிறர்க்குத் தான் புனையாதலைத் தன்மேலே ஏறட்டிக்கொள்ளும் எ—று.

உ) பரிமேல்.: செய்யு முறைமை அறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொள்வனாயின், அதுவும் புரைபடும், தானும் தளைபூணும்.

1 பொய்படும் — புரைபடும், அதாவது காரியம் முடிவு பெறாமலே பொய்த்துப்போகும்
2 ஒருப்படும் ஆயின் — ஒப்புவானாயின்

புரைபடுதல்-பின் ஆகாவகை உள்ளழிதல், ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல். அதனையும் கெடுத்துத் தானுங்கெடும் என்பதாம் இதனால் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது

ஊ) கவிராசர்: செய்கிற முறைமை அறியாத பேதையானவன் ஒருகாரியத்தைச் செய்யத் தொடங்கினால், அத்தக் கருமமுங் கெட்டு தானுங் குற்றத்தை அடைவான் எ—று.

ஏ) பழைய 2: செய்யுந் தொழிலின் முறைமை யறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொள்ளுவானாயின் அது பலியாது பொய்படும் தானும் இகழ்ச்சியாகிய பூணைப்[3] புனையும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். கூறும் 'பேதையான்' என்றது ஆனுருபு கருவிப் பொருளதன்று. பேதைமையுடையவன் என்னும் பண்படியாகப் பிறந்த ஆண்பாற் பெயர்ச்சொல் என்க.

மணக்குடவர் உரையமைதி கையறியான், பேதை என்பதைக் குறிக்கும். 'பேதையான் ஒரு செயலை மேற்கொண்டானாயின் பொய்யன் ஆவன்; பிறருக்காகச் சிறையும் புகுவன்' என்பது.

பரிதி. ''பொய் சொல்வான். வேறே யாம் புனையாகச் சொல்லியவை என்று வார்த்தையுங் கேட்பர்''. இது 'பேதையை வினைக்கண் ஈடுபடுத்தினவர் அவன் பொய் சொல்வான் என்பதையும், யாம் புனைந்துரையாகச் சொல்லியன இவை என்பதையும் கேட்பர்' என்ற கருத்துடையது. உரை நடை எளிதில் விளக்கமில்லது.

பரிப். 'பயன் அறியாப் பேதை ஒருசெயலைத் தொடங்குவனாயின், அதில் தவறு செய்வான், அல்லது தப்பிப்போவான்: தன்னால் அதனை முற்றமுடிக்க மாட்டாமையான் செய்யக்கூடிய ஒருவரைத் தேடிப்பிடிப்பான். இவையன்றித் தானே நேரே செய்து முடிக்கமாட்டான்' என்பர்.

காளிங்கர் 'அவ்வினை செய்ய ஒழுக்கமில்லாதான் தொடங்கிய காரியம் முடியாமற் பொய்யாகலாம் அல்லது, தான் பிறர்க்குப் புனையாவன்' என்பர்.

---

3. பூண் — தளை

பழைய 2 பூணும் என்பதிலுள்ள முற்றுவிகுதியைப் பிரித்து புனையும் எனக்கூட்டிப் பொருள் காணுகின்றார்.

இவர் கண்ட பாடம். ''புனை பூணும்'' என்பது. புனை-ஈடாதல் தேவநேயர் 'செய்வகையறியாத பேதை செய்யத் தொடங்கினால், செயல் ஒட்டையாய் விடும்: அவனும் விலங்கு பூணுவான்' என்பர். வரத. 'உலகில் நடந்து கொள்ளும் உலகியலறியாதவன் செய்யத் தொடங்கினால் செயலும் முடிவு பெறாது: அதனாலே அவனுக்கு அவமானமும் உண்டாம்' என்பர்.

இராம. 'செய்யத் தெரியாத முட்டாள் செய்யத் தொடங்கின் செயல் பொய் ஆகும்: காரியமும் சிக்கிலாகிவிடும்' என்பர்.

சபாபதி. 'தொழில் குற்றப்படும்: அத்தொழிலைச் செய்த தானும் விலங்கு பூட்டப்படுவான்' என்பர்.

குழந்தை 'தொழிலும் கெடும், தொழிலையும் கெடுத்துத்தானுங் கெடுவான்'.

இவ்வுரைகளுள் வேறுபட்ட இடங்கள்:

பொய்-பொய்யன்; தப்புதல் (தவறுதல் அல்லது தப்பிப்பிழைத்தல்) புரைபடுதல்; புனை-புணை, விலங்கு, சிறை; கை-ஒழுக்கம், செயல் முறை, செய்யுமுறை இவைகளே பொருள்மாற்றம் உடையன. இவற்றுள் 'செய்முறையறியாத பேதை வினைசெய்யத் தொடங்கினால் செயல்கெடும்' என்ற கருத்தமைத்த உரைகள் சிறந்தவை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப் படுக்கும். —பழமொழி, 184

.................................. திண் கருத்தை
நாட்டலின்றிக் கையறியாப் பேதையர்செய் நற்றொழில் போல்
கூட்டி முடித்திடாக் கூந்தலாள் .................. —தஞ்சைப்.,105

ஓ) மேற்கோள்பகுதி:

சிவஞான.:

''பாயிரங் கூறுதல் நூல்கட்கு அன்றி பிறவற்றிற்கன்றே; அங்ஙனமாதலின் நூல்களின் வரலாறு ஒன்றுமே கூறவேண்டும்;

அதனோடு ஆசிரியன் வரலாறு முதலிய நான்கினையும் உடன கூறுதல் வரலாற்று முறைமையின் வாராதார் நூல்களைக் கற்பிக்கவும் கற்கவும் புகின் 'பொய்படும் ......... மெற்கோளின்' என்றவாறேயாய் நூல்கள் அருமையும் பெருமையும் கெட்டுப் பயன்படாவாம் என்பது கருதி என்க''. —நன்.,3.

சங்கர.: ஷை —நன்.,3.

84.7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. (837)

உரைப்பகுதி :

அ) மணக்.: அயலார் உண்ண, உற்றார் பசியாநிற்பர்; பேதையானவன் பெரிய செல்வத்தை உற்றவிடத்து எ-று.

இது பேதை பொருள்பெற்றால் வழங்குந்திறம் கூறிற்று.

ஆ) பரிதி.: அயலார் சுகித்திருப்பர். உறவின் முறையார் பசித்திருப்பர்; பேதை பெருஞ்செல்வம் பெற்ற இடத்து எ-று.

இ) பரிப்.: அயலார் உண்ண உற்றார் பசித்திருப்பர் பேதையானவன் பெரிய செல்வத்தை உற்ற இடத்து எ-று.

இது பேதை பொருள் பெற்றால் வழங்கும் திறன் கூறிற்று.

ஈ) காளி.: அயலார் பலரும் உண்டு இனிது இருப்பத் தனக்கு இன்றியமையாத சுற்றத்தார் பலரும் பசியொடு வாழ்வர்; அக்குடிப் பிறந்த பேதையானவன் விதியினால் ஒரு பெருஞ்செல்வம் உற்ற இடத்து எ-று.

உ) பரிமேல்.: பேதையாயினான் பெரிய செல்வத்தைத் தெய்வத்தான்[1] எய்தியவழி, தன்னோடு ஓர் இயைபும் இல்லாதார்நிறைய[2], எல்லா இயைபும் உடைய தமராயினார்[3] பசியாநிற்பர் எ-று.

---

1. தெய்வத்தான் - ஆகூழால் 2. நிறைய - நிறைவெய்த
3. தமர் - சுற்றத்தார்

எல்லா நன்மையும் செய்துகோடற்கருவி என்பது தோன்றப்' 'பெருஞ்செல்வம்' என்றும், அதனைப் படைக்கும் ஆற்றலில்லாமை தோன்ற 'உற்றக்கடை' என்றும், எல்லாம் பெறுதல் தோன்ற 'ஆர' என்றும், உணவுப்பொறாமை தோன்றப் 'பசிப்பர்' என்று கூறினார்.

ஊ) கவிராசர்.: பேதையானவனுக்கு முன் செய்த புண்ணியத்தினாலே ஐஸ்வர்யம் வந்தால், அவனுக்குரியவரல்லாதபேர் அந்த ஐஸ்வர்யததை அனுபவிப்பர்; உரிமையானவர்கள் பசித்திருப்பார் எ-று

ஏ) பழைய2 : பேதை ஆயினான் ஊழ்வினைப் பயனாற் பெருஞ் செல்வம் பெற்ற விடத்துப் பிறர் எல்லா மனுபவிப்பத் தமராயினார் பசித்திருப்பர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பேதை முயற்சியானும் அறிவாற்றலானும் பெருஞ்செல்வம் எய்தானாதலான் 'தெய்வத்தான் எய்திய வழி' என விரித்தெழுதிய பரிமேலழகர் உரையும், தேவநேயர் உரையும் சிறந்தன. 'எதிலார்-அயலார்' என்று தொல்லாசிரியர்கள் சொல்ல, ஜி. வரதராசர் 'பகைவர்' என்பர். ஆர்-உண்ண என்பது நிறைய என்ற பொருளினும் சிறந்தது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

**முற்றும் :**

பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்
வெண்மையும் அன்ன தகைத்து. - நாலடி., 269

விரும்பி யடைத்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல். - பழ. நா ,221

சூழ்மகிழ்வுடையார் கெடுதிகொண்டாக்கம் கைவிடுவார் செலவுமிறினும்
கொழுபயன் எய்தார் பிறர்க்கலால் தமர்ககும் கொடாரிவர்.
பேதையர் ஒழிக. - விநா அரசி., 30

84.8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். (838)

உரைப்பகுதி :

அ) மணக் .: முன்னே பித்தாய் மயங்கிய ஒருவன் பின்பு கள்ளினை நுகர்ந்து களித்தாற்போல் ஆவதொன்று; பேதை தன்கையின்கண் ஒன்றுடையனானவிடத்து எ-று.

ஆ) பரிதி .: பித்துக் கொண்டவன் களித்தற்கு ஒக்கும்; பேதைக்கு ஒரு உடைமை பெறின் எ-று.

இ) பரிப் .: முன்னே பித்தாய் மயங்கிய ஒருவன் மது உண்டு களித்தால் போலச் செய்வது அறியான் ஆம் பேதையானவன் வையகத்தே ஒரு பொருள் உடையான் ஆகப் பெற்றான் ஆயின் எ-று.

இது பொருள் பெற்றால் ஒழுகும் திறன் கூறிற்று.

ஈ) காளி .: முன்னமே பித்து ஏறினான் ஒருவன் பின்னும் கள் உண்டு களித்த அத்தன்மைதது யாதோ எனின்? தான் முன்னமே யாதும் அறியாப்பேதையுமாய்ப் பின்னும் அதன்மேலே தன் கையகத்து ஓர் உடைமையும் பெறுமாயின் செய்யும் முறைமை செய்யான் ஆம் எ-று.

உ) பரிமேல் .: பேதையாயினான் தன் கைக்கண்ணே ஒன்றனை உடைமையாகப் பெற்றனாயின், அவன் மயங்குதல் முன்னே பித்தினையுடையானொருவன் அம் மயக்கத்தின்மேலே மதுவுண்டு மயங்கினாற்போலும், எ-று.

பெறின் எனவே, தெய்வத்தானன்றித் தன்னால் பெறாமை பெற்றாம். பேதைமையும் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன மையலும், மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வன போல், தலைதடுமாறும்[1] என்பதாம். இவை இரண்டு பாட்டாலும் அவன் செல்வம் எய்தியவழிப் பயன் கொள்ளுமாறு கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : பேதையானவன் தன் கையிலே ஒருபொருள் உண்டாகப் பெற்றால், பயித்தியக்காரர் கள்ளைக் குடித்து மயங்கினாற்போலும் எ-று.

1. தலை தடுமாறும் - முறைதவறும்

ஏ) பழைய2 : பேதையாயினான் கையில் ஒருடைமை பெற்றான்பின் அவன் மயங்குதல், முன்னே பித்தேறினான் மயக்கத்தின் மேலே கள்ளுண்ட மயக்கமும் கூறினாற்போலும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய உரைகள் பெரிதும் தம்முள் வேறுபாடுடையன அல்ல. 'பேதை தன்கையில் ஒருபொருள் உண்டாகுமானால், அந்தப் பொருள் பித்தன் கையில் கிடைத்த பொருள் பாழ்படுவது போலப் பயனற்றுப்போம்' என்பர் பிற்காலத்து வந்த வரத.; அவர், 'பேதை தன்கையில் ஒன்றுடைமைபெறின் (அது பொருள்) மையல் ஒருவன் கை ஒன்றுடைமை பெற்றது அற்று' என்று கூட்டிப் பொருள் கண்டிருப்பர் போலும். இவ்வுரையில் பொருள் மையல் ஒருவன் கையுற்ற பொருள் போலும் எனப் பொருளுக்குப் பொருள் உவமமாகிறது.

பரிமேலழகர் முதலியோருரைகள் 'அவன் மயங்குதல் மையல் ஒருவன் களித்தற்கு' என மையலாகிய பண்புக்குப் பண்பை உவமை காட்டுவர். அதிகாரம் பேதைமை அஃது பேதை யாரியல்பு கூறுவது. ஆதலால் மயங்குதற்கு மயக்கத்தை எடுத்து இணைக்கும் பரிமேலழகர் உரையே நயமானது. பேதையும் மையல் ஒருவனும், பொருள் பெறுதலும் கள்குடித்தலும், ஒப்புக்கூற களித்தல் பொதுத்தன்மையாக உணர நிற்பது இக்குறள். அங்ஙனமன்றி மாறிக் கூறுதல் வழுவாம் என்க. ஆதலான் பரிமேலழகர் உரையே தெளிவுடையது ஆம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போறறலை நிறுவித ........ —சீவக., 53

சுழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்கநல் லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ —மணி,

84.9. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். (839)

உரைப்பகுதி:

அ) மணக்.: மக்கட்குப் பேதையாரது நட்பு மிகவும் இனிது, பிரிந்தவிடத்து, வருவதொரு துன்பம் இல்லையாதலான் எ—று.

இது பேதை காமம் துய்க்குமாறு கூறிற்று

ஆ) பரிதி.: பேதையாருறவு நல்லது; அவ ஏன் என்னில், நல்லோரைப் பிரிந்தால் விதனம உணடு. பேதையாரைப் பிரிநதால விதனம் இல்லை எ—று.

இ) பரிப் : மக்கட்குப் பேதையாரது நட்பு மிகவும் இனிது: பிரிந்த இடத்து வருவது ஒரு துன்பம் இல்லையாதலான் எ—று.

இது காமம் துய்க்குமாறு கூறிற்து

ஈ) காளி : மிகவும் இனிது இப்பேதையார் நட்பு; என்னை காரணம், எனில் அவர் பிரிந்த பிரிவினிடதது நெஞ்சுக்கு ஒரு துயரம் தருவது யாது ஒன்றும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: பின் பிரிவு வந்துழி அஃது இருவர்க்கும் தருவதொரு துனபம இல்லை: ஆகலான் பேதையாயினார் தம் முடகொண்ட நட்பு மிக இனிது.

நாடோறும் தேய்ந்து வருதலின், துன்பந் தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்தவாறு'. இதனால் அவரது நட்பின் குற்றம் கூறப்பட்டது.

ஊ கவிராசர்: பேதையானவனுடைய சிநேகம் மெத்த நல்லது. அது எப்படி என்றால், சிலநாளிலே அவனை விட்டுபபிரிநதால் அதனாலே குற்றம் வாராது எ—று.

ஏ) பழைய2: பெரிதும் இனிது பேதையாயினார் நட்பு, பிரிவின்கட் பீழை[2] தராது ஆதலாண பேதையார நட்பு இனிது.

---

1. வஞ்சப்புகழ்ச்சியாவது புகழ்வது போல பழித்தல், இங்குப் பேதையார் கேண்மை பெரிதினிது என்று புகழ்வார்ப் போலப் புகழ்ந்து பிரிவின்கண் பீழை தருவது ஒன்றில் என்று பேதையார் கேண்மையைப் பழிக்கிறார். ஆகையால் இது வஞ்சப்புகழ்ச்சி.
2. பீழை -துன்பம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

முன்னர் உணர்ச்சி ஒத்தலே நட்பாங்கிழமை தருவது என்றார் பின்னர் இருவருள் பழகுவதால் ஏற்றத்தாழ்வு காணப்பெறின் பேதையார் கேண்மை ஒரீஇவிடல் என்றார். இக்குறளால் 'அங்ஙனம் ஒரீஇ விடுதலின் பயன் துன்ப நீக்கமே' என்கிறார். ஆதலால் இவ்வமைதிக்குத் தக காணும் உரைகளே சிறந்தன.

மணக்குடவர் குறளமைதிக்கு ஏற்ப உரை கண்டு 'இது பேதை காமந்துய்க்குமாறு கூறிற்று' என்பர்: குறட்பாவில் இக்கருத்தின் நிழல்கூட இல்லாமையாலும், அவருரையினும் குறிப்பிடப் பெறாமையாலும் இந்த விளக்கக் குறிப்பு 'இடைச்செருகல்' என்றே துணியப்பெறும்.

பரிமேலழகர், உரையில் 'இருவருக்கும் துன்பம் தருவதாகாது' பேதையாயினார் தம்முட் கொண்ட நட்பு மிக இனிது' என்ற தொடர்கள் இராமலிங்கனார் ஊனறியாராய வேண்டிய இளரியாமையை உண்டாக்கி இருக்கிறது. அதனால் அவர் பரிமேலழகருரை பேதைக்கும் பேதைக்கும் உள்ள நட்பைக் கூறுவது என்று கருதி அங்ஙனம் உரைப்பது சரியல்ல எனப் பரிமேலழகரை மறுத்து, 'ஒரு பேதையோடு மற்றவர்கள் உறவு கொண்டிருந்து, அப்போது அது இன்பந்தரக்கத்தாயிருப்பினும், பேதையை விட்டுப் பிரியும் போது மற்றவர்க்கு வருத்தமே இருக்காது என்று சொல்வது. மேலும் துன்பந்தருவதில்லை எனின் இன்பமானது என்பதும் சரியன்று. புளிக்காததெல்லாம் இனிப்பானது என்பதுபோல் ஆகிவிடும்' என்பர்.

இவர் கூறும் முதற்மாற்றம் 'பேதையோடு பேதை கொண்ட நட்பு' என்று பரிமேலழகர் உரைப்போக்கு அமைகிறது; அது சரியல்ல என்பது.

ஆசிரியர் வள்ளுவனார் நட்பு நட்பாராய்தல் முதலான அதிகாரங்களில் நட்புக் கொள்வார் ஒத்த பண்பினர். நட்பு என்பது, ஒத்த கிழவனும் கிழவியுந் தம்முட் கூடுவது போன்றதோர் இருவரின் முடியும் ஒரு தொழிற்பண்பு. ஆதலால் நட்புக்கொள்ளுங்காலத்து

ஒத்ததாகத் தொடங்கிப் பின் அறிவினும் பண்பினும் ஏற்றத்தாழ்வு காணப்பெறும் போது இருவரில் ஒருவன் அறிஞனாகிறான்; ஒருவன் பேதையாக அறியப்படுகிறான். ஆதலால் இருவரும் பேதையாகத்தான் இருக்க வேண்டும் என்று பரிமேலழகர் உரைகாட்டுகிறது என்பது சரியன்று;

என் ஆசிரியர் மட்டுவில் வேற்பிள்ளையவர்களும், ஐயரவர்களும் பாடஞ் செல்லும்போது, ஒத்த உணர்வாற் பழகிய இருவர், பின்பு ஒருவனுக்கு ஒருவன் பேதையாக உணரப்படின் உணரும் அறிஞன் உணரப்பெற்ற பேதையை 'பேதையார் கேண்மை ஒரீஇ விடல்' என்றாங்கு விட்டு நீங்குவான். பேதை நன்மை-தீமை, தள்ளுவன கொள்வன, துன்ப-இன்பம் அறியாதவனாதலானும், ஏதங்களை ஏற்று ஊதியத்தையே உதறித்தள்ளுவனாதலானும் அவனுக்குத் துன்பம் இல்லை. அறிஞனோ அவனோடு நட்பாயிருக்கும் வரைபல்லாற்றானும் துன்பம் துய்த்தவன் அவன் பிரிவால் இப்போது அவனுக்குத் துன்பந் தொலைந்தது. அதனால் இருவருக்கும் துன்பம் இல்லையாயிற்று எனப் பரிமேலழகர் எழுதியுள்ளார் என்று ஐயம் அகற்றினார்கள். இதில் 'பேதையாயினார் தம்முடன் கொண்ட நட்பு' என்ற பாடம் 'தம்முட்கொண்ட' எனப் படிக்கப்பெற்றுப் பதிக்கப்பெற்றுள்ளது என்றும் கூறினார்கள். ஆய்ந்து கண்டு துணிக.

அன்றியும் நோய் நீக்கமே இன்பமாதல் போலத் துன்ப நீக்கமே இனிதாதலும் ஓராற்றாற் பொருந்துவதேயாம்.

'உவப்பத்தலைக்கூடி' (94) என்னும் குறளில் 'அறிவுடையார் பிரிவு துன்பம் தரும்' என்றார். பேதையார் பிரிவு இன்பந்தரும் என்பது இக்குறளாற கூறினராதலைக் காணலாம். ஆனால் அது நல்லவையுட் கற்றார் பலர் கூடிக் களித்தலையும், உள்ளப்பிரிதலையும் கல்வியடிப்படையிற் கருதுவது. இது உலகியல் வகையான் நட்புக் கொள்வதை உணர்த்துவது என்பாரும் உளர். ஆயின், அடுத்த குறட்பாவில் 'சான்றோர் குழாத்துள் பேதைபுகல்' என்பதால் நல்லவையுட் பேதைபுகுதலையும் இக்குறட் கருத்துத் தழுவுதல் பொருந்துவதேயாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

... ... ... ... நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ரமிலாளர் தொடர்பு.

- நாலடி., 138

84.10. கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். (840)

உரைப்பகுதி:

அ) மணக்.: கழுவாத காலைப் பள்ளியின்கண் வைத்தாற்போலும் சான்றோா அவையின்கண் பேதை புகுந்து கூடியிருத்தல் எ—று.

இது பேதையிருந்த அவை இகழப்படும் என்றது.

ஆ) பரிதி: பெரியோர் கூட்டத்தில் பேதை சென்று நடுப்பட இருக்கில் ஒரு பெரியோன் வந்தகாலத்துத் தலையில் வைத்த காலுடன் வாங்குவதுபோல இவனை எழுப்பி, அவரை இருத்துவர் எ—று.

இ) பரிப்.: கழுவாத காலைப் பள்ளியின்கண் வைத்தாற்போலும் சான்றோர் அவையின்கண் பேதை புகுந்து கூடி இருந்தல் எ—று.

இது பேதை இருந்த அவையும் இகழபபடும் என்றது.

ஈ) காளி.: ஒருவன் மாசறக் கழுவாத காலைத் தூவெண் துகில் விரித்த சிறந்த படுக்கைமேல் சென்று வைத்த அத்தன்மைத்து, கல்வியால் மாசற விளங்கிய மனததூய்மை உடைய சான்றோர் அவையுள் நெஞ்சு அழுக்கு உடைய பேதை சென்று புகுதல் எ—று.

உ) பரிமேல்.: சான்றோர் அவையின்கண் பேதையாயினான் புகுதல், தூயவல்ல[1] மிதித்த காலை இன்பந்தரும் அமளிக்[2] கண்ணே வைத்தாறபோலும் எ—று.

கழுவாக்கால்[3] என்பது இடக்கரடக்கு[4] அதனால் அவ்வமளியும் இழிக்கப் படுமாறுபோல இவனால் அவ்வவையும் இழிக்கப்படும் என்பதாம். இதனால் அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது.

---

1. தூய அல்ல — தூய்மையல்லாதன, மலம் முதலியன.
2. அமளி — படுக்கை
3. 'கழாஅக்கால்' என்றும் பாடமுண்டு
4. அவையில் சொல்லத்தகாத இடக்கான வார்த்தைகளை அடக்கிச் சொல்லுதல். கால் கழுவி விடும் என்பது எடுத்துக்காட்டு. இங்குக் கழாஅக்கால் என்பது மலம் முதலியவற்றை மிதித்தலால் தூய்மையில்லாத கழுவாத கால்.

ஊ) கவிராசர்: பெரியவர்கள் சபையிலே பேதையானவன போனால், கழுவாத காலைச் சுகத்தைக் கொடுக்கிற படுக்கைக் கட்டிலின்மேலே வைத்தா லொக்கும் எ—று.

ஏ) பழைய2: அறிவுடைய பெரியோர் கூட்டத்தின்கட் பேதை-யாயினான் புகுந்து இருத்தல், தூயவல்ல மிதித்த காலை கழுவா-மல் துய்ய[5] பட்டுமெத்தைமேல் வைத்தாற்போலும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

ஏனையோர் உரைகள் 'அவை களங்கப்படும்' என்கின்றன. பரிதியுரை, பேதை புகுந்திருப்பானாயின் அவனைத் தக்கோர் ஒருவர் வந்துழி எழுப்பிட்டு அவர்களை இருக்கச்செய்வர் என்று அவன் உடனே அகற்றப்படுவன்' என்பதைக் குறிக்கிறது. இதற்கு உரைகாட்டும் உவமை 'ஒருவன் தலையில் ஒருவன் கால்பட்டால் உடனே எடுக்கப்படுவதுபோல கழுவாத காலை வைத்தால், அந்த அமளி அருவருக்கப்படுதல் போல நல்லவையும் வெறுத்தொதுக்கப்-படும்' என்பது.

'பள்ளி—படுக்கை' என்பர் தொல்லாசிரியர்கள். தேவநேயர் 'படுக்கை அல்லது படுக்கையறை எனின், அதன் இன்ப தன்மையை-யும் துப்புரவுத்தன்மையையும் குறிக்குமேயன்றி நல்லவையின் சிறப்-பியல்பான தெய்வத்தன்மையைக் குறிக்காது ஆதலால் தேவ அகமாகக் கொளவதே பொருந்தும்' என்பர். சிறந்தது கொள்க.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்:

கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறிவாள ரிடை புக்கு - மெல்ல
விருப்பினு நாய்குந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று. —நாலடி., 254

## ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை.: எதிர்தொடங்கிப் பொருள் கொள்ளும் எதிர்ப்பெயர் நிரல்நிறைக்கு மேற்கோள். —நன்.,413

5. துய்ய — தூய்மையாள

சுவாமி.: 'கழாஅக்கால் பள்ளியுள்' என்பதற்குப் பகரவிகார முதலிய குற்றங்களை மிதித்து என்னும்சொறகளை வருவித்தல் போல்வன, சிதைந்ததனால் மொழிவருவித்து முடித்தல்' என்பர்

—இ.கொ.,89

குற்றெழுத்தளபெடைக்கு மேற்கோள். —இ.கொ.,90

யா-வி.: எதிர்நிரல்நிறைக்கு மேற்கோள். —சூ.,95

## 84. பேதைமை

| | பேதைமை என்பதொன் | பேதைமையுள் | நாணாமை | ஓதி | ஒருமைச் | பொய்ப்படும் | ஏதிலார் | மையல் | பெரிதினிது | கழாஅக்கால் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 2 | 4 | 3 | 5 | 6 | 7 | 10 | 8 | 9 |
| பரிதி. | 4 | 2 | 1 | 3 | 7 | 8 | 6 | 5 | 10 | 9 |
| பரிப். | 1 | 2 | 4 | 3 | 5 | 7 | 8 | 6 | 9 | 10 |
| காளி. | 9 | 5 | 1 | 10 | 3 | 6 | 7 | 4 | 8 | 2 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

84-வது அதிகாரம் 'பேதைமை' முற்றிற்று.

# 85. புல்லறிவாண்மை

அ) மணக்.: புல்லறிவாண்மையாவது சிற்றறிவின் இயல்பும் அதனால் வரும் குற்றமும் கூறுதல். இதுவும் பேதைமையோடு ஒத்த இயல்பிற்றாதலான், அதனபின் கூறப்பட்டது.

ஆ) பரிதி.: புல்லறிவாண்மையாவது புல்லறிவை ஆளுதல்; பேரறிவைப பற்றவேணும் எ-று.

இ) பரிப்.: புல்லறிவாண்மையாவது சிற்றறிவின் இயல்பும் அதனால் வரும் குற்றமும் கூறுதல். இதுவும் பேதைமையோடு ஒத்த இயல்பிற்று ஆகலான் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: இனி எனைப்புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லிய அறிவினை ஆடற்றன்மை என விரியும். அதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொல்[1] கொள்ளாமை.

ஊ) கவிராசர்: அஃதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவுடையனாக எண்ணிக் கொண்டு பெரியோன் சொன்னவுறுதி வசனங்களைக் கைக்கொள்ளாமையென்பது.

ஏ) பழைய 2: அஃதாவது, தான் சிற்றறிவினாக இருந்துந் தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் சொல்லும் உறுதிச் சொற்களைக் கொள்ளாது அறிந்தவனைப் போல் மறுத்தல். புல்லிய அறிவினை ஆளுதல்புல்லறிவாண்மை என்க.

1. உறுதிச்சொல் - நன்மை தரும் சொல்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் 'சிற்றறிவைப் பயன்படுத்துதல்' என்பர். வரத. 'தன் அறிவுக் குறைவால் தனக்கும் பிறருக்கும் தீமை தேடிக் கொள்ளுதல். நிறைந்த அறிவுள்ளவனாக நினைத்து நடிப்பதும் அது' என்பர். இராம. 'மிக்க அறிவுள்ளவனாகத்தன்னை நினைத்-துக் கொள்கிற அற்பப்புத்தி'; சி. இ. குழந்தை, 'அற்ப அறிவை ஆளுதல் தன்மை.' மு ரா. அரு. பரிமேலழகரை ஒத்துரைப்பர்.

இவற்றுள் மணக்குடவர் 'சிற்றறிவின் இயல்பும், அதனால் வரும் பயனுங் கூறுதல்' என்பர். ஏனையோர் அவ்வறிவை ஆளுதல் எனவும் ஆளுதல் தன்மை எனவும் இயல்பு கூறி, அதன் விளைவு கூறாது ஒழிவர். இவ்வதிகாரத்துள் 841, 842, 844, 846 முதலிய குறட்பக்கள் புல்லறிவின் இயல்பு கூறுவன. 843 ஆவது குறள் புல்லறிவாண்மையதியல்பு கூறுவது ஏனைய அதனால் வருந்தீமை கூறுவன. இவற்றைப் பிரிதது எண்ணச்செய்வது மணக் குடவருரை.

புன்மை-அளவாலும், இயல்பானும் ஆம் சிறுமையையுணர்த்து வைவாதலின் புல்லறிவு கற்ற நூரபரப்பானும் அறியும் வன்மை யானும் ஆகிய குறைவைக் காட்டும்.

85.1. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. (841)

உரைப்பகுதி:

அ) மணக்.: நல்குரவினுள் நல்குரவாவது அறிவின்மை; பொருளின் மையை நல்குரவாக எண்ணார் உலகத்தார்; அது புண்ணியம் செய்யா தார்மாட்டே சேருமாதலான் எ—று.

ஆ) பரிதி.: மிடிக்குள் மிடியாவது அறிவின்மை. பொருள் மிடி ஒரு தறுவாயில்[1] வரும் ; ஒருதறுவாயில் போம் எ—று.

இ) பரிப்.: நல்குரவினுள் நல்குரவு ஆவது அறிவு இன்மை : பொருள் இன்மையை நல்குரவு ஆக எண்ணார் உலகத்தார் : அது புண்ணியம் செய்தார் மாட்டே சேரும் ஆதலான் எ—று.

1. ஒரு தறுவாயில் — ஒரு காலத்து

அறிவு புண்ணியம் செய்தற்கு உளது ஆமோ எனின், அது முயற்சியாலும் வரும் ஆதலின் வேறு பகுத்துக் கூறினார். இனி அறிவின்மையான் வரும் குற்றமும் கூறுவார் முற்பட இதனின் மிக்க நல்குரவு இல்லை என்றார்.

ஈ) காளி .: கற்கப்படு நூல்கள் பலவற்றையும் கசடு அறக் கற்று மனத்து இருள் நீங்கி நுணுகிப் பரந்த அறிவு[2] ஒருவர்க்கு இல்லாமையே இல்லாமையாவது : அதனால் அவ்வறிவின் வேறுபட்டுள்ள இல்லாமை ஒன்றையும் இல்லாமையாக வைத்து எண்ணார் உயர்ந்தோர் எ—று.

உ) பரிமேல் .: ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க இல்லாமையாவது அறிவில்லாமை : மற்றைப் பொருளில்லாமையோ எனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார், எ—று.

அறிவு என்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மேல் நின்றது. புல்லறிவாளர் செல்வமெய்தியவழியும் இம்மை மறுமைப்பயன் எய்தாமையின் அதனை 'இன்மையுள் இன்மை' என்றும், நல்லறிவாளர் வறுமை எய்தியவழியும் அஃது இழவாமையின் அதனை 'இன்மையா வையாது' என்றும் கூறினார். இதனால் புல்லறிவினது குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ஒருவனுக்கு இல்லாமையாகிய தரித்திரங்களுக்குள்ளே மெத்த தரித்திரமாவது அறிவில்லாமையே: பொருளில்லாமையை அதுபோல வறுமையாக எண்ணார் உலகத்தார் எ—று.

ஏ) பழைய 2: ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் "இல்லாமையாவது அறிவில்லாமை: மற்றப் பொருளில்லாமையோ வெனின் அதனை இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

'இன்மையுள் இன்மை' என்ற ஆட்சி, முன்னர், "இன்மையுள்இன்மை விருந்தொரால்" என்ற இடத்தும் வந்துள்ளது.

---

2. அறிவு, நல்லறிவு, புல்லறிவு இரண்டிற்கும் பொதுவாகிய சொல். அது ஈண்டு தலைமை பற்றி நல்லறிவை உணர்த்திற்று.

பழைய உரையாசிரியர்கள் அனைவரும் பிறிதின்மையை விளக்கும் வகையிலும், அதனை இன்மையாக் கருதாமைக்கு ஏதுக்கூறும் வகையினும் மாறுபடுகின்றனர்.

'பிறிதின்மை'

'(மற்றைப்) பொருளில்லாமை' மணக்., பரிதி.; 'அறிவின் வேறுபட்டுள்ள இல்லாமை' காளிங்கர். காளிங்கரை ஒத்தே இராமலிங்கர் 'மற்றைய இல்லாமை' எனப் பொதுவகையாற் கூறினார். வரத. 'ஏனைய இடம் ஏவல் முதலியவற்றின் இன்மையையுங் கருதுக' எனபர்.

பிறிதின்மையை இன்மையாக் கருதாமைக்குக் கூறுங் காரணங்களுள் ஆசிரியர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர். புண்ணியஞ்செய்தார் மாட்டே சேருமாதலான்' மணக்.; 'ஒரு தறுவாயில் வரும் ஒரு தறுவாயில் போம் ஆதலான்' என்பர் பரிதி.; 'புண்ணியஞ் செய்தாற்கு உளதாமோ எனின், அது முயற்சியாலும் வருமாதலின்' என்றனர் பரிப்பெருமாள்; 'இம்மைப் மறுமைப் பயன் எய்தாமையின்' எனபர் பரிமேல; ஏனையோர் ஏதுக் கூறாது விடுத்தனர். 'அறிஞர் வறியராயிருந்தவிடத்தும் இருமைப் பயனையும் எய்துதலான்' என்பர் தேவநேயர் 'பொருளில்லையானாலும் அதனாலாம் பயனை எய்தல் உறுதியாதலின்' வரத.

'அதுவே மற்றையவை இன்மை' என்றவர் காளிங்கரும், இராமலிங்கரும். ஏனையோர் 'பொருளின்மையே' என்பர். இராம. 'வையாது-நிந்தியாது' என்பர். வள்ளுவர் இச்சொல்லை யாண்டுள்ள இடம் 'கெடுவாக வையாது' (117) 'இன்மையாவையாது' (841); இரண்டிடங்களில் 'கருதாது' என்றே உரைகண்டவர் தொல்லோர். இப்பொருளும் கருத்துப்பொருளாக இடநோக்கியமைந்த பொருளேயன்றி நேர் பொருளன்று. 'இடுக்கினுள் வைக்குந் தன் நாளை எடுத்து'. 'செத்தாருள் வைக்கப்படும்' என்பனபோல 'வைத்தல்' என்னும் பொருளதான 'வை' என்னும் பகுதியிற் பிறந்து வைத்தலால் விளையும் அவமதிப்பு, ஆன்ற மதிப்பு, நினைப்பு முதலான பொருள்களையுணர்த்தின. இவையே தொன்னூல் ஆட்சி ஆனால் நிந்திப்பது அவமதிக்காது என்ற பொருளில் அன்று வழக்கின்மை தெளிவு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அறிவின்மை இன்மையுள் இன்மை:

அறிவிலார் என்னுடைய ரேனுமிலர், —குறள்.,430

நுண்ணுணர் வின்மை வறுமை. —நாலடி..251

அறிவினால் மாட்சி யொன் றில்லா வொருவன்
பிறிதினான் மாண்ட தெவனாம். —பழ. நா.,27

85.2. அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம். (842)

உரைப்பகுதி:

அ) மணக்: அறிவில்லாதான் மனங்குளிர்ந்து கொடுத்தற்குக் காரணம் வேறொன்றும் இல்லை; அது பொருளைப் பெறுகின்றவனது நல்வினைப்பயன் எ—று.

இது கொடுத்தானாயினும் வரிசையறியாது கொடுக்குமாதலின் அது புல்லறிவு என்றது. இத்துணையும் புல்லறிவின் இயல்பு கூறப்பட்டது.

ஆ) பரிதி.: அறிவில்லான் ஒருவனுக்குக் கொடுக்கும் கொடை வேறொன்றும் அல்ல: பெற்றவன் செய்யும் புண்ணியமே எ—று.

இ) பரிப்.: அறிவு இலாதான் மகிழ்ந்து கொடுத்தற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை: அப்பொருளைப் பெறுகின்றவன் நல்வினைப்பயன் எ—று.

இது கொடுத்தான் ஆயினும் வரிசை அறியாது கொடுக்கும் ஆகலின் புல்லறிவு ஆயிற்று. இத்துணையும் புல்லறிவின் இயல்பு கூறப்புட்டது.

ஈ) காளி.: புல்லறிவாளனாகிய[1] அறிவு கேடன்[2] தன் மனம் மகிழ்ந்து ஒருவர்க்குப் பொருள் கொடுத்தல் என்கின்ற இது பிறிது யாதானும் ஒன்றும் இல்லை. இஃது அன்றி அஃது யாதோ எனின்

1. புல்லறிவாளன் — தாழ்ந்த அறிவினையுடையவன்
2. அறிவுகேடன் — புத்திக்கெட்டவன்

அவன் வயின் பெறுகின்ற வளம், முன்முன்செய்த நல்வினைப்பயனே யன்றி வேறு யாதொன்றும் காரணம் இல்லை எ—று.

உ) பரிமேல்.: புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனம் உவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், அதற்குக் காரணம் பெறுகின்றவன் நல்வினையே, வேறொன்றும் இல்லை, எ—று.

ஒரோவழி நெஞ்சுவந்து ஈதல்கூடலின் புல்லறிவாளரும் நல்வினை செய்ப என்பார்க்கு, பெறுவான் வீழ்பொருள் எய்தியான் போல்வது அல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றாரல்லர் எனக் கூறியவாறு. கூடிற்றாயின் அதற்குக் காரணம் என்னும் சொற்கள் அவாய் நிலையான் வந்தன[3]. இதனால் அஃது டையார் தம்மாட்டு நல்லன செய்தல் அறியாமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: புல்லறிவுடையார் மனச் சந்தோஷத்துடனே ஒருவனுக்கு ஒருபொருளைக் கொடுத்தால், அது வாங்கிக்கொள்ளுகிறவன் செய்த புண்ணியமே யல்லாமல், வேறொன்றுமில்லை எ—று,

எ) பழைய 2: அறிவில்லான் ஒருவனுக்கு மனமுவந்து கொடுத்தல், அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை, பெறுகின்றவன் செய்த தவப்பலம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பிற்கால உரைகளில் வரத., 'பெறுவான் தவம்' என்பதற்கு 'பெற்றவனது திறமையும், நல்வினையுமேயாகும். பயனும் கொடுத்தவனைச் சாராது; அது கொடையன்றாதலான், என நயம் விரிப்பர். இவற்றுள் 'பயன் கொடுத்தவனைச் சாராது' என்பது ஆய்விற்குரியது. மருந்து விருப்போடு உண்ணினும் வெறுப்போடுண்ணினும் உண்ட மருந்து தன்பயனைத் தாராதொழியாததுபோல, கொடை அறிந்து செய்யினும், அறியாது செய்யினும் தன் பயனைத் தருதலிற்றவறாது; கொடுக்கும் பொருள் அறவழியானீட்டப் பெற்றதாயின் என்பது.

---

3. கூடிற்றாயின் — 'அதற்குக் காரணம்' என்ற சொற்களை 'பெறுவான் தவம்' என்ற சொற்கள் வேண்டி நிற்றலின் அவை வருவிக்கப் பட்டன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பெறுவான் தவம்:

........................ நின்னுழை வந்தோர்
மாணடவர் ........................ —கம்ப.,442

85.3. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (843)

உரைப்பகுதி :

அ) மணக் .: அறிவில்லாதார் தாமே தம்மை இடர்ப்படுத்தும் இடர்ப்பாடு, பகைவர்க்கும் செய்தல் அரிது எ—று,

இது மேற் கூறியதனை வலியுறுத்திற்று.

ஆ) பரிதி .: அறிவில்லார் தங்களைத் தாங்கள் கெடுத்துக்கொள்வது தன்னிடம் மாற்றார்க்கும்[1] முடியாது எ—று.

இ) பரிப் .: அறிவு இலாதார் தாமே தம்மை இடர்ப்படுத்துமது பகைவர்க்கும் செய்தல் அரிது எ—று.

இது மேல் கூறிய அதனை வலியுறுத்தியது. இதனானே பிழை கூறுகின்ற துன்பத்தை உண்டாக்கும் அவற்றுக்குக் காரணம் ஆம் என்பதூஉம் கண்டு கொள்க.

ஈ) காளி : புல்லறிவாளர் ஆகிய அறிவு கேடர் தாமே தம்மைத் துயர் உறுக்கும் துயரம் சொன்ன வறுமையேயன்றித் தம்மைப் பெரிதும் செறுக்கும் பகைவர்க்கும் செய்தல் அரிது எ—று.

உ) பரிமேல் .: புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம் அது, செய்தற்கு உரியராய தம்பகைவர்க்கும் செய்தல் அரிது. எ—று.

பகைவர் தாம் அறிந்தது ஒன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவம் முதலிய[2] பலவற்றையும் எக்காலத்தும் செய்யமாட்டாமையின் அவர்க்கும் செய்தல் அரிது[3] என்-

1. மாற்றார்க்கும் — பகைவர்க்கும்
2. முதலிய என்றமையின் — அவமானமடைதல், காவலிருதல், அடிபடல், அபராதம் தருதல், பிறருக்கு அடிமையாதல் முதலியனவுங் கொள்க.
3. 'செறுவார்க்கும் செய்தல் அரிது' என்றும் பாடமுண்டு.

றார். இதனால் அவர் தம்மாட்டும் தீயன செய்தல் அறிவர் என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்.:** அறிவில்லாதவர்கள் தாமே நம்மை வருத்தும் பகைவர்க்கும் செய்தல் அரிது, (எ-று).

ஏ) **பழைய 2 :** நல்லறிவில்லாதவர் தாமே தம்மை வருத்தும்! இது பகைவர்க்கு செய்தல் அரிது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**மணக்., பரிமேலழகர்** முதலிய ஆசிரியர்கள் 'அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும்பீழை செய்தல் செறுவார்க்கும் அரிது' எனக் கூட்டி உரை கண்டனர்.

**இராம,** 'செறுவார்க்கும் செய்தலரிது' என்பதற்கு 'பகைவர் களுக்கும் செய்யமுடியாது' என்றும் 'பகைவர்களாலும் செய்ய முடியாது' என்றும் பொருள் கொள்ளலாம் என்பர்.

'செறுவாரும் செய்தலரிது' எனப் பாடமிருப்பின் **பரிமேலழ-கரின்** உரை தகுவதாகும் என்பர் சிலர்.

> ''ஒன்று, மூன்று, நான்கு, ஆறு, எனும் உருபொடு
> வருமே வினைமுதல் எனவகுத்தனரே'' (இ. கொ. சூ. 44)

என்பவாகலானும் 'அவற்குச் செய்யத்தகும் இக்காரியம்' என்றாற் போல பகைவர்க்கும் செய்தலரிது என வருதல் இயைபுடைத்தே யாதலானும் வேறுபாடம் வேண்டாம் என்க. **இராமலிங்கனார்** கொள்ளும் இரண்டு உரைகளில், இவ்வுருபுடையதை இல்விதியானும் ஆல் உருபாக விரிந்ததை உருபு மயக்கமாகவும் கொள்ளல் தகும்.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

**முற்றும் :**

பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார் —கம்ப.,1569

...... ......காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

—கம்ப.,3249

85.4. வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. (844)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது எனின், அது யாம் அறிவுடையோம் என்று தம்மைத் தாம் மதிக்கும் களிப்பு, எ—று.

**ஆ) பரிதி.:** அறிவின்மையாவது யாது எனில் நான் சமர்த்தன்[1] என்று சொல்லிக் கொள்வது, எ—று.

**இ) பரிப்.:** புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது எனின் யாம் அறிவு உடையேம் என்று தம்மைத் தாம் மதிக்கும் களிப்பு, 'எ—று,

வெண்மை—காழ்ப்பு இன்மை. முற்றுதல் இன்மையின் வெண்மை எனப்பட்டது. புல்லறிவு ஆவது இத்தன்மைத்து என்று கூறுவார் முற்பட அறிவு இல்லாதவன் அறியேன் என்னாது அறிவுடையோன் ஆகத் தன்னை மதித்தல் புல்லறிவு என்றது

**ஈ) காளி.:** பலரானும் இது வெள்ளறிவு என்று பழித்து உரைக்கப்படுவது யாதோ எனின் எல்லாரினும் யாம் சால நுண்ணறிவு உடையோம் என்று இருக்கும் பெருமிதம் எ—று.

வெள்ளறிவாவது புல்லறிவு.

**உ) பரிமேல்.:** புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், அது தம்மைத்தாமே யாம் நல்லறிவுடையம் என்று நன்குமதிக்கும் மயக்கம், எ—று.

வெண்மையாவது[2] அறிவுமுதிராமை. 'ஒண்மை' எனக் காரியப் பெயர் காரணத்திற்கு ஆயிற்று[3]. உலகத்தார் இகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்தலான், 'மயக்கம்'[4] என்றார்.

**ஊ) கவிராசர்:** புல்லறிவுடையனென்று சொல்லப்படுகிறது ஏதென்றால் தன்னைத் தானே நல்லறிவுடைய னென்று சொல்லுகிற மயக்கம் எ—று.

---

1. சமர்த்தல் — திறமையுள்ளவன்
2. வெண்மையாவது பொருள் நோக்கமில்லாத அறிவு
3. ஒண்மை என்னும் காரியப்பெயர் அதற்குக் காரணமாய அறிவிற்கு ஆயிற்று. இது காரியம் காரணமான உபசார வழக்கு. காரியவாகுபெயர் எனினும் ஒக்கும்.
4. 'செருக்கு' என்றும் பாடமுண்டு

ஏ) மழைய 2 : புல்லறிவுடைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவில், அது தம்மைத் தாமே நல்லறிவு உடையம் என நன்கு மதித்து மயங்கும் மயக்கும், எ-று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'ஒண்மை'

'தானுந்தெளிந்து பிறரையும் தெளிவிக்கும் விளக்கம்' என்பர் வரத.; 'அறிவுடைமை' என்பர் இராம.; கருத்து மாற்றம் இல்லாத குறள் இது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

ஒண்மை :

ஒப்பின் மாநகர் ஒண்மை —சீவக.,535

ஒண்மையும் நிறையும் —பெருங்.1:34:151

ஒண்மை உடையார் —நாலடி.,196

முற்றும் :

தன்னைஎப் பொருளும் அறிந்த வனாகத்
தான்மிக மதிக்கும்புல் லறிவின்
வன்மையை யுடையான் உறுதிசொற் கேளான்
வல்லதல் லாதும்கொண் டுரைத்து
புன்மையைத் தெறிப்பான் நவைபுரிந் துலகோர்
போல்நடிப் பான்றனை உணர்த்து
நன்மதி யினரை அறிவில ராக
நாட்டுவன் இவனையும் நண்ணேல். —விநா.அரசி.,131

845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். (845)

உரைப்பகுதி :

அ) மணக் .: தாம்முடியக் கல்லாதவற்றைக் கற்றாராக மேற்கொண்டொழுகல், குற்றந்தீரக் கற்றதனையும் ஐயமாக்கும், எ-று.

இது கல்லாததனை மேற்கொள்ளுதல் புல்லறிவு என்றது.

**ஆ) பரிதி .:** தனக்குக் கைவராத வித்தையைக் கைவரும் என்று பரீட்சை பார்த்தால் வாராது; அதனாலே தனக்குக் கைவந்த நூலும் கைவராது என்று சந்தேகப் படுவர். ஆதலால் கைவந்த வித்தையைச் சொல்வது, எ—று.

**இ) பரிப் .:** தான் முடியக் கல்லாதவற்றைக் கற்றானாக ஏறிட்டுக் கொள்ளுதல் குற்றம் தீரக் கற்றதனையும் ஐயம் ஆக்கும், எ-று.

இது கல்லாததனை மேற்கொள்ளுதல் புல்லறிவு என்றது.

**ஈ) காளி .:** தான் கல்லாதவற்றையும் கற்றானாகத் தன்மேல் ஏறட்டுக்கொண்டு நடத்தல் யாது? அது மற்றுந் தான் கசடு அறக்[1] கற்று வல்லதூஉம் ஐயப்படுதலைச் செய்யும், எ—று.

**உ) பரிமேல் .:** புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்-றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல், கசடறக் கற்றதொரு நூலுண்டாயின், அதன்கண்ணும் பிறர்க்கு ஐயத்தை விளைக்கும்.

வல்லது என ஏழாவது இறுதிக்கண் தொக்கது.[2] உண்டாயின் என்பது அவாய்நிலையான் வந்தது. ஐயம் அது வல்லர் என்ப தூஉம் இவ்வாறு கொல்லோ என்பது.

**ஊ) கவிராசர் .:** புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களைக் கற்றேமென்று வெகுமானமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறது, நன்-றாய்க் கற்ற நூலிலும் பிறருக்குச் சந்தேகத்தை விளைக்கும், (எ-று).

**ஏ) பழைய 2 .:** புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்றாராகத் தாம் மேற்கொண்டு ஒழுகுதல் கசடறக் கற்றதொரு நூல் உண்டாயின் அதன் கண்ணும் பிறர்க்கு ஐயத்தை விளை—விக்கும். (எ—று).

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**பரிமேலழகரும்** பிறரும் 'கல்லாத—கல்லாத நூல்கள்' 'கசடற வல்லதூஉம்- ஐயந்திரிபற வல்லநூல்களும்' என உரைப்பர்.

**இராம.** 'பயிற்சியில்லாத காரியம்' என்பர். இவை யிரண்டும் ஏற்புடையனவே ஆகலாம்.

---

1. கசடு அற – குற்றமற
2. வல்லதன்கண் எனற்பாலது வல்லதூஉம் என வந்தது ஏழனுருபு இறுதிக்கண் தொக்கது.

85.6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. (846)

உரைப்பகுதி :

அ) மணக் .: தம்பாலுள்ள குற்றத்தைப் பிறரறியாமல் தாம் மறையா காலத்து, பிறர் காணாமல் மறைக்க வேண்டும் உறுப்பை ஆடையால் மறைத்தலும் புல்லறிவு, எ-று.

ஆ) பரிதி .: அற்றம்[1] மறைத்தல் அறிவில்லாத தன்னிடத்தில் குற்றம் மறைத்தற்கு அரிது, எ-று.

இ) பரிப் .: தம்மாட்டு உள்ள குற்றத்தைப் பிறர் அறியாமல் மறைத்த காலத்துப் பிறர் காணாமல் மறைக்க வேண்டும் உறுப்பை உடையான் மறைத்தல் புல்லறிவு, எ-று.

எனவே அதுவும் மறையான் ஆயின் குற்றம் நாடுவார் இல்லை என்றவாறு ஆயிற்று. இது குற்றம் மறையாமை புல்லறிவு என்றது.

ஈ) காளி .: 'மறையாக் கடை' பாடம்.

புல்லறிவு என்பது தமக்குப் பொருள் அற்றம் தீர்த்தல்[2] சாலப் புல்லறிவு[3] என்றது. தமக்கு வறுமையை நீக்குவதாகக் குற்றம் செய்தலே புல்லறிவு என்று ஆயிற்று : எனவே ஒருவர் விரைந்து மறைத்தற்கு முயல்வது இவ்வற்றம் அல்லது பொருள் அற்றம் மறைத்தலன்று என்பது பொருள் ஆயிற்று, எ-று.

உ) பரிமேல் .: புல்லறிவாளர் தங்கண் நிகழும் குற்றங்களை அறிந்து கடியாராயின் ஆடையால் அற்றம் மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம், எ-று.

குற்றம் மறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப் படுவன[6] பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்த தொன்றனையே மறைத்து அவ்வளவால் தம்மையும்[4] உலக

1. அற்றம் — சோர்வு, மறதி
2. தீர்த்தல் — நீக்கல்
3. சாலப் புல்லறிவு — மிகமிக இழிந்தறிவு
4. மறைக்கப்படுவனவாய அங்கங்கள் தலை, இடை, தொடை, முதலியனவாம் உயர்ந்தன தலை, கழுத்து, இடை; தாழ்ந்தன கோவணங்கட்டுதந்குரிய அங்கம்,

ஒழுக்கினராக மதித்தலும் புல்லறிவு என்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் தம்மை வியத்தற்[5]குற்றம் கூறப்பட்டது.

**ஊ) கவிராசர் .:** புல்லறிவாளர் தங்களிடத்திலே வரப்பட்ட குற்றங்களை அறிந்தும் கடியாமல், புடைவைகளாலே தங்கள் சரீரத்தை மறைத்துக் கொள்ளுகிறது புல்லறிவாம், எ-று.

**எ) பழைய 2 .;** புல்லறிவாளர் தம்மிடத்தில் இல்லாமையை மறைத்தலோ மறைப்பாகாது தன்னிடத்து அறிவில்லை என்னுங் குற்றத்தை மறையாவிடத்து.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவின் உரை பெரிதும் மாறுபட்டுள்ளது. உரைக்கு விளக்கந்தருவாரும் மாறுபடுகின்றனர்.

**மணக் .:** 'தம் குற்றத்தை மறையாதபோது, அற்றத்தை ஆடையால் மறைத்தலும் புல்லறிவு' என்பது. 'பிறர் வெறுக்கத்தக்க குற்றங்களை மறைக்கமுடியாதவன் ஆடைகட்டிக்கொள்ளுதல் அறிவீனம்' என்பது கருத்து.

**பரிதி .:** ஆடை கட்டிக் கொள்ளும் அறிவும் அற்றவன் தன்னிடத்தில் குற்றத்தையும் மறைக்கமுடியாது' என்பது. இதற்கு விளக்கந்தருபவர் 'ஒருவர் ஆடையணிந்து அற்றத்தை மறைப்பதால் குற்றத்தை மறைக்கமுடியாது' என்பர். இவர் 'அறிவில்லாத தன்னிடத்தில், அற்றம் மறைத்தல், குற்றம் மறைத்தற்கு அரிது' எனக் கொண்டு இக்கருத்தையும் வழங்கியிருப்பர் போலும்.

**பரிப் .:** மறைக்கவேண்டிய அதையும் மறையாமையின் (புல்லறி-வாளரிடம்) குற்றம் நாடுவார் யாரும் இலர் ஆவர்' என்பர்.

**காளி .:** 'அற்றம்—பொருளற்றம் அதாவது வறுமை, அதனைத் தீர்த்தல் மிக்க புல்லறிவு ; வறுமையை நீக்கக் குற்றஞ்செய்தலும் அதனை மறைக்க அக்குற்றத்தை மறைத்தலும் புல்லறிவு என்பது கருத்து' என்பர். 'பொருளற்றத்திற்கு ஈண்டு இயைபு இன்று. சிலர், வறுமையகற்றக் குற்றஞ்செய்தலும் அக்குற்றத்தை மறைத்-தலும் புல்லறிவு' என்பது இதன் கருத்தென்பர்.

5. தம்மை வியத்தல் — தற்புகழ்ச்சி

**பரிமேல் .:** 'புல்லறிவாளர் தங்குற்றத்தைத்தாம் மறையாராயின் ஆடைகட்டிக் கொண்டு அற்றங்காப்பதால் மட்டும் பயன் இன்று' என்பர். 'மறைக்க வேண்டியவற்றுள் மிக உயர்ந்தது குற்றம்; அதனை மறையாது, ஆடைகட்டி அற்றத்தை மறைப்பது புல்லறிவு' என்பது கருத்து.

இவற்றுள், 'தங்கண் உள்ள குற்றங்களை இல்லாதனவாகச் செய்யாவழி ஆடைகட்டி அற்றத்தை மட்டும் மறைத்துக்கொள்ளுதல் புல்லறிவு' என்ற உரையே தெளிவானது. இதற்கு எடுத்துக் காட்டாக இருப்பது **பரிமேலழகர்** உரை.

**தேவநேயர்** 'அற்றம் மறைத்தலில் மறைத்தல்—கண்ணிற்குத் தோன்றாமற் செய்தல். குற்றம் மறைத்தல்—குற்றங்களையறவே ஒழித்தல்' என்பது நயமானது.

**வரத .:** 'தம்வயின் குற்றம் மறையாவழி, புல்லறிவு-(புல்லறிவினால்) அற்றம் மறைத்தலோ' என இயைத்துப் பொழிப்புரை வழங்கினர். ஆனால் கருத்துரையில் 'அற்றம் மறைத்தலோ புல்லறிவு' என முடித்துக் காட்டுகிறார். இது முரண்பட்ட கருத்தை வழங்குகிறது. இது இவர் கூறும் பொழிப்புக்கேற்பச் சொற்களை இயைத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

**இராம .:** 'புல்லறிவு (புல்லறிவாளர்கள்) அற்றம் (பொய்) மறைத்தலோ தம்வயின் குற்றம் மறையாவழி (ஆகும்)' என இயைத்துச் சிலசொல் வருவித்துப் புல்லறிவாளர்கள் பொய்யை மறைக்க முயலும் விதமோ, தம்மிடமுள்ள ஏனைய குற்றங்களை மறைக்கமுடியாமற் போகும் வழியாகும். எனப் புதிய உரை காண்பர். இவர்காணும் பொருளில் அற்றம்—பொய்யான தற்பெருமை. அதனை மறைக்க முயலும் விதம் மற்ற குற்றங்களும் வெளிப்படும் வாயிலாகிறது என்பது. இதுவும் ஓராற்றான் இயைபுடையதே.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**அற்றம் மறைத்தல் :**

அற்றம் மறைக்கும் —குறள்.,980

**85.7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு. (847)**

**உரைப்பகுதி:**

**அ) மணக்:** அறிவில்லாதவன் அரிதாக எண்ணின மறைப் பொருளைச் சோரவிடுவன்: அதுவேயன்றி, தனக்குத் தானே துன்பத் தினையும் செய்துகொள்ளுவன், எ—று.

சோரவிடுதல் - பிறர்க்குச் சொல்லுதல். இது பொருட்கேடும் உயிர்க்கேடும் தானே செய்யும் என்றது.

**ஆ) பரிதி.;** இரகசியத்தை அடக்க மாட்டாமல் பரரகசியமாக் குவான்[1] தனக்குத் தானே மிடி[2] தேடிக் கொள்வானாம், எ-று.

**இ) பரிப்.:** அறிவு இல்லாதான் தான் அரிது ஆக எண்ணின மறைப்பொருள் சோரவிடும்: அதுவே அன்றித் தனக்கு தானே பெரிய துன்பத்தினையும் செய்து கொள்ளும், எ-று.

சோரவிடுதல் - பிறர்க்குச் சொல்லுதல். இது பொருள்கேடும் உயிர்க்கேடும் தானே செய்யும் என்றது,

**ஈ) காளி.:** இவர் எமக்கு இனியர் என்று கருதிப் பிறர்க்கு உரைத்தற்கு அரியது ஓர் மறையினை[3] ஒருவர் சொன்னால் அதனை அடக்குவது ஓர் அமைவு இன்றிப் பின்பு அவ்விடத்திலே சோரவிடும் புல்லறிவாளன் மற்று ஆவன் தானே தனக்குப் பிறிது ஒன்றாலும் தீராத பெரிய துக்கத்தைச் செய்து அனுபவிக்கும், எ—று.

**உ) பரிமேல்.:** பெறுதற்கு அரிய உபதேசப்பொருளைப் பெற்றாலும் உட் கொள்ளாது போக்கும் புல்லறிவாளன் அவ்வுறுதி யறியாமையால் தானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும்.

சோரும் என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின். மேல் நின்றது.[4] மிக்க வருத்தம்- பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி]

---

1. பரரகசியமாக்குவான் — பிறருக்கு அறிந்த ரகசியம் ஆக்குவான்
2. மிடி — வறுமை
3. மறையினை — இரகசியத்தை
4. இடத்து நிகழ்பொருள் அறிவிலாரிடத்துள்ள ரகசியம். இரகசியம் சோரும் என்னாது அருமறை சோரும் அறிவிலான் என்றலின் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது ,இடம் — அறிவிலான; அதன்கண் நிகழ்பொருள் மறை சோர்தலாகிய தொழில்,

அருமறை சோரும் என்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய் சோர்ந்து பிறர்க்கு உரைக்கும் என்று உரைத்தார்;[5] அது பேணாமை என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை அறிக.

ஊ) **கவிராசர்.**: பெறுதற்கரிய உபதேசப்பொருளைப் பெற்றாலும் அதனை மனத்திலே வையாமல் மறந்து போகும் புல்லறிவாளன், அந்த உபதேசவுறுதி அறியாமையால், தனக்குத் தானே கேடு தேடிக் கொள்வான், எ–று.

ஏ) **பழைய 2.**: பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன் அவ்வுறுதி யறியாமையால் தானே தனக்கு வருத்தத்தைச் செய்து கொள்ளும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்குடவர்** 'அருமறை சோரும் அறிவிலான்' என்பதற்கு 'அறிவில தான் அருமையாக எண்ணி மறைப்பொருளைச் சோர விடுவன்' என்பர். இதில் 'அருமையாக எண்ணின மறைபொருள்' என்ற தொடர் **பரிமேலழகரைப்** பால் இயல் அதிகாரங்களின் பொருணோக்கையும் மறக்கச் செய்திருக்கிறது. அதனால் அவர் 'அரிய உபதேசப் பொருளைப் பிறர்க்குச் சொல்லும் 'புல்லறிவாளன்' என்றனர். **காளிங்கர்** இரகசியங்களைப் புறம்போக்கும் புல்லறிவாளன், வேறு எதனாலும் போக்க முடியாத துன்பத்தைத் தானே தனக்குச் செய்து கொண்டு வருந்துவான்' என்பர். இதனைப் **பரிமேலழகர்** 'பேணாமை என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மையல்ல' என மறுப்பர். இது அரசிற்கு அங்கமாவார் மேற்கொள்ள வேண்டிய இயல்பு கூறும் பகுதியாதலானும் அரசாங்கத்தில் இரகசியமான செய்திகளையும் யான் அறிவேன் என்று வேண்டுமென்றே பிறர் அறியப் பேசுதல் அவனால் பெருமைக்கு ஏதுவாகக் கருதப்படுதலானும், அருமறையை உபதேசப் பொருள் எனின் அது அறத்துப்பாலுக்கன்றி ஆட்சி முறை கூறும் அங்க இயலுக்குப் பொருந்தாமையானும், தாம் குருமுகமாகக் கேட்ட உபதேசப் பொருளைத் தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் எனப் பலரறியப் பரப்புதலே பேரின்பமாதலானும், எட்டெழுத்து மந்திரத்தை எல்லாருக்கும் உபதேசித்த **இராமாநுசர்** உயர்ந்தாராதலானும், **பரிமேலழகர்** தந்த மறுப்பு ஏற்புடையதோ என்பதை ஆராய்க.

---

5. யாரென்று அறியக் கூடவில்லை.

அன்றியும் பேதைமை அறியாமையை யடிப்படையாகக் கொண்டு மயக்க அறிவால் விளைவது. ஆதலால் மன்னிக்கத்தக்கது. புல்லறிவாண்மை செருக்கால் வேண்டுமென்றே செய்யும் மன்னிக்க முடியாத குற்றம். இவற்றாலும் மறைவெளிப்படுத்தலே புல்லறி வாண்மையாமாறு துணியலாம். **பரிதி**.பெருமிறை என்பதற்குப் பெருமிடி' எனப்பொருள் காண்பர். அது நேர்பொருளாகாது. **மணக்குடவர்** ''அறிவிலான் அருமறை சோரும்; தானே தனக்குப் பெருமிறை செய்யும்'' என இரு தொடராகக்கொண்டு உரை வகுத்தனர். **பரிமேலழகர்** 'சோரும்' என்பதை எச்சமாகக் கொண்டு 'அறிவிலான்' என்ற பெயர் கொண்டு முடிப்பர். ஒருதொடராகக் கொள்ளுதலே பொருள் தொடர்பும் எளிமையும் உடையது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

**அருமறை சோராமை :**

சொல்லார்க்கு அருமறை சோராமை — ஏலாதி., 15

**முற்றும் :**

விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா
அளிந்தார் கணாயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விரைந்து கெடும் — பழ. நா., 183

## ஓ) மேற்கோள்பகுதி :

**சுவாமி.**: ஈவோன் ஏற்றலுக்கு மேற்கோள் — இ.கொ., 36

## 85.8. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
## போஒம் அளவும்ஓர் நோய். (848)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .**: அறிவுடையார் சொல்லவும் செய்யான்; தானும் தெளியான்; அத்தன்மையன் சீவன் போமளவும் உலகத்தார்க்கு ஒரு நோய்போல்வன், எ—று.

இஃது ஈட்டின பொருளைக் கொடுத்தலும் தொகுத்தலும் செய்யாமை புல்லறிவு என்றது. வேறுசெய்யும் வினைக்கும் ஒக்கும்.

**ஆ) பரிதி .:** கற்பித்த புத்தியுங் கேளான்; தானும் அறியானாகில் சாமளவும் அறிவின்மை ஒருவியாதி, எ—று.

**இ) பரிப் .:** அறிவுடையார் சொல்லவும் தான் செய்யான் அத்-தன்மையன் ஆகிய சீவன் போம் அளவும் உலகத்தார்க்கு ஒரு நோயைப் போல்வன், எ—று.

ஏவுதல்—தான் தெரிய என்று ஏவுதல். தெளிதல்-பொருள் யாதென்று தெளிதல். இஃது ஈட்டின பொருளைக் கொடுத்தலும் துய்த்தலும் செய்யாமை புல்லறிவு என்றது. வேறு செய்யும் வினைக்கும் ஒக்கும்.

**ஈ) காளி .:** தானும் அறியான் பிறர் சொல்லவும் செய்யான் ஆகிய புல்லறிவாளன் யாவன்? அவன் உயிர் நீங்கும் அளவும் விடாது அனுபவிப்பது ஓர் நோயால் இத்துணை, எ—று.

**உ) பரிமேல் .:** புல்லறிவாளன் தனக்கு உறுதியாயவற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவும் செய்யான், அதுவன்றித் தானாக-வும் இவை செய்வன என்று அறியான், அவ்வுயிர் யாக்கையின் நீங்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம், எ-று.

உயிர் தான் உணர்தல் தன்மைத்தாயிருந்தும் நின்ற யாக்கை வயத்தான் மருடல் தன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயிர்[1] என்றும் அதனின் நீங்கியபோதே அதற்கு இரண்டனுளொன்று[2] கூடுதலின் 'போமளவும்'[3] என்றும், குலமலை[4] முதலிய [5]பொறுக்கின்ற நிலத்-திற்குப் பாவ யாக்கை பெரும்பொறையாய்த் துன்பம் செய்தலின் 'ஒரு நோய்'[6] என்றும் கூறினார்.

**ஊ) கவிராசர் .:** புல்லறிவாளன் தனக்குறுதியான காரியத்தை அறிவுடையார் சொல்லவும் செய்யான்; தானும் அறியான்; அவ்வுயிர் போகிற பரியந்தம்[7] நிலத்துக்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம், எ—று.

---

1. அவ்வுயிர் — தானாகவும் போகாமல் செய்வன அறியாமல் இருக்கும் உயிர்.
2. இரண்டனுளொன்று — ஏவச்செய்தல், தான் செய்தல் என்ற இரண்டினுள் ஒன்று.
3. 'போஒமளவும்' என்றும் பாடமுண்டு.
4. குலமலை—பெருமலை
5. முதலிய என்றமையின் குன்று, ஆறு, காடு, நாடு போன்றவையும் கொள்க.
6. 'ஓர் நோய்' என்றும் பாடமுண்டு.
7. பரியந்தம்—வரை.

ஏ) **பழைய 2.:** புல்லறிவாளன் தனக்கு உறுதியாய காரியங்களை அறிவுடையார் சொல்லவுஞ் செய்யான்; அதுவன்றித் தானாகவுமிவை செய்வன் என்று அறியான்; அவன் அவ்வுயிர் யாக்கை நீங்கிப் போமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கு அரியதொரு நோயாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

''**அவ்வுயிர் போஒம் அளவும் ஓர் நோய்**'' என்பதற்கு 'நிலத்திற்கு நோயாம்' என்பர் **பரிமேலழகர்**. ஏனையோர் யாருக்கு? அல்லது எதற்கு என விதந்திலர்.

ஏவச்செய்தலும், தொகுத்தலும் பொருளைப்பற்றியவை என்பதை இவர் குறிப்பு காட்டுகிறது என்று பால் அதிகார இயைபு பற்றிக் கூறிய **மணக்குடவர்** இயல்நோக்கை எண்ணிச் செய்யும் வினைக்கும் ஒக்கும் என்ற நயம் நுனித்தறியத்தக்கது. புல்லறிவாளன் உலகத்தார்க்கு ஒரு நோய் போல்வான்' என்றார் **மணக்குடவர், பரிமேல், கவிராசர்** முதலியோர். **பரிதி.** 'அவ்வறிவின்மை அவனுக்கே ஒரு நோயாம்' என்பர். 'அவன் அனுபவிப்பது ஓர் நோய்' **காளி.**; 'அவனைத்தாங்கும் உறவினர்க்கெல்லாம் நோய்' என்பர் **தேவநேயர்**; 'தனக்கும் பிறர்க்கும் நோய்போல்வான்' என்பர் **இராம.**; 'பூமிதேவிக்கு நோய் போல்வான்' என்பர் **மு.ரா.அரு.**; இங்ஙனம் உலகுக்கு நோய்; தனக்கு நோய்; சுற்றத்தாருக்கு நோய் என்பவற்றுள் உலகில் அனைவரும் அடங்குதலின் உலகுக்கு அல்லது பூமிக்கு நோய் என்றலே சிறப்புடைத்து, ''எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழிநல்லை வாழிய நிலனே'' என்றார் பிறராகலின்.

செய்கலானை நோய் என்று கூறியது செறல் பற்றிய வழக்கு 'மகன் எனல்; மக்கட்பதடியெனல்' என்றாற் போல. நோய் உடற்குப் பொறையாதலேயன்றி ஊறும் வினைப்பதுபோல இவன் உலகிற்குப் பாரமாதலே யன்றித் தீமையும் விளைவிப்பான் என்பதைச் சிந்திக்க. நோய் மருந்தால் பரிகரிக்கப் படுமாறுபோல மன்னனால் இவனும் கடியத்தக்கவன் என்றவாறு.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**ஏவவும்செய்கலான் :**

ஏவா மக்கள் மூவா மருந்து. — கொன்றை., 8

ஓ) **மேற்கோள் பகுதி :**

**நச்சி .:** **செறற் சொல்லிற்குத் தன்னின முடித்தலான் இக்குறளை** எடுத்துக்காட்டி, இழிபும் கொள்க என்பர். —தொல். சொல், 57

**மயிலை :** **இழிப்பின்கண் உயர்திணை அஃறிணையானதற்கு** மேற்கோள். — நன்., 378

**சங்கர :** செறலின்கண் உயர்திணை அஃறிணையாதற்கு. — நன்., 379

**சுவாமி ;** மறையாய் அடுக்கலுக்கு மேற்கொள். — இ.கொ., 120

85.9. **காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான்கண்ட வாறு.** (849)

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** அறியாதானை அறிவிக்கப் புகுமவன் தானறி-யாதவன் தான் அறிந்தபடியே அறிந்தானா யிருக்குமாதலான், எ-று.

இது கொண்டது விடாமை புல்லறிவு என்றது.

ஆ) **பரிதி .:** புல்லறிவற்கு அறிவு சொல்லுவான்றான் புல்லறிவன் அந்தப் புல்லறிவிற்கு என்னறிவு சொல்லப் பெற்றான் எ-று.

இ) **பரிப் .:** அறியாதனை அறிவிக்கப் புகுவான் தான் அறியான் ஆகும். அவ்வறியாதவன் அறிந்தபடியே அறிந்திருக்கும் ஆதலான், எ-று.

இது கொண்டது விடாமை புல்லறிவு என்றது.

ஈ) **காளி .:** தான் கற்றது ஒன்றின் மெய்ப்பொருளைக் காண அறியாத புல்லறிவாளன் தான் கண்டவற்றையே குறித்து ஒன்றைக் கசடு அறக் காட்டக் கருதுவான் யாவன்? அவன் தானும் மற்று அன்னனே ஆம்; என்னை எனின்? தான் காட்டும் மெய்ப்பொருள்

காணாதானாகிய புல்லறிவாளன் தான் கண்டவற்றையே கண்டா-னாய்விடும் இத்துணை அல்லது ஓர்ந்து[1] கைக்கொள்ளும் கருத்தினன் அல்லன், எ-று.

**உ) பரிமேல் .:** தன்னை எல்லாம் அறிந்தவனாக மதித்தலான் பிறரால் ஒன்று அறியும் தன்மையிலதானை அறிவிக்கப் புகுவான் அவனால் பழிக்கப்பட்டுத்தான் அறியானாய் முடியும், இனி அவ்-வறியுந்தன்மை இல்லாதான் கொண்டது விடாமையான் தானறிந்த-வாற்றால் அதனை அறிந்தானாய் முடியும், (எ-று).

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல்[2] ஒருவாற்றானும் இயைவதன்று என்பதாம்.

**ஊ) கவிராசர் .:** தான் எல்லாமறிந்தவனென்று பெருமை சொல்லிக்கொண்டு பிறரை அறிவிக்கப்போகிறவன் அவனாலே தான் பழிக்கப்பட்டுத் தானறியாதவனாவன். அறியாதவன், தான் கொண்ட நெறியை விடாமையால், அதனை அறிந்தவனாக முடியும், எ-று.

**ஏ) பழைய 2 .:** தன்னை நன்கு மதித்தற்குப் புல்லறிவாளன் மெய்யுணர்தல் முதலாகிய சாத்திரப் பொருள்களைக் காணாத வனுக்குத் தான்றான் காணாதவன் கண்டதுபோலச் சொல்லிக் காட்டுவன். அதனைக் கேட்டவன் காணாதவன் அவன் கண்டானாந் தான் கண்ணாற் கண்டது போல், (எ-று).

இருவரும் புல்லறிவாண்மையாற் ''குருடுங் குருடுங் குருட்-டாட்ட மாடிக், குருடுங் குருடுங் குழிவிழுமாறே''[3] என்றது போலக் கொள்க. இதனுக்கு இன்னும் பொருள் வேறு கூறுவாரும் உளர்[4].

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்., பரிமேல்.,** இருவரும் 'சொன்னாலும் தெரியாத-வனுக்குத்தெரிவிப்பன்தான் தெரியாதவன்; தெரியாதவன் இவன் சொன்னதைக் கேட்டுத் தெளியாமையால்-தான் கண்டதைக் கேட்டுத்

1. ஓர்ந்து கைக்கொள்ளும் — ஆய்ந்து மேற்கொள்ளும்
2. கொளுவுதல் — கொளுத்துதல்
3. திருமந்திரம்., 1680
4. தொகுப்பும் குறிப்பும் காண்க.

திருந்திக் கொள்ளாமையால் இயல்பாகத் தெரிந்த அளவே தெரிந்திருப்பன்' என்ற ஒரே கருத்தினர். **பரிதியும்** ஓரளவு இக்கருத்தினரேயாவர். ஆனால் புல்லறிவனுக்குச் சொல்வதால் புல்லறிவாளனாவன் என்ன அறிவு பெற்றான்? என்கின்றனர். இதில் சொல்லிப் புல்லறிவாளனானவனும், இயல்பாகவே புல்லறிவாளனாக இருப்பவனும் ஆகிய இருவர் குறிக்கப்படுகின்றனர். இதனால் இவரையும் **பரிமேலழகரோடு** இணைத்தல் இயலும்.

**காளிங்கர்** உரைப்போக்கு சொல்வானையும் சொல்லக் கேட்பானையும் புல்லறி வாளனாக்குகிறது. இவரை ஒட்டிச்செல்லும் **பழைய உரையின்** குறிப்பு ''குருடுங் குருடும் குருட்டாட்டமாடி'' என்ற **திருமந்திரப்**பாடலை எடுத்துக்காட்டி இதற்கு அரண் செய்கிறது. மேல்வரும் 'பொருள் வேறுகூறுவாரும் உளர்' என்ற குறிப்பு **பரிமேலழகரைச்** சுட்டுவதாகும். இவர் யாண்டும் **பரிமேலழகரை** ஒட்டி எழுதுபவராதலின்.

**இராம.** உரையும் **காளிங்கரைக்** கருத்துட்கொண்டே செல்கிறது. ஆகவே 'சொல்வானையும் சொல்லிக்கேட்பானையும் ஆகிய இவ் இருவரையும் அறியாதவர்களே என்று உரைப்பவர்கள் **காளிங்கர், பழைய உரை, இராமலிங்கர்** மூவரும். சொல்பவன் புல்லறிவாளனுச்குச் சொல்லப் போனதால் அறிவற்றவனாகிறான் என்று கூறுபவர்கள் **மணக்., பரிமேல்., கவிராசர், தேவநேயர், கா.சு.** முதலியோர்.

**'காணாதான்'**

'தான் கற்றதொன்றின் மெய்ப்பொருளைக் காண அறியாத் புல்லறிவாளன்' **காளி.**; மெய்ப்பொருளோடு தொடர்புபடுத்தி உரை காண்பது ஈண்டு இயைபிலது. அங்ஙனமே 'மெய்யுணர்தல் முதலான சாத்திரப் பொருள்களைக் காணாதவன்' என்னும் **பழையவுரையும்** ஏற்புடையதன்று.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும்:**

பூத்தாலும் காயா மரமும்உள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் — பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா உணர்வு. — பழ. நா., 94

ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கற்கு யாதும் மொழியற்க — மூர்க்கன்றான்
கொண்டதே கொண்டு விடானாகும் ஆகாதே
உண்டது நீலம் பிறிது. — பழ.நா., 95

பூத்தாலும் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் — பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணர்வு. — சிறு பஞ்ச., 23

பூவாதே காய்க்கும் மரமும்உள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே — தூவா
விரைத்தாலும் நன்றாக வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா உணர்வு. — நல்வழி., 35

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றம் தமதே பிறிதன்று — முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை உணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன். — நீதிநெறி., 25

கல்லாக் கயவர்க்கு அருநூற் கிளைமறை
சொல்லினர் தோமெனத் துணைமுலை பெருத்தன.
— கல்லாடம், 1.15-16

......... ......... ......... ஆய்ந்தருநூல்
ஓதி அறியா ஒண்பே தையருடனே
நீதி முறையா நிகழ்த்துநூல் — பேதைமையாம்
காணாதான் காட்டுவான் தான்காணான் கண்ணெதிரே
நாணாதி ராதே நவிலாதே ... ... — தமிழ்., 187—188

கோவாத சொல்லும் குணவிலா மாக்களை
நாவாய் அடக்கல் அரிதாகும் - நாவாய்
களிகள்போல் தூங்கும் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவாரோ இல். — பழ. நா.,117

உய்த்தனர் தேன்மழை உதவிப் போற்றினும்
கைத்திடல் தவிருமோ காஞ்சி ரங்கனி
அத்தக வல்லவோ அறிவி லாதவன்
சித்தம துணர்வகை தெருட்டு கின்றதே. — கந்த. சூரனமைச். 163

உறுதியை யுரைத்தவன் உணர்வி லாதவன்
வறிதெனை இகழ்ந்தனன் வருவ தோர்கிலன்
இறும் வகை நாடினன் யாதொர் புந்தியை
அறிவிலார்க் குரைப்பவர் அவரில் பேதையார்
— கந்த. சூரனமைச்., 182

......... ......... ......... உசாவினைப்
பேதைக் களிப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக் கொம்பன்னாள் குயம். — யா.கா. மேற்கோள்

செருக்குநர்த் தீர்த்து மென்பார் தம்மினார் செருக்க ரென்ன
உருக்கிய செம்பி னுற்ற நீரென வுரைக்க லுற்றான்.
—கம்ப., 3365

எத்துணை வகையினு முறுதி யெய்தின
ஒத்தன வுணர்த்தினே னுணர கிற்றிலை
அத்தவென் பிழைபொறுத் தருள் வாயென
உத்தம னந்நக ரொழியப் போயினான். — கம்ப., 6504

ஈன மேகொ லிதமென வெண்ணுறா
மோன மாகி யிருந்தனன் ...... — கம்ப., 6922

முட்டாள் என்னசொன்னாலும் கட்டோடே கேளான். — பழ.,
மூடருக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு. — பழ.

**காணாதற் காட்டுவான் :**

கல்லார்க் கினிய வுரைத்தலும் கைக்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும் – இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும்இம் மூன்றும்
அறியாமையான் வருங்கேடு. - தஞ்சை சரஸ்வதிமால் பழைய
பாட்டு.,

**ஓ) மேற்கோள்பகுதி :**

**சுவாமி .:** வழக்கு அறியாதார் வழக்கையும் இகழ்தல் இயற்கையே என்பதற்கு மேற்கோள். - இ.கொ., 6.

85.10 உலகந்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்(து)
அலகையா வைக்கப் படும். (850)

**உரைப்பகுதி :**

**அ) மணக் :** உலகத்தில் அறிவுடையார் பலர் உண்டு என்பதாகிய ஒரு பொருளை இல்லை என்று சொல்லுமவன், இவ்வுலகத்தின் கண்ணே திரிவதாகிய பேய் என்று எண்ணப்படுவன், எ-று.

இஃது உயர்ந்தோர் உண்டு என்பதனை இல்லை என்றல் புல்லறிவு என்றது.

**ஆ) பரிதி .:** பெரியோர் உள்ளதென்று சொல்லுமதை இல்லை என்று சொல்பவன் பூமியில் பிசாசாய்த் திரிவான், எ-று.

**இ) பரிப் .:** உலகத்து அறிவுடையார் பலரும் உண்டு என்பது ஒரு பொருளை இல்லை என்று சொல்லுமவன் இவ்வுலகின் கண்ணே ஒரு பேய் என்று எண்ணப்படும்.

இஃது உயர்ந்தோர் உண்டு என்பதனை இல்லை என்றல் புல்லறிவு என்றது.

**ஈ) காளி ,:** திருந்திய கேள்வியின்[1] உயர்ந்தோர் தெரிந்து உண்டு என்னும் மெய்ப்பொருளை அஃது இல்லை என்று கழறுவான்[2] யாவன்? ஒரு புல்லறிவாளன், அவனை ஈண்டு ஒரு மகன் என்று கருத அடாது[3]: பின்னை என் எனின்? பேய்களுடன் இவனும் ஒரு பேயாக வைத்து எண்ண அடுக்கும்[4], எ-று.

---

1. திருந்திய கேள்வி — நன்றாகத் தெரிந்து அறிந்த நூலறிவினை யுடையார், கேள்வி, கருதி என்பதன் தமிழாக்கம்.
2. கழறுவான் — இடித்துரைப்பான்
3. அடாது — பொருந்தாது
4. அடுக்கும் — பொருந்தும்

இத்தன்மையர் ஆகிய புல்லறிவாளருடன் கெழுமல்[5] ஆகாமை உணர்த்தி மற்று இதன் பின்னரே ஒருவரோடும் இகல் கோடலும்[6] ஆகாது என்பதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

**உ) பரிமேல்.:** உயர்ந்தோர் பலரும் உண்டு என்பதோர் பொருளைத் தன் புல்லறிவால் இல்லை என்று சொல்லுவான் மகன் என்று கருதப்படான் வையத்துக் காணப்படுவதோர் பேய் என்று கருதப்படும், எ-று.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக[7] அவர் உள என்பன பலவேனும் சாதிபற்றி[8] உண்டெனப்பது என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் தன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல 'அலகை' என்றும் கூறினார்[9]. இவை நான்கு பாட்டானும் உறுதிச்சொல்[10] கொள்ளாமையது குற்றம் கூறப்பட்டது.

**ஊ) கவிராசர் .:** பெரியோர்கள் அனேகம் பேர்களும் உண்டு என்று சொல்லுகிற பொருளைப் புல்லறிவாலே யில்லையென்று சொல்லுகிறவன் மனுஷனல்லன் பூமியிலே பேயென்று சொல்லப்படும், எ—று.

**ஏ) பழைய 2 .:** உயர்ந்தோர் பலரும் உண்டு என்பதோர் பொருளைத்தன் புல்லறிவாண்மையால் இல்லை யென்று சொல்லுவான் மனிதன் என்று கருதப்படான்; வையத்துக் காணப்படுவதோர் பேய் என்று சொல்லி வைக்கப்படும்.

---

5. கெழுமல் — நட்புக்கோடல்
6. இகல்கோடல் — பகைகொள்ளுதல்
7. முதலாக என்றமையின் ஆகாயம், அனுமானம் முதலிய பிரமாணம், யோகம், ஞானம் முதலியவற்றையும் கொள்க.
8. 'சாதியொருமை பற்றி' என்றும் பாடமுண்டு.
9. பேய், தான் கருதிய எல்லாம் கூறலால் ஒப்பும். வடிவால் ஒவ்வாமையும் உடைமையில் தன்னுடலை மறைத்து மக்களுடலோடு தோன்றும் பேய் என்று கூறினர்
10. உறுதிச்சொல் — நன்மை பயக்கும் சொல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பிசாசாக எண்ணப்படுவன் என்கின்றன ஏனைய உரைகள்; **பரிதியுரை** பிசாசாகவே திரிவன் என்கின்றது. இது துணிவு பற்றிய கால வழுவாகலம்.

**பரிமேழலகர்** உண்டு என்று பெரியோர்கள் சொல்லும் பொருள் கடவுளும் மறுபிறப்பும் முதலாயின என்பர். ஏனையோர் மெய்யுணர்தலால் அறப்பாலில் உணரவேண்டிய அவை ஆண்டுக்-கூறப்பட்டமையின் அறிவுடையார் உண்டென்பதைப் பொது வகையாற் கூறி உலகப் பொருள்களையும். ஆட்சிக்குரிய சாதனங் களையுமே சட்டப்பொதுவகையாற் கூறினர்.

## ஒ) ஒப்புமைப் பகுதி :

**உலகத்தார் உண்டென்பது இல்என்பான் ,**

வைத்த வத்து மறுபிறப்பிற் நமக்கு
உய்த்துக்காட்டுத லேயுல கொட்டுமால்
எத்தி றத்தினும் இல்லுயிர் என்றிநீ
செத்துவம் எய்தின் சில்லைமை செய்பவால் — நீல., 886

............ அறநெறி யந்த ணாளரிற்
பிழைத்தவன் ... ... ... — கம்ப., 2290

கையுறு நெறியி னோக்கி மாமறை வழக்கி னின்ற
மெய் .................... — கம்ப., 6606

**வையத்து அலகையா வைக்கப்படும் :**

பேயொப்ப நின்று பிணங்கிக் கண்டார்க்கெனும்
மாயத்தி னூறுண்ண மன்னு மருமையின்
நாயொப்பச் சீறி நறு நுதலாளொடு
காயக் கிலேசத்திற் கட்டுரைக் கின்றான், — நீல., 349

நித்தில முலையி னார்தம் நெடுங்கணால் நோக்கப் பெற்றும்
கைத்தலந் தீண்டப் பெற்றும் கனிந்தன மலர்ந்த காண்க
வைத்தவர் கொய்யத் தாழ்ந்த மரமுயி ரில்லை யென்பார்
பித்தல ராயின் பேய்கள் என்றலாற் பேச லாமோ. — சீவக., 1907

## ஓ) மேற்கோள்பகுதி :

**சுவாமி .:** 'உலகத்தார் உண்டென்பது இலென்பான்' என்பது வினைமுற்றுப்பெயர் வினைமுதற் பொருளில் வந்ததற்கு மேற்கோள்
— இ. கொ., 83

வருமொழியை நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலை விளக்குதலால் அஃறிணைச்சாதி ஒருமை யாயிற்று என்பர்.
— இ. கொ. 130

## 85. புல்லறிவாண்மை

| | அறிவின்மை | அறிவிலான் | அறிவிலார் | வெண்மை | கல்லாத | அற்றம் | ஒருமை | ஏவவும் | காணாதான் | உலகத்தார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 8 | 7 | 10 | 1 | 2 | 5 | 9 | 6 | 4 | 3 |
| பரிதி. | 1 | 9 | 2 | 4 | 5 | 7 | 3 | 8 | 6 | 10 |
| பரிப். | 8 | 7 | 10 | 1 | 2 | 5 | 9 | 6 | 4 | 3 |
| காளி. | 1 | 4 | 2 | 9 | 5 | 3 | 8 | 7 | 6 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

85-வது அதிகாரம் 'புல்லறிவாண்மை' முற்றிற்று.

# 86. இகல்

**அ) மணக் .;** இகலாவது பிறரோடு மாறுகொண்டால்வரும் குற்றம் கூறுதல். இஃது அறியாதார்க்கு உளதாமாதலின், அதன்பின் கூறப்பட்டது, எ—று.

**ஆ) பரிதி .:** இகலாவது புல்லறிவினர்க்கு உண்டாம் மாறுபாடு எ—று.

**உ) பரிமேல் .:** இனி அவற்றான்[1] வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனான் வருவன கூறுவான் தொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றார். அஃதாவது இருவர் தம்முள் பொருது வலிதொலைதற்கு[2] ஏதுவாய மாறுபாடு.

**ஊ) கவிராசர் .:** அஃதாவது-இரண்டுபேர்கள் ஒருவர்க்கொருவர் கோபத்தினாலே சண்டைபண்ணிக் கெட்டுப் போவதற்குக் காரண-மாகிய மாறுபாடு.

**ஏ) பழைய 2 .:** அஃதாவது இருவர் தம்முட் பொருது வலி தொலைதற்கேதுவாகிய மாறுபாடு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**தேவநேயர் :** ஒரு பொருள் பற்றியோ அன்பின்மையாலோ பொருது அழிதற்கும், வேறற்கும் காரணமான மாறுபாடு. இகல் என்பது

1. அவற்றான் — பேதைமை புல்லறிவாண்மை இவற்றான்
2. வலி தொலைதற்கு — வலிமை கெடுதற்கு

தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் பொதுவான மாறுபாட்டுக்-குணம். பொருளை அமைதியாய் ஈட்டுதற்கு இகல் தடையாயிருத்-தலின் இது பொருட்பாலில் வைக்கப் பெற்றது என பாலியையும் காட்டுவர்.

**வரத:.** பிறர்க்குத் தீமை செய்து பகைமையை வளர்க்கிறது. தனக்குத் தீமை செய்து கொள்ளும் புல்லறிவாண்மையின் பின்-வைக்கப்பட்டது என அதிகார இயைபு கூறுவர்.

**இராம.:** ஒருவர் ஒருவரிடம் கொண்டுள்ள மனக்குறை. இம்மனக்-குறையும், குரோதமும் பகைமைவளர்தற்கும், மற்றும் பல துன்பங்-கட்கும் மூலமான இகல் எனப்படும் எனவும் தடுமாறு சொற்கள் தந்து புணர்ந்துரைப்பர்.

**சாமி. சிதம்., சி.இ.** 'வலிமையையழிக்கும் மாறுபாடான பகைமை' என்பர். **கா.சு.** மாறுபடுதல் (சினத்தல்). சினத்தலை வெகுளாமை-யால் பொதுவறத்தில் ஒன்றாகக் கூறியமையின் இகல் அதனால் விளையும் மாறுபாட்டையே விளக்குதல் காண்க. 'இகல்—பகைமைக் குணம்' **குழந்தை.**

இவற்றுள் 'இகல்- மாறுபாடு; அது வெகுளியான் விளைவது' என்பதிலும் 'பொருணசையாலும், கருத்துமாற்றத்தாலும் விளைவது' எனல் தகுவது. வெகுளியை அரசற்கும் அனைவருக்கும் பொதுக்-குறையாகக் கொண்டு வெகுளாமையில் விலக்கினாராதலின் ஈண்டுக் கூறியது அதனால் வரும் பகையாகாமையும் தெளியலாம்.

**வள்ளுவர்** பெருமான் 'இகல் மாறுபாட்டினை விளைக்கும் நோய்' என இகல்-காரணம், மாறுபாடு அதன் விளைவாகிய காரியம் என்பர். இவரை ஒட்டிய கருத்துக்களே சிறந்தவை எனல்தகும்.

86.1. **இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்**
**பண்பின்மை பாரிக்கும் நோய். (851)**

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** எல்லா உயிர்க்கும வேறுபடுதலாகிய[1] குணமின்மை-யைப் பரப்பும் துன்பத்தை, இகல் என்று சொல்லுவார் அறிவோர் எ—று.

இஃது இகலாவது இது என்று கூறிற்று.

---

. வேறுபடுதல் — கருத்து வேறுபடுதல்

**ஆ) பரிதி.:** மாறுபாடு என்பது எல்லா உயிர்க்கும் எக்காலமும் பிரகாச மில்லாத[2] பண்பின்மைதரும் நோய் எ—று.

**இ) பரிப்.:** எல்லா உயிர்க்கும் வேறுபடுதல் ஆகிய குணம் இன்மையைப் பரப்பும் துன்பத்தை இகல் என்று சொல்லுவர் அறிவோர் எ—று.

இஃது இகலாவது இது என்று கூறிற்று.

**ஈ) காளி.:** தாம் பிறரொடு மாறுபட்டு ஒழுகும் மாறுபாடு என்று சொல்லுப சான்றோர்: எவ்வுயிர்க்கும் இனிது மேவி ஒழுகாது வேறுபடுதல் என்னும் இப்பண்பின்மையைப் பரப்பும் நோயை எ—று.

பகல் என்பது பகுதல் என்றது. பாரித்தல் என்பது பரப்புதல்.

**உ) பரிமேல்.:** எல்லா உயிர்கட்கும் பிற உயிர்களோடு கூடாமை என்னும் தீக்குணத்தை வளர்க்கும் குற்றம் இகல் என்று சொல்லுவர் நூலோர்.

மக்களையும் விலங்குகளோடு ஒப்பிப்பது என்பது தோன்ற 'எல்லா உயிர்க்கும்' என்றும்[3], பகுதிக்குணத்தை[4] இடைநின்று விளைத்தலின் 'பகல் என்னும் பண்பின்மை' என்றும் கூறினார். நற்குணமின்மை[5] அருத்தாபத்தியால் தீக் குணமாயிற்று[6]. இதனால் இகலது குற்றம் கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்.:** எல்லா உயிர்களுக்கும் பிறவுயிர்களோடு கூட்டம் இல்லாமல் இருக்கிறதென்னும் பொல்லாங்கை வளர்க்கும் குற்றமே இகலாம், எ—று.

**எ) பழைய 2 :** எல்லா வுயிர்க்கும் பிறவுயிரோடு கூடாமற் பகைப்படுந் தீக் குணத்தை விளைக்குங் குற்றம் இகல் என்றுசொல்லுவர் நூலோர்.

---

2- பிரகாசமில்லாத — ஒளியில்லாத

3. இகல் நல்லறிவுடையாரையும் பகுத்தறிவில்லாத விலங்குபோல் ஆக்கி விடுதலால் மக்களுயிர்க்கு என விதந்து ஓதாது பொதுவகையான் 'எல்லாவுயிர்க்கும்' என்றார். இதனால் மாறுபாடு உடையோர் விலங்கோடு ஒப்பர் என்பதாயிற்று.

4. பகுதிக்குணம் — பிறவுயிர்களோடு கூடாமை என்னும் தீக்குணம்

5. 'பண்பின்மை' என்றும் பாடமுண்டு.

6. நற்குணமின்மை எனவே தீக்குணம் என்பது பொருள்வகையால் பெறப்பட்டது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**பரிதி**. **இகல்** என்பதை எழுவாயாகக் கொண்டு 'நோய்' என்ற பெயர்ப் பயனிலையைக் கொண்டு முடிப்பர். மேலும் 'பகல்-ஒளி அல்லது பிரகாசம்' என்பர். இங்கும் ஒரு தவறு உண்டு : பகல்—பிரகாசமாமேயன்றிப் பிரகாசமில்லாத என்ற எதிர்மறைப் பொருளைத்தராது. அங்ஙனம் வருவித்து முடித்தார் எனினும் மீண்டும் 'பண்பின்மை' எனல் வேண்டா. ஆகையால் பாடம் 'பிரகாசம் என்னும் பண்பு இன்மையைத் தரும்' என்றிருக்கலாமோ என்பது ஏடுகளை நோக்கித் தெளிதற்குரியது. இங்ஙனம் அமைதி காண்-போமாயினும் 'இகலென்னும் எவ்வநோய்' என்ற 853 குறட்கருத்தும் அதுவாதலின் அது கூறியது கூறலாய் ஆசிரியர்க்குக் குற்றத்தைச் சுமத்துவதாகிறது. ஆதலால் இவ்வுரை பிழைபட்டது எனலே தகுவதாம். மீண்டும் **பகைமாட்சி, பகைத்திறந்தெரிதல்** முதலான பகுத்லாகிய பகையைப் பற்றிய செய்தியே வருதலின் 'பகல்' ஒளியென்னும் பொருளில் ஆசிரியர் கருதிற்றிலர் என்பது துணிவு. **பரிதி.** கொண்டபாடம் 'இகல் என்பது' என்பதாம்.

### பாரித்தல்

'பரப்புதல்' **மணக்.**, **காளி.**, 'தரும்' என்பர் **பரிதி**.; 'வளர்க்கும்' **பரிமேல்.**, **கவிராசர்** ; 'விளைக்கும்' **பழைய உரை**. இவற்றுள் 'பரப்பும்' என்னும் பொருளே சிறந்தது. ஏனைய இதன் கருத்துப் பொருளாகச் சூழல் நோக்கி அமைவன.

### 'பகலென்னும் பண்பு இன்மை'

,பிரிவினை என்னும் தீயகுணம்' **தேவநேயர்**; 'பெரும்பாலும் சேர்க்கையும், உணவும், இணைவிழைச்சும் பற்றி அஃறிணையுயிர்-கட்கும் இகல் விளைதலின் எல்லாவுயிர்க்கும் என்றார்' என்றும் விளக்குவர். 'மக்களையும் விலங்குகளோடு ஒப்பிப்பது இகல் என்பது தோன்ற இங்ஙனம் கூறினார்' என்பர் **பரிமேலழகர்**. எல்லாவு-யிர்க்கும் என்றது எல்லா மனிதர்க்கும் என்ற பொருளையே குறிக்கும் ஏனைய உயிரினங்களில் பகைமை, வேறுபாட்டால் விளைவதன்று; இயல்பான பிற விக்குணம், என்பர் **இராமலிங்கனார்** இக்கருத்து மாற்றம் உயிர் நூல்ஆய்வு கண்டு துணியத்தக்கது. ''காரணமின்றியே யும் கறுவோடு மொன்றோடொன்று சீறுவ'' என்பதையும் இணைத்து எண்ணுக.

86.2. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. (852)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** 'பற்றார்' – பாடம்.

தம்மொடு பற்றில்லாதார் வேறுபடுதலைக் கருதி, இன்னாதவற்றைச் செய்தாராயினும், அவரோடு மாறுபடுதலைக் கருதித் தாமும் அவர்க்கு அவற்றைச் செய்யாமை நன்று, எ-று.

இது மேற்கூறிய குற்றமும் குணமும் பயக்குமாதலின், மாறு-படுதற்குக் காரணம் உள்வழியும் அதனைத் தவிர்தல் வேண்டும் என்றது, எ—று.

**ஆ) பரிதி .:** இன்னானை வென்றோம் என்கிற கீர்த்தியை எய்த வேண்டி மாற்றார் தம்முடனே மாறு கொண்டாலும் மாறு-பாடெண்ணியவனுக்குப் பொல்லாங்கு செய்யாமை நன்று, எ—று.

**இ) பரிப் .:** தம்மொடு பற்று இல்லாதார் வேறுபடுதலைக் கருதித் தீயவற்றைச் செய்தார் ஆயினும் அவரொடு மாறுபடுதலைக் கருதித் தாமும் அவர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை நன்று, எ-று.

மேல் கூறிய குற்றமும் குணமும் பயக்கும் ஆதலின் மாறுபடு-தற்குக் காரணம் உள்வழியும் தவிர்தல் வேண்டும் என்றது.

**ஈ) காளி .:** தம்மொடு சிறிதும் பற்று இல்லாதார் வந்து கருதிக் கொண்டு மாறுபடுதலைச் செய்யினும் தாம் அவரொடும் இகல் கருதிக்கொண்டு மற்று அவர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமையே தமக்குத்[1] தலைமைப் பாடாவது, எ—று.

ஓர் அரசர்க்குப் பகை விளைக்க வேண்டியவழி மற்று அதனால் அவர்க்கு ஓர் அழிவு வராது மாட்சிமைப்பட ஆராய்தலும் அமைச்-சர்க்குக் கடன் ஆகிய ஆற்றால் முன்னம் மிகைத்து இகல் செய்யல் ஆகாது என்பதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

**உ) பரிமேல் .:** தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானாயினும், அவனொடு மாறுபடுதலைக் குறித்துத் தாம் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாமை உயர்ந்தது, எ-று.

---

1. தம்மொடு — அரசர் தம்முடன்

செய்யின் பகைமை வளரத் தாம் தாழ்ந்துவரலானும், ஒழியின்[2] அப்பற்றாதன தாமே ஒய்ந்துபோகத் தாம் ஓங்கிவரலானும், 'செய்யாமை தலை' என்றார். பற்றாத[3] என்பது விகாரமாயிற்று[4].

**ஊ) கவிராசர் :** தன்னோடு கூடாமையைக் கருதி ஒருவனுக்குப் பொல்லாங்கு செய்தாலும், அவனுடனே பகை பண்ணிக்கொண்டு திரும்பி அவனுக்குப் பொல்லாங்கு செய்யாமை இருக்கிறதே நல்லது.

**ஏ) பழைய 2 :** தம்மொடு கூடாமையைக் கருதியொருவன் வெறுப்பன செய்தானாயினும் அவனொடு மாறுபடுதல் குறித்து அவனுக்குப் பொல்லாதவற்றைச் செய்யாமல் இருப்பது உயர்ந்தது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்குடவரும் காளிங்கரும்** 'பகல் கருதிப் பற்றார் செயினும்' எனப் பாடங்கொணடனர் என்பதை அவரவர் உரை-யமைப்புச் சான்றுபகரும்.

**பரிதி.** ஈண்டும் 'பகல்-கீர்த்தி' என்றனர். இதுவும் தகவுடைய கருத்தன்று. **பரிமேலழகர்** முதலானார் 'பகல் கருதி இன்னா செய்வான் பழிக்குப்பழி வாங்கும் ஒருவனாகவும்' கருதுவர்.

**வரத.** பகல் கருதி-ஒருவன் பிரிந்து வாழ்வதற்காக என, 'கருதி' என்னும் செய்தென் எச்சத்தைக் காரணப் பொருளில் வந்த-தாகவும், பற்றா செயினும்-தன்னைவந்து பற்ற முடியாத செயலைச் செய்தாலும் எனவும் கூறுவர். இது ஏனையோர் உரையினும் புதுநோக்குடையது.

## 86.3. இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத் தாவில் விளக்கம் தரும். (853)

**உரைப்பகுதி :**

**அ) மணக். :** மாறுபடுதலாகிய இன்னாத நோயை நீக்குவானா-யின் அந்நீக்குதல் கேடில்லாத குற்ற மற்ற ஒளியினைத்[1] தரும் எ—று.

இது தோற்றம் உண்டாம் என்றது.

---

2. ஒழியின் — துன்பந் தருவனவற்றைச் செய்வதொழிந்தால்
3. 'பற்றாதன' என்றும் பாடமுண்டு.
4. 'பற்றாதன' என்பது 'பற்றா' என நின்றது. இது எதிர்மறை வினையாலணையும் பெயர். இதன்கண் உள்ள தகர எழுத்துப்பேறும் அன்சாரியையும் அகர விகுதி-யும் தொக்கன.

**ஆ) பரிதி.:** மாறுபாடு என்கிற பொல்லாநோயை விடுவானாகில் ஒரு காலத்தும் கேடில்லாத புகழ் உண்டாம், எ—று.

**இ) பரிப்.:** மாறுபடுதல் ஆகிய இன்னாத நோயை நீக்குவான் ஆயின் அந்நீக்குதல் கேடு இல்லாத குறை அற்ற ஒளியினைத் தரும், எ— று.

இது தோற்றம் உண்டாக்கும் என்றது.

**ஈ) காளி.:** இகல் என்று சொல்லப்படும் துயர் விளைக்கும் நோயை ஒழிப்பின் பின் கெடுதலும் இன்றி மற்றும் தமக்கு ஓர் வருத்தமும் இன்றி உலகத்துத் தம் பேர் விளங்குவதோர் விளக்கத்தையும் தரும், எ—று.

எவ்வம் என்பது துக்கம்; தா என்பது வருத்தம்.

**உ) பரிமேல்.:** மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யும் நோயை ஒருவன் தன் மனத்தினின்று நீக்குமாயின் அவ-னுக்கு அந்நீக்குதல் எஞ்ஞான்றும்[2] உளனாதற்கு ஏதுவாய புகழைக் கொடுக்கும், எ—று.

தவலில்லாமை அருத்தாபத்தியான்[3] அப்பொருட்டாயிற்று. தாவில் விளக்கம்[4] வெளிப்படை[5]. யாவரும் நண்பராவர். ஆகவே எல்லாச் செல்வமும் எய்திக் கொடை முதலிய[6] காரணங்களால் புகழ் பெறும் என்பதாம்.

**ஊ) கவிராசர்.:** பகையென்று சொல்லப்படுந் துக்கத்தைச் செய்கிற வியாதியை ஒருவன் தன் மனத்திலே இருக்க ஒட்டாமல் நீக்கி விட்டால், அது அவனுக்கு எந்நாளும் அழியாத புகழைக் கொடுக்கும், எ—று.

---

1, குற்றமற்ற ஒளி — பழிபாவங்கள் சிறிதும் இல்லாத புகழ்
'உண்ணான் ஒளிநிறான் ...... ' என்பது போல

2. எஞ்ஞான்றும் — எப்போதும்

3. அருத்தாபத்தி — இனமாகிய பொருள்களுள் ஒன்றை எடுத்துக் கூறிய சொல் தன் பொருட்டு இனமாகிய பிறப்பொருளைக் குறிப்பால் அறிவித்தலால் 'தவலில்லாமை' என்பது 'எஞ்ஞான்றும் உளனாதல்' என்னும் பொருட்டாயிற்று.
எஞ்ஞான்றும் உளனாகாமைக்குத் தவலில்லாமை கூடாது. தவலில்லாமை இருத்தலின எஞ்ஞான்றும் உளனாதல் கூடும் என்பது இங்கு அருத்தாபத்தி.

4. தாவில் விளக்கம் — கேடற்ற புகழ்

5. வெளிப்படை — இயல்பாகவே பொருள் விளங்கி நிற்பது. அஃதாவது இயற்சொல்

6. முதலிய என்றமையின் — கல்வி ஆண்மை முதலியவற்றையுங் கொள்ளுக.

ஏ) பழைய 2: மாறுபாடென்று சொல்லப் படும் துன்ப நோயை நீக்கியிருப்பின் அவனுக்குத் தவறில்லாத[7] தாழ்வில்லாத புகழைத் தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இகலென்னும் எவ்வநோய்' என்பது 'இகல் நோய்' என்ற 851ம் குறட்கருத்தை அனுவதித்துக் கூறியதாம்.

'விளக்கம்'

ஒளி அதாவது தோற்றம்' என்பர். மணக். 'புகழ்' என்பர் பரிதி., 'தம்பேர் விளங்குவதோர் விளக்கம்' காளி.; 'எஞ்ஞான்றும் உளனாவதற்கு ஏதுவாய புகழ்' பரிமேல்.; இங்ஙனம் கருத்தால் மாறுபடாதுள்ளன உரைகள். 'இகல்—மனத்தாபம்' இராம.

உடற்கண்ணும் நோயுண்டாதலின் எவ்வநோயை மனநோய் என்று விதந்த பரிமேலழகரும் பிறரும் கூறும் உரைகள் சிறக்கின்றன.

'எவ்வநோய்' ஒருபொருட்பன்மொழியாதலின்' மிக்க நோய், பெருந் துன்பம் என்ற வ.சுப.மா. போன்றார் உரை சிறந்தது. ஏனோர் 'துன்பந் தரும் நோய்' எனக்காரணக்காரியப் பொருட்டாகக் கொண்டனர்.

தாவில் விளக்கம்'.

'எஞ்ஞான்றும் குன்றாததும் அறிவற்றதுமான புகழ்' வரத., 'உள்ளுதற்கேதுவாய புகழ்' சி.இ.

மு.ரா.அரு. ''பகையென்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யும் வியாதியை ஒருவன் தன்மனத்தில் நீங்கப் பெறுவானானால்'' என்பது, 'வியாதி நீங்கப் பெறுவானாயின்' என்றோ, வியாதியை நீங்குமாயின் என்றோ இருப்பின் நலம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழ். —குறள்., 233

...... ...... புகழொ டுங்காது —கம்ப.,1508
...... ...... ...... இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசை நடுக.
நிற்பதேது கொ னீடிசை யொன்றுமே நிற்கும்.

---

7. தவறில்லாத — பிழைபாடில்லாத

**86.4. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின். (854)**

**உரைப்பகுதி :**

**அ) மணக். :** இன்பத்தின் மிக்க இன்பம் எய்தும் ; துன்பத்தின் மிக்க துன்பம் கெடுமாயின், எ-று.

எல்லா இன்பத்தின் மிக்க வீடு பேற்றின்பம் எய்தும் என்றவாறு

**ஆ) பரிதி. :** இன்பம் வந்தகாலம் இன்பம் வந்தது என்று மகிழாதவன், துன்பம் வந்தகாலத்தும் துன்பப்படான், எ – று.

**இ) பரிப். :** இன்பத்தின் மிக்க இன்பத்தை எய்தும்: மாறுபாடு ஆகிய துன்பத்தின் மிக்க துன்பம் போம் ஆயின், எ – று.

எல்லா இன்பத்திலும் மிக்க வீடு பேற்று இன்பமும் எய்தும் என்றது.

**ஈ) காலி.:** இன்பத்துள் மிக்க இன்பத்தைத் தரும் : இகல் என்னும் துன்பத்துள் மிக்க துன்பம் கெடின், எ - று.

**உ) பரிமேல். :** மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கு இல்லையாயின், அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிக்க இன்பத்தினைக் கொடுக்கும், எ-று.

துன்பத்துள் துன்பம் பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கும் எளியனாய் உறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், 'இகல் என்னும்'[1] என்றார். இன்பத்துளின்பம் யாவரும் நட்பாகலின் எல்லாப்பயனும் எய்தியுறுவது.

**ஊ) கவிராசர் :** பகையென்று சொல்லப்படுகின்ற துன்பம் எல்லாத் துன்பங்களிலும்அதிகமாம். அந்தப் பகையில்லாதவனுக்கு அவ்வின்மை இன்பத்துக்கெல்லாம் இன்பத்தைத் தரும், எ – று.

**எ) பழைய 2 :** மாறுபாடென்னும் துன்பம் எல்லாத்துன்பத்தினு மிகுந்த துன்பம் ஒருவனுக்கில்லையாயின் அஃது, அவனுக்கு இன்பத்துள் எல்லாம் மிகுந்த இன்பந்தரும்.

---

1. 'இகல் என்னுந் துன்பத்துள் துன்பம் என்றும் பாடமுண்டு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்.** உரை, 'துன்பத்துள் துன்பங் கெடுமாயின் இன்பத்தின்மிக்க இன்பம் எய்துவிக்கும்' என்றிருப்பின் நலம். 'பயக்கும்' என்றதற்கு இயைய 'அது' (துன்பங்கெட்ட இகல்) என்ற எழுவாய் வருவித்தாவது, **பரிமேலழகர்** போல் 'அவ்வின்மை' என்ற சொல் வருவித்தாவது முடித்தல் அமைவாகும். அதிலும் உலகியல் கூறும் **அங்கவியற் பகுதியில்** வீடு பேற்றின்பம் எய்தும் என்றல் பொருந்தாக் கோள். வீடு பேறு போன்ற இன்பத்தை பயக்கும் என்றாவது இருப்பின் ஓரளவு பொருந்துவதாம்.

**பரிதியுரை 629 குறளினது.** ஈண்டு மாறி இடம் பெற்றுள்ளது எனலாம்.

86.5 இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர். (855)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** இகலின் எதிர் சாய்ந்தொழுக[1] வல்லாரை வெல்ல நினைக்கும் தன்மையார் யாவர்தான், எ-று.

மேல் இகலின்கண் சாய்ந்தொழுக வேண்டும் என்றார். அது தோல்வியாகாதோ என்றார்க்கு அவரை வெல்வார் இல்லை.

**ஆ) பரிதி .:** மாறுபாடெதிர்த்தால் பொறுமையினாலே வெற்றி கொள்ளுபவனை யார்தானும் வெல்வரோ, எ-று.

**இ) பரிப் .:** இகலின் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை வெல்ல நினைக்கும் தன்மையவர் யாவர் தான்? எ-று.

மேல் இகலின்கண் சாய்ந்து ஒழுகவேண்டும் என்றார் : அது தோல்வி ஆகாதோ என்றார்க்கு அவரை வெல்வார் இல்லை என்றது.

**ஈ) காளி .:** தம்மொடு பிறர் வந்து இகலின் அவ்விகல் எதிர்மலையாது தலை சாய்ந்து ஒழுக வல்லாரை மற்று யார்தான் அவர் மேம்பாட்டைத் தள்ளும் தன்மையவர், எ-று.

மிகல் என்பது மேம்பாடு. ஊக்குதல் என்பது தள்ளுதல்.

---

1. சாய்ந்து — எதிர்த்து நிற்காமல் ஒதுங்கி

**உ) பரிமேல்.:** தம் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை ஏற்றுக் கொள்ளாது சாய்ந்து ஒழுக வல்லாரை, வெல்லக்கருதும் தன்மை உடையார் யாவர்?

இகலையொழிந்து ஒழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அறிதாகலின் 'வல்லாரை' என்றும் யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவரும் இல்லை என்றும் கூறினார்[2]. இவை நான்கு பாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

**ஊ) கவிராசர் :** தன்மனத்திலே பகை தோன்றினால் அதனைப் பேணி அதிகமாக்காமல் தள்ளிப் போடுகிறவர்களை வெல்ல நினைக்கிறவர் யாருமில்லை, எ-று.

**ஏ) பழைய 2 :** 'சாய்த்தொழுக' பாடம்.

ஒருவனுக்கொருவன் மாறு பாடு தோன்றிய விடத்து அதனை யேற்றுக் கொள்ளாமற் சாய்த்துக் கொண்டு போக வல்லாரை வெல்லக் கருதும் தன்மையுடையார் யாரே.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

இக்குறட்பாவில் உரைமாற்றங்கள் 'இகலெதிர் சாய்ந்தொழுக' 'மிகல் ஊக்கல்' என்ற இரண்டிடங்களில் காணப்படுகின்றன.

''இகலெதிர் சாய்ந்தொழுகல்''

**மணக்.** 'இகலின் எதிர் சாய்ந்தொழுகல்'; **பரிதி.:** 'மாறு பாடு எதிர்த்தால் பொறுமையால் தலைசாய்ந்து ஒழுகுதல்' **காளி;** 'இகலெதிர் மலையாது தலைசாய்ந்தொழுகல்; **பரிமேல்.** 'தம்மனத்தில் மாறுபாடு தோன்றியவழி அதனை (மாறுபாட்டை) ஏற்றுக் கொள்ளாது சாய்ந்து ஒழுகல்;' **கவிராசர்** பகை தோன்றினால் அதனைப் பேணிப் பெருக்காமல்; **பழைய 2** 'மாறுபாடு தோன்றினால் அதனை ஏற்றுக் கொள்ளாமல் சாய்த்துக் கொண்டு போதல்'.

இவற்றுள் **காளிங்கர்** போன்றார் 'பகைவர் எதிர்த்தால் எதிர்த்து நில்லாமற் சாய்ந்து போதல்' என்பர். **பரிமேலழகர்** 'தம்மனத்துப் பகைமை தோன்றினால் சாய்ந்துபோதல்' என்பர். இவரைச் சார்ந்து சிலர். இங்ஙனம் பகைவரை எதிர்க்காமல் ஒதுங்கிப் போதலும் பகை தம் மனத்துள் எழ அதற்கு ஒதுங்கிப் போதலும் என இருதிறங்கள் சொல்லப்படுகின்றன. இரண்டும்

2. அவர் யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவருமில்லை என்பார் இகலூக்குந் தன்மையவர் யாரே என்றுங் கூறினார்

ஏற்புடையன ஆயினும் பகைவர்க்கு ஒதுங்கிப் போதல் பெருமையாதல் பெரியோரான் அறியப்பெற்று ஆன்றமதிப்பு மிகைமக்களான் (உயர்ந்தோரால்) [3]மதிக்கப்படுவது. ஏனோர் அனைவரானும் உண்மையறிய மாட்டாமையான் அவமதிக்கவும் படவுங் கூடுமாகையால் இகல் எழுந்த மனத்துள்ளேயே சாய்ந்தொழுகுவாரை வெல்வார் இலர் என்றதாம் என்பது சிறந்தது.

''மிகல் ஊக்கல்''

**மனக்.** 'வெல்ல நினைத்தல்' ; **பரிதி.** (பொறுமையால்) 'வெற்றி கொள்ளுதல்'; **காளி.** மேம்பாட்டைத் தள்ளுதல்'; **பரிமேலழகர், கவிராசர், பழைய 2** 'வெல்லக் கருதுதல்'; **வரத.** 'மேம்பட்ட பல முடையவராக முன்னேறுதல்' ; **தேவநேயர்** 'வெல்ல முனையுந்தன்மை'.

இவற்றுள், 'பொறுமையால் வெற்றி கொள்ளுதல்' என்னும் **பரிதியுரை** ஏற்றதன்று. ஏனோர் உரைகளுள் 'தம்மனத்தில் இகல் தோன்றின் அதற்குச் சாய்ந்து கொடுத்தலே நல்லது' என்னும் முடிபைத் தாங்கும் உரைகள் சிறந்தன. இதற்குக் காரணம் முற்கூறப்பட்டது.

**86.6. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து. (856)**

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** பிறருடன் மாறுபாட்டின்கண் மிகுதல் இனிதென்று கருதுமவனும் அவன் வாழ்க்கையும், சாதலும் கெடுதலும் அணித்து[1] எ-று.

நிரல்நிறை[2]. இது சாயானாயின்[3] உயிர்க்கேடும் பொருட்கேடும் உண்டாம் என்றது.

**ஆ பரிதி .:** மாறுபாட்டிலே மிகுத்த குணமுடையார்க்கு வாழ்வு சிறுகுதலும் பிராணன் கெடுதலும் சடுதியிலே[4] உண்டாம். எ-று.

1. அணித்து — அண்மையிலுள்ளது.
2. நிரல்நிறை - தவல் கெடல் இரண்டையும் முறையே நிறுத்தி, நணித்து என்பதனைத் தனித்தனியே அவற்றோடு கூட்டி முடித்தலின் நிரல் நிறையாயிற்று.
3. சாயானாயின் - எதிர்த்து நிற்பானாயின்
4. சடுதியிலே - விரைவிலே

**இ) பரிப் .:** பிறருடன் மாறுபாட்டின்கண் மிகுதல் இனிது என்று கருதுமவனும், அவன் மனை வாழ்க்கையும் சாதலும் கெடுதலும் அணித்து, எ-று.

நிரனிறை. இது சாயான் ஆயின் உயிர்க்கேடும்பொருள்கேடும் உண்டாம் என்றது.

**ஈ) காளி .:** இதுநமக்குத் தகாது என்று மீட்சி[5] இன்றிப் பிறரோடு இகலின்கண்ணே மிகுதலையும் இனிதென்று கொள்பவரது வாழ்க்கை குறைபடுதலும் கெட்டுவிடுதலும் அணித்து, எ—று.

**உ) பரிமேல் .:** பிறரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிது என்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை, பிழைத்தலும் முற்றக் கெடுதலும் சிறிதுபொழுதுள்[6] உளவாம், எ—று.

மிகுதல்—மேன்மேல் ஊக்குதல். இனிது என்பது தான் வேறல் குறித்தல். பிழைத்தல்[7]—வறுமையான் இன்னாதாதல். முற்றக்கெடு-தல்[8] இறத்தல். இவற்றோடு நணித்து என்பதனைத் தனித்தனி கூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததும் தழீஇய எச்சவும்மை-களாக உரைக்க[9]. பொருட் கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உளவாம் என்பதாம்.

**ஊ) கவிராசர் .:** பிறரோடு பகைகொள்ளுகிறது தனக்கு நல்ல தென்று அதனைச் செய்கிறவனது உயிர்வாழ்க்கை சிறிது பொழுதிலே பிழைத்தலும், வகையறக் கெடுகிறதும் உண்டு, எ-று.

**எ) பழைய 2 .:** பிறரொடு மாறுபடுதல் எனக்கு இனிதென்று மாறு பட்டுச் சண்டை செய்வான் அவனுயிர் வாழ்க்கையுஞ் செல்வ வாழ்க்கையுந் தவறு வருதலுங் கேடுவருதலுங் சிறிது பொழுதிலே உள்தாம்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக். 'மிகல் இனிதென்பவனும், அவன்வாழ்க்கையும் என எண்ணும்மை விரித்து, இனிதென்பவன் தவலும், வாழ்க்கை கெடு-

5. மீட்சி - திரும்புதல்
6. சிறிதுபொழுது - விரைவில்
7. பிழைத்தல் - பொருட்கேடு
8. முற்றக்கெடுதல் - உயிர்க்கேடு
9. தவலும் நணித்து என்பது எதிரது தழீஇய எச்சவும்மை கெடலும் நணித்து உரைக்க என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை,

தலும் நணித்து' எனக்கூட்டி முடிப்பர். இவ்வுரைப்போக்கில் எண்ணும்மை பெற்றதால் பன்மைப் பாலாகிய தொடர் 'நணித்து' என்ற ஒருமைப்பயனிலை கொண்டே வழுவமைகிறது. ஆதலால், 'மிகுதல் இனி தென்பவன் தவல் நணித்து அவன் வாழ்க்கை கெடுதல் நணித்து' எனத் தனித்தனி முடித்தல் நன்று. ஆனால் குறள்மூலம் 'இனிதென்பவன் வாழ்க்கை தவலும் கெடலும் நணித்து என்றுள்ளது. இதில் 'வாழ்க்கை நணித்து' என்ற முடிபேற்று வழாநிலை சாதலை உணர்த்துகிறது. ஆதலால் **மணக்குடவர்** உரை சிந்தித்தற்குரியதாகின்றது. வாழ்வானும் வாழ்க்கையும் வேறன்மை கருதியே இவரை ஒட்டியே செல்லும் **பரிமேலழகரும்** 'மிகலினி தென்பவன் வாழ்க்கை தவலும் கெடலும் நணித்து' என இயைத்துப் பொருள் கண்டமை நுனித்தறிதற்குரியது. **காளிங்கரும்** இக்கருத்தினரே. **பரிமேலழகர்** தரும் பொருட்கேடும் உயிர்க்கேடும்' என்பது 'கெடல்' என்பதன் விளக்கமேயாதல் காண்க. **பரிதி.** 'வாழ்க்கை சிறுகுதலும், பிராணன் கெடுதலும் நணித்து' என்றனர் வாழ்வு சுருங்குதலும் உயிர்கெடுதலும் ஒரு கருத்தின வாகலின் இவ்வுரை ஏற்புடையதன்று.

'இகலின் மிகல்' என்பதற்குப் **பரிமேலழகர்** தரும் 'மாறு படுதற்கண் மேன்மேன் ஊக்குதல் வேறல் குறித்தல்' என்னும் விளக்கம் 'நுனிக்கொம்பர் ஏறினார்' என்ற 476 **குறட்** கருத்தை நினைவிற்குக் கொண்டுவருகிறது. இது கருதித் **தேவநேயர்** 'பிறரொடு மாறுபடுவதில் மிகல்' என்றும்' 'பகையை வளர்த்தல்' என **வரதராசரும்** கூறினர். **இராம.** 'தவல்-துன்பம்' என்பர். **பரிமேல்.** 'வறுமையானிலராதல்' என்பர்.

இவ்வுரைகளுள் 'இனிதென்பவனுடைய வாழ்க்கை வறுமைப் படுதலும் அழிதலும் நணித்து' என்ற கருத்துடைய உரைகளே சிறந்தன.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

பகைநேர் வார்உள ரான பண்பினால்
உகநேர் சிந்தி உலந்த ழிந்ததால்
மகனே கண்டிலை யோநம் வாழ்வெலாம். — கம்ப., 4213

86.7. மிகன்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். (857)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** மிகுதலைப் பொருந்துகின்ற உண்மைப் பொருளைக் காணமாட்டார், மாறுபாட்டினைப் பொருந்தின இன்னாத அறிவுடையார், எ-று.

இது மாறுபடுவார்க்கு மெய்ப்பொருள் தோன்றாது என்றது.

**ஆ) பரிதி.:** மிகவும் பெருமையுள்ளவன் என்கிற குணம் காணார் மாறுபாடு மேற்கொண்ட புல்லறிவாளர், எ-று.

**இ) பரிப் .:** மிகுதலைப் பொருந்துகின்ற உண்மைப் பொருளைக் காணமாட்டார். மாறுபாட்டினைப் பொருந்தின இன்னாத அறிவு உடையார், எ-று.

மெய்ப்பொருள் காணார் என்றமையால் கல்வியின்கண் தருக்கத்தினால்[1] மாறுபடுவாரை நோக்கிற்று. இது மாறுபடுவார்க்கு மெய்ப்பொருள் தோன்றாது என்றது.

**ஈ) காலி .:** தன்னின் பெரியது பிறிது இன்றித் தானே பெருமை மேவுதல் பண்பிற்றாய், என்றும் யாது ஒருபடிபட நிற்பதுஆகிய இம்மெய்ப்பொருளைக் காணமாட்டார் யாரோ? எனின் சில சமய-வேற்றுமை பற்றிநின்று அதன்கண் மேவுதல் பண்பிற்று ஆகிய இப்பெரியது ஓர் இன்னாத[2] அறிவினர், எ-று.

**உ) பரிமேல்.:** இகலோடு மேவுதலையுடைய இன்னாத அறிவினையுடையார், வெற்றி பொருந்துதலையுடைய நீதிநூற் பொருளை அறியமாட்டார், எ-று.

இன்னாவறிவு - தமக்கும் பிறர்க்கும் தீங்கு பயக்கும் அறிவு. வெற்றிவழிநின்றார்க்கு[3] உளதாவது. காணப்படும் பயத்ததாகலின்[4]

---

1 தருக்கத்தினால்-வாதத்தினால் 2. இன்னாத-துன்பந்தரும்

3. வழிநின்றார்க்கு-நீதிநூல் வழியே ஒழுகுகின்றவர்க்கு

4 காணப்படும் பயத்ததாவன கண்எதிர் அறிவிக்கும் பயனைத் தெரிவிப்பது, அது மருத்துவநூல், தண்டநூல், நீதிநூல் முதலிய இம்மைப் பயனைக் கண்ணெதிர் காட்டுவனவாகிய உலகியல் நூல்கள்.

மெய்ந்நூல் எனப்பட்டது.[5] இகலால் அறிவு கலங்குதலின், 'காணார்' என்றார். இவை இரண்டு பாட்டானும் இகலினார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** .: பகையோடு கூடிய பொல்லாத அறிவினை யுடையார் வெற்றி பொருந்துதலையுடைய நீதிநூற்பொருள்களை அறியமாட்டார், (எ-று).

ஏ) **பழைய 2**: வெற்றி பொருந்துதலுடைய நீதி நூற்பொருளை யறியார், இகலோடு மேவுதலையுடைய பொல்லாத அறிவுனையுடையார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**'மிகல் மேவல்மெய்ப்பொருள்'**

'மிகுதலைப்பொருந்துகின்ற உண்மைப்பொருள்' என்பதில் 'மேவலைப்பொருந்துகின்ற' எனப் பெயரெச்சமாக்காது 'மேவுதலை யுடைய என்ற **பரிமேலழகர்** உரை சிறக்கும் இரண்டனுருபு பெற்ற தொடர் ஆக்கலின். ஆனால் 'மிகல்-வெற்றி' என்றது அத்துணைச்சிறப்பின்று. 'மெய்ப்பொருள்–உண்மைப் பொருள்' என வாளாவிட்டனர் **மணக்குடவர்**; கடவுட்பொருளைக்குறிப்பர் **காளிங்கர்**. 'நீதிநூற்பொருள்' என்பர் **பரிமேலழகர்** முதலிய மூவரும். **தேவநேயர், கா.சு., சாமி. சிதம், சபாபதி, சி.இ.** முதலியோர் **பரிமேலழகரை** ஒட்டியே உரைப்பர். **வரத.** மிகல்மேவல் காணார்; மெய்ப்பொருள் காணார் எனத்தனித்தனிக் கூட்டிப்பொருள் காண்பர்.

**இராம.** 'இகன்மேவல்' 'மிகல்மேவல்' இகல் அடைந்ததால் மிகல் அடைந்ததால் என ஏதுப்பொருண்மை தரும் மூன்றனுருபு விரித்துச் சொல்ல வேண்டும் என்பர்.

இவ்வுரைகளுள் இகல் மேவலால் இன்னா அறிவினவர்-மாறு பாட்டினைப் பொருந்துதலால் தமக்கும் பிறர்க்கும் துன்பந்தரும் புல்லறிவாளர், மிகல் மேவலால்-செருக்குறுவதால், மெய்ப்பொருள் காணார்-அரசியல் நிகழ்ச்சிகளின் உண்மையை யறியமாட்டார்கள்.

---

5. நீதிநூல் கருவியாய் நின்று மெய்யை உணர்த்துகின்றது. அதனை மெய் என்றே சொன்னது காரியத்தின பெயரை கருவிக்குத் தந்துரைத்தாம். அதனால் இது காரியவாகு பெயர்.

'இகலே விளைத்துக்கெடுவர் என்றவாறு!' என்ற உரை இயலமைதிக்கும் பாற்பாகுபாட்டிற்கும் அமைவதாகும் என்பதே **இராமலிங்கனார்** கருத்து. **பரிப்பெருமாள்** தரும் விளக்கக் கருத்தும் இது.

**86,8. இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை**
**மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. (858)**

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** மாறுபாட்டிற்குச் சாய்ந்து ஒழுகுதல் ஆக்கமாம். அதனை[1] மிகுதலை நினைக்கின் கேடுமிகும், எ—று.

இது மாறுபாட்டிற்குச் சாய்ந்தொழுகுல் வேண்டும் என்றது.

**ஆ) பரிதி .:** மாறுபாட்டுக்குப் பொறுத்தல் ஆக்கம்: மாறுபாட்டை மேற்கொள்ளுதல் கேடு, எ—று.

**இ) பரிப் .:** மாறுபாட்டிற்குச் சாய்ந்து ஒழுகல் ஆக்கம் ஆம்: அதனை மிகுதலை நினைக்கின் கெடும், எ—று.

இது மாறுபாட்டிற்குச் சாய்க்க வேண்டும் என்றது.

**ஈ) காளி .:** தம்முடன் பிறர் இகலும் இகலில் தான் எதிர்தலை சாய்ந்து ஒழுகுதல் யாவது? அது தமது ஆக்கத்தைக் கொணர்ந்து ஊக்கும்; இனி அங்ஙனம் தலைசாய்ந்து ஒழுகக் கருதாது மற்று அதனை இகலின் கண்ணே நெஞ்சு ஊக்கின் ஆங்கு அது கொணர்ந்து ஊக்குமாம் கேடு என்பதனை, எ—று.

**உ) பரிமேல் .:** தன் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை எதிர்தலை ஒழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்; அது செய்யாது அதன் கண் மிகுதலை மேற் கொள்வானாயின் கேடும் தன்கண் வருதலை மேற்கொள்ளும், எ-று.

எதிர்தல்-ஏற்றுக்கோடல், சாய்ந்தபொழுதே வருதலின், 'சாய்தல் ஆக்கம்' என்றார்[2]. இகலிற்கு எனவும் அதனை எனவும் வந்தன வேற்றுமைமயக்கம்[3].

---

1. அதனை — மாறுபாட்டினை
2. சாய்ந்தபோது உண்டாகும் ஆக்கத்தைச் 'சாய்தல் ஆக்கம்' எனக் கூறியமையின் காரணம் காரியமாகிய உபசார வழக்கு சாய்தல் காரணம்; ஆக்கம் காரியம்.
3. இகலிற்கு என்பதிலுள்ள (கு) நான்கம்உருபு இகலை என இரண்டன் பொருளிலும் அதனை என்பதிலுள்ள இரண்டாம் உருபு (ஐ) தனக்குரிய பொருளை விட்டு அதன்கண் என இடப்பொருளிலும் வந்தமையின் வேற்றுமை மயக்கமாம்

ஊ) **கவிராசர்** .: தன்மனத்திலே பகை தோன்றினால் அதனை வளரப்பண்ணாமல் தேய்த்துவிடுகிறதே யொருவனுக்குச்செல்வமாவது இப்படிச் செய்யாமலந்தப் பகையை அதிகம் பண்ணுகிறவனுக்குக் கேடு வரும், எ—று.

ஏ) **பழைய 2** : ஒருவன் மாறுபட்டு எதிர்த்த விடத்துத் தான் எதிராது சாய்த்துக் கொண்டு போதல் அது செல்வம்; அப்படிச் சாய்த்துப் போகாது மிகுத்து நிற்பானாகிற் கேடு மிகுத்து நிற்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இகலாகிய மாறுபாடு தன்கண்ணே தோன்றுமாயின் அதனை வளரவிடாது ஒதுங்கிப் போதல் உயர்வைத்தரும். அதனை வெல்லக் கருதின் அல்லது அம்மாறு பாட்டை மிகுவிக்கக்கருதின் கேடுவரும் என்ற அமைப்பில் இயலும் உரைகள் பல.

**காளிங்கர்** 'பிறர் இகலும் இகலில் தான் எதிர்த்தால்' என்பர். 'இகல் என்பது இருவர்பால் நிகழும் ஒருபண்பு. அதுமுன்னர் ஒருவர் முனைத்துத் தோன்றி மற்றவனை எதிர்த்து நிற்கத் தூண்டுமாயின் கேடுவரும்' என்பதைக் காட்டிலும் 'இருபாலும் மனத்தின்கட்டோன்றும் போதே சாய்ந்து ஒழுகுதலே நல்லது' என்ற உரை கூர்முண்வேலை முளையிலேயே களைவது போல்-வதாதலின் சிறந்தது. **காளி.** உரையில் 'அதனையிகலின்' என்பது அதனை 'மிகலின்' என்றிருப்பதே மூலத்தோடு இயைந்ததாகும்.

869. **இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
மிகல்காணும் கேடு தரற்கு. (859)

உரைப்பகுதி :

அ) **மணக்** .: மாறுபடுதற்குக் காரணம் உண்டாயினும், ஆக்கம் வருங்காலத்து மாறுபாடு காணான்; கேடுவருங்காலத்து, அதனை மிகுதலைக் காணும், எ—று.

இம்மாறுபாடு நல்வினையுடைவர்க்குத்தோன்றாது என்றவாறு

ஆ) **பரிதி**.: தனக்கு ஆக்கம் வருங்காலம் மாறுபாட்டை மேலாக்கான்[1], தான் கெடுகிற காலம் மாறுபாட்டை மேலாகக் கொள்வான், எ—று.

---

1. மேலாக்கான் – மேலும் மேலும் வளர்க்க மாட்டான்

**இ) பரிப்.:** மாறுபடுதற்குக் காரணம் : உண்டாயினும், ஆக்கம் வருங்காலத்து மாறுபாடு காணான்அதனை மிகுதலைக காணும் கேடு வரும் காலத்து, எ—று.

இம்மாறுபாடு நல்வினை உடையார்க்குத் தோற்றாது என்றது.

**ஈ) காளி.:** தான் பிறரோடு இகலுதலைக் காணான் : தனக்கு ஓர் ஆக்கம் வரக் கடவதான காலத்து; இனி மற்று அதனை மேன்மேலும் மிகுதலைக் காணும் தனக்குக் கேடு வருவதற்குரிய காலத்து, எ—று.

**உ) பரிமேல்.:** ஒருவன் தன்கண் ஆக்கம் வரும்வழிக் காரணம் உண்டாயினும் இகலை நினையான், தனக்குக் கேடு செய்து கோடற்கண் காரணம் இன்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும், எ—று.

இகலான் வருங்கேடு பிறரானன்று என்பது தோன்றத் 'தரற்கு'[2] என்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. [3]ஆக்கக்கேடுகட்கு முன் நடப்பன இகலினது இன்மை உண்மைகள் என்பதாகும்.

**ஊ) கவிராசர் :** ஒருவனுக்குச்செல்வம் வருகிற காலம் வந்தால் பகையை நினையான். கேடு வருகிற காலத்து அப்பகையைச் செய்து கொள்ளுவான், எ—று.

**ஏ) பழைய 2 :** ஒருவன் தனக்குச் செல்வம் வருங்காலத்தில் ஒருவரொடு மாறுபடக் கருதான் ; தன் செல்வத்துக்குக் கேடு வருங்காலத்தில் யாவரொடும் மாறுபடுதலைக் கருதுவானாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறள், 'பேதைப்படுக்கும் இழவூழ் ; அறிவகற்றும் ஆகலூழ் உற்றக் கடை' என்பதுபோல 'ஆக்கம் வருங்கால் இகல்-காணான்; கேடுதரற்கு அதனை மிகல் காணும், இகல் இருப்பினும் காணாமைக்கும் அது மிகுதற்கும் ஊழே காரணம்' என்கிறது.

---

2. தரல் என்பது இங்குத் தன்மையிடத்திற்குரிய சொல்லாம்,

3. 'தரற்கு' என்பதிலுள்ள நான்காம் வேற்றுமையுருபு ஏழாவதன் இடப்பொருட்-டாகவும், 'அதனை' என்பதிலுள்ள இரண்டனுருபையும் அங்ஙனமே ஏழன் பொருளாகவும் கொள்க.

இதில் 'கேடுதரற்கு' என்பதற்கு **மணக்.** 'கேடுவருங்காலத்து என உரைப்பர். **காளிங்கரும்** அங்ஙனமே. இங்ஙனம் தருசொற்கு வருசொற்பொருள் பொருந்தாமையை எண்ணிப்பார்த்த **பரிமேலழகர்** 'கேடுதரற்கு தனக்குக் கேடு செய்து கோடற்கண்' என உரை எழுதி கேடுவருதல், பிறரான் அன்று என்பார் 'தரற்கு' என்றார் என நயமும் காட்டினர். இவ்வுரை, 'தரற்கு' என்பதன் நயத்தை விளக்கியதோடு, தருசொற்கு வருசொற்பொருள் காட்டல் தகாது என்பதையும் குறிப்பித்தவாறு.

**கா. சு.** 'கேடுதரற்கு–பொருட்கேடு வருதற்கு' என்பர். ஏனோர் ஆக்கம் கேடு இரண்டற்கும் ஆதல் அழிதல் எனப்பொது வகையாற் கண்டனர். இவர் 'ஆக்கம்–செல்வம்' என்றமையின் அதற்கேற்பப்'பொருட்கேடு' என்றனர். இவர் ஆக்கம் வருங்கால் இகல்காணாதவன் கேடுதரற்கு அதனை மிகல் காணும் எனக்கூட்டி ஒரு தொடராக்கிப் பொருள் காண்பர்,

**பரிமேலழகர்** முதலானோர் 'ஒருவன் ஆக்கம் வருங்கால் இகல் காணான்; கேடுதரற்கு அதனை மிகல்காணும்' என இருதொடராக்கி 'ஒருவன்' என்ற எழுவாயை வருவித்து முடிப்பர். ஆனால் இரண்டினும் கருத்துவேறுபாடு மிகுதியும் இன்று. ஆயினும் முற்கூறிய ஏதுக்களான் **பரிமேலழகர்** உரையே சிறந்தது. **தேவநேயர்** ஆக்கமும் கேடும் வருவது ஊழான் ஆதலின் 'வருங்கால்' என்றும் 'தரற்கு' எனவும் கூறினார் என நயந்தோன்ற விளக்கிப் **பரிமேலழகருரைக்கு** அரண் செய்வர். **வரத.** 'மிகல்காணும்–பகைவரல்லாதாரையும் பகைவராக்கிக்கொள்வர்' என்பர். இது சொற்பொருளாகாது,

**86.10.** இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு. (860)

**உரைப்பகுதி :**

**அ) மணக். :** மாறுபாட்டினாலே துன்பங்களெல்லாம் உளவாம்; உடன்பட்டு நகுதலாலே நல்ல நயமாகிய உள்ளக்களிப்பு உண்டாம் எ—று.

**ஆ) பரிதி .:** மாறுபாடுகொண்டால் பொல்லாதவை யெல்லாம் வரும்; மாறுபாடு கண்டு சிரித்துப் பொறுப்பானாகில் ஆக்கமும் கெடாது வெற்றியும் உண்டாம், எ—று.

**இ) பரிப் .:** மாறுபாட்டினானே துன்பங்கள் எல்லாம் உள ஆம்: உடன்பட்டு நகுதலானே நன்னயம் ஆகிய உள்ளக் களிப்பு உண்டாம்' எ—று.

மேல்[1] கூறிய குற்றம் எல்லாம் பயத்தலின், அதனைத் தவிரத் தனக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சி உண்டாம் என்றது.

**ஈ) காளி .:** யாவரோடாயினும் தான்கொள்ளும் மாறுபாட்டானே உளவாம்; மற்று இனி யாவரோடாயினும் முகமலர்ந்து இனிது ஒழுகுவரேல் அதனாலாம் நல்ல ஆசாரம் என்று சொல்லப்படுகின்ற யாவரும் மகிழும் மகிழ்ச்சி, எ—று.

**உ) பரிமேல் .:** ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றானே இன்னாதன எல்லாம் உளவாம்; நட்பு ஒன்றானே நல்ல நீதி என்னும் பெருஞ்செல்வம் உளவாம், எ—று

இன்னாதன–வறுமை, பழி, பாவம் முதலாயின[2]. நகல்–மகிழ்தல். நகல் என்பதூஉம் செருக்கு என்பதூஉம் தத்தங்காரணங்கட்கு ஆயின.[3] நயம் என்னும் செருக்கு எனக் காரியத்தைக் காரணமாக[4] உபசரித்தார்[5]. இவை மூன்றுபாட்டானும் அவ்விருமையும் கூறப்பட்டன.

**ஊ) கவிராசர் :** ஒருவனுக்குப் பகையினாலே பொல்லாங்கெல்லாம் வரும்; சிநேக மொன்றினாலே நல்ல நீதியென்னும் பெருஞ்செல்வங்களெல்லாமுண்டாம், எ—று.

**எ) பழைய 2:** ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றினாலே பொல்லாதன எல்லாம் உண்டாம்; நட்பொன்றினாலே நல்ல செல்வமென்னுஞ் செருக்கெல்லாம் உண்டாம்.

---

1. மேல் - முன்னர் ஆறுகுறள்களிற் கூறிய (பரிப். குறள்வைப்புமுறை நோக்குக)
2. முதலாயின - பகை தண்டனை முதலியன
3. மகிழ்தல் என்னும் பொருள்படும் நகல் என்பது அதற்குக் காரணமாகிய நட்பினையும் தருக்குதல் என்னும் பொருள்படும் செருக்கு என்பது அதன் காரணமாகிய பெருஞ் செல்வத்தினையும் உணர்த்துதலால் இவை காரியவாகுபெயராம்.
4. 'காரணத்தைக் காரியமாக' என்று பாடங் கொள்வர் கோ வ,
5. காரியமாகிய செல்வத்தை அதற்குக் காரணமாகிய நீதி என்று உபசரித்தார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'செருக்கு'**

'உள்ளக்களிப்பு' **மணக்.**; 'மகிழ்ச்சி' **காளி.**; 'செல்வம்' **பரிமேல்.' கவிராசர், பழைய** 2 முதலானோர்.

**'நன்னயம்'**

'நல்லநயம்' **மணக்.**; 'ஆக்கமும் வெற்றியும்' **பரிதி.**; 'நல்ல ஆகாரம்' **காளி.**; 'நல்லநீதி என்னும் பெருஞ்செல்வம்' **பரிமேல்., கவிராசர்.** 'நல்லசெல்வம்' **பழைய.**; 'நல்லநேர்பாடு-நீதி பெருந்தன்மை எனினும் ஆம்' என்பர் **தேவநேயர்.** 'நல்ல பயன், நகல்-நட்புண்டாக்கும் நல்ல குணம்' என்பர் **இராம.**; 'பலருக்கும் நல்லன் என்று சொல்லப்படுகின்ற தன்மை' **வரத.**

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**நகலான் ஆம் நன்னயம் என்னும் செருக்கு :**

பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பிற் றீரா
நகையுடை முகத்தை யாகி யின்னுரை நல்கு நாவால்.

—கம்ப , 4227

**முற்றும் :**

இகலை மதித்தின் னாமைபிழை யியற்றி னார்க்கும் புரியாயேல்
பகையும் உறவாம் பெருஞ்செல்வம் பலிக்கும் கெடாத புகழுண்டாம்
இகலின் மிகுந்தின் னாங்கியற்றின் இனிய தமரும் ஏதிலராய்ப்
பகைமை வளரும் வலிதொலையும் பாழ்க்கும் பாழா வாழ்க்கையுமே.

—விநா. அரசி., 132

## 86. இகல்

| | இகலென்ப | பகல்கருதிப் | இகலென்னும் | இன்பத்துள் | இகலெதிர் | இகலின் | மிகல்மேவல் | இகலிற்கு | இகல்காணான் | இகலானாம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 10 | 8 | 9 | 3 | 5 | 7 | 4 | 2 | 6 |
| பரிதி. | 5 | 10 | 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 7 |
| பரிப். | 1 | 10 | 8 | 9 | 4 | 5 | 6 | 3 | 2 | 7 |
| காளி. | 7 | 10 | 2 | 6 | 4 | 3 | 9 | 5 | 8 | 1 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

86-வது அதிகாரம் 'இகல்' முற்றிற்று.

# 87. பகைமாட்சி

**அ) மணக்.:** பகைமாட்சியாவது பகைகொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல். மேல் பகைகொள்ளலாகாது என்றார் ; பகை கொள்ளுங்கால் நன்மை பயக்குமாயின் கொள்க, என்றமையால் அதன்பின் இது கூறப்பட்டது.

**ஆ) பரிதி.:** பகைமாட்சியாவது பகை வாராவழியைச் சொல்வது எ-று.

**இ) பரிப்.:** பகைமாட்சி ஆவது பகை கொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல். மேல் பகை கோடல் ஆகாது என்றார். இது பகை கொள்ளுங்கால் நன்மை பயக்கும் ஆகின் கொள்க என்றமையால் அதன்பின் கறப்பட்டது.

**உ) பரிமேல்.:** அஃதாவது அறிவின்மை முதலிய[2] குற்றங்கள் உடைமையால் பகையை மாட்சிப் படுத்தல்.[3] அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின்[4] மேல் பொதுவகையால் விலக்கப்பட்ட இகலை ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றாராகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

---

1. மேல் — இகல் என்னும் அதிகாரத்தில்
2. முதலிய என்றமையின் பெரியோரைத் துணைக்கொள்ளாமை, சிற்றினஞ் சேர்தல், வலி காலம் இடங்களை அறியாமை, சோம்பலுடைமை, முதலியவற்றைக் கொள்க.
3. மாட்சிப்படுத்தல் — அறிவின்மை முதலியவற்றையுடைய அரசர்கள் தமது பகைவரை மேம்படுத்துதல்.
4. பகையின்மை கூடாமையின் - அரசர்களுக்குப் பகையின்மைஒருவாற்றானும் அமையாது

ஊ) **கவிராசர்:** அஃதாவது, பலவந்தனுடனே பகைகொண்டாலும், அறநீதிகளை வழுவாமல் நியாயமார்க்கமாகச்[5] சண்டை பண்ணுகிறதாம், எ-று.

ஏ) **பழைய2:** அஃதாவது, மிகுந்த பகை ஆகாதென்று விலக்கியது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பகைமாட்சியாவது பகை கொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல்' என்பர் **மணக்குடவர்**. இவருரை கருத்து விளக்குமாயினும் இத் தொடரை என்ன தொகையிற் கொள்கிறார் என அறிய இயலவில்லை.

'பகை வாரா வழியைச் சொல்வது' என்னும் **பரிதியுரை** ஆசிரியர்கூறும் குறட்கருத்துக்கு ஒத்தாக இல்லை; ஆசிரியர் கூறும் இயல்புகளோடு கூடிய பகையைக் கொள்ளுக என்றலின்.

'அறிவின்மை முதலிய குற்றங்கள் உடைமையால் பகையை மாட்சிமைப் படுத்தல்' என்பர் **பரிமேலழகர்**. பகைக்கப்பட்டான் இழிகுணம்பல படைத்தமையின் பகைத்தவன் பகை மாண்புறுகிறது என்பது கருத்தாகிறது. இதன் வண்ணம் மாட்சிமைப் படுத்துவது —இழிகுணங்களால் மாட்சியுறுவது பகை. ஆகவே பகையினது மாட்சி கூறுவது என ஆறாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிறது.

**கவிராசர்** உரை 'வலியனோடு சண்டை செய்தாலும் அறவழி யொழுகுதலே மாட்சி' என்பது. இதுவும் பகையினது மாட்சி கூறுதல் என்றாகிறது.

**பழையஉரை** 'மிகுந்த பகையாகாது' என்கிறது. இவ்வதிகாரத்தோடியைந்த கருத்தன்று. பழைய உரைகள் அனைத்திலுமே இந்த இருசொற்றொடரைப் பன்மொழித் தொடராக்கி ஏதோ ஒருவகையில் இன்னதொகை யல்லது தொடர் என்று கொள்ள வேண்டியுள்ளதே தவிர நேரிய முறையில் பொருணோக்கம் கூறக் கூடியதாக இல்லை.

---

5. நியாய மார்க்கமாக — நேர்மையாக

**சாமி.சிதம்.** 'பகையின் தீமையால் வருந்தீமைகள்' என்பர். இதுவும் அதிகாரப் பெயரோடு இயைபில் பொருளாய் தீமை தர இயலாத சிறுபகை கொள்ளத்தக்கது என்பதை அருத்தாபத்தியான் அறிவிப்பது,

**தேவநேயர்** 'அறிவின்மை, சூழ்ந்து செய்யாமை, சுற்றந்தழுவாமை, துணையின்மை முதலிய குற்றங்குறைகளால் பகையை மிகுதிப் படுத்தல்' என்பர்.

**வரத.** 'பகை கொள்ளுங்கால் தமக்கு நன்மை பயக்கும்படி எளியனோடு பகை கொள்ளுதல் பகைவன் எளினாய்த்தான் பெருமை படைத்தற்குரிய காரணமும், தான் எளியனாய்ப் பகைவன் யடைதற்குரிய காரணமும் கூறுதல்' என்பர். பகை இருவர்பாலும் இயைவதொன்றாகலானும் எளியனாதலே ஒருவனை மெலிவித்து எதிரிக்குப் பெருமைதருதலானும் இவ்வுரை எதனைக்கருதுகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

**இராம:** 'தான் சிறப்படைய இன்னின்ன குறையுள்ளவர்களைப் பகைக்கலாம்' என்பர்.

**சி.இ.** 'குறைகள் உடைமையால் பகைவர்களை உயர்வாக்கல். பகை பண்பாடுடையராய்ப் பகைவரையுணர்துவதாகக் கொண்டு மாட்சி-மாட்சியுறச்செய்தல்' என்பர் போலும்.

**கா.சு.** 'பகையினது சிறப்பு' என்பர். இது கிழமைப்பொருளதாய ஆறன் தொகையாய் பகை கொள்வார் பகைப்பார் இருவர்பாலும் அமைவது இது ஓராற்றான் சுருக்கமும் தெளிவும் உடையது,

**குழந்தை.** 'பகைவனது மாட்சி - தனக்கு நன்மையாகும் பகைமையை ஏற்றுக் கொள்ளுதல்' என்பர், இது பகையினது மாட்சி என்றிருந்தால் விளங்குவது போலத் தோற்றுகிறது.

**மு.ரா.அரு.** 'அரசன் அறிவில்லாமை முதலிய குற்றங்களால் தன் பகைமையை வலிமைப் படுத்துதல்' என்பர்.

இங்ஙனம் வருகின்ற வரைவிலக்கணங்களனைத்தும், பகையை மாட்சிமைப் படுத்துதல், பகைவனைச் சிறப்பித்தல், தனக்கு நன்மை பயக்கும்படி பகைகொள்ளுதல் முதலான பொருளுடையனவாய்

விரிகின்றன. ஏனையவற்றையும் இவற்றுள் அடக்கிப் பொருள் காணல் கூடும். ஆனால் தெளிவின்று என்பதை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் முயற்சி வேறுபாட்டாலேயே அறியலாம்.

பகை-நண்பு என்பன பகைத்தார் - நட்டார் இருவர் மாட்டு நிகழும் பண்பு. இது ஒருவன் மாட்டு மாட்சியாம்போது மற்றவன்பால் சிறுமையாகவே முடியும். இருவர் மாட்டும் மாட்சியாதல் ஒரு போதும் இல்லை. இருவர் வேறல் இயற்கையன்றாதல்போல. ஆதலால் யார்மாட்டு மாண்பாகும்; யார் மாட்டுச் சிறுமையாகும் என்பதை விளக்கும் சொற்செட்டை **வள்ளுவர்** மேற்கொள்கிறார்.

அதனால் முதற்குறளில் மெலியார் பகைகொள்ளுக; வலியார் பகை கொள்ளற்க என விதித்தது, மெலியார் இயல்புகளைக் கூறுவதன் வாயிலாக வலியார்-மெலியார்களை வேறுபடுத்துகிறார். இதனால் **முதற்குறள்** வலியார் - மெலியார் எனப் பகைத்தற்குரியாரை வேறுபடுத்தி, மெலியார் இயல்பு கூறுவதன் வாயிலாக வலியார் கொள்ளும் பகை மாண்புடையதாதலை விளக்குகிறார் இகலையே 'நோய்' என்றும் 'எவ்வ நோய்' என்றும் 'இகல்வானுக்கு வாழ்வும் தாழ்வும் அணுமையிலுள்ளது' என்றும் சொல்லிக்காட்டி, அதற்கு 'எதிர்சாய்தலே ஆக்கம்' என்று அறிவுறுத்திய **வள்ளுவர்,** 'பகைமாட்சியாம் இடனும் உண்டு; அதனை நழுவ விடாமல் மேற்கொள்க' என்பார் சுவைகுன்றாமல் வெவ்வெறு வாய்ப்பாட்டான் பகைகொள்ளப்படுவான் இயல்புகளைத் தொகுத்துக் கூறி, அவனைப் பகைத்தலால் பகைப்பவனுக்கு வரும் நன்மைகளையும் குறிப்பித்து, பகைக்கப்படுவானுக்கு நேரும் மாண்பின்மைகளையும் உடன் கூறிச் செல்கிறார். ஆதலால் பகைமாட்சி-பகையின்மாட்சி என்பதைக் காட்டிலும் பகையான் - (பகைகொண்டானுக்கு) வரும் மாட்சி என மூன்றனுருபும் பயனும் உடன்தொக்கதாகக் கோடல் தகும்.

**பரிமேல்.** 'அறிவின்மை முதலிய குற்றங்கள் உடைமையான் பகையை மாட்சிமைப்படுத்துதல் என்பர். இதன் கருத்து குற்றமுடைய்னாதல் மெலியானியல்பு. உடைமையாலேயே அவன் மெலிகிறான். அவனியல்பைப் பயன்படுத்தி மற்றவன் உயருக என்று விதிப்பது இவ்வதிகாரம்.

87.1. வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (861)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** தம்மின் வலியார்க்குப் பகையா யெதிர்தலைத் தவிர்க; தம்மைப் போறறாத எளியார்மாட்டுப் பகைகோடலை மேவுக எ—று.

இது தனக்கு எளியாரோடு பகை கோடலாம் என்றது.

**ஆ) பரிதி.:** தன்னில் வலியார்மேலே மாறுகொள்வதை விடுக; தன்னில் எளியார்மேலும் பகையை விடுக, எ—று.

**இ) பரிப் :** தம்மின் வலியார்க்குப் பகையாய் எதிர்தலைத் தவிர்க, தம்மைப் போற்றாத எளியார் மாட்டுப் பகைகோடலை மேவுக எ—று.

இது தனக்கு எளியாரோடு பகை கோடல் ஆம் என்றது.

**ஈ) காளி .:** ஆள்வலி[1], தோள்வலி[2], பொருள்வலி[3], துணைவலி[4] முதலிய இவற்றால் தம்மின் வலியார்க்குத் தாம் மாறுபாடு ஏற்றலைப் பரிகரிக்க[5]; வல்லாத மெலியார்மாட்டு மேவுக பகைமை, எ—று.

மேகபகை என்பது மேவுக பகைமை என்றது.

**உ) பரிமேல் .:** தம்மின் வலியார்க்குப் பகையாயெதிர்தலை ஒழிக; ஏனை மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக, எ—று.

வலியார் என்புழித் துணைவலியும் அடங்கலின், மெலியார் என்புழித் துணைவலி இன்மையும் கொள்ளப்படும். அத்துணைதான் படைபொருள் முதலிய[6] வேற்றுமைத்துணையும்[7], நல்லறிவுடைமை

---

1. ஆள்வலி — காலாட்படையின் வலிமை
2. தோள்வலி — அரசனுடைய தோள்வலிமை; அதாவது உடலைப் பற்றிய வலிமை
3. பொருள்வலி — அரசுக்குரிய இறை முதலியவற்றால் வரும் பொருளின் வலிமை.
4. துணைவலி — கூலிப்படை, சுற்றப்படை, அமைச்சு முதலிய துணையாவாரது வலிமை
5. பரிகரிக்க — நீக்குக
6. முதலிய என்றமையின் துணையாயிருப்பவர் சுற்றத்தார் சிநேகிதர் முதலாயினோரையும் கொள்க.
7. வேற்றுமைத்துணை — தன்னின் வேறாகிய துணைகள்

நீதிநூல்வழி ஒழுகல் முதலிய[8] ஒற்றுமைத்துணையும் என இரண்டாம். அவ்விரண்டும் இல்லாரை வெல்வார்க்கு வலிதொலையாமையின்[9] அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. சிங்க நோக்காகிய[10] இதனுள் பகைமாட்சி பொதுவகையான் கூறப்பட்டது.

> **காரி.:** ஓம்பா—ஒழியாது. மேக—விரும்புக. ஒன்று, கடைக் குறைந்தது; ஒன்று இடைக்குறைந்தது ''தத்தம் திரிபே சிறிய என்ப''[11] என்பது போலச் சிங்கநோக்காய் ஈண்டுப் பொதுப்பட மெலியார் மேலும் முன்னர்ச்சிறப்பு வகையால் மெலியார் மேலும் பகைமாட்சி சிங்கநோக்காயிற்று.

ஊ) **கவிராசர் :** தன்னிலும் பலவானுக்குப்பகையாதலை விட்டு, விட்டு தன்னிலும் பலஹீனமானவனுடனே பகைசெய்க, எ—று

ஏ) **பழைய 2 :** தம்மின் வலியார்மேல் மாறுபட்டு எதிர்த்தலை ஒழிக; தம்மின் மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'சமம்', 'போர்' என்ற சொற்கள் தம்மொடு ஒத்தார் மாட்டுப் பொருதலையும் பகைகோடலையுமே, சொல்வன. ஒத்து படையெடா-தானையும் அடிபிறக்கிட்டோனையும் சமம் என்று கருதிப் போர் செய்-யாத மறவர்களுக்கு மெலியார் மேற்பகைமேவல் இயையுமா? என்பதை எண்ணிப்போலும் **பரிதியார்** 'தன்னின் எளியார் மேலும் பகையை விடுக' என்றனர். இப் பொருட்கு இவர் கொண்டபாடம் 'மெலியார் மேல் மேவல் பகை' என்பதாகலாம். இது ஏனைய உரை யாசிரியர்கள் கூறும் பகைமாட்சியாமா ? எனின் ஆகாது **பரிதி** கொண்ட பகைமாட்சி, மெலியார்மேற் பகைகொள்ளாமையே

---

8. முதலிய என்றமையின் அமைச்சர் புரோகிதர் முதலியோரது ஆலோசனைக்கு இணங்கி நடத்தலும் செய்கின்ற காரியங்களில் மறதில்லாமையும் ஊக்கமுடைமையும் ஆம்.

9 வலிதொலையாமையின் — அழியாமையின்

10. சிங்கநோக்கு — சிங்கத்தின் பார்வை முன்னும் பின்னும் செல்வதுபோல இறந்த கால எதிர்கால நிகழ்ச்சிகளை முன் கூட்டியே அறியுந் திறம்.

11 தொல். எழுத்து., 68.

மாட்சி என்கிறது போலும், தன்னைப் போற்றாத மெலியார் மேலும் பகைவிடுக என்ற சிறப்புமை அவர் உள்ளப்பதிவை எடுத்துக் காட்டுகிறது. **வள்ளுவரும்,** 'பின்கூறும் மெலிவுகள் பலவற்றை-யும் உரையாயிருந்தும், எதிரியின் வலியறிந்தும் அவனைப் போற்றித் தழுவிச் செல்வானாயின் அவன் பகையை மேவுக' என்பார் 'ஓம்பா-மெலியார்' என்றார். மெலியாரைப் பகைத்தலும் பொருதலும் கூடாது என்ற விலக்கு இதனால் விளக்கப் பெற்றமை காண்க. 'அவன் மேலும் பகைகொள்ளுதலைவிடுக' என்னும் **பரிதியார்** நோக்கு பகை கொள்ளும் வலியான் மாட்சியை உயர்த்துகிறது எனலாம். ஆனால் தொல்லோர் மரபுவழிப் பற்றாமையின் அத்துணைச் சிறப்பிற்றன்று எனலாம்.

'ஓம்பாமெலியார்' என்பதில் 'ஓம்பா' என்பதற்கு **'மணக்குடவர்'** தம்மைப் போற்றாத மெலியார்' எனவும், **காளிங்கர்** 'வல்லாத மெலியார்' எனவும் பொருள் கண்டனர். **பரிமேலழகரும்,** அவரை ஒத்த பிறரும் 'மெலியார்மேல் பகை ஓம்பா (து) மேவுக' எனக்-கூட்டிப் 'பகையை ஒழியாது விரும்புக' என்பர். இவர் உரையின் வண்ணம் 'ஓம்பாது' என்ற வினை எச்சம் கடைக்குறைந்தது என்பர் **நுண்பொருள்மாலையுடையார்.** 'மறனிழுக்காமானத்-திற்கு' (384) 'வீறின்மையின்' என்ற **சிந்தாமணிப்** (2261) பாடலைக் காட்டி 'மாறான்மையின் மறம் வாடுமென்றிளை யாரை-யும் எறியான்' என்பதைக் காட்டிய **பரிமேலழகர்** 'மெலியார்மேல் பகை ஓம்பா(து) மேக' என்று கூறி **வள்ளுவரைக்** குற்றப்-படுத்துவதைக் காட்டிலும், 'ஓம்பாமெலியார் மேல் பகை மேக' என இயைத்துப் பொருள் கூறும் **மணக்குடவர்** உரை தமிழ் மரபைக் காத்து நிற்றலை எண்ணுக.

**ஒ) ஒப்புமைப்பகுதி :**

**வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக :**

மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறல் என்றல் இழுக்காகும்
நற்கெளி தாகி விடினும் நளிவரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல். — பழ. நா., 49

ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போருளகப் பட்டானால்
நோற்ற பெருமை உடையாரும் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினார் இல். — பழ. நா., 292.

வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி
மெலியாரை மீதூரும் மேன்மை யுடைமை
புலிகலாம் கொள்யானைப் பூங்குன்ற நாட
வலியலாம் தாயக்கு வலிது. — பழ. நா., 303

அமர்நின்ற போழ்தின்கண் ஆற்றுவ ரேனும்
நிகரொன்றின் மேல்விடுதல் ஏதம் – நிகரின்றி
வில்லொடு நேரொத்த புருவத்தாய் அஃதன்றோ
கல்லொடு கைஎறியு மாறு. — பழ.நா., 318

அறிஞரே யாயினு மரிய தெவ்வரைச்
செறிஞரே யாவரேற் கெடுதல்திண்ணமாம். - — கம்ப., 6562

87.2. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. (862)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** சுற்றத்தார்மாட்டு அன்புறுதலும் இலன்; வேற்றரசராகிய வலிய துணையும் இலன்; ஆதலான், தான் வலியிலன்; இப்பெற்றிப்பட்டவன் மேல் வந்த பகைவன் வலியை யாங்ஙனம் தொலைப்பன்? எ-று.

**ஆ) பரிதி .:** எல்லாரிடத்தும் பகையுள்ளவன்; தனக்கு உதவியும் இல்லாதவன்; இவன் கொடையும் அறியானாகில் மாற்றாரை எப்படி வெல்வன்? எ-று.

**இ) பரிப் .:** சுற்றத்தார் மாட்டு அன்பு உறுதலும் இலன்: வேற்று அரசர் ஆகிய துணையும் இலன்; தான் வலியும் இலன்: இப்பெற்றிப் பட்டவன் பகைவனது வலியை யாங்ஙனம் அறுக்கும்? எ-று.

என்பரியும் என்பது இகழ்ச்சிக் குறிப்பு. இம்மூன்றும் இல்லாதவன் வெல்ல மாட்டான் என்றது.

ஈ) **காளி.:** பகைகொளின் அல்லது யாவர் மாட்டும் அன்பிலன்: மற்றும் தனக்கு அமைந்த துணைவலியிலன்: பின்னும் தான் ஒன்றுக்கு ஓர் துப்பில்லாதான்[1] யாவன்? அவன் என்பினையும் அரியும்[2] ஏதிலான் கைக்கருவி[3] எ-று.

ஏதிலான் துப்பு என்பது பகைவன் படைக்கலம்.

இனி மற்று இதன் பின்னரே ஒருவர்க்குப் பகைமை நாட-வேண்டிற்று ஆயின் அப்பகைத்திறம் தெரிந்து தமக்கு வாய்ப்பச் செய்ய வேண்டுமதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) **பரிமேல்.:** ஒருவன் தன் சுற்றத்தின் மேல் அன்பு இலன். அதுவேயன்றி வலிய துணையிலன் அதன்மேல் தான் வலியிலன் அப்பெற்றியான் மேல் வந்த பகைவன் வலியினை யாங்ஙனம் தொலைக்கும், எ-று.

சுற்றமும் இருவகைத்துணையும்[4] தன்வலியும் இலனாகலின், அவன் மேல் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாது என்-பதாம். துவ்வான்-துவ்வினைச்[5] செய்யான்.

ஊ) **கவிராசர்.:** ஒருவன் தன் சுற்றத்தார்மேலே தயையு-மில்லாமல், நல்ல துணையுமில்லாமல், சண்டைத் தொழிலுங்-கல்லாமலிருக்கிறவனை வெல்லுகிறவனுக்குப் பலம் எந்த விதத்தி-லேயுங் கெடாது, எ-று.

ஏ) **பழைய 2.:** 'துணையிலான்' பாடம்.

ஒருவன் தன் சுற்றத்தின் மேல் அன்பிலன்; அதுவன்றி வலிய துணையிலன்; தான் வலியிலன்; அப்பெற்றியான் மேல் வந்திறங்கிய பகையாளி வலியை எப்படித்தொலைப்பன்?

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**காளிங்கர்,** 'என்பு அரியும் ஏதிலான் துப்பு' எனப் பிரித்து எலும்பையும் அரியும் ஏதிலான் கைக்கருவி' (ஆவன்) என்பர்.

---

1. துப்பில்லாதான் — வலிமையில்லாதான்
2. அரியும் — அரிந்து துண்டுபடுத்தும் 3. கைக்கருவி — கைவாள்
4. இருவகைத்துணை — வேற்றுமைத்துணை' ஒற்றுமைத்துணை
5. துவ்வினை — வலிய வினைகளை

துப்பு-படைக்கலம் என்ற பொருளில் யாண்டும் அறியப்படாமையாலும் என்பு அரியும் படைக்கலத்திற்கு ஓர் தனிச்சிறப்பின்மையானும்' 'இருந்துள்ளி என்பரிதல்' என்ற (1243) குறளிலும் இங்ஙனம் பொருள் கொள்ளாமையானும் 'யாங்ஙனம் தொலைக்கும்' என்ற பொருளே சிறந்தது என்க.

**'ஏதிலான் துப்பு'**

'பகைவன் வலிமை' **மணக்., பரிமேல்., கவிராசர்,** முதலானோர். 'பகைவன் படைக்கலம்' **காளி.;** 'என்பரியும் தொலைப்பான்' **மணக்., பரிமேல்., கவிராசர், பழைய2, வரத.** 'எங்ஙனம் வெல்வன்' **பரிதி., பரிப்.,**

'ஏதிலான் துப்பு-பகைவன் படைக்கலம்' **காளி.;** 'பகைவன் வலிமை' **இராம.;** 'தான்துவ்வான்-தானும் வலியில்லாதவன்' **மணக்., பரிமேல்.,** 'கொடையும் அறியான்' **பரிதி.;** 'துப்பு இல்லாதவன்' **காளி.;** 'சண்டைத்தொழிலுக்கு அல்லாமல் இருக்கிறவன்' **கவிராசர்.**

துவ்வான், துவ்வாமை, துவ்வாய், துவ்வாதவன் முதலான வடிவுகளில் இந்நூலிலேயே உண்ணமாட்டாமை, வறுமை முதலிய பொருளில் ஆளப்பெற்றுள்ளன. 'தான் துவ்வான்' என்ற சொல்லாட்சி உண்ணான் என்ற பொருளில் **நன்றியில் செல்வம்** என்ற அதிகாரத்தும், கொடையும் அறியான் எனப் **பரிதியாரானும்** 'வலியிலன்' என ஏனையோரானும் ஆளப்பெற்றுள்ளன. 'து' என்ற பகுதிக்கு 'வலிமை' என்ற பொருள் நேர்பொருளா? பிற இலக்கிய ஆட்சியுண்டா? என்பதை யாராயின் 'துப்பு' என்பது 'வலி' என்ற பொருளில் பிறவிலக்கியங்களிலும், 'வலிமை' 'உணவு' என்ற இருபொருளிலும் ஈண்டும் வருவதாக உரைகள் தெரிவிக்கின்றன. 'வலியிலான்' என்ற பொருளில் **பரிதியாரைத்** தவிர்த்த ஏனை உரையாசிரியர்கள் அனைவரும் உரைக்கின்றனர். அதனால், 'துணையிலன்' 'துப்பில்லான்' என்ற பாடம் இருக்குமோ என்ற ஐயமும் எழுகிறது. 'து' என்பதற்கு 'வலி' என்ற பொருளில்

ஆன்றோரிலக்கிய வழக்கில் காணப்படுமாயின் இந்த ஐயத்திற்கே இடமின்றாம், **காளிங்கர்** 'தரும் துப்பில்லாதான்' என்ற உரை இக்கருததை வலியுறுத்துகிறது. ஆனால் அடுத்துவரும் 'ஏதிலான் துப்பு' என்பதிலுள்ள துப்பு என்பதற்குப் 'படைக்கலம்' என்கின்-றார். இது வலிமைக்குத் துணை செய்யும் படைக்கலத்தைத் துப்பு என்ற உபசார வழக்கா? என்பன சிந்தித்தற்குரியன.

**பரிதி,** கூறும் 'ஈகலான்' என்ற பொருளும் ஏற்புடையதன்று அடுத்த **குறளில்** 'ஈகலான்' என்ற சொல் வருதலின் இந்த இயைபைக்கொண்டு நோக்கின் தான் துவ்வான் எனபது **வள்ளுவர்** ஆட்சி மிகுதி பற்றி 'தான் உண்ணான்' என்பதிலும்' ஈகலான் பிறர்க்கீயவும் செய்யான்' என்பதிலும் வருவன என்றலே இயை-புடைத்தாகும். அன்பிலன் என்பது பிறர்மாட்டன்பில்லாமையையும், 'துவ்வான்' இவறன்மையால் தன்மாட்டும் அன்பில்லாமையையும் அன்பும் உலோப மின்மையுமே துணைவளர்க்குங் கருவியாதலின் அஃதில்லாமை இவற்றின் விளைவாதலையும் காட்டி நிற்கும் காரண காரியத்தொடர்புடையன ஆதலால் தான்துவ்வான் என்பது தன்வயிற்றுக்கும் உண்ணான் என்ற பொருளையே தருமெனல் சிறந்ததாகலாம் எண்ணுக.

87.3. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
 தஞ்சம் எளியன் பகைக்கு. (863)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுவான், பகைவனது வலிமை அறியான், மதியிலன், ஈயமாட்டான்; இப்பெற்றிப்பட்டவன் பகைவர்க்கு மிகவும் எளியன், எ-று.

இஃது இவை நான்குமுடையவன் தோற்கும் என்றது.

**ஆ) பரிதி .:** அஞ்சுதல் அறியான், அடக்கமும் அறியான் ஆகில் மாற்றார்க்கு இவனை வெல்லல் எளிது' எ-று.

**இ) பரிப் .:** அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சுமவன், பகைவன் வலிமை அறியான், அமைதியிலன், ஈயமாட்டான், இப்பெற்றிப் பட்டவன் பகைவர்க்கு மிகவும் எளியவன், எ-று.

இவை நான்கும் உடையவன் தோற்கும் என்றது.

**ஈ) காளி .:** ஒருவன் தனக்கு எதிர்காணின் அஞ்சுவது செய்யும்; பின் உற்றவினைக்கண் கட்டும் கழறியும்[1] அறிவது செய்யான்; அன்றியும் தன்னைச் சமைத்துக்[2] கொள்வது ஓர் நிறைவும் இலன்; இதன்மேலும் கொடைக்கடன் அறிந்து தணிப்பதும்[3] செய்யான் யாவன்? அவன் பிறர்க்கு மிகவும் எளியன் பகைமைக்கு, எ-று.

தஞ்சம் எளியன் என்றது மிகவும் எளியன் என்றது.

**உ) பரிமேல் .:** ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு[4] அஞ்சா-நிற்கும், அறியவேண்டுமவற்றை அறியான், பிறரோடு பொருத்தம் இலன், இவற்றின்மேலும்[5] யாவர்மாட்டும் இவறன் மாலையன்[6] இப்பெற்றியான் பகைவர்க்கு மிக எளியன், எ-று.

'தஞ்சம் எளியன்' என்பன ஒருபொருட்பன்மொழி[7]. இந்நான்கு குற்றமும் உடையான் பகையின்றியும் அழியுமாகலின் 'தஞ்சம் எளியன்' என்றார்.

**ஊ) கவிராசர் :** ஒருவன் பயப்பட வேண்டாததற்குப் பயப்படு வான்; அறிய வேண்டியதை யறியான்; பிறருடன் சிநேகமிலன்; கொடுக்கிறதுமிலன்; இப்படிப் பட்டவனை எளிதில் வெல்லலாம் எ—று.

**எ) பழைய 2 :** 'அமைவிலான்' பாடம்.

அஞ்சப் படுவனவற்றிற்கு அஞ்சான்; அறிய வேண்டுவன வற்றை அறியான்; பிறரோடு அமைந்திருக்கவுஞ்செய்யான்; ஈகையும் இல்லான்; அவன் பகைவர் யாவர்க்கும் மிகவும் எளியன்.

---

1. கட்டும் கழறியும் - அகற்றியும் இடித்துரைத்தும்; 'களைகட்டி பயிர் நல்லவாயின' என்பது போல.
2. சமைத்து - ஆக்கிகொள்ளல் 3. தணிப்பதும் - அடக்குவதும்
4. அஞ்சவேண்டுவன் - பாவமும் பழியும் கேடும் முதலியன 'இவை ஒழிந்த நல்வினை, புகழ், நன்மை முதலியன.
5. இவற்றின் மேலும் - அஞ்சுதல், அறியாமை. அமைவு இன்மை என்னும் இவற்றின்
6. இவறன் மாலையன் - பேராசையால் உலோபப்படும் தன்மையன,
7. 'தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே யாதலின்' ஒருபொருட் பன்மொழி என்றார். (தொல். சொல். 251, இளம்)

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அஞ்சும்' என்பதற்கு, 'அஞ்சுவது அஞ்சுதல் அறிவுடைமை' யாதலை உளங்கொண்டு 'அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சும்' எனவும், 'அமைவு–மதி' எனவும் உரை காண்பர் மணக்.

பரிதி, 'அஞ்சும் அறியான்' என்பதனை ஒருதொடராக்கி 'அஞ்சும்' என்னும் முற்றைறத்தொழிற்பெயராக்கி உரைப்பர். இது மரபொடுபட்டதன்று. காளிங்கர் 'அஞ்சும்' முதலியனவற்றிற்குத் தேவையான சிலசொல் வருவித்துக் கருத்தை மாற்ற முயல்வர். பரிமேல்., மணக்குடவரை ஒத்து உரைகண்டு இலக்கணக்குறிப்புந் தருவர். 'தஞ்சக் கிளவி மென்மைப் பொருட்டே' என்பவாகலின் 'ஒரு பொருட் பன்மொழி' என்றார் அவர். 'அமைவு' என்பதற்கு வரத., எழுதும் உரை போர்த்தளவாடங்களை அமைத்துக் கொள் வது' என்பது. மு.ரா.அரு. எல்லோரோடும் ஒத்தநடையினராதல்' என்பர். இங்ஙனம் அஞ்சுதல் முதலிய குணங்களுக்கு வேறு வேறு விளக்கங் காண்பர்.

87.4. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. (864)

உரைப்பகுதி :

அ) மணக் .: வெகுளியினின்றும் நீங்கானாய், நிறையுடைமையிலனாயின் அவனை வெல்லுதல் எக்காலத்தும் யாவர்க்கும் எளிது, எ-று.

இஃது, இவை இரண்டும் உடையவன் எல்லார்க்கும் தோற்கும் என்றது.

ஆ) பரிதி .: கோபம்விடான் பொறுமை இல்லானாகில் அவனை வெல்லல் யார்க்கும் எளிது, எ-று.

இ) பரிப் .; வெகுளியினின்றும் நீங்கானாய், நிறை உடைமையும் இலன் ஆயின், அவனை வெல்லுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் எளிது, எ-று

இவை இரண்டும் உடையவன் எல்லார்க்கும் தோற்கும்.

**ஊ) காளி .:** பெரிதும் சினம் தணியானுமாய்த் தன்னை நிரப்-பத்தே[1] வைக்கும் நிறைவு இலனும் ஆயின், மற்று அவனொடு பகைமை எல்லாக் காலமும் எவ்விடத்தானும் யாவர்க்காயினும் எளிது எ-று.

**உ) பரிமேல் .:** ஒருவன் வெகுளியின் நீங்கான், அதுவேயன்றித் தான் நிறையுடையன் அல்லன் அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கும் எளிது, எ-று.

நிறை-மறை பிறரறியாமை[2], வெகுடன் மாலையனாகலானும் மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியும் அறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி 'இனிது' என்று பாடம் ஒதி 'அவன் பகைமை இனிது' என்று உரைப்பாரும் உளர்[3].

**உ) கவிராசர் .:** ஒருவன் கோபத்தை விடான்; நல்ல புத்தியு-மில்லாதவன் அவனை வெல்லுதல் மெத்தவெளியது, எ-று.

**ஏ) பழைய 2 :** 'நிறைவிலன்' பாடம்.

ஒருவன் கோபம் நீங்கான், அதுவன்றித் தான் நிறையுடை-யனல்லன், அவன் எந்நாளும் யாங்ஙனம் யார்க்கும் எளியன்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நிறை' முதலியவற்றிக்கும் **பரிமேலழகர்** தரும் விளக்கங்-கள் சிறந்தன. அனைவர் உரைகளும் 'எளிது' என்றிருத்தலின் 'இனிது' என்று பாடங்கொண்டார் யார் என்பதறியக்கூடவில்லை. வருங்குறளின் முடிவை இதனது என்று மயங்கி யாரோ எழுதிய குறிப்பாகவும் இருத்தல் கூடும். **இராம.** 'நிறையின்மை-சொல்லினும் செயலினும் அளவில்லாத பதற்ற குணம்' என்பர். **வரத.** 'குறிக்-கோளின்மை' என்பர்.

---

1. நிரப்பத்தே — நிறைவு இல்லாமை நிரப்பம்
2. நெய்தற்கலி , 16 என்று சொல்லப்படுவது.
3. அறியக்கூடவில்லை.

87.5. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. (865)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** ஒருவினை செய்யத்தொடங்குங்கால் பின் வருவன பாரான், பயன்படுவனவற்றைச் செய்யான், அதனால் உறும்பழியைப் பாரான், குணம் இலன்; இவன் பகைமை பகைவர்க்கு இனிதாம், எ-று.

இஃது இவன் பகைமையால், பகைவர்க்கு இனிமை உண்டாம் என்றது.

**ஆ) பரிதி .:** ஆகிறவழியான் உலகம் பொருந்தின காரியம் செய்யான்: அபகீர்த்தியும் பாரான்; பண்பிலாதான் ஆகில் அவனை வெல்லுதற்கு மாற்றாருக்குப் பிரியம், எ-று.

**இ) பரிப் .:** ஒருவினை செய்யத் தொடங்குங்கால் பின்வருவன பாரான்: பயன் படுவனவற்றைச் செய்யான் : அதனால் உறும் பழியைப் பாரான்: குணமும் இலன்: இவன் பகைமை பகைவர்க்கு இனிது ஆம், எ-று.

இவன் பகைமையால் பகைவர்க்கு இனிமை உண்டாகும் என்றது. இவை ஐந்தினானும் தான் திருந்த வேண்டும் என்று கூறப்பட்டது.

**ஈ) காளி .:** நூல் நெறி ஆராய்ந்து பாரானுமாய், மற்று அதனாலே வாய்ப்புடைக்கருமங்கள் செய்யானுமாய்' மற்று, இவை செய்தார் பிறர் பழிக்கும் பழித்துரை பாரானுமாய், மற்று உலக வழக்கம் ஆகிய மரபு இலனும் ஆயின் அவன் பகை பகைவர்க்குச் சால இனிதாம், எ-று.

**உ) பரிமேல் .:** ஒருவன் நீதிநூலை ஓதான், அது விதித்த தொழில் களைச் செய்யான், தனக்கு வரும் பழியைப் பாரான், தான் பண்புடையன் அல்லன், அவன் பகைவர்க்கு அப்பகைமை[1] இனிது, எ-று.

தொல்லோர்[2] அடிப்பட வழங்கிவந்ததாகலான் 'வழி' என்றும், தப்பாது பயன்படுதலின் 'வாய்ப்பன' என்றும், இக்குற்றங்களுடையான்[3] தானே அழிதலின் 'பற்றார்க்கு இனிது என்றும் கூறினார்.

1. அப்பகைமை - அவனோடு கொண்ட பகைமை
2. தொல்லோர் - நீதிநூல்களைச் செய்த முன்னோர்
3. இக்குற்றங்கள் - வழிநோக்காமை, வாய்ப்பன செய்யாமை, பழி நோக்காமை, பண்பில்லாமை ஆகிய குற்றங்கள்.

**ஊ) கவிராசர் :** ஒருவன் நீதிநூலைப்படியான்; அதிலே சொல்லப்பட்ட தொழில்களையுஞ் செய்யான்; தனக்கு வரப்பட்ட பழியையும் பாரான்; நற்குணமில்லாதவன்; அவன் பகைவர்க்கு எளியனாய் நல்லவனாம், எ-று.

**ஏ) பழைய 2 :** தான் நீதி நூலையோதி அப்பொருளை நோக்கான்; நீதிநூல் விதித்த தொழில்களைச் செய்யான்; தனக்கு வரும் பழிகளைப் பாரான்: தான் பண்புடையனல்லன்; அவன் பகைவர்க்கு அவன் பகை இனிது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'வழி'**

'பின்வரும் பயன்' என்பர் **மணக்.**; இதுதெளிவற்றிருத்தலின் **பரிமேலழகர்** 'வழி—நீதிநூல்'; காளி. 'நூல்நெறி' என்றனார்

**வாய்ப்பன,**

'பயன்படுவன' என்றனர் **மணக்.**; 'நீதிநூல் விதித்த தொழில்' என்பர் **பரிமேல்.**; 'தான் தொடங்கும் வினைநன்மைக்கோ அல்லது தீமைக்கோ வழியாதலை நோக்கான்' என்பர் **பரிப்.**: காரியங்களைச் செய்யும் வழி என்பர் **கா. சு.**; 'பகைவந்த வழியையும் தடுக்கும் உபாயத்தையும் அறியானாய்' என்பர் **வரத.**: இக்குறட்பாவில் வழிநோக்கான் முதலியன பொதுவகையான் அமைந்திருத்தலின் அதனை விளக்கும் ஆசிரியர்கள் தம்முள் மாறுபடுகின்றனர். இவருள் **கா. சு.** 'நோக்கானாய்' என முற்றெச்சமாக்கியும், **வரத.** 'அறியாமலும், என எச்சமாக்கியும் உரைப்பர். இங்ஙனம் கொண்டு கூட்டும் முறையாலும், இலக்கண அமைதியானும் சில மாற்றங்களிருப்பினும் முடிவு மாறின்மை காண்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**பழிநோக்கான் :**

மற்றொ ருத்தன் வலிந்ததை கூவவந்
துற்ற வென்னை யொளித்துயி ருண்டநீ
இற்றை யிற்பிறர்க் கும்மிக லேற்றென
நிற்றி போலுங் கிடந்த நிலத்தரோ: — கம்ப., 4134

87.6. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். (866)

உரைப்பகுதி :

அ) மணக்.: மீண்டு பாராத சினத்தனுமாய் மிகப்பெருகிய காமத்தனுமாகியவன் பகை விரும்பப்படும், எ-று.

இஃது இவையுடையார் நட்டோரிலராதலால், இவரிடத்துப் பகை கொள்ளலாம், என்றது.

ஆ) பிரிதி.: அளவுபடாத கோபத்தை உள்ளவன் மோகாக்கினி[1] உள்ளவன் ஆரிடத்திலும் உதாசீனம்[2] உள்ளவன் சடுதியிலே கெடுதல் தப்பாது எ-று.

இ) பரிப்.: மீண்டு பாரார் சினத்தலும் ஆய் மிகப் பெரிய காமத்தனும் ஆகியவன் பகையை விரும்பப்படும், எ-று.

காணாச்சினம் என்றது மேல் கூறிய வெகுட்சியின் மிகுதியை. இவை உடையார் நட்டோர் இலர் ஆவார் ஆதலால் பகை கோடல் ஆம் என்றது.

ஈ) காளி.: ஈண்டு இதுக்குத் தகாது என்று நோக்காது செய்யும் சினத்தை உடையோனுமாய் மிக்கபெரும் காமத்தை உடையோனுமாய், நெறிப்பட்டு வருவன ஒழியப் பேணாமை ஆகிய நெறிகெட வருஉம் தனம் முதலியவற்றைக் காமித்துச்[3] சொல்வோனுமாய் இதனால் பகையை விரும்பிக் கைக்கொள்ளப்படும், எ-று.

உ) பரிமேல்.: தன்னையும் பிறரையும் தான் அறியாமைக்கு ஏதுவாகிய வெகுளியுடையான் யாவன் மேன்மேல் வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும், எ-று.

'காணாச் சினம்' என்பது விகாரமாயிற்று.[4] முன்னோனுக்கு[5] யாவரும் பகையாகலானும், ஏனோனுக்குக்[6] காரியம் தோன்றா-

---

1. மோகாக்கினி - காம மயக்கமாகிய தீ
2. உதாசினம் - அலட்சியப்படுத்தல் 3. காமித்து - விரும்பி
4. 'காணாத சினம் என்பது 'காணாச்சினம்' என எதிர்மறைப் பெயரெச்சத்து ஈறு விகாரத்தால் தொக்கது.
5. முன்னோன் - காணச் சினத்தான்
6. ஏனோன் - கழிபெருங் காமத்தான்

மையானும், தாமே அழிவர் என்பதுபற்றி, இவர் 'பேணாமை பேணப்படும்' என்றார்.

**ஊ) கவிராசர் :** தன்னையும் பிறரையுமறியாமற் கோபஞ்செய்து கொள்ளுகிறவன், வெகுவாக வாஞ்சை[7]யையுடையவன், இப்படிப்பட்டவனுடைய பகையை விரும்பித் தேடிக் கொள்ளவேணும், எ-று.

**ஏ) பழைய2 :** தன்னையும் பிறரையும் அறியாத கோபத்தை யுடையான் ; மிகுந்த பெரிய காமத்தை யுடையான்; அவன் பகையை மிகவும் பகையாகக் கொள்ளவேண்டும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

''காணாச் சினத்தான்'' என்ற செயப்படுபொருளை அவாவி நிற்கும் இத்தொடர் உரையாசிரியர்களுக்குப் பலநோக்கினைப் படைத்திருக்கின்றது. அதனால் **மணக்.** 'மீண்டு பாராத சினத்தான்' என்றார்; இதுவும் பொதுமை நோக்குடையதாய்த் தெளிவின்றியுள்ளது. **பரிதி.** 'அளவு காண இயலாத சினத்தான்' என்றார்; இது குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளிபோலாது, எவ்வளவு காலம் இருக்கும் எவ்வளவு தீமை செய்யும்? என்ற அளவுகாண இயலாத சினம் என்று மிகுதியை உணர்த்துவது. **பரிப்பெருமாள்** 'வெருட்சியின் மிகுதி' என்றார்; இதுவும் 'அளவு காணாச்சினம்' என்ற கருத்தையே தழுவியது. **காளிங்கர்** 'ஈண்டு இதற்குத் தகாது என்று நோக்காது செய்யும் சினம்' என்பர். இது சூழ்நிலையையும் பயனையும் தகுதியையும் கண்டு செய்யும் சினம் வேண்டுவதாம் என்பதைத் தெரிவிப்பது. **பரிமேலழகர்** 'தன்னையும் பிறரையும் தான் அறியாமைக்கு ஏதுவாய சினம்' என்பர். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதுபோல் சினத்தான் தன்னிலையையும், மாற்றானிலையையும் அளந்தறியான் ஆதலை எண்ணிக்கூறிய உரையாம். **கவிராசரும் பழைய 2ம்** இருக்கருத்தினவே. **இராமலிங்கனார்** 'காரணமின்றிக் கோபிப்பவன்' என்பர். இது காரணமின்றியேயும் கறுவொடு ஒன்றோடு ஒன்று சீறும் புள்ளைப்போலக் காரணமின்றியேயும் சினப்பவன் என்பது. **தேவநேயர்** செய்திகளின் அருமையையும் உண்மையையும், பிறர் பெருமைகளையும் அறிந்துகொள்ளாத சினத்தான் 'என்கிறார். **வரத.** 'அறிவைச் சிறிதும் அறிய விடாமல் மறைக்

7. வாஞ்சை- விருப்பம்

கின்ற சினத்தையுடையவன்.' **இராம.** காரணம் காணமுடியாத கோபம் உடையவன்' இவற்றுள் **பரிமேலழகர்** உரை 'கண்ணும் மண்ணுந் தெரியாத கோபம்' என்ற முதுசொல்லையும் ஒட்டியிருக்கும் உலகவழ்க்கை தழுவியதாதலின் சிறப்பினது.

**'கழிபெருங்காமம்'**

'மோகாக்கினி' - பெண்கள் மீதுகொண்ட அளவில் காமத்தீ என்னும் **பரிதியுரையும் மணக்குடவர்** முதலான ஆசிரியர்களை ஒத்ததே.

**'பேணாமை பேணப்படும்'** என்பதன் **பரிதியுரை** இயைபிலது. 'பகை விரும்பப்படும்' என்ற கருத்துடைய உரைகளே சிறந்தன.

**இராம.:** 'பேணாமையால் விரும்பப்படுகின்றவர்' என மூன்றனுருபு தந்து பொருள் காணுதல் ஓராற்றானும் ஏற்புடையதன்று.

**வரத.** 'சினத்தானையும், காமத்தானையும் பகைவனாக விரும்பிப் பெறவேண்டும்' என்ற உரை நேரிய பொருளன்று.

**தேவநேயர்** காணாச்சினம் கண்ணன்ன கேளிரையும் மாபெரும் வலியரையும் பகைத்துக் கொள்ளுதலால் அவன் பகை பேணப்படுவதாம். காமம் பெண் மூலமாக எளிதிற் சொல்லப்படுதலான் அவன் பகையும் பேணப்படுவதாயிற்று என்ற நயம் சிறந்தது.

87.7. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்-
திருந்து
மாணாத செய்வான் பகை. (867)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** பகையை உற்றிருந்தும் மாட்சிமையில்லாதன செய்யுமவன் பகையினை, துணிந்து ஒன்றனைக் கொடுத்தும் கொள்ளல்வேண்டும், எ-று.

மாணாத செய்தலாவது பகைக்காவன செய்யாது பிறிது செயல். இஃது இவன் பகைசெய்யமாட்டானாதலால், அப்பகை கோடலர்மென்றது.

**ஆ) பரிதி .:** அடுத்திருந்தும் புல்லறிவினாலே மாறுபாடு செய்வான் பகையை வெற்றி கொள்ளவேணும், எ–று.

**இ) பரிப் :** பகையை உற்றிருந்தும் மாட்சிமை இல்லாதன செய்யுமவன் பகையினை ஒன்றனைக் கொடுத்தும் கொளல் வேண்டும் துணிந்து, எ–று.

மாணாத செய்தல் ஆவது பகைக்கு ஆவன செய்யாது பிறிது செய்தல் இவன்வினை செய்யமாட்டான் ஆதலால் பகைகோடல் ஆம் என்றது.

**ஈ) காளி .:** தமக்குச் சிறந்தது யாதானும் கொடுத்தும் கோடல் வேண்டும் என்றது யாதினை? எனின், பயில மண்டித்திருந்து தானே தனக்கு இன்னாதவற்றைச் செய்வானது பகையினை, எ–று.

**உ) பரிமேல் .:** வினையைத் தொடங்கியிருந்து அதற்கு ஏலாதன செய்வான் பகைமையை, சிலபொருள் அழியக் கொடுத்தாயினும் கோடல் ஒருதலையாக வேண்டும். எ–று.

ஏலாதன மெலியனாய் வைத்துத் துணிதலும்[1] வலியனாய் வைத்துதணிதலும்[2] முதலாயின[3] அப்பொழுது அதனால் சிலபொருள் அழியினும் பின் பலபொருள் எய்தற்கு ஐயமின்மையின் கொளல் வேண்டும் மன்ற என்றார். இவை ஆறுபாட்டானும் அது சிறப்பு வகையால் கூறப்பட்டது.

**ஊ) கவிராசர் :** ஒரு காரியத்தைச் செய்ய உத்தேசித்திருந்து[4] அதற்கு ஏலாதவற்றைச் செய்கின்றவனது பகையைச் சில பொருளைக் கொடுத்தாகிலும் கொள்ளவேண்டும், எ–று.

**ஏ) பழைய 2 :** தனக்கடங்காத வினையைத் தொடுத்திருந்து, அதற்குப் பொருந்தாதன செய்வான் பகையைச் சிலபொருள் அழியக் கொடுத்தாகிலும் விலையாகக் கொள்ளவேண்டும்.

---

1. மெலியனாய் வைத்துத்துணிதல்—தன்வலி முதலிய குறைந்திருந்தும் பகைவருடன் போர் செய்ய துணிதல்.

2. வலியனாய் வைத்துத் தணிதல் — தன்வலி முதலியவற்றுள் சிறந்திருந்தும் பகைவரொடு போர் செய்யாது அடங்கியிருத்தல்.

3. முதலாயின என்றமையின தமக்காகப் போர் செய்யும் வீரர்களை ஐயப்படுதலும் அவரவர் தகுதிக்குத் தக்கவாறு பொருள் தாராமையும் ஆம்.

4. உத்தேசித்திருந்து — எண்ணியிருந்து

ஐ) **தொகுப்பும் குறிப்பும்:**

**'அடுத்திருந்து'**

'பகையை உற்றிருந்தும்' **மணக்.**; 'அடுத்திருந்தும்' எனத் 'தன்னைச் சார்ந்தேயிருந்தும்' என்ற பொருளில் வந்தது என்பர் **பரிதி.**; 'பயில மண்டித்திருந்து' என்பர் **காளிங்கர்**; 'வினை-யைத் தொடங்கியிருந்து' என்பர் **பரிமேல்., கவிராசர்**; தனக்-கடங்காத வினையைத் தொடுத்திருந்து' என்பது **பழைய உரை.** இவற்றுள் 'பயில மண்டித்திருந்தும்' என்பது **காளிங்கர்** உரை அதாவது கூடவே சூழ்ந்திருந்தும் என்பதாம். 'மிக நெருங்கிய-வனாக இருந்தும்' **இராம.** இவற்றுள் **காளிங்கர்** உரை 'மாணாத செய்வான் நண்பனாயினும் அவன் பகையைக் கொடுத்-தாவது கொள்ளவேண்டும்' என்ற கருத்தை நல்கலால் சிறந்தது.

'மன்ற கொடுத்தும்' எனக்கூட்டிப் பொருள் காண்பவர் **பரிமேல்.**; 'துணிந்து கொடுத்தும்' என்பர் **மணக்.**; 'சிறந்தன கொடுத்தும்' என்பவர் **காளி.**; 'ஒருதலையாக வேண்டும்' என்பர் **பரிமேல்.**; 'விலையாகக் கொள்ளவேண்டும்' என்பது **பழைய உரை.**

'மன்ற' என்பது இடைச்சொல். 'மன்ற வெள்கிளவி தேற்றஞ் செய்யும்' ஆதலின், இதனை, இவ்வதிகாரத்தின் பொருள்மைதியான பகைகொளல் வேண்டும் என்பதனோடு இயைத்தலே சிறப்பிற்று. **வள்ளுவர்** வழக்காற்றையும் 143, 229, 649 குறளுரைகளான் அறியலாம்.

**87.8. குணனிலனாய்க் குற்றம் பலவாயின்**
**மாற்றார்க்(கு)**
**இனனிலனாம் ஏமாப் புடைத்து. (868)**

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** குணங்களுள் யாதும் இலனாய்க் குற்றங்கள் பல உடையானாயின், அவன் துணையிலனாம்; அது மாற்றார்க்கு ஏம-மாதலை உடைத்தாம், எ-று.

ஆ) **பரிதி .:** நற்குணமில்லாதவனாய்க் குற்றம் பலவும் உள்ள-வனாகில் மாற்றார்க்கு இன்பமில்லாதவனாகில் அவர்க்கு மகிழ்ச்சி உண்டாம், எ-று.

**இ) பரிப் .:** குணங்கள் யாதும் இலனாய்க் குற்றங்கள் பல உடையனாயின் அவன் துணை இலன் ஆம்: அது மாற்றார்க்கு ஏமம் ஆதலை உடைத்து ஆம், எ-று.

அன்றியும் மாற்றார்க்கு இவன் துணை இலன் என்று மனத்தின்கண் கொள்ளும் வலி உடைத்தாம் என்றும் ஆம். மேல் பகைவர்மாட்டுக் குற்றம் பெருகின், அவரை வெல்லலாம் என்றார் : இக்குற்றம் தம் மாட்டும் உளதாயின் வெல்ல ஒண்ணாது என்று இது பொதுவாகக் கூறப்பட்டது. குற்றவகை மேல் கூறப்படுகின்றன.

**ஈ) காளி .:** தன்வயின் குணம் என்பது ஒன்றும் இலனாய்க் குற்றம் பலஉடையனாய் இருப்பின் அவனொடு மாறுபாடு கொள்ளக் கருதுகின்ற மாற்றார்க்கு இணை இல்லாததோர் சேம உறுதி[1]யைப் பெரிதும் உடைத்து, எ-று.

இனனிலன் என்பது இணை இலன் என்றது.

**உ) பரிமேல் .:** ஒருவன் குணனொன்றும் இலனாய் உடைய குற்றம் பலவாயவழி, அவன் துணையிலனாம்; அவ்விலனாதல் தானே அவன் பகைவர்க்குத் துணையாதலை உடைத்து, எ-று.

குணம்-இறைமாட்சியுள் சொல்லியன[2]. குற்றம் – இவ்வதிகாரத்துச் சொல்லியனவும்[3] மற்றும் அத்தன்மையனவும்.[4] துணை-சுற்றம், நட்பு, பொருள், படை முதலாயின[5]. பகைவர்க்கு இவற்றான்[6] உளதாம் பயன், தானே[7] உளதாமாகலின், 'ஏமாப்புடைத்து' என்றார். இலனாய் என்னும் செய்தெனெச்சம் உடைய என வந்த பெயரெச்சக் குறிப்புக்கொண்டது.[8]

---

1. சேம உறுதி - பாதுகாப்பான பயன்
2. இறைமாட்சியுள் சொல்லியன - 'அஞ்சாமை, ஈகை அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி. துணிவுடைமை., குறள்., 382, 383.
3. இவ்வதிகாரத்துச் சொல்லியன - அன்பின்மை, துணையின்மை வலியின்மை முதலியன
4. அத்தன்மைய - பிறர் மகளிரை வெளவல், பிறர் பொருளை நேர்மையின்றி பெறுதல், துணையாகாதாரைத் துணையாகக் கொள்ளுதல் முதலியன.
5. முதலாயின என்றமையின் அமைச்சர். புரோகிதர். அரண் முதலியவையும் கொள்க.
6. இவற்றான் – சுற்றமும் நட்பு முதலியவற்றான்
7. தானே - சுற்றமும் நட்புமின்றியே தான் ஒருவனே
8. இலன் ஆய் என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; உடைய என்னும் உடன்பாட்டுக் குறிப்புவினை பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

ஊ) **கவிராசர்** : ஒருவன் குணம் ஒன்றும் இல்லாதவனாய், குற்றம் வெகுவாய் உடையவனாயின், அவன் பகைவற்குத் துணை- யாவான், எ-று.

ஏ) **பழைய2** : 'இனனிலனாய்' பாடம்.

ஒருவன் தன் குணம் ஒன்றும் இல்லாதவனாகிப் பல குற்றங்களையுடையானாகி யிருப்பின், அவ்வின மில்லாமையால் அவன் பகைவர்க்கு அது தானே துணையாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறளை இரு தொடராக்கி,...... இனனிலன் ஆம்; (அது பகைவர்க்கு) ஏமாப்புடைத்து' என எழுவாயும் பிறவும் வருவித்து உரைகாண்பர் **மணக்., பரிமேல்** முதலிய அனைவரும். **பரிப்** .: 'இனன் இலனாம் ஏமாப்பு, எனக்கூட்டி ஒரு தொடராக்கியும் உரைப்பர். இவர் உரையில் வரும் 'அன்றியும்' என்பது முன்னர் **மணக்குடவர்** உரையைத் தழுவியதாம். இங்ஙனம் பலவிடங்களில் வருதலால் **மணக்குடவர்** உரையும், விளக்கமுமே இருவருரையாக உருக்கொண்டுள்ளது என்பதை உணராம். இவை முதல் வெளி- யீட்டைத் தொடர்ந்தே வரும் பிழைகள். **காளி** இனன்இலன்- இணையிலன்' எனக் கொள்வர். **வரத**. கூறும் 'போர் தொடங்- காமல் இருப்பதே பாதுகாப்பு' என்னும் உரை இத்தொடர்க்கு நேரிய பொருளன்று. **கவிராசர்** உரை **பரிமேலழகரை** ஒத்- துரைப்பதாய், இறுதியில் அவர் கூறிய கருத்துப்பொருளைக் கூறிச் சொற்பொருளைவிட்டுப் புறம் போய் மயக்கந்தருகிறது.

## 87.9. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா அஞ்சும் பகைவர்ப் பெறின். (869)

**உரைப்பகுதி :**

அ) **மணக்** .: அறிவில்லாத அச்சமுடைய பகைவரைப் பெறின், அவரைச் செறுவார்க்கு இன்பம் தூரப்போகாது, அணித்தாக வரும் எ-று.

ஆ) **பரிதி** .: அடக்கமில்லான் அச்சமில்லான் ஆகில் மாற்றார்க்கு இனை வெல்ல நாட்செல்லாது, எ-று.

இ) **பரிப் .:** அறிவு இல்லாத அச்சம் உடைய பகைவரைப் பெறின் அவரைச் செறுவார்க்கு இன்பம் தூரப் போகாது: அணித்து ஆக வரும், எ-று.

அறிவு-காரிய அறிவு. இவை இரண்டும் ஒருங்கு உடையார் வெல்ல மாட்டார் ஆதலால் பகை கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

ஈ) **காளி .:** வந்து அடர்க்க[1] நினைவார்க்குத் தம்மைச் சேண்[2] நீங்கா இன்பம் ஆனவை எவ்விடத்து, எனின் முன் தீங்கு தெரிந்து அறிவு இல்லாதவருமாவோர் எதிர் காணின் உள்நடுக்கம் உடைய பகைவரைப் பெறின் அவ்விடத்து, எ-று.

சேண் இகவா இன்பம் என்பது நீங்கா இன்பம் என்றது.

உ) **பரிமேல் .:** நீதியை அறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், அவரைச் செறுவார்க்கு உயர்ந்த இன்பங்கள் நீங்கா.

உபாயம்[3] அறிதலும் அறிந்தால் செய்துமுடிக்கும் திண்மையும் இல்லாதாரே பகைவராதல் கூடாமையின் 'பெறின்' என்றும், அவரை அறிந்து மேற்சென்றபொழுதே பகையின்மையும் செல்வமும் ஒருங்கே எய்தலின் சேணுடை இன்பங்கள்[4] இகவா என்றும் கூறினார்.

ஊ) **கவிராசர் .:** அறிவில்லாதவனாய்ப் பயப்படுகிறவனுமாய் இருக்கிற பகைவரை உடையவர்களுக்கு எந்நாளும் நீங்காத இன்பம் உண்டாம், எ-று.

ஏ) **பழைய 2 .:** நீதிநூலைக்கற்று அறிதலில்லாது அஞ்சும் பகைவரைப் பெற்றால் அவரைப் பொருது வெல்வார்க்கு உயர்ந்த இன்பங்கள் நீங்கா.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**மணக்.** 'அறிவில்லாத அச்சமுடைய பகைவர்' எனப் பெயரெச்ச அடுக்காகக் கொண்டுபொருள் உரைப்பர். **பரிதி.** 'அறிவிலான். அஞ்சான் பகைவர்ப்பெறின்' எனப் பாடங்கொண்டிருப்பர் போலும். மற்றும், சில சொற்களுக்குப் பொருளும் எழுதினாரல்லர்.

---

1 அடர்க்க — நெருக்க 2. சேண் — தொலைவு

3. உபாயம் — சாம தான பேத தண்டம் என்னும் நால்வகை பகை தொலைக்கும் வழிகள்

4. 'சேணிடைய' என்றும் பாடமுண்டு

**காளி** .........'இன்பம் எவ்விடத்தெனின், அறிவில்லார்-முன் தீங்கு தெரிந்து அறிவு இல்லாதவரும், எதிர்காணின் அஞ்சுபவரும் ஆய பகையைப் பெற்றால் அவ்விடத்து' எனப் பொருள் கொள்வர். இவ்வுரையும் ஒரு தொடராக அமைந்தது. **பரிமேலழகரும்** பிறரும் கருத்தான் இதனை ஒத்தவர்களே. இவருடைய உரைநடை தனித்தது. அவ்வளவே. **மணக்.** 'அறிவில்லாத' எனப் பொது-வகையாற் கூறியதைக் **காளிங்கர்**. 'வருந்தீங்கை முன்னறியாதவர்' என்றார். **பரிமேலழகர்**, 'நீதியைறியாதவர்' என்றார். **பழைய உரை** 'நீதிநூலையறியாதவர்' என்றது. **பரிமேலழகர்** 'சேணின்பம்' எனக்கூட்டி 'உயர்ந்த இன்பங்கள்' என்பர். **குறட்** இடக்கை முறையில் கொண்டு நெடுந்தூரத்தில் நீங்கி நில்லர், அண்மையிலேயே ஆம் என்பார் உரைகள் சிறந்தன. **'அறிவிலா அஞ்சும் பகைவர்'** என்பதைப் பெயரெச்ச அடுக்காகக் கொண்டு-ரைப்பர் பலர். அறிவில்லாது அஞ்சும் பகைவர் என்பதன் வினை எச்ச ஈறுகெட்டதாகக் கொண்டு அறிவின்றி அஞ்சும் பகைவர் எனலும் பொருந்துவதாம்.

இவ்வுரை பகைக்கப்படுமவன் இழிவு கூறி எச்சரிக்கிறதேயன்றி நேரே பகைமாட்சி கூறுவதாகாது.

ஓ) ஒப்புமைப்பகுதி :

**அறிவிலா அஞ்சும் பகைவர் :**

முன்னலிந் தாற்ற முரண்கொண் டெழுந்தாரைப்
பின்னலிதும் என்றுரைத்தல் பேதைமையே-பின்னின்று
காம்பன்ன தோளி கலங்கக் கடித்தோடும்
பாம்புயற் கொள்வாரோ இல். —(பழ. நா., 287

**87.10. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி. (870)**

**உரைப்பகுதி :**

**அ) மணக். :** கல்லாதானுமாய், வெகுளியுடையானுமாய், சிறு-பொருளாளனுமாகிய பகைவனை எந்நாளும் ஒளி பொருந்தாது, எ-று.

**ஆ) பரிதி .:** கல்வியில்லாதவன். வெகுளிஉள்ளவன், அற்ப-குணன், இவர்களைக் கீர்த்தி வேண்டியிராது, எ-று.

**இ) பரிப்.:** கல்லாதானும் ஆய் வெகுட்சியும் உடையனும் ஆய்ச் சிறு பொருளாளனும் ஆகிய பகைவனை எல்லா நாளும் ஒளி பொருந்தாது, எ-று.

மேல் தம்மைப் பாதுகாவாத எளியாரைப் பகை கொள்ளலாம் என்றார்: அவர் எத்தன்மையர் என்றார்க்கு அவரது இலக்கணம் கூறுவார் முற்பட இவை மூன்றும் உடையார்க்கு விளக்கம் உண்டாகாது ஆகலின் அவரொடு பகை கொள்ளலாம் என்றார்.

**ஈ) காளி .:** சிறந்த நூல்களைக் கல்லாதானுமாய்க் கண்டாரோடு எல்லாம் வெகுளுவானுமாய் எஞ்ஞான்றும் இழிபொருள் விரும்பி இருப்பானை மேவமாட்டாது[1] புகழ், எ-று.

சிறுபொருள் என்பது இழிவுபொருள். ஒளி என்பது புகழ்.

**உ) பரிமேல் .:** நீதி நூலைக் கல்லாதானொடு பகைத்தலான் வரும் எளிய பொருளை மேவாதானை, எஞ்ஞான்றும் புகழ் மேவாது, எ-று.

சிறுபொருள்—முயற்சி சிறிதாய பொருள்[2]. நீதியறியாதானை வேறல் எளிதாயிருக்கவும் அது மாட்டாதானை[3] வெற்றியான் வரும் புகழ் கூடாது என்பதாம் ஆகவே இச்சிறிய முயற்சியான் பெரிய பயன் எய்துக என்றவாறாயிற்று. இதற்குப்[4] பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாறாதன் மேலும்[5] ஓர் பொருட்டொடர்பு படாமல் உரைத்தார் இவை மூன்று பாட்டானும் அதனினாய பயன்[6] கூறப்பட்டது.

**ஊ) கவிராசர் .:** நீதி நூலைக் கல்லாதவனுடனே பகைபண்ணிக் கொள்ளுகிறதினாலே வரப்பட்ட கொஞ்சமான பொருளைக் கைக்கொள்ளாதவனை என்றும் கீர்த்தியடையாது, (எ-று).

**ஏ) பழைய 2 :** நீதி நூலைக் கல்லாதானொடு பகைத்தலான் வரும் எளிய பொருளை மேவாதானை எஞ்ஞான்றும் புகழ் மேவாது.

---

1. மேவமாட்டாது — பொருந்தாது
2. முயற்சி சிறிதாய பொருள் — சிறுமுயற்சியால் வந்த பெரும்பொருள்
3. அது மாட்டாதானை — நீதியறியாதவனை; அதாவது வெல்லமாட்டாதவனை
4. இதற்கு — இக்குறளுக்கு 5. மாறு ஆதல் மேலும் — மாறுபடுதல் மேலும்
6. அதனினாய பயன் — பகைமாட்சியாலாய பயன்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்.** 'கல்லான்' முதலியவற்றை முற்றெச்சமாக்கி 'ஒல்லானு'க்கு அடையாக்குவர் **பரிதி**. 'கல்லான், வெகுள்வான் சிறுபொருளாளன் இவர்களைக் கீர்த்தி வேண்டியிராது' எனத்-தனித்தனி முடிப்பர். இதுவும் முன்னதை ஒத்ததே. **காளி**. 'ஒல்லான்-இழிபொருள் விரும்புவான்' என்பர். இது கருத்துப் பொருளேயாம் இவருரையும் மெலியான் இயல்பு கூறுவதாய் **மணக்குடவரை** ஒத்திருக்கிறது

**பரிமேல்:** கல்லான்—நீதி நூல்களைக்கல்லான். சிறுபொருள் முயற்சி சிறிதாயபொருள். அதாவது இழிவு பொருள்' என்பர். மேலும் இடமும் இன்னார் உரையென்றுஞ்சுட்டாது இயைபில்லன உரைத்தார் என்பர். இவர் உரை ''கல்லான், வெகுளும் சிறு—பொருள்'' — 'கல்லாதானொடு வெகுளுதலான் வரும் எளிய பொருள்' என வெகுளும் சிறுபொருளை. காரணப்பொருளில் வந்த பெயரெச்-சமாக்கி வெகுளுதலான் வரும் சிறுபொருள் எனச் சில சொல் வருவித்து உரைத்தார். மேலும் இவர் உரை 'வெகுளியை வெகுளி-யானாம் பகைத்தற்கு ஆக்கியது. கல்லாதானொடு பகை கொண்டு சிறுபொருளை எய்துக- அங்ஙனம் எய்தாதானைப் புகழ்மேவாது' என்கிறது. இது அதிகாரத்தொடு இயைபுடையதாப்போது 'அமைவிலன்' என எதிர்மறை வாய்பாட்டானும், 'வெகுளி நீங்கான்' 'காணாச் சினத்தான்' என்றும், 'அறியான்' என்றும் கூறுகிற ஆசிரியர் ஆணையை உட்கொண்டு உரைத்த **மணக்குடவர் காளிங்கர்** உரைகள் எங்ஙனம் இயைபிலவாகும் என்பதையும் எண்ணி, இங்ஙனம் **பரிமேலழகராற்** சுட்டப்பெறுவார் இன்று கிடைத்த உரை அல்லாத பிற உரைகளையாகலாம் என்று அமையலாம்.

ஏனோர் உரைகள் சிறுபகை இயல்புகள் பலவற்றைக்கூறி அவனை ஒளி பொருந்தாது என்கின்றன. அவற்றுள் வெகுளும்—வெகுள்வான் எனச் செய்யுமென் முற்றைப் பெயராக்கி 'வெகுள்வான்' என்றும் 'சிறுபொருள்' என்பதற்குப் 'பொருளுடையான்' என உடைமையின் பெயரை உடையானுக்கு ஆக்கியும், இம் மூன்று குணமும் உடையானைப் புகழ் பொருந்தாது. ஆதலால் அவனொடு பகை கொள்ளலாம். அது மாண்புடைய பகையேயாகும் என்றனர்.

## 87. பகைமாட்சி

| | வலியார்க்கு | அன்பிலன் | அஞ்சும் | நீங்கான் | வழிநோக்கான் | காணாச் சினத்தான் | கொடுத்தும் | குணனிலனாய்க் | செறுவார்க்குச் | கல்லான் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 7 | 9 | 8 | 10 | 4 | 5 | 6 | 3 | 2 |
| பரிதி. | 10 | 8 | 3 | 6 | 2 | 4 | 5 | 1 | 7 | 9 |
| பரிப். | 1 | 7 | 8 | 9 | 10 | 4 | 5 | 6 | 3 | 2 |
| காளி. | 2 | 10 | 9 | 7 | 6 | 5 | 8 | 1 | 4 | 3 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

87-வது அதிகாரம் 'பகைமாட்சி' முற்றிற்று.

# 88. பகைத்திறம் தெரிதல்

அ) மணக் .: பகைத்திறந் தெரிதலாவது பகையின்கண் செய்யுந் திறமாராய்தல், மேல், பகைகொண்டால் வெல்வாரையும் தோற்பாரையும் கூறினார். இனி அப்பகைவர்மாட்டுச் செய்யுந்திறம் எண்ணிச் செய்ய வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

இ) பரிப் .: பகைத்திறம் தெரிதல் ஆவது பகையின்கண் செய்யும் திறன் ஆராய்தல். மேல் பகை கொண்டால் வெல்வாரையும் தோற்பாரையும் கூறினார் : இனி அப்பகைவர்மாட்டுச் செய்யும் திறன் எண்ணிச் செய்ய வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் ,: அஃதாவது மாணாத பகையை[2] ஆக்குதல் குற்றமும், முன் ஆகி நின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கண்[3] செய்வதும், ஏனைக் களைதற்பாலதன்கண் செய்வனவும், களையும் பருவமும்[4], களையாக்கால் படும் இழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல். இரட்டுற மொழிதல்[5] என்பதனால் பகையது திறமும் பகையிடத்தாக்கும் திறமும் என விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணாப் பகையவாகலின், இது பகை மாட்சியின்பின் வைக்கப்பட்டது.

---

1. மேல் — பகைமாட்சியில் 2. மாணாத பகை — நன்மை பயவாத பகை

3. அவற்றின்கண் — நட்பாக்குவது, அயலாக்குவதுமாகிய இரண்டின்கண்

4. களையும் பருவம் — அழிக்கும் காலம்.

5. இரட்டுற மொழிதல் — ஒரு தொடரை இருபொருள்படச் சொல்லுதல். பகைத்திறம் தெரிதல் என்னும் தொடரை பகையினது திறத்தை அறிதல் எனப்பொருள் செய்து ஆறாம் வேற்றுமைத் தொகையாகவும் பகையிடத்து ஆக்கும் திறம் என ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகவும் கொள்ளப்படுதல் காண்க

ஊ) **கவிராசர் :** அஃதாவது-மாணாத பகையை உண்டாக்கு-கிறதினாலே வருகிற குற்றமும், முன்னுண்டாயிருந்த பகையை நட்பாக்குகிறதும், அவற்றில் செய்கிறதும், தவறாகிறதும், அதனை விடுகிற காலமும், அந்தப் பகையை விடாவிட்டால் வருகிற குற்ற-மும் இத்திறங்களை ஆராய்தல், (எ—று).

எ) **பழைய 2 :** அஃதாவது, பகையினது வகையறிதல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய உரைகளிற் சில 'பகையின் வகையறிதல்' 'பகையின்கண் செய்யுந் திறம் ஆராய்தல்' என்கின்றன. இவற்றினும், இவ்வதிகாரத்தின் வரும் பத்துக் **குறளின்** கருத்தையும் தழுவிப் பகுத்துக் கூறும் உரைகள் சிறந்தன. அவ்வகையில் 'பகைத்திறம்' என்ற தொடர்மொழியைப் 'பகையது திறம்' என ஆறாம் வேற்றுமைக் கொண்டும், ''பகையிடத்தாக்கும் திறம்' என ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டும் என இரண்டாக்கி இதனை ஏழுவகை-யாகப் பகுத்து, அவற்றுள் 'மாணாத பகையை ஆக்குதல் குற்ற-மாதலை' இவ்வதிகாரத்து முதன் மூன்று குறள்களாலும், 'பகையை நட்பாக்க வேண்டும்' என்பதை நான்கு ஐந்தாம் **குறளாலும்,** 'நொதுமலாக்குதலை' ஆறாம் குறளாலும் 'செய்வனவள்றை' ஏழாங்-குறளானும், 'களைவனவற்றை' எட்டாம் குறளாலும், 'களைதற்-குரிய பருவத்தை' ஒன்பதாங் குறளாலும், 'களையாக்கால் உளதாகும் இழுக்கைப்' பத்தாங்குறளாலும் விளக்குகிறார் என எழுதுகின்ற உரைகள் சிறந்தன. இங்ஙனமே ஏனைய அதிகாரங்கள் அனைத்-திற்கும் எழுதியிருந்தால் நல்லது. இவற்றுள், 'நொதுமலாக்கு தலை' மறந்து ஆறாக்குவர் **கவிராசர்.**

பின்னுரைகளில் **வரத.** 'பகைவரின் திறமையறிதல் தான் வேறொருவனுக்குப் பகைவனாக அமைந்த பொழுது எதிரியை வெல்வதற்குரிய தன்னுடைய ஆற்றல் வகைகளையறிதலும், ஆகிய இரண்டுமாம். பகைமாட்சியும் பகைத்திறந்தெரிதலும் ஏறக்-குறைய ஒன்றாயினும், பகையாக ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களைப் பகைமாட்சியிலும், அறிய வேண்டியமுறைகளை மீண்டுங் கூறினார் எனல் சிறந்தது என்பர்.

**இராம.** 'பகைமையின் தன்மையை அறிதல். அதாவது பகையே யில்லாதிருப்பது நல்லது ; பகைநேரின் அவற்றின் தன்மைகளை யறிந்து, தற்காப்பு வன்மைகளை மிகுதிப்படுத்துக யென்பதும் சமயோசிதமாக நடந்து பகையே யில்லமாற் செய்வது என்பதும் ஆம்' என்பர்.

**குழந்தை** 'பகைவரிடம் நடந்துகொள்ள வேண்டிய வகையை யாராய்ந்தறிதல்' என்பர். **மு.ரா.அரு. கவிராசரை** ஒத்து உரைப்பர்.

**தேவநேயர்** 'பகைபற்றிய பல்வேறு கூறுகளான பகையின் இயல்பு, பகைக்கப்படத்தக்கவர் யார்? பகைக்கும் நிலைமை, பகையை நட்பாக்கும் திறன், பகைவரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை, பகை களையும் பருவம் ஆகிய இகல் பகைமாட்சிகளில் கூறப்படாத பல செய்திகளைக் கூறுவது இது' என்பர். இவற்றுள் சில **பரிமேலழகர், கவிராசர்** கருத்திலும் வேறாதல் காண்க.

இங்ஙனம் கருத்துமாற்றமுள்ள அதிகார வரைவிலக்கணங்களை இவ்வதிகாரக் **குறட்பாக்களின்** கருத்தொடு ஒப்பிட்டுப் பகுத்துக்கொள்ள ஒத்தவையே ஆசிரியர் கருத்து எனலாகும். சிறந்ததுமாகும்.

88.1. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. (871)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** பகை என்று சொல்லப்படுகின்ற குணமில்லாததனை, ஒருவன் விளையாட்டிக்கண்ணும் விரும்பற்பாலதன்று, எ-று.

இஃது எவ்விடத்தும் பகை கோடல் தீது என்றது.

**ஆ) பரிதி :** பண்பிலாத பகையை அதனாலே சில வகை உண்டாகிலும் வேண்டாம், எ-று.

**இ) பரிப்.:** பகை என்று சொல்லப்படுகின்ற குணம்இல்லாததனை. ஒருவன் விளையாட்டின்கண்ணும் விரும்பற்பாலது அன்று, எ-று.

இஃது எவ்விடத்தும் பகை ஆகாது என்றது. பகை ஆகாது எளிமையால் எண்ணம் ஆயிற்று.

ஈ) **காளி.**: பகைமை என்று சொல்லப்படும் நெறி இல்லதனை ஒரு மக்கட் பண்புடையோன் தான் ஒருவரோடு நகையாடியும் செய்ய வேண்டற்பாலது அன்று: எனவே என்றும் குறிக்கொண்டு இது செய்யற்க என்பது பொருளாயிற்று, எ-று.

உ) **பரிமேல்.**: பகை என்று சொல்லப்படும் தீமை பயப்பதனை, ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதல் இயற்கைத் தன்றுநீதிநூல், எ-று.

மாணாதபகையை ஆக்கிக்கோடல் எவ்வாற்றானும் தீமையே பயத்தலின் 'பண்பிலது'[1] என்றும், அதனை[2] விளையாட்டின்கண் வேண்டினும் செற்றமே விளைந்து மெய்யாமாகலின் 'நகையேயும்' என்றும், வேண்டாமை தொல்லையோராது துணிவு என்பார் நீதி நூல் மேல்வைத்தும் கூறினார். அப்பெயர்[3] அவாய் நிலையான் வந்தது.

ஊ) **கவிராசர்**: பகையென்று சொல்லபடுகின்ற பொல்லாங்கை யொருவன் விளையாட்டுக்காகிலுஞ் செய்கிறது நல்லதன்று எ-று.

ஏ) **பழைய 2**: பகையென்று சொல்லப்படுந் தீயதனை ஒருவன் விளையாட்டினிடத்தும் விரும்புவது அன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் : (871)

**'நகை–விளையாட்டு' மணக்**; நகைவிளைக்கும் விளையாட்டை நகை என்றனர் இவர். 'நகையாகவும்' என்றனர் **காளிங்கர்.** **'பண்பிலது–குணமில்லாதது மணக்.**; 'நெறியல்லாதது' **காளி.**; 'தீமை பயப்பது' **பரிமேல்.**; 'பொல்லாங்கு' **கவிராசர்**, **பழைய**; மிக்க கருத்து மாற்றமில்லாத **குறளிது.**

ஒ) ஒப்புமைப்பகுதி:

**பகை என்னும் பண்பிலதனை :**

**யாரோ டும்பகை கொள்ளல னென்றபின்**

1. **'பண்பிலதனை' என்றும் பாடமுண்டு.**
2. அதனை – மாணாத பகைவரை
3. அப்பெயர் - நீதிநூல் என்னும் பெயர்

போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல் செல் லாதது தந்தபின்
வேரோ டுங்கெடல் வேண்ட லுண்டாகுமோ. -கம்ப ,1508

88.1. வில்லேர் உழவர்[1] பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர்[2] பகை. (872)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** வில்லை ஏராக[3] உடைய பகைவரோடு பகை கொளினும், சொல்லை ஏராக உடைய உழவரோடு பகை கொள்ளா தொழிக, எ—று.

**ஆ) பரிதி .:** வில்லாட்களுடனே பகை கொள்ளினும் சொல்ல வல்லவனுடனே பகை கொள்ளக்கடவான் அல்லன், எ-று

**இ) பரிப் .:** வில்லை ஏர் ஆக உடைய உழவரோடு பகை கொள்ளினும் சொல்லை ஏர் ஆக உடைய உழவரோடு பகை கொள்ளாது ஒழிக, எ—று.

இஃது அரசனோடு பகை கொளினும் அமைச்சரோடு பகை கொள்ளல் ஆகா என்றது.

**ஈ) காளி :** நட்புக்கொள்ளாது வில் வேந்தருடன் ஒருவர் பகை கொளினும் கொள்ளற்க யாது எனின், கற்று உணர்ந்த சான்றோராடு பகை, எ-று.

வில்லேருழவர் என்பது வில்வேந்தர் என்பது. சொல்லேருழவர் என்பது கற்று உணர்ந்த சான்றோர் என்றது.

**உ) பரிமேல் .:** ஒருவன் வில்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொண்டானாயினும், சொல்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக, எ-று.

சொல் ஆகுபெயராய் நீதிநூல்மேல் நின்றது.[4] வீரம் சூழ்ச்சி என்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரோடு பகைகொண்டால் கேடுவருதல் ஒருதலையன்று; வந்ததாயினும் தனக்கேயாம்; ஏனைச் சூழ்ச்சியுடையாரோடாயின் தன்வழியின் உள்ளார்க்கும் தப்பாது

1 வில்லோர் உழவர் — வீரர்
2 சொல்லேர் உழவர் — அமைச்சர், சொல்லையும் வில்லையும் ஏராக உருவகித்தவாறு
3. ஏர் — கலப்பை
4. சொல் என்பது சொல்லால் ஆகிய நீதிநூலை உணர்த்துதலால் கருவி ஆகுபெயர்

வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க என்றார். உம்மை யான் அதுவும் ஆகாமை பெறுதும். இரண்டும் உடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவகவிசேடம்.[5]

ஊ) **கவிராசர் :** ஒருவன் வில்லை உடையவர்களாகிய ஆயுதங் களைப் பிடித்திருக்கிறவர்களுடனே பகை பண்ணிக் கொண்டாலும், சொல்லையுடைய வித்வான்களுடனே பகைகொள்ள வேண்டாம், எ-று.

ஏ) **பழைய 2 :** ஒருவன் வில்லை ஏராக உடைய உழவரொடு பகை கொண்டானாயினுஞ் சொல்லை ஏராகவுடைய உழவரொடு பகைகொள்ளாது ஒழிக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

### 'சொல் ஏர் உழவர்'

'சொல்லையே ஏராகக் கொண்டு உழுது பயன் விளைவிப்பார்' எனப் பொதுவகையில் கற்றுவல்லோர் அனைவரையுங் குறிக்கு மாயினும், அரசற்கு நீதிபுகட்டும் ஐம்பெருங்குழுவின் உள்ளாரைச் சிறப்பாகக் குறிக்கும் என்பதையுட்கொண்டு **பரிமேலழகர்** கூறும் 'சொல் ஆகு பெயராய் நீதிநூன்மேல் நின்றது' என்றது விளக்கம். 'அரசவையிருந்து அறிவிக்கும் அமைச்சரைச்' சிறப்பாகச் சுட்டி நிற்கிறது எனலாம். இதற்கு, 'நாநலம்' (641) என்னுங்குறளில் **பரிமேலழகர்** எழுதும் விளக்கத்தை எடுத்துக்காட்டி அமைச்சரையே குறிப்பதாகும் என்று எழுதிய உரைவேற்றுமை ஆசிரியர் கருத்தும் அரண் செய்வதாகும். சொல்லேருழவர் பகை கூடாது என்பதற்குப் **பரிமேலழகர்** காட்டும் ஏது தனிச்சிறப்புடையது.

**தேவநேயர்** 'சொல் ஏருழவர்—புலவரும் அரசியலறிஞரான அமைச்சரும்' என்பர். சொல்லையும் வில்லையும் ஏராக உருவகிக் தற்கும், அவைகளை உடையாரை உழவர் என்றதற்கும் இவர் தரும் விளக்கங்களும் எடுத்துக்காட்டுகளும் அறியத்தக்கவை.

---

5. ஒருபொருளின் அடையை உருவகஞ் செய்து அதனால் அப்பொருளையும் உருவகஞ் செய்வதாம், வீரர்க்கு அடையாயுள்ள வில்லையும் அமைச்சர்க்கு அடையாயுள்ள சொல்லையும் ஏராக உருவகஞ் செய்து அதனால் அவர்களை உழவராக உருவகஞ் செய்தலை காண்க.

**இராம.** 'சொல்லேருழவர்-சொல்லுஞ் சொல்வல்லாராகிய அறிஞர் களையே குறிப்பது என்பர். **சபாபதி, சாமி.சிதம்.** முதலிய ஆசிரியர்கள் அறிஞர்களையே கருதுவர்.

**வரத.** உழவுக்கும் போருக்கும், பொதுத்தன்மையை விளக்கி எழுதிய இவர் சொல்—வில் இவற்றிற்கு எழுதாமை மட்டுமன்றி, சொல்லுக்கும் வில்லுக்கும், இவற்றை ஏர் என்று உருவகித்தமைக்கும் விளக்கந்தந்திருந்தால் நலமாகும்.

**வரத.** உழவு-களைகளை யகற்றி விதைத்த விதைகளைப் பயன்தரச் செய்யும் தொழிலாகும். போர் பகையைக் களைந்து சமுதாயத்தின் நன்மையை வளர்க்கும் தொழில், சொல் என்பது அறியாமை களைந்து அறிவை வளர்க்கும் தொழில் ஆகும். அதனால் மூன்றும் உழவு என்று ஒன்றாகப் பேசப் பெற்றன என்பர். 'போர்' என்ற குறிப்பு இக்குறளில் இல்லை. சொல் பெயராமே யன்றித் தொழிலாகாது. இம்மூன்றையும் உழவு என்றதால் குறளின் தெளிவுநிலை மாறிக் குழப்பமாகிறது ஆதலால் சொல்லும் வில்லும் ஏர்; அவற்றை யுடையார் உழவர். அவர்களின் தொழில் போரும் — சூழ்ச்சி செய்தலும் ஆம் எனக் கொள்ளும் பரிமேலழகர் தரும் விளக்கம் தகவுடையது.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**வில்லேருழவர் :**

| | |
|---|---|
| வில்லேருழவர் வெம்முனைச் சீறூர் | — நற்., 3:5 |
| வில்லுழுதுண்மார் | — புறம். 170:4 |
| வில்லேர் வாழ்க்கை | — புறம்., 331:2 |
| வில்லேர் உழவின் நின் நல்லிசை | — புறம்., 371:13 |
| வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர் | — அகம்., 35:6 |
| வானம் வேண்டா வில்லேருழவர் | — அகம்., 193:2 |
| மாரி வளம்பெறா வில்லேருழவர் | — சிலம்பு., 11:210 |
| வில்லேருழவர் | — பெருங்., 1;52;26 |
| கோன் கொள்வே லுழவ ——— | — கம்ப., 659 |

**வில்லேருவனும் சொல்லேருழவனும்**

| | |
|---|---|
| வரிசிலை யுழவனும் மறையுழவனை | — கம்ப., 1715 |

**முற்றும்**

வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பின் சொல்லன்பே மேலதிகம் — வில்லம்பு
பட்டதடா என்மார்பில் பாண்டியா நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல். — தனிப்.

பாரம் பரிக்க வேண்டினுறு பகைநட் பாகக் கொண்டொழுகல்
வீரம் தணியா ரொடுபொரினும் விதிநூ லினரோடு இகலாமை
— விநா.அரசி., 184

## ஓ) மேற்கோள்பகுதி :

**மயிலை .:** உழவு என்பது உடம்பொடு கூடிய உயிர்த்தொழிற் பண்பு என்பதற்கு மேற்கோள். — நன்.,432

**பெருந் .:** 'இது வில்லினை ஏராகவுடைய உழவர் என்றும் சொல்லினை ஏராகவுடைய உழவர் என்றும் உருவகமாக்கி இருவரையும் பொருட்டொளிவால் உவமித்தலினால் உருவகவுவமை, என்பர். — வீர., 177

**காரி .:** உவமையுள் ஒருவகைக்கு மேற்கோள். — மாற., 122

**சுப்பிர .:** ஏது உருவகத்திற்கு மேற்கோள். — தண்டி., 39

88.3. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். (873)

## உரைப்பகுதி :

அ) **மணக்.:** பித்து உற்றவரினும் அறிவிலன் ; தனியனாயிருந்து பலரோடு பகை கொள்ளுமவன், எ–று.

இது பலரோடும் பகை கொள்ளலாகாது என்றது.

ஆ) **பரிதி .:** ஏமுற்று ஏழையாய்த்திரிவன், எல்லாருடனும் பகை கொள்பவன், எ–று.

இ) **பரிப்.:** பித்து[1] உற்றவரினும் அறிவு இலன் : தனியன் ஆய் இருந்து பலரோடும் பகை கொள்ளும் அவன், எ–று.

1. பித்து — பைத்தியம்

இருவரோடு பகை கொள்ளுதல் நீதி அன்று ஆகப் பலரோடு பகை கொண்டவன் பித்தனோடு ஒக்கும் என்றவாறு ஆயிற்று. இது பலரோடு பகை கோடல் ஆகாது என்றது.

ஈ) **காளி.**: பேய்கொண்டவரினும் சாலப் பித்தன் யாவன்; எனின் இங்ஙனம் தான் ஒருவனாய் இருந்து மற்று இது நமக்கு வாயாது என்று கருதாது பலரொடும் தான் பகை கொள்ளக் கருதுபவன், எ-று.

ஏமுற்றவன் என்பது மதிமயக்கு உற்றவன் என்றது.

உ) **பரிமேல்.**: தான் தனியனாய்வைத்துப் பலரோடு பகைகொள்வான், பித்துற்றாரினும் அறிவிலன், எ-று.

தனிமை-சுற்றமும், நட்பு, படை முதலிய [2]இன்மை மயக்கத்தால் ஒப்பராயினும் ஏமுற்றவர் அதனால் தீங்கு எய்தாமையின், தீங்காய்தலும் உடைய இவனை அவரினும் ஏழை என்றார். தீங்காவது, துணையுள்ளவழியும் வேறல் ஐயமாயிருக்க அஃது [3]இன்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல். இவை மூன்று பாட்டானும் பகை கோடற்குற்றம் பொதுவினும் சிறப்பினும் கூறப்பட்டது[4].

ஊ) **கவிராசர்** : தான் தனியனாய்இருந்து, பலருடனேயும் பகைபண்ணிக் கொள்ளுகிறவன், பயித்தியக்காரனிலும் அறிவில்லாதவன் எ-று.

ஏ) **பழைய2** : தானொருவனாகிப் பலரோடும் பகை கொள்வான் பித்துற்றாரினும் அறிவிலன்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**மணக்., பரிமேல்., பரிப்.** முதலானோர் 'ஏமுற்றவரினும் ஏழை' என்பதற்குப் 'பித்தனினும் அறிவிலி' என்றனர். 'பித்தனோடு ஒக்கும்' எனக் கருத்துப் பொருள் கண்டனர் **பரிதி**; 'பேய் கொண்டவரினும் சாலப்பித்தன்'; 'மதிமயக்குற்றவன்' என்றனர் **காளிங்கர்**. 'ஏ(ம)ம்-பேய்' என்பதும், 'ஏழை-மிகப் பித்தன்' என்பதும் இவர் கருத்து. இவை சொற்பொருளல்லாதன.

2. முதலிய என்றமையின் தன்வலி, துணைவலி உறுதியாய அரண் அமைச்சர் புரோகிதர்களின் ஆலோசனை கேட்டல் இவைகளையும் கொள்க
3. வேறுவேறு — தனித்தனியாக
4, பொதுவகையாகக் கூறியது முதற்குறள். சிறப்புவகையால் கூறப்பட்டது இரண்டாம் மூன்றாம் குறள்கள்

இவற்றுள், 'ஏமம்' என்பதன் இடைக்குறையாகிய 'ஏம்' என்பதற்குப் 'பித்து', 'மதிமயக்கம்' என்ற உரையும் 'ஏழை - அறிவிலி' என்ற பொருளும் இயைந்தன. ஏனைனய திரண்ட கருத்துரையாமேயன்றி சொற்பொருளாகா **பரிப்பெருமாள்** 'பித்தனோடு ஒக்கும்' என்பதும் உறழ்ச்சிப் பொருள் தரும் 'ஏமுற்ற-வரினும் ஏழை' என்பதற்கு ஏற்புடையதன்று.

88.4. **பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு.** (873)

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** 'தங்குமுலகு' — பாடம்.

பகைவரை நட்புபோலக் கொண்டு ஒழுகவல்ல பண்புடை-யவன் பெருமையின் கீழே உலகம் தங்கும், எ-று.

இது பகை கொள்ளாமையால் வரும் பயன் கூறிற்று.

ஆ) **பரிதி .:** பகைவரைத் தன் உறவாகக் கொண்டு நடப்பானாகில் அவன் குடைக்கீழ் உலகம் அடங்கும், எ-று.

இ) **பரிப் .:** பகைவரை நட்புப் போலக்கொண்டு ஒழுக வல்ல பண்புடையவன் பெருமையின் கீழே உலகம் தங்கும், எ-று.

இது பகை கொள்ளாமையால் வரும் பயன் கூறிற்று.

ஈ) **காளி .:** பகை தானேவந்து மென்மை செய்யுங்காலத்து இரங்கிப் பின் தான் ஒருவன் பகைமை செய்யாது நட்பாகக்கொண்டு ஒழுகும் மரபுடையாளன் யாவன்? மற்று அவனது நெறிமைக்கண்ணே[1] நிலை நின்றது ஒழுக்கம், எ-று.

உலகம் என்பது ஒழுக்கம்.

உ) **பரிமேல் :** வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச் செய்துகொண்டு ஒழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே அடங்கிற்று இவ்வுலகு.

வேண்டியவழி என்பது ஆக்கத்தான் வந்தது[2]. வேறுபடுத்தல் -பகை நிலைமையின் நீக்குதல். ஒழுகல் - நீதிவழி ஒழுகல். பெருமை -பொருள் படை என இருவகைத்தாய ஆற்றல். அதன் வழித்தாதற்கு எஞ்ஞான்றும் திரிபு இன்மையின், அத்துணிவு பற்றித் 'தங்கிற்று' என்றார்.

---

1. நெறிமைக்கண் - நேர்மைக்கண் 2. ஆக்கம் ஈண்டு நட்பாகக் கருதுதல்

ஊ) **கவிராசர் :** பகை வரை எந்த விதத்தினாலேயும் தனக்குறவாகப் பண்ணிக் கொள்ளவல்ல ராசாவினுடைய குடையின் கீழே தங்கியிருக்கும் உலகம், எ-று.

ஏ) **பழைய 2 :** 'தங்குமுலகு' பாடம்.

நட்பாக வேண்டிப் பகையை வேறுபடுத்து நட்பாகச்செய்து நடந்து கொள்ளும் இயல்பையுடைய அரசன் பெருமையுள்ளே இவ்வுலகம் அடங்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'பகை நட்பாக் கொண்டொழுகும்'** என்ற தொடர்க்குப் பலவுரைகள் உள்ளன. 'பகைவனை நட்புப்போலக் கொண்டு ஒழுகவல்ல' **மணக்.**; 'பகைவனைத் தம்உறவாகக் கொண்டு ஒழுகவல்ல' **பரிதி.**; 'பகை தானேவந்து மென்மைசெய்யுங்காலத்து' **காளி.**; 'வேண்டியவழி பகையை வேறுபடுத்து தமக்கு நட்பாச் செய்து கொண்டு' **பரிமேல்.**; 'பகை வரை எந்த விதத்திலேனும் தனக்குறவாகப் பண்ணி' **கவிராசர்** 'பகையை வேறுபடுத்து நட்பாகச்செய்து' **பழையஉரை,** 'பகைவர்களையும் நட்பாகக் கருதி வாழும் தகுதி' **வரத.**;

இவ்வுரைகளில் மூன்று கருத்துக்கள் உள்ளன. 1. பகைவன் தானே நட்பாக வர அவனை ஏற்றுக் கொள்ளுதல். 2. தான் வேண்டியவழிப் பகைவனை நட்பாக்கிக் கொள்ளுதல். 3. பகைவனை நட்பு போலக் கொண்டொழுகுதல் என்பன. முற்கூறிய **பழைய உரை, வரத.** இருவர் கருத்தும் முன்னவற்றுள் சிறிது வேறுபட்டன. **இராம.** 'பகைவரையும் நண்பராக்கி ஒழுகல்' எனக் கூறிப் **பரிமேலழகரை** மறுத்து, 'இந்நெறி அரசர்க்கு மட்டு மன்று; எல்லாருக்கும்' என்பர்.

'வேண்டியவழிப் பகையை நடபாகக் கொள்ளும் போதும், பகைவன் தானே வந்து நட்பாங்காலத்தும் பகைநட்பு ஆம் காலம் வருங்கால் முகநட்பு ஒரீஇ விடல் 'என்ற விதிப்படி நடத்தல் வேண்டும் ஆனால் உண்மை நட்பாகாமையைப் பிறர் உணர நடந்து கோடல் ஆகாது என்பதாம்.

**மு.கோ.** 'இன்னாமையை இன்பமெனக் கொள்ளுதல் போலப் பகையை நட்பாகக் கொள்ளல்' என்பர். துன்பமும் இன்பமும் நுகர்வோன் ஒருவனுடைய மனப்பண்பு. ஒருபோது இன்பமாயின

ஒரு போது துன்பமாயும் மாறுவதைத் காண்கும் ஆகலின் இன்பத்-துன்பங்கள் பொருளைப் பற்றியன அல்ல. நுகர்வோன் மனத்தைப் பற்றியன; மனக்கோள்; அவ்வளவே. பகை இருவர் மாட்டு நிகழ்-வதாய், ஒருவன் நட்பாக்கொள்ளினும், மற்றவன் மாட்டுப் பகை-யேயாயிருந்தலும் கூடுமாதலின், இருவரும் தம்மனத்தினை மாற்றிக் கொண்டாலன்றி இயலாதது ஒன்றாம் அதனாலேயே **பரிமேலழகர்** 'வேண்டியவழி' என ஒருசொற் பெய்து விளக்குவாராயினர். இருவரும் பகைமாறி நட்பானாலல்லது பயனின்றாய் சூழ்ச்சியாம் என்க.

**''தகைமைக்கண் தங்கிற்றுலகு''**

'பெருமையின் கீழ்', 'குடைக்கீழ்', 'நெறிமையின் கண்' 'பெருமையுள்ளே' உலகு நிற்கும் என்பது. இது 'கவிகைக் கீழ்த் தங்கும் உலகு', 'அடிதழீ இ நிற்கும் உலகு' என்பன போல் வதோர் சொன்னடை, 'உலகு அவன்வழி இயங்கும்' என்பது பொருள்.

88.5. தன்துணை இன்றால் பகைஇரண்டால்
தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. (875)

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** பகை இரண்டாய், தான் ஒருவனாய், தனக்குத் துணையும் இலனாயின், அப்பகை இரண்டினுள் ஒன்றை இனிய துணையாகச் செய்து கொள்க, எ-று.

இஃது இருவரோடு பகை கொள்ளலாகாது என்றது.

ஆ) **பரிதி .:** தனக்குத் துணையில்லாதபோது தன் மாற்றாற்கு இரண்டு பகை உண்டாகில் அவர்களில் பெலவானானவனைத் தனக்குத் துணையாகக் கொள்வர், எ-று.

இ) **பரிப் .:** பகை இரண்டு ஆய்த் தான் ஒருவன் ஆய்த் தனக்குத் துணையும் இல்லாதான் பகை இரண்டினுள் ஒன்றை இனிய துணை ஆகச் செய்து கொள்க, எ-று.

இஃது ஒருவரொடு பகை கொள்ளத் தகாது என்றது.

ஈ) **காலி .:** தன்னோடு நட்பாகிய துணை என்பது ஒன்று இல-தாயின், தனக்குப் பகை இரண்டு ஆயின், அன்னன் ஆகிய ஒருவன்

தான் இனியாதோ செயற்பாலது எனின், அப்பகை இரண்டின் ஒன்றை யாதானும் ஒருவாற்றான் தனக்கு இனிய துணையாகப் பிரித்துக் கொள்க, எ-று.

உ) **பரிமேல்** .: தனக்கு உதவும் துணையோ எனின் இல்லை, நலிவுசெய்யும்[1] பகையோ எனின் இரண்டு, அங்ஙனமாய் நின்றவழி ஒருவனாகிய தான் அப்பகை இரண்டனுள் பொருந்தியது ஒன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க, எ-று.

பொருந்தியது-ஏனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது அவ்வெல்லும் பொழுது திரிபின்றாகச்[2] செய்துகொள்க என்பார், 'இன்துணையா' என்றார். ஆல்கள்-அசை. இவை இரண்டு பாட்டானும் நட்பாக்கற்பாலது கூறப்பட்டது

ஊ) **கவிராசர்** .: தான் தனியனாய்த் துணையில்லாமல் இருக்-கையிலே, பகைவர் இரண்டு பேரானால், அப்பகை இரண்டனுள் தனக்குச் சரிப்போன ஒருவனை உறவுபண்ணிக் கொண்டு, மற்றொரு வனைச் செயிக்க வேணும், எ-று.

ஏ) **பழைய 2**: தனக்குத் துணையோ இல்லை; பகைவரோ இருவர்; தானோ ஒருவனாகில், பகைவர் இருவரிற் பொருந்திய ஒருவனைப் பிரித்து அப்பொழுது இனிய துணையாகக் கொள்க

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்குடவர்** ''இரண்டாய்'' 'ஒருவனாய்' என உரைத்-தலான் இவர் கண்ட பாடம் 'இன்றாய்' 'பகையிரண்டாய்' என்பன போலும்.

**பரிதி**. 'தன் மாற்றார்க்கு இருபகையுளதாயின் வலியுள்ள ஒன்றைத் தனக்குத் துணையாகக் கொள்க' என்பர். ஏனையோர் 'தன்பகையிரண்டிலொன்றை நட்பாக்குக' என்பர். இவற்றுள் தனக்-குத் துணையில்லாதபோது, தன் பகையிரண்டில் ஒன்றைத் தனக்குத் துணையாக்கு முன்னரும் பின்னரும் கூறப்பெறுவதாகலின் அதனை விட்டுப் பகைவனது பகைகளின் திறம்தெரிந்து அவற்றுள் ஒன்றை அவனைவிட்டுப்பிரித்து நட்பாக்கித் 'தன்துணையாகக் கோடலும் போர் முறைகளிற் சிறத்தலின் அதனைக் கூறினார் என்றலும் பகைத்-திறந்தெரிதலேயாகும். ஒராற்றாற் சிறந்ததுமாம் என்க. **காளிங்-கரும்** இக்கருத்தினரேயாதலுங் காண்க,

1. நலிவு செய்யும் — வருத்தம் செய்யும்
2. திரிபின்றாக — மாறுபாடில்லாததாக

**பரிமேல்.** தன் பகை இரண்டிலொன்றைக் கோடலையே கூறுவர். ஏனோரும் இங்ஙனமே. **இராம.** 'துணைவலியில்லாத தனியன் ஒருவன் (போர் மூண்டபோது) தனக்குத் துணையாவாரை- யோ அப்போதைய பகைவரையோ இருவருள் ஒருவரைத் தனக்குத் துணையாக்கிக் கொள்க' என்பர். இதில் துணைவரைத் துணையாக்- கிக் கோடல்' என்பது பொருளற்ற உரை. 'அப்போதுற்ற பகை வரோ' என்பதால் இனிவர இருக்கும் பகைவரும் முந்தைய பகை வரும் பலருண்மை பெறுதலின் 'பகையிரண்டால்' என்பதற்குத் 'தனக்குப் பகை இருவரால்' என்ற உரை எங்ஙனம் ஏற்புடைய- தாகாது? இன்றால் என்பது இன்றேல் எனப் பொருள் தருமாறு யாங்ஙனம்? என்பன போன்ற பல இடர்ப்பாடுகள் எண்ணப் பெறு- மாதலின் வலிந்து கொண்டும் ஏற்புடையதாகாதாம் என்க.

**வரத.** 'தான் ஒருவன்; பகைவர் இருவர்; (என் செய்வது) இத்தகை சூழலில் பகைவனை நட்பினனாகவோ அல்லது அவன் துணைவனைத் தன்துணைவனாகவோ கொள்ளுதல் சிறப்பு' என்பர். இதில் பகைத்துணைவனும் பகைவனாகவே கருதப்பெற்றுப் 'பகை- யிரண்டால்' என்பதனுள் அடங்குதலானும், 'அவன்துணைவன்' என்பதற்கு ஈண்டுச் சொல்லின்மையாலும் இவ்வுரை ஏற்புடைய தன்று. தன்பகையிரண்டில் ஒன்றை நட்பாக்கோடலானும் அவன் பகையிரண்டில் ஒன்றைத் தன்னட்பாக் கோடலானும் எய்தும் பயன் ஒன்றேயாதலாற் சிறப்பில்லையாம்; அன்றியும் தன்துணை என்- பதனையடுத்து பகையிரண்டால் என்பது தன்பகையிரண்டால் என அண்மை நிலையாற் பொருள் தருமேயன்றி அவன் பகையிரண்- டெனப் பொருள்தருதற்கு யாதோரியைபின்மையானும் அவன் பகையைத் தம்துணையாக்கல் பகைத்திறமாகாது என எண்ணி விடுக்க. ஆதலால் தானொருவனாயிருப்பவன், தனக்குத் துணை- யின்மையைக் கருதி தன் பகையிரண்டில் ஒன்றைத் தனக்கு இனிய துணையாகக்கொள்க என்ற கருத்தமைந்த உரைகளே ஏற்புடையன

**ஒ. ஒப்புமைப் பகுதி :**

**முற்றும்**

சாரும் துணைநிற் பினும்பலரைப் பகையாகக் காமைத் தனிமையுறின்
நேரும் துணையர் இருவகையுள் நீக்கி ஒன்றை உறவாக்கள்

—விநா அரசி ,134

88.6. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். (876)

உரைப்பகுதி :

அ) மணக். : பகைவனை ஆக்கமுள்ள காலத்து நட்டோன் என்று தெளியலுமாம்; பகைவன் என்று ஐயப்படலுமாம்; அழிவுவந்தவிடத்துத் தெளிவதும் செய்யாது நீக்குவதும் செய்யாது ஒழுகுக. எ-று.

இது பகையாயினார்மாட்டும் அழிவின்கண் செய்வதோரியல்பு கூறிற்று.

ஆ) பரிதி : அறிந்தும் அறியான்; அழிந்தபேரைக்கண்டும் அறியான்; புத்தியும் கேளான்; அவனைக் கைவிடுக, எ-று.

இ) பரிப். : பகைவனை ஆக்கம் உள்ள காலத்து நட்டோன் என்று தெளியலும் ஆம்: பகைவன் என்று ஐயப்படலும் ஆம்; அழிவு வந்த இடத்துத் தெளிவதும் செய்யாது நீங்குவதும் செய்யாது ஒழுகுக, எ-று.

இது பகைவர் ஆயினார்மாட்டு அழிவின்கண் செய்வது ஓர் இயல்பு கூறிற்று.

ஈ) காளி. : பகை என்று தேறினும் தேறாவிடினும் ஒருவர் இடரின்கண் பெரிதும் தேறும் பண்பிலனுமாகித் தம்மைவிட்டு நீங்காதானும் ஆயின், மற்று அவன் திறம் தெரிந்து அவனைக் கைவிடுக; எனவே இவனும் ஒருவர்க்கு உள்ளுறுபகை[1] என்பது பொருளாயிற்று, எ-று.

அழிவின்கண் தேறான் என்பது தமக்கு ஓர் அழிவுவந்த இடத்துப் பெரிதும் தேறத் தகானாகி என்றது. பகான் என்பது நீங்கான் என்றது, விடல் என்பது விடுக என்றது.

இனி மற்று இங்ஙனம் புறத்ததாகிய பகைத்திறம் தெரிந்த பின்னரே உள்ளுறு பகை எழுச்சி உணர்த்தி மற்று இதன் பின்னரே அதன் முதிர்பாகிய உட்பகை உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல். : பகைவனை முன் தெளிந்தானாயினும் தெளிந்திலனாயினும், தனக்குப் புறத்தொருவினையால் தாழ்வுவந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க, எ-று.

முன் தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிக என்றது உள்ளாய் நின்று[1] கெடுத்தல் நோக்கி. தெளிந்ததிலனாயினும் அப்பொழுது நீக்காதொழிக என்றது, அவ்வழிவிற்குத் துணையாதல் நோக்கி. இதனால் நொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்:** பகைவரை முன்னே தெளிந்தானாகிலும் தெளியாவிட்டாலும், தனக்கு வேறேயொரு காரியத்தினாலே தாழ்வு வருகிறதானால், அப்பொழுது அந்தப் பகைவரைக் கூட்டிக்கொள்ளாமலும் விட்டுவிடாமலும் மத்தியத்திலே நிறுத்தி வைக்கவேண்டும், எ-று.

**ஏ) பழைய 2 :** பகைவனைத் தெளிந்தானாயினுந் தெளிந்திலனாயினும் தனக்குப் புறத்தொரு வினையாற் றாழ்வு வந்தவிடத்துப் பகையொடு கூடாது, பகையை நீக்காது இடையே விட்டு வைக்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**பரிதியுரை** ''தேறினும் தேறான் அழிந்தவற்கண்டறிந்தும் தேறான்; பகாஅன் விடல்'' என்று பாடம் இருந்திருக்கலாம் என்பதைக் கருதச்செய்கிறது. செய்யுள் ஓசை சிறப்பிலது.

**மணக்குடவர்** முதலானோர் உரைகள் 'அழிவுக்காலத்தில் உட்பகையுடையானையும் விடற்க' என்கின்றன, **காளிங்கர்** உரை 'உடனே விட்டுக' என்கிறது. அங்ஙனம் விடக்கூடாது என்பதற்கு ஏதுக்காட்டி விடாமையை வலியுறுப்பது **பரிமேலழகர்** தரும் விளக்கம். ஆதலால் **பரிமேலழகர்** உரையே அதிகார இயைபு மிகுதியும் உடையது.

**இராம.** 'பகை நட்பாக்க விரும்புவன் போர் மூளுவதற்கு முன் செய்திருக்க வேண்டும். போர்க்காலத்து பகையை நட்பாக்குவதோ? அன்றோ? என்று ஆராய்தல் கூடாது, என்னும் கருத்தினது.

'**விடல்**'–'விடற்க அதாவது விட்டுவைக்க' எனப் **பரிமேலழகரும்**, 'விடுக' எனக் **காளிங்கரும்** உரைப்பர் இக்குறளுக்கு 'நொதுமலர் போலப் பழகுக' என்பது **பரிமேல்** கருத்து.

**வரத.** 'அழிவு நேரத்தில் நண்பனைப் பெற்றால் சேர்த்துக் கொள்ளாமலும், பகைவனுக்குத் துணையாகி விரைவில் அழிவை

---

1, உள்ளாய் நின்று — உள்ளிருந்து

விளைவிப்பான் ஆகையால் வஞ்சகனைப் பிரிக்காமலும் இருக்க-வேண்டும்' என்பர். இவ்வுரை தேறுதலை நண்பனாக்குதற்கும், பிரித்தலைப் பகைவனுக்குமாகப் பிரித்தெண்ணுகிறது. மேலும் **பரிமேலழகர்** உரை வேற்றுரையாகவும் கூறி அமைகிறது.

88.7. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து. (877)

உரைப்பகுதி :

அ) **மணக்.**: தாம் வருத்தமுற்றதனை அறியதார்க்கு வருத்தமுற்றுச் சொல்லாது ஒழிக; அதுபோலப் பகைவரிடத்துத் தமது மென்மையைத் தோற்றுவித்தலை விரும்பாதொழிக, எ-று.

இது பகைவர்மாட்டுத் தமது மென்மையைத் தோற்றுவியாது ஒழிக என்றது.

ஆ) **பரிதி.**: தன் நோவு அறியாத பேருக்குத் தன் நோக்காடு சொல்ல வேண்டாம் தன்சத்துருக்களிடத்தும் தான் சொல்லவேண்டாம் எ-று.

இ) **பரிப்.**: தாம் வருத்தம் உற்றதனை அறியாதார்க்கு வருத்தம் உற்றுச் சொல்லாது ஒழிக: அதுபோலப் பகைவரிடத்துத் தமது, மென்மையைத் தோற்றுவிக்கலை விரும்பாது ஒழிக, எ று.

இது பகைவர்மாட்டுத் தமது மென்மை தோற்றுவியாது ஒழிக என்றது.

ஈ) **காளி:** உறுதுயர் கண்டு தாம் பெரிதும் நொந்தால் மற்று அந்நொந்ததனை இவர் எம்பொருட்டு இது செய்தார் என்பதனை மதியாதார்க்கு நோவற்க; அன்றியும் பகைவரிடத்து என்றும் தாம் வன்மையோடு இயைய நிற்கும் அத்துணையல்லது அவரோடு தாம் மென்மையோடு இயைய நினையற்க, எ-று.

தம் துயர்க்கு ஒருவர் நொந்தது மதியாதாரும் பகைவரின் ஒரு கூற்றரே வேறு அல்லர் என்பதனால் இதனை எடுத்து ஓதினார் என அறிக; என்னை, காஞ்சிரம்பிஞ்சும் காஞ்சிரமரமும் இத்துணை அல்லது பிறிதொன்று ஆகாதாற் போல.

உ) **பரிமேல்:** நொந்ததனைத் தாமாக அறியாத நட்டார்க்குத் தன் நோவு சொல்லற்க; வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலியின்மையை மேலிட்டுக் கொள்ளற்க[1], எ-று.

நோ என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஈண்டு அது சொல்லுதற்கண் ஆயிற்று பகைவர்கள் தவிர்வது கூறுவார், நட்டார்கண் தவிர்வதும் உடன் கூறினார். இதனால் அவ்விருபகுதிக்கண்ணும் செய்வது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர் :** ஒருவன் குறையைத் தாமே அறியாத சிநேகிதர்க்குத் தன் குறையைச் சொல்லவேண்டாம்; வலிமையில்லாமை பார்த்திருக்கிற பகைவர் முன்னே தன் வலிமையில்லாமையை வெளிப்படுத்தாமலடக்கிக்கொண்டு பலவானென மெச்சிக் கொண்டிருக்க வேணும், எ-று.

எ) **பழைய2 :** நொந்ததனைத் தாமாக வறியாத நட்பாளர்க்குத் தன்னோவு சொல்லற்க. வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்க்குத் தன் வலியின்மையை மேலிட்டுக் கொள்ளற்க

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்.** 'தான் வருத்தமுற்றதையறியாதார்க்கு வருத்தத்தைச் சொல்லா தொழிக; அதுபோலப்பகைவர்முன்னே தமது மென்மையைச் சொல்லற்க' என எடுத்துக்காட்டுவமை வாய்பாடு தோன்ற உரை வகுப்பவர்.

**பரிமேலழகர்** 'நொந்தைத்தாமாக அறியாத நட்டார்முன் தன்நோவைச் சொல்லற்க. நம் வலியின்மையையே ஆய்ந்து கொண்டிருக்கும் பகைவர் முன் வலியின்மையை மேவற்க' என உவம வாய்ப்பாடு தோன்றாமலும், முன்னதை நட்டார்க்கும் பன்னினதை பகைவற்குமாக உரைப்பர். இவை இவ்விருவருள் வேறுபாடு.

எடுத்துக்காட்டுவமையையே படைத்துக்கொடுத்த பரிமேலழகர் இதனை உவமைாகக் காட்டாததற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். உவமை ஒத்த இருபொருள்களின் அன்றி மாறுபட்ட இரு பொருட்கள் அதாவது நட்பும் பகையுமாகஉள்ள பொருட்கண் நிகழாது

1. மேலிட்டுக் கொள்ளற்க - வலியின்மை தன்னிடத்தில் இருப்பதாகக் காட்டிக் கொள்ளுதல் வேண்டாம்.

என்பதனைக் கருதிப்போலும் என்க: '**அறியாதார்க்கு**' என வாளா கூறியதைத் 'தாமாக அறியாத நட்டார்க்கு' என ஒருவர்க்-குரிமை யாக்கினர் **பரிமேலழகர்** 'அறியார்க்கு' என நான்கனுருபு புணர்த்தமையின், **பரிமேலழகர்** 'நோ' என்பதற்கு 'நொந்து சொல்லுதல்' எனப் பொருள் கண்டனர். **காளிங்கர்** நொந்த அறியார்க்கு நோவற்க' எனக் கூட்டி 'நொந்தவை எம்பொருட்டு என்பதனை மதியாதார்க்கு நோவற்க' என்றனர். 'அறியார்க்கு' என்பதற்கியைய 'எம்பொருட்டு' என்பது வருவித்துரைக்கப்பட்டது. **கவிராசர்** உரை **பரிமேலழகரின்** தெளிவுரையாகும்.

தன்னோவு அறியார்க்குத் தன்னோக்காடு சொல்லவேண்டாம் என்றமையால் நோவு கூறல் வெளிப்படுத்தலாம் ஆதலின் அண்மை-யாற் கொள்ளப்படும் எனக் கருதி பொருள் கூறாது விடுத்தனர் என்க. 'நொந்து மதியாதாரும் பகைவன் இனத்தவரே' என்ற **காளிங்கர்** குறிப்பு மிகத்தகுதி வாய்ந்தது. **தேவநேயர், கவி-ராசர், பழைய உரை, பரிமேலழகரைத்** தழுவிச் செல்வன.

**இராம.** 'வறுமைப்படுவதைப் பிறரிடம் நீயாகச் சொல்லற்க; அது போல மெலிந்ததைப் பகைவரிடம் காட்டிக் கொள்ளற்க' என்பர் நோதல் வரும்வழி பலவாதலின் 'நொந்தது' எனப் பொதுமையினின்ற நோதலை வறுமையான் வருவதற்கேயாக்கியும் மெலிந்ததை வலியிழந் தமைக்கு ஆக்கியும் உரைப்பார். வறுமையும் வலியின்மைப்பாற் படுமாகலின் மெலிவின் கண்ணேயடங்கும். இங்ஙனம் விதத்தலாற் போதிய பயனின்றாம்,

இவ்வுரைகளுள் **கவிராசர்** உரை தெளிவானது. **பரி-மேலழகர்** கருத்தை ஒத்தது. தகவுடையது.

88 8. வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. (878)

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** வினைசெய்யும் வகையை அறிந்து, தன்னைப் பெருக்கி, தன்னைக்காக்க, பகைவர்மாட்டு பெருமிதம் கெடும், எ—று.

இது பகைவரை வெல்லும் திறம் கூறிற்று.

ஆ) பரிதி .: பகை வெல்லும்வகை யறிந்து தனக்குப் பகையாகிய பகைவற்குப்பகைவனாகிய பெரியோரிடத்திற் சேரில் அந்தப் பகையும் மாயும், எ-று.

இ) பரிப் .: வினை செய்யும் வகையை அறிந்து தன்னைப் பெருக்கித் தன்னைக் காக்கப் பகைவர்மாட்டு உண்டான பெருமிதம் கெடும், எ-று.

இது பகையை வெல்லும் திறன் கூறிற்று.

ஈ) காளி .: தன்னோடு எதிர்வதன் கூறுபாட்டை அறிந்து மற்று அதற்குத் தக்காங்கு அதனின் மிகத் தன்னைச் சமைத்துக் கொண்டு இங்ஙனம் தன்னைப் பேணிக் கொள்ளவே கெடும் : யாதோ எனின் பகைவர் மாட்டு உளதாகிய மனச்செருக்கு, எ-று.

வகையறிந்து தற் செய்து என்பது[1] தன்னொடு மலைந்து எழும் பகைக்குத் தகாது எனின், மிகைப்பட்ட[2] தன்னைச் சமைத்துக் கொண்டு, என்றது.

உ) பரிமேல் : தான்வினை செய்யும் வகையை அறிந்து அது முடித்தற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமல் தன்னைக்காக்கவே தன் பகைவர்மாட்டு உளதாய களிப்புக்கெடும், எ-று.

வகை வலியனாய்த் தான் எதிரே பொருமாறும், மெலியனாய அளவில் போர் விலக்குமாறும் முதாலயின[3]. பெருக்கல்-பொருள் படைகளால் பெருகச்செய்தல். களிப்பு-இவற்றான்[4] வேறும் என்றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுகுதல் அறிந்து தாமே அடங்குவர் என்பதாம். இதனான் களைதற்பாலதன்கண் செய்வன கூறப்பட்டது.

---

1. 'வகை என்பது' பாடம். திருப்பதி பதிப்பு.

2. 'மிகைப்பட்ட' பாடம். திருப்பதி பதிப்பு
'வகைஎன்பது' 'மிகைப்பட்ட' என்பன பாடபேதம். இவை உரையொடு இயைபில்லன.

3. முதலாயின என்றமையின் பகைவர் இருவருள் ஒருவரை தமக்குத் துணையாகக் கொள்ளுதலும் பகைவரிடத்துத் தன் வலியின்மை காட்டாமையும் ஆம்.

4. இறுகுதல் அறிந்து - அழுத்தம் அறிதல். அதாவது நாடு முதலியவற்றிற்கு பாதுகாப்பை ஆராய்தல்.

ஊ) **கவிராசர் :** தான் செய்கிற காரியத்தின் வகையை யறிந்து, அதை முடிப்பதற்கேற்பத் தன்னை அதிகமாக்கி. மறப்பும் பாபமும் வாராமல் தன்னைக் காத்துக்கொண்டால், தன் பகைவரிடத்திலே யுண்டான சந்தோஷம் கெடும், எ-று.

ஏ **பழைய 2:** தான் வினை செய்யும் வகையை அறிந்து, அது முடிதற் கேற்பதனைப்பெருக்கி, பகை புகுதாமற் றன்னைக்காக்கவே தன் பகைவரிடத்து உண்டாகிய களிப்புக்கெடும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறள் கூறும் பகைவரின் செருக்கு மாய்தற்கு உரிய உபாயங்கள் மூன்றிலும் பொதுமையின் நிற்பதால் ஆசிரியர்களின் விளக்கம் வேறுபடுகின்றன. அதனாற் கருத்துமாற்றமும் காணப்படுகிறது.

**'வகை'**

'வினை செய்யும் வகை' **மணக்.' பரிமேல்.' பழைய.**; 'வெல்லும் வகை' **பரிதி**; 'தன்னோடு எதிர்வதன்கூறுபாடு' **காளி.**; 'தான் வினை செய்யும் வகை அதாவது வலியனாய்த் தான் எதிரே பொருமாறு' **பரிமேல்.**; 'தான்செய்கிற காரியத்தின் வகை' **கவி-ராசர்**; 'போர்நூல் கூறும் வழி' **வரத.**; 'இதுவரை சொல்லப்பட்ட முறையறிந்து' **இராம.**; 'வினை செய்யும் வகைகளாவன. நால்-வகைப்படைகள், பிரித்தல் பேணல் பொருத்தல் முதலான வலக்-காரங்கள், காலமறிதல் இடமறிதல் சூழ்தல் முதலியனவும் தும்பை முதலியோர்முறைகளும், அறிதல்' என்பர் **தேவநேயர்.**

**''தற்செய்து''**

'தன்னைப் பெருக்கி' **மணக்.**; 'தன் பகைவனுக்குப் பகை-யாகிய பெரியோரிடத்தில் சேர்ந்து' **பரிதி.**; 'தக்காங்குத் தன்னைச் சமைத்துக்கொண்டு' **காளி** ; 'வினை முடித்தற்கேற்பத் தன்னைப் பெருக்கி' **பரிமேல்**; அரண்முதலியன அமைத்துக்கொண்டு' **வரத.**; 'தன்னை வலுப்படுத்திக் கொண்டு' **இராம.**; 'பொருள் படைதுணை களைப் பெருக்குதல்' **தேவநேயர்.**; 'தற்காப்ப' என்பது வகை-செய்தல் முதலியமுன்னிரண்டன் பயனாதலின் அதற்கு உரை எழு-திற்றிலர் **பரிதி.**; 'பகைத்திறனறிந்து பொர' **வரத.**; 'தற்காப்புச் செய்து கொண்டால்' **இராம.**; 'பல்வகையரண் அமைத்துக்கோடல்'

இராம.

இவையனைத்துமே உபாயங்களாதல் கண்டு அமைவோமாக.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே. - புறம்., 35 : 32-34

உற்றதற் கெல்லாம் உரஞ்செய்ய வேண்டுமோ
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்
நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும். - பழ. நா., 54

நேர்ஒடுங்கலின் பகையினை நீதியாய் வெல்லும்
சோர்வி டம்பெறா உணர்வினன் சூழ்ச்சியே போல.
கம்ப., 899

88.9. இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (879)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** முள்மரத்தை இளைதாகவே களைக[1]; முற்றின–விடத்து, தன்னைக் களைவார் கையைக் கொல்லுமாதலால், எ–று.

இது பகைவர் வலியராவதன் முன்னே களைதல் வேண்டும் என்றது.

**ஆ) பரிதி.:** முள் மரத்தை முளையான உடனே களைக. அல்லது மரம் வளர்ந்தால் கையை வருத்தும், எ-று.

**இ) பரிப்.:** முன் மரத்தை இளைது ஆகவே களைக. முற்றின இடத்துத் தன்னைக் களைய நினைத்தார் கையைக் கொல்லும் ஆகலான், எ-று.

இது பகைவர் வலியர் ஆகும் முன்னே களைய வேண்டும் என்றது.

1. களைக — பிடிங்கி எறிக

**ஈ) காளி.:** களையவேண்டின் எத்துணையும் சால இளைதாகவே முள்ளுடை மரத்தினைக் களைக: என் எனின் களையுநரது கையினை வாதிக்கும்[2] மற்று அது முற்றிய இடத்து; எனவே பற்றார் திறமும் அப்படி என்பது பொருள், எ—று.

**உ) பரிமேல்.:** களையவேண்டுவதாய முள்மரத்தை இளைதாய நிலைமைக்கண் களைக; அன்றியே முதிர்ந்த[3] நிலைமைக்கண் களையலுறின் களைவார் கையினை அதுதான்[4] களையும், எ-று.

களையப்படுவதாய[5] தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக அன்றியே வலிதாயகாலத்துக் களையலுறின் தம்மை அது தான் களையும் என்பது தோன்ற நின்றமையின் இது பிறிது-மொழிதல்[6]. இதனால் களையும் பருவம் கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்.;** பிடுங்கிப் போடவேண்டிய முள்மரத்தைச் சிறியதாயிருக்கையிலேதானே வாங்கிப் போடவேணும்; பெரியதாய் முற்றின பிறகு வாங்கிப் போடப்போனால் அது அவன் கைகளைக் கெடுத்துப்போடும், எ—று.

**எ) பழைய2 :** 'கோலாக் களையுநர்' பாடம்.

களைய வேண்டுவதாய முள்மரத்தை முற்கோலி இளமையாய பொழுதே களைக; அன்றி முதிர்ந்து வயிரம் பற்றிய போது களையுநர் கையை வருத்தப் படுத்தும்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும்:**

எதிர்த்த பகையை இளைதாய போழ்தே
கதித்துக் களையின் முதிராதே தீர்த்து
நனிநயப்பச் செய்தவர் நண்பெல்லாம் தீரத்
தனிமரம் காடாத லில்.

—பழ.நா., 287

---

2. வாதிக்கும் — வருத்தும்

3. முதிர்ந்த — முற்றிய 4. களையப்படுவதாய் — நீக்கபட்டுவண்வாய

5. ஒரு பொருளை விளங்கச் செய்வதற்கு அதனோடு ஒத்த வேறு ஒரு பொருளாகக் கூறல், இதில் முள்மரங் கொல்க என்றல் பிறிதுமொழிதலாம். வேண்டப்படும் தொடர்களையுங் கை கொல்லும் காழ்த்த இடத்து என்பதாம்,

பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காத்தல் வேண்டும் அரும்பொருளாக என்றான்.
—சீவக.,1894

எரியும் தீத்திரள் எட்டுணை யாயினும்
கரியச் சுட்டிடும் காந்திக் கனலுமேல்
தெரியில் தொல்பகை தான்சிறி தாயினும்
விரியப் பெற்றபின் வென்றிடு கிற்குமே. —சூளா.,643

முட்கொள் நச்சு மரமுளை யாகவே
உட்க நீக்கின் உகிரினும் நீக்கலாம்
வட்க நீண்டதன் பின்மழுத் தள்ளினும்
கட்கொ டாமன்ன யார்களை கிற்பவே. - சூளா.,644

மற்றிக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுதல் அரிதென —பெருங்.4.8:53-54

சிறியரென் றிகழ்ந்து நோவு செய்வன செய்யல் —கம்ப.,4230

அருப்பம் என்று பகையையும் ஆரழல்
நெருப்பை யும்இகழ்ந் தால்அது நீதியோ —கம்ப.,7235

முந்தே யெனகா தையைமொய் யமர்வாய்
அந்தோ யுயிருண் டவனா ருயிர்மேல்
உந்தா யெனையா துமுணர்ந் திலையோ
எந்தா யொருநீ யிடர்கூ ருதியோ. —கம்ப.,8536

இனியவன் சின்னாட் செல்லின் எம்மனோர் வாழ்வும் கொள்ளும்
துணைவரும் புரவித் திண்தேர்த் துணைவரும் சூர ரானார்
முனைவரும் கூர்முன் வேலை முளையிலே களையின் அல்லால்
நனிவர வயிர்த்த போது நவியமும் மடியும் அன்றே.
- வில்லி சூது.,11

சிறிய பகைஎனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார். — நீதிநெறி.,54

முளையில் கிள்ளாததை முற்றினால் கோடாலிகொண்டு
வெட்ட வேண்டும். —பழ.,

நகத்தால் கிள்ளாததை கோடாலி கொண்டு வெட்ட நேரிடும் —பழ.,
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா. —பழ.,

ஒ) மேற்கோள்பகுதி :

**சேனா ;** தீயாரைக் காலத்தால் களைக என்னும் தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலால் குறிப்பெச்சமாயிற்று என்பர். — தொல்.சொல்.,440

நிலைபெற்றபின் களையலுறின் களையலுற்றாரை அவர்தாம் கொல்வர்; அதனால் தீயாரை அவர் நிலைபெறாக்காலத்தே களைக என்னும் பொருள் விளங்குதலின் குறிப்பிற்றோன்றலாம் என்பர். — தொல்.சொல்.,157.

**நச்சி .:** குறிப்பிற்றோன்றலுக்குச் சேனாவரையர் உதாரணம் காட்டியதை மறுத்து, 'தொல்காப்பியர் செய்யுளியலில் (சூ.206) கூறிய குறிப்பெச்சத்தின்பாற்படும் இக்குறள்' என்பர். — தொல்.சொல்.,15

இடத்து என்னும் ஈற்று வினை எச்சவாய்பாடு இறந்த காலத்தில் வந்ததற்குக் 'காழ்த்தவிடத்து' என்பது மேற்கோள். — தொல்.சொல்.,231

தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும் என்ற சூத்திரத்தில் சேனாவரையரை மறுத்துரைப்பர். — தொல்.சொல்.,440

**சிவஞான.;** இம் மூன்றும் மெய்ஞ்ஞானிக்காகா விடு: ''சிவபோகப் பெருவாழ்வை இழப்பிப்பன ஆகலான் மெய்ஞ்ஞானிக்காகா என்றார் மேன்மேல் முறுகுவனாகிய இவற்றைத் தோன்றும்பொழுதே துடையாக்கால் 'களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து' என்னும் முறைமைத்தாய் முடியுமென்பது பற்றி விடு என ஈண்டும் வலியுறுத்தப்பட்டது. — சிவஞான.சூ.12.அதி.2

88.10. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். (880)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** பகைவரது தலைமையைக் கெடுக்க மாட்டாதார், அப்பகைவர் உயிர்க்கும் மாத்திரத்திலே அறுதியாகச் சாவார், எ-று.

இது பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகைகோடலாகாது என்றது.

**ஆ) பரிதி .:** மாற்றாரை வெல்ல வகை அறியாதார் மாற்றார் சுவாசம் விட அழிஞ்சு போவார் ; நாகமும் எலியும் போல், எ-று.

**இ) பரிப் .:** பகைவரது தலைமையைக் கெடுக்க மாட்டாதார் பகைவர் உயிர்க்கும் மாத்திரத்தாலே அறுதியாகச் சாவார், எ-று.

இது பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகை கோடல் ஆகாது என்றது.

**ஈ) காளி .:** தம்மை வருத்தம் செய்பவராகிய பகைவர் தம் எதிர் வந்து சினத்து ஒரு மூச்சு எறிய அத்தனைக்கு உளர் அல்லர் மன்ற ; யார் எனின், மற்று அவரது பெருமையைத் தலையழிக்க மாட்டாதார், எ-று.

**உ) பரிமேல் .:** தம்மொடு பகைப்பாரது தருக்கினைக்[1] கெடுக்க-லாயிருக்க இகழ்ச்சியான்[2] அது செய்யாத அரசர் பின் உயிர்க்கு-மாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக, எ-று.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல்[3] ஒருதலையாகலின், இறந்தாரேயாவர் என்பதாம். அவர் உயிர்த்த துணையானே தாம் இறப்பர் எனினும் அமையும்[4]. இதனால் களையாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது

**ஊ) கவிராசர் .:** தன்னுடனே பகையைப் பண்ணிக்கொள்ளு-கிறவர் பலத்தைக் கெடுக்கத்தக்க சத்துவமுண்டாயிருந்தும், அது அத்தனையில்லையென்று இகழ்ந்து சும்மா இருக்கிறவர்கள் தம் உயிரும் உண்டாகப் பெறார், எ-று.

**ஏ) பழைய 2.:** தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுகக்-லாயிருக்க இகழ்ச்சியான் அது சிதையாத அரசர் பின் ஒரு மூச்சு விடும் பொழுதளவாகிலும் ஒரு தலையாக உளரல்லர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பகைவர் மூச்சுவிடும் கால அளவிற்குள் சாவர்' என **மணக்குடவரும், காளிங்கரும், பரிமேலழகரும்,** மற்றோரும் உரைப்பர். **பரிதி.** 'நாகம் உயிர்ப்பக் கெடும்' என்பதை நினைவிற்-கொண்டு 'மூச்சுவிட்டால் அழிவர்' என்பர்,

---

1. தருக்கினை — செருக்கினை 2. இகழ்ச்சியின் — அலட்சிய புத்தியால்
3. களைதல் — அழித்தல்
4 உயிர்ப்ப உளரல்லர் என்பதற்குப் பகைவர் மூச்சு உற்ற அளவானே பகைவரால் அழிவர் என்பது திரண்டபொருள்

**பரிமேலழகரும்** இதனை மறுக்காது உடம்படுவர். **மணக்குடவர்** 'உவிர்க்கு மாத்திரத்தில்' என்பதனைப் **பரிமேலழகர்** 'உயிர்க்குமாத்திரத்திற்கும்' என எழுதுதலின், கால 'அளவையே கருதினராதல் தகும். 'மூச்சுவிட்டால்' என்ற பொருளைப் **பரிமேலழகர்** வேற்றுரையாகக் கொண்டு ஒப்புவர். இது நோக்கி ஈருரையுங் கொள்ளலுமாம்.

—*—

## 88. பகைத்திறம் தெரிதல்

| | பகைஎன்னும் | வில்லேருழவர் | ஏழுற்றவரினும் | பகைநட்பாக் | தன்துணை | தேறினும் | நோவற்க | வகையறிந்து | இளைதாக | உயிர்ப்ப |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 2 | 3 | 5 | 7 | 4 | 6 | 8 | 10 | 9 | 1 |
| பரிதி. | 5 | 10 | 7 | 9 | 4 | 8 | 6 | 1 | 2 | 3 |
| பரிப். | 1 | 3 | 5 | 7 | 4 | 6 | 8 | 10 | 9 | 2 |
| காளி. | 9 | 3 | 5 | 8 | 4 | 10 | 7 | 1 | 2 | 6 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

88.வது அதிகாரம் 'பகைத்திறம் தெரிதல்' முற்றிற்று.

# 89. உட்பகை

அ) மணக் .; உட்பகையாவது உடனே வாழும் பகைவர் செய்யும் திறம் கூறுதல். அஃதாவது புறம்பு[1] நட்டார் போன்றும் சுற்றத்தாராயும்ஒழுகி மனத்தினால் பகைத்திருப்பார் செய்யும் திறன் கூறுதல். இதுவும் ஆராய்ந்து காக்கவேண்டுமாதலின், அதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி .: உட்பகையாவது பகையில் உட்பகை வெல்லலரிது, எ.று

இ) பரிப் .: உட்பகை ஆவது உடனே வாழும் பகைவர் செய்யுப் திறன் கூறுதல். அஃதாவது புறம்பே நட்டோர் போன்றும் சுற்றத்தார் ஆகியும் ஒழுகி மனத்தினால் பகைத்திருப்பார் செய்யும் திறன் கூறுதல். இதுவும் ஆராய்ந்து காக்க வேண்டும் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: அஃதாவது புறப்பகைக்கு[2] இடனாக்கிக் கொடுத்து அது வெல்லுந்துணையும் உள்ளாய்[3] நிற்கும் பகை. இதுவும் களையப் படுவதன் பாலது ஆகலின், 'பகைத்திறந்தெரிதலின்' பின் வைக்கப் பட்டது.

ஊ) கவிராசர் : அஃதாவது மனத்திலே பகையை வைத்துக் கொண்டு தாங்கள் நினைத்த காரியம் முடியுமளவும் உறவுபோ-லேயிருத்து, காரியம் முடிந்தவுடனே பகைவராயிருக்கிறது.

---

1 புறம்பு - புறம்: 'பு' பண்புப்பெயர் விகுதி.

2 புறப்பகை - வெளிப்படையாக உள்ள பகை.

3, உள்ளாய் - நட்பாய்

ஏ) பழைய 2 : அஃதாவது புறப்பகைக்கு இடங்கொடுத்துத் தன்னுள்ளே நிற்கும் பகை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**தேவநேயர்** 'அகத்தாரே தன்னலம் நோக்கியும் கலாம் விளைத்தற்றமாகத் தம்மினத்தாரைப் புறவினத்தார்க்குக் காட்டிக் கொடுத்தல். இதுவும் ஒரு வகைப் பகைத்திறமாதலின் பகைத்திறந்தெரிதலின் பின்வைக்கப்பட்டது' என்பர்.

**இராம.** 'தன் வீட்டிலோ-தன்னாட்டிலோ உள்ளிருப்பவர்களே உள்ளத்தில் பகையை மறைத்து, வெளியில் நட்புப் போலப் பழகி வீட்டிற்கும் நாட்டிற்கும் கேடு விளைவிப்பவர்கள். இவர்களையும் எச்சரிக்கையாக இருந்து வெளிப்படுத்தல் வேண்டும் என்பது' என்பர்.
**வரத.** 'மனத்தால் பகைத்து, புறத்தால் நண்புபூண்டு, பழகுவாரது தீமையைச் சொல்வது' என்பர்.

**சாமி-சிதம்.** 'வெளிப்பகைக்கு இடந்தருவது உட்பகை'. என்பர்.
**கா.சு.** 'புறத்தே பகையில்லாதவன் போலக்காட்டி உள்ளே பகைத்திருக்குந்தன்மை' என்பர்.

**குழந்தை.** 'உடனிருந்து கெடுக்கும் பகை—புறப்பகை வெல்லு மட்டும் நம்முடனிருந்து கெடுக்கும் பகை' என்பர்.

இவைகள் கருத்துமாற்றம் இல்லாதன.

89.1. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். (881)

உரைப்பகுதி :

அ) **மணக்.**: நிழலகத்து நீர் இனிதேயாயினும் அவற்றுள் இன்னாத செய்யும் நீர் இன்னாதாகும் ; அதுபோல, சுற்றத்தார் நன்மை இனிதாயினும் அவர் இன்னாதவற்றைச் செய்வாராயின், அஃது இன்னாதாயேவிடும், எ-று.

இது சுற்றமென்று இகழற்க என்றது.

ஆ) **பரிதி**.: நிழல் சேர்ந்த நீர் அழகு ஆனாலும், வியாதியைத் தருவது போல உறவின்முறையும் நல்லவர்களாகில் நன்மையைத் தரும் ; அல்லது கேட்டைத்தரும், எ-று.

**இ) பரிப் .:** நிழல் அகத்து நீரும் இனிதே ஆயினும் அவற்றுள் இன்னாங்கு செய்யின் இன்னாது ஆகும். அது போலச் சுற்றத்தார் தன்மையும் இனிது ஆயினும் அவர் இன்னாத வற்றைச் செய்வார் ஆயின் இன்னாது ஆகியே விடும், எ-று.

இது சுற்றம் அன்று என்று இகழ்க என்றது. இவை இரண்டினானும் இகழாமை கூறப்பட்டது.

**ஈ) காளி :** உலகத்துப் பொதுவகையாக நிழலும் நீரும் இனிய எனினும், சில நச்சுமரமும் நச்சுப்பொய்கையும் என்பன உள அன்றே: மற்று அவை ஏனை நிழலும் நீரும்போன்று இருந்தும், இருந்தோரும் அருந்தினோரும் இறந்துபடும் திறம் விளையும் : அதனால் மற்று ஆங்குத் தமராக நட்டோராது நீர்மை, நீர்மைபோன்று இருந்து பெரிதும் இன்னாவாம் இன்னாதனவற்றைச் செய்யும் இட்த்து எ-று.

**உ) பரிமேல் .:** ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய் செய்வன இன்னாவாம்; அதுபோலத் தழுவவேண்டுவனவாய தமரியல்புகளும்[1] முன் இனிய வேனும் பின் இன்னாசெய்வன இன்னாவாம், எ—று.

நோய்–பெருங்கால்[2], பெருவயிறு[3] முதலாயின[4] தமர் என்ற தானல் உட்பகையாதற்கு உரியராய ஞாதியர் என்பது அறிக. இன்னாசெயல்-முன் வெளிப்படாமைநின்று துணைபெற்றவழிக் கெடுத்தல்.

**ஊ) கவிராசர் .:** ஒருவன் அனுபவிக்கவேண்டிய நிழலும் நீரும் முன்பு நன்றாயிருந்தாலும், பின்பு நோய்செய்தால், பொல்லா-தனவாம். அதுபோல, சுற்றத்தாரானாலும் முன்பு நல்லவர்களா-யிருந்து பின்பு பொல்லாங்கு செய்தால், அவர்கள் பகைவரே, எ-று.

**ஏ) பழைய 2 :** ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவதாய நிழலும் நீரும் முன்னினிய வேனும் பின் நோய் செய்வன இன்னாவாம்; அதுபோலத் தழுவ வேண்டுவனவாய தமர் இயல்புகளும் முன்னினிய-வேனும் பின் இன்னா செய்யின் இன்னாவாம்.

---

1. தமரியல்புகளும் — சுற்றத்தாரது குணங்களும்
2. பெருங்கால் — யானைக்கால் வியாதி
3 பெருவயிறு — மகோதரம் என்னும் நோய்
4. முதலாயினஎன்றமையின் குளிர்சுரம், குட்டம், குன்மம் முதலியனவையுங் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'நிழல்நீர்'**

'நிழலகத்துநீர்', 'நிழல்சேர்ந்த நீர்' என்பர் **மணக்**., பரிதி., **பரிப்** மூவரும், நிழலகத்துள்ள நீரில் இன்னாதவும் உண்டாதலின் 'இன்னாதஇன்னா' என்றார் **மணக்.**; 'நிழலும் நீரும்' என உம்மை விரித்துரைத்தனர் **காளிங்கர்** முதல் இன்றுள்ள உரைகாரர்கள் அனைவரும். **இராம.** 'வசிக்கும் இடமும் பழகிய தண்ணீரும்' என்றனர்.

**பரிமேலழகர்** முதலானோர் 'நிழலும் நீரும் என விரித்தது இன்னாத இன்னா என்ற பன்மை முடிவு நோக்கியாம், என்பர் சிலர், 'நீர்சுரந்தது' 'நீர்சுரந்தன' என்பன இன்றும் வழக்கினுண்மையானும், 'இன்னாத இன்னா' என்ற பன்மை முடிவு நோக்கிப் **பரிமேல-ழகர்** 'நிழலும் நீரும்' எனப் பிரித்தார் அல்லர். 'நீரும் நிழலும் நிலம் பொதியும் நெற்கட்டும்' முதலான ஆன்றோர் வழக்குட் கொண்டு பிரித்தனர். பன்மை நோக்கியவர் பிரித்தனரெனில் ஒரு தொடராக்கிக் கொண்டு உரைதந்த **மணக்குடவர்** முதலானோர் பிழைத்தனராவர். ஆதலால் 'நீர்' என்ற பால்பகாவஃறிணைப் பெயர், ஐம்-பூதங்களில் ஒன்றன் பெயராகவும் இருத்தலின் 'நீர் இன்னா' என்பது வழுவன்று.

'வெயில்படாத நீர் தூய்மையற்றது ; இன்னாதது ஆயினும், அதிலும் இனியநீரும் உண்டாதலின் அதனை விலக்க இன்னாத இன்னா' என்றனர் ஆசிரியர்.

'தமர்நீரும்' என்புழியுள்ள 'நீர்' என்பதும் 'நீர்மை' என்பதன் குறையாய பால்பகா அஃறிணைப் பண்புப்பெயர், அதுவும் இன்னாத இன்னா எனப் பன்மை கொண்டு முடிதற்கு இழுக்கின்று என்க.

'நீரும் நிழலது இனிதே' (1309) என்பது 'நிழலகத்து நீர்' என்ற **மணக்குடவர்** உரைக்கு வலி தருவதேயாம். நிழல்நீர் இனிமை, கலவிக்கு இன்றியமையாத புலவிக்குக் கூறப்பெற்றது. நிழல்நீர் தீண்டுந்தோறும் உயிர் தளிர்ப்பச் செய்தல்போலப் புலவி கலவிக்கு இனிமை பெருக்குவதாயிற்று என்பதை விளக்க வந்தது.

ஈண்டு, வெயில்படாதநீர் நச்சுத்தன்மையையும் அடைதல்போல நண்பரும் சுற்றமுமானோர் மனந்திரிந்து உட்பகை நஞ்சையுடைய ராயின் தீயராவர் என்பதை விளக்கவந்தது. ஆகையால் இவ்விரு

எடுத்துக்காட்டுகளும் தனித்த நோக்கு உடையன என்க. ஆதலால் நிழலும் நீரும் எனப்பிரித்த உரையைக் காட்டிலும் 'நிழனீர்' எனக்கொண்ட உரை சிறந்தமை தெளிக.

**காளிங்கர்** 'நிழல்-நச்சுமர நிழல்; நீர்-நச்சுப் பொய்கை' எனக்கொண்டு விளக்கங்காட்டுவர்.

89.2. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (882)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** வாள்போலக் கொல்லும் திறனுடைய பகைவரை அஞ்சாதொழிக; முகம் நட்டாரைப்போல மனத்தினால் பகைத்திருப்பார் தொடர்பை அஞ்சுக, எ-று

இது பகை அஞ்சுவதினும் மிக அஞ்சவேண்டும் என்றது,

**ஆ) பரிதி.:** வாள்போலே வெட்டுகிற பகைவர்க்குப் பயப்படவேண்டா: உறவு போல இருந்து வினைசாதிக்கிற உட்பகைக்குப் பயப்படவேண்டும், எ-று.

**இ) பரிப்.:** வாளைப் போலக் கொல்லும் திறத்தினை உடைய பகைவரை அஞ்சாது ஒழிக : முகம் நட்டாரைப் போன்று மனத்தினால் பகைத்து இருப்பார் தொடர்பை அஞ்சுக, எ-று.

பகைவரை அஞ்சுவதினினும் மிக அஞ்சவேண்டும் என்றவாறு ஆயிற்று. உட்பகையாவது இது என்பதூஉம் கூறிற்று.

**ஈ) காளி.:** வாள்போலக் கடியராகிய புறப்பகைவரை அஞ்சாது ஒழியினும் ஒழிக; மற்று உள்புகுந்து கேள்[1]போன்று கேளாகாப் பகைவரது நட்பினை அதினின்று குறிக்கொண்டு அஞ்சுக, எ-று.

**உ) பரிமேல்.:** வாள்போல எறிதும் என்று வெளிப்பட்டுநிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக, அங்ஙனம் நில்லாது கேள் போல மறைந்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக, எ-று.

பகைவர் ஆகுபெயர்[2]. முன்னே அறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்க என்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும் படாமையின்

---

1. கேள் — சுற்றத்தார்
2. கோ.வ., வை.மு,கோ., பதிப்புக்களில் இத்தொடர் இல்லை. பகைவர் என்னும் பண்பியின் பெயர் அவரது இயல்பாகிய பகை என்னும் பண்புக்கு ஆயினமையின் பொருளாகுபெயராம்.

கெடுதல் ஒருதலை என்பது பற்றி 'அஞ்சுக' என்றும் கூறினார். பின்செய்யும் பகையினும் கொடிதாகலானும், காக்கலாகாதது ஆகலானும்[3], அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர்பாயிற்று. இவை இரண்டு பாட்டானும் உட்பகை ஆகாது என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** : வாளைப்போல் கொல்லுகிறோமென்று வெளியாயிருக்கிற பகைவர்களுக்குப் பயப்படவேண்டாம்; சுற்றத்தார் போல உறவாயிருக்கிற பகைவர்களுக்குப் பயப்படவேணும், எ-று.

ஏ) **பழைய 2** : வாள்போல வெல்லுது மென்று வெளிப்பட நிற்கும் பகைவரை யஞ்ச வேண்டாம்: உறவு போல மறைந்து நிற்கும் பகைவரை யஞ்சவேண்டும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தொல்லாசிரியர்களின் உரையில் கருத்துமாற்ற மின்று. **தேவநேயர்** 'அஞ்சற்க என்பது அஞ்சவே வேண்டாம் என்னும் கருத்தினது அன்று. உட்பகைக்கு அஞ்சவேண்டிய அளவு வெளிப்பகைக்கு அஞ்சற்க என்பதே' என்பர்.

**வரத.** 'வாள் கொலைக்கருவியாய்க் கூரிதாக இருத்தலால், உறையும் பாதுகாப்பும் அமைத்துக் காத்துக் கொள்வதுபோல புறப்பகைக்கு அரண் சென்று தப்பலாம். உடனாய்நிற்கும் உட்பகைக்குக் காவல் அமையோம். ஏமாந்துபோவோம்' என்பர்.

ஏனோர் **பரிமேலழகரை** ஒத்துரைப்பர். **மு.கோ.** 'புறப் பகைஞர் வெட்டொன்று; துண்டிரண்டாகச் செயற்படுவர். ஆதலால் அறிந்து அவர்களிடமிருந்து தப்பலாம். கேளிர் வழவழா குழகுழாப் பேச்சினர் தப்ப இயலாது' என்பர். இது உலகியலை ஒட்டிய எளிய உரை. ஆனாற் செறிவின்று.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**வாள்போல பகைவரை அஞ்சற்க :**

வரக்கரு தாது தாழ்த்த வருணனின் மாறு கொண்ட
அரக்கரே நல்ல ரென்னா வறிஞருமலக்க ணுற்றார். — கம்ப,,6779

3. 'காக்குங் காலமது வாகலானும்' என்றும் பாடமுண்டு.

தம்பியார்

பகைநேர் வாருள ரான பண்பினால்
உகநேர் சிந்தி யுலந்த ழிந்தனன். — கம்ப.,4220

**கேள்போல் பகைவர்:**

கண்ணின் மணியேபோல் காதலராய் நட்டாரும்
உண்ணும் துணையும் உளராய்ப் பிறராவர்
எண்ணி உயிர்கொள்வான் ஏன்று திரியினும்
உண்ணும் துணைகாக்கும் கூற்று — பழ நா.136

**முற்றும்**

இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமர்போ லடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ
மைம்மைப்பின் நன்று குருடு. — பழ நா.,299

நண்ணினை மனிதரை நண்பு பூண்டனை
எண்ணினை செய்வினை யென்னை வெல்லுமாறு
உன்னினை யரசின்மே லாசை யூன்றினை
திண்ணிதுன் செயல்பிறர் செறுநர் வேண்டுமோ. — கம்ப.,6463

89.3. உட்பகை அஞ்சித்தன் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். (883)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** உடனே வாழும் பகைவரை அஞ்சித் தன்னைக்காக்க; அவர் தனக்குத் தளர்ச்சி வந்தவிடத்து, குயவன் கலத்தை அறுக்குங் கருவிபோலத் தப்பாமல் கொல்லுவர், எ-று.

மட்பகை தான் அறுக்குங்கால் பிற ரறியாமல் நின்று அறுக்கும்.

**ஆ) பரிதி.:** உட்பகை செய்கிறபேரை நன்றாக விசாரித்து, தங்களுக்கு ஒரு தறுவாய்[1] வந்தவிடத்தில், 'மேலே மட்கலத்தைக் கீழே அறுக்கிற ஊசிபோலக் கெடுப்பர், எ-று.

**இ) பரிப்.:** உடனே வாழும் பகைவரைத் தான் அஞ்சித் தன்னைக் காக்க: தனக்குத் தளர்ச்சி வந்த இடத்துக் குயவன் வனைகலத்தை அறுக்கும் கருவிபோலத் தப்பாமல் கெடுக்கும் ஆதலால், எ-று.

1. தறுவாய் — இறுதி

மண்பகை தான் அறுக்குங்கால் பிறர் அறியாமை நின்று அறுக்கும். இது தன்னைக் காக்க வேண்டும் என்றது. இவை இரண்டினாலும் அஞ்ச வேண்டும் என்பதும் காக்கவேண்டும் என்பதும் கூறப்பட்டன.

எ) **காளி.**: உட்பகை சிறிது உறுவழியும்; பெரிதும் அஞ்சித் தன்னைப் பரிகரித்துக் கொள்க; என் எனின்? தனக்கு ஓர் தளர்ச்சி வந்த இடத்தே கரைபடக் கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம் போல் இதுவும் தன்குடி முழுவதும் குலைத்து எறிந்துவிடும், எ-று.

உ) **பரிமேல்** : உட்பகையாயினாரை அஞ்சித் தன்னைக் காத்துக் கொண்டொழுகுக; அங்ஙனம் ஒழுகாதவழித் தனக்கு ஓர் தளர்ச்சி வந்த விடத்துக் குயவன் மட்கலத்தை அறுக்குங்கருவிபோல அவர் தப்பாமல் கெடுப்பர், எ-று.

காத்தல்-அவர் அணையாமலும் அவர்க்கு உட்படாமலும் பரிகரித்தல்[2]. மண்ணைப் பகுக்குங்குருவி மட்பகை எனப்பட்டது[3]. பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாது என்பதாம்.

ஊ) **கவிராசர்**: உட்பகையாயிருக்கிறவர்களுக்குப் பயப்பட்டுத் தன்னைக் காத்துக் கொண்டிருக்கவேணும். அப்படியிராவிட்டால் தனக்கோரிடையூறு வந்தபோது, குயவன் மண்ணை வெட்டுங் கருவி போல அப்பகைவர் கெடுப்பர், எ-று.

ஏ) **பழைய 2**: உட்பகை யாயினாரை யஞ்சித் தன்னைக் காத்துக் கொண்டொழுகுக; அப்படிக் காவாதவிடத்துத் தனக்கு ஒரு தளர்ச்சி வரின் குயவன் மட்கலத்தை அறுக்குங் கத்திபோல உட்பகையாயினார் தப்பாமற் கெடுப்பர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'மட்பகை'**

'திகிரியில்வைத்த மண்ணுருண்டையிலிருந்து வினைமுடிந்த கலத்தையறுக்கும் கருவியாகிய ஊசி' என்பர் அனைவரும். **பரி-**

2. பரிகரித்தல் - விலக்குதல்
3. மண்ணைப் பகுக்குங் கருவி. இதனைக் குயவர் ஊசி என்பர்

மேலழகர் பகு ஐ எனப்பிரித்து, 'மண்ணைப் பகுக்கும் கருவி மட்பகை என்பர் 'ஐ' கருவிப் பொருளில் வந்ததாக எண்ணுவர், ஆனால் பகுக்கும் கருவிக்குப் பகையென்ற பெயர் வழக்கில் இல்லை; மட்பகை - மட்பகைஞன் என்பது குயவன் பெயராதல் தொல் இலக்கியங்களினும் வழக்கிலுள்ளது. ஊசிக்குப் பெயராதலை. இன்று கிடைக்கும் துணை நூல்களிருந்து அறியக் கூட வில்லை. இதன், முதற்றந்தை **மணக்குடவர்** என்பதை இதனால் அறிகிறோம். குயவர்கள் இன்றும் இதனை ஊசியென்றே வழங்குகின்றனர்.

இது புறத்தேகிடந்து வளைதற்றொழில் முற்றுப்பெற்றவுடன் சக்கரத்திலிருந்து கலத்தைப் பிரிக்கப்பயன்படும் கருவி இது உட்பகைக்கு உவமையாவது யாங்ஙனம்? இவற்றையெல்லாம் எண்ணிய **காளிங்கர்** நிலம் நீர் இவற்றின் இயல்புகளையும், மெய்ப்பொருளியனூற்றுணிபையும் உட்கொண்டு 'மட்பகை வெள்ளம்' என்றனர். 'உடனிருந்தே காலம் வாய்த்தபோது கெடுக்கும் உட்பகை போல, மண்ணொடு கலந்திருந்தே அதனை நெகிழவைத்து, தம்மின மாகிய நீர்ப்பெருக்கு திரண்டுவெள்ளமாக வரும்போது, அதனுடன் சேர்ந்து மண்ணை உருத்தெரியாமற் கரைக்கும் நீரின் குணமே நெகிழ்ந்து ஒன்று வித்தல்' என்று **உண்மைவிளக்கம்** சொல்கிறது. இங்ஙனம் கீழே மண்ணுடன் கலத்திருந்தே நெகிழச்செய்தலானும், பின் வெள்ளம் வந்தகாலத்து மண்ணை உருத்தெரியாமலே கரைத்தலானும், நீரை உட்பகை எனல் முக்காலும் ஏற்புடையதாம்.

மெய்ப்பொருளியனூலிலும் 'நிவிருத்திகலையைத் தூய்மையுறுத்தும் வழி அதன் இடமாகிய மட்பூதத்தை அப்புவிற் கரைத்து அழிந்ததாகப்பாவிக்க' என்றது காண்க.

'காரியம் தத்தம் காரணங்களிற்றான் ஒடுங்கும்' என்ற **சிவப்பிரகா நூற்றுணிபு** பற்றியும் மண் நீரிற்கரைதல் கூடும் என்க. ஆகவே இவற்றைஎல்லாம் எண்ணி ,'மட்பகை - வெள்ளம்' என்ற**காளிங்கர்** உரையே எனைத்துவகையானும் ஏற்ற முடைத்தாதல் துணிக.

'கருவி, மண் பாண்டமாம் வகை காத்திருந்து, பின், சக்கரத்துள்ள மண்ணை விட்டுப் பாண்டத்தைப் பிரிக்கத் துணையாவது போல, உட்பகையுடையான், நமக்கு என்றும் ஒத்திருந்து, முடிவில் நம்மையும்மேற்கொண்ட வினைகளையும் கெடுப்பன்' என உவமத்தின் பொதுத்தன்மையை விளக்குவர் **வரதர்**.

சக்கரத்தைவிட்டுக் கலத்தைப் பிரிக்கும் ஊசி, கலம் பயன்பெறவும், வேற்றுக்கலம் வனைய இடந்தரவும் செய்வதன்றிக் கேடுசெய்வ-தில்லை இதனாலும் கருவி எனப்பொருள்கோடல் ஏலாததென்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**உட்பகை அஞ்சித்தற் காக்க :**

...... ......... ............இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு. -நாலடி. ,237

புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டும் கழிபெரும்
கண்ணோட்டம் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. -நீதிநெறி.,56

ஒன்னாரைத் தேறேல். –ஆத்தி. ,108

89.4. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும். (884)

உரைப்பகுதி :

அ) மணக். : மனம் நன்றாகாத உள்பகை தோன்றுமாயின், தனக்கு இனமாயினார் நல்லராகார்; அஃதன்றிப் பல குற்றங்களும் உண்டாம், எ–று.

இஃது இனம் பொருந்தாமல் கூடநின்று பகைப்பிக்கும் என்றது.

ஆ) பரிதி .: மனப்பொல்லாங்கினாலே உட்பகை தோன்றலின் இனத்தைக் கெடுத்துப் பேதையாகிய சிறுமை தரும் உட்பகையாவது உறவின் முறையார் பகைஎன அறிக, எ–று.

இ பரிப் .: மனம் நன்று ஆகாது உட்பகை தோன்றும் ஆயின் தனக்கு இனம் ஆயினார் நல்லர் ஆகார்; அற்று அன்றிப் பல குற்றங்களும் உண்டு ஆம், எ–று.

இஃது இனம் பொருந்தாமல் கூடநின்று பகைப்பிக்கும் என்றது. இவை நான்கினானும் அவர் செய்யும் திறன் கூறப்பட்டது.

ஈ) காளி .: ஒருவர்க்குத் தம் மனம் மாட்சி இல்லாததோர் உட்-பகை வந்து தோன்றுமாயின் தம் குடி மாட்சிமை இல்லாதவாறு உள்ள குற்றம் பலவற்றையும் தரும், எ–று.

உ) **பரிமேல்.:** புறம்திருந்தியது போன்று அகம் திருந்தாத[1] உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின் அஃது அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக்கு[2] ஏதுவாகிய குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

அவை சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் வேறுபட்டவழித் தான்தேறாமையும்[3], பின் அவற்றான் விளைவனவும் ஆம்.

ஊ) **கவிராசர்:** வெளியிலே உறவுபோலிருந்து உள்ளே பகையாயிருக்கிற பகைவருண்டானால், அந்தப் பகைவர், சுற்றத்தார் வசமாகாமைக்கு ஏதுவாகிய வெகுகேடுகளைச் செய்வர், (எ-று).

எ) **பழைய2:** மனமடங்காத உட்பகை ஒருவனுக்கு உண்டாயின் அஃது அவனுக்கு இனமடங்காத துன்பங்கள் பலவும் வரும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**'இனம் மாணார்'** என்பது பாடம். இது **மணக்குடவர்** உரையால் அறியப்பெறுவது. ஆனால் 'இனம்பொருந்தாமல் கூட நின்று பகைப்பிக்கும்' என்ற அவர் விளக்கம் எச்ச வாய்பாட்டதாக இருத்தல் 'மாணாராய்' என முற்றெச்சமாகக் கொண்டதாலும் நேர்ந்திருக்கலாம்.

**மணக்.:** 'இனம் மாணார்'; 'ஏதம் பலவும் தரும்' என இரண்டு தொடராக்கியுரைப்பர். இவ்வுரையில் 'மாணார் தரும்' என்ற வினைக்கு ஏற்ற வினைமுதல் இன்மையும் ஓர்க. 'மனம் மாணா உட்பகை தோன்றின் அது ஏதம்பலவும் தரும்' என முடிதல் கூடும். 'மனம் மாணார்' என்ற தொடருக்கு எழுவாயின்று. இந்த இடர்ப்பாட்டை அவரும் எண்ணியே 'இனம் பொருந்தாமல்' என எச்சமாக்கி உரைத்திருப்பர் எனத் தோன்றுகிறது.

**பரிதி**யுரையின் பிற்பகுதி ஏதம்–பேதைமை என்னுமாயினும் முடிபு வழுவின்று. 'உட்பகை தோன்றின் அது இனம் மாணா ஏதம் தரும்' என முடிகிறது.

---

1. புறம் திருந்தியது போன்று அகந் திருந்தாத - வெளியில் நட்பு இருப்பது போலக் காட்டி மனத்தில் நட்பு கொள்ளாத.
2. வயமாகாமை - வசப்படாமை
3. தான் தேறாமை - அரசனாகிய தான் சுற்றத்தாரை நம்பாமை.

**காளிங்கர்** 'இனமாணா ஏதம் நன்குடி மாட்சிமை இல்லாத-வாறு உள்ள குற்றம்' என ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாகக் கொண்டுமுடிப்பர். **பரிமேலழகர்** 'சுற்றம் வயமாகாமைக்கு ஏது-வாய குற்றம்' என்பர். இவர் கருத்து 'உட்பகை சுற்றத்தாரையும் பிரித்துவிடும், தீமைசெய்யத்துண்டும்' என்பதுபோலும்.

**பழைய உரை** 'மனமாணா உட்பகை-மனமடங்காத உட்-பகை' என்று கூறும். இவ்வுரை மிகுந்த சிறப்பிற்றன்று. அதிகாரப் பொருளைச் சிறப்பியாமையான் என்க.' **இராம.** 'சுற்றத்தாரின் உதவி சிறக்காதபடிக்கான துன்பம்' என்பர்.

இவற்றுள் 'உட்பகை சுற்றத்தையும் கெடுக்கும்' என்ற கருத்தமைந்த உரை செய்யுணடைக்கு ஒத்ததாகலாம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**மனம் மாணா உட்கை :**

தமரல் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்
சுவர்நிலம் செய்தமைத்துக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்குமாறு. — பழ நா., 290

**89.5.** **உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்-முறையான்**
**ஏதம் பலவும் தரும்.** (885)

## உரைப்பகுதி :

**அ) மணக்.:** உறவு முறையோடே உட்பகை தோன்றுமாயின், அது கெடுதல் முறையோடே கூடப் பல துன்பத்தினையும் தரும், எ-று.

இது சுற்றத்தாராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

**ஆ) பரிதி.:** உறவின் முறையான் உட்பகையாகில் தனக்குக் கேடு. அதனால் அனேகம் விதனம் வரும், எ-று,

**இ) பரிப்.:** உறவின் முறையோடே உட்பகை தோன்றும் ஆயின் அது கெடுதல் முறைமையோடே கூடப் பல துன்பத்தினையும் தரும், எ-று.

உறவு-உறுதல் ஆயிற்று. இது சுற்றத்தார் ஆகிய உட்பகை-யினால் வரும் தீமை கூறிற்று:

**ஈ) காளி.:** தம்மொடு வந்து உறுதல்[1] பண்பினான் யாவன்மாட்டு உட்பகை தோன்றுவதாயின் அதனான் இறுதல்[2] பண்பினான் வரும் குற்றம் ஒன்று இரண்டு அல்ல, பலவும் விளையும், எ-று.

உறல் என்பது தம்மோடு வந்து உறுதல் என்றது. முறைமை என்பது மரபு. இறல் என்பது உயிர்க்கு இறுதி. பொருட்கு இறுதி-வருதல் என்றது.

**உ) பரிமேல்.:** புறத்து உறவுமுறைத்தன்மை[3]யோடு கூடிய உட்-பகை அரசனுக்கு உண்டாவதாயின், அஃது[4] அவனுக்கு இறத்தல் முறையோடு கூடிய குற்றம் பலவற்றையும் கொடுக்கும், எ-று.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றாமல் கோறல் முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய[5] உறுப்-புகளைத் தேய்த்தலும் முதலாயின.

**ஊ) கவிராசர்.:** புறத்திலே உறவாய் உள்ளே பகைவைத்துக் கொண்டிருக்கிறவர்கள் ஒருவனுக்குண்டானால், அந்தப் பகைவர் அவனுக்குப் பிராண ஹானிபரியந்தம்[6] வருகிற குற்றங்களைச் செய்பவர். எ-று.

**ஏ) பழைய 2:** உறன் முறையாக இருந்து உட்பகையாகத் தோன்றினாயின், அஃதவனுக்கு இறத்தல் முறையான துன்பங்கள் பலவும் தரும்.

''ஏதந் துன்பங் குற்றப்பேர்'' என்பதனால் அறிக.

---

1. உறுதல் — வந்து போருத்துதம் — நட்பாதல்,
2. இறுதல் — விலகுதல் 3, உறவுமுறைத் தன்மை — சுற்றமாம் தன்மையோடு
4 முதலிய என்றமையான் பகைவர்க்கு அடிமையாகச் செய்தல், தனியானக்கி ஒடச் செய்தல் முதலியவற்றையுங் கொள்க.
5. முதலிய என்றமையின், அரண், பொருள். படை. நட்புக்களைக் கொள்க.
6, பிராண ஹானிபரியந்தம் — உயிர்க்கிறுதி வரை

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

### 'உறல் முறை'

'உறவுமுறையோடு' **மணக்.**; 'ஒன்றுபட்ட மன்மாக இருக்கையிலே' **பரிதி.**; 'நட்பு' **காளி.**; 'தனக்கு உள்ளாயினார் மாட்டு' **பரிமேல்** ; 'உறவினது' **காசு.**, **இராம.**; 'உறவு முறைத்தன்மையோடு' **குழந்தை.**; 'சுற்றத்தார்' **வரத.**; 'உறவு முறையில்' **வ.சுப.மா.**

இவற்றுள் 'உறன்முறை யான்' என்பதனை மூன்றனுருபேற்ற பெயராகக் கொண்டு 'உறவு முறையோடு' எனவும் உருபுமயக்கமாகக் கொண்டு உள்ளாயினார் மாட்டு எனவும் 'உறன்முறையான்' 'உறவினன்' எனப்பெயராகவும் உரை வகுத்தமையைக் காண்கிறோம். நட்பு கேளாந்தன்மை பெறுவதாயினும் உறவின்முறைவேறு, நட்பு வேறேயாகும்.

### "இறல் முறையான் ஏதும் பலவும் தரும்"

'கெடுதல் முறையோடு' **மணக்.**; "இறல்; முறையான் ஏதம் வரும்" எனக் கூட்டி, 'தனக்குக் கேடு; அதனால் அனேகம் விதனம் வரும்' என்பர் பரிதி; "இதனால் பண்பினான் வரும் குற்றம் ஒன்றல்ல; இரண்டல்ல; பலவும் விளையும்" என்பர் **காளிங்கர்.** 'பிராண ஹானி பரியந்தம் வருகிற குற்றங்களைச் செய்பவர்' என்பர் **கவிராசர்.** இறத்தல் முறையான துன்பங்கள் பலவுந் தரும் என்பது **பழையவுரை.** 'இறத்தற்கு ஒத்த துன்பம்' என்பர் **குழந்தை.**

இறத்தல் முறையான் துன்பம் என்பது இறத்தலை ஒத்த துன்பம் என்றவாறு. "இறக்குந் தன்மைத்தான குற்றம்" **தேவநேயர்.** 'இறப்பு வரும் வரை துன்பம் தரும்' என்பர். **வரத**

இவற்றுள் சாகுந்துன்பம் என்பது ஏற்புடையது.

89.6. ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. (886)

### உரைப்பகுதி :

அ) **மணக்.**: தனக்கு ஒன்றினார்மாட்டு ஒன்றாமை உளதாயின், எந்நாளினும் சாவாமையைக் கூடுதல் அரிது, எ-று.

இது நட்டோராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

**ஆ) பரிதி** : ஒன்றுபட்ட மனமாக இருக்கையிலே இருமனப் பட்டவர் உட்பகையாகில் எந்நாளும் கேடானது மேன்மேலே தழைக் கும், எ-று.

**இ) பரிப் .**: தன்னோடு ஒன்றார் மாட்டு ஒன்றாமை உளது ஆயின் எல்லா நாளினும் சாவாமையைக் கூடுதல் அரிது, எ-று.

இது நட்டார் ஆகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

**ஈ) காளி .**: தம்மோடு நட்டார்மாட்டும் உட்பகை உளதாம் ஆயின் மற்று ஒன்று கூடியும் அதனால் தான் எஞ்சாமை கூடுதல் அரிது. எ-று.

**உ) பரிமேல் .**: பகைமை தனக்கு உள்ளாயினார்மாட்டே பிறக்கு-மாயின், அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்றும் அரிது, எ-று.

பொருள்படை முதலிய[1] உறுப்புக்களான் பெரியனாயகாலத்தும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். இவை நான்கு பாட்டானும் அதனால் தனக்குவரும் தீங்கு கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்** : பகைமை தனக்கு உள்ளானவர்களிடத்திலே பிறந்தால், அவன் சாகாமல் இருக்கிறது அருமை, (எ-று).

**ஏ) பழைய 2** : 'பொன்றல் அரிது'பாடம்.

பொருந்தாமையாகிய வுட்பகை, பொருந்தியவனிடத்து, உண்டாயின்அஃது அவனுக்குஎஞ்ஞான்றுஞ் சாகாமற் சாத லரிது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**பரிதி**. வழக்கம் போலக் கருத்துப் பொருளைத் தருகிறார். **காளிங்கர்** 'பொன்றாமை-எஞ்சாமை' என்பர். 'எஞ்சுதல்-மிச்ச-மாதல். எஞ்சாமை-மிஞ்சாது இறத்தல்' எனக்கருதினர் போலும். இத்தகைய சிறுமாற்றங்களன்றிப் பெரிதும் வேறுபாடு இல்லை.

---

1. முதலிய என்றமையின் அரண் நட்பு முதலியவற்றையும் கொள்க.

89.7. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. (887)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** உட்பகையும் அஃது உற்ற குடியும், செப்பும்[1] மூடியும் பொருந்தினாற் போலப் பொருந்தினவாயினும் பொருத்தமில்லவாம், எ-று.

உட்பகையுற்றார் செப்பும் மூடியும் ஒன்றுபட்டாற்போல இருந்து செப்பகத்துப் பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய் அகன்று நிற்குமதுபோல அகன்று நிற்பர் என்றவாறு.

**ஆ) பரிதி .:** செப்பும் மூடியும் போலக்கூடியிருந்தும் செப்பு இரண்டானாற்போலே உட்பகையும் இப்படி இருந்தும் பிரிந்தவர் எ-று.

**இ) பரிப் .:** செப்பினது புணர்ச்சி போலப் புறத்து வேற்றுமை தெரியாமல் கூடினார் ஆயினும் பொருத்தம் இல்லாதவர் ஆவர். உட்பகையும் அஃது உட்பட்ட குடியும், எ-று.

செப்பும் மூடியும் ஒன்றுபட்டால்போல இருந்து செப்பு அகத்து உட்பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய்க் கழன்று நிற்கும் அதுபோல அகன்று நிற்பர், எ-று.

செப்பிற்கு உவமை குடி : மூடிக்கு உவமை உட்பகை.

**ஈ) காளி.:** செப்பு உருபு பொருந்துங் காலத்து முதலும் மூடியும் ஒரு பழுதற ஓர் உருபு என்னுமாறு இறுக முறுகப் பொருந்த நிற்கும் அன்றே : அதுபோலத் தம்முள் ஒருவேற்றுமையறப் பொருந்திநின்று ஓர் எல்லைக்கண் பின்னும் அச்செப்பின் புணர்ச்சிபோல் சிறிதும் கூடாது பக்குவிடுமே[2]. யாது எனின்? உட்பகை உற்றவரது குடி முழுதும், எ-று.

**உ) பரிமேல் .:** செப்பினது புணர்ச்சிபோலப் புறத்து வேற்றுமை தெரியாமல் கூடினாராயினும், உட்பகை உண்டாய குடியிலுள்ளார் அகத்துத் தம்முள் கூடார், (எ-று).

---

1. செப்பு — சிமிழ் 2. பக்குவிடுமே — பிளவுபடுமே

செப்பினது புணர்ச்சி-செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையின் புறப்பகை பெற்றுழி வீற்று வீற்றாவர் என்பதாம். குடி கூடாது என்பதனை நாடு வந்தது என்பது போலக் கொள்க[3]. உட்பகை தானுற்ற குடியோடு கூடாது என்றும் உட்பகை உண்டாயகுடி அப்பகையோடு கூடாது என்றும் உரைப் பாரும் உளர்[4].

ஊ) கவிராசர் .: செப்பை மூடினால் மேலே யொன்றுபோலே இருந்து உள்ளே வேறாயிருக்கும். அதுபோலே, வெளியிலே உறவாய் உள்ளே பகையாயிருக்கிறவர்கள் மனத்தில் தம்முள் கூடார், (எ-று).

ஏ) பழைய 2 : செப்பினது புணர்ச்சி போலப் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினாராயினும், உட்பகை உண்டாய குடியின் கூடாது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்குடவர்** 'உட்பகையுற்றகுடி' என்பதனை 'உட்-பகையும் அதனையுற்ற குடியும்' எனப்பிரித்தும் 'செப்பு' என்பதனைச் செப்பும் அதன் மூடியும்' எனக் கொண்டும் 'உட்பகை-உட்பகை-யுற்றார்' எனப்பொருள்கண்டு பொருளொடு பொருளைப் புணர்த்தி முதற்கண் பொருள் உவமங்கண்டு, பின்னர் உட்பகைவரும்-குடியும் புணர்ந்திருக்கும் நிலையில் செப்பின் புணர்ச்சியை உவமித்துத் தொழிலுவமமாகக் கொண்டும் பொருள் விரித்தனர். செப்பின் மூடி உட்பகையாய்த்தன்னகத்துப் பொருளைக் கவர வருவார்க்குத்திறந்து துணையாதல்போல உட்பகைஞர் புறத்தே வரும் பகைக்கு வழி-காட்டுவர் எனப் பொதுத்தன்மையும் விளக்கினர். இங்ஙனம் கூறின் முடிவுபொருந்தாது. **மணக்குடவர்** தரும் நயவுரை இனிமையானது.

**பரிமேலழகர்** செப்பின்புணர்ச்சியை உட்பகையுற்ற குடியின் புணர்ச்சிக்கு உவமித்துத் தொழிலுவமமாதலைக் குறிப்பர். 'குடி கூடாது' என வழுவில்லாது முடித்துக்காட்டும் இவர் உரை சிறந்தது. **இராம.** உட்பகையுற்ற குடித்தனம் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்-

---

3, குடி கூடாது என்றவிடத்து குடியின்புள்ளார் கூடார். இது குடி என்னும் இடப்-பெயர் ஆகுபெயராய் குடியின் உள்ளராய் உணர்த்தியது.

4. மணக்குடவர் உட்பகை தான் உற்ற குடியோடு கூடாது என்பர். பின்னது யாரது என்று அறியக் கூடவில்லை.

தாலும் செப்பும் மூடியும் ஒன்றன்மேல்ஒன்று சேர்ந்திருப்பதுபோல ஒட்டாமல் தானிருக்கும்' என்பர். குறட்பாவில் இக்கருத்திற்கு அமைதியின்மை அறியத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

கூடாதே உட்பகை யுற்றகுடி :

தழங்குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றால்
விழைந்தவரை வேர் சுற்றக் கொண்டொழுகல் வேண்டா
பழம்பகை நட்பாதல் இல். —பழ. நா., 296

வெள்ளம் பகைவரினும் வேறிடத்தார் செய்வதென்
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்தார் கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர அஃதன்றோ
உள்ளில்லத் துண்ட தனிசு. —பழ. நா., 297

89.8. அரம்பொருத[1] பொன்[2]போலத் தேயும் உரம்பொரு(து)
உட்பகை உற்ற குடி. (888)

உரைப்பகுதி :

அ) மணக். : உட்பகையானது உற்றகுடி, அரத்தினால் தேய்க்கப்பட்ட பொன்னைப் போல, அதனால் பொரப்பட்டு[3] வலிதேயும், எ-று.

இஃது உட்பகை அழகு செய்வது போலப் பலத்தைக் கெடுக்கும் என்றது.

ஆ) பரிதி : பெரிய அரத்திலே அராவின்[4] பொன்போலத் தேயும் உட்பகையுள்ள குடி, எ-று.

இ) பரிப். : உட்பகையானது உட்பட்ட குடி அரத்தினால் தேய்க்கப்பட்ட பொன் போல அவரால் பொரப்பட்டுத் தன் வலி தேயும், எ-று.

இஃது உட்பகை அழகு செய்வது போல வலியை அறுக்கும் என்றது.

---

1. பொருத, பொருது என்பன செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை எச்சங்கள்.
2. பொன் என்பது இரும்புக்கும் பெயராதலை 'பொன் என்ப வணப்பிரும்பு' என் நிகண்டால் அறிக.
3. பொரப்பட்டு — அறுக்கப்பட்டு 4. அராவின் — தேய்த்தல்

ஈ) **காளி.:** அராவுகின்ற[5] அரம் சென்று பொருத காரிரும்பு போலத் தமது உரம் முழுவதும் ஒழுகத் தேய்ந்துவிடும்: யாதோ எனின் உட்பகை உற்ற குடி முழுவதும் மற்று அவனால் பொரப்பட்டு எ—று.

பொன் என்றது இரும்பு.

அதனால் இதனின் நீங்கிப் பெரியோரோடு கெழீஇய நட்பின் பிழையாமையே உறுதி என்பதனை உணர்த்துதற்கு மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) **பரிமேல் ;** முன் வளர்ந்துவந்ததாயினும் உட்பகை உண்டாயகுடி, அரத்தால் பொரப்பட்ட இரும்புபோல அதனால் பொரப்பட்டு வலி தேயும், (எ-று)

பொருது என்னுஞ் செயப்பாட்டுவினையெச்சம் தேயும் என்னும் வினை கொண்டது. அஃது உரத்தின் தொழிலாயினும் குடிமேல் ஏறுதலின், வினை முதல் வினையாயிற்று. காரியஞ்செய்வது போன்று பொருந்தி மெல்லமெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்து விடும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவன்குடிக்குவரும் தீங்கு கூறப்பட்டது.

**காரி :** பொருது என்னும் செயப்பாட்டு வினையெச்சம், தேயும் என்னும் வினை கொண்டது. ''ஆகாறளவிட்டிதாயினும்,'[6] என்பதற்கு உரைத்தாங்கு உரையாது, உரத்தின் தொழிலாயினும், குடிமேலேற்றுதலின் வினை முதல் வினையாயிற்று என்பது.

ஊ) **கவிராசர் :** முன்னே வளர்ந்த குடியானாலும் உட்பகை உண்டான குடி, அரத்தாலே அராவப்பட்ட இரும்புபோல, தேய்ந்துபோம், (எ—று).

ஏ) **பழைய 2 :** அரத்தால் தேயப்பட்ட இரும்புபோல உட்பகையினுரம் தேய்ப்பக் குடி நாளிலே தேயும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'உட்பகையுற்ற குடி அரம் பொருதபொன் போல (உட்பகையால்) பொரப்பட்டு உரம்தேயும்' எனக் கூட்டிப் பொருள் காண்பர் **மணக்.,**

5, அராவுகின்றன — தேய்கின்றன. 6. குறள். 478.

**பரிமேல்., கவிராசர்** முதலான தொல்லோர். இராம 'உரம் குடும்பவலிமை' **வரத.;** அரமும் இரும்பு, அராவப்படுவது இரும்பு மிகப்பெரிய வலுவுள்ள இரும்பைச் சிறிய அரம் வலிகெட அராவுவது போலப் பெரிய குடியைச் சிறிய உட்பகை கெடுக்கும்' என விளக்கந்தருவர்.

89.9. எட்பக வன்ன சிறுமைத்தே யரயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. (889)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** எள்ளின் பிளவு போன்ற சிறுமைத்தேயாயினும், உடன் வாழும் பகையினால் ஒருவர்க்குக் கேடு உளதாம், எ-று.

இது பகை சிறிதென்று இகழற்க என்றது

**ஆ) பரிதி.:** எள்ளின் பாதியாகிலும் அந்த உட்பகையாலே கேடுவரும், எ-று.

**இ) பரிப் :** எள்ளின் பிளவே போன்ற சிறுமைத்தே ஆயினும், உடன் வாழும் பகையினால் உளது ஆகும் ஒருவர்க்குக் கேடு, எ-று.

இது உட்பகை சிறிது என்று இகழற்க என்றது.

**ஈ) காளி.:** எள்ளில் பிளந்த சிறுமை உடைத்தாயினும் உட்பகையுடனே வாழும் பகையின் கண்ணது ஒருவர்க்குக் கேடு , எ-று.

**உ) பரிமேல் :** அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின்பிளவை ஒத்த சிறுமையுடைத்தேயாயினும், பெருமையெல்லாம் அழிய வருங்கேடு அதனகத்ததாம், (எ-று).

எத்துணையும் பெரிதாயகேடு தனக்கு எல்லைவருந்துணையும் எத்துணையும் சிறிதாய உட்பகையுள்ளே அடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டுநிற்கும் என்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாது என்பது கூறப்பட்டது

**ஊ) கவிராசர் :** எள்ளிலே பாதியத்தனை உட்பகை யுண்டானாலும், பெருமையெல்லாம் அழியவரும் கேடு அச்சிறிய உட்பகையினிடத்ததாம், எ-று.

**ஏ) பழைய 2 :** அரசனது உட்பகை அவன் பெருமை நோக்க எள்ளின் பிளவை ஒத்த சிறுமைத்தேயாயினும் பெருமை எல்லாம் அழிய வருங்கேடு அதனகத்தே உள்ளதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :-

எட்பகவன்ன சிறுமைத்தே யாயினும் :

டஞ்சின் மெல்வி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
சி ியெ வென்றிகழார் பகை சென்றுசென்று -சீவக., 1894
அறிய லாவவன்றால் ........ -குளா.. 645

முற்றும்:

எள்ளுற்ற நுண்துகளின் துணையாகும் சிறுமைத்தே எனினும் யார்க்கும்
உள்ளுற்ற பகைஉண்டேல் கேடுளதென் றுரைப்பர் அஃது
உண்மையாமால்
தள்ளுற்றும் தள்ளுற்றும் ஏவல்புரிந் துழல்குலிசத் தடக்கை அண்ணல்
கள்ளுற்று மறைந்திருந்தே எனதுகரம் துணிப்பித்தான்
காண்மின் காண்மின்
-கந்த. அசமுகிபுலம்., 7

புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப. -நீதிநெறி., .55

89.10. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று. (890)

உரைப்பகுதி :

அ) மணக் .: மனத்தினால் பொருத்தம் இல்லாதாரோடு ஒத்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிலகத்தே பாம்போடு கூடி வாழ்ந்தாற் போலும், எ-று.

இது பாம்பு இடம் வந்தால் கடிக்கும் ; அதுபோல உட்பகைவர் இடம் வந்தால் கொல்லுவர் என்றது.

ஆ) பரிதி .: உட்பகையானார் கூட்டுறவு[1] ஒரு குடத்திலே பாம்பும் கெருடனும் இருப்பதற்கு ஒக்கும்' எ-று.

இ) பரிப் .: மனத்தினால் பொருத்தம் இல்லாதாரோடு ஒத்து வாழும் வாழ்க்கை ஒரு குடில் அகத்தே பாம்போடு கூட வாழ்ந்தால் போலும், எ-று.

பாம்பு எய்த வந்தால் கடிக்கும் : அதுபோல இடம் வந்தால் கொல்வார் என்றது.

1. கூட்டுறவு — கூடிவாழ்தல்

ஈ) காளி .: உள்ளத்துள் உடம்பாடிலாதவரோடு கூடிவாழும் வாழ்க்கை எத்தன்மைத்தோ எனின் பெரும்பேழையகத்து[2] உறையும் பாம்பொடு தாமும் ஆண்டுக்கூடி உறையும் அத்தன்மைத்து ஆகலான், எ-று.

உ) பரிமேல் .: மனப்பொருத்தம் இல்லாதாரோடு கூட ஒருவன் வாழும்வாழ்க்கை, ஒரு குடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற்போலும், எ-று.

குடங்கம் என்னும் வடசொல் திரிந்து நின்றது. இடச்சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற்கோட்படல் ஒருதலையாம்; ஆகவே இவ்வுவமையால்[3] அவனுயிர்க்கு[4] இறுதிவருதல் ஒருதலை என்பது பெற்றாம். இதனான் கண்ணோடாதவரைக் கடிக[5] என்பது கூறப்பட்டது

ஊ) கவிராசர் .:மனதுஒருமித்து உறவுசெய்யாதவருடனே கூடிவாழ்கிறது, ஒரு வீட்டிலே பாம்புடனே கூடி இருக்கிறாப்போலேயுாம், எ-று.

ஏ) பழைய 2 : 'உடன்பாடில் லாதவன்' பாடம்.

மனம் பொருத்தமில்லாதாரொடு கூட ஒருவன் வாழும் வாழ்க்கை ஒரு குடிலின் உள்ளே பாம்போடு கூட உறைந்தாற்போலும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'வாழ்க்கை'**

**மணக்குடவர்** 'ஒத்து வாழும் வாழ்க்கை' என்பர். **பரிமேலழகர்** 'கூட வாழும் வாழ்க்கை' என்பர். **காளி., கவிராசர்,** பழைய அனைவரும் அங்ஙனமே உடம்பாடு இல்லாதபோது ஒத்து வாழ இயலாதாதலின் 'கூடி வாழும் வாழ்க்கை' எனலே சிறந்தது. 'சேர்ந்து வாழ்வது', 'சேர்ந்து வசிப்பது' என்பனவும் ஏற்புடையன.

**'குடங்கர்'**

குடங்கம் என்னும் வடசொல்திரிந்து நின்றது என்றனர் **பரிமேலழகர்**. சுரும்பு, வண்டு, சாம்பல், பந்தல் போலும் தமிழ்ச் சொற்கள் 'அர்' பெறுமேயன்றி அம்மீற்று ஆரியச் சொல் அர் பெற்றுவருதல் இல்லை என்பதைச் சுரும்பு-சுரும்பர், வண்டு-வண்டர் போலும் வழக்குப்பற்றி உணர்க.

---

2 பேழையகத்து — பெட்டியினுள்

3. கண்ணோடாது அவரைக் கடிக — தாட்சணியங் காட்டாது அவரை நீக்குக.

அன்றியும், 'குடங்கர்' என்ற சொல் குடம்-வளைவுப் பொருளைத் தரும். பகுதியாகிய 'குட' என்பதனடியாகப் பிறந்த சொல் வேறுபாடுகளே குடி, குறில், முதலாயின அனைத்தும். ஆதலால் அது தமிழ்ச்சொல்லேயாதல் தெளிவு. பாம்பும் கருடனும் பிறவிப்பகையாயினும் **பரிதி**. கூறும் இவ்வுரைக்குச் சொல்லமைதியின்று. வரத.: பாம்புக்குரியதனால் 'வளை' என்பர் கருடன் முதலிய பகை இயற்கைப்பகை. மனிதன் உடனுறைந்தாற்போலும் என்றது சிறந்தது. 'பேழை' என்பர் **காளிங்கர்**. 'வளைவான சிறிய இடம்' **காளிங்கர்**. இவையனைத்திலும் 'குடில்' என்றதே சிறந்தது.

**ஒ) ஒப்புமைப்பகுதி :**

**உடம்பாடிலாதவர் வாழ்க்கை :**

நாணார் பரியார் நயனில செய்தொழுகும்
பேணா அறிவிலா மாக்களைப் பேணி
ஒழுக்கி அவரோ டுடனுறை செய்தல்
புழுப்பெய்து புண்பொதியு மாறு. — பழ.நா.,114

உடம்பாடிலாத மனைவிதோள் இன்னா. — இன்னா.,12

**பாம்போடுடன் உறைந்தற்று :**

பாம்பொடு பழகேல் —ஆத்தி.,78
பாம்போடு ஒருகரையிலே பயின்றாற் போல். —திருமொழி 11,8:3

பரந்த ளோடொரு மனைவயின் பயில்பவர் போல
வேந்த ரைவரும் மந்திர வலியினான் மிக்கோர்
காந்து நெஞ்சுடை யமைச்சனைக் கைவிடா ரனுகித்
தார்ந்த மெய்யென உயிரெனத் தனித்தனி சார்ந்தார்.
—வில்லி.வாரணாவதச்.126

நஞ்சினை யுடன்கொடுவாழ் தன்மையோ —கம்ப ,6499.

**முற்றும் :**

பாம்புறையும் புற்றன்னார் புல்லறிவினார்.
—நான்மணிக்.,56.

தலைமை கருதும் தகையாரை வேந்தன்
நிலைமையான் நேர்செய் திருத்தல் — மலைமிசை
காம்பனுக்கு மென்தோளாய் அஃதாலவ் வோரறையுட்
பாம்போடு உடனுறையு மாறு. —பழ.நா.,254

கவ்வர விதுவென விருத்திர் கற்பெனு
மவ்வரம் பழித்துமை யகத்துளே வைத்த
வெவ்வரம் பொருதவே லரசை வேரறுத்து
இவ்வரங் கொண்டநீ ரினியென் கோடிரோ.

—கம்ப.,2265

வாழ்மனைப் புகுந்த தாங் கோர் மாசுனம் வரக்கண் டன்ன
கோளுறக் கொதித்து விம்மி யுழையரைக் கூவிச் சொன்னான்.

—கம்ப.,3327

ஓ) மேற்கோள்பகுதி:

**சங்கர .:** உடம்படு மெய்யென்றாகும் : உடன்படல் என்பது உடம்படல் என மரீஇயிற்று. 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை' என வருதல் காண்க. —நன் ,162.

**சிவஞான .:** எழுத்தெனப்படுப வகர முதல் என்புழி வகரம் நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலினும் நின்ற உயிர்களை உடம்படுத்ததற்கு வந்த கருவியாதலின் அஃது உடம்படு மெய்யென்றாயிற்று. அஃது 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை' என்பதனாலும் அறிக —தொல் விருத் பக்.,42.

## 89. உட்பகை

| | நிழல் நீரும் | வாள் போல் | உட்பகை | மனமாணா | உறன்முறையான் | ஒன்றாமை | செப்பின் | அரம்பொருத | எட்பக | உடம்பாடு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 4 | 1 | 2 | 8 | 9 | 10 | 6 | 5 | 3 | 7 |
| பரிதி | 5 | 7 | 9 | 2 | 3 | 4 | 10 | 8 | 1 | 6 |
| பரிப். | 4 | 1 | 2 | 8 | 9 | 10 | 6 | 5 | 3 | 7 |
| காளி. | 5 | 6 | 3 | 4 | 9 | 8 | 2 | 10 | 1 | 7 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

89-வது அதிகாரம் 'உட்பகை' முற்றிற்று.

# 90. பெரியாரைப் பிழையாமை

**அ) மணக்.:** பெரியாரைப் பிழையாமையாவது தம்மின் பெரிய அரசரையும், முனிவரையும். அறிஞரையும் பிழைத்தொழுகாமை. மேல் பகையும் பகையின்கண் செய்யும் திறமும் கூறினார். இது தம்மின் பெரியார் தம்மைப் பகையாகக் கொள்ளாராயினும், தமது இகழ்ச்சி அவரால் தீமை பயக்குமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

**ஆ) பரிதி.:** பெரியாரைப் பிழையாமையாவது பெரியவர்க்கு ஒரு குற்றமும் செய்யாமை, எ-று.

**இ) பரிப்..** பெரியாரைப் பிழையாமை ஆவது தம்மில் பெரிய அரசரையும் முனிவரையும் அறிஞரையும் பிழைத்து ஒழுகாமை. மேல் பகையின்கண் செய்யும் திறமும் கூறினார் : இது தம்மில் பெரியார் பகையாகக் கொள்ளார் ஆயினும் தமது இகழ்ச்சியாலே அவரால் தீமை பயக்கும் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

**உ) பரிமேல்.:** அஃதாவது பெரியராயினாரை அவமதித்து ஒழுகாமை. இரட்டுற மொழிதல்[1] என்பதனான் பெரியார் என்பது ஆற்றலால் பெரியராய வேந்தர்மேலும் தவத்தால் பெரியாராய முனிவர் மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்றது இறுதிக்கண் வைக்கப்பட்டது.[2]

---

1. பெரியார் என்பது எதனாற் பெரியார் என்பதைக் குறியாது பொதுமையில் நின்றது அதனைப் பரிமேலழகர் தவத்தாற் பெரியராய முனிவர்மேலும் ஆற்றலால் பெரியராய வேந்தர் மேலும் நின்றது என்பர். ஈண்டு அதிகாரப்பட்டு நின்றது அங்கவியலாதலின் முனிவரை இச்சொல் நோக்காமை அறிக.

2. தொகுப்பும் குறிப்பும் காண்க.

ஊ) **கவிராசர் :** அஃதாவது- சாத்திரத்தினாலேயும்[3] ஆசாரத்தினாலேயும்[4] தவசினாலேயும் பெரியோர்களானவர்களையும், ஐஸ்வரிய பலங்களாலே[5] பெரியவர்களானவர்களையும் இகழ்ந்து பேசாமலிருத்தல். இகழ்ந்து பேசினால் சீக்கிரத்திலே கெடுவர், எ-று.

ஏ) **பழைய 2 :** அஃதாவது, பெரியராய வேந்தரையும் தவத்திற் பெரியாரையும் அவமதித்து ஒழுகாமை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பெரியவருக்கு ஒருகுற்றமும் செய்யாதிருத்தல்' என்ற **பரிதி** உரையினும் **மணக்குடவர்** தரும் விளக்கமும், அதற்குப் **பரிமேலழகர்** தரும் ஏதுக்களும் ஒன்றினொன்று சிறந்தன. **கவிராசர்** முதலியோர் உரைகள் சுருக்கத்தில் நயந்தோன்ற நிற்பன **கவிராசர்** 'பலதுறைப்பட்ட அறிவாற் பெரியோர்களும், பொருளாற் பெரியோர்களும்' என இருவகையரைக் குறிப்பர்.

**தேவநேயர்** 'பெரும்புலவர், பேரரையர், முற்றத்துறந்த முழுமுனிவர்' எனப் பெரியாரைப் பகுத்து முறையே 'சூழ்ச்சி வலிமையும், படைவலிமையும் தவவலிமையும் ஆற்றாலன் மிக்க பெரியோர்' என்பர். இதுவும் முன்னோர் கருத்தை வேறோராற்றான் பகுத்துணர்த்துவது.

**இராம** அறிவு, அனுபவம், ஆற்றல், ஆன்ம உணர்ச்சி இவற்றான் தம்மினும் பெரியோர் என்பர்! 895ம் **குறள்** விளக்கத்திலும் இதனை நன்கு விளக்குவர். **வரத** அறிஞரும், அரசரும், எனப் பெரியோரைப் பகுத்து, அவரைப் பகைத்தலால் வரும் தீமைகளை இம்மையில் வருவனவும், இருமையினும் வருவனவும், மறுமையில்மட்டும் வருவனவுமாகப் பகுத்துரைப்பர்.

**குழந்தை** 'பெரியோர் ஆற்றல் மிக்க அரசரும், பொதுநலப்பிரியரும்' என்பர்.

**பரிமேலழகர்** 'இரட்டுற மொழிதலான்பெரியார் என்பது ஆற்றலாற் பெரியராய வேந்தர் மேலும் தவத்தாற் பெரியராய முனிவர் மேலும் நின்றது என்றனர். முனிவர்க்குப் பிழையாமையின் பயனையும், பிழைப்பதன் தீமையையும், முனிவரின் பெருமையையும் **நீத்தார் பெருமையில்**

---

3. சாத்திரத்தினாலேயும் — நூல்களினாலேயும்
4. ஆசாரத்தினாலேயும் — ஒழுக்கத்தினாலேயும்
5. ஐஸ்வர்ய பலங்களாலே — பொருள் வலிமையால்

'ஐந்தவித்தானாற்றல்' என்பன முதலிய பாக்களான், உணர்த்திய வள்ளுவர் அங்க வியலிலும் கூறினார் என்றால் வேண்டாத கூறியது கூறலாம். இந்திரன் மேல் வைத்து அரசுக்கும் அங்கக்கட்கும் உணர்த்திய அறவுரையது.

மேலும் 'இவ்வதிகாரம் வெகுளியான் வருவனவற்ற திறுதிக் கண்வைக்கப்பட்டது' என்பர். இவர் இவ்வதிகாரம் எனச்சுட்டுவது **பெரியாரைப்பிழையாமையை**. மேலையதிகாரம் **உட்பகை**. அதிற்கூறப் பெறுவன வெகுளியைப் பற்றிய செய்திகளல்ல. வெகுளாமை முனிவர் பெருமை கூறும் **துறவறவியலில்** உள்ளது அதன்பின் அமைந்தது **இன்னு செய்யாமையே** யன்றிப் **பெரியாரைப் பிழையாமை** அன்று.

வேந்தராவர் பெரியாரைப் பிழைத்தலாகாது என்பதைக் கூறினர் எனின், அதுவும் இயைபிலதாம். அது 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்ற **குறளால்** விண் அரசன் கதியே இங்ஙனமாயின் மண்ணரசன் பேறும் இதைவிட இழிவாகும் என்பதைச் சொல்லிக்-காட்ட வேண்டிய இன்றியமையாமையே இல்லை. அன்றியும் இது **அங்கவியற்** பகுதியாதலின் அமைச்சர் முதலிய அங்கங்களை அரசர் முனிவர் முதலாயினார்க்குப் பிழைத்தலாகாது என்பதுவே ஆசிரியர் உரைத்தனராதல் வேண்டும்.

அரசன் பிழைத்தலாகாது என்பதை ஆண்டுக் கூறினர். ஈண்டு ஏனோர் பிழைத்தலாகாது எனிலோ அதுவும் நீத்தார் பெருமையிற் கூறியதாம் என்க. ஆகவே அனைத்து வகையானும் இவ்வுரைப்பகுதி அனைவரானும் ஆய்வுப்பட்டடையில் இட்டுத் தரம் பார்க்க வேண்டியதாகும்.

ஆகவே இவ்வதிகாரத் தொடக்கத்தின் பெரியார் - தவத்திற் பெரியார் என்றதும், இது பற்றிப் **பரிமேலழகர்** தரும் பிற உரைக்-குறிப்புகளும் விளக்கங்களும் வேண்டாத கூற்றாம்.

ஈண்டுப் பெரியார் என்றது முனிவர்களையும் கருதுமா? இவ்-வதிகாரத்தின் முறைவைப்புக் கூறுவது ஏற்புடையதா? என்பன சிந்தித்து முடிவு காண்டற்குரியன.

90.1. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. (891)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** தவத்தினானும் வலியினானும் பெரியாரது வலியை இகழாதொழிதல், தம்மைக் காப்பார்க்குக் காவலாகிய எல்லா-வற்றுள்ளும் தலையான காவலாம், எ-று.

இது பெரியாரைப் பிழையாமையால் வரும் பயன்கூறிற்று.

**ஆ) பரிதி .:** பெரியவர் எந்தக்கிரமத்திலே[1] நடந்தார் அந்தக் கிரமத்தை இகழாமல் நடப்பானாகில் போற்றுதற்கரிய காரியமான தன்மத்திலும் பெரியகாரியம், எ-று.

**இ) பரிப் .:** தவத்தினாலும் வலியினாலும் பெரியாரது வலிமையை இகழாது ஒழிக : அது தம்மைக் காப்பார்க்குப் போற்றிக் கொண்டிருக்கப் பட்டவை எல்லாவற்றுள்ளும் தலையாம், எ-று.

இகல் முதல் ஆகப் பெரியாரைப் பிழையாமை ஈறு ஆகப் பிறரால் வரும் துன்பப்பகுதி ஆயினவாறு கண்டு கொள்க.

**ஈ) காளி .:** உலகத்துத் தவநெறியாளராகிய பெரியோரது தவ நெறி ஒழுக்கத்தைத் தாம் இகழாமையாகிய தலைமை யாது? அது குறிக்கொள்வார் தம் குறிக்கோளுள் எல்லாம் சாலத்தலைமை[2] எ-று.

எனவே அவரைப் பிழைப்பின் தாம் கெடுவர் என்பது பொருள்.

**உ) பரிமேல் .:** எடுத்துக்கொண்டனயாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை. தங்கண் தீங்குவாராமல் காப்பார் செய்யும் காவல்கள் எல்லாவற்றிலும் மிக்கது, எ-று

ஆற்றல் என்பது பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூன்றன்[3] மேலும் நிற்றலின் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களையவல்லார் என்பது தோன்ற 'ஆற்றுவார்' என்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய[4] பிறகாவல்கள் அவரான் அழியுமாகலின் அவ்விக-ழாமையைத் 'தலையாய[5] காவல் என்றும் கூறினார். பொதுவகை-யால் அவ்விருதிறத்தாரையும் பிழையாமையது[6] சிறப்பு இதனால் கூறப்பட்டது

1. கிரமத்திலே - முறைமையிலே
2. சாலத் தலைமை - மிகத் தலைமை
3. மூவகையாற்றலாவன -பிரபு சக்தி, மந்திர சக்தி, உற்சாக சக்தி (சுவிராசர்)
4. முதலிய என்றமையான் அமைச்சர், புரோகிதர் முதலியவரையுங் கொள்க.
5. 'தலை' என்றும் பாடமுண்டு.
6. பிழையாமையது - தவறு செய்யாமையது.

ஊ) **கவிராசர்** .: தாங்களெடுத்த காரியமெல்லாம் முடிக்க வல்லவர்களை அவமதியாமலிருக்கிறதே தனக்குத் தீங்குவாராமற் காக்கிற காவலிலே யெல்லாவற்றிலும் மிக்கது. எ-று.

ஏ) **பழைய 2** : எடுத்துக் கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றலை அவமதியாமல் தீங்கு வாராமற் காப்பார் தம்மைக் காக்குங் காவலுள் எல்லாம் தலைமையான காவலாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

**பரிதியுரை** சிறப்பின்று; **குறட்பாவின்** நேர்பொருள் கூறாமையான் 'ஆற்றுவார் தவத்தானும் வலியானும் பெரியர்' என்ற **மணக்குடவர்** உரையைப் **பரிமேலழகர்** 'எடுத்துக் கொண்டன யாவும் முடிக்க வல்லார்' என மாற்றி எழுதுவர். **மணக்குடவர்** 'ஆற்றுவார் ஆற்றலையுடைவர்' என்ற பொருளில் விரித்து அதன் கருத்தாகத் 'தவவலியையும் ஏனையவலிகளையும் உடையார்' எனப் பொருள் கண்டனர். **பரிமேலழகர்** 'ஆற்றுதல்-செய்தல், ஆற்றுபவர்-செய்து முடிக்க வல்லார்' என்றனர். இந்நூலுள் 'ஆற்றுவார்' என்பது ஐந்திடங்களிலும், 'ஆற்றுபவர்' என்பது மூன்றிடங்களிலும், 'ஆற்றும்' என்ற எச்சவாய்ப்பாட்டான் வந்த சொல் நான்கிடங்களிலும் ஆசிரியராற் பயிலப்படுகின்றன. யாண்டும் 'செய்பவர்–செய்து முடிக்க வல்லவர்' என்ற பொருளிலேயே வந்-துள்ளன. அவற்றை எண்ணிப் **பரிமேலழகர்** கூறினராதல் தெளிக. **மணக்குடவரோ** 'ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்' (741) என்ற தொடரில் 'ஆற்றலுடையவர்' எனப் பொருள்படுதலால் அதனை அடிக்கொண்டு 'ஆற்றலாற் பெரியார்' என்றனர். ஆயினும் ஈண்டும் அது செய்யுந்திறலுடையார் என்ற கருத்திலேயே ஆளப்பெற்றுள்ளது கண்டு 'ஆற்றுபவர்-வலிகளாற் செய்துமுடிக்கவல்லார்' என்ற பொருட்கண்ணேயே வந்திருத்தல் காண்க. **வரத.** 'ஆற்றுவார்-ஆற்றலையுடையவர்' என்றே பொருள் காண்பர். **இராம.** இங்-ஙனமே கொள்வர். ஏனோர் அனைவரும் 'செய்து முடிப்பார்' என்பர் இவைகள் அனைத்தையும் இணைத்து எண்ணின் 'செய்து முடிப்-பவர்' என்பதே சிறப்பாதல் காண்க.

'ஆற்றுவார்-முனிவர், சாத்திரநீதி தவநெறிகளாலே பெரி-யோர்' என்பர் **மணக்குடவரும், கவிராசரும்.** அரசின் ஆக்க அழிவுகட்கு முனிவராதி யோரும் அரசர்களைப் போல ஏது-

வாதலின் இருவரையும் பெரியார் என்றல் பிழையாகாது. ஆனால் முனிவர் தவசிகளைமட்டும் பெரியார் என்றல் இயல்நோக்கிற்கு இயையாது எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

...... ...... துகளறு தொழிலை யாகிச் - கம்ப., 4226

90.2. பெரியாரைப் பேணா தொழுகின் பெரியாராற்
பேரா இடும்பை தரும். (892)

உரைப்பகுதி :

அ) மணக்.: பெரியவர்களைப் போற்றாது ஒழுகுவானாயின், அவ்வொழுக்கம் அவராலே எல்லாரானும் இகழப்படும் நீங்காத துன்பத்தைத் தரும், எ-று.

இது முனிவரைப் போற்றா தொழியின், அது குற்றம் பயக்கும் என்றது.

ஆ) பரிதி.: பெரியாரை உதாசினம்[1] சொல்வனாகின் அந்த பெரியாரால் போக்குதற்கரிய இடும்பை தரும், எ-று.

இ) பரிப்.: பெரியாரைப் போற்றாது ஒழுகுவான் ஆயின் அவன் ஒழுக்கம் அவராலே எல்லாரானும் இகழப்படும் துன்பத்தைத் தரும், எ-று.

இது முனிவரைப் போற்றாது ஒழுகின் குற்றம் பயக்கும் என்றது. இவை இரண்டும்[2] பிழையாமை வேண்டும் என்று கூறப் பட்டது.

ஈ) காளி : 'பேணா இடும்பை' பாடம்.

அங்ஙனம் பெரியோரை நெஞ்சினால் விரும்பாது ஒழுகின் அப்பெரியார் தம்மாலும் பேணிக்கோடற்கு அரிதாகிய பெரிய இடும்பையைத்தரும், எ-று.

பேணாஇடும்பை என்பது பேணிக்கொள்ள ஒண்ணாத இடும்பை என்றது.

---

1. உதாசினம் - அலட்சியப்படுத்துதல்
2. இரண்டும் என்றது 'குன்றன்னார்' (898) என்ற குறளும்

**உ) பரிமேல்.:** ஆற்றல்களான் பெரியாராயினாரை வேந்தர் நன்குமதியாது அவமதித்து ஒழுகுவாராயின், அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும், (எ—று).

அத்துன்பங்களாவன: இருமையினும்[3] இடையறாது[4] வரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாந் தாமே செய்து கொள்கின்றனர் என்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் கூறினார்.[6] பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையான் கூறுக.

**ஊ) கவிராசர்:** சாத்திர நீதி தவசுகளாலே பெரியோர்களானவர்களை இகழ்ச்சி செய்தால், அந்த இகழ்ச்சி, பெரியவர்களாலே அவனுக்கு எந்நாளும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும் எ-று

**ஏ) பழைய 2:** பெரியவர்களை வேந்தர் நன்கு மதியாது அவமதித்து ஒழுகுவாராயின், அவ்வொழுக்கம் பெரியவர்களாலே நீங்காத துன்பங்களைக் கொடுக்கும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்.:

**'பேணாது'**

'போற்றாது' **மணக்.**; 'உதாசினம் செய்பவனாகில்' **பரிதி.**; 'நெஞ்சால் விரும்பாது ஒழுகின்' **காளி.**; 'நன்குமதியாது' **பரிமேல்.** 'இகழ்ந்தால்' **கவிராசர்**; 'மதித்து யோசனைகேட்டுக் கொள்ளாமல் ஒழுகினால்' **இராம.**; இவையனைத்தும் ஒத்த நிலையினவாயினும் 'அவமதியாமையோடு அதாவது நன்கு மதித்தலும் வேண்டும்' என்பதே '**பிழையாமை**' என்ற அதிகாரத்திற்கு இயைபுடைதாகும்

முன் **குறளில்** 'பிழையாமையை' வலியுறுத்தியவர் இக் **குறளில்** போற்ற வேண்டிய அவர்களைப் போற்றாமையும் பிழைத்தலோடொக்கும் என வலியுறுத்துவாராயினர்.

---

3. இருமையினும் — இம்மை மறுமை 4. இடையறாது — விடாமல்

5. மூவகைத் துன்பங்கள் — தன்னைப் பற்றி வருவனவும் பிறஉயிரைப் பற்றி வருவனவும் தெய்வத்தைப் பற்றி வருவனவுமாகிய துன்பங்கள்,

6. தொகுப்பும் குறிப்பும் காண்க.

காளிங்கர் 'பேணா இடும்பை தரும்' எனப்பாடங்கொண்டு, 'அப்பெரியோராலும் பேணிக் கொள்ள முடியாத இடும்பை தரும்' என்பர்.

பரிமேல். 'ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும், பெரியாரைக் கருவியாக்கியும் கூறியது ஒழுக்கம் பெரியாரால் பேரா இடும்பைதரும் என்பது என்பர். இது 'ஒழுகின்' என்னும் செயின் என்னும் வாய் பாட்டெச்சத்தினின்றும் பிரிந்த அவ்வொழுக்கம் என்பதை எழு-வாயாக்கியும், பெரியாரை என்பதைப் பெரியாரால் எனத் துணைக் கருவியாக்கியும் கூறினர் என விளக்கக் குறிப்புத் தருவர் கோ.வ. இதில் 'ஒழுகின்' என்னும் வினைஎச்சம் 'ஒழுகு' என்னும் வினையடியா-கப் பிறந்தது. 'ஒழுக்கம்' என்பது தொழிற்பெயர் ஆகவே வினை-எச்சம் தொழிற் பெயராய் வினைமுதல் ஆதல் யாங்ஙனம்? அதலால் அவ்வொழுக்கம் அல்லது அது என்ற சுட்டுப்பெயராய வினைமுதல் அவாய் நிலையான் வந்தது என்றலே இயைபுடையது.

அங்ஙனமே 'பெரியாரை' என்ற செயப்படு பொருண்மை காட்டும் பெயர்ச்சொல் பேணது ஒழுகின் 'என்பதனேடுஇயைந்து வினை முடிபேற்றதாகப். பின்பு ஆசிரியரே பெரியாரால் என முன்றனுருபு ஏற்றுத் துணை வினைமுதலாமே யன்றித்துணைக் கணக்கருவியாகாது. கருவி எனின் அது கருத்தாவாகாமையைப் பால்காட்டும் விகுதி கொண்டு அறியலாம் ஆதலின். அன்றியும் ஆசிரியரே பெரியாரால் என் கிருர். ஆதலால் பெரியாரால் என்றது அவரால் என்ற சுட்டும் பெயர் மாத்திரையாய் நின்றது எனலே ஏற்புடையதாம். ஒருவன் பேணது ஒழுகப்பட்டாரும், பெரியாரான் எனப்பட்ட பெரியாரும் ஒருவரே யாதலான் அவரால் என்பதே அமையும். அதற்கேற்ப சுட்டனவாய் நின்றது என்ற இலக்கணமே போதுமானது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பேணாது ஒழுகின் :**

... ... நலத்தை யோரான் — கம்ப., 8307

**முற்றும் :**

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும் — வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது. — நாலடி., 161

தீயன கொடியவள் செய்த செய்கையை
நாயினேன் உணரினன் னெறியி னீங்கலாத்
தூயவர்க் கிடரிழைத் துழலும் தோமுடை
ஆயவர் வீழ்கதி அதனில் வீழ்கயான் — கம்ப., 2307

மெய்ம்மை நீங்கியே கொலைகளை வியன்றுமே லுள்ள
செம்மை யாளரைச் சீறியே அணங்குசெய் தீயோர்
தம்மில் லாற்றரும் பழிசுமந் தொல்லையில் தமரோ (டு)
இம்மை வீடுவர் எழுமையும் துயரினு டிருப்பர்
— கந்த. அவைபுகு., 104

90.3. கெடல்வேண்டின் கேளாதுசெய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. (893)

உரைப்பகுதி :

அ) மணக். : தான் கெடுதல் வேண்டுவானாயின், பெரியாரைக் கேளாதே ஒரு வினையைச் செய்க ; தன்னைக்கொல்ல வேண்டுவனாயின் வலியுடையார்மாட்டே தப்புச் செய்க, எ-று.

ஆ) பரிதி : தான் கெடவேண்டினால் பெரியோர் வார்த்தைக் கேளாதிருப்பது ; வாழவேண்டினால் பெரியோர்வார்த்தை கேட்பது எ-று.

இ) பரிப் : தான் கெடுதல் வேண்டுவன் ஆயின் பெரியாரைக் கேளாதே ஒரு வினையினைச் செய்க. தன்னைக்கொல்ல வேண்டுவன் ஆயின் வலி உடையார் மாட்டே தப்புச்செய்க, எ-று

கேளாது செய்தல் என்பதனை மந்திரி புரோகிதரைக் கேளாது செய்தல் என்று கொவ்ளப்படும். அவ்வாறு செய்தால் அவரை அவமதித்தல் ஆம் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. அறிவாரைக் கேளாது செய்தலும் வலியார்க்குத் தப்புச் செய்தலும் குற்றம் என்றது.

ஈ) காளி : தான் கெடவேண்டினான் ஆயின் நல்ல அறிவுடையாரோடு ஆராயாது ஒரு காரியத்தைச் செய்வானாக ; மற்றுத் தன்னைக்கொல்ல வேண்டினானாயின் வலியுடைய பெரியோர்மாட்டுக் குற்றத்தைச் செய்க, எ-று.

இனி மற்று இவர்கண் இழுக்கு[1] என்னும் இக்குற்றம் கடந்ததன் பின்னரே இது பெண்மை அஞ்சுவான் யாவன்? மற்று அவன் பெரிதும் அஞ்சும்; யாதினை எனின்? எஞ்ஞான்றும் உலகத்து நல்லோராகிய சான்றோர்க்குக் கூட வழக்கு இயல்பு அல்லாதது ஓர் இழுக்கு ஆகலான் இதுவும் பரிகரிக்க வேண்டும்" என்பதனை உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

**உ) பரிமேல்.:** வேற்று வேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்ய வல்ல வேந்தர்மாட்டுப் பிழையினை, தான் கெடுதல்வேண்டினானாயின் ஒருவன் நீதிநூலைக் கடந்து செய்க.

அப்பெரியாரைக் ''காலனும் காலம்பார்க்கும் பாராது, வேலீண்டுதானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தர்'' [2] என்றார் பிறரும். நீதிநூல் செயலாகாது என்று கூறலின், 'கேளாது' என்றார்.

**ஊ) கவிராசர்:** ஒருவன் தனக்குக் கேடு வேண்டினால், மறு-மண்டலத்து[3] ராசாக்களுடனே சண்டைபண்ணிக்கொள்ள வேணும்; துக்கம் வேண்டினால் பெரியவர்களுக்குப் பொல்லாங்கு செய்க, எ-று.

**ஏ) பழைய 2:** ஒருவன் கெடவேண்டுமாயின் பொருந்தாத காரியங்-களைச் செய்க, வேற்றுவேந்தரைக் கொல்லவேண்டிற் கொல்லும் வலியுடைய பெரியோரிடத்து இழுக்கினை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**மணக்குடவர்** 'செய்க' என்பதனை இடைநிலைத்தீவக-மாகக் கொண்டு 'கெடல்வேண்டின் கேளாது செய்க; அடல்வேண்டின் ஆற்றுபவர்கள் இழுக்குச்செய்க' என இருதொடராக்கி உரைப்பர். **பரிப்பெருமான்** விளக்கம் இக்கருத்தை நன்குவிளக்கும்.

**பரிமேலழகர்** 'அடல்வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு கெடல் வேண்டின் கேளாது செய்க' எனக் கூட்டி ஒரு தொடராக்கி யுரைத்தனர். 'அடல்' என்ற சொல் 'ஒருவன் பிறனைக்கொல்லுதல்' என்னும் பொருளதன்றித் தன்னைக் கொல்லவேண்டுவனாயின்' என்பது செப்பொருளதாகக் கொள்ள முடியாமையின் இங்ஙனம் மாற்றினார் போலும்.

---

1. இழுக்கு — நெறி தவறுதல் 2. புறம். 41 : 1-3.
3. மறுமண்டலத்து — வேற்று நாட்டு

வள்ளுவர் நோக்கு, ஆற்றுபவர்கண் இழுக்குச் செய்தலே-யன்றிக் கேளாது செய்தலும் பிழைத்தலாம். அவற்றால் வரும்பயன். கேளாது செய்தலால் கெடுதலும், இழுக்குதலால் பகைவரான் அடு-தலும் ஆம் என்பது போலும்.

முதற்குறளில 'ஆற்றலையிகழ்தலும்' இரண்டாம் குறளில் 'பேணாதொழுகலும்' இக்குறளால் 'கேளாது செய்தலும் இழுக்குச் செய்தலும்,' வருங்குறளால் 'இன்னா செய்தலும். பெரியோ-ரைப் பிழைத்தலாம். அவற்றைச் செய்தலாகாது என்பார். ஆதலின், பரிமேலழகர் உரையால் இக்கருத்து வெளிப்படாமையின் இரு-தொடராகக்கொண்டு 'கெடல் அடல்' வினைகளை ஒருவன்மேல-தாக்கியுரைப்பதும் ஏற்புடைத்துப்போலும். அன்றியும், 'கேளாது' என்பதற்கு நீதிநூல்களை யாராயாது அதாவது கடந்து எனக் கேட்டல்-நீதிநூல்களைக் கடந்து என்று பலசொல் வருவித்துக் காட்ட வேண்டியும் உள்ளது. இவையனைத்தையும் எண்ணித்துணிக.

'ஆற்றுவார்' என்பதற்குப் பரிமேலழகர் காட்டிய புறப்-பாட்டு மிகமிக ஏற்புடையது. 'கேளாது' என்பதற்கு 'நீதிநூல் கேளாது' என இயைத்துப் பொருள் கோடலின் பொருந்தாமையைக் கருதி 'நீதிநூல் செயலாகாது' என்று கூறலின் 'கேளாது என்றார்' என்ற இயைபும் கூறி வலுப்படுத்தினர்.

நீதிநூல் இன்னகாலத்து இன்னாரோடு இங்ஙனம் போர் செய்க தவிர்க எனப் பொதுவகையான் செய்வன தவிர்வன சொல்லு-மேயன்றிச் சிறப்பு வகையான் சொல்லா. ஆதலால் 'ஆற்றுபவர்' என்பது அவ்வக்காலத்து அரசையும் போரையும் தாங்கி பலவகை-யான் ஆலோசனை கூறிச் செலுத்தும் ஐம்பெருங்குழுவினரையும் கேட்டுச் செய்வதே மரபாதலின் 'நூலைக்கேட்டு' என்பதைவிட 'குழுவினரைக் கேட்டு' என்பதே மிகச்சிறந்ததாதல் காண்க

ஒ) ஒப்புமைப்பகுதி :

**கெடல் வேண்டின் கேளாது செய்க :**

குரவ ரைச்சிறு பாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மைமே லவரை
அரும றைத்தொழி லாளரை ஒறுத்தன ரன்றோ
நிரய முற்றவும் சென்றுசென் றலமரு நெறியோர்.

—கந்த. சூரனமைச். ,103

90.4. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்
ஆற்றுவார்க் (கு)
ஆற்றாதார் இன்னா செயல். (894)

உரைப்பகுதி :

அ) மணக் .: வலியுடையர்க்கு வலியில்லாதார் இன்னாதவற்றைச்[1] செய்தல், தம்மைக் கொல்லும் கூற்றத்தைக்[2] கைகாட்டி அழைத்தாற் போலும், எ—று.

ஆ) பரிதி .: தன் சீவனை ஒருவருக்கும் கொடாதவன் காலனைப் 'போர்செய்ய வா' என்று அழைத்ததற்கு ஒக்கும் பெரியோருடன் பகை கொள்ளுதல், எ-று.

இ) பரிப் : வலி உடையார்க்கு வலி இல்லாதார் இன்னாத செய்தல் தம்மைக் கொல்லும் கூற்றைக் கைகாட்டி அழைத்தால் போலும், எ—று

மேல் கூறிய மூவரினும் அரசரைப் பிழைத்தலால் வரும் குற்றம் கூறுவார் முற்பட உயிர்க்குக் கேடு வரும் என்றார்

ஈ) காளி : தமக்கு மிக வேதனை வருதலை யாரும் வேண்டார் அன்றே! மற்று அதற்கு உரிய கூற்றத்தை 'இங்கே வா' என்று தாமே தம் கைகாட்டி அழைத்த அத்தன்மைத்து; யாது எனின்? தவ நெறியாளராகிய பெரியோர்க்கு மற்று அஃது இல்லாராகிய சிறியோர் இன்னாதனவற்றைச் செய்தல், எ—று.

உ) பரிமேல்.: மூவகையாற்றலும் உடையார்க்கு அவை இல்லாதார் தாம் முற்பட்டு இன்னாதவற்றைச் செய்தல், தானேயும் வரற்பாலனாய கூற்றுவனை அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தாலொக்கும், (எ-று).

கையால் விளித்தல் இகழ்ச்சிகுறிப்பிற்று. தாமேயும் உயிர் முதலிய[3] கோடற்கு உரியாரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையுங்[4] கூறியவாறு. இவை இரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின்[5] குற்றம் கூறப்பட்டது.

1. இன்னாதவற்றை - துன்பந் தருவனவற்றை 2. கூற்றத்தை – எமனை
3. முதலிய என்றமையின் இடம் பொருள் ஏவல் முதலியனவும் கொள்க.
4. உண்மையும் அண்மையும் - தவறாமையும் நெருக்கமும்
5. பிழைத்தலின் - தவறுதலின்

ஊ) கவிராசர் : மூவகை யாற்றலுடைய பெரியவர்களுக்கு, அவையில்லாத சிறியவர்கள் தாம் முற்பட்டுத் தீமைகளைச் செய்தல், தானே வருகிற கூற்றுவனைக் கைகாட்டி அழைக்கிறதற்குச் சரி எ—று.

ஏ) பழைய 2 : தன்னைக்கொல்லக் கூற்றுவனைக் கைகாட்டி யழைத்ததற் கொக்கும், தவத்தாற் பெரியோர்க்கும் வேந்தர்க்கும் வலிமை யில்லாதவர் பொல்லாங்கு செய்தல்,

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கையால் விளித்தற்று'

'கையைப்பிடித்து இழுத்தற்குச் சமானம்' இராம. இதில் மூன்றாம் வேற்றுமையுருபுக்குச் செயப்படுபொருள் தோன்ற உரைத்-ததும், விளித்தல் அழைத்தலாகுமேன்றி இழுத்தல் என்றதும் தவ-றாகும் என்பதை எண்ணிய அவர் 'அதாவது வற்புறுத்தியழைத்-தல், மரணத்தை வலியவருவித்துக் கொள்வதற்குச் சமானம்' என்ற றெல்லாம் பலபட எழுதினர் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் :

காலனை அளியன்தானே கையினால் விளிக்கும்.

— சீவக., 2148

ஆற்றுவார்க் காற்றாதார் இன்னாசெயல் :

வெஞ்சின மன்னவன் வேண்டாத செய்யினும்
நெஞ்சத்துக் கொள்வ சிறிதும் செயல்வேண்டா
என்செய் தகப்பட்டக் கண்ணும் எழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில். — பழ. நா., 282

எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார் கயப்பித்தல் – சொல்லின்
நிறைந்தார் வளையினாய் ! அஃதால் எருக்கு
மறைந்தியானை காய்த்தி விடல். — பழ. நா., 63.

905. யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். (895)

உரைப்பகுதி ;

அ) மணக். : எவ்விடத்துச் செல்லினும் எவ்விடத்தும் உளராகார்; வெய்ய வலியையுடைய வேந்தனால் செறப்பட்டார்[1], எ-று.

ஆ) பரிதி : எந்தத் தேசத்திலும் போய் பலதீர்த்தம் ஆடிலும் மனுஷரானவர்கள் பெரியோர் முனிந்தால் உய்யார்[2], எ-று.

இ) பரிப். : எவ்விடத்துச் செல்லினும் எவ்விடத்தும் உளர் ஆகார் வெய்ய வலிஉடைய வேந்தனால் செறப்பட்டவர், எ-று.

இது கெட்டுப் போனாலும் இருக்கல் ஆவது ஓர் அரண் இல்லை என்றது.

ஈ) காளி : எவ்விடத்தில் சென்றும் எக்காலத்திலும் உளராக உய்யமாட்டார்; மற்று யார் எனின்? உலகத்து நல்லோரால் விரும்பத்தக்க வலிக்கு ஒரு சக்ரவர்த்தியாகிய அரசரால் செறப்பட்டவர், எ-று.

ஈண்டு வெம்மை என்பது விருப்பம் என்றது. துப்பு என்பது வலி என்றது.

உ) பரிமேல். : பகைவர்க்கு வெய்தாய வலி[3]யினையுடைய வேந்தனால் செறப்பட்ட அரசர், அவனைத் தப்பி எங்கே போய் உளராவர், ஒரிடத்தும் உளராகார், (எ-று)

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன[4]. வெந்துப்பின் வேந்து ஆகலால் தன்னிலம் விட்டுப் போயவர்க்கு இடங்கொடுப்பார் இல்லை, உளராயின்[5] இவர் இனியாகார் என்பது நோக்கி அவனோடு நட்புக்கோடற் பொருட்டும் தானே வந்தெய்திய அவருடைமை வௌவுதற்பொருட்டும்[6] கொல்வர், அன்றெனின் உடனே

1. செறப்பட்டார் - ஒறுக்கப்பட்டார் 2. உய்யார் - பிழையார்
3. வெய்தாய வலி - மிகக் கொடிய திறமை
4. 'யாண்டுச் சென்று' என்பது அவனைத் தப்பி என்பதையும் 'உளராவர்' என்பதையும் அவாவிநின்றது காண்க
5. உளராயின் - இடம் கொடுப்பவர் உண்டானால்
6. வௌவுதற் பொருட்டு - கவர்தல் பொருட்டு

ஆழிவர் என்பன நோக்கி 'யாண்டுச் சென்று யாண்டும் உளராகார்' என்றார். இதனால் அக்குற்றமுடையார் அருமையுடைய அரண்[7] சேர்ந்தும் உய்யார் என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** : பகைவர்க்கு வெய்ய பலமுடைய அரசனாலே கோபிக்கப்பட்டவர்கள் தப்பிப்போய் எங்கேயும் பிழைக்கமாட்டார்கள் எ-று.

எ) **பழைய 2** : 'உளராகார் வேந்துப் பின்' பாடம்.

எவ்விடத்திற் சென்று எவ்விடத்தினு மிருக்கமாட்டார் வேகும் வலி[8]யினையுடைய வேந்தனாற் கோபிக்கப்பட்டவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பல தீர்த்தம் ஆடினும்' என்பதை விருவித்துரைக்கும் **பரிதியார்** 'சமய உணர்ச்சியுடையவன்', என்பதை அறிவித்துக் கொள்வராயினும் இவருரை **பொருட்பாலின் அங்கவியலுக்கு** ஏற்புடையதன்று.

**மணக்குடவர், காளிங்கர்** 'வெம் + துப்பின்' எனப்பிரித்து 'விரும்பத் தக்கவலிமை' என உரை காண்பர். 'வெய்தாய வலிமை' என்பர் **பரிமேலழகர்** முதலான அனைவரும் **இராம.** ஆசை குற்றங்களை வென்ற அரசனாகிய பெரியோர்' என்பர் 'செறப்பட்டார் செறுகின்றவர் என்ச் செயப்பாட்டுவினைச் சொல்லாகப் பொருள் கொள்க' எனவும் உரைப்பர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

மன்னவன் ஆணைக்கீழ் மற்றையார் மீக்கூற்றம்
என்னின் வகையாற் செயப்பெறும் - பின்னைப்
பரப்புநீர் தாஅம் படுகடல் தண் சேர்ப்ப
மரத்தின்கீ ழாகா மரம். - பழ.நா., 252

வேந்தொடு மாறுகோட்டல் விளிந்துற்றார் தொழில் தேர்கும்.
- சீவக., 1089

சக்கர நெறி நில்... - ஆத்தி., 4
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை - கொன்றை., 88
கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம் - உலக., 4

7. அருமையுடைய அரண் - பிறர் புகுதற்கரிய கோட்டை
8. வேகும் வலி - சுட்டெரிக்கும் வன்மை

ஓ) மேற்கோள்பகுதி :

சுவாமி : 'வேந்து செறப்பட்டவர்' என்பதில் செறப்பட்டார் என்னும் வினைமுற்றுப்பெயர் ஈற்றயல் திரிந்துவந்தது என்பர்.

—இ. கொ 83

90.6. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார் பிழைத்தொழுகு வார். (896)

உரைப்பகுதி :

அ) மணக்.: தீயினால் சுடப்படினும் உய்தல் உண்டாம்; பெரியாரைப் பிழைத் தொழுகுவார் உய்யார், எ-று.

இது முனிவரைப் பிழைத்தலினால் வரும் குற்றம் கூறிற்று. முற்பட[1] உயிர்க்கேடு வரும் என்று கூறினார்.

ஆ) பரிதி.: நெருப்புப் பற்றினமரம் வேர் உண்டாய் பதினைந்து நாளையில் கிளைக்கும்; பெரியார் கோபித்தால் கிளையற[2] வெந்து போய்விடும், எ-று.

இ) பரிப்.: தீயினால் சுடப்படினும் உய்தல் உண்டு ஆம்: பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் உய்யார், எ-று.

இது முனிவரைப் பிழைத்தனால் வரும் குற்றம் கூறிற்று: முற்பட உயிர்க்கேடு வரும் என்று கூறினார்.

ஈ) காளி.: தீயினால் சுடப்படினும் யாதானும் ஒருவாற்றால் பிழைப்பு உண்டாகவும் கூடும்; பிழையார் பெரியோரைப் பிழைத்து ஒழுகுமவர், எ-று.

உ) பரிமேல் : காட்டிடைச் சென்றான் ஒருவன் ஆண்டைத் தீயால்[3] சுடப்பட்டானாயினும் ஒருவாற்றான் உயிருய்தல் கூடும்; தவத்தான் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார், எ-று.

தீ, முன் உடம்பினைக் கதுவி, அதுவழியாக உயிர் மேல் சேறலின் இடையே உய்யவுங்கூடும், அருந்தவர்[4] வெகுளி 'அன்ன

1. முற்பட - முன்னே 2. கிளையற - சுற்றம் நீங்க
3. ஆண்டைத் தீயால் - அவ்விடத்து ஏற்பட்ட தீயால்
4 அருந்தவர் - செயற்கரிய தவம் செய்தவர்

தன்றித் தான் நிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்கும் காத்த-லரிது ஆகலின், அது கூடாதாகலான், அதற்கு ஏதுவாய் பிழை செய்யற்க என்பதாம்.

ஊ) **கவிராசர்** : காட்டுக்குள்ளே போனவனொருவன், காடு பற்றிக்கொண்டு அடப்பட்டாலும், ஒரு வகையாலே தப்பிப் பிழைக்க லாம். தவசினாலே பெரியவர்களுக்குக் கோபம் வருமாறு நடந்தவர் கள், எந்த விதத்தினாலேயும் பிழைக்கமாட்டார்கள், எ-று.

ஏ) **பழைய 2** : மிகுதியாக எரியும் எரியாற் சுடப்பட்டாராயினும் அதனை மாற்றிக் கொள்வார்: ஆற்றிக் கொள்ள மாட்டார், பெரியாருக்குப் பிழை செய்து ஒழுகுவார்: பெரியவர் கோபமாகிய தீயில் வெந்து போவார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**பரிதி**. 'எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்' என்பதனை உவமவாசகமாகக் கொண்டு 'நெருப்புப் பற்றிய மரமும் தளிர்த்த-லுமாம்' என்பர். **பரிமேலழகர்** போன்றோர் தரும் உரைகள் விளக்கமானவை.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**உய்யார் பெரியாரைப் பிழைத்தொழுகுவார்** :

அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின். —நாலடி ,164

பொறுப்பாரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

ஆமாலோ என்று பெரியாரை முன்னின்று —நாலடி.,151
தாமாச் சிறியார் தறுகண்மை செய்தொழுகல்
போமாற் றியார் புலன்மயங்கி யூர்புக்கு
சாமா கண்காணாத வாறு —பழ நா.,62

இன்னா பெரியார்க்குத் தீயச்செயல். —இன்னா.,27

பெருமையுடையாரைப் பீடழித்தல் இன்னா. —இன்னா. 28

முற்றும் :

நீத்த வராகியோர் நெருப்பு யிர்த்திடின்
காத்திடும் கடவுளும் கலங்கும் ஆதலால்
எத்துவ தேசுடன் என்று மைந்தனே
யாத்தார்கள் பொறுப்பர் என் றவமதித் திடேல். —விநா. அரசி., 41

90.7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின். (897)

உரைப்பகுதி :

அ) மணக். : எல்லாவகையானும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் மிக்க பொருளும் என்ன பயனுடையனவாம்? பெருமையால் மிக்க தகுதியுடையார் செறுவாராயின், எ-று.

ஆ) பரிதி : தவத்தின்வகை[1] தானத்தின்வகை[2] உண்டாயினும் அதனால் என்னபயன்? பெரியோர் முனிந்தால், எ-று.

இ) பரிப். : எல்லா வகைகளும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் மிக்க பொருளும் என்ன பயன் உடைத்து ஆம்? பெருமையான் மிக்க தகுதியை உடையார் செறுவ்ார் ஆயின், எ-று.

எல்லா வகையும் ஆவன-சுற்றமும், நட்டோரும், குந்றிணையோரும் இல்லும், நிலனும் முதல் ஆயின். வான் பொருள் ஈட்டி வைத்த பொருள்கள் எல்லாம் அழியும் என்றது.

ஈ) காளி : நூல் வகுத்த வகையனைத்தும் மாட்சிமைப்பட்ட இவ்வாழ்க்கையும் அதற்குச் சிறந்த பொருளும்உடைத்து ஆயினும் என்னாம்? தவமும் ஞானமும் ஒழுக்க நெறியும் உடைய சீரார்[3] செறின்[4], எ-று.

---

1. தவத்தின் வகை — நீர்நிலை நிற்றல், மூச்சடக்கல் முதலியன

2. தானத்தின் வகை — அன்ன தானம், சொர்ண தானம் முதலிய அறுபத்து நான்கு வகையான தானங்கள்

3. சீரார் — சிறப்பினையுடையவர் 4. செறின் — கோபித்தால்

உ) **பரிமேல்** .; சாப[5] அருள்கட்கு[6] ஏதுவாய பெருமைமாட்சிமைப் பட்ட அருந்தவர்[7] அரசனைவெகுள்வாராயின், உறுப்பழகு பெற்ற அவன் அரசாட்சியும் ஈட்டிவைத்த பெரும்பொருளும் ஏன்பட்டு விடும்[8], எ-று

உறுப்பு-அமைச்சு, நாடு, அரண், படை என இவை. செறின் என்பது அவர் செறாமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருனவற்றிற்கும்[9] இஃது ஒக்கும். அரசர் தம் செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் பிழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒருகணத்துள்ளே வெந்துவிடும் என்பதாம்.

ஊ) **கவிராசர்** :சாபானுக்ரக சமத்தராகிய[10] தவசிகள் இராசாவைக் கோபித்தால், அந்த இராசாவினுடைய உறுப்பும் அவன் இராச்சியமும் அவன் தேடிவைத்த பெரும் பொருளும் என்ன பிரயோஜனமாம்; ஒருபிரயோசனமும் ஆகாமல் விருதாவாய்[11] கெட்டுப் போம், எ-று.

ஏ) **பழைய 2** : அருளுஞ் சாபமு மிகுதியாகிய தகைமை யுடைய பெரியோர் அரசரை வெகுண்டாராயின் படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் முதலாகிய வாழ்க்கையும் மிகுந்த பொருளும் அரசாட்சியும் இவையெல்லாம் ஆகாமற் கெடும்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

### ''வகை மாண்ட வாழ்க்கை''

'எல்லாவகையானும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கை' **மணக்** .; 'நூல்வகுத்த வகையனைத்தும் மாட்சிமைப்பட்ட இல்வாழ்க்கையும் பொருளும்' **காளி** .; 'உறுப்பழகுபெற்ற அரசாட்சியும் பொருளும்' **பரிமேல்** .; 'அரச அங்கம், அரசு, பெரும்பொருள்' **கவிராசர்** **பழைய 2**. இவற்றுள் **மணக்குடவர்** உரை ஏற்புடையது. பின்னுரைகள் அனைத்தையும் அடக்கியிருத்தலின்.

5. சாபம் — அழிதற்கு ஏதுவாய சில சொற்கள் 6, அருள் — கருணை செய்தல்
7. அருந்தவர் — செயற்கரிய தவத்தினை யுடையார்
8 என்பட்டுவிடும் — என்ன ஆகும்? அடியோடு அழிந்துவிடும்
9. முன்வருவன — இவ்வதிகாரத்து 8 ஆம் குறளில் 'மதிப்பின்' என்றும் 9-ஆம் குறளிற் 'சீறின்' என்றும், 10வது குறளில் 'செறின்' என்றும் வருவன
10 சாபானுக்ரக சமத்தராகிய — சபித்தலிலும் அருளலிலும் வல்லவராகிய
11. விருதாவாம் — பயனற்றனவாய்

'தகை மாண்ட தக்கார்'

பெருமை மிக்க தகுதியுடையார்' **மணக்**.; 'தவம் ஞானம் ஒழுக்கம் உடைய சீரார்' **காளி**.; 'சாப-அநுக்கிரகங்களுக்கு ஏதுவான தவத்தோர்' **பரிமேல்.**, **கவிராசர்** முதலானோர்.

தக்கார் எனவே தகைமாண்ட தன்மை பெறப்படுமாயினும் தகைமாண்ட தக்கார் என்றது அவர் செற்றம் தப்பாமற்றாழ்க்காமல் பயனைத்தரும் என்ற துணிபு பற்றி என்க. **மணக்குடவரும் பரிதியும்** 'தகுதியுடையோர் பெரியோர்' எனப் பொதுமையிற் கூற ஏனையோர் 'தவமுனிவர் சாபானுக்கிரகமுடைய தவத்தோர்' எனச் சிறப்பு வகையாற் குறித்து 'வெகுளி கணமேயுங் காத்தலரி-த்தல்' நோக்கிப் போலும் என்க. ஆனாலும் 'வலிமிக்க அரசன்' முதலியவரையும் அகப்படுத்திக் கூறும் **மணக்குடவருரை** அரசியற்கு ஏற்புடைத்தாகும். இதற்கும் **பரிமேலழகர்** தரும் விளக்கம் மிகநன்று.

**வரத.** - 'வகை மாண்ட வாழ்வு பதவி செல்வம் செல்வாக்கு முதலான வாழ்வு' என்பர். 'மனிதத்தன்மையிலும் பண்பாட்டிலும் உயர்ந்த' எனவுங் கூறுவர்.

வகை மாண்ட வாழ்க்கையிலும் தகை மாண்ட தக்காரால் விளையும் பயன் ஏற்றமுடையதன்று என்பதாம். ஏற்புடைய ஏற்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**தகைமாண்ட தக்கார்செறின் :**

வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றந்தான்
அஞ்சலி யுலகெலா மெஞ்சு மெஞ்சுமென்று
அஞ்சுகின் றேனிதற் கறமுஞ் சான்றரோ. —கம்ப., 5299.

90.8. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. (898)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** மலைபோலப் பெரியாரைக் குறைய மதிப்பாராயின் உலகத்தின்கண்ணே நின்றாற்போலத் தோன்றுகின்றவர் குடியோடே கூடமாய்வர், எ-று.

குன்ற மதித்தல் - அவமதித்தல்.

ஆ) பரிதி : மேருகிரியை[1] ஒத்த பெரியோர் ஒருவரைப் பிழைத்தால் குடிகெட்டுத் தானும் மாளுவார், எ-று.

இ) பரிப்.: மலைபோலப் பெரியாரைக் குறைய மதிப்பார் ஆயின் உலகத்தின்கண்ணே நின்றால் போலத் தோன்றுபவர் குடியோடே கூட மாய்வர், எ-று.

நின்றால் போல என்றது நிலையாமை குறித்தது. குன்ற மதித்தல் — அவமதித்தல். இது மந்திரி புரோகிதரைப் பிழைத்து ஒழுகினால் அவர் அவமதிப்பர் ஆயின் தாமும் தம்கீழ் வாழும் குடியும் மாய்வர் என்று கூறிற்று.

ஈ) காளி : தவம் முதலியவற்றால் பெரியோராகிய மலைபோலச் சிறிதும் சலியாதோரைக்[2] குறைபட நினைப்பின் இவ்வுலகத்துச் சிறந்த குடிப்பிறப்போடு நின்று வைத்தே மற்று அத்தன்மையாரும் அதனால் ஒர் ஆக்கம் இன்றி நசிப்பர், எ-று.

உ) பரிமேல்.: குன்றத்தை ஒக்கும் அருந்தவர் கெட நினைப்பாராயின், அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றாற் போலும் செல்வர் தம்குடியொடும் மாய்வர், எ-று.

வெயில் மழை முதலிய[3] பொறுத்தலும் சலியாமையும் உள்ளிட்ட குணங்கள் உடைமையின் 'குன்றன்னார்'[4] என்றார். "மல்லன் மலையனைய மாதவர்'[5] என்றார் பிறரும். நிலைபெற்றாற்போறலாவது இறப்பப்பெரியராகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லை என்று கண்டாரால் கருதப்படுதல்.

ஊ) கவிராசர் : மலைக்குச் சமானமான அருந்தவர், ஒருவன் செய்த குற்றத்தினாலே, அவனைக் கெட நினைத்தாராகில், நிலை பெற்றாற்போலுஞ் செல்வர் தம் குடியோடும் மாய்வர், எ-று

எ பழைய 2 : குன்றத்தையொக்கும் அருந்தவர் கெட நினைப்பின் குடியொடு நிலை பெற்று நின்றவர் கெடுவர் இந்நிலத்தில்.

---

1. மேருகிரி — மேரு மலை 2. சலியாதோர் — அசையாதவர்

3. முதலிய என்றமையின் உண்டி சுருக்கல், உடலுக்கும் உயிர்க்கும் வருந்துன்பங்களைப் பொறுத்தல் முதலாயின.

4 சலியாமையும் பெருமையும் பற்றி குணங்கள் குன்றாக உருவகிக்கப்பட்டன.

5. சீவக., 2789

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நிலைதளராமையும் சலியாமையும் நோக்கிக் ''குன்றன்னார்' என்றனர்' என்ற உரைகள் சிறந்தன.

மணக் 'குன்றன்னாரைக்குன்ற' என இரண்டனுருபு விரிய உரை காண்டலின் இவர் கண்ட பாடம் குன்றன்னார்க்குன்ற' என்பது ஆகலாம். **பரிதியுரை** கருத்துரையாகும். மேரு முதலிய உவமைகள் செய்யுளில் இல்லாதன. 'குன்றன்னார்-மலைபோலச் சலியாதோர்' என்ற **காளிங்கர்** விளக்கம் ஏற்புடையது. இதன் விரிவும் விளக்கமுமே **பரிமேலழகர்** இப் பகுதிக்குத் தரும் விளக்கவுரை.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**குன்றன்னார் குன்ற மதிப்பின் :**

மல்லல் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லாரே யன்றிப் பகுத்துணாப் பாவிகளும்
... ... ... ... ... ...
வில்பொருந்தோண் மன்னா விலங்காப் பிறப்பவே. -சீவக.,2789

... ... ... ... ... ... மாதவக்
குன்றினை எயதிருநர்த்தனன் ... ... — கம்ப ,218

பூனை சூடித னகையினி லெயில்பொடிந் தனபோல்
ஆளு மைந்தரா றயுதருஞ் சாம்பரா யவிந்தார். — கம்ப., 516

வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தான்
எஞ்சலி லுலகெலா மெஞ்சு மெஞ்சுமென்று
அஞ்சுகின் றேனிதற் கறமுஞ் சான்றரோ. — கம்ப., 5299

**முற்றும் :**

நெடும்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்
அடும்பார் அணிகானல் சேர்ப்ப கெடுமே
கெடும்பாடு உடையான் குடி. — பழ.நா.,64

90.9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (899)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** உயர்ந்த கோட்பாட்டை[1] யுடையோர் வெகுள்வ-ராயின், இந்திரனும் இடையிலே இற்றுத்[2] தன்னரசு இழக்கும், எ-று.

**ஆ) பரிதி.:** நல்லொழுக்கமான தவநெறியிலே நின்றார் முனிந்-தால் வேந்தனாகிலும் சடுதியிலே கெடுவன். எ-று

**இ) பரிப்.:** உயர்ந்த கோட்பாட்டை உடையார் வெகுள்வர் ஆயின் இந்திரனும் இடையிலே இற்றுத் தன் அரசு இழக்கும், எ-று

'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்'[3] என்றார் பிறரும். இது பொருள் கேடு வரும் என்றது.

**ஈ) காளி.:** சொன்ன தவமும் ஞானமும் முதலியவற்றால் மிக்க கோட்பாட்டை உடைய பெரியோர் சீறுவர் ஆயின் அரசனும் தனது வாழ்க்கை இடையே முரிந்து கெட்டுவிடும், எ-று.

வேந்தனும் என்ற உம்மை சிறப்பும்மை[4] ஆகலான் ......... நாடும் பொருளும் பெரும் படையும் உடையவர் ......... கெட்டு விடும், எ-று.

ஏந்துதல் — மிகுதல்.

**உ) பரிமேல் .:** காத்தற்கு அருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வராயின், அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம்[5] இழந்துகெடும் எ-று

''வேந்தன் மேய தீம்புனல் உலகமும்'' என்றார் பிறரும்.[6] நகுடன் என்பான் இந்திரன் பதம்பெற்றுச்செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர்பிழை செய, அதனால் சாபம் எய்தி அப்பதம் இடையே இழந்தான் என்பதனை உட்கொண்டு, இவ்வாறு கூறினார். இவை நான்குபாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றம் கூறப்பட்டது.

---

1. உயர்ந்த கோட்பாடு — உயர்ந்த கொள்கை 2. இற்று — அறுந்து
3. தொல். பொருள். அகம். 5. 4. உம்மை உயர்வு சிறப்பும்மை
5. தன்பதம் — தன்பதவி 6. தொல் — பொருள் — அகம்., 5.

ஊ) கவிராசர் .: காத்தற்கரிதாகிய பெரிய விரதங்களையுடை-யார் கோபித்தால், அவர்கள் பெருமையினாலே இந்திரனும் தன்-பதம் இழந்து கெட்டுப்போவான், எ-று.

ஏ) பழைய : காத்தற் கருமையுடைய விரதங்களை மிகுதியுடை-யார் சீறிக்கோபித்து நின்றாராயின், இந்திரனும் இடை நடுவே தன்பதியுமிழந்து கெடுவன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'வேந்தன்'**

'அரசன்' என்பர் **பரிதியு** **காளிங்கரும் இராமலிங்க-மும்**: 'இந்திரன்' என்பர் **மணக்குடவரும்** மற்றோரும், 'இந்திரன் போன்ற அரசன்' என்பர் **வரத. தேவநேயர்** 'இந்திரன் என்ற சொல் மன்னன் என்ற பொருளதாய்ப் பொதுமையினிற்பது ஆதலை தேவேந்திரன் நரேந்திரன் முதலான வழக்காற்றாறுணர்க என்றும், வேந்தன் என்பது மன்னனை யுணர்த்துஞ்சொல்லாமேயன்றி இந்திரனையுணர்த்துவதாகாது' என்றும்கூறுவர். 'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்' ஆதலானும், 'இலைமுகப்பைப் பூணினர்' ஆதலா-னும், 'வேந்தன் மேய தீம்புனலுலகம்' என்றது இந்திரனைக் குறிப்பதாகாது. ஏந்திய கொள்கையார்–உயர்ந்தகோட்பாட்டையு-டையார் என்பதே சிறந்தது. விரதிகள் தவத்தோர் என்றல் நகுடன் கதையை நினைத்துக்கொண்டு கூறிய உரையாகும். அவர்கள் இங்ஙனம் கூறத் துணையானது 'ஐந்தவித்தானாற்றல்' என்ற குறளாகும்.

**'இடைமுரிந்து'**

'இடையிலேயிற்று' **மணக்** ; 'நடுதியிலே' **பரிதி** ; 'இடை-யேமுரிந்து' **காளிங்கர்**. இக்கருத்துப்படப் பிற்கால உரையா-சிரியர்கள் உரைப்பர். 'இடுப்பு முரிந்து' என்பார் யார் என்று அறியக்கூடவில்லை.

ஆகவே 'உயர்ந்த கொள்கையையுடையார் சீறின் அரசனும் அரசுரிமையை யிழப்பன்' என்ற உரையே சிறத்தல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**ஏந்திய கொள்கையர் :**

அரிய கொள்கையர் ஆரழ லைந்தினுள்
மருவி வீடுவி ளைக்குறு மாட்சியர். — சீவக., 1432

கொள்கையினால் உயர்ந்த நிறையுடையர்.
— சம்பந்தர்., நெடுங்களம் 1.

**ஏந்திய கொள்கையார் சீறின் :**
முனிவரர் வெகுளியின் முடிபென் றார் சிலர். — கம்ப.,3197

**முற்றும் :**

வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணக முதலாம்
வைய மியாவையும் வறுமைநோய் நலிதர... — கம்ப ,496

நினக்கொலா தாகின் ஐய நீள்நிலத் தியாவ ரேனும்
மனக்கினி யாரை நாடி வகுப்பல்யான் வேள்வி யெண்ணச்-
சினக்கொடுந் திறலோய் முன்னர்த் சேசிகற் பிழைத்து வேறோர்
நினக்கி தன் நாடி நின்றாய் நீசனாய் விடுதிஎன்றான். —கம்ப.,672

.............. பொருள் எய்திச்
செருக்கி இடையே திருவிழந்த சிறியோர் போன்ற — கம்ப.,3280

ஆற்றன் மிகுந்த வேந்தரையும் அரிய தவத்து முனிவரையும்
போற்றி ஒழுகின் எப்பொருளும் போற்ற லாகும் அவமதிப்பின்
தேற்ற மிகும்சார் பினரேனும் சிதைவர் திகழ்முப் புரச்சூரன்
சாற்றிந் திரன்மா லாதியரும் தளர்ந்தார் எனின்சாற் றுவதென்னே.
— விநா.அரசி.,137

ஓ) மேற்கோள்பகுதி :

**சாமுண்டி.:** விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து; 'ஏந்திய கொள்கை ........ கெடும்' என்பதனால் வேந்து இராச்சியம் என்றுமாம். — பு.வெ.,65

90.10 இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். (900)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** மிகவும் அமைந்த துணையுடையராயினும் கெடுவர்; மிகவும் அமைந்த சீர்மையுடையார் செறுவாராயின், எ-று.

இது துணையுடையாராயினும் உயிர்க்கேடு வரும் என்றது.

**ஆ) பரிதி :** எல்லையற்ற சார்வாகிய உறவு தன்மம், கல்வி, தவம், தானம் உண்டாகிலும் பெரியவர் முனிந்தால் இது தங்காது எ-று.

**இ) பரிப் :** மிகவும் அமைந்த துணை உடையர் ஆயினும் கெடுவர்: மிகவும் அமைவர் சீர்மையை உடையார் செறுவார் ஆயின், எ-று.

இது துணை உடையார் ஆயினும் உயிர்க்கேடு வரும் என்பது.

ஈ) **காளி** .: சீர்மைப்பாட்டினை உடையார் யாவர்? மற்று அவர் குணம், கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலியவற்றான் மிக்கு அமைந்த சார்பினையுடையர் ஆயினும் உய்ந்து கரை ஏறார்; தவமும் ஞானமும் முதலியவற்றான் மிக்கு அமைந்த சீர்மைப்பாட்டினை உடையார் தம்மைச் செறின்; எனவே இங்ஙனம் பெரியோரை என்றும் பிழையற்க என்பது பொருள், எ-று.

உ) **பரிமேல்** .: கழியமிக்க தவத்தினையுடையார் வெகுள்வராயின் அவரான் வெகுளப்பட்டார் கழியப்பெரிய சார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார், எ-று.

சார்பு-அரண், படை, பொருள், நட்பு என இவை. அவை-யெல்லாம் வெகுண்டவரது ஆற்றலால் திரிபுரம்[1]போல அழிந்துவிடும் ஆகலின், 'உய்யார்' என்றார். சீருடையது சீர் எனப்பட்டது[2] இதனால் அக்குற்றமுடையார் சார்பு பற்றியும் உய்யார் என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** : நல்ல தவசையும் பெருமையையும் உடைய அருந்தவர் கோபித்தால், மிகப் பெரிய சார்பினை யுடையவர்-களானாலும் தப்பிப் பிழைக்கமாட்டார்கள், எ-று.

ஏ) **பழைய 2** : மிகவும் அமைந்த தவத்தினை உடையார் வெகுண்டாராயின், அந்த வெகுட்சி பெற்றவர் மிகவும் பெரிய சார்புடையாராயினும் உய்ய மாட்டார்; கெடுவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'**இறந்தமைந்த**' '**சிறந்தமைந்த**' இரண்டற்கும் 'மிகவும் அமைந்த' எனப்பொருள் காண்பர் **மணக்குடவர்**. 'கழியமிக்க' கழியப்பெரிய' என்பர் **பரிமேலழகர்**.

சார்பின்வகைகளைக் **காளிங்கரும் பரிமேலழகரும்** விரித்து எழுதுவர்.

---

1. திரிபுரம் - சிவபெருமானால் அழிக்கப்பட்ட பொன், வெள்ளி, இரும்பால் ஆகிய கோட்டைகள்.
2. காரியப்பெயர் அதற்குக் காரணமாகிய தவத்தை உணர்த்துதலால் காரியவாகு பெயராம் என்பது.

'அமைந்த' என்ற பெயரெச்சத்தின் பொருள் 'பொருந்திய சார்பு' எனலே ஏற்பதாம். அங்ஙனமே சிறந்து-பல்லாற்றானும் சிறந்து, அமைந்த - செருக்கின்றியடங்கிய எனலே ஏற்பதாம். சிறந்தும் என உம்மை விரித்தல் அதனினும் சிறப்பாம்; ஆய்க.

வரத : இக்குறளின் பொழிப்பில் 'பெரியோர் சினங்கொள்வதாயின்' என்று எழுதி விளக்கத்தில் 'பெரியோரைப் பகைத்துக்கொண்டால்' என இரண்டனுருபு விரித்து எழுதினர் அவ்வளவே. ஆதலால் இது குற்றமாகாது; அதனை நோக்கி 'சீரார்ச்செறின்' எனப் பாடந்திரிக்க வேண்டிய இன்றியமையாமையும் இல்லை

ஒ) ஒப்புமைப்பகுதி :

**இறந்தமைந்த சாப்புடையார் ஆயினும் உய்யார் :**

இடுகுடைத்தேர் மன்னர் எமக்கமையும் என்று
கடிதவர் காதலிப்பத் தாங்காதல்கொண்டு
முடிய எனைத்தும் உணரா முயறல்
கடிய கனைத்து விடல். - பழ.நா., 276

**முற்றும் :**

விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின். - நாலடி., 164

## 90. பெரியாரைப் பிழையாமை

| | ஆற்றுவார் | பெரியாரைப் | கெடல்வேண்டின் | கூற்றத்தைக் | யாண்டுச்சென் | எரியாற் | வகைமாண்ட | குன்றன்னார் | ஏந்திய | இறந்தமைந்த |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 10 | 2 | 1 | 3 | 5 | 6 | 4 | 9 | 8 | 7 |
| பரிதி | 1 | 9 | 10 | 7 | 6 | 5 | 4 | 8 | 3 | 2 |
| பரிப். | 10 | 2 | 1 | 3 | 5 | 6 | 4 | 9 | 8 | 7 |
| காளி. | 1 | 9 | 10 | 6 | 7 | 4 | 5 | 8 | 3 | 2 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

90-வது அதிகாரம் 'பெரியாரைப் பிழையாமை' முற்றிற்று.

# 91. பெண்வழிச்சேறல்

**அ) மணக்.:** இனித் தன்னால் வரும் துன்பப்பகுதியாவது இன்பங்காரணமாக மனையாள்வழி ஒழுகுதலும், கணிகையரோடுகூடி ஒழுகுதலும், நறவுண்டு[1] களித்தலும்' சூதாடுதலும். தீயஉண்டி மிக உண்டலும் என ஐந்து வகைப்படும்; அவற்றுள், பெண்வழிச்சேறல் ஆவது மனைவியர் வழியொழுகுதலினால் வரும் குற்றங் கூறுதல் இது மூன்று வகைப்படும்: மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்தினும் பொருளினும் சாராத காதலினும் மிக்க காதலும் என.

**ஆ) பரிதி.:** பெண்வழி சேறலாவது மனையாள் வார்த்தை கேட்டல், எ-று

**இ) பரிப் :** இனித் தன்னால் வருப் துன்பப்பகுதி ஆவது : இன்பம் காரணம் ஆக மனையாள் வழி ஒழுகுதலும், கணிகையரோடு கூடுதலும், நறவு உண்டு களித்தலும், சூது ஆடலும், தீய உண்டி மிக உண்டலும் என ஐந்து வகைப்படும். இவை எல்லாம் இறுதியில் துன்பம் பயத்தலின் துன்பப் பகுதி ஆயிற்று. அவற்றுள் பெண் வழிச்சேறல் ஆவது மனைவியர்வழி ஒழுகினால் வரும் குற்றம் கூறுதல். இது மூன்று வகைப்படும், மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்திலும் பொருளிலும் சாராது காதலிலும் மிக்க காதலும் என.

**உ) பரிமேல் .:** இனிக் காமத்தான் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கஞ்[2] சிதைத்தல் அழிவு தலைத் தருதல் என்னும் தொழில்களால் பகையோடு ஒத்தலின் பகைப்பாற்படுவனவாம்

---

1. நறவு — கள்.
2. ஆக்கம் சிதைத்தல் — மேல்மேல் உயர்தற்குக் காரணமாகிய செல்வம்

ஆகலான், அவற்றைப் பகைப்பகுதியது இறுதிக்கண் கூறுவான் தொடங்கி, முதற்கண் பெண்வழிச்சேறல் கூறுகின்றார் அஃதாவது தன்வழி ஒழுகற்பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்.

ஊ) கவிராசர் : அஃதாவது-தன்வழியே நடத்தற்குரிய பெண் சாதி வழியே தான் நடக்கிறதாம்.

ஏ) பழைய 2 : அஃதாவது தனக்கடங்கி நடக்குந் தன் மனையாளைவள் சொன்னபடிக் கேட்டுத் தானடங்கி நடத்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்., பரிமேல்** கூறும் எதுவும், அதனால் விளையும் பயன்களும் இருபாலார்க்கும் ஒத்த தன்மையில் உருவானவை **பரிதி.** 'மனைவியின் வார்த்தை கேட்டல்' என்பர். **கவிராசர் பழைய உரைகள்** 'தனக்கு அடங்கி நடக்கும் அவளுக்குத்தான் அடங்கி நடத்தல்' என்பர் இது பெண்ணுரிமைக்கும், ஒத்த வாழ்க்கைக்கும் இழுக்குத்தருவதாகும். **தேவநேயரும் வரதராசரும் கவிராசர்** கருத்தோடொத்து உரைப்பர் 'மனைவி சொன்னபடியெல்லாம் கணவன் நடப்பது' என்பர் **இராம.**; இவற்றால் குடும்பத்திலும் சமுதாயத்திலும் உலகியலிலும் நேரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து அதற்குத்தக நடத்தலை இவ்வதிகாரத்தின் கருத்தோட்டம் தடுத்திலது. அவள் தரும் காமவின்பத்திற்கு அடிமைப்பட்டு அவள் சொல்வனயாவும் நன்மையே என்று கருதி நடத்தலாகாது என்று வரையறுப்பதே இவ்வதிகார நோக்காகும்.

**குழந்தை** ஒத்த உரிமையர்களாகி நடந்து கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையைக் காட்டுவது. பெண் ஆணை அடிமைப்படுத்துவதினால் வரும் தீங்குகளைக் காட்டி ஒத்த உரிமையோடு வாழ்க என விதிப்பது அவ்வதிகாரம் என்பர் பெண்ணுக்கு அடிமையாதல் என்பர் **சி.இ.; பரிமேலழகரை** ஒட்டியுரைப்பர் **கா.சு.**

கடமையறிந்து நடத்தலில் உரிமை பிறக்கிறது. ஆதலால் ஆணும் பெண்ணும் தத்தங்கடமைகளிற்றவறாது நடப்பாராயின் யாருக்கு யாரும் அடிமையாதல் இல்லை. கடலன்ன காமமுழந்தும் மடலேறாமையும் தனதாற்றாமையைத் தானெடுத்து மொழியாமையும் பெண்ணியல்பாதலாலும், அடிமையாதல் பெரும்பாலும் ஆண்களே

யாதலானும் பெண்வழி ஆண்கள் சேறலால் நேரும் குறைகளை இவ்வதிகாரம் சொல்கிறது. இங்ஙனம் உரிமைக்கிடையீடு போல விளக்கங் கூறும் உரைகளைக் காட்டிலும் இடையீடின்றிக் கடமையுணர்ச்சியோடு உரிமையை வலியுறுத்தும் உரைகள் சிறந்தன

பெண்வழி ஆடவன் சேறலே பெண்வழிச்சேறல் ஆதலின் இது பெண்ணின் குற்றம் ஆகாது. விசயை நலத்தில் மயங்கி நாடும் உயிரும் இழந்தது சச்சந்தன் மடமையேயன்றி விசயையின் தீமையன்று அதுபோல ஆடவர் இன்பத்துறையில் எளியராகி உலகியலிலும் உயர்ந்தோரிடத்தும் பகைக்கும் நகைப்புக்கும் இடமாதலை விளக்குவது இவ்வதிகாரம் என்க. காமத்திற்கு அடிமையாய் அவள் ஏவல்வழியொழுகுவார்க்கு வருந்தீமைகளைச் சொல்லுதல் மட்டுமே இதன் நோக்கம் அதிலும் பொருளழிவும், பெருமையழிவும் அரசழிவும் பேசப் பெறுகின்றன.

91.1. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. (901)

உரைப்பகுதி :

அ) மணக்.: மனையாளைக் காதலித்து ஒழுகுவார் நற்பயனைப் பெறார்; யாதானும் ஒருவினையைச் செய்து முடிக்கவேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழைதலே[1], எ-று.

இஃது அறத்தினும் பொருளினும் காதலின்றி, அவர் தம்மையே காதலிப்பார்க்கு அறனும் பொருளும் இல்லையாம் என்றது.

ஆ) பரிதி.: பெண் ஏவல் செய்வார் பெரியராகார்; பெண் சொல் கேளாதவர் பெரியவர், எ-று

இ) பரிப்.: மனையாளைக் காதலித்து ஒழுகுவார் நற்பயனைப் பெறார்: யாதானும் ஒரு வினையைச் செய்து முடிக்க வேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழையாமையே, எ-று.

இஃது அறத்தினும் பொருளினும் காதல் இன்றி அவர் தம்மையே காதலித்து ஒழுகுவார்க்கு அறனும் பொருளும் இல்லை ஆம் என்றது.

1. விழைதல் — விரும்புதல்

**ஈ) காளி.:** மனையாளைச் சால விரும்புவார் யாவர்? மற்று அவர் மாட்சிமை உடைய மறுமைப் பயனும் எய்துதல் இலர் ஆக ஏயும்[2] தம் கருமம் விரும்பிச் செல்வார் யாவரும் வேண்டாப் பொருளும் அவ்விருப்பம் தானே. எ-று.

**உ) பரிமேல்.:** இன்பம் காரணமாகத் தம் மனையாளை விழைந்து அவள் தன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன் துணையாய அறத்தினை எய்தார்; இனிப் பொருள் செய்தலை முயல்வார் அதற்கு இடையீடு என்று இகழும்பொருளும் அவ்வின்பம். (எ-று.

மனையும் விழைதலும் பயனும் ஆகுபெயர்.[3] அவ்வின்பம் அவள் தன்மையராதற்கு ஏதுவாய இன்பம். அஃது, அவளால் பயனாய அறத்தினும் அவ்வறத்திற்கும் தனக்கும் ஏதுவாய பொருளினும் செல்லவிடாமையின், விடற்பாற்று என்பதாம்.

**ஊ) கவிராசர்:** இன்பத்தை வேண்டித் தன் பெண்சாதியை விரும்பி அவள் சொன்னபடியே கேட்டு நடக்கிறவன், தனக்குத் துணையான தர்மத்தினைச் செய்யமாட்டான். உத்தியோகங்களைச் செய்து பொருளைத் தேடுபவர்களும் அதற்கு இடையீடென்று இகழும் பொருளும் அவ்வின்பமே, எ-று.

**எ) பழைய 2:** காமங்காரணமாகத் தன் மனையாள் சொன்னபடிக் கேட்டு நடப்பார், தமக்குத் துணையாகிய மிகுந்த புண்ணியங்களைச் செய்யமாட்டார்; காம வினையே செய்வார்க்கு இல்லறஞ் செய்து பெறும் பயன் வேண்டாப் பொருளாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**"மாண்பயன்"**

'நற்பயன்' **மணக்.**; 'மாட்சிமையுடைய மறுமைப்பயன்' **காளி.**; 'இனியதுணையாய அறம்' **பரிமேல்.**; 'தனக்குத் துணையான தர்மம்' **கவிராசர்.**

இங்ஙனம் சிறிது மாறுபடுவரேனும் 'மனைவிழைவார்' என்பதற்கு 'இன்பம் ஏதுவாக மனைவியை விரும்பி அவள் தன்மை-

---

2. ஏயும் — பொருந்தும்
3. மனை — இடவாகுபெயர். விழைவு என்னும் கருவிப்பெயர் அதன் காரியமாகிய மனையாளின் தன்மையராய் ஒழுகுதலை உணர்த்துதலால் கருவியாகுபெயர், பயன் என்னும் காரியப்பெயர். அதன் காரணமாகிய அறத்தினை உணர்த்துதலால் காரியவாகுப்பெயர்.

யாகவே ஒழுகுவார்க்கு' என நடுநின்று எழுதும் உரைகள் பொதுமையைக் கெடுக்காதன அத்தகைய உரைகள் இன்றைய போக்கிற்கும் ஏற்புடையன.

**மனைவிழைவார் மாண்பயன் எய்தார் :**

மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின் றுணர்தி வாலி செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தி னானே அல்லலும் பழியும் ஆதல்
எங்களிற் காண்டி யன்றே இதற்குவே றுவமை உண்டோ.

-கம்ப. , 4231

தையல் சொல் கேளேல். -ஆத்தி , 63

**முற்றும் :**

தன்னால் ஆளப் படுமனைவி தன்னால் ஆளப் படுவானேல்
அன்னாற் கறனும் பொருளும் உள வாகா தொல்லைப் பொருளானும்
மன்னா பயன்கள் வினைமுடியா மறுமை யணுகா தெப்பிழையும்
முன்னாம் பின்னாம் பெருநாணும் மூவாப் பழியும் அறிமைந்தா.

-விநா. அரசி., 138

91.2. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுந் தரும். (902)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பானது செல்வம், பெரியதோர் நாணம் உலகத்தே நிற்கும்படி யாகத் தனக்கு நாணினைத் தரும், எ-று.

**ஆ) பரிதி.:** தன்மத்தை வேண்டாம் என்று பெண்சொல் கேட்பான் பெரியோரால் நாணப்படுவான், எ-று.

**இ) பரிப்.:** அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பானது செல்வம் பெரியது ஓர் நாணம் உலகத்தே நிற்கும்படியாகத் தனக்குத் நாணினைத் தரும், எ-று.

அவன் செல்வத்திற்குப் பயன் நாணம் ஆய் முடியும். என்னை அச்செல்வம் அற்றால் பின்பு என்ன செய்வோம் என்று நாணுவன் ஆதலின். பெரியது ஓர் நாணுதல் ஆவது இவன் காமத்தால் கெட்டான் என்று உலகத்தார் அறிய நிற்பது ஓர் நாணம் உண்டாதல். சச்சந்தன் திறம் காண்.

**ஈ) காளி.**: தான் ஒழுகும் தகுதியைப் பொருளாக விரும்பாது மனையாளைப் பொருளாக விரும்புவானது பொருள் முதலிய ஆக்கம்[1], ஒருவன் உள் அஞ்சி[2] நாணத்தகும்: அவற்றுளெல்லாம் பெரியதோர் நாணமாம்: மற்று அங்ஙனம் தீதாகிய நாணுதலைத் தரும், எ-று.

பேணாது என்பது தன் தகுதியை விரும்பாது என்றது.

**உ) பரிமேல்** : தன் ஆண்மையைவிட்டு[3] மனையாளது பெண்மையை விழைவான் எய்திநின்ற செல்வம், இவ்வுலகத்து ஆண்பாலார்க்கு எல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக்[4] கொடுக்கும், எ-று.

எய்திநின்ற தாயிற்று: படைக்கும் ஆற்றல் இலனாகலின் அச்செல்வத்தால் ஈதலும் துய்த்தலும் முதலிய[5] பயன்கொள்வாள் அவளாகலின்,[6] அவ்வாண்மைச் செய்கை அவள்கண்ணதாயிற்று என்று ஆண்பாலார் யாவரும் நாண அதனால் தன் ஆண்மையின்மை அறிந்துபின் தானும் நாணும் என்பதுநோக்கிப் பெரியதோர் நாணாக 'நாணுத் தரும்' என்றார். இவை இரண்டு பாட்டானும் மனைவிழைதற் குற்றம் கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்.**: தன் ஆண்மையை விட்டு மனையாளது பெண்மையை விரும்பினவனுடைய பெரிய செல்வம், உலகத்திலே உண்டான ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் நாணமுண்டாகத் தக்கதாக, அவனுக்கு நாணத்தைக் கொடுக்கும், எ-று.

**ஏ) பழைய2.**: தன்னாண்மைவிட்டு மனையாளுடைய பெண்மையைப் பொருந்துவான் செல்வம் உலகத்து ஆண்பாலர்க்கெல்லாம் பெரியதோர் நாணமுண்டாக்கும்: தனக்கும் நாணத்தைக் கொடுக்கும்

---

1. ஆக்கம் — செல்வம் 2. உள் அஞ்சி — மனமஞ்சி

3. 'தன் ஆண்மையை விழையாதுவிட்டு' என்றும் பாடமுண்டு

4. நாணுதலானது சால்பு, பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தார் தனக்கொவ்வாத கருமங்களில் நாணுதல்.

5. முதலிய என்றமையின் புகழ் பெறுதல் முதலியனவும் கொள்க.

6. 'அவளனவாகலின்' என்றும் பாடமுண்டு என்பர் கோ. வ. 'அவளனவாகலின்' என்பது வை. மு. கோ. பாடம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**''பேணாது''**

'அறம்பொருள் இவற்றைப பேணாது' **மணக்.** ; 'தன்மத்தை வேண்டாது' **பரிதி.** ; 'தன்தகுதியைப் பொருளாகக் கொள்ளாது' **காளி.**; 'தன் ஆண்மையைவிட்டு' **பரிமேல்.**, **கவிராசர் பழைய உரை.** இத்தனையும் ஒருசேரப் 'பேணாது' என்பதற்குச் செயப்படுபொருளாம் தகுதியுடையனவே.

**''பெண்விழைவான்''**

'பெண சொல் கேட்பான்' **பரிதி.**; 'பெண்ணைக் காதலிப்பவன்' **மணக்.**; பெண் என்ற பொருட்பெயர் அவருடைய பேச்சாகிய பொருளையுணர்த்திற்று,

**வரத.** 'பெண்வழிச்செல்வான் விரும்பும் வளர்ச்சி பலராலும் பரிகசிக்கப்பெறும்; அவனே நாணக்கூடியதாகவும் இருக்கும் என்றும் பொருள்கொள்ளலாம்' என்பர்.

**காளி.** 'பெரியதோர் நாணாகும்; நாணுத்தரும்' எனப் பிரித்து 'ஆண்களுக்குப் பெரியதோர் நாணம் ஆம்; தனக்கும் நாணுதலைத் தரும்' என்பர்.

ஆயினும் **மணக்குவடர்** 'ஆக்கம்' என்பதற்குச் செல்வம் எனவே பின்னர்ப் பொருள் கோடலின் 'பொருள் பேணாது' என்பது முரணாகின்றது, 'தன்மத்தைப் பேணாது' என்ற **பரிதியுரை** பொருள் ஒன்றையுமே பேணிப் பெண்விழைவான் ஆக்கம் நாணுத்தரும் என்றாகிறது. **பரிப்பெருமாள்** விளக்கம் செல்வத்துப் பயனீதலே துய்ப்பேம் எனினே தப்புதல் பலவேயாதலின் செல்வத்தாற் பயனின்மை காட்டி அச்செல்வத்தால் நாணாதலை வலியுறுத்துகிறது. 'தகுதியைப் பேணாது' என்ற **காளிங்கர்** உரை வெளியில் ஆண்மகன் போலத் தோன்றினும் மனத்தால் தன் நிலையைத் தானே நினைத்து நாணுவன் என்னும் கருத்தினது இவன் எய்தும் நாணத்தை அவன் தன்னாக்கத்தின் மேலதாக்கிக் கூறுவர்,

**பரிமேலழகர்** 'தன் ஆண்மையைப் பேணாது மனைவியின் பெண்மையையே மதித்து நடப்பவன் செல்வ வளர்ச்சி ஆடவர்க்-

கெல்லாம் நாண் தரும்' என்றார். தன் முதுகு தனக்குத் தெரியாதது போலத் தன்குறை தனக்குத் தெரியாது ஆதலின் ஆடவர்க்கு நாணந்தரும் என்றது நயத்தாற் சிறந்தது.

'எய்தி நின்ற செல்வம்' என்பது தந்தைவழிப் பெற்றதும், தாயத்தான் வந்ததும், மனைவிவழிச் செல்வமும் ஆம். இதனை ஈண்டுக் கூறியது தானாகப்பொருள் படைக்கும் ஆற்றிலிலன் என்பது தோன்ற என்றனர். இவன் வழிவந்த செல்வத்தையும் அவள் அறம் பல செய்தும், துய்த்தும் பயன் கொள்வள் அது ஆணினத்திற்கே நாணுத்தரும் என்ற உரை நயம் மிகச்சிறந்தது

இரண்டுபாட்டானும் மனைவிழைதற் குற்றம் கூறப்பட்டது என்ற தொடரில் தன் தகுதி பேணாது என்பதனையும் இணைத்து எண்ணுக. இங்ஙனமே 'பெண் சொல் கேட்பான்', 'பெண்ணை விரும்புவான்' முதலிய இடங்களிலும் கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பேணாது பெண்விழைவான் :**

பெண் விழைவார்க்கில்லை பெருந்தூய்மை —அறநெறி.,114

**91. 3. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்**
**நல்லாருள் நாணுந் தரும். (903)**

உரைப்பகுதி :

**அ) மணக் .:** மனையாள்மாட்டுத் தாழ்ந்து ஒழுகும் இயல்பாகிய கேடு எல்லா நாளும் நல்லாரிடத்து நாணுதலைத் தரும், எ-று.

**ஆ) பரிதி .:** மனையாளிடத்தில் விருப்பம், எப்போதும் நல்லோ-ரிடத்தில் நாணம் தரும், எ-று.

**இ) பரிப் .:** மனையாள் மாட்டுத் தாழ்ந்து ஒழுகும் இயல்பு கேடு எல்லா நாளும் நல்லார் இடத்து நாணுதலைத் தரும், எ-று.

மனையாளை அஞ்சித் தாழ்ந்து ஒழுகுவன் ஆயின் அவளைக் கடியும் தன்மை இலன் ஆவன் : அதனானே நல்லார் முன்பு நாணி நிற்கும் : ஆதலால் காம நுகர்ச்சியும் பெறான் என்றது. இவை நான்கினும் அஞ்சி ஒழுகுவார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

ஊ) காளி .: மனையாள்மாட்டு உள் அழுந்திச்[1] செல்கின்ற மரபுக்-கேடானது மற்று எஞ்ஞான்றும் தனக்குப் பல சான்றோர் இருந்த இடத்து எல்லாம் பெரியதோர் கூச்சமான நாணத்தைத் தரும், எ-று.

உ) பரிமேல் .: ஒருவன் இல்லாள்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம், அஃது இலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும், (எ-று'.

அவள்தான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை அஞ்சுதல் இயல்பின்மையாயிற்று. அங்ஙனம் அஞ்சி ஒழுகுதலின், அவளை நியமிப்பாரில்லையாம். ஆகவே, எல்லாக்குற்றமும் விளையும் என்பதுநோக்கி 'எஞ்ஞான்றும் நாணுத்தரும்' என்றார்.

ஊ கவிராசர் : ஒருவன் தன் பெண்சாதியிடத்துத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம், அப்படி நடவாமல் நல்லவர்களாய பெரியவர்-களிருக்குஞ் சபையிலே போனால், அவனுக்கு எந்நாளும் நாணு-தலைக் கொடுக்கும், எ-று.

ஏ) பழைய 2 : ஒருவன் இல்லாளிடத்துத் தாழ்தற் கேதுவாகிய அச்சம் அச்சமில்லாத நல்லாரிடத்துத் தான் செல்லும்போது நாணத்தை எக்காலமுங்கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும :

'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை' என்ற தொடர் உரையாசிரியர்களின் சிந்தனையைமுன்னோர்வழிப்பின்னோர் போலச் செலுத்தியிருக்கிறது. அதனால் இயல்பு இன்மையை 'இயல்பாகிய கேடு' என்றும் 'மரபுக்கேடு' என்றும், 'அச்சம்' என்றும் பொருள்-கொள்ளத் தூண்டியிருக்கிறது. பரிப்பெருமாள் கருத்து விளக்கம் கூறவந்தவர் 'மரபுக்கேடு' என்பர். பிற்கால உரைகளும் இவற்றையே கருதுகின்றன அதிகாரம் பெண்வழிச் சேறலாகிய ஆண்செய-லின் தீங்கை யுணர்த்துவதால் மணக்குடவர் முதலான தொல்லா-சிரியர் அனைவரும் 'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு- மனை யாளிடத்துத் தாழ்ந்து ஒழுகும் இயல்பாகிய, இன்மை-கேடு நாணுத்-தரும்' எனத் 'தாழ்ந்த' என்ற பெயரெச்சத்தைத் 'தாழ்தற்கு ஏது-வாய' என்றும், 'தாழ்ந்து ஒழுகும்' என்றுங் காரணப்பொருளில் வந்த எச்சங்களாகக் கொண்டும் 'இன்மை' என்பதற்குக் 'கேடு' என்றும் பொருள் கண்டனர்.

---

1. உள் அழுந்தி — மனம் ஈடுபடுதல்

இதனையே 'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை-(நல்லார் பலர் முன்னிலையினும்) மனைவியிடம் கணவனிடம் அடங்கி நடக்கும் இயற்கை யில்லாமையானது நாணுத்தரும்-(நல்லவர்களை இவள்வீட்டுக்கு வரவே) நாணினைத்தருவதாம்' என்றோ, 'நல்லவர்கள் நடுவில் கொண்டவனுக்கு நாணைத் தரும்' என்றோ கொள்ளின் 'இயல்பு + இன்மை' எனப் பிரித்து வலிந்து கூட்டிப் பொருள்காண வேண்டிய இன்றியமையாமையிராதோ என எண்ணத்தோன்றுகிறது. இல்லாள் தாழ்ந்த இயல்பினளில்லாமையான் கணவன் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டிய மாற்றம் விளைந்திருக்கிறது. அதனைக்கண்டு நல்ல ஆடவர்கள் நாணுகிறார்கள் என்ற கருத்துக் கொணருகிறார் பரிப்பெருமாள் எனலும் தகுமா? என்பதை எண்ணுக. இது 'இயல்பின்மை நாணைத்தரும்' என நேரிய தொடராக இருத்தலையும் நோக்குக.

கணவன் மனைவிக்கு அடங்கி நடத்தலைக்கண்டு பெண்களிடையேயும் நாணுத்தரும் என்ற வரத. உரையும் ஏற்பதாகும்.

91.4. மனையாளை அஞ்சும் மறுமைஇ லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று. (904)

உரைப்பகுதி :

அ) மணக். : மனையாளை அஞ்சுகின்ற மறுமைப்பயன் எய்தாதவன் ஒருவினையை ஆளுந்தன்மை,[2] பெருமை யெய்துதல்[1] இல்லை எ-று.

இது பொருள் செய்யமாட்டான் என்றது.

ஆ) பரிதி : பெண்சாதிக்குப் பயப்படுவானாகில் அவனுக்கு மறுமையும் இல்லை, இம்மைக்குப் புகழும் இல்லை எ-று

இ) பரிப் : மனையாளை அஞ்சுகின்ற மறுமைப் பயன் எய்தாதவன் ஒரு வினையை ஆளும் தன்மை பெருமை எய்துதல் இல்லை, எ-று.

இது பொருள் செய்ய மாட்டான் என்றது

ஈ) காளி. : தன் மனையாளைத் தான் அஞ்சி ஒழுகுகின்ற அம்மறுமைப்பயன் இழந்தோனது வினையாட்சி ஒரு நன்மை பெறுதல் இல்லை, எ-று.

---

1. வீறு — பெருமை. நச்சி. 'பிறிதொன்றற்கு இல்லாத பெருமை' என்பர். (சீவக. 4.5., 489 பாடல்கள்)
2. தன் தன்மை — ஆண்மை.

**உ) பரிமேல.:** தன்மனையாளை அஞ்சி ஒழுகுகின்ற மறுமைப் பயன் இல்லாதானுக்கு, வினையை ஆளுந்தன்மை உண்டாய வழியும் நல்லோரால் கொண்டாடப்படாது. (எ-று).

உண்டாயவழியும் என்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ் செய்தற்கு உரிய நன்மையின்மையின் 'மறுமையிலாளன்' என்றும், வினையையாளுந்தன்மை தன்தன்மை இல்லாத அவனான் முடிவுபோகாமையின் 'வீறெய்தலின்று' என்றும் கூறினார்.

**ஊ) கவிராசர்:** தன் பெண்சாதிக்குப் பயப்பட்டு நடக்கிறவனுக்கு மறுமைப்பயனில்லை. அவனுடைய ஆண்மையும் சௌரியமும் நல்லவர்களாலே கொண்டாடப்படா, எ-று.

**ஏ) பழைய 2:** தன் மனையாளுக்கு அஞ்சி நடக்கும் மறுமைப் பயனில்லாதவன் செய்யுந் தொழில், நல்லாராற் கொண்டாடப்படுதலில்லை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'மறுமை' இறந்தபிறகும் இருப்பதாகலின் '**புகழ்**' என்றுரைப்பார் **குழந்தை**. மனையாளுக்கு அஞ்சியவனை 'மறுமையிலாளன்' என்றது பின்வரும் 'அறவினையும்' **(909)** என்ற **குறளை** நினைவூட்டுகிறது.

91.5. **இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்**
**நல்லார்க்கு நல்ல செயல்.** (905)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** மனையாளை அஞ்சுவான், எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்லவை செய்தலை அஞ்சும், எ-று.

இஃது அறஞ்செய்ய மாட்டான் என்றது.

**ஆ) பரிதி.:** மனையாள் கோபத்திற்குப் பயப்படுவானாகில் நல்லோர்க்கு நல்லது செய்யப் பயப்படுவான், எ-று.

**இ) பரிப்:** மனையாளை அஞ்சுவான் எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்லன செய்தலை அஞ்சும், எ-று.

இஃது அறம் செய்ய மாட்டான் என்றது.

ஈ) **காளி** : தன் மனையாளை அஞ்சுவான் யாவன்? மற்று அவன் பெரிதும் அஞ்சும் : யாதினை எனின்? எஞ்ஞான்றும் உல-கத்து நல்லோராகிய சான்றோர்க்குக்கூட நல்லனவற்றைச் செய்-தலை, எ-று.

உ) **பரிமேல்** : தன்மனையாளை அஞ்சுவான், தான்தேடிய பொருளே யாயினும் அதனால் நல்லார்க்கு நல்லனசெய்தலை எஞ்ஞான்றும் அஞ்சாநிற்கும், எ-று.

நல்லார்-தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயினாரும்[1] நல்விருந்தினரும்[2]: நல்லனசெய்தல்-அவர்விரும்பு வன் கொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களினும்[3] என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார் "இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்-கொன்ற நெஞ்சின், புல்லாளனா-"[4] என்றார் பிறரும்.

ஊ) **கவிராசர்** : தன் மனையாளுக்குப் பயப்படுகிறவன், தான் தேடின பொருளேயானாலும், நல்லவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்தலை எந்நாளும் அஞ்சுவான், எ-று.

ஏ) **பழைய 2** : தன்மனையாளுக்கு அஞ்சுவான், தான் தேடிய பொருளே ஆயினும், அதனால் நல்லார்க்கு நல்லன செய்தற்கு எந்நாளும் அஞ்சி நிற்பான்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'நல்லார்'** என்பதற்குப் **பரிமேலழகர்** தரும் விளக்கம் சிறந்தது. **தேவநேயர்** 'அரசரொழிந்த ஐங்குரவர்' என்பர். **வரத.** 'சுற்றம், விருந்தினர், நண்பர், அறிஞர், மூத்தோர், விருந்தினர்' என்பர். அதுபோலவே **கவிராசர்** கூறும் 'தான்தேடிய பொருளே-யானாலும்' என்ற பகுதியும் அத்தகையதே. மறுமையிலாளன் மறுபிறப்பு என்பதொன்றுண்டு என்பதை ஒப்பாதவன்.

---

1. முதலாயினார் என்றது நம்பினர், குலகுரு, ஞானகுரு முதலியவர்கள்.
2. நல்விருந்தினர் - வாராவிருந்து
3. நாள்கள் - தெய்வ வழிபாடு, தாய்தந்தையர்க்குக் கொடுக்கும் திதி முதலியன.
4. சீவக. 2319.

ஏ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

இலலாளை அஞ்சி விருந்தின்முகம் கொன்ற நெஞ்சின்
புல்லாள னாக மறந்தோற்பின் எனப்பு கைந்து
வில்லா எழுவர் பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக்
கொல்யானை உந்திக் குடைமேலுமோர் கோல்தொடுத்தான்.

- சீவக., 2319

916 இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். (906)

உரைப்பகுதி :

அ) **மணக்.** : தேவரைப்போல இன்புற்று வாழினும், பெருமையிலேராவர் ; மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர், எ—று.

இது செல்வமுடையாராயினும் பிறரால் மதிக்கப்படார் என்றது.

ஆ) **பரிதி** : தேவரைப்போல வாழ்ந்தாலும் பெருமையில்லை, மனையாளுக்குப் பயப்படுவானாகில், எ-று.

இ) **பரிப்.** : தேவரைப்போல இன்பு உற்று வாழினும் பெருமை இலர் ஆவர் : மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர் எ—று.

இது செல்வம் உடையர் ஆயினும் அவரால் பயன் இல்லாமையால் பிறரால் மதிக்கப்படார் என்றது

ஈ) **காளி** : நுகர்ச்சியின்கண் ஒருமறு[1] இன்றி வாழ்வார் அமரர் அன்றே ; மற்று அவர்போல வாழினும் பெருமை இலரே ; யாவர் எனின்? அமைவளம்[2] நிறைந்த தோளினளாகிய மனையாளை அஞ்சும் மக்கட் பண்பு இல்லார், எ-று

உ) **பரிமேல்** : தம் இல்லாருடைய வேய்போலும் தோளினை[3] அஞ்சுவார் வீரத்தால் துறக்கம்[4] எய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும், ஆண்மை இலர், (எ-று).

---

1. மறு — குற்றம் 2. அமைவளம் — மூங்கிலின் அழகு
3 வேய் — மூங்கில், அது வடிவு, நிறம், வெண்மை முதலியவற்றால் மகளிர் தோளுக்கு உவமையாகும்
4. துறக்கம் — சொர்க்கம்.

அமரர்போல வாழ்தலாவது பகைத்த வீரர்தோள்களை எல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின், 'வாழினும்'[5] என்றார் 'அமையார் தோள்' எனவே, அஞ்சுதற்-காரணத்தது எண்மை கூறியவாறு வீரர்தோள்களை வென்றா-ராயினும் இல்லாள் தோள்களை அஞ்சுவார் ஆண்மையிலர் என்பதாம் இவை நான்கு பாட்டானும் அவளை அஞ்சுதற்குற்றம் கூறப்பட்டது

ஊ) **கவிராசர்** .: தன்னுடைய பெண்சாதிதோளுக்குப் பயப்-படுகிறவன் வீரத்துவ முண்டாகிய தேவர்களைப் போல இந்த லோகத்திலே வாழ்ந்தாலும், அவனுக்கு ஆண்மை யில்லை, எ-று.

ஏ) **பழைய 2** : தேவரைப்போலக் குறை வில்லாமை வாழ்ந்தா-ராயினும், அவர்க்குப் பெருமையில்லையாம் : தம் மனைவியுடைய மூங்கிற்போன்ற தோளுக்த அஞ்சுங் கணவர்க்கு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'இமையாரின் வாழினும்'**

'தேவரைப்போல வாழினும்' என வாளா கூறினர் **மணக்** முதலியோர். 'வீரசுவர்க்கம் எய்திய அமரர் போல' என்றனர் **பரிமேலழகர்**. போகத்தில் அழுந்தி வாழ்தல் அளவில் **வள்ளுவர்** தேவர்களை உவமித்தனரேயன்றி அத்தேவர் எப்படி வந்தவர்கள் என்பதைக் காட்டவன்று. அதனாலிது சிறப்பின்று. **மணக்குடவர் இராமலிங்கர்** உரைகள் ஏற்புடையன. அமை-அழகு என்றது **பிங்கலந்தையிற்** கண்டபொருள். அஞ்சுபவர் இமையாரின் வாழினும் பாடிலர் என்பதற்கு இமையவரைப் போல என்பதினும் இமையாரை விடப் போக நுகர்ந்து வாழ்ந்தாலும் என்ற **இராமலிங்கர்** பொருள் சிறந்தது. அது போலவே 'அமையார் தோள்' என்பதற்கு 'மூங்கிலை ஒத்ததோள்' என்ற பொருள் சிறத்தலை ''வேயுலாந் தோள்'' சீவக. 1581) என்பனவற்றானும் அவற்றுள்ளும் ''வேயொடு அமைகலாம்வெற்ப'' என்றும் **பழமொழியுள்** வேய்-முள் மூங்கில். அமை-முள்ளில்லா மூங்கில் என்னும் அதன் உரையாலும், அதுவே தீண்டினார்க்கு மென்மையும் தண்மையும் பயக்கும் மகளிர் தோளுக்கு உவமையாஞ் சிறப்புடைமை கண்டு பொருள் காண்க.

---

5. வாழினும் என்றதில் உள்ள உம்மை எதிர்மறை பொருளது.

**91.7. பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்**
**பெண்ணே பெருமை உடைத்து. (907)**

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** பெண்டிர் ஏவின தொழிலைச் செய்தொழுகும் ஆண்மையின்[1], நாணமுடைய பெண்மையே[2] தலைமை உடைத்தாம், எ-று;

இது பிறரால் மதிக்கப்படார் என்றது.

**ஆ) பரிதி :** பெண்ணுக்குப் பயப்படுகிற ஆண்மையினும் பெண்ணே விசேஷம், எ-று.

**இ) பரிப் :** பெண்டிர் ஏவின தொழிலைச் செய்து ஒழுகும் ஆண்மையின் நாண் உடைத்தாகிய பெண்மையே தலைமை உடைத்து ஆம், எ-று

இது பிறரால் மதிக்கப்பட்டார் என்றது.

**ஈ) காளி.:** மனையாள் ஏவல் கேட்டு அது செய்து ஒழுகும் ஆண்மை ஒருவர்க்குச் சிறுமைதரும் அதுவல்லது பெருமை உடைத்து அன்று; அதனால் அவ்வாண்மை படைப்பதில் ஆண்மகற்கு உள் அஞ்சும் நாணத்தையுடைய நன்னெறிப் பெண்ணே அவர்க்கு மிக்க பெருமையைக் கொடுக்கும், எ-று.

**உ) பரிமேல்.:** நாண் இன்றித் தன் இல்லாளது ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்தன்மையின், நாணினை உடைய அவள் பெண்தன்மையே மேம்பாடு உடைத்து, எ-று.

நாணுடைப்பெண் என வேண்டாது கூறியது அவளேவல் செய்வானது நாணின்மை முடித்தற்கு ஆதலின்,[3] அம்மறுதலைத்தொழில்[4] வருவிக்கப்பட்டது. ஏவல் ஆகுபெயர்[5] இறுதிக்கண் பெண் என்பதூஉம் அது.[6] ஏவல் செய்வித்துக்கோடற் சிறப்புத்தோன்றப் பெண்ணே எனப் பிரித்தார்.

---

1 ஆண்மை — ஆளுந்தன்மை 2. பெண்மை — அமைதித்தன்மை

3. வேண்டாது கூறுதல் வேண்டியதொன்றை முடித்தற்கு ஆதலால் பெண்மையை என்று கூறாது நாணுடைப்பெண் என்றார்,

4. அம் மறுதலைத் தொழில் — நாணுடைமைக்கு மறுதலையாகிய நாணின்மை வருவிக்கப்பட்டது

5. ஏவல் என்ற தொழிலின் பெயர் அவள் ஏவலால் செய்யும் தொழிலைக் காட்டுதலின் தொழிலின் பெயர் அதனான் நிகழும் செயலுக்கு ஆன தொழிலாகுபெயர்.

6. பெண் என்ற முதலின் பெயர் அவளுடைய பண்புக்காதலால் முதலாகு பெயராம்.

ஊ) **கவிராசர்** : நாணமில்லாமல் தன் பெண்சாதி சொன்ன வேலைகளைச் செய்துகொண்டு திரிகிறவன் ஆண்மையிலும். நாண-முடைய பெண்மையே பெருமையுடையதாம், எ-று

ஏ) **பழைய 2** : நாணமில்லாமல் தன் மனையாள் ஏவலைச் செய்து திரிகின்றவன் நாணமுடைய பெண்ணாயினாகில் அவனுக்குப் பெருமையுடைத்து,

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

ஆண்மைக்கு இயல்பு பெண்ணும் விருப்போடு ஏவல் செய்ய ஆளுவது. அத்தகைய ஆண்மை நன்றிது தீதிது என்றும் ஆராயாது பெண்மையின் ஏவலைச் செய்யுமானால் அது ஆண்மையாகாது. ஆயினும் பால்கொள்பயனால் ஆண்மையுள்ளது என்பார் 'பெண்-ணேவல் செய்தொழுகும் ஆண்மை' என்றது இது இகழ்ச்சிக் குறிப்பு.

**'வள்ளுவரும்மகளிரும்'** என்ற நூலில் **தெ.பொ.மீ.** அவர்கள் இக்குறட்பாவால் 'இவன் நல்லன்; அவள் ஏவலால் அறமல்லன செய்தொழுகின்றான்; இவனினும் இவனை ஏவல் கொள்ளும் அவள் கொடியள் என்ற பழி ஏற்படுவதைத் தடுக்கிறார் **வள்ளுவர்.** அதற்கு அமைதி கூறவந்த **தெ.பொ.மீ.** 'இவன்தான் கொடியன்; அவள் அத்துணை இழிவுடையள் அல்லள் அறமல்லனவற்றைத்தானே செய்ய முந்தமாட்டாள்; அவளது நாணம் அவளைத் தடுக்கும். அதனால் தன் மணாளனைக் கொண்டு முடித்துக்கொள்கிறாள் அவள் தன் நாணை மறவாதிருக்க இவன் நாணை மறந்து அவள் ஏவல்வழி ஒழுகுகிறான், அதனால் நாணமுடைய இவனினும் நாணமிலாத அவன் சிறுமையுடையவன் என்கிறார். இவ்வாதத்தான் பெண்மைக்கு அறனல்லாதவற்றைச் செய்ய எண்ணி குற்றத்தோடு, கணவனைச் செய்யத் தூண்டிய குற்றமும் சேர்கிறது. பயன் கண்டு தெளிக

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மை :**

ஏண்பா லோவா நாண்மடம் அச்சம் இவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பால் நணுகாரே

ஆண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா.

- கம்ப. 1622

ஆணல்ன் பெண்ணல் னார்கொ லாமென
நாணல்லன் .................... - கம்ப.,2301.

ஓ) மேற்கோள் பகுதி ;

**சுவாமி:** பொருள் திரிபிற்கு மேற்கோள் காட்டி 'ஒழுகுவான் என்னும் முற்றினது பொருள் தன்னிலை திரிந்து பெயரெச்சத்தின் கண்ணே சென்றது' என்பர். - இ.கொ. ,125

91. 8. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். (908)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** நல்ல நுதலினையுடையாள் விரும்பியவாறு செய்தொழுகுவார், தம்மொடு நட்டார் குறை தீர்க்கவும் மாட்டார்; அவர்க்கு நல்லது செய்யவும் மாட்டார், எ-று.

குறைதீர்த்தல்-உற்ற துயரம் தீர்த்தல்.

**ஆ) பரிதி :** சிநேகித்தார்க்கு உண்டாகிய குறை முடியார்: நல்வழி நினையார் பெண் சொல் கேட்பவர், எ-று.

**இ) பரிப்:** தம்மோடு நட்டார் குறை தீர்க்க மாட்டார்: அவர்க்கு நல்லது செய்யவும் மாட்டார்: நல்ல நுதலினை உடையாள் விரும்பியவாறு செய்து ஒழுகுவார், எ-று.

குறை தீர்த்தல் ஆவது - உற்ற துன்பம் தீர்த்தல். நன்று ஆற்றல்-சிறந்தன செய்தல். இவையும் அவள் சொல்ல வேண்டுதலின் செய்ய மாட்டார் என்றது.

**ஈ) காளி :** தனக்கு சிறந்த நட்டார்க்கு ஒரு குறை வந்த இடத்து அதனைத் தீர்க்கமாட்டார். இனி அதுவேயும் அன்றிக் கல்வியும் கேள்வியும் முதலிய நன்கு செய்தலும் மாட்டார் என் எனின்? தன் மனையாளை விரும்பியது ஆண்மைக்குத் தகுதி அன்று என நாணாது மற்று ஆங்கே உள்ளழுந்தி ஒழுகும் அவர், எ-று

உ) **பரிமேல்.**: தாம் வேண்டியவாறன்றித் தம்மனையாள் வேண்டிவாறு ஒழுகுவார், தம்மொடு நட்புச் செய்தார் உற்ற குறை முடிக்க மாட்டார். அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ் செய்யவும்மாட்டார், (எ-று).

'நன்னுதலாள்' என்பதனை ''அமையார் தோள்'' என்புழிப் போலக் கொள்க.[1] அவள் தானே அறிந்து ஏவலும் பொருள் கொடுத்தலும் கூடாமையின், இருமைக்கும்[2] வேண்டுவன செய்ய மாட்டார் என்பதாம்.

ஊ) **கவிராசர்**: தாம் நினைத்தபடியல்லாமல் தம்பெண்சாதி சொற்படி நடக்கிறவர், தம்மோடு சினேகம்பண்ணினவரது குறையை முடிக்கமாட்டார்; அதல்லாமல், மறுமைக் குறுதியான தருமங்களை செய்து கொள்ளமாட்டார், எ-று.

ஏ) **பழைய 2**: தம்மொடு நட்புச் செய்தார் குறையைத் தீர்க்க மாட்டார்; அதுவுமின்றி தமக்கு மறுமைக்கு உதவியாய் நன்மை-களையுஞ் செய்து கொள்ளமாட்டார் ; நல்ல நுதலையுடைய மனை-யாள் சொன்னபடிக் கேட்டு நடந்து கொண்டு திரிபவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**இக்குறளில் 'நன்றாற்றார்'** என்பது சிறுமாற்றங்களுடன் உரையுலகில் நிலவுவது 'நட்டார்க்கு நன்று அற்றார்' என நண்பினரோடு இயைபு படுத்திக் கூறுவர் **மணக்குடவர், வரத**.; 'நல்வழி நினையார்' **பரிதி.**; 'கல்வி கேள்வி முதலிய நல்லன செய்யார்' **காளி.**; 'மறுமைப்பயனை அடைதற்குரிய இல்லற தருமங்களைச் செய்யமாட்டார், '**மு ரா. கந்த.**; 'வேறு எந்த நல்ல காரியமும் செய்யார்' **இராம.**; இவற்றுள் 'அவர்க்கு நன்மை செய்யமாட்டார்' 'மறுமைக்கு நன்மை தேடிக்கொள்ளார்' என்ற உரைகளிலும் 'நல்லன செய்யமாட்டார்' என்ற பொதுமையுரை அனைத்தையும் தன்னகத் தடக்கி நிற்பது.

---

1. 'அமையார் தோள்' எனவே அஞ்சுதற்குக் காரணமான எளிமை தோன்றியவாறு போல நன்னுதலாள் எனவே ஆடவன் அஞ்சுதற்குக் காரணமாகிய எளிமை தோன்ற நிற்றது.
   நன்னுதலாள் — அழகிய நெற்றியையுடைய பெண், குறள் 906
2. இருமைக்கும் — இம்மை மறுமைக்கும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

தித்தி யாநின்ற செங்கிடை வாய்ச்சியர்
முத்த வாணகை முன்னெயி றூ தேன்
பித்து மாலும் பிறவும் பெருக்கலான்
மத்த வாரணம் என்ன மயங்குவான். — கம்ப., 4394

மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்குப்
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலின் இப்பேறுகள் பெற்றேன்
எண்மேல் வைத்தே னென் புகழ் யான்றான் எளியேனோ!
—கம்ப., 8788

91.9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல். (909)

உரைப்பகுதி :

**அ) மணக். :** அறம்செய்தலும், அமைந்த பொருள்[1] செய்தலும், ஒழிந்த காம நுகர்தலும், பெண்ணேவல் செய்வார்மாட்டு இல்லை-யாம், எ-று.

இஃது அச்சமில்லாராயினும் சொன்னது செய்வாராயின், இம்மூன்று பொருளும் எய்தார் என்றது.

**ஆ) பரிதி. :** அறமும் பொருளும் இன்பமும் பெண் ஏவல் செய்-வார்க்கு இல்லை, எ-று.

**இ) பரிப். :** அறம் செய்தலும், அமைந்த பொருள் செய்தலும், ஒழிந்த காமம் நுகர்தலும் பெண் ஏவல் செய்து ஒழுகுவான் மாட்டு இல்லை ஆம், எ-று.

அச்சம் இலர் ஆயினும் சொன்னது செய்வர் ஆயின் இம்-மூன்று பொருளும் எய்தார் என்றது; என்னை? தலைமை அவள் கண்ணது ஆதலான். இவை மூன்றினாலும் ஏவல் செய்தார்க்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது.

**ஈ) காளி. :** அறமும், பொருளும், இன்பமும் பெண் ஏவல் செய்து ஒழுகுவார்க்கு இல்லை, எ-று.

---

1. அமைந்த பொருள் — நல்லாற்றான் ஈட்டிய இன்பமே நுகர்தற்கு உரிய அமைதி-யான பொருள்,

பிறவினை என்றது இன்பமும் என்றது.

உ) **பரிமேல்** : அறச்செயலும் அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும், அவ்விரண்டின்[2] வேறாய இன்பச் செயல்களும்[3], தம்மனையாள் ஏவல் செய்வார்மாட்டு உளவாகா, எ-று.

புலன்கள் ஐந்தாகலின், 'பிறவினை' எனப் பன்மையாயிற்று[4]. அவைநோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவள்கண்ணதாகலின், பின் அவைதாமும் இலவாயின என்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறினார் இவை மூன்று பாட்டானும் அவள் ஏவல்செய்தற்குற்றம் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** : தன் தருமம் செய்கிறதும், அந்தத் தருமம் செய்துமுடிப்பதற்கு வேண்டிய பொருள்கள் தேடுகிறதும், இரண்டிலும் புறத்தியான இன்பம் செய்கிறதும் தன் மனையாள் ஏவல்செய்கிறவனுக்கு உண்டாகா, எ-று.

ஏ) **பழைய 2** : அறஞ்செய்தலும் அறஞ் செய்தற்கு ஏதுவாகிய நிறைந்த பொருளும் தமக்கின்பமாகிய செய்ல்களும் மனையாள் ஏவல் செய்வாரிடத்து உளவாகா.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

அறவினை பொருள் கூறினமையான் 'பிற' என்பது 'அவற்றின் இனமாகிய இன்பவினை' எனப்பொருள் காண்பர் **மணக்., பரிதி, காளி.** முதலியோர். 'அவ்விரண்டின் வேறாய இன்பச்செயல்களும்' என்னும் **பரிமேலழகர்** உரை அவளால் அடையும் காமவின்பத்தையன்றி வேறுள இன்பங்களையும் குறிப்பதாகும். 'பிற வீரச்செயல்கள்' என்று கூறி 'இவன்செய்யும் வீரச்செயல்களான் விளையும் பெருமை ஏவும் அவளையே சாரும்' என விளக்கமுந் தருவர் **வரத.**; கணவன் மனைவி கிழித்த கோட்டைத் தாண்டாமல் அவள் ஏவல் வழி நிற்பது அவளாற் பெறத்தக்க புலன் இன்பம் ஒன்றையே கருதியாதலின் அந்த இணைவிழைச்சின்பத்தையும் பெறான் என்பதே சிறந்தது. அதன்கண்ணே இந்திரியங்கள் ஐந்தானும் எய்துமின்பங்கள் அடங்கும் ஆதலின் புலன்கள் ஐந்தாகலின் பிறவினை எனப்பன்மையாயிற்று என்ற அமைதி வேண்டுமா? என்பது ஆய்வுக்குரியது.

---

2. அவ்விரண்டின் — அறச்செயல், பொருட்செயல் என்னும் இரண்டிற்கும்
3. இன்பச் செயல்கள் — கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் இன்பச் செயல்கள்
4. நுகரும் புலன்கள் ஐந்தாதலால்.

ஔ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

இனமா மென்றுரைப்பினு மேத மெனான்
முனமா கியபான்மை முளைத் தெழலால்
புனமா மலர்வேய் நறும்பூங் குழலாள்
மனமா நெறி யோடியமன் னவனே. —சீவக., 215

அரசொடு நட்டவர் ஆள்ப விருத்தி
அரவொடு நட்டவர் ஆட்டியும் உண்பர்
புரிவளை முன்கைப் புனையிழை நல்லார்
விரசில ரென்று விடுத்தனர் முன்னே. —வளையா., 30

மங்கையர் பொருட்டா லெய்து மாந்தர்க்கு மரண மென்றல்
சங்கையின் றுணர்தி வாலி செய்கையாற் சாலு மின்னு
மங்கவர் திறத்தி னானே யல்லலும் பழியு மாதல்
எங்களிற் காண்டி யன்றே யிதற்குவே றுவமை யுண்டோ.
—கம்ப., 4231

91.10. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்
கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். (910)

உரைப்பகுதி :

**அ) மணக்.** : எண்ணம்சேர்ந்த மனத்தினை விரிவாக உடை-யார்க்கு எல்லாநாளும் பெண்ணைச் சேர்ந்து ஆகும் அறியாமை இல்லையாம், எ-று.

எண்சேர்தலாவது இதனால் வருங்குற்றத்தினைத் தெரிந்து உணர்தல்.

**ஆ) பரிதி** .: மோட்சம் இச்சையான மனத்தார் பெண்சொல் கேட்டலாகிய பேதைமைக்கு உட்படார், எ-று.

**இ) பரிப்.** : எண்ணம் சேர்ந்த மனத்தின் விரிவு உடையார்க்கு எல்லா நாளும் பெண்ணைச்சார்ந்து ஆம் அறிவு இன்மை இல்லை ஆம், எ-று.

எண் சேர்தல் ஆவது - இதனால் வரும் குற்றத்தைத் தெரிந்து உணர்தல் இதனை உடையார் அறிவு உடையார் என்றது.

**ஈ) காளி** : அறம், பொருள், இன்பம், வீடு என நான்கின் திறம் தெரிந்து[1] எண்ணும் எண் சேர்ந்த நெஞ்சத்தின் இடம் பாடு[2] உடையார் யாவர்? மற்று அவர்க்கு எஞ்ஞான்றும் பெண்வழிச்-சென்று சேர்ந்து ஏவல் கேட்டு ஒழுகும் பேதைமை சிறிதும் இல்லை எ-று.

இனி, மற்றும் இவ்வாறு யாவர்க்கும் தாம் வரைந்துகொண்ட வரைவு மகளிர்மாட்டேயும் மனைவாழ்க்கை மரபு ஒழிய விழைந்து வாழ்தல் மரபு அன்று என்பதனை உணர்த்தி, மற்று இதன் பின்னரே வரைவின் மகளிர் ஆகிய பரத்தையர்மாட்டு மருஉதல் மரபு அன்று என்பதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

**உ) பரிமேல்** : கருமச் சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சத்தினையும் அதனினாய செல்வத்தினையும் உடையராய வேந்தற்கு, மனை-யாளைச் சேர்தலான் விளையும் பேதமை எக்காலத்தும் உண்டாகாது.

''இடனில் பருவத்தும்[3]'' எனவும் ''இடனின்றி இரந்-தோர்க்கு''[4] எனவும் வந்தமையின், இடன் என்பது அப்பொருட்-டாதல்[5] அறிக. இளமைக்காலத்தும் என்பார் 'எஞ்ஞான்றும' என்றார். அப்பேதைமையாவது[6] மேற்சொல்லிய[7] விழைதல், அஞ்சல், ஏவல் செய்தல் என்னும் மூன்றற்கும் காரணமாயது. எதிர்மறை முகத்-தான்[8] அம்மூன்றும் இதனால் தொகுத்துக் கூறப்பட்டன.

**ஊ) கவிராசர்** : காரியத்தை நன்றாய் விசாரித்துச் செய்கிற ஆலோசனையையும், அதனால் ஆகிய செல்வத்தையு முடையவர் களுக்குத் தம் மனையாளைச் சேருகிறதினாலே விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது, (எ-று).

---

1. குறள்., 501.
2. எண் சேர்ந்த நெஞ்சத்தின் இடம்பாடு - எண்ணங்கள் உடைய மனத்தில் இடம் பிடித்தவர்
3. குறள்., 218 4. கலி. 1 : 19
5. அப்பொருட்டாதல் - செல்வம் என்னும் இப்பொருள் உடையதாதல்.
6. பேதைமை - அறியாமை
7. மேற்சொல்லிய - 901, 902-ல் விழைதலும், 903, 906-ல் அஞ்சுதலும், 907 909-ல் ஏவல் செய்தலும் சொல்லப்பட்டிருக்கின்றன.
8. பெண் சேர்ந்து ஆம் பேதைமை என்று எதிர்மறை வாயிலாக விழைதல், அஞ்சுதல் ஏவல் செய்தல் என்னும் மூன்றும் இப்பாவில் சுருக்கிக் கூறப்பட்டன.

**ஏ) பழைய 2 :** கருமச் சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத் திட்பமும் அதனால் வருஞ்செல்வத்தினையும் உடையாராகிய வேந்தர்க்கு மனையாளைச் சேர்தலான் விளையும் பேதைமையும் எக்காலத்தும் உண்டாகாது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'எண்சேர்தல்'**

'பெண்வழிச்சேறலான் வருங்குற்றத்தைத் தெரிந்து உணர்தல்', **மணக்.**; 'அறம் பொருள் இன்பம் வீடு என நான்கின்திறம் தெரிந்து எண்ணும்எண்ணம் சேர்ந்த நெஞ்சத்தின் இடம்பாடுடையார்' என்பர் **காளி.**; 'கருமச்சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சத்தையும், அதனாலாய செல்வத்தையும் உடையார்க்கு' என்பர் **பரிமேல்.**; 'காரியங்களை நன்றாக யோசித்துச்செய்கின்ற ஆலோசனை' **கவி-ராசர்; பழையஉரை** 'நெஞ்சத்திடன் நெஞ்சத்திட்பம்' **என்பது.**

இவற்றுள் **மணக்., பரிமேல்., பழைய** உரைகள் சிறந்தன 'திடன்-திட்பம்' என்ற **பழையஉரை** பாராட்டுக்குரியது

'இலட்சியத்தையடைய வேணும் என்ற மனவுறுதி' என்ற **வரத.** உரையும் 'எண்-எண்ணம் அதாவது சொந்த அறிவு கொண்டு ஆலோசித்தல்' என்ற **இராமலிங்கர்** உரையும் தெளி-வானவை

## 91. பெண்வழிச்சேறல்

| | மனைவிழைவார் | பேணாது | இல்லாள்கண் | மனையாளை | இல்லாளை | இமையாரின் | பெண்ணேவல் | நட்டார் | அறவினையும் | எண்சேர்ந்த |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 8 | 9 | 4 | 3 | 2 | 1 | 5 | 6 | 7 | 10 |
| பரிதி | 6 | 7 | 9 | 2 | 1 | 3 | 5 | 8 | 4 | 10 |
| பரிப். | 8 | 9 | 4 | 3 | 2 | 1 | 5 | 6 | 7 | 10 |
| காளி | 8 | 6 | 7 | 5 | 1 | 2 | 9 | 4 | 3 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

91-வது அதிகாரம் 'பெண்வழிச்சேறல்' முற்றிற்று.

# 92. வரைவின்மகளிர்

**அ) மணக்.**: வரைவின்மகளிராவது கணிகையரோடு கலந்தொழுகினால் வரும் குற்றம் கூறுதல் முயக்கத்தில் வரைவின்மையால், வரைவின் மகளிரென்று கூறப்பட்டது.

**ஆ) பரிதி.**: வரைவின் மகளிராவது பொதுமகள் இயற்கை கூறல், எ-று.

**இ) பரிப்.**: வரைவின் மகளிர் ஆவது கணிகையரோடு கலந்தால் வரும் குற்றம் கூறுதல். முயக்கத்தின் வரைவு இன்மையால் வரைவுஇல் மகளிர் என்று கூறப்பட்டது மேல் மனைவியர்மாட்டு மிக்க காதலினால் வரும் குற்றம் கூறினார்: இது கணிகையர் காமத்தினால் வரும் குற்றம் கூறுதலின் பின் கூறப்பட்டது.

**உ) பரிமேல்.**: அஃதாவது தந்நலம்[1] விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு[2] ஆவார் ஆகாதார் என்னும் வரைவிலாத மகளிரது இயல்பு[3]; ஆதலால் தமக்குரிய மகளிரான்[4] வருங்குற்றத்தின்பின் வைக்கப்பட்டது

**ஊ) கவிராசர்.**: அஃதாவது-தம்முடைய போகத்தை விலைகொடுப்பார் யாவருக்கும் கொடுக்கிறதல்லாமல், இவர்கள் நல்லவர்கள் பொல்லாதவர்கள் என்ற வரம்பில்லாமற் பணமே காரணமாக வஞ்சிக்கிற மகளிரின் குணங்கள்.

---

1. தந்நலம் — தமது இன்பத்தை 2. வரைவிலாத — வரையறையில்லாத

3. குடிப்பிறந்த மாதர் இளமையில் தந்தை தாயாராலும் வயது வந்த காலத்து, கணவனாலும் முதுமையில் மக்களாலும் காக்கத் தக்கவர் பொது மகளிர் இங்ஙனம் காக்கத் தக்கார் அல்லார் ஆதலின் அவரைத் தமக்குரிய மகளிர் என்றார்.

ஏ) பழைய 2 : அஃதாவது, தமக்குரிய மனையாளன்றி வரை-வில்லாத விலைமாதரைச் சேர்தலாகாதென்று விலக்குதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் .:

**மணக்.** 'வரைவு இல்மகளிராவான் இன்னார் எண்ணாது அவரைக் கலத்தலால் வரும் குற்றங் கூறுதல்' என்றனர். **பரிதி.** 'பொது மகள்' என்றனர். **பரிமேல்.** தந்நலம் துய்த்தற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவு இல்லாத மகளிர்' என்றனர்.

**கவிராசர்.** 'நல்லவர் பொல்லாவதர் என்ற வரம்பில்லாதவர்' என்றனர்.

**இராம.** 'வரைமுறையில்லாமல் பெண்மையை விலக்குவிற்கும் வேசையர்' என்பர் 'வரைவு - ஓர் எல்லை. ஒருவனுக் கேயுரி-மைபூண்டு அவ்வெல்லையில் வாழாத மகளிர்; பொதுமகள்' என்பர். **வரத.** 'இல்லறம் புகாமலும் கற்பைக்காவாமலும் இயற்கையும் செயற்கையுமாய் அழகு முதலியவற்றால் ஆடவரை மயக்கிக் குல நல வேறுபாடின்றித் தந்நலத்தைப் பொருட்கு விற்பார்' என்பர் **தேவ-நேயர்.** 'தன் இன்பத்திற்கு உரியர் இவர் என்னும் வரையறை-யில்லாத விலைமகளிர்' என்பர் **குழந்தை.** 'அளவில் நிற்காத பெண்கள்'' என்பர் **சாமி சிதம்.**, 'மணமில்லாத விலை மகளிர்'' என்பர் **சி. இ.**

ஆசிரியர் **வள்ளுவனார்** கூறும் 'பண்பு இல் மகளிர்' 'அன்பின் விழையாது பொருள் விழையும் ஆய்தொடியார்', 'பொருட் பெண்டிர்', 'பொது நலத்தார், 'நிறை நெஞ்சம் இல்லவர்' 'மாய மகளிர்'. 'வரைவிலா மாணிழையர்', 'இருமனப் பெண்டிர்' என்ற காரணக்குறிகளே அவர்கள் இயல்பை நன்கு விளக்குவன வாதல் காண்க.

இலக்கிய உலகில் உலாவும் தனிப்பெண்டிர், கோயிற் பிணாப் பிள்ளைகள், பதியிலார், குலத்து வந்தார், முதலான சிவத்-தொண்டரின் வேறுபட்டார் இவராதலைப் பிற இலக்கியங்-கொண்டு எண்ணுக இவர்களையும் வரைவின் மகளிரோடு டெண்ணிமயக்கற்க.

92.1. அன்பின் விழையார் பொருள்விழையும்
ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். (911)

உரைப்பகுதி :

அ) மணக் .: அன்பால் கலத்தலின்றிப் பொருளால் கலக்கும் ஆய்தொடியார் சொல்லும் இன்சொல், பின்பு கேட்டினைத் தரும் எ-று.

ஆ) பரிதி .: அன்பினாலே விரும்பார் பொருளாசையால் விரும்புமவர் இன்பம், நல்லோர்முன் இழுக்குண்டாம், எ-று.

இ) பரிப் .: அன்பால் கலத்தல் இன்றிப் பொருளால் கலக்கும் ஆய் தொடியார் சொல்லும் இன்சொல் பின்பு கேட்டினைத் தரும் எ-று

இது கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறப்பட்டது.

ஈ) காளி .: ஆடவரை எஞ்ஞான்றும் நெஞ்சத்து அன்பினான் விரும்பாராய்ப் பொருளையே விரும்பிச் செல்லும் ஆய்தொடிப்பரத்தையர் சொல்லிக்காட்டும் இன்சொல்லும் இழுக்கத்தைத் தரும் இத்துணை அல்லது விழுப்பம் தாராதாம் ஆராயின், எ-று.

உ) பரிமேல் .: ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர், அது கையுறுந்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப்[1] பயக்கும், எ-று.

பொருள் என்புழி இன் விகாரத்தால் தொக்கது. ஆய்ந்த தொடியினை உடையார் என்றதனாலும், இனியசொல் என்றதனாலும்[2] அவர் கருவி[3] கூறப்பட்டது. அச்சொல் அப்பொழுதைக்கு இனிது போன்று பின் வறுமை பயத்தலின். அது கொள்ளற்க என்பதாம்.

---

1. இன்னாமை — துன்பம்
2. 'ஆய்தொடியார்' என்றதனாலும், 'இன்சொல்' என்றதனாலும் என்றும் பாடமுண்டு.
3. கருவி — ஆய்தொடியும் இன்சொல்லும்

ஊ) **கவிராசர்** : ஒருவன்மேலே தயையா வரிசைப்படாமல் பொருளையே காரணமாக வாஞ்சிக்கிற[4] பரஸ்திரீகள்[5] அவனது பொருள் தங் கையிலே அகப்படும் அளவு அவன் மேலே விசுவாசம்[6] போலே இருந்து சொல்லுகிறவார்த்தை, பிறகு அவனுக்குப் பொல்லாங்கு தரும், எ-று.

ஏ) **பழைய 2** : இழுக்கந் தரும்' பாடம்.

'ஒருவனை அன்புடன் தழுவிப் புணராது பொருளைப் பற்றிப் புணரும், நல்ல வளையலையுடைய விலைமகளிர் இனிய சொல்லும் அவனுக்குப் பணவறுமைக்கு ஏதுவாகிய இழுக்கத்தினைத் தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**பரிதி.** 'இன்பம் இழுக்குத் தரும்' எனப் பாடங்கண்டிருப்பர் போலும். **பரிப்பெருமாள்** உரை தெளிவும் விளக்கமும் உடையது. 'ஆய் தொடி' 'இன் சொல்' எனபவற்றிற்குப் **பரிமேலழகர்** தரும் குறிப்பு மிக நலமானது. 'அன்பின்மையை மறைக்க இன்சொல்லையும் பொருளாசையை மறைக்க ஆய் தொடியையும் உடையர்' என்பர் **வரத.**; **பரிமேலழகரை** ஒட்டியும் வெட்டியும் எழுந்த நயங்கள் பின்னுளோர் கூறுவன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்:**

தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே — புறம்., 73 : 13-15

சலம்புணர் கொள்கைச் சலதியொடுஆடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு. — சிலம்பு , 9:69-71

அவரன்பும் வாரி யறவே யறும். — நாலடி., 370

அவரன்பும் கையற்ற கண்ணே அவம். — நாலடி., 371

அங்கோட் டகலல்குல் ஆயிழையாள் நம்மோடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன் - செங்கோட்டின்

---

4. வாஞ்சிக்கிற - விரும்புகிற
5. பரஸ்திரிகள் - பிற பெண்டிர்
6. விசுவாசம் - அன்பு, காதல்

மேற்காணம் இன்மையான் மேவா தொழிந்தாளே
காற்கால்நோய்க் காட்டிக் கலுழ்ந்து. — நாலடி., 372

அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்
செங்கண்மா லாயினும் ஆகமன் — தம்மைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையால் தொழுது. — நாலடி., 373

ஆணமில் நெஞ்சத்து அணிநீலக் கண்ணார்க்கு
காணமில் லாதார் கடுவனையர். — நாலடி., 374

நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம் — மணி., 18:19-20

வண்டிற் றுறக்கும் கொண்டி மகளிரை. — மணி., 18:109

விலை பகர்ந் தல்குல் விற்கும் வேலினும் வெய்ய கண்ணார்.
— சீவக., 372

பருகுவாரிற் புல்லிப் பயங்கண் மாறத் துறக்கும்
முருகு விம்மு குழலார். — சீவக., 1415

தளிப்பெயல் தண்டுளி தாமரையின் மேல்
வளிப்பெறு மாத்திரை நின்றற் றொருவன்
அளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லால்
துளக்கிலர் நில்லார் துணைவளைக் கையார். — வளையா., 11

தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும் போற் பசையு மற்றதே. — கம்ப., 356

கள்ளூறு செவ்வாய்க் கணிகைகாண் கைகேசி
உள்ளூறு காதல் இவள்போலென் றுள்ளழிந்தார். — கம்ப., 1800

பூரியர் புணர்மாதர் பொதுமனம் ......... — கம்ப, 2088

பொன்னோக்கியர் தம்புல னோக்கிய புன்க ணோரும்.
— கம்ப., 3535

மைவிழியார் மனை அகல். — ஆத்தி., 96

வேசி உறவு காசிலும் பணத்திலும் தான். — பழ.,

வேசி உறவும் வெள்ளாட்டி அடிமையும் காசிலும் பணத்திலுந்தான்.
— பழ.,

92.2 பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். (912)

உரைப்பகுதி :

அ) மணக்.: தமக்கு உளதாகும் பயனை நோக்கிக் குணமாகக் கூறும் குணமில்லாத மகளிரது இன்பத்தை ஆராய்ந்து பார்த்து, அவரைச் சாராதொழிக, எ-று.

இதனாலே கணிகையர் இலக்கணமெல்லாம் தொகுத்துக் கூறினார்.

ஆ) பரிதி.: பொருளாசை கண்டு பண்பு சொல்லும் பண்பில்லாத மடவார்நயம், 'இத்தனையல்லோ' என்று கண்டு கைவிடுக எ-று.

இ) பரிப்.: தமக்கு உள்ளது ஆம் பயனை நோக்கிக் குணம் இல்லாத மகளிர் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து அவரைச் சாராது ஒழிக, எ-று.

இதனானே கணிகையர் இலக்கணம் எல்லாம் தொகுத்துக் கூறினார். இது கணிகையர் கலவியைத் தவிர்க என்றது.

ஈ) காளி.: தாம் கருதியபொருள் தமக்குப் பயன்படும் உபாயமே சீர்தூக்கிப் புறமே நெறிப்பட உரைக்கும் நெறியில்மகளிர் செய்யும் நசையை[1], இது வெறும் பொய் நசை என்று சீர்தூக்கி, மற்று இவரோடு நட்புச்செய்யாது ஒழிக, எ-று.

உ) பரிமேல் .: ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அஃது எய்துந்துணை தம் பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது, ஒழுகாலாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக, எ-று.

பண்பு, சொல்லின்கண் அல்லது தங்கள் கிடவாமை தோன்றப் 'பண்பின் மகளிர்' என்றும், அவர்க்கு[2] அது[3] சாதிதருமமாதல்

1. நசை — விருப்பம்
2. அவர்க்கு — பொதுமகளிர்க்கு
3. அது — பண்பில்லாமை

நூலானேயன்றி அவர்[4]செயலானும் அறிந்து என்பார் 'நயன்தூக்கி' என்றும். அவ்வறிவு[5] அவரை விடுதற்கு உபாயம் என்பது தோன்றப் பின் 'நள்ளாவிடல்' என்று கூறினார்.

**ஊ) கவிராசர்.:** ஒருவன் கைப்பொருளை அளந்தறிந்து அந்தப் பொருள் தமக்கு வந்தெய்துமளவும் அவனுக்கு நன்மை சொல்லும் பரஸ்திரீகள் செய்கைகளை ஆராய்ந்தறிந்து அவர்களைச் சேராமல் விடவேணும், எ-று.

**எ) பழைய2.:** ஒருவனுக்குள்ள பொருளை அளந்தறிந்து அதனை வாங்கும் அளவும் பண்பு பாராட்டிப் பின்பு பண்பில்லாத விலைமாதர் நயத்தினைச் சீர்தூக்கிப் பார்த்து அவரோடு பொருந்தாது விடுக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'**பண்புரைக்கும் பண்பின் மகளிர் நயன்தூக்கி**' என்பனவற்றிற்குப் **பரிமேலழகர்** தரும் விளக்கம் மிகச்சிறந்தன. **தேவநேயர்** 'கூறும் சொல்லளவல்லது உள்ளத்திலது' என்பதைக் குறிக்கும் என்பர். இதுவும் ஏற்றதே. 'தூக்கி - நிறுத்தளந்து' என்ற **இராம.** உரை சிறந்தது. **மணக்குடவர்** முதலாயினார் 'பயன் — தந்நலத்தை விற்பதாகலாம் ஊதியம். அதனையளந்து என்பர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

**பயன்தூக்கி பண்புரைக்கும் பண்பில் மகளிர்:**

பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போல்
நித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினாள் நன்னெஞ்சே
நிற்றியோ போதியோ நீ. —நாலடி., 376

மலையி னுள்ளவெ லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தது வெள்ளமே. —கம்ப.,17

**முற்றும்:**

சலப்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலப்பாடு நாணுத் தரும் எனக்கு. —சிலம்பு.,9:69-71.

---

4. அவர் — பொதுமகளிர்
5. அவ்வறிவு — பொதுமகளிர்க்குப் பண்பில்லாமை சாதுத் தன்மையாதலின் அதனை நூலான் அன்றி அவரது ஒழுக்கத்தானும் அறிந்த அறிவு.

முலை ...... ......... ......... அல்குல் விற்கும்
ஃ பந்தொடி மகளிர் கைத்தோர் பசையில்லை யென்ன விட்ட
மைந்தர் .. ... ...... ...... ...... —கம்ப., 9.8
ஃ மவிழியார் மனை அகல் —ஆத்திச்சூடி

92.3. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று. (913)

உரைப்பகுதி :

**அ) மணக் .:** பொருளே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே முயங்கும் முயக்கம், இருட்டறையினுள்ளே கிடந்ததொரு வேற்றுப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியது போலும், எ-று.

இவை இரண்டினாலும் கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் கூறப்பட்டது.

**ஆ) பரிதி .:** வரைவின் மகளிர் பொய்யை மெய்யன்பாக ஒழுகுதல் எத்தன்மைத்து எனின் இருட்டறையில் கல்பிணத்தைக் கட்டி அழுபவற்கு ஒக்கும், எ-று.

**இ) பரிப் .:** பொருளையே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே முயங்கும் முயக்கம் இருட்டு அறையின் உள்ளே கிடந்தது ஒரு வேற்றுப் பிணத்தைக் கூலிகுத் தழுவியது போலும், எ-று.

கேடு வரினும் இன்பம் தரும் ஆயின புணர்ச்சியான் வரும் குற்றம் என்னை என்றார்க்கு, அவர் இவ்வாறு வருந்துவர் ஆகலான் இன்பம் இல்லை என்று கூறப்பட்டது. இவை இரண்டினாலும் கணிகையர் கூட்டத்தினான் வரும் குற்றம் கூறப்பட்டது.

**ஈ) காளி .:** தாமே தமக்குப் பொருள் வரைந்து ஒழுகும் பெண்டிர் தமது பொருள் வரலாற்றிற்கு[1] வேண்டும் ஆடவர் உயர்ந்தோர் இழிந்தோர் யாவரே ஆயினும் வரைவு இன்றிப்[2] பொய்ம்மை முயக்கம் முயங்கும்[3] மகளிரது முயக்கம், பெரிதும் இருள் உடைய அறையுள் புக்கவர் பிணம் தழீஇ உறையும் அத்தன்மைத்து, எ-று.

**உ) பரிமேல் .:** கொடுப்பாரை விருப்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையை உடைய முயக்கம், பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன் அறியாத பிணத்தைத் தழுவினால் போலும், எ-று.

1. வரலாற்றிற்கு — வரும் வழிக்கு 2 வரைவு இன்றி — எல்லையின்றி
3. முயங்கும் — புணரும்

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தும் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர் குறிப்புக்[4] கூலிக்குப் பிணபெடுப்பார் காணப்படாததோர் இடததின்கண் இயை பில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடு ஒக்கும் எனவே அகத்தால் அருவராநின்றும்[5] பொருள் நோக்கிப் புறத்தால் தழுவுவர்; அதனை[6] ஒழிக என்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் சொல்லும் செயலும் பொய் என்பது கூறபட்டது.

ஊ) **கவிராசர்** .: கொடுப்பாரை விரும்பாமற் பொருளையே விரும்புகிற பொது மகளிருடைய இணக்கம்[7] இருளாயிருக்கிற வீட்டிலே திக்கற்றுக் கிடக்கிற பிணத்தைக் கூலிக்கு எடுக்கிற-தோடொக்குப், எ-று.

ஏ) **பழைய 2.**: 'இருட்டறையுள்' பாடம்.

பொருட்பெண்டிராகிய விலை மகளிர் பொய்யாகிய கலவி மயக்கம், இருட்டறையிற் கிடந்த தக்கின மல்லாத[8] பிணத்தைப் பொருளுக்காக எடுத்தாற் போலும்,

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்குடவர்** கருத்து 'பொருட்பெண்டிர் பொருள்-கொடுக்கும் ஆடவனைத் தழுவும் முயக்கம் இருட்டறையில் அயற் பிணத்தைத் தழுவியது போலும்' என்பது. 'ஆடவன் பிணம் அவன் கொடுக்கும் பணம் பிணந்தழுவக் கொடுக்கும் கூலி' என்றாகிறது. **பரிதி.** 'பரத்தையர் பொய்யன்பை மெய்யன்பாகக்காட்டியொழுகுதல் கல்பிணத்தைக் கட்டியழுவது போலும்' என்பர். 'ஏதில் பிணம் உணர்ச்சி ஏதும் பிணத்தினிடம் காணப்படாவிட்டாலும் அதுவும் மக்களினமே யாதலால் தீண்டுதலால் அடையப்பெறும் ஊறின்ப-மாவது உளதாகும். அதுவும் இல்லாதது கற்பிணம். அதைத் தழுவிய தொக்கும் விலைமாதர் தழுவுதல்' என்பது. 'உறுபொருள் கொடுத்து ஊறின்பம் பெற முயல்வானுடையதழுவுதல் கற்பிணத்தைத் தழுவியது போலாம்' என்றனர். 'பிணத்தால் பெறும் சிறு இன்பத்தையும் கற்பிணத்தால் எய்தலின்று என்றவாறு. ஐம்புல இன்பங்களை யாரத்

4, அவர் குறிப்பு — பொதுமகளிர் எண்ணம்
5, அகத்தால் அருவரா நின்றும் — மனத்தால் வெறுத்தும்
6. அதனை — தழுவுதலை 7, இணக்கம் — நட்டு
8, தக்கினமல்லாத — தகுதியில்லாத

துய்க்கும் மகளிரின்பத்துள் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலே முறையாதலின் முதற்கண்ணதாகிய காட்சியின்பமும் இன்றென்பார் இருட்டறை' என்றனர்.

'கற்புடையாள் தன்கணவனிறந்துழி அப்பிணத்தையும் அன்பொடுந் தழுவுதல் உண்டாதலின் அதனை நீக்குதற்கு பொருட்டு 'ஏதில் பிணம்' என்றும், காட்டிற் பிணம் சிதைவுண்டும் அழுகியும் புழுத்தும் கிடக்குமாதலின் அதனை நீக்குதற்பொருட்டு 'அறையிற் பிணம்' என்றும் அறையிற் பிணமாயினும் ஏதிற் பிணமாயினும் அத்தினிச் சாதிப் பெண்டிர் சிலர் விருப்பொடுதழுவுதல் கூடும் ஆதலான் இருட்டறை என்றும் கூறினார்' என்பர். **சோழவந்தான் அ. சண்முகப்பிள்ளை.**

'கன்னிப்பெண் இறந்தால் அவள் கன்னிமை கழிப்பதற்காகக் காசுக கொடுத்துப் பிணத்தைத் தழுவச்செய்தல் மலை நாட்டு வழக்காதலின் அதனையுட்கொண்டு கூறினதென்பர்' **மு ரா. கந்தசாமிக் கவிராயர்**

'மலையாள நாட்டில் ஒருவகையந்தணமரபில் கன்னிப்பெண் இறந்தால் அவள் பிணத்திற்குத் திருப்பூட்டு புணரச்செய்தல் வழக்கமாதலின் அதனை எண்ணிக் கூறியதாம்' என்பர் **அ. மாதவ ஐயர்**.

'பிணத்தைச் சூழ்ந்தழும் பெண்களில் உறவினராயின் கட்டித்தழுவி யழுதலும், அலலராயின் அருவருப்புடன அழுதலும் மரபாதலின் அயற்பெண்கள் தங்கண்ணால நோக்காது அழுதலை உளங்கொண்டு கூறியதாம்' என்பர் **இலக்குமணப்போற்றி,** அங்ஙனமன்றிக் கூலிவாங்கிக்கொண்டு அழுமகளிர் அருவருப்போடு பிணத்தின்மீது விழுந்தழுததைக் குறித்துக்கூறியதும் ஆகலாம் என்பர். 'மாரடித்த கூலி மடமீதில்' என்ற **பழமொழியும்** உண்டு. இவை **செந்தமிழ்த் தொகுதி** —4இல் கண்டவை.

இவையன்றிக் **கல்குளம் குப்புசாமி முதலியார் செந்தமிழில்** எழுதிய கட்டுரையும் ஒன்று உண்டு. 'இவை ஒரு வழக்கத்தை உள்ளிட்டுரைத்தது என்பதைக்காட்டிலும் இன்பமின்று என்பதற்குக் காட்டிய இல்லாத நிகழ்ச்சியை உவமித்ததாய் அதன் இழிவை மிகுதிப்படுத்தக்கூறியது மாகலாம்' என விளக்குவர்.

**பரிமேலழகர்** 'பிணம் எடுப்பார் தழுவியது போலும் என்ற வுரைகூற்றும் இயையாது என்பதையும் **தேவநேயர்** கூறுங்காரணங் களையும் விரிவாக அவர் பதிப்பில் இக்குறளுரையிற் காண்க.

ஓ) ஒப்புமைப்பகுதி :

**பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் :**

மலையி லுள்ளவெ லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தது வெள்ளமே. —கம்ப.,172

விலைநினை ந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறு மனமென வுலாய வூதையே. —கம்ப.,4264

ஓ) மேற்கோள்பகுதி :

**மயிலை** : பொருட்பெயரை அடையாக அடுத்துவந்தபொழி செய்யுளிடத்து இனத்தைக் காட்டி வந்ததற்கு மேற்கோள்.
—நன்.,400

**சங்கர** .: ஷ —நன்.,401

**92.4. பொருட்பொருளார் புன்னலம் தோயார்**
**அருட்பொருள்**
**ஆயும் அறிவி னவர்.** (914)

**உரைப்பகுதி ;**

**அ) மணக்.**: பொருளைப் பொருளாகக் கொள்வாரது புல்லிய நலத்தைத் தோயார், அருளைப்பொருளாக ஆராயும் அறிவுடையார், எ-று.

**ஆ) பரிதி** .: பொருட்பொருளால் அற்பமான இன்பத்தை விரும்பார், பிறவா நெறியான இன்பம் விரும்புவார், எ—று.

**இ) பரிப்** .: பொருளைப் பொருள் ஆகக் கொள்வாரது புல்லிய நலத்தைத் தோயார்: அருளைப் பொருள் ஆக ஆராயும் அறிவு உடையார், எ—று.

அருள் உடையார் ஆம் அறிவு என்றமையால் இவரை அறன் அறிவார் என்றது. என்னை? அறத்தைக் கெடுப்பர் ஆதலின்,

ஈ) காளி.: ஆடவரது பெருமையும் சிறுமையும் விரும்பாது பொருள் பொருள் என்று விரும்பி இருப்பவர் புல்லிய நலத்தைப்[1] பொருந்தார்; யார். எனின்? அருளைத் தமக்குப் பொருளாகத் தெரிந்து உணரும் அறிவினை உடையோர் எ—று.

எனவே இவ்வஞ்சமகளிர்க்குக் கொடுக்கும் பொருளை வறியோர்க்கு ஈதல் தமக்கு வாய்ப்பதே என்று ஆயும் அறிவினர் கருத்து என அறிக.

உ பரிமேல.: இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய நலத்தை, அருளோடு கூடிய பொருளை[2] ஆராய்ந்து செய்யும் அறிவினையுடையார் தீண்டார், எ.று

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின்[3], பொருட்பொருள் அருட்பொருள் என விசேடித்தார்.[4] புன்மை இழிந்தார்க்கே[5] உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் மறுதலையாகலின், 'தோயார்' என்பதாம்.

ஊ) கவிராசர்: தனக்கின்பமானவர்களை இகழ்ந்து பொருள் கொடுப்பாரையே விரும்பும் பரஸ்தீரீகளுடைய புல்லிய நலத்தை. தயையோடு கூடிய பொருளை ஆராய்ந்து செய்யுமறிவினையுடையார் தீண்டார், எ—று.

ஏ) பழைய 2.: இன்பப்பொருளை யிகழ்ந்து பொருளையே பொருளாக விரும்பும் பொதுமகளிர் அற்ப நலத்தினை, அருளொடு கூடிய பொருளை ஆராயுமறிவினையுடையவர் தோயார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பொருளைப் பொருளாகக் கொள்வாரது' என்ற மணக்குடவருரை 'பொருளாகக் சருதப்பெறும் அறம் பொருள் இன்பம்

1 புல்லிய நலம் — இழிந்த இன்பம் 2. பொருளை — அறமாகிய பொருளை

3 அற முதலிய நான்கையும் பொருள் என வழங்குதல். தருக்கவகையினரில் ஒருவராகிய வைசேடிகரது மதம். ஏன், இவை நாலும் புருஷார்த்தங்கள் அதாவது மனிதன் அடையக்கூடிய பொருள்கள் என ஏனைய நூல்களும் சொல்லும்.

4. விசேடித்தல் — அடையோடு கூடி வருதல்.

5. இழிந்தார் — ஒழுக்கத்தால் சாதியால் இழிந்தார் ஆகிய இருவரையும்

வீடு என்ற நான்கனுள் உடனோதப்பட்ட அறம் இன்பம் வீடுகளை பொருள் என்று கருதாது, பொருளையே பொருளாக மதிக்கும் விலை மகளிர்' என்னுங் கருத்தினது.

**பரிதி.:** 'பொருட் பொருளால் அற்பமான இன்பத்தை விரும்பார்' என்பர். அதனால் இவர்கண்ட பாடம் **'பொருட்பொருளாற்புன்னலம்'** என்பதாம் என நுனித்தறிந்து கூறுவர் சிலர். இங்ஙனம் கொள்ளின் 'ஆல்' என்னுருபு 'பொருட்' அல்லது 'ஆக' என்னும் பொருளதாய்ப் பொருளாகிய பொருளால் என்றோ பொருட் பொருட்டு, பொருளுக்காக என்றோ பொருள்பட்டுக் கருத்து விளங்காமை பெறப்படும் ஆதலின் 'பொருளார்' என்றது 'பொருளாற்' என எழுதுவோர் செய்த பிழையாகவே 'பொருளாள்' என்பதைப் 'பொருள்ாற்' எனப்படித்ததின் தவறாகவே ஆகக்கூடுமன்றிச் சிறப்புத் தருவது ஆகாது. இத்தகைய பாடமும் வள்ளுவர் தந்ததாகாது.

**காளி.:** 'பணம் பணம் என்று பறக்கிறான் என்ற வழக்குப் போலப் பொருள் பொருளார் என அடுக்கிவந்து பரத்தையின் ஆர்வக்குறிக்கோள் மொழியாய் நிற்பது எனல் தகும். இதனை 'ஆடவரது பெருமையும் சிறுமையும் பாராது' என்ற அவரது தொடர்வாக்கியமே விளக்கும்.

'இன்பமாகிய பொருளையிழந்து பொருளாகிய பொருளை விருப்பும் மகளிர்' என்ற **பரிமேழலகர்** உரையும் ஆழ்ந்து நுணுகிக் கருத்துக் காணும் இயல்பினது. பிறன் கைப்பொருள் பெறுதலும், கற்பு மறந்து பிறனைக்கலத்தலும், குற்றமாயினும் அதனை மறந்து பிறனைக்கலப்பாரும் பெறுவது இனபம் ஆதலின் அதனையும் பொருளென உடன் மதியாது பொருளையே மதிப்பார் என்னுங் கருத்தினது.

வீழும் இருவர்க்கு இனிதாகும் முயக்கு ஒருவரால் மறக்கப் பெறின் நலம் சிறவாமையின் 'புன்னலம்' என்ற ஆசிரியர் உள்ளமும் கொண்டு இன்பத்தை விரும்பாது, அதாவது பொருளென மதிக்காது பொருளையே பொருளாக மதித்தொழுகுமவர்' என்ற கருத்து நயமுடைத்து.

**கவிராசர் உரை** 'காசுக்காகக் கற்பழிந்த இழிகுலமகளிரைக் கருதுவது. பரத்தை அல்லது விலை மகளிரைக் குறிப்பதே இந்த அதிகார இயைபாகும்

பொருள் இழந்து இன்பம் வாங்கும் ஆடவன் இன்பமே பொரு-ளாகக் கருதுபவன். அவள் பொருளையே பொருளாக மதிப்பவள். 'கருத்தொருமித்து அதரவுபட்டதே இன்பம்' ஆதலின் மாறுபட்ட இருவர் மனமும் இன்பத்தை உணராது; ஆதலால்' புன்னலமும் தோயார் என இருசாரார்க்கும் ஏற்பக்கூறியதாம். இவ்வதிகாரம் பற்றி யாடவர்க்கே உரியதாயிற்று

**'அருட் பொருள் ஆயும் அறிவினவர்'**

**மணக்.**: 'அருளைப் பொருளாக ஆராய்வார்'

**பரிதி**: 'பிறவா நெறியான இன்பம் விரும்புவர்'

**வரத.**: 'அருளைப் பொருளாக நினையும் அறிஞர்'.

'அருளோடு கூடிய பொருள்' **பரிமேலழகர், கவிராசர், பழைய** முதலியோர்.

ஆசிரியர் அருளொடும் அன்போடும் வாராத பொருளாக்கத்தை இழிப்பது நோக்கிப் **பரிமேலழகரும்** பிறரும் உடனிகழ்ச்சிப் பொருளிலேயே உரை கண்டனர் என்க

**தெ. பொ. மீ.**: 'வள்ளுவர் உள்ளக்கிடக்கை பரத்தையரைப் பழியாது அவர்களைக் கெடுக்கும் ஆடவரைப் பழிப்பது போலும்' என்றும், 'அவர்கள் அறியாமையாலோ, வறுமையாலோ புன்னலம் விற்-கின்றனர். அதனைப்பயன் படுத்திக்கொள்வதாலேயே அவர்கள் கெடுகின்றனர்; கெடுப்பவர் ஆடவரே' என்பர். பரத்தையர் குறிக்-கோள் பொருள்; பரத்தர் குறிக்கோள் இன்பம். ஆகவே இருவரும் தாமே கெடுகின்றனரேயன்றி ஒருவரை ஒருவர் கெடுத்திலர் என்று கருதி நடுநிலை முடிவு தெளிக.

இதற்கு 'விலைப்பொருட்டால்' என்ற **குறளை** எடுத்துக்காட்டி அது போல்வது இது' என அமைத்து அரண் செய்வர் இவர். 'அது இயைபில் எடுத்துக் காட்டாதலை முற்கூறியன நோக்கி யமைக.

இந்த உரை நயங்களைக் கண்டு நல்லன இணைத்துப் பொருள்காண்டலே நல்லது.

ஒ) **ஒப்புமைப்பகுதி :**

**முற்றும் :**

பாரிற்கு ஒருதலை காட்டி ஒருதலை
தேர்படு தெண்கயத்து மீன்காட்டும் — ஆங்கு

மலங்கண்ண செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கண்ண வெள்ள றிவினார். — நாலடி.,375

ஏமாந்த போழ்தின் இனியார்போன் றின்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம் — மானோக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்தும்என் பார். —நாலடி., 378

மைவிழியார்தம் மனையகன்றொ ழுகு —கொன்றை,78

அம்மி துணையாக ஆறழிந்த வாறொக்கும் - நல்வழி ,20
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் — இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்

........... .................. அல்குல் விற்கும்
பைந்தொடி மகளிர் கைத்தோர் பசையில்லை யென்ன விட்ட
மைந்தர் ...... ...... ...... ...... ...... —கம்ப, ,948

காமமூரிற் கண்கைய ரோடன்ன
தூய்மை யுண்மையிற் றோற்றங் கரந்தவட்
சேமமா வகைச் செல்கமற் றென்பதும்
வாமநூ லின் மறைபொரு ளல்லவோ —நீலகேசி.,244

பௌத்தரது விநய பிடகத்துணிபு காமங்காழ்கொளலின் காவியை அவிழ்த்துப் பள்ளியுள் வைத்துவிட்டு வேறு ஆடையை யுடுத்திக் கொண்டு, தம்மை யறியாக் கணிகையைத் தம்மையாரும் அறியாத வண்ணஞ்சென்று தீண்டுக என்பதாகலின் அதனை யுளங்கொண்டே யோதுகின்றார் வள்ளுவர் 'பொருட்பொருளார் புன்னலந் தோயார்' என்ற இக்குறளை. —ஆசிரியர்.

ஓ) மேற்கோள்பகுதி:

இளம்.: மொழி எதிர்மொழிதல் பாங்கற்கு உரித்தே என்ற சூத்திரத்திற்கு மேற்கோள் —தொல். பொருள்.,180

நச்சி.: புறத்தொழுக்கம் மிக்க தலைவற்கு நீ கற்றறிந்த அறிவு இனிமெய்யாக வேண்டும் என்று அவனை மெய்யறிவின்கண்ணே நிறுத்தல் என்ற கூத்தர் கிளவிக்கு மேற்கோள் —தொல். பொருள்.,168

92.5. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். (915)

உரைப்பகுதி :

அ) மணக் .: மதிநலத்தால் மாட்சிமைப்பட்ட அறிவுடையார், எல்லார்க்கும் பொதுவாகிய நலத்தினையுடையவரது புல்லிய நலத்தைச் சேரார், எ-று.

இது புத்திமான் சேரான் என்றது.

ஆ) பரிதி :. எல்லார்க்கும் பொதுவான இன்பம் கொள்ளார் மதியினால் பெரியவர்; பலர்எச்சில் என்று கழிப்பர்[1] எ-று,

இ) பரிப் .: எல்லார்க்கும் பொது ஆகிய நலத்தினை உடையவரது புல்லிய நலத்தைச் சேரார் மதி நலத்தாலே மாட்சிமைப் பட்ட அறிவு உடையார், எ-று.

புத்திமான்கள் சேரார் என்றமையால், பொருள் கருதுவார் சேரார் என்றார் பொருளைக் கெடுப்பர் ஆதலின்.

ஈ) காளி .: யாவர்மாட்டும் பொதுப்பட வரும்பொருள் காரணமாக நடிக்கும் பொதுநலத்தாராகிய பொதுமகளிர் காட்டும் புல்லிய நலத்தைப் பொருந்தார் யார் எனின்? தம் மதித்தூய்மையால் பெரிதும் மாட்சிமைப்பட்ட அறிவினை உடையோர், எ-று.

இங்ஙனம் பொது மகளிர் முயக்கம் பொருளன்று என்பதனை உணர்த்தி மற்று அதன்பின்னரே இதனோடு பொருஉம்[2] கள் உண்டலும் உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல்.: இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப் பட்ட செயற்கை அறிவினை[3] உடையார், பொருள் கொடுப்பார்க் கெல்லாம் பொதுவாய ஆசையினை உடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார், எ-று.

---

1. கழிப்பர் — நீக்குவர் 2. பொருஉம் — ஒத்த

3. செயற்கையறிவு — கல்வி கேள்விகளால் ஆகிய அறிவு.

மதிநன்மை-முற்பிறப்புக்களில் செய்த நல்வினைகளான் மனம் தெளிவுடைத்தாதல். அதனானன்றிக் கல்வியறிவு மாட்சிமைப் படாமையின் 'மதிநலத்தின் மாண்ட அறிவினவர்' என்றும், அவ்வறிவுடையார்க்கு[4] அவராசையது பொதுமையும்[5] மெய்ந் நலத்தது புன்மையும்[6] விளங்கித் தோன்றலின் 'தோயார்' என்றும் கூறினார்.

ஊ) **கவிராசர்** : பொருள் கொடுக்கிறவர்களுக்கெல்லாம் பொதுவான வாசையினையுடைய பரஸ்திரீகளது புல்லிய போகத்தை மதிநன்மையாலே நல்லறிவுடையவர் தீண்டார், எ-று.

ஏ) **பழைய 2**: பொருள் கொடுப்பாரெல்லார்க்கும் பொதுவாகிய நலத்தினையுடையார் புன்னலத்தினைத் தோயார், இயற்கையாகிய மதிநலத்தினையுடைய மாட்சிமைப்பட்ட அறிவினையுடைய பெரியோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'மதிநலம்' 'மாண்ட அறிவு' இரண்டற்கும் உள்ள வேறுபாடும் இயைபுந் தோன்றப் **பரிமேலழகர்** தரும் விளக்கம் நுண்ணிய நூல் பல கற்றலும், உண்மையறிவும் ஆகிய இரண்டையுங் கொண்டதாதலின் மிக ஏற்புடையது

**92.6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்**
**புன்னலம் பாரிப்பார் தோள். (916)**

**உரைப்பகுதி ;**

அ) **மணக்.**: தம்முடைய நலத்தை உலகின்கண் பரப்புவார் சேரார் வனப்பினால்[1] களிப்புற்றுத்[2] தமது புல்லிய நலத்தை எல்லார்மாட்டும் பரப்புவாரது தோளினை, எ-று.

ஆ) **பரிதி.**: தம்முடைய கீர்த்தி பிரகாசிப்பார் விரும்பார், இளமை நலம் செருக்கிப் புன்னலம்[3] பாரிப்பார்[4] தோள், எ-று.

---

4. அவ்வறிவுடையார்க்கு — இயற்கையறிவும் செயற்கையறிவும் உடையார்க்கு
5. 'பொய்ம்மை' எனப் பாடங் கொள்வர் கோ.வ,
பொதுமை — வரையின்றிப் பொருள் தந்தார் அனைவர்க்கும் பொதுவாய் இருக்குந் தன்மை பொதுநலம் என ஆசிரியர் கூற்று இருத்தலின் 'பொய்ம்மை' என்பது ஆய்வுக்குரிய பாடம்,
6, புன்மை — இழிந்ததன்மை.

ஔ) பரிப்.; தம்முடைய நலத்தினை உலகின்கண் பரப்புவார் சேரார்; வனப்பினால் களிப்பு உற்றுத் தமது புல்லிய நலத்தை புலலார் மாட்டும் பரப்புவார் தோளினை, எ-று.

புல்லிய நலன் என்றார் வனப்பு உடையர் ஆயினும் இழிந்தார் மாட்டும் பரப்புதலின் தம் நலம் பாரிப்பர் என்றமையால் இன்பம் நுகர வல்லார் சாரார் என்றார், பின்னர் இன்பம் அது ஆகாமையின், இவை மூன்றும் அறம், பொருள், இன்பம் வேண்டுவார் சாரார் என்று கூறப்பட்டது.

ஈ) காளி.: தமது நன்மையை மேன்மேலும் விரித்துக்கொண்டு ஒழுகும் தகைமையர் யாவர்! அவர் என்றும் தோயார்: யாதினை எனில் எப்பொழுதும் பொருள் வரும் தகைமையைத்[5] தருக்கி[6] மற்று இது காரணமாக வஞ்சனையாகிய புல்லிய ஆசையைப் பரித்து நடிக்கும் பொதுமகளிர்தம் தோளினை' எ-று.

உ) பரிமேல்.: ஆடல் பாடல் அழகு என்பனவற்றால் களித்துத் தம் புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர்தோளினை, அறிவொழுக்கங்களானாய தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார், எ-று.

ஆடல் முதலிய மூன்றும் உடைமை அவர்க்கு மேம்பாடாகலின் 'தகை' என்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றால் புகழ்பரப்புவார் 'தோயார்' என்றும் கூறினார். தந்நலம் என்புழி நலம் ஆகுபெயர்.[7] இவை மூன்றுபாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டார் என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: ஆடல்பாடல் அழகுகளினாலே சந்தோஷித்துத் தங்களுடைய புல்லிய போகத்தைப் பொருள்கொடுப்பார்க்கெல்லாம் பரப்பும் பரஸ்திரீகள் தோளை அறிவொழுக்கங்களாலான தம் புகழை உலகத்திலே பரப்பவேண்டினவர் தீண்டார் எ-று

ஏ) பழைய2: ஆடல் பாடல் அழகு என்பவனற்றால் களித்துத் தம் புல்லிய நலத்தைப் பொருள்கொடுப்பார் யாவரிடத்தும் பாராட்

---

1 வனப்பு — அழகு 2. களிப்புற்று — இன்புற்று
3 புன்னலம் — இழிந்த இன்பம் 4. பாரிப்பார் — பரப்புவார்
5 தகைமை — தகுதி 6 தருக்கி — செருக்குற்று
7. 'நன்மை' என்னும் பொருளைத்தரும் பண்புப்பெயர் நன்மையான் விளைவதாகிய புகழை உணர்த்துதலின் பண்பாகுபெயராம்.

டும் பொதுமகளிர் தோளினை, அறிவு கல்வி நல்லொழுக்கமாகிய புகழ் நலத்தினைப் பாராட்டும் பெரியவர் தோயார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பிற்கால உரைகளும் பெரிதும் ஒத்த கருத்தன. 'தோயார் – வீழார்' என்ற உரை 'பூரியர் ஆழும் அளறு' என்றதை எண்ணி எழுதப் பெற்றதற்குப்: 'பரஸ்தீரி' என்ற **காளிங்கர்** உரை ஈண்டும் பொது மகளிரை மட்டும் குறிக்கும் பொதுச்சொல்லாகாது. 'ஆடல் பாடல் முதலியவற்றால் களித்துப் புல்லிய நலத்தை விற்கும்' என்ற **பழையவுரை** 'களிப்பித்து' என்றிருப்பின் நலம். இது பாடப்பிழையும் ஆதல் கூடும். புன்னலம் புல்லிய நலம்: இழிந்தார் மாட்டும் பரப்புதலின் புன்னலம் என்றதாம் என்பர் **பரிப்பெருமாள்.**

**'தந்நலம் பாரிப்பார்'**

**மணக்.** : 'தம்நலத்தை உலகின் பரப்புவார்'

**பரிதி.**: 'தம் கீர்த்தி பிரகாசிப்பார்'

'அறிவொழுக்கங்களால் தம் புகழை உலகத்துப் பரப்பும் உயர்ந்தோர்'என்பர் **பரிமேலழகர்** முதலானோர்.

**காளி** : 'தமது நன்மையை மேன்மேல் விரித்துக்கொண்டு ஒருகும் தகைமையர்'.

**இராம.**: 'தம் உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்வார்'.

**பரிமேலழகரை** ஒட்டியுரைப்பர் **தேவநேயர். பழைய உரைஒத்தவர் வரத**: ஆகையால் **'புன்னலம் பாரிப்பார்'**- பொதுமகளிர்களையும்; தந்நலம் பாரிப்பார்-தக்க பெரியோர்களையும் உணர்த்துவன. மாறியுரைப்பன தவறானவை.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும்**

எழிலால் பாடல் ஆடலினால் இச்சை பெருக்கி உளம் ஒவ்வா
மொழியின் செயலால் வயமாக்கி முற்றும் பொருளைப் பறித்துவிடும்
பழிநா ணாத பரத்தையரைப் பற்றார் ஆய்ந்த பண்புடையார்
ஒழியார் அவரைப் பேதைமையில் ஒழியார் எம கண்டனே

—விநா. அரசி., 319.

**927. நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்**
**பேணிப் புணர்பவர் தோள். (917)**

உரைப்பகுதி :

**அ) மணக்.:** நிறை[1]யுடைய நெஞ்சில்லாதவர் தோய்வர். இன்பம் அல்லாத பிறவாகிய பொருளை நெஞ்சினாலே விரும்பிவைத்து அன்புற்றார் போலப் புணருமவரது தோளினை, எ-று.

இது நிறையில்லாதார் சேர்வர் என்றது.

**ஆ பரிதி :** நிறைந்த அறிவில்லார் வரைவின்மகளிர் தோள் சேர்பவர் அது ஏதெனில் தம்மனத்துக்கு உவந்த நாயகரை[2] மனதிலே வைத்து, இவரை மரப்பாவை[3]போலப் புணர்வார், எ-று.

**இ) பரிப்.:** நிறை உடைய நெஞ்சு இல்லாதார் தோய்வர். இனபம் அல்லாத பிற ஆகிய பொருளை நெஞ்சினாலே விரும்பி வைத்து அன்பு உற்றார் போலப் புணருமவர் தோளினை, எ-று.

இது நிறை இல்லாதார் சேர்வர் என்றது

**ஈ) காளி.;** தமது நற்குணம் நிறைவுடைய நெஞ்சும் இல்லாதார் முயங்குவர்: பிறவற்றை நெஞ்சின்கண் பேணி[4]ப்புணரும் பொதுமகளிர் தோளை, எ-று.

பிற என்ற பன்மை பொன்னும் ஆடையும் பூவும் சாந்தும் முதலியன என அறி.

**உ) பரிமேல் :** நெஞ்சினால் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யால் புணரும் மகளிர் தோள்களை, நிறையால் திருந்திய[5] நெஞ்சமில்லாதார் தோய்வர், (எ-று).

பொருளும் அதனால் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின் மேலது ஆகலின், புணர்வது உடம்புமாத்திரம் என்பதறிந்து அதுவழி[6] ஒடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் தோய்வர் என்றார்

---

1 நிறை — மகளிர் குணங்களுள் ஒன்று. அது மனத்தைக் கற்பு நெறியின்கண் நிறுத்துதல்

2 உவந்த நாயகர் — மகிழ்ந்த தலைவர் 3. மரப்பாவை — பொம்மை

4. பேணி — விரும்பி 5. திருந்திய — நெறிப்படுத்திய

6. அதுவழி — புணர்ச்சியின்வழி

ஊ) கவிராசர் : நெஞ்சிலே பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை யுடம்பாற் புணரும் பரஸ்திரீகள் தோளை நிறையால் திருந்திய நெஞ்சம் இல்லாதவர் சேர்வர் (எ-று)

ஏ) பழைய 2 .: நெஞ்சினாற் பிறர் பொருளை ஆசைபட்டுப் பொருள் காரணமாகக் கொடுப்பாரை மெய்யாற் புணரும் பொதுமகளிர் தோள்களைத் தோய்வர், நிறையாற்றிருந்திய நெஞ்சமில்லாதவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நிறை நெஞ்சம்'

'நிறையுடை 'நெஞ்சம்' மணக்., 'நிறை — மனத்தைக் கற்பு நெறிக்கண் நிறுத்துதல்' என்பர் நச்சர்.; 'நிறைந்த அறிவு' பரிதி ; 'நற்குண நிறைவுடைய நெஞ்சு' காளி.; 'நிறையால் திருந்திய நெஞ்சம்' பரிமேலழகர். இவற்றுள் 'நிறையுடைய நெஞ்சம்', 'நிறைவுடைய நெஞ்சம்', 'நற்குணநிறைந்த மனம்' என்பதினும் 'நிறையால் திருந்தியமனம்' என்பது சிறந்தது.

'பிற நெஞ்சிற் பேணி' என்பதற்குப் 'பிறரை' என்பதைக் காட்டிலும், 'பிற பொருள்களை' என்பது சிறந்தது. 'பிற' என்பது அஃறிணைப் பலவின் பாலாகயிருப்பதால் 'பிறர் என்று பாடம் கொண்டிருப்பர் என்பதும் 'பொருள் பொருளாகக் கொள்வார்' என்பதற்கு ஏலாமையின் 'பிற' என்ற பாடமே சிறந்தது ஆகும். பொருள் கொடுத்தானை எண்ணாது கொடுப்பார் பலரையுங் கருதுதலும் பொருள் விருப்பேயாதலால் 'பிறர்' என்ற பாடமும் கொள்ளத்தகும். ஏடுகள் கண்டு துணிதல் தகுவது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பிறநெஞ்சின் பேணிப் புணர்பவர் :

உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
கள்ளத்தால் செய்யும் கருத்தெல்லாம் — தெள்ளி
அறிந்த விடத்தும் அறியாராம் பாவம்
செறிந்த உடபபி னவர். —நாலடி., 380

சிலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு. —சிலம்பு.,9:69-71

மலையி னுள்ளவெ லாங்கொண்டு மாண்டலால்
விலையின் மாதரை யொத்தது வெள்ளமே. —கம்ப.,17

பொன்விலை மகளிர்மனமெனக் கீழ்போய். —கம்ப.,106

விலைநினைந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறு மன மென. —கம்ப..4264

92.8 ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. (918)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** யாதானும் ஒரு பொருளை உள்ளவாறு ஆராய்ந்தறியும் அறிவுடைய ரல்லாதார்க்கு, வருத்தமாமென்று சொல்லுவர், மாயத்தை[1] வல்ல மகளிரது முயக்கத்தை, எ-று.

இஃது இவரை அறிவில்லாதார் சேர்வர் என்றது.

**ஆ) பரிதி :** அறிவாராயந்த குணத்தார் அல்லாதார்க்குச் சூது பொருந்தி மாயமகளிர் முயக்கம் பொருந்தும்; அவர்களைத் தெய்வமாகக் கொள்ளுவர், எ-று.

**இ) காளி .:** இவர் இப்படிபட்டவர் என்று ஆராயும் அறிவு இல்லாதார்க்குத் தெய்வத் தன்மை உடைத்து என்பர். வஞ்சனையால் பொருள் வரையும் மாயப் பொதுமகளிர் முயக்கு, எ-று.

**உ) பரிமேல் .:** உருவுசொல் செயல்களான் வஞ்சித்தலை வல்ல மகளிரது முயக்கத்தை. அவ்வஞ்சனை ஆராய்ந்தறியும் அறிவுடையார் அல்லார்க்கு அணங்குதாக்கு[2] என்று சொல்லுவோர் நூலோர்.

அணங்கு-காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்கு-தீண்டல். இவ்வுருவகத்தான்[3] அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர்கோடல் பெற்றாம். இது நூலோர் துணிவு என்பது தோன்ற அவர்மேல் வைத்துக் கூறினார்.[4] அப்பெயர் அவாய்நிலையான் வந்தது.

**ஊ) கவிராசர் .:** வடிவு, சொல், செயல்களால் வஞ்சிக்சுவல்லவர்களான பரஸ்திரிகள் முயக்கம். அந்த வஞ்சனைகளை ஆராய்ந்தறிய மாட்டாதவர்களுக்கு அணங்குதாக்கு என்று சொல்லுவர் நூலோர்.

---

1. மாயத்தை - மயக்கும் தன்மை, வஞ்சனையும் ஆம்
2. அணங்குதாக்கு — மோகினிபிடித்தல்.
3. இவ்வுருவகத்தால் — மாய மகளிர் முயக்கத்தை அணங்குதாக்கு என உருவகஞ் செய்திருத்தலால்.
4. 'நூலோர்' என்னும் பெயர் அவாய்நிலையான் வந்தது

**ஏ) பழைய 2** .: ஆடலினாலும் பாடலினாலும் வடிவினாலுஞ் சொல்லினாலும் வஞ்சித்தலை வல்ல விலை மகளிர் மயக்கு முயககத்தினை ஆராய்ந்தறியும் அறிவுடையரல்லாதார்க்கு அணங்குதாக்கு என்று சொல்லுவர் நூலோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அறிவினர் அல்லார்க்கு மாய மகளிர் முயக்கு வருத்தமாம்' என்னும் **மணக்குடவர்** உரை சிந்திக்கத் தக்கது. அறிவினர் அல்லார்க்கு வருத்தமாயின் அறிவினர்க்கு இன்பமாம் எனப்பட்டு முரணான பொருளைத் தருவதாகும்.

**பரிதி** .: 'அறிவினர் அல்லார்க்கு முயக்கம் பொருந்தும் அணங்கு-தெய்வமாகக் கொள்வர்' எனச் சிலசொல் வருவித்து இரு தொட-ராக்கித் தனித்தனியே முடிப்பர்.

**காளி** .: 'அணங்கு என்ப தெய்வத்தன்மை உடைத்து' என்பர்.

**பரிமேலழகரும்** பிறரும் 'அல்லார்க்கு அணங்குத்தாக்கும் அதாவது கொல்லும் தெய்வமகளின் தீண்டுதலாம்' என்பர். இவற்றுள் **காளிங்கர்** 'முயக்கு தெய்வத்தன்மையுடையது; இன்பமாயிருக்கும் என்பதனையும் **பரிமேலழகர்** உரை 'முன் இன்பமாயிருந்து உயிர் கொல்லும்' என்பதனையும் விளக்குதலின் இவையிரண்டுமே சிறந்தன. ஏனையோர் உரைகள் தெளிவற்றன.

**இராம** . 'அறிவினர் அல்லார்க்கு முயக்கப பற்றி விடாமையின் பேய் போன்றது' என்பர். அறிவினரைப் பற்றினாலும் விடும். அஃதில்லாரைப் பேய் விடாதது போலப் பொது மகளிரும் விடார் எனக் கருத்துரைப்பர்,

இவற்றுள் 'அறிவிலார்க்கு முன் இன்பமாய்த் தோன்றிப் பிற் பயக்கும் பிழையுடைய அணங்குபோல்வது' என்ற கருத்தமைந்த உரைகளே சிறந்தன. இவ்வுரைகள் மயங்க வைப்பன. தெளிந்து கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**மாயமகளிர் முயக்கு** :

பல்லிருங் கூந்தல் மகளிர் ஒல்லா முயக்கிடைக்
குழைக வென் தாரே. — புறம். 73 : 13–14

சிலம்புர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு... —சிலப்பு, 9 : 69-71

அணங்கும் பேயும் ஆருயிர் உண்ணா
பிணங்குநூ ன் மார்பன் பேது கந்தாக
ஊழ்வினை வந்து இவன் உயிருண்டு கழிந்தது. — மணி.,6:135-137

**92,9. வரைவிலா மாணிழையார் மென்தோள் புரைஇலாப்**
**பூரியர்கள் ஆழும் அளறு.** (919)

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** முயக்கத்தில் வரைவில்லாத மாணிழையாரது மெல்லிய தோளாவது உயர்வில்லாத கயவர் அழுந்தும்[2] நரகம், எ-று.

இஃது இழிந்தார் சார்வர் என்றது.

ஆ) **பரிதி .:** வரைவில்லாதார் இன்பம் அறிவில்லாதார் விழுகிற நரகம், எ-று.

இ) **பரிப் .:** முயக்கத்தில் வரைவு இல்லாத மாண் இழையாரது மெல்லிய தோள் ஆவது உயர்வு இல்லாத கயவர் அழுந்தும் நரகம் எ-று.

கயவர் அழுந்துவது நரகின்கண் ஆதலின் நரகு எனப்பட்டது இஃது இழிந்தார் சார்வர் என்றது.

ஈ) **காளி .:** வரைவின் மகளிராகிய பரத்தையரது மென்றோள் அவ்வுருவிற்று ஆயினும் அது அன்று; மற்று என்னை எனின்? அறிவு மேப்பாடு இல்லாத கீழ்மக்கள் புக்கு அழுந்தும் கும்பிநரகம்[3], எ-று.

புரை என்பது உயர்வு. பூரியர்கள் என்பது கீழ்மக்கள்.

உ) **பரிமேல் .:** உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள், அக்குற்றத்தை[4] அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம்.

உயர்தற்கு ஏதுவாகலின் 'புரை' எனப்பட்டது. சாதியான் இழிந்தாரின் நீக்குதற்குப் 'புரையிலாப்பூரியர்கள்' என்றும், அவர் ஆழ்தற்கு ஏது உருவ முதலிய மூன்றும் என்பது தோன்ற 'மாணிழை

1. வரைவு — ஓர் எல்லை 2. அழுந்தும் — மூழ்கும்

3. கும்பி நரகம் — ஒருவகை நரகம்

4. மென்தோளை அளறு என்பது அதனால் எய்தப்பெறும் துன்பமிகுதியைக் கருதி உருவகிக்கப்பட்டது.

யார் மென்றோள்' என்றும், அவர்க்கு அளற்றினை இடையின்றிப் பயக்கும் என்பது தோன்ற உருவகமாக்கியும் கூறினார்.

ஊ) **கவிராசர்** : உயர்ந்தோர் இழிந்தோர்களென்று எண்ணாமற் பொருள்கொடுப்பாரையெல்லாம் புணரும் பரஸ்திரீகளின் தோள்கள் குற்றத்தை அறியமாட்டாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தும்நரகமாம் எ-று.

ஏ) **பழைய 2** : உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது விலை கொடுப்பார் யாவரையும் முயக்கும் பொதுமகளிர் மெல்லிய தோள்கள் குற்றத்தையறியும் அறிவில்லாக் கீழ்மக்கள் புக்கு அழுத்தும் நரகமாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**காளிங்கர்** 'பரத்தையர் தோள் மென்தோள் எனப்படும் அவ்வளவிற்றன்று. நிரயமுமாம்' என்பர். ஏனைய உரையாசிரியர் சொற்றொடர் அமைப்பிற் சிறிது மாறுபட்டனராயினும் முடிவு ஒத்-துரைப்பர்.

**புரையிலா பூரியர்** 'உயர்வில்லாத கயவர்' **மணக்.**; 'அறிவில்லாதார்' **பரிதி.**; 'அறிவு மேம்பாடு இல்லாத கீழ்மக்கள்' **காளி.**; 'அறிவு இல்லாத கீழ்மக்கள்'. சாதியின் இழிந்தாரை நீக்குதற்குப் 'புரையிலாப் பூரியர்' என்பர் **பரிமேல்.**; 'குற்றத்தை-யறிய மாட்டாத கீழ்மக்கள்' **கவிராசர்.**; 'குற்றத்தையறியும் அறிவில்லாக் கீழ்மக்கள்' **பழைய.**;

**இராம.** 'வேறு குற்றமில்லாத கீழ்மக்கள் இவர் 'புரைதீர் கற்பின் ஒண்ணுதல்', 'புரைதீர்ந்தன்று புதுவதோ வன்றே' என்பன போலக் குற்றம் எனப்பொருள் கொண்டு இந்த ஒரு குற்றமன்றி வேறு குற்றமில்லாத எனப் பொருள் கண்டனர்.

**வரத.** 'மேன்மை வழியறியாத அற்பர்கள்' என்பர்.

இவற்றுள் புரை — உயர்ச்சி, புரையிலாப் பூரியர் — உயர்ச்சியற்ற கீழோர். அஃதாவது சாதியான் கீழ்மக்களன்று, உயர்ச்சியில்லாமையால் கீழோர் என்று கருதுகின்றனர் வரைவின் மகளிரைக் கூடலாகாது என்பது சாதியான் இழிந்தோருக்கும் உயர்ந்தோர்க்கும் கூடாத ஒன்றுதான். சாதியான் இழிந்தோராயினும் பரத்தமை-யில்லார் உயர்ந்தோர். அஃதுடையார் இழிந்தோர். அங்ஙனமே

சாதியான் உயர்ந்தோர்க்கும். ஆனாலும் 'பார்ப்பான் பிறப்பு ஒழுக்-கங்குன்றக் கெடும்' என்றும், 'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' என்றும் கூறிய வள்ளுவர் உள்ளம் 'ஒழுக்கமுடைமையே குடிமை' என்பதைச்சாதிக்க வந்தது ஆகவே சாதியான் இழிந்தோனாயினும் பரத்தைமையுடையனாயின் அதிற்றாழ்ந்தோன். உயர்ந்தோனாயினும் பரத்தைமையுடையனாயின் இழிந்த பிறப்பாவன் ஆதலால் இரு சாரார்க்கும் ஒழுக்கங்குன்றின் தத்தம் நிலையில் உள்ள உயர்வும் கெட்டு இழிந்தோர் ஆவர் என்பதை விளக்க வந்ததே இத்தொடராதலைக் கண்டு, சாதி பற்றியதாகும் என்ற பரிமேலழகர் கருத்து ஏலாமையறிக. புரை என்பது தொல்காப்பியக் காலத்தில உயர்ச்சியிலும், சங்க நூலாட்சியில் உயர்வு-குற்றம் ஆகிய இரண்டு பொருளிலும் வழங்குமாறு அறிக.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பூரியர்கள் :**

பூரியர் புணர்மாதர் ........ ........ —கம்ப.,2088

**புக்கழுந்தும் அளறு :**

மைக்கரிம தத்தவிலை மாதர்கலை யல்குல்
புக்கவரை ஒத்தனபு னற் சிறைகள் ஏறா —கம்ப.,923

**முற்றும்**

பட்டவர்த் தப்பலிற் பறவையேந் தல்குல்
அட்டொளி யர்த்தவாய்க் கணிகை —சீவக ,98

## 92.10. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப் பட்டார் தொடர்பு. (910)

உரைப்பகுதி :

அ) மணக்.: கவர்த்த[1] மனத்தையுடைய பெண்டிரும், கள்ளும், கவறும் திருமகளால் கடியப்பட்டாரது நட்பு, எ-று.

ஆ) பரிதி.: பொதுமகளும் கள்ளும் சூதும் ஆகிய இந்தமூன்றி-டத்தில் மூதேவியிருப்பாள் என்று பெரியவர் விரும்பார், எ-று.

1. கவர்த்த — இரண்டுபட்ட

இ) பரிப்.: கவர்த்த மனத்தை உடைய பெண்டிரும் கள்ளும் கவறும் திருமகளால் கடியப் பட்டாரது நட்பு, எ-று.

இது நல்குரவு இலார் சாரார் என்றது. பின்பு கள்ளும் கவறும் கூறுகின்றார் ஆதலின், அவை மூன்றும் ஒத்த இயல்பின என்று அறிதற்குப் பின் கூறப்பட்டது. இவை நான்கினாலும் அவரைச் சாராவார் கெடுவர் என்பது கூறப்பட்டது.

ஈ) காளி.: ......... இம்மூவகைப் பொருள் அனைத்தும் தாமே தம்வயின் நீக்கல் ஆற்றாரது மனத்தொடர்ச்சி[2], எ-று.

"இம்மையே தவஞ்செ யார்கை யிருநிதி யகற்றல்வேண்டி
நம்மையுங் கள்ளும் சூதும் நான்முகன் படைத்து விட்டான்"

என்றார் பிறரும் என அறிக

உ) பரிமேல்.: கவர்த்த மனத்தினை உடைய மகளிரும் கள்ளும் சூதும் என இம்மூன்றும், திருமகளால் துறக்கப்பட்டார்க்கு நட்பு.

இருமனம்-ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத் தேயுடைய மனம் கவறு — ஆகுபெயர்.[3] ஒத்தகுற்றத்தனவாகலின், கள்ளும் சூதும் உடன் கூறப்பட்டன. வடநூலாரும் இக்கருத்தான் விதனம் என உடன் கூறினார்[4]. வருகின்ற அதிகார முறைமையும் இதனால் அறிக திணைவிராய் எண்ணியவழிப் பன்மைபற்றி முடிபு கோடலின் ஈண்டு அஃறிணையாற்கொண்டது[4]. திருநீக்கப்பட்டமை இக்குறிகளான்[5] அறியப்படும் என்பதாம். இவை நான்கு பாட்டா-னும் சேர்வார்[6] இழிந்தோர் என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: பரபுருஷன்[7] பேலே மனதாய் இருக்கிற பெண்-டிரும் கள்ளுக்குடிக்கிறதும், சூதாடுகிறதும் இந்த மூன்றும் திரு-மகளாலே துறக்கப்பட்டவர்களுக்குச் சிநேகம், எ-று.

எ) பழைய 2: இரண்டு நெஞ்சினையுடைய பொதுப் பெண்டிரும், கள்ளும், சூதும் என இம்மூன்றும் திருமகளாற் துறக்கப்பட்டார்க்கு நட்பாம்.

---

2. கவறு என்னும் கருவியின் பெயர் அதனாலாகிய ஆட்டத்திற்காதலின் கருவியாகு பெயர்
3. காமந்தகம் அத்.11 : சுலே., 124.
4. இருமனப் பெண்டிரைக் கள் கவறு முதலிய அஃறிணைப் பொருள்களோடு உடன் வைத்து எண்ணியமையின் அஃறிணை முடிவு ஏற்றது.
5. இக்குறிகளால் — நட்பு, கள்ளுண்டல், பரத்தையர், கவறாடல் இவற்றால்
6. சேர்வார் — பொதுமகளிரைப் புணர்வார்
7. பரபுருஷன் — பிற ஆடவன்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**காளிங்கர்** உரைப்பகுதி முழுதும் சிதைந்துள்ளது. எஞ்சியிருக்கும் பகுதி போந்த கருத்து ஆதல் கூடும். 'இருமனம்' **பரிமேலழகர்** கருதுவது 'ஒருவனோடு புணர்தலும் புணராமையுமாகிய முரண்பட்ட இரு தன்மைகளையுடைய மனம்'. மேலும் பொருள் நசையால் அகப்புணர்ச்சியின்மையும், வாங்கிய காசுக்காக மெய்யுறு புணர்ச்சியுண்மையுமான இருவகைப்பட்ட மனம் எனல் சிறக்குமோ சிந்திக்க. **பரிமேலழகர்** கூற்றின் வண்ணம் மெய்யுறு புணர்ச்சியுண்மையும், அகப்புணர்ச்சியின்மையும் ஆகிய இருதன்மைப்பட்ட மனம் எனின் பொருந்துவதாம்.

'பரபுருஷன் மேலே மனதாய் இருக்கிற பெண்டிர்' என்ற **கவிராசர்** உரைக்குப் பொருள் கொடுத்தவரோடு புணருகிற காலத்திலேயே பொருள் கொடுக்க இருப்பவன் மேலே மனதாயிருக்கிற பெண்டிர்' என்பது பொருளாயின் ஏற்கும். 'மனம்' என மகரவீற்றுப் பெயராதலே தமிழ் மரபு; மனது—மனசு என்றல் ஆரிய வழக்கு. வள்ளுவர் ஆளுகிற எண்பத்தைந்து இடங்களிலும் மகர வீற்றுப் பெயராதலைக் கண்டு 'மனது' என்றது தமிழ் வழக்கன்றாதலைத் துணிக.

**இராம.** 'பணத்திற்காக ஒத்துக்கொள்வது ஒரு மனம், பணங்கொடுத்தவன் குரூபியாகவோ, கிழவனாகவோ, நோயுள்ளவனாகவோ இருந்தால் அவனை அருவருப்பது இன்னொரு மனம்' என்பர்.

**வரத.** 'பொருள்மேலாசையும் மனிதன்மேல் ஆசையின்மையும் இருமனப்' என்பர். **தேவநேயரும்** இங்ஙனமே. இவற்றுள் **தேவநேயர், வரதராசர்** உரைகள் தெளிவுடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**இருமனப் பெண்டிர் :**

ஒருபாற் படாதோர் உள்ளம் போல. —பெருங். 1,49:40

**இருமனப் பெண்டிர் தொடர்பு திரு நீக்கும் :**

நாடக மேத்தும் நாடகக் கணிகையொடு,
ஆடிய கொள்கையின் அருப்பொருள் கேடுற —சிலம்பு. பதி. 15–16

சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு. —சிலம்பு. 9 : 69-71

மகளிர் நெஞ்சமே, போற்பல கவர்களும் —சீவக., 1212

........................................... வேசியர்
உள்ளமு மொருவழி யோட .................. —கம்ப.,173

பூரியர் புணர்மாதர் பொதுமன மெனமன்னும்
ஈரமு முளதில்லென் றறிவரு மிளவேனி. —கம்ப., 2088

விலைநினைந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறும் மனமென வுலாய வூதையே. —கம்ப., 4264

வருந்திய கொழுநர் தம்பால் வரம்பின்றி வளர்ந்த காமம்
அருந்திய பயிர்க்கு நீர்போல் அருநற வருந்து வாரை.
—கம்ப., 5048

இருமைவா ணிபத்தில் கூர்த்த மதியரும் இறும்பூ தெய்த
அருவமாம் இன்பந் தன்னை இம்மியின் அளவும் ஏறாது
உருவமாம் பொருளுக் கேற்ப நிறுத்துவிற் றொழுக வல்ல
இருமனப் பெண்டீர் தம்முள் தருக்கிவாழ் இருக்கை ஈதால்
—காஞ்சி. நகரப்., 57

**கள் திருவை நீக்குதல் :**

கஞ்சமெல் லணங்கும் தீரும் கள்ளினால், —கம்ப., 4468

கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளபோன் றில்லாப் பொருள். —திரி., 59

**கவறும் :**

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோர்தியே, —கம்ப., 1507

**முற்றும் :**

புலைமயக்கம் வேண்டில் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல் - சொலைமுனிந்து
பொய்ம்மயக் கம்சூதின் கண்தங்குதல் இம்மூன்றும்
நன்மையி லாளர் தொழில். —திரி., 39

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய் — போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. ...நள. கலிதொடர்., 39

சூடி சூது விபசாரம் குடியைக்கெடுக்கும். —பழமொழி.

ஓ) மேற்கோள்பகுதி :

**சொக்கப்ப;** இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்; வடநூலார் புறத்தைப் பரம் என்று கூறுவாராதலால் பரத்தையர் என்னும் சொற்குப் புறமுடையவர் என்னும் பொருள் கூறி நின்றவாறு உணர்க. புறமுடையார் என்பது என்னை எனின் இவரின்பம் இன்பம் அன்று என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வரைவின் மகளிர் என்னும் அதிகாரத்தில் இன்பத்திற்குப் புறம் இவரின்பம் என்று கூறியவற்றால் உணர்க. 'இருமனம் ......... தொடர்பு' என்பதனாலும் உணர்க.

## 92. வரைவின்மகளிர்

| | அன்பின் | பயன் தூக்கிப் | பொருட்பெண்டிர் | பொருட்பொருளார் | பொதுநலத்தார் | தந்நலம் | நிறைநெஞ்சம் | ஆயும்அறிவினர் | வரைவிலா | இருமனப் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 2 | 1 | 3 | 4 | 5 | 6 | 8 | 7 | 9 | 10 |
| பரிதி. | 5 | 6 | 1 | 7 | 8 | 9 | 3 | 2 | 4 | 10 |
| பரிப். | 2 | 1 | 3 | 4 | 5 | 6 | 9 | 7 | 8 | 10 |
| காளி. | 6 | 7 | 1 | 3 | 10 | 5 | 4 | 2 | 9 | 8 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

92-வது அதிகாரம் 'வரைவின்மகளிர்' முற்றிற்று.

# 93. கள்ளுண்ணாமை

அ) **மணக்.**: கள்ளுண்ணாமையாவது கள்ளுண்டலைத் தவிர வேண்டுமென்று கூறுதல். இது கணிகையர்[1] கூட்டத்தினால் வருதலின் அதன்பின் கூறப்பட்டது.

இ) **பரிப்.**: கள் உண்ணாமையாவது கள் உண்டலைத் தவிர்தல் வேண்டும் என்று கூறுதல். இது கணிகையர் கூட்டத்தினால் வரும் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) **பரிமேல்.**: இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தற்கண் அவ்வரைவின் மகளிரோடு ஒப்பதாய கள்ளினை உண்ணாமையது சிறப்பு எதிர்மறைமுகத்தால்[2] கூறுகின்றார்.

ஊ) **கவிராசர்.**: அஃதாவது-ஆசாரமும் அறிவும் கெடுக்கிறதற்குக் காரணமான கள்ளைக் குடியாமல் இருத்தல்.

ஏ) **பழைய 2**: அஃதாவது, கள்ளைக்குடியாமை,

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**மணக்குடவர்** 'கள்ளுண்டல் கணிகையர் கூட்டத்தால்' வருவது என்று அதிகார இயைபு கூறுவர், **பரிமேலழகர்** முதலானோர் கள்ளுண்டலின் விளைவும், கணிகையர் கூட்டத்தின் விளைவும் ஒத்தலின் அதிகார இயைபு கூறுவர்.

**தேவநேயர்** 'கள்ளுதல் – மறைத்தல், நீராகவோ, கட்டியாகவோ, புகையாகவோ, வெறியை உண்டாக்கி அறிவினை மறைப்பது'

---

1. கணிகையர் — பரத்தையர்.
2. எதிர்மறைமுகத்தால் — கள் உண்ணாதாரது சிறப்பு உண்பாரது இழிவாற் பெறப் படுத்தலுன் இங்ஙனம் கூறினார்,

என்பர். "கள்" என்ற வினைப்பகுதி இப்பொருளில் இக்காலத்து வழங்குதல் இல்லை' எனவும் கூறுவர். 'கள் இருவகைப்படுப். பனை, தென்னைகளிலிருந்து இறக்கப்படும் நீர்பொருளும், அரிசி காய்கனி இனவகளின் புளித்த தெளிவும் என இவையும் வரைவின் மகளிர் போலப் பொருட் கேடும் தன்னைவிட்டு என்றும் நீங்காத் தன்மையும் விளைத்தலின் அதன்பிற் கூறப்பட்டது' என்றும்உரைப்பர்

'அறிவினைமயக்கும் கள்ளையுண்ணாமை' என்பர் கா. சு. 'போதை தந்து புத்தியை அழிக்கும் கள்ளையுண்ணாமை' என்பர் இராம. அறிவைக்கெடுப்பதாலும் அறியாமையைக் கொடுப்பதாலும் இதுவும் பகையாம் ஆதலின் வரைவின் மகளிர்க்குப் பின் இடம் பெற்றது' என்பர்.

ஏனோர் அதிகார இயைபும், அவற்றின் வரைவிலக்கணமும் எழுதினர்.

இவற்றுள் விளைவும் ஒப்புங்கூறும் உரைகள் மிகச்சிறந்தன. சங்க நூல்களும், புறத்துறையமைப்பும் கள்ளுண்டலை விதிக்க ஆசிரியர் மறுத்தது. போர் வீரம் முதலிய நோக்கி தேவைக்காக உண்ணினும் அதிலே காதல்மிக்கு அலைதல் கூடாது என்பதே ஆசிரியர் கருத்தாதலை உணரலாம்.

93.1. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார். (927)

**உரைப்பகுதி :**

**அ) மணக் .:** பிறரால் மதிக்கவும் படார், தோற்றமும் இழப்பர் எல்லா நாளும் கள்ளின்கண் காதல்கொண்டு ஒழுகுவார், எ-று.

இது மதிக்கவும்படார் புகழும் இலராவர் என்றது.

**ஆ) பரிதி .:** கள்ளுண்பானாகில் நல்லோரால் நினைக்கப்படான் கீர்த்தியும் ஒழியும்.

**இ) பரிப் .:** பிறரால் மதிக்கப்படார் ; தோற்றமும் இழப்பர் : எல்லா நாளும் கள்ளினைக் காதல் செய்து ஒழுகுவார். எ-று.

இது மதிக்கவும் படார் : புகழும் இலர் என்றது.

**ஈ) காளி .:** பிறரால் இவர் பெரியோர் என்று மதிக்கப்படார் ;

மற்று ஒளியினையும்[1] இழப்பர் ; யார் எனின் எஞ்ஞான்றும் கள்ளின்மாட்டுக் காதல் கொண்டு ஒழுகும் கடுவினையாளர்[2], எ-று.

உ) **பரிமேல்** .: கள்ளின் மேல் காதல் செய்து ஒழுகும் அரசர், எஞ்ஞான்றும் பகைவரான் அஞ்சப்படார் ; அதுவேயன்றி முன் எய்தி நின்ற ஒளியினையும் இழப்பர்.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றான்[3] பெரிய ராய காலத்தும் பகைவர். அஞ்சார் ; தம்முன்னோரான் எய்திநின்ற ஒளியினையும் இகழற்பாட்டான் இழப்பர் என்பதாம். இவை இரண்டானும் அரசு இனிது செல்லாது என்பது இதனான் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** .: கள்ளைக் குடிக்கவேணும் என்று வாஞ்சையாய்[4] இருக்கிறவர் தமக்கு வருகிற நன்மை தீமைகளை அறியார் ; முன்னுண்டாயிருந்த பிரகாசத்தையும இழப்பர், எ-று.

ஏ) **பழைய 2** .: கள்ளின் மேல் ஆசை கொண்டொழுகும் அரசர்க்கு எஞ்ஞான்றும் பகைவர் அஞ்சார்; அதுவன்றி முன் எய்திய புகழினையும் இழப்பர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கள்ளுண்ணாமையை அரசர் கடமை' என்பர் **பரிமேலழகர்** மட்டும். ஏனையோர் பொதுவறமாகக் கூறுவர்.

'உட்கு'

'அச்சம்' **பரிமேல்.,** **பழைய;** 'நன்கு மதிக்கப்படுதல்' **மணக்.;** 'நினைத்தல்' **பரிதி;** 'அறியார்' **கவிராசர்.**

இவற்றுள் உட்குதல்-உள்குதல் இரண்டும் ஒரு பொருளனவாயின் இவ்வுரைகள் ஏற்புடையனவாம். 'உரு உட்காகும்' என அச்சப் பொருளிலும், உள்கு-நினைத்தற் பொருளிலும் வருவதைக் காண்கிறோம். அச்சம் விளைவது நன்குமதிக்கப்படுதலால். ஆதலின் காரியத்தின் பெயர் காரணத்திற்காக்கி உரைத்த உரையும் இயை புடையனவே, 'நின்றனையுள்கி உள்ளமுருகும்' (திருவாகம், 5.56)

1. ஒளி — மதிப்பு
2. கடுவினையாளர் — கொலை முதலிய கொடுந்தொழில் புரிவார்
3. முதலிய என்றமையின் ஆண்மையும் கொள்க
4. இவை இரண்டானும் — பகைவர் அஞ்சாமை, ஒளியினை இழத்தல்
5. வாஞ்சை — விருப்பம்

நினைத்தற் பொருளில் வந்தது. அதனை எண்ணி 'உள்கப்படார் எனப்பாடங் கண்டு இங்ஙனம் உரைத்தனர் போலும்.

அங்ஙனமே 'ஒளி' என்ற சொல்லும் 'தோற்றம்' **மணக்.**, 'கீர்த்தி' **பரிதி.**; இவற்றினும் 'உண்ணான் ஒளிநிறான் உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி' என்றாற் போல அரசனில்லையாயினும் அவனாணையால் மக்கள் மனத்துத்தோன்றும் அன்புடன் சார்ந்த அச்சத்தை உணர்த்துவதாகும்.

இது கள்ளைக் காதலித்து ஒழுகுதலாகாது என்பதையே விளக்குவது.

கள்ளுண்ணாமையை அரசரின் கடமையாகப் **பரிமேலழகரும்,** மக்கள் அனைவர்க்கும் பொதுவறமாக ஏனையோரும் உரைப்பர்.

**'உட்கப்படார்'**

'மதிக்கப்படார்' **காளி**, **மணக்.**; 'நினைக்கப்படார்' **பரிதி.**; 'அஞ்சப்படார்' **பரிமேல்.**; 'தமக்கு வருகிற நன்மை தீமைகளையறியார்' **கவிராசர்.**

மதிப்பு என்பது அன்பும் அச்சமும் கலந்த இடத்தில் தோன்றுவதாதலின் மதிப்பு என்ற பொருள் 'உருவுட்காரும்' என்பதாற் போந்தது. நினைக்கப்படார் என்ற பொருள் 'நின்றனையுள்ளி உள்ளம் உருகும்'' (**திருவாசகம், 5. 56**) என்றாற் போல் நினைத்தற்பொருளில் கொள்ளப்பட்டதாம். அது எதுரை நோக்கி 'உட்கப்படார்' எனவும் ஆகியிருக்கலாம். 'உள்கப்படார்' என்பதே பாடமாதலும் கூடும்.

**'ஒளி'**

'தோற்றம்' **மணக்.**; 'கீர்த்தி' **பரிதி.**; 'ஒளி' என்றே **பரிமேலழகர்** முதலாயினோரும் உரைப்பர். 'உறங்குமாயினும் மன்னவன்றன்னொளி' என்புழிப் போல மன்னர் மாட்டு விளங்கும் கடவுட்டன்மை என்று எண்ணியிருப்பர். பிற்கால உரைகளிற் பல 'புகழ்' என்றன.

'எஞ்ஞான்றும் கட்காதல் கொண்டொழுகுவார், எஞ்ஞான்றும் உட்கப்படார் ஒளியிழப்பர்' என இருமருங்கும் கூட்டிப் பொருள் கோடலுமாம், 'எஞ்ஞான்றும் காதல் கொண்டு' என்பது போரிடை

வீரமானமாக உட்கொள்ளுதல் புறத்திணை மரபினதாகலின் விலக்கப்பட்டதன்று என்பதைக் குறிப்பித்த வாறாம், போரிடைக் காதலித்தல் ஒன்னார்த் தெறுபொருளை ஆக்குதற் பயத்தாம் என்க

ஒ) ஒப்புமைப்பகுதி

**ஒளி இழப்பர் எஞ்ஞான்றும் கள்காதல் கொண்டொழு-குவார் :**

ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்றோர்
தெளிவுடையன் என்றுரைக்கும்தேசும் — களிஎன்னும்
கட்டுரையால் கோது படுமேல் இவைஎல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து. —அறநெறி.,144

வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கொட்புந்
தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்.
—கம்ப ,4468

**93.2. உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்**
**எண்ணப் படவேண்டா தார். (922)**

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** கள்ளினை உண்ணாது ஒழிக; உண்ணவேண்டின் சான்றோரால் மதிக்கப்படுதலை வேண்டாதார் உண்க, எ-று.

**ஆ) பரிதி .:** கள்ளின் மேல் ஆசை உண்டாகில் அப்படிச்செய்க; நல்லோர் எண்ணப்பட வேண்டினால் கள்ளை விடுக, எ – று.

**இ) பரிப் :** கள்ளினை உண்ணாது ஒழிக; உண்ண வேண்டின் சான்றோரால் மதிக்கப்படுதலை வேண்டாதார் உண்க, எ - று.

இது கள் உண்டலைத் தவிர வேண்டும் என்றது.

**ஈ) காளி .:** எஞ்ஞான்றும் உண்ணாது ஒழிக கள்ளினை மற்று உண்ணினும் உண்க; யார் எனின், சான்றோரால் மற்று 'இவரும் எம்மில் ஒருவர்' என்று உடன் எண்ணப் படுதலை வேண்டாதவர் உண்க, (எ-று).

**உ) பரிமேல்.:** அறிவுடையராயினோர் அஃது[1] இலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணா தொழிக, அன்றியே[2] உண்ணல் வேண்டுவார் உளராயின். நல்லோரால் எண்ணப் படுதலை வேண்டாதார் உண்க.

1. அஃது — அறிவு

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளான் அழித்துக் கொள்வாரை இயல்பாகவே அஃது இல்லாத விலங்குகளுடனும் எண்ணாராகலின், 'சான்றோரால் எண்ணப்படவேண்டாதார் உண்க' என்றார்.

ஊ) **கவிராசர் :** அறிவுடையவர்களானவர்கள் கள்ளினை உண்-ணாமலிருக்கவேணும். கள்ளைக்குடித்தால் பெரியோர்க ளெல்லாங் கள்ளுண்டவனை இகழ்வார்கள். கள்ளுண்பவர் அறிவும் ஆசாரமும்[3] இழப்பர், எ-று.

ஏ) **பழைய 2 :** உண்ணா தொழிகள்ளை; உண்ண வேண்டுவாருஞ் சிலர் உளராயின், நல்லோ ரெண்ணப்பட வேண்டாதார் உண்க.

ஒ) **ஒப்புமைப்பகுதி ;**

**உண்ணற்க கள்ளை :**

உண்டிலெ ன்றவம் ............ — கம்ப., 9242

93.3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. (923)

**உரைப்பகுதி :**

அ) **மணக் .:** தன்னைப்பயந்தாள் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்; அங்ஙனமாக, சான்றோர் முன்பு களித்தல் மற்று யாதாகும், எ-று.

எல்லார்முன்பும் இன்னாமையே பயப்பது என்றவாறாயிற்று.

ஆ) **பரிதி .:** பெற்ற மாதாவிற்கும் இவன்குணம் பொருந்தா-தாகில் சான்றோர்க்கு ஏதாகும், எ-று.

இ) **பரிப் .:** தன்னைப் பயந்தாள் முன்னும் களித்தல் மற்று யாது ஆகும், எ-று.

எல்லார் முன்னும் இன்னாமையே பயப்பது என்றவாறு ஆயிற்று. கள் உண்டல் இனிமை தரும் அன்றே; இதனால் வரும் குற்றம் என்னை என்றார்க்கு அதனால் வரும் குற்றம் கூறுவார் முற்பட இன்னாமை பயக்கும் என்று கூறப்பட்டது.

---

2. அன்றியே — கள்ளுண்டலை மீண்டும் நீக்காமல்

3. ஆசாரமும் — ஒழுக்கமும்

**ஈ) காளி.:** பெற்ற தாய்க்குப் புதல்வர் செய்யும் பிழையும் கூட இனிது அன்றே? மற்று அவள் முன்னரும் இன்னாதால்; இனி என்னை? வேறு சான்றோர் முன்னர்க்களி, எ-று.

**உ) பரிமேல்.:** யாது செய்யினும் உவக்கும் தாய்முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்: ஆனபின், குற்றம் யாதும் பொறாத சான்றோர்முன்பு களித்தல் அவர்க்குயாதாம், (எ-று).

மனமொழிமெய்கள் தம்வயத்த அன்மையான் நாண் அழியும். அழியவே, ஈன்றாட்கும் இன்னாதாயிற்று; ஆனபின், கள் இருமையும் கெடுத்தல் அறிந்து செய்மைக்கண்ணே கடியும் சான்றோர்க்கு இன்னாதாதல் சொல்லவேண்டுமோ என்பதாம்.

**ஊ) கவிராசர்:** என்ன செய்தாலுங் கண்டு சந்தோஷப்படுகிற தாய் முன்னேயானாலுங்கள்ளுண்டு களிக்கிறது பொல்லாதாயிருக்கும்; ஒருகுற்றமும் பொறாத பெரியோர்கள் முன்னே கள்ளுண்டு களிக்கிறது அவருக்கு யாதாயிருக்குகும்? எ-று.

**ஏ) பழைய 2:** யாது செய்பினு முவப்பாகும் தாய் முன்பாயினும் கள்ளுண்டு மயங்குதல் பொல்லாதாம்: ஆனபின் குற்றம் யாதும் பொறாத சான்றோர் முன், கள்ளுண்டு மயங்கிக் குளறுதல்[2] அவர்க்குயாதாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'முகத்தேயும்' என்ற இழிவு சிறப்பும்மையை நயந்தோன்ற விளக்கி எழுதும் **பரிதி., காளிங்கர், பரிமேலழகர், பழைய உரை** இவைகள் சிறந்தன. **தேவநேயர்,** களியான்நிகழும் நகைக்குரிய நிகழ்ச்சிகளை விரித்து எழுதுவர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**களி இன்னாது :**

நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் ... ... -கம்ப., 4462

நிந்தனை நறவமு நெறியி லூன்களுந்
தந்தன கண்டிலென் ... ... -கம்ப., 6589

1. அவர்க்கு - சான்றோர்க்கு

2. குளறுதல் - வாயில் வந்தபடி பேசுதல்

**முற்றும் :**

அறிவை அழிக்கும் செயலழிக்கு அழியா மானந் தனைஅழிக்கும்
செறியும் அறிஞர் மதியாத செருக்கை விளைக்கும் ஈனறாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும் முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும் நகைவிளைக்கும் கொள்வேல் கள்ளுண்
டலைமைந்தா.

—விநா. அரசி., 140.

93.4 நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. (924)

**உரைப்பகுதி :**

அ) **மணக்.**: நாணம் என்று சொல்லப்படுகின்ற நன்மடந்தை பின்புகாட்டிப் போம் : கள்ளுண்டலாகிய பிறரால் விரும்பப்படாத பெரிய குற்றத்தினை யுடையார்க்கு, எ-று.

இது நாணம்போம் என்றது.

ஆ) **பரிதி .**: இன்னான் என்றும் பேர் சொல்லமாட்டான் கள் என்னும் பேய் பிணித்தாற்கு[2], எ-று.

இ) **பரிப் :** நாணம் என்று சொல்லப்படுகின்ற நன்மடந்தை பின் காட்டிப் போம்: கள் உண்டல் ஆகிய பிறரால் விரும்பப்படாத பெரிய குற்றத்தினை உடையார்க்கு, எ-று.

இது நாணம் போம் என்றது.

ஈ) **காளி .**: நாண என்னும் நன்னெறியாட்டி இவனின் நீங்கிப் புறத்து ஏகும்: இவ்வாறு புறம் மாறிப் போவது யார்க்கு எனின்? கள் என்று எடுத்துரைக்கபபடும் சிறிது உணர்வுடையோர் யாவராலும் விரும்பப்படாதாகிய இந்தப் பெரிய குற்றத்தை உடையோர்க்கு எ-று.

உ) **பரிமேல் .**: கள் என்று சொல்லப்படுகின்ற யாவரும் இகழும் மிக்க குற்றத்தினை உடையாரை, நாண் என்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கு அஞ்சிஅவர்க்கு எதிர்முகம்ஆகாள்[3], (எ-று).

---

1. பேணா — விரும்பாத
2. பேய் பிணித்தாற்கு — பேய் பிடிக்கப்பட்டார்க்கு
3. எதிர்முகம் ஆகாள் — எதிர்ப்படாள்

காணுதற்கும் அஞ்சி உலகத்தார் செய்மைக்கண்ணே நீங்குவர் ஆகலின்'பேணா" என்றும், பின்ஒருவாற்றானும் கழுவப்படாமையின்[4] 'பெருங்குற்றம்' என்றும்,இழிந்தோர்பால் நில்லாமையின் 'நல்லாள்,[5] என்றும் கூறினார். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி[6] இவை மூன்று பாட்டானும் ஒளி இழத்தற் காரணம் கூறப்பட்டது.

> **காரி .:** நல்லாள் எனப் பெண்பாலாக்கியது, சொல்லப்பட்ட சொற்களையெல்லாம் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என, பால் வரையறுத்தோதுதல் வடநூலார் மதமாகலின் இலச்சை எனபதைப் பெண்பால் எனபதுபற்றி நல்லாள் என்றார் என்க: அவை ஸ்திரீலிங்கம், புல்லிங்கம், நபுஞ்சகலிங்கம் என்பர்.

ஊ) **கவிராசர் .:** கள்ளென்கிறது எல்லாருக்குங் குற்றமாயிருக்கும் அதனைக் குடிக்கிறவர்களுக்கு நாணமென்று சொல்லப்படுகிற ஸ்திரீ எதிரே நில்லாமல் வெட்கி அப்பாலே போவாள், எ-று.

ஏ) **பழைய 2:** நாணமென்னும் நல்லாள் கண்டால் புறங்கொடுத்து ஒடிப்போவள், கள் என்னும் யாவராலும் பேணப்படாத பெரிய குற்றத்தினை உடையாருக்கு.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நாண என்னும் நல்லாள்' என நாணாகிய குணத்தை நல்லாள் எனப் பெண் பாலக்கியது, சொற்களையே பால்பகுத்துக்காணும் வடநூல் முறைபற்றி என்பர் **காரிரத்ன கவிராயர்.** பாற்பாகு பாடு பொருளுக்கு அடியாகக் கோடலே தமிழ்மரபு. சொற்களையே பகுத்து இன்ன சொல் இன்ன பாலினதெனல் வடநூன் மரபு. அங்கு நிகண்டுகளிலே காணப்படும்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் :**

காணாமை உண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்கு —கலி.,115 : 2—3

## ஓ) மேற்கோள்பகுதி :

**சுவாமி .:** வடமொழி நியாயம் வந்ததற்கு மேற்கோள்
— இ.கொ..7

4. கழுவப்படாமையின் — பிராயச்சித்தத்தால் போக்கப்படாமையின்
5. நாண் என்னும் நன்மை எனற்பாலதனை நல்லாள் எனப் பெண்பாலாகக் கூறியது
6. வடமொழி முறைமை பற்றி என்றும் பாடமுண்டு, காரி குறிப்பு காண்க

935. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். (925)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** பயன் அறியாமையுடைத்து, பொருளினைக்கொடுத்துத் தம மெய்யறியாமையைச் செய்யும் கள்ளினைக்கோடல், எ-று.

இது மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், அதனை அறிவுடையார் செய்யார் என்றது.

**ஆ) பரிதி.:** கையில் பொருள் கொடுத்து மெய்யறியாக் கள்ளுண்டல் என்ன மாயம், எ-று.

**இ) பரிப்.:** பயன் அறியாமை உடைத்துப் பொருள் கொடுத்துத் தம்மை அறியமைமயைச் செய்யும் கள்ளினைக் கோடல், எ-று.

மெய் என்பது தாம் என்பதும், ஒன்று என்பதும், அறத்துப் பாலில் கூறப்பட்டது: அன்றியும் பொருளில் உண்மை அறியாமை என்றும் ஆம். இது மேல் கூறிய குற்றம் எல்லாம் பயத்தலின் இதனை அறிவு உடையார் செய்யார் என்பது கருத்து.

**ஈ) காளி.:** 'விலை கொடுத்தது'-பாடம்

இதன் பயன் அது ஆகலான் பெரிதும் தான் ஓர் ஒழுக்கம் அறியாமை என்னும் குற்றத்தை உடைத்து; அஃது யாது எனின்? ஒருவன் பித்து ஏறல் இன்றி வேண்டும் விலைகொடுத்தும் தான் மெய் மறந்து ஒழுகுவது ஓர் மெய் அறியாமையைக் கோடல், எ-று.

ஈண்டுக் கை என்பது ஒழுக்கம்.

**உ) பரிமேல்.:** ஒருவன் விலைப் பொருளைக் கொடுத்துக் கள்ளால் தனக்கு மெய்ம்மறப்பினைக்கொள்ளுதல், அவன் பழவினைப் பயனாய செய்வது அறிபாமைத் தனக்குக் காரணமாக உடைத்து, (எ-று).

தன்னை அறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவும் அறியாமை சொல்லல் வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல்[1] ''பழனுடைப் பெருமரம் வீழ்ந்தெனக்[2] கையற்று''[3] என்பதனாலும் அறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றனைக் கொள்ளுங்கால் தீயதுகொள்ளாமையின் மெய்யறியாமைகொளல் முன்னை அறியாமையால்[4] வந்தது என்பதாம்.

1. அப்பொருட்டாதல் - செய்வது என்னும் பொருளினது ஆதல்
2. 'தீர்ந்தெனக்' என்றும் பாடமுண்டு. 3. புறம்., 209
3. முன்னை அறியாமை - முன் முற்பிறவிகளில் செய்த தீவினைப் பயனாகிய அறியாமை

ஊ) **கவிராசர்** .: பொருளைக் கொடுத்துத் தன்னுடம்பை மறப்பதனைக் கொளளுதல், முன்செய்த தீவினையாலே செய்கிறதறியாமையைத் தனக்குக் காரணமாக உடைத்து, எ-று.

ஏ) **பழைய2** : ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாற்றனக்கு மெய்ம்மறந்து போதலைக கொள்ளுதல், அவன்றன பழவினைப் பயன் செய்வதறியாமையுடைத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கை பறியாமை'

'பயன் அறியாமை' **மணக்**.: 'செய்வதறியாமை' **பரிமேல், கவிராசர், பழைய. தேவநேயர். இராம., சபாபதி** முதலியோர் 'ஒழுக்கம் அறியாமை' **காளி., வரத., சாமி சிதம்,;** 'கை என்ற கருவியின் பெயர். அதன் காரியமாகிய செயலுக்கு ஆயிற்று; கருவியாகு பெயர்' என்பர் **பரிமேலழகர்** முதலியோர், **தேவநேயர்** 'செய்முறையை யுணர்த்திற்று அதனால் கருவியாகு பெயர்' என்பர். 'உணர்ச்சியின்மை' என்பர் **மு.கோ.**; 'வாழத் தெரியாமை' என்பர் **வ.சுப மா** ; இவைகள் இச்சொல்லின் நேர் பொருளாகாமையை நுண்ணறிவுடையார் எவரும் உணர்வர். மேலும் கைவேல், கைகுட்டை முதலிய தொடர்களில் இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொருளில் வழங்குகிறது, கைக்கிளை, கைக்குழந்தை என்பன போலச் சிறுமை என்னும் பொருளிலும் வரக் காண்கிறோம்.

ஆகவே 'கை' என்பது உறுப்பின் பெயராயும், அதனால் விளைந்த ஒரு சாரிடப், ஒருபக்கப், ஒரு வழி என்னும் பொருளாதயும், மேலுப் பல பொருளதாயும் தமிழ் உலகில் விளங்குவதைக் காணலாப், இதனை எண்ணும் போது கை இடுகுறியளவாய் உறுப்பு முதலிய பொருளதாய். ஆகுபெயர் முதலான இலக்கண வகையான் பக்கம், செயல், இடம் முதலியவற்றிற்குப் பெயராயும் வருதல் சார்ந்து வரும் சொல்லின் தன்மையால் பலவேறு பொருளைத் தருகின்றது எனலாம். கையறுநிலை, கையற்றார்என்புழிக் 'கை' என்பதனைமட்டும் பிரித்து கை என்பதை மட்டும் குறிப்பின் அது செயல் என்னும் பொருளைத் தராது. 'கையறியாமை' என்பதனை ஒரு தொடராகக்கொண்டே 'செய்வதறியாதார்' என்பர் **பரிமேலழகர்**. இங்ஙனம் வருவன வற்றுள் 'கை' (ஒருபசர்க்கமாக) ஒரிடைச்சொல்லாகக் கொண்டு இங்ஙனம் இணைந்த சொல்லாற்றலான் பல்பொருள் கொணருவாராவர். ஆகையால் 'கை' என்பதுமட்டும் தனித்துப்பொருளறிவிக்காது

என்பதும் எண்ணுக. இங்ஙனம் வரும்துணைச்சொல்லை' உபசர்க்கம்' என்பர் வடநூலார்.

'மெய்யறியாமை'

'மெய்யறியாமையைச் செய்யும்' என்னும் உரைகளின் நோக்கு 'உடலுக்கு நினைவிழந்த நிலையை உண்டாக்கும்' என்னுங் கருத்தினது. பரிப்பெருமாள் 'பொருளில் உண்மை அறியாமை எனினும் ஆம்' என்பர். இது 'பொருளின் உண்மைத்தன்மையை அறியாமை' என்னுங்கருத்தினது. இது கருத்தாயின்பொருளின் உண்மைதன்மையையுணர்த்தல் இயல்பான தெளிந்த அறிவுடை-யார்க்கே இயாலாததொன்று மெய்யுணர்வுடையார்க்கே இயல்வது என்பதை 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்' என்ற குறளாற் குறித்தனர் வள்ளுவர். அங்ஙனமாக மதுவுண்டு மதிமயங்கியவர் உண்மையறியார் என்பதாற் பயனின்று ஆதல் தெளிக. ஆதலால் உடலுணர்விழந்து-மதிமயங்கி என்னுங் கருத்தினதே சிறந்தது. பரிமேலழகர் 'கையறியாமை' ஒரு தொடராகக் கொண்டு 'செய்வதறியாமை' என்றனராதல் கூடும். ஏற்பன கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பொருள் கொடுத்து மெய்யறியாமை கொளல்:**

நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் ...... —கம்ப., 4462

வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கொட்புந்
தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்-கம்ப., 4468

ஊறிய தறவு முற்ற குற்றமு முணர்வை யுண்ணச்
சீறிய மனத்தர் தெய்வ மடத்தைய ருட நீர்வுற்று
ஆறின ரஞ்சு கின்றா ரன்பரைத் தழுவி யும்பர்
ஏறின ரிட்டு நீத்த பைங்கிளிக் கிரங்கு கின்றார். —கம்ப.,4859

**93.6. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (926)**

உரைப்பகுதி :

அ) மணக். : அறிவிழந்தலான், உறங்கினார் செத்தாரோடு ஒப்பர்; அதுபோல, மயங்குதலான் எல்லாநாளும் கள்ளுண்பார் நஞ்சு[1]ண்பவரோடு ஒப்பர், எ-று.

இஃது அறிவிழப்பர் என்றது.

1. நஞ்சு—எட்டிவிதை பாம்பின் விஷம் முதலியன்போல நஞ்சாவன

ஆ) **பரிதி.** : நித்திரையும் மரணமும் வேறல்ல; நஞ்சு தின்பானும் கள்ளுண்பானும் சரி, எ-று.

இ) **பரிப்.** : உறங்கினார் செத்தாரோடு ஒப்பர்: அறிவு இழத்தலான்; அதுபோல எல்லா நாளும் கள் உண்பவர் நஞ்சு உண்பவரை ஒப்பர்: மயக்குதலான், எ-று.

இஃது அறிவு இழப்பர் என்றது.

ஈ) **காளி.** : உலகத்து ஒவாது[2] துஞ்சினார் என்றும் செத்தார் என்றும் வருவதன் பொருள் கருதின் இறந்து பட்டார் என்பதே தரவல்லது துஞ்சினார் என்றது; வேறு ஒன்றும் அல்ல; கள் உண்பவரும் நஞ்சு உண்பாரின் வேறு அல்லர், எ-று.

இனி மற்று இங்ஙனம் கள்ளும், சூதும், களவும் என்பன கண்டகத் தொழில்[3] ஆகலால் மற்று இதன் பின்னரே சூதினை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) **பரிமேல்.**: உறங்கினார், செத்தாரின் வேறாதல் உடையரேனும், அக்காலத்து அறிவின்மையால் வேறு எனப்படார்; அவ்வாறே கள்ளுண்பார், நஞ்சுண்பாரின் வேறாதல் உடையரேனும், எக்காலத்தும் அறிவின்மையான் வேறெனப்படார், அவர்[4] தாமே யாவர்.

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்பு நிற்றல், வேறாதலும் வேறன்மையும் உடைமை காட்டற்கு உவமை புணர்க்கப் பட்டது[5]. இதனை நிரல் நிறையாக்கி, திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சுண்பாரும் ஒப்பர். கைவிடப் படுதலால் செத்தாரும் கள்ளுண்பாரும் ஒப்பர் என்று உரைப்பாரும் உளர்;[5] அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாதும் இயைபில்லாத நஞ்சுண்பாருக்கு உவமை புணர்த்து ஈண்டுக்கூறல் பயனின்றாகலானும், சொற்கிடக்கை நிரனிறைக்கு ஏலாமையானும், அஃது உரையன்மை அறிக. இவை இரண்டு பாட்டானும் அவரது அறிவிழத்தற்குற்றம் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** : தூங்குகிறவனும் செத்தவனும் கள்ளைக் குடித்தவனும் நஞ்சுதின்றவனும் இந் நாலுபேரும் சரி. ஆனாலுந் தூங்குகிறவனை எழுப்பினால் எழுந்திருப்பான். செத்தவன் சுவாச

2 ஓவாது — இடைவிடாது

3. கண்டகத் தொழில்—கீழோர்களது தொழில்

4. தொகுப்பும் குறிப்பும் காண்க.

மில்லாமல் சும்மாக் கிடப்பான். விஷந்தின்றவன் மணிமந்திர ஔஷதங்களினாலே[6] பிழைப்பான். கள்ளுக்குடிக்கிறவன் இவர்களைப் போலச் சும்மா இராமல் நல்லோர்கள் பெரியோர்கள் முதலானபேரை உபத்திரவம் பண்ணுவான். ஆனபடியினாலே சரியல்ல, எ-று.

ஏ பழைய 2 : உறங்கினார் செத்தாரின் வேறாதலுடையரேனும், அக்காலத்து அறிவின்மையால் வேறல்லர்; நஞ்சுண்டு மயங்குவாரின் வேறல்லர் கள்ளுண்டவரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் உறங்கினாரைச் செத்தாரோடும், கள்ளுண்பாரை நஞ்சுண்டாரோடும்' ஒப்புமை கூறி 'வேறல்லர்' என்ற வினைமுற்றை இருபாலுங் கூட்டி, 'அறிவிழத்தலால்', 'மயங்குதலால்' என இருவேறுவகையான பொதுத்தன்மைகளை வருவித்து, உவம உருபும் விரித்து, உரை செய்தனர்.

பரிதி., மணக்குடவரை மனத்துட் கொண்டுப் பொழிப்புரைத்தனர். காளிங்கர் 'துஞ்சினார்' 'செத்தார்' என்பன இறந்தார் என்னும் பொருளனவே என்பர். துஞ்சுதல் இறத்தல் என்னும் பொருளதே யென்பதை 'நெருப்பினுள் துஞ்சலுமாகும் (1049, வாராக்கால் துஞ்சா வரிற்றுஞ்சா' (1179) என்பன போலப் பலவிடங்களிற்'றூக்கம்' என்ற பொருளிலேயே வள்ளுவர் ஆளுகின்றார். தகுதி நோக்கிச் 'செத்தாரைத் துஞ்சினார்' என ஆளும் போது மட்டும் 'இறந்தரர்' என்னும் பொருளில் வருவது. இது தகுதி வழக்காம்; இயல்பான பொருள் 'தூங்குதல்' என்பதே. ஆதலால் துஞ்சினார் என்றல் செத்தாரையுணர்த்தும் போதுதான் மங்கலமல்லாததை மங்கலமாகக் கூறும் செயற்கைப்பொருட் சொல்லாகும். ஆதலால் 'செத்தார்' என்னும் பொருளதன்று இது. உணர்விழத்தல் கருதிப் பொதுவகையிற் கூறினார் எனிலோ அதுவும் பொருந்தாது. துஞ்சற்கண் உணர்வடங்கியிருக்கும். சாதற்கண் உணர்வை உயிர் நிரந்தரமாக இழந்துவிடும். ஆதலால் இரண்டும் ஒன்றாகாது. ஆதலாற் காளிங்கர் கருத்து ஏற்புடையதாகாது. அவரே ஒவாது துஞ்சுதலே சாதலை ஒக்கும் எனல் காண்க.

பரிமேலழகருக்கும் இச்சிந்தனை எழ அவர் 'துஞ்சினார் செத்தாரின் வேறாதல் உடையரேனும், என்றும், 'உறக்கக் காலத்து மட்டும் அறிவின்மையால் முற்றும் உணர்விழந்த மரண நிலையை

6. ஔஷதங்களினாலே—மருந்துகளினாலே

ஒக்கும்' என்றனர். இங்ஙனமே 'நஞ்சுஉண்டவுடனே உணர்வை நிரந்தரமாகப் பிரிப்பது. கள் உண்ட அக்காலந் தொடங்கிச் சிறிது காலம் உணர்வைச் செயல்படாமல் தடுப்பது. என்றும் உண்பாராயின் கள் நஞ்சு போல என்றும் உணர்விழக்கச் செய்வதாய்' என விளக்கங் கண்டுரைப்பர். 'நிரல் நிறையாக்கி உரை கூறல்தகாது; இதில் அதிகாரப் பொருள் பின்னதாகிறது. ஈண்டு இயைபில்லாத துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் என்பது முன்னிடம் பெறுகிறது இது நூலமைப்புக்குக் குற்றமாம்' என்பர் **கடவுள் வாழ்த்தின்** முதற்கண் அதிகாரத்திற்கு இயைபில்லாத உவம வாசகம் முதலிடம் பெறுகிறது. அதிகாரப் பொருள் அதனை உவமமாகக் கொண்டு பின்னர் உரைக்கப்படுகிறது. அது போல ஈண்டும் கூறினார் எனல் இழுக்குப் பயப்பதாகாது. ஆகவே 'எஞ்ஞான்றும் கள்ளுண்பார் (ஆகிய) துஞ்சினார் நஞ்சுண்பாராய்ச் செத்தாரின் வேறல்லர்' எனக் கூட்டிப் பொருள் காணல் தகும். இது கொண்டு கூட்டே யன்றி நிரனிறை யன்று. இதனால் கள் நஞ்சாய்க் கொல்வது என்ற அதிகாரப் பொருண்மையும் விஞ்சி நிற்றல் காணலாம். இங்ஙனம் நிரனிறையாகக் கொண்டவர் **கவிராசராகக்** கருதலாம். ஆயினும் காலத்தைக் கொண்டு முன்னுள்ளார் ஒருவராக இருத்தல் கூடும் எனலே நன்று

ஒ) ஒப்புமைப்பகுதி :

**நஞ்சுண்பார் கள்ளுண்பவர் ;**

மேன்மக்கள் நஞ்சொடு கள் வரைந்தார். —நீல.,342

நனைநறுந்துளி நஞ்சு .... ......... —கம்ப ,4398

செற்றதும் பகைஞர் நட்டார் செய்தபே ருதவி தானும்
கற்றதுங் கண்கூ டாகக் கண்டதுங் கலைவ லாளர்
சொற்றது மானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றது முணரா ராயி னிறுதிவேறிதனி னுண்டோ. —கம்ப.,4567

வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சமென் றாரை நீக்கும் தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் லணங்கும் தீரும் கள்ளினால் அருந்தி னாரை
நஞ்சமும் கொல்வ தல்லால் நரகினை நல்கா தன்றே.
—கம்ப., 4468

நஞ்ச முண்டவ ராமென அனுமன்மேல் நடந்தார். —கம்ப.,5649

பொன்றிவை வெழுந்தாற்போற் புடைபெயர்த்தங் கெழுந்திருந்தான்
—கப்ப.,7454

**செத்தாரின் வேறல்லர் ;**

விளிந்தாரின் வேறல்லர். —குறள்.,143

93.7. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். (927)

உரைப்பகுதி :

அ) மணக்.: தங்கள் ஒழுக்கத்தை உள்புக்கு அறிந்த உள்ளூராலே இகழப்படுவார் ; எல்லாநாளும் கள்ளுள்ளவிடத்தைநாடி, அதன் கண்ணே தாழ்வார், எ-று.

ஆ) பரிதி.: கள்ளுண்பானது ஆசாரஈனப்புத்தியறிந்து[1] அவனிருந்த ஊர் சிரிக்கும், எ-று.

இ) பரிப்.: தங்கள் ஒழுக்கத்தை உள்புக்கு அறிந்து உள்ளூராலே இகழப்படுவார் : எல்லா நாளும் கள்உள்ள இடத்தை நாடி அதன் கண்ணே வாழும் அவர், எ-று.

உண்ணுமது அறிவார் இல்லை என்பார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) காளி.: தனித்தனி நெஞ்சினால் அயிர்த்து[2] ஆராய்ந்து தாம் வாழும் ஊரின் மக்களானே எஞ்ஞான்றும் சிரிக்கப்படுவார்; யசர் எனின்? கள் உள்ள வழி ஒற்றிச்சென்று மற்று ஆங்கே தம் கண்ணோடித்திரிபவர், எ-று.

உள் ஒற்றி என்பது நெஞ்சினால் அயிர்த்து ஆராய்ந்து என்றது. கள் ஒற்றி என்பது கள்உள வழி ஆராய்ந்து என்றது. கண் சாய்பவர் என்பது கண்ணோடித்திரிபவர் என்றது.

உ) பரிமேல்.: கள்ளை மறைந்து உண்டு அக்களிப்பால் தம் அறிவு தளர்வார், உள்ளூர் வாழ்பவரான் உள் நிகழ்கின்றது உய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர், எ-று.

உள்ளூர் ஆகுபெயர்[3]. உண்டு என்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல்-தளர்ச்சியால் களிப்பினை உணர்ந்து அதனால் கள்ளுண்டது உணர்தல்.

ஊ) கவிராசர் : ஒருவரும் அறியாமல் மறைந்திருந்து கள்ளைக் குடித்தாலும், பிறகு அந்தக் கள்ளினாலே அறிவு மயங்கினது கண்டு,

---

1. ஆசார ஈனப்புத்தி - ஒழுக்கங் கெட்ட அறிவு 2. அயிர்த்து - ஐயப்பட்டு

3. ஊர் என்ற இடப்பெயர் இடத்து நிகழ்பொருளாகிய மக்களுக்காதலின் இடவாகு பெயர். இலக்கணப்போலி என்ற கோ வ. உரைக்குறிப்பு ஊருள் என்பது உள்ளூர் என்று ஆனதற்குக் கூறியது

இவன் கள்ளைக் குடித்தாலும், பிறகு அந்தக் கள்ளினாலே அறிவு மயங்கினது கண்டு, 'இவன் கள்ளைக் குடித்தான்' என்று உள்ளூரார் எல்லாருஞ் சிரிப்பார்கள், எ-று.

ஏ) **பழைய 2** : கள்ளை மறைத்துண்டவர் கள மயக்கத்தால் அறிவு தடுமாறுவார் : அதனால் உள்ளூரில் வாழ்பவர் இவன் கள்ளுண்டு மயங்கினான் என்று ஒருவர்க்கொருவர் உள்ளுணர்வாகக் கைதட்டி நகுவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய - புதிய உரையாசிரியர்களின் கருத்து பெரிது ஒத்-தாயினும் **'உள்ளொற்றி', கள்ளொற்றி'** என்பனவற்றிற்குச் சிறிது மாற்றம் உண்டு.

**'உள்ளொற்றி'**

'ஒழுக்கத்தை யுள்புக்கு ஆராய்ந்து' **மணக்.**; 'ஆசார ஈனப்புத்தி யறிந்து' **பரிதி**.; 'தனித்தனி நெஞ்சினால் அயிர்த்து ஆராய்ந்து' **காளி**.; 'உள்நிகழ்கின்றது உய்த்துணர்ந்து' **பரிமேல்**.; உள்ளுணர்வாகக் கைதட்டி' **பழைய**.; 'உள் ஊர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர்' எனக்கூட்டி, குடித்தவன் மனத்தில் மறைந்தே கிடக்கும், மறைபொருள்கள் உய்த்துணரப் பட்டு' **தேவநேயர்** :

**வரத**.: 'அவர் கள்ளுண்ட நிலையை யறிந்து'

ஏனைய பின்னுரைகாரர்களிடம் மாற்றமில்லை. இவற்றுள் **மணக்குடவர்** உரை எளிதில் ஆய்ந்துணர மாட்டாமையை யுணர்த்துதலின் சிறந்தது. **பரிமேலழகர்** உரை புறஞ்சொல்ல மாட்டாமையை யுணர்த்திச் சிறந்ததாகிறது.

**'கள்ளொற்றி'**

'கள் உள்ள இடத்தை நாடி' **மணக்**.; 'கள் உள்ள வழி ஏற்றிச் சென்று'. **காளி**.;

இவ்வுரைகள் மறைவிடத்தே வைத்தருந்தியதைப் புலப்படுத்து தலின் சிறந்தது. 'கள்ளை மறைத்துண்டு' **பரிமேல்** : 'கள் குடித்-ததை அறிவு மயங்கியதாற் கண்டு' என்பர் **பரிமேலழகர்.**

**'கண் சாய்ப்பவர்'**

'உறங்குபவர்', 'நாளும் அதன் கண்ணே தாழ்பவர்' 'அறிவு தளர்வார்' 'கண் ஒடித்திரிபவர்' என்பன உரைகள். இராம. 'கண்

சுழல்பவர்' என்பர். கண் சுழலுதல் - கள்ளுண்டு மயங்கிய முதற்படி நிலை. அயர்ந்து தூங்குதலும்; அப்பொருள் தரும் பிறவும் அதன் முற்றிய விளைவுகள். ஆகையால் கண் சாய்பவர் என்பதற்குக் குடி மிகுதியால் கண் சுழலுதலும், அயர்தலும் உறங்குதலும் ஆகிய மூன்றையும் முறையே உடையோர் என்பது சிறந்த உரையாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**கள் ஒற்றி கண்சாய்பவர் :**

ஒளித்தவ ருண்டு மீண்டிங் வுலகெலா முணர வோடிக்
களித்தவ ரெய்தி நின்ற கதியொன்று கண்ட துண்டோ.

- கம்ப., 4466

கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினால்... ... - கம்ப., 4468

93.8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்(து)
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். (928)

**உரைப்பகுதி :**

**அ) மணக். :** கள்ளுண்டால் களித்தறியேன் என்பதனைக் கைவிடுக; மனத்தின்கண்ணே கரந்ததூஉம் அப்பொழுதே வாய் சோர்ந்து புலப்படும்; அது கள்ளிற்கு இயல்பு, எ-று.

உளம் கெடாது என்பார்க்கு இது கூறப்பட்டது

**ஆ) பரிதி. :** களித்தறியேன் கள்ளுண்ட போது என்று சொல்லுகின்ற ஆங்காரத்தை விடுக; நெஞ்சத்தில் ஒளித்திருந்த இரகசியத்தையும் சொல்லப்பண்ணும், எ-று.

**இ) பரிப். :** கள் உண்டால் களித்து அறியேன் என்பதனைக் கைவிடுக : மனத்தின்கண் கரந்தூஉம் அப்பொழுதே வாய் சோர்ந்து புலப்படும் : அது கள்ளுக்கு இயல்பு, எ-று.

இது மயங்கேம் என்பார்க்குக் கூறப்பட்டது.

**ஈ) காளி. :** ஒருவன் கள்ளின் களித்தும் மற்று அதனால் யான் அறியேன் என்பதனைக் கைவிடுவான் ஆக மற்று அக்களவினையும் கள்ளினால் களித்த காலத்துப் பித்தரைப் போலப் பிறர் அறியவிட்டுப் பேசும், எ-று.

**உ) பரிமேல். :** மறைந்து உண்டு வைத்து யான் கள்ளுண்டறியேன் என்று உண்ணாதபொழுது தம் ஒழுக்கம் கூறுதலை ஒழிக;

அவ்வுண்ட பொழுதே பிற ரறியின் இழுக்காம் என்று முன் நெஞ்சத்து ஒளித்த குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்படுதலான், எ-று.

களித்தறியேன் எனக் காரியத்தால் கூறினார்.[1] இவை இரண்டு பாட்டாலும் அது மறைக்கப்படாது என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்**.; மறைந்து நின்று கள்ளைக் குடித்து, 'நான் கள்ளைக் குடிக்கிறதில்லை' என்று சொல்லி, தன்னுடைய ஆசார ஒழுக்கங்களைச் சொல்லுகிறதை விட்டுவிடு; அது பிறகு எல்லாராலும் அறியப்பட்டு வெகு குற்றங்களாகும்; அனைவரும் அவனை இகழ்வார்கள் எ-று.

ஏ) **பழைய 2**.: 'ஆங்கே தரும்' பாடம்.

கள்குடியாதபோது மறைத்துக்கள் குடித்தறியேன் என்று சொல்லுதலைக் கைவிடுக; கள் குடித்த போது முன் ஒளித்துச் சொன்னதும் அவ்விடத்தில் வெளிப்படுதலான்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறள் 'குடித்து உள்ளங்கெடாதார்க்கு உரைத்தது' என்பர் **மணக்., பரிதி**; களித்தறியேன் என்பதைப் பிரித்து களித்தலையும் அதனால் மயங்கியறியேன் என்பதையும் அறிவித்து விடும் என்பர் **காளிங்கர்**.

**பரிமேல்**. உரைப்போக்கு 'குடிப்பவன் ஒருவன் குடிக்காத போது யான் குடித்தறியேன்' என மறைத்துக் கூறுதல் என்பர் **கவிராசர், பழைய உரைகளும்** இங்ஙனமே.

**இராம**. 'களித்ததால் அறியேன்' என ஒரு குடிகாரன் தீங்கொன்றைச் செய்து, தெளிந்ததில் தானே வகுத்துக் கொண்டு சொல்வதாக வரும் இவற்றினும் குடிகாரன் ஒருவன, யான் குடித்தாலும் களித்தறியேன் அதாவது மயங்கமாட்டேன் என்பது தவறு அதனைக் கைவிடுக இதுவரை வாழ்நாளில் மறைத்துரைத்திருந்த குற்றங்களையும் வெளியிற் சொல்வான். அங்ஙனமே சொல்லுதல் களிப்பால் விளைந்த பயன். ஆதலால் கைவிடுக என்ற விளக்கமுடைய உரைகள் சிறந்தன.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் :**

பளிக்குவள் ளத்து வார்த்த பசுநறுந் தேறன் மாந்தி
வெளிப்படு நகைய வாகி வெறியன மிழற்று கின்ற
வொளிப்பினு மொளிக்க வொட்டா வூடலை யுணர்த்து மாபோற்
கிளிப்பினை யுணர்த்துஞ் செவ்விக் கமலங்கள் பலவுங் கண்டார்

—கம்ப.,578

---

1. கள் உண்டலால் களித்தல் உண்டாதலின் கள் உண்டல் காரணம் களித்தல் அதன் காரியமாம்.

கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான் —பழ,
காணாமை யுண்ட கடுங்கள்ளை மெய்கூர்
நாணாது சென்று நடுங்கவுரைத் தாங்கு —கலித்தொகை.,

ஒ) மேற்கோள்பகுதி :

இளம் ; அருளோடு புணர்ந்த அகற்சியில் கள்ளுணாமை என்பதற்கு மேற்கோள் — தொல். பொருள்.,75

93.9 களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. (929)

உரைப்பகுதி :

அ) மணக் .: கள்ளுண்டு களித்தவனைக் காரணங்காட்டித் தெளிவித்தல், நீரின் கீழே முழுகினானைத் தீயினால் அறிகுற்றது[1] போலும், எ-று.

இது பிறர் சொல்லவும் கேளார் என்றது.

ஆ) பரிதி .: கள்ளுண்டுகளித்தவனுக்கு அறிவு சொல்லுதல் நீரிலே முழுகிக் கிடக்கிறவனைக் கொள்ளிகொண்டு சுடுகிறதற்கு ஒக்கும், எ-று.

இ) பரிப் .: 'நீர்க்கீழ்க்' பாடம்.

கள் உண்டு களித்தவனைக் காரணம் காட்டித் தெரிவித்தல் நீர்க்கீழ் மூழ்கினானைத் தீயினான் அறிகுற்றது போலும், எ-று.

துருவுதல்-திசைச்சொல். இது பிறர் சொல்லவும் கேளார் என்றது. இத்துணையும் கள் உண்பாற்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது.

ஈ) காளி .: கள்ளுண்டான் ஒருவனைக் குறித்துச் சான்றோர் பல நூல் வகையாலும் இது தகாது என்று எடுத்து உரைத்துக் காட்டுதலாவது எத்தன்மைத்தோ எனின் நீருள் முழுகி நின்றான் ஒருவனைத் தீயினால் சென்று துருவிப்பிடித்த[2] அத்தன்மைத்து, எ-று.

உ) பரிமேல் : கள்ளுண்டு களித்தான் ஒருவனை இஃது ஆகாதென்று பிறன் ஒருவன் காரணம் காட்டித் தெளிவித்தல், நீருள்

---

1. அறிகுற்றது — அறிந்தது 2 துருவிப்பிடித்த — தேடிப்பிடித்த

மூழ்கினான் ஒருவனைப் பிறனொருவன் விளக்கினால் நாடுதலை ஒக்கும், (எ-று).

களித்தானை என்னும் இரண்டாவது ''அறிவுடை அந்தணன் அவனைக் காட்டென்றானோ[3] என்புழிப் போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல அவன் மனத்துக் காரணம் செல்லாது என்பதாம். இதனான் அவனைத் தெளிவித்தல் முடியாது என்பது கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்** : கள்ளுக்குடிக்கிறவனைக் கள்ளுக்குடியாதவன் கள்ளுக்குடிக்கிறது ஆகாதென்று திருஷ்டாந்தங்களைக்[4] காட்டித் தெளிவிக்கிறது, தண்ணீருள்ளே மூழ்கிக்கிடக்கிறவனை விளக்கைப் பிடித்துக்கொண்டு தேடுகிறதோடொக்கும், எ-று.

ஏ) **பழைய 2** : கள்குடித்து மயங்கிக் கிடப்பவனை, இப்படி ஆகா-தென்று காரணங்காட்டித் தெளிவித்தல், ஆழ்ந்த நீரில் மூழ்கினான் ஒருவனை விளக்குப் பிடித்துத் தேடுதலோடு ஒக்கும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'களித்தானைக் காரணங்காட்டுதல்'**

'களித்தானுக்கு' என வேற்றுமை மயக்கமாகக் கொண்டுரை கண்டவர் பரிதி.; 'காரணங்காட்டிக் களித்தானைத் தெளிவித்தவர்' எனக் காட்டுதலாகிய தொழிற்பெயரைக் காட்டி எச்சமாககிப் பொருள கூறியவர் பரிமேலழகர்.

இக்குறளில் 'காணாதாற் காட்டுவான் தான் காணான' என்றதன் கருத்தோட்டம் உள்ளது.

'தீத்துரீஇயற்று' சங்கநூல்களிலும் காண இயலாத அரிய ஆட்சி இது. இந்நூலினும் இந்த ஒரிடத்தையன்றி வேறு ஆட்சி இல்லை இதற்குப் பொருளாக 'அறிகுற்றது' என்று **மணக்-குடவரும்**, 'சுடுகிறது' என**ப்பரிதியும்**, 'துருவிப்பிடித்தற்று' எனக் **காளிங்கரும்**, 'விளக்கினால் நாடியது' எனப் **பரிமேலழ கரும்** 'தேடுவதொக்கும்' எனக் **கவிராசரும், பழைய உரை யாசிரியரும்** கூறுவர். பிற்கால உரைகள் யாவும் முன்னோர் தடத்தின் வழி நடப்பனவே இவற்றுள் **பரிதியார்** உரை ஏற்புடைய தன்று. **பரிப்பெருமாள்** 'துருவுதல்—திசைச்சொல்' என்பர். துருவு-தேடு என்னும் பொருள் தரும் ஒரு வினையடி

3. கலி.-7௪: 18.
4. திருஷ்டாந்தங்கள் — எடுத்துக்காட்டுக்கள்

துருவுதல் - துருவல் எனத் 'தல்' அல்லீற்றுத் தொழிற்பெயராயும், துருவி, துருவினான், முதலான வினை வேறுபாடுகளை விளைத்-தற்குரிய வினையடியாகவும் வருதலால் இது திசைச் சொல்லாமா? என்ற ஐயம் எழுதல் கூடும்.

திசைச் சொல் என்பது செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தும் அவ்வந்நிலத்தும் தாங்குறித்த பொருளை விளக்கு வதல்லது அவ்வவ்வியற்சொல் போலாது அந்நிலத்தும் தம் பொருளையே விளக்குவதாகலானும் இது எந்த வகையில் திசைச் சொல்லாயிற்று என அறிதல் சாலாமையானும் இது திசைச்சொல்லா மாறு யாங்ஙனம்? என்னும் ஐயந்தோன்றுவதியல்பு.

திசைச் சொற்களும் கொடுந்தமிழ்ச் சொல்லேயாதலானும், திசைச் சொற்கள் தமிழில் வந்தபின் அவை தமிழிலக்கண மரபை ஒட்டியே வழங்கக் காண்டும் ஆதலானும் தமிழ்ச் சொல்லேயா-தலைத் துணியலாம்.

ஆயினும் துருவி என்பது துரீஇ என விகாரப்படுதலும், அளபெடை ஏற்றலும் ஆகிய இரண்டான் தமிழ்ச் சொல்லேயாம்; திசைச் சொலலன்று; அளபெடை கோடலும், துருவு என்னும் முதனிலைத் தொழிற்பெயர், ஈறுதிரிந்து அளபெடுத்து 'துரீஇ' என வினை எச்சமாதலும், திசைச் சொல்லுக்கும் இலக்கணமாதல் கூடும். ஆதலால் திசைச் சொல் என்றல் தவறாகாது. இது அருவழக்காய் இச்செய்யுளில் மட்டும் வருதலால் திரிசொல் என்பதும் இயைவதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று :**

**கிணற்றுக்குள் இருப்பவனை விளக்கிட்டுத் தேடினால்போல.**

—பழ.,

**விளக்கை பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுவதா.** —பழ.,

ஓ) மேற்கோள்பகுதி ;

**சிவஞான. :** நண்ணனல் வேவாத கற்றவர் : 'நண்ணனல் கீழ்நீர்' என்பதுபோல முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை.

—சிவஞான, சூ. 10. ஆதி., 2.

93.10. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்-
கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. (930)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** தான் கள்ளுண்ணாதபோது கள்ளுண்டு களித்த-வனைக் கண்டவிடத்து, தான் கள்ளுண்டபோழ்து தனக்குள்ளதாகும் சோர்வினை நினையான் போலும்: நினைப்பானாயின், தவிரும்[1] எ—று.

**ஆ) பரிதி.:** கள்ளுண்ணாமல் தெளிந்திருக்கிற வேளையில் கள்-ளுண்டு மெய் அசந்தவன் பட்டபாடு காணானோ, எ—று.

**இ) பரிப்.:** 'உள்ளான்கொ லுண்டதன் சோர்வு' பாடம்.

தான் கள் உண்ணாத பொழுது கள் உண்டு களித்தவனைக் கண்ட இடத்து நினையான் போலும் தான் கள் உண்ட பொழுது தனக்கு உள்ளது ஆதும் சோர்வினை: நினைப்பான் ஆயின் தவிரும் எ—று

இது தமக்கு உளது ஆகும் குற்றம் காணார் என்றது.

**ஈ) காளி.:** 'போதில்', 'உண்பவன் சோர்வு' — பாடம்.

ஒருவன் ஒருபொழுது கள்ளுண்டான் ஆயினும் பின் ஒருபொழுது அது செய்யாதும் இருக்கும் அன்றே; மற்று அப்-பொழுதின்கண்ணே கள்பருகித் தன்னை அறியாது கலங்கி வரு-வானையும் தான் கண்டிருக்கும் அன்றே; அங்ஙனம் கண்ட இடத்-தாயினும் கருதி நோக்கானோ அக்கள்ளினைப் பருகுவானது சோர்-வினை, எ—று.

எனவே அவன் உணர்ச்சிச் சோர்வும், கண் சோர்வும், உடல் சோர்வும், உடைச்சோர்வும் கண்டு, யாமும் அங்ஙனம் கெடுவேம் ஆகாதே என்று உள்ளும் உபாயம்[2] அறியாது, மற்று இதுவே சோர்வு என்று அறிக.

**உ) பரிமேல்.:** கள்ளுண்பான் ஒருவன் தான் அஃது உண்ணாது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணு-

1. தவிரும் — நீங்கும்
2. உள்ளும் உபாயம் — எண்ணிப் பார்க்கும் வழி

மன்றே, காணுங்கால் தான் உண்டபொழுது உளதாஞ் சோர்வினை அவன் சோர்வால் அதுவும் இற்று[3] என்று கருதான் போலும்.

சோர்வு மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருதல் அளவையான்[4] அதன் இழுக்கினை[5] உய்த்துணரின் ஒழியும் என இதனால் அஃது ஒழிதற்காரணம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்.: கள்ளுக்குடிக்கிறவன் ஒருத்தன், கள்ளைக் குடியாதபோது, பின்னேயொருவன் கள்ளைக் குடித்து மயங்கிக் கிடக்கிறதனைக் கண்டு, 'தான் குடிக்கிற போதுமிப்படி யறிவும் மயங்கிக் கிடப்பேன்' என்று நினையாதே, அவன் மயக்கத்தையே பார்த்துக் கொண்டிருப்பான், எ—று.

எ) பழைய 2 .: 'உண்டவன் சோர்வு' பாடம்,

கள்ளுண்பானொருவன், கள்ளுண்ணாத போது காணான் கொல்லோ? கள்ளுண்டவனைக் கண்டபோது உண்டவன் மயங்கிக் கிடத்தலை நினையான் கொல்லோ? இப்படித் தானன்றோ நாமும் மயங்குதல் என நாணமில்லாதவன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

காளிங்கர் கூறும் 'கள்ளால் விளையும் சோர்வு வகைகள்' நினைக்கத் தக்கவை. இது காட்சியளவையான் கள்ளுண்ட பிறனைக் கொண்டு, கள் குடிக்கும் தன்னிலையையும் கருதல் அளவையாற் கண்டு 'குடியை விடுக' என்றது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

களித்தான் சோர்வு :

கள்ளுண்போன் சோர்வு இன்மை பொய். —முதுமொழிக்.,7:3

ஓ) மேற்கோள்பகுதி :

தெய்வச்.: எண்ணும்காலை அது அதன்மரபே என்ற சூத்திர உரையில் 'உன் துவை கறி சோறு உண்டு என்றவழி உண்டு

---

3. இற்று — இத்தன்மைத்து

4. கருதல் அளவை — அனுமனாப்பிரமானம்

5. 'அவன் இழுக்கினை' என்றும் பாடமுண்டு.

என ஒரு வினையான் வந்ததால் எனின் அது பொதுவினை என்று கொள்க! எனக்கூறி 'கள்ளுண்ணாப்போழ்து' என்பதை மேற்கோள் காட்டுவர்.

— தொல்.சொல் ,45.

## 93. கள்ளுண்ணாமை

| | உட்கப் | உண்ணற்க | ஈன்றாள் | நாணென்னும் | கையறியாமை | துஞ்சினார் | உள்ளொற்றி | களித்தறியேன் | களித்தானைக் | கள்ளுண்ணாப் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 4 | 1 | 2 | 3 | 10 | 5 | 8 | 9 | 7 | 6 |
| பரிதி. | 6 | 7 | 10 | 9 | 8 | 4 | 5 | 3 | 2 | 1 |
| பரிப். | 4 | 1 | 2 | 3 | 10 | 5 | 9 | 8 | 7 | 6 |
| காளி. | 6 | 1 | 5 | 4 | 9 | 10 | 2 | 8 | 3 | 7 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

93-வது அதிகாரம் 'கள்ளுண்ணாமை' முற்றிற்று.

# 94. சூது

அ) மணக். : சூதாவது சூதாடினால் வரும் குற்றம் கூறுதல். இது மேற்கூறியவற்றோடொத்த இயல்பிற்றாதலின், அதன்பின் கூறப்பட்டது, (எ–று).

ஆ) பரிதி.: சூதாவது கள்ளுண்டற்கு ஒக்கும், (எ-று).

இ) பரிப் .: சூது ஆவது சூது ஆடினால் வரும் குற்றம் கூறுதல். மேல் கூறியவற்றோடு ஒத்த இயல்பிற்று ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: இனி, அக்கள்ளுண்டல் போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய[1] சூதாடலும் பிணியுழத்தலும்[2] கூறுவான தொடங்கி, முதற்கண் சூதினது இயல்பு கூறுகின்றார்.

ஊ) கவிராசர்.: அஃதாவது – தர்மார்த்த காமங்களுக்கு விகா–தமான[3] சூதினது இயல்பு.

ஏ) பழைய 2: அஃதாவது, பொருளொட்டிச் சூதாடலாகாதென்று விலக்கப்பட்டது,

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் : ''கள்ளுண் போன்று அறம் பொருளின் பங்கட்கு-தடையாவது; பகைபோல் தீங்குவிளைப்பது''. சூது என்பது ஒரு

---

1 இடையீடாகிய — தடையாகிய

2. பிணியுழத்தலும் — நோயால் வருந்தலும்

3. விகாதமான — தடையான

வகைக்காய். அது, அதனைக் கருவியாகக் கொண்டு ஆகும் கவறாடலைக் குறித்தது. ஆகுபெயர்' என்பர்.

சூது—வஞ்சகம் என்ற பண்பின் பெயர். அஃதின்றி ஆட இயலாத சூதாட்டத்திற்கும், அதற்குரிய கருவிக்கும், கருவிகளைக் கொண்டு வஞ்சனையாக ஆடும் ஆட்டத்திற்கும் முறையே பெயராய் இலக்கியங்களில் வழங்குகின்றது. ஆகவே இது கருவியாகுபெயராம்.

**சாமி சிதம் :** 'சூதாட்டத்தின் தீமையை உரைப்பது'. 'சூதினது தீய இயல்பு' சி இ.; சூது என்னும் தொழிலின் பெயர் அதன் விளைவாகிய தீமையையுணர்த்திற்று என்றலே இயைபுடையது.

94. 1. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று. (931)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** வெல்லுமாயினும் சூதினை விரும்பாதொழிக; வென்று பெற்ற பொருளும், தூண்டிலின்கண்ணுண்டாகிய பொருளை மீன் விழுங்கினாற் போலும், எ-று.

இது பின் கேடுபயக்கும் என்றது.

**ஆ) பரிதி.:** சூதிலே மிகுதியாக வென்றாலும் அந்தப் பொருள் கெடும்; பொன்னினால் பண்ணின தூண்டிலைப் பிரியம்பண்ணிப் பெரியமீன் விழுங்கினாற் போலே, எ—று.

**இ) பரிப்.:** வெல்லும் ஆயினும் சூதினை விரும்பாது ஒழிக: வென்று பெற்ற பொருளும் தூண்டிலின்கண் உண்டாகிய பொன்னை மீன் விழுங்கினாற் போலும், எ-று.

பொன் என்பது இரும்பு ஆம். பின்பு கேடு பயக்கும் என்றவாறாயிற்று. உம்மையான் வெல்லான் என்பது துணிபு. இது சூது ஆடலைத் தவிர்க என்றது.

**ஈ) காளி.:** சூது ஆடலைத் தாம் வென்றிடினும் விரும்பற்க: என் எனின் அங்ஙனம் வென்று உளதாய அப்பொருள் தானும் ஒருவன் கொலை கருதித் தூண்டிலிற செறித்த பொன்னினைக் கண்ட மீனானது நமக்கு இனிது என்று கருதி விழுங்கிய அத்தன்மைத்து, எ-று.

**உ) பரிமேல்.:** தான் வெல்லும் ஆற்றலுடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக; வென்று பொருளெய்துவார் உளரால்எனின்

அவ்வென்றபொருள் தானும் இரையான் மறைந்த தூண்டிலிருப பினை இரை எனக் கருதி மீன் விழுங்கினாற் போலும், (எ-று).

வேறல் ஒருதலையன்மையின் 'வென்றிடினும்' என்றும், கருமங்கள்[1] பலவும் கெடுதலின் 'வேண்டற்க' என்றும் கூறினார். எய்திய பொருள்[2] சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தளை[3] என்பதூஉம், அதனால்[4] பின் துயருழத்தலும் உவமையால் பெற்றாம்.

ஊ) கவிராசர் : சூதாடுகிறதிலே கெட்டிக்காரனாய்த் தான் வெல்லத்தக்கவனானாலும், சூதினை விரும்பவேண்டாம். அது ஏனென்றால் சூதாடிப் பொருள்தேடிக்கொண்டு சுகமாயிருந்தவர் களில்லை சூதினாலே பொருள்தேடினவர்கள், தூண்டிலே குத்தி யிருக்கிற மீனைத் தண்ணீருக்குள்ளேயிருக்கிற மீன்விழுங்கிச் செத தாற்போல, கெட்டுப்போவார்கள், எ-று.

ஏ) பழைய 2 : தான் வெல்லும் ஆற்றல் உடையனாயினும் சூதாடலை விருப்பாதொழிக: தான் வென்ற பொருள் தனக்கெப் படி யென்னில், தூண்டிலிரும்பின் இரை கோத்துவிட அதை இரை யெனக் கருதி மீன் விழுங்கினாற் போலும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தூண்டிற் பொன்' 'தூண்டிலுள்ள பொருளை' என்பர் மணக்குடவர், 'பொன் என்பது இரும்பாம்' எனக்குறிப்பு எழுதுவர் பரிப்பெருமாள். பரிதி. முதலிய ஏனோர் 'தூண்டிலிரும்பு' எனவே பொருள் காண்பர். மீன் தூண்டிலில் கோக்கப் பெற்ற சிறு மீன் புழு பூச்சிகளையே விரும்பியுண்பதால் இரும்பையும் விழுங்கி உயிரையிழக்கும் ஆதலால் பொனனை இரும்பாகவே பொருள் கொள்ளாது தானியாகுபெயராய் அதிலுள்ளப் பொருளை என்றுரை கண்ட மணக்குடவர் சிறப்புடையவர். பரிமேலழகர், பழைய உரையாசியர், கவிராசர் உரைகள இக்கருத்தை நன்கு விளக்கி அரண் செய்கின்றன.

---

1. கருமங்கள் – காரியங்கள் 2. எய்திய பொருள் — சூதாடி வென்ற பொருள்
3. தளை — விலங்கு

ஒ) ஒப்புமைப்பகுதி:

**வேண்டற்க சூதினை :**

சூது விரும்பேல். —ஆத்தி ,49,

சூதும் வாதும் வேதனை செய்யும் —கொன்றை, 31.

**முற்றும்:**

வென்றி வரினும் அதனான்முன் மேவுப் ஒன்றற் காயிரம்பின்
மன்ற இழக்கும் அதுவன்றி வைத்த பொருளும் வருவாயும்
அன்றி யனைத்தும் பகைகொளளும் அமைச்ச ராதி உறுப்பொழியும்
ஒன்றும் ஒளிகல் விகண்மறுமை யுறுதி இலையாம் சூதாடேல்.

—விநா. அரசி., 141

ஓ) மேற்கோள்பகுதி :

**செகக்கப்ப.:** 'நாகிள ஏறுபுல்லி பொன்மா மணியும் பிரிந்திருந் தாரும புலம்ப' பொன்-இரும்பு. 'தூண்டிற்பொன் மீன் விழுங்கியற்று' என்றாற்போல. —த.கோ. ,274

94- 2. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு. (932)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** முன்பு ஒரு பொருளைப்பெற்று, அவ்வாசையாலே மற்றொரு பொருளினைப் பெறலாம் என்று நூறு பொருளை இழக்கின்ற சூதாடிகளுக்கு நன்றெய்தி வாழ்வதொரு நெறி உண்டாமோ? எ-று.

**ஆ) பரிதி,:** 'சூதிற்கும்'—பாடம்.

ஒரு பணம்வென்று நூறு பணம் தோற்கும் சூதிலும் உண்டோ? நன்மை பெற்று அவர்கள் வாழும் முறை, எ-று.

**இ) பரிப்.:** ஒரு பொருளின்கண் ஒரு பொருளினை எய்தி அவ் வாசையாலே மற்று ஒரு பொருளின்கண் நூறு பொருளை இழப் பிக்கும் சூதாடிகளுக்கு நன்று எய்தி வாழ்வது ஒரு நெறி உண்டாமோ? எ-று.

இது தூண்டிலில் பொன் மீன் விழுங்கினால் போலும் என்றார். அதற்குக் காரணம் ஆகவும் இரக்கம் இல்லை என்பதூஉம் கூறிற்று

ஈ) காளி. : சூதைப்பற்றி நின்று ஒரு பொருள் எய்திப் பல பொருள இழக்கும் சூது ஆடுவார்க்கும் உளது ஆமோ? ஆகாது; யாது எனின்? ஒருவாற்றனும் தமக்கு ஓரிடத்தும் ஒரு நன்மை பெற்று வாழ்வது ஓர் நெறி, எ-று.

உ) பரிமேல். : அத்தூண்டிற் பொன் போன்ற ஒன்றனை முன் பெற்று இன்னும் பெறுதும் என்னும் கருத்தால் நூற்றினை இழந்த வறியாராம் சூதர்க்கும்,! பொருளால் அறனும் இன்பமும் எய்தி வாழ்வதொருநெறி உண்டாமோ ஆகாது, (எ—று).

அவ்வாற்றல் பொருள் இழந்தே வருதலான், அதனால் எய்தும் பயனும் அவர்க்கு இல்லை என்பதாம்.[1]

ஊ) கவிராசர் : சூதாடுகிறவன் ஒருகால் ஒரு பொருளை வென்று, பிறகு அந்த ஆசையினாலே 'இன்னும் வெல்லுவோ' மென்றுநூறு பொருளை இழந்து தரித்திரனாய்க்[2]கெட்டுப் போவான். அதல்லாமல், சூது பொருளால் அறமும் இன்பமும் எய்தி வாழ்கிற நெறி ஆகாது, எ-று.

ஏ) பழைய 2 : முன்சொன்ன தூண்டிற் பொன்போல ஒன்றினைப் பெற்றிடினும் பின்னும் பெறுது மென்னுங் கருத்தால் நூறினை யிழந்து வறியராம் சூதர்க்கும், பொருளொன்றாலும் இன்பமும் நன்மையும் எய்தி வாழ்வதொரு வழி உண்டாமோ? ஆகாது.

94.3. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். (933)

உரைப்பகுதி:

அ) மணக் : புரளும் கவற்றை[1] இடைவிடாது எக்காலத்தும் கூறுவனாயின், பொருள வரவு தன்னைவிட்டுப் போய்ப் பிறர்பாற் செல்லும், எ-று.

---

1. அதனால் எய்தும் பயன் —அப்பொருளால் வரும் அறமும் இன்பமும்

2. தரித்தினராய் — வறியனாய்

**ஆ) பரிதி.:** கவறுவிழுந்த இலக்கம் எப்போதும் பேசுவார்க்குப் பொருளாயமும் புயத்திற்படும், எ று.

**இ) பரிப்.:** புரளும் கவற்றை இடைவிடாது எக்காலத்தும் கூறு வான் ஆயின் பொருள் வரவு தன்னை விட்டுப் போய்ப் பிறர்பால் செல்லும், எ-று.

மேல்கூறிய ஐந்தும் அடையாமைக்குக் காரணம் என்னை என் றார்க்கு முயற்சி இன்மையான் இவற்றை உண்டாக்கற்குக் காரணம் ஆகிய வருவாய் இல்லை ஆம் என்று அதற்குக் காரணம் ஆகக் கூறப்பட்டது.

**ஈ) காளி.:** வாய்மையும் வழக்கும் கல்வியும் முதலிய தன் நாவி னால் நயம் இன்றி, என்றும் கவறு புரட்சியில் தோன்றும் தாயப் பெயர்களையே[2] ஒழியாது கூறின், திரட்டிய பொருள் தொகை அனைத்தும் தம் இடத்தினின்றும் போய்க் கெட்டுவிடும், எ று.

உருள்தல் என்பது புரளுதல் என்றது. ஆயம் என்பது கவறு புரட்சியின் தாயம் என்றது. பொருளாயம் என்பது பொருள் கூட்டம்} என்றது. படும் என்பது கெடும் என்றது.

**உ) பரிமேல்.:** உருளுங்கவற்றின்கண் பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின், அரசன் ஈட்டிய பொருளும் அவன் பொருள் வருவாயும் அவனை விட்டுப்போய்ப்பகைவர்கண்ணே தங்கும், (எ—று).

கவற்றினது உருட்சியை அதனினாய ஆயத்தின் மேல் ஏற்றி-யும்[3] சூதாடலை அது கூறலாகிய காரணத்தின் மேலிட்டும் கூறினார்[4] பொருளாயம் என்பது உம்மைத்தொகை. ஆயம் வடமொழித்திரி சொல்[5]. காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலனாகலின், அவை இரண்டும் பகைவர்பாற் செல்லும் என்பதாம்.

---

1. புரளும் கவற்றை — உருண்டு விழுகின்ற சூதாட்டக்கருவி
2. தாயப் பெயர்கள்—சூதாடு கருவியில் விழுகின்ற தாயம். இரண்டு முதலிய பெயர்கள்
3. இது காரணமாகிய கவற்றினது உருட்சியைக் காரியமாகிய ஆதாயத்தின் மேல் ஏற்றிக் கூறியதால் இது உபசாரவழக்கு,
4. கூறின் என்பதிலுள்ள கூறுதலாகிய கருவியின் பெயர் அதன் காரியமாகிய சூதாடு தலை உணர்த்தியதால் கருவியாகுபெயர்.
5. ஆயம் என்பது ஆதாயம் அல்லது பொருள் வரவு என்னும் பொருளைத் தரும் ஆரியச் சொல். அது ஆயம் எனத் தமிழ் வழக்கு பெற்றமையின் திரிசொல்லாயிற்று.

**காரி**: பொருளாயம் -- பொருளும், பொருள் வருவாயும் என்பதனால் உம்மைத்தொகை. உருள் – உருளுங்கவறு. ஆயத்தைஇக்காலத்தார் ஆதாயம் என வழங்குவர்.

ஊ) **கவிராசர்**: பாய்ச்சிகையினாலே வரப்பட்ட சூதாயத்தை மெய் என்று நம்பிச் சூதாடினால், அவன் பொருள் வருகிற வழியும் அவனை விட்டு நீங்கி, அவன் பகைவர்களிடத்திலே போய் நிற்கும்.

ஏ) **பழைய உரை 2**:

உருளுங் கவற்றினை யகப்பட்ட சூதாடலை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின், அரசன் தேடிய பொருட்கூட்டம் எல்லாம் போய்ப் பகைவரிடத்தே தங்கும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட் பாவில் '**உருளாயம்**' '**பொருளாயம்**' என்பன ஆய்வுக்குரியன.

ஆயம் × வியயம் என்பன ஒன்றற்கு ஒன்று மறுதலையான சொற்கள். வரவு + செலவு என்பது பொருள். கல்வெட்டுக்களில் சிறு வருவாய் அதாவது அவ்வப்போது வாங்கும் வருவாயைக் குறிப்பதாக வழங்குகிறது. 'வி' துணைச்சொல் பெற்று வியயம் ஆகிச் செலவு என்னும் பொருளையுந் தருகிறது. கவறாடும்போது வேண்டிய எண்கள் விழுந்து வெற்றி கிட்டுமானால் வருவது ஆதாயம். ஆதலால் கவறாடுங் காய்களுக்கும், அவையுருண்டுவிழும் போது விழும் எண்களுக்கும் ஆயம் என்ற காரியத்தின் பெயர் கருவிக்கு மாயிற்று. அங்ஙனம் கவறாடலின்கண் காய் உருண்டுவிழுவதால் வரும் வருவாய் 'உருளாயம்' என்றும். வேறு வகையான் வரும் வருவாய் 'பொருளாயம்' எனவும் வழங்கப்படுவதாயிற்று. பிற்காலத்து ஏன்? இன்றும் 'ஆதாயம்' எனவும் அது முதல் குறைந்து 'தாயம்' எனவும் வழங்குவதாயிற்று. சூதாடுபவர்கள் விழுந்த எண்ணையும், வெற்றிக்கு வேண்டிய எண்களையும் இடைவிடாது கூறுவர்; ஆதலின் 'உருளாயம் ஓவாது கூறின்' என்றார். இதனைக் காளிங்கர் 'தாயம்' எனக்குறிப்பர். இது இக்கால வழக்கும் பற்றியதாகும்.

**பரிமேலழகர்** கவறு உருள்வதான் வரும் ஆயத்தை 'உருள் ஆயம்' என்றும் பொருளின் வருவாயைப் 'பொருளாயம்' என்றும் கூறுவர். ஆயம் என்பது வடமொழித் திரிசொல் என்பர். வட மொழியில் ஆதாயம் + வியயம் என்பதே இலக்கண வழக்கு அங்

கேயே அது ஆயம் வியயம் என வழங்குவதை இன்றைய (பஞ்சாங்கத்திலும்) நாளோதிகளிலும் காணலாம். ஆதாயம்—தாயமென ஆகி அது ஆயம் எனத்தமிழில் வழங்குவதாயிற்று. தாயம் என்றும் வழக்குண்டு. ஆயம் என்பது தாயம் என்ற வடமொழி ஆயம் எனத் திரிந்துவந்த சொல். ஆரியச்சொற்கள் தமிழ் வழக்குப் பெறும்போது தான் வடசொல் எனப்பெறும் என்ற மரபுணர்ந்த **பரிமேலழகர்** வடமொழித் திரிசொல் என்றார். இதனை நன்குணராத திருக்குறள் திறனாசிரியர் 'ஆயம் என்பது வடமொழிச்சொல் அதுதமிழிலும் திரியாது அப்படியே வந்தது' எனினும் வடமொழி என்ற நிலையினின்றும் நீங்கிவருதலின் வடமொழித் திரிசொல் எனறார் எனப் பொருளில் உரை புகல்வர். முக்குண வசத்தான் முறை மறந்—தனாதல் நூலுரை பேரரசிரியர் மூவர்க்கும் பொது என விடுக்க. **இராமலிங்கர்:** 'உருளாயம் ஒவாது; கூறின, பொருளாயம போய்ப்புறமேபடும்' எனக்கூட்டி' உருண்டு கொண்டே இருக்கும் சூதாட்டம் ஓயாது; சொல்லப்போனால், பொருள் வருவாய் முற்றிலும் தொலைந்து போன பின்பு தான் அழியும்' எனறுரை காணபர். **போய புறம்** என்றிருக்க வேண்டும். இப்பாடம் சொல்லின 'போய' என்னும் பெயரெச்சத்தின் முன் வலி மிகாமை கண்டு பாடமின்மையையாவது தெளியவேண்டும். பாடமோ ஏனையோர் போல 'போஒய்ப்புறமே படும்' என்றே கொண்டு இங்ஙனம் பொருள் கோடல் சாலாது என விடுக்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும :**

இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி உறுபொருள்வென் றனநம்பர்
அருளாகவேகொண் டங்கமுதுசெய்வித் தின்புறுவார்.

— பெரிய. மூர்க்க., 8

94.4 சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில். **(934)**

உரைப்பகுதி

**அ) மணக் .:** துன்பமாயின பலவற்றையும் செய்து தலைமையை அழிக்கும் சூதுபோல, வறுமையைத் தருவது பிறிதொன்றில்லை, எ—று.

ஆ) பரிதி.: சூது விரும்புகையினால் யாவர்க்கும் சிறுமை-யாவது; மனத்தில் லட்சுமி துலங்கிய[1] பவிசையுங்கெடுக்கும்[2] எ-று.

இ) பரிப்.: துன்பம் ஆயின பலவற்றையும் செய்து தலைமையை அழிக்கும் சூதுபோல் வறுமை தருவது பிறிது ஒன்று இல்லை, எ-று.

மேல் கூறிய எல்லாவற்றையும் தொகுத்து நன்கு மதித்துக் கூறப்பட்டது.

ஈ) காளி.: தனக்குக் கீழ்மைகள் பலவற்றையும் செய்வதாய் இங்ஙனம் மேன்மை ஆகிய சீர்மைப் பாட்டினைத்[3] தலையழிக்கும் சூதின் மேற்பட ஒருவர்க்கு வறுமையைத் தரவல்லது மற்று ஒன்றும் இல்லை, எ-று

உ) பரிமேல்.: தன்னை விழைந்தார்க்கு முன் இல்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ள புகழையும் கெடுக்கும் சூதுபோல், நல்குரவினைக் கொடுக்க வல்லது பிறிதொன்று இல்லை.

அத்துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையும் தீயினத்தையும் கூட்டுதலால், 'சீரழிக்கும்' என்றார். வறுமைக்கு எல்லையாவர் என்பதாம்.

ஊ) கவிராசர்.: சூதை விருப்பி ஆடுகிறவனுக்கு அந்தச் சூதுத் துக்கங்கள் பலவும் உண்டாக்கி முன் உண்டான கீர்த்தியை-யெல்லாம் கெடுத்து, வெகுதரித்திரத்தைக் கொடுக்கும், (எ-று)

எ) பழைய 2: துன்பங்கள் பலவற்றையும் விளைவித்துச் செல்வத்தையும் இழக்கும் சூது போல வறுமை கொடுக்க வல்லது பிறி-தொன்றும் இல்லை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**''சிறுமை''**

**மணக்.:** 'துன்பமாயின பல'
**பரிதி.:** 'சிறுமை'
**காளி.:** 'கீழ்மைகள் பல செய்து'
**பரிமேல்.: பழைய.:** முன்பு இல்லாத துன்பங்கள்'
**கவிராசர்:** 'சூதுத் துக்கங்கள் பல உண்டாக்கி'.

1. துலங்கிய — விளங்கிய 2. பவிசை — அழகு
3. சீர்மைப்பாட்டினை — சிறப்பினை 4. தலையழிக்கும் — வேரோடழிக்கும்

பிற்கால உரைகளும் 'துன்பம்' என்றன. ''பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள்'' (தொல். சொல். 341) என்பது தொல்காப்பியமாதலின் 'நோய்' என்பதே பொருளாயினும், நோயான் விளைவது துன்பமாதலின் ஆகுபெயரால் 'துன்பம்' என்றனர் மணக்குடவராதியோர். அவர்களை ஒட்டி இதனையே ஆட்சியாகக் காட்டியது தமிழ் அகராதி. 'இழிவுதரும் துன்பங்கள்' தேவநேயர்; 'தாழ்வுச் செயல்' வரத.

'சீர்'

மணக் : 'தலைமை'
பரிதி .: 'மனத்தில் லட்சுமி தங்கிய பவிசு'.
காளி .: 'மேன்மை ஆகிய சீர்மைப் பாடு'
பரிமேல் : 'உள்ள புகழ்'
கவிராசர் : 'கீர்த்தி'.
பழைய 2: 'செல்வத்தை'
தேவநேயர் : 'உள்ள பெருமை'

இவற்றுள் தலைமை, பவிசு, செல்வம் என்பனவற்றைக் காட்டிலும் புகழ் அல்லது கீர்த்தி என்பது நேரிய பொருள் ஆகலாம்.

மு கோ. வறுமைதருந் துன்பத்தினும், சிறுமையினும், சீரழிவினும் சூது மிகுதியாகத் தரவியலாது என்பர். இவ்வுரை அதிகாரம் 'சூது' என்பதை மறந்து எழுதியதாகும். வறுமையையும் சிறுமையையும் சிறப்பிப்பதால்.

ஆதலால், மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் தெளிவாய் ஏற்புடையவை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. — குறள்.,920

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏதம் என்பன யாவையும் எய்துதற்கு
ஓது மூலம் அவையென ஓர்தியே. —கம்ப., 1807

94.5. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். (934)

உரைப்பகுதி :

அ) மணக்.: கவற்றினையுப், கழகத்தினையும், கைத்தொழி-லினையும் விரு'பிவிடாதவர் முற்காலத்தினும் வறுவியர[1]னார் எ—று.

கவறு—நெத்தம்; கழகம்—உண்டையுருட்டுமிடப்: கைத்-தொழில்—கவடி பிடித்தல்.

ஆ) பரிதி.: கவறும் கழகமும் கொண்டு விளையாடுகிற தறு-வாயிலே ஐவர் கையே என்று சூதுமேற்கொண்டார் இம்மைக்கும் மறுமைக்கும் வெறுமையாவர்[2], எ—று

இ) பரிப்.: கவற்றினையும் கழகத்தினையும் கைத்தொழிலினை-யும் விரும்பி விடாதவர்கள் முன் காலத்தினும் வறியர் ஆனார்எ—று.

கவறு-நெத்தம், கழகம்-உருண்ட உருட்டும் இடம். கைக்-தொழில்-காவடி பிடித்தல். சூது ஆவது இம்மூன்று[3] வகைத்து என்பதூஉம், இதனானே வறுமை உறுமென்றார். அஃது யாங்-ஙனம் அறிதும் என்பார்க்கு முன்பு சூது ஆடிக்கெட்ட அரசராலே அறியலாம் என்பதூ உம் கூறப்பட்டது.

குறிப்பு: கலித்தொகை 94-வது பாடல் உரை 'வல்லுப்-பலகை' நெத்தப் பலகை என்பது ஒப்புக் காண்க.

ஈ) காளி.: கவறு ஆடலும், அக்கவறு ஆடு களத்தில் சென்று புகுதலும், பிறிது ஒன்றினும் கைவைக்கும் கருமம் இன்றி அக்கவறு ஆடும் ஒழுக்கமே ஒழுக்கம் ஆதலும், இவையே நெருங்கப் பயின்று மற்று இது அல்லது பிறர்க்கு ஒன்று ஈயாது இறுகி நிற்கும உலோபம்[4] உடையார் யாவர்? மற்று அவரே இருமை ஆக்கமும் இலர் ஆகியோர், எ—று.

கழகம் என்பது சூதாடுகளம். கை என்பது இதற்கு ஏற்ற ஒழுக்கம். தருக்குதல் என்பது நெருக்குதல். இவறல் என்பது உலோபம்.

---

1. வறுவியர் — தரித்திரர் 2. வெறுமையாவர் — தரித்திரராவர்
3. இம்மூன்று — கவறு, கழகம், கைத்தொழில் எனனும் மூன்றும்
4. உலோபம — பொருளீயாமை

உ) **பரிமேல் :** முற்காலத்துத் தாம் உளராகியே இலராகி ஒழுகினார்[5]. கவற்றினையும் அஃது[6] ஆடுங்களத்தினையும் அவ்வாடற்கு வேண்டும் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர்.

கைத்தொழில்—வெல்லும் ஆயப்படப் பிடித்து எறிதல்[7]. அவ்இவறுதலால் பாண்டவர் தம அரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழுகினார் என அனுபவம் காட்டியவாறு. இவை ஐந்து பாட்டானும் அதனது[8] வறுமை பயத்தற்குற்றம் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்.:** முதலில் சூதாடினவன் பிறகு விட்டுவிட்டேனென்று சொல்லினும், சூதாடுகிற விடத்திலே வந்தால் சூதாடாமற் சும்மா இருக்கமாட்டான். அவன் கையிலே சூதுத்தொழில் இருக்கும் என்று அறியவேண்டும், எ—று.

எ) **பழைய2:** கவற்றினையுங் கவறாடுந் தொழிலினையும் மேற்கொண்டு களித்து விளையாடும அரசர், முற்காலத்துக் கெடாதவர் யார்? சூதாடிக்கெட்டவரேயாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**மணக்குடவர்** 'கை-கைத்தொழில் அதாவது கவடி பிடித்தல்' என்பர். இவர் கருத்து 'கவடி-சூதாடு கருவியாகிய சோழி. அவற்றைப் பிடித்து வீசி எறிந்து உருளச் செய்யும் திறத்திலேயே இவர் விரும்பிய எண் விழுப்படியாகச் செய்வதாகிய பிடித்தல்வகை' என்பது போதரும். 'இவறியார்' என்பதற்கு 'விரும்பி விடாதவர்' எனக் கவறு முதலிய மூன்றற்கும் முடியாக்குவர். இதனாற்போந்த கருத்து 'இம்மூன்றையும் விடாப்பிடியாகக் கொண்டவர் வறியராவர்' என்பது. இம்மூன்றும் கூடியதே சூதாதலானும், இம்மூன்றனுள ஒன்று குறையினும் அது சூது ஆகாது ஆதலானும் இங்ஙனம் கூறுதல் ஏற்பதாகும். நெத்தம்-கவறாடுங்காய்; கவறாடும் பலகை நெத்தப் பலகை எனப்படும். இதனைப் **பரிதி** கவறும் கழகமும கொண்டு விளையாடும்போது கைப்பலத்தைக் கொண்டு தருக்கி

5 துவாபர யுகத்தில் தாம் உயிருடனிருந்து வறியராகி வாழ்ந்தனர்.

6. அஃது — சூதாடுங் கருவியான கவறு

7. வெல்லும் ஆயம்படப் பிடித்து எறிதல் — வெல்லும் ஆதாயம் உண்டாமாறு பாய்ச்சிகையைப் பிடித்து எறிதல்.

8. அவ் இவறுதலால் — கைவிடாதிருத்தலால், 'அவ்வாயந் தவறுதலால்' என்றும் பாடமுண்டு.

9. அதனது — சூதினது

விளையாடுகிறவர் வெறுமையாவர். இவர் கருதும் கைப்பலம் என்பதும் ஐவர் கை என்பதும் ஆடும் போது ஐந்து பேரைத் தன் கைக்குத் துணையாகக் கொண்டு ஆடினாலும் தோல்வியே என்றவாறாம். கை-கட்சி, எதிர்க்கையில் சேர்ந்திருப்பார் போலத் தங்கையைச் சேர்ந்த ஐவர் என்பதாம். இவர் கருத்தின் வண்ணம் கவறும் கழகமும் கட்சியும் இவற்றால் தருக்கி என்பதாம். இதனை 'நெத்தப்பலகையை எடுத்து நிறுத்தினாற் போன்ற குறளனே' கலி. 94 : 13-14 வரி உரையும் 'சூதாடற்கு அறைகள் கீறிய வட்டமான பலகை வல்லுப்பலகை. நெத்தப்பலகையும் அது' என்ற நச்சினார்க் கினியர் உரையும் காண்க.

காளிங்கர் 'அக்கவறாகும் ஒழுக்கமே ஒழுக்கமாகக் கொள்ளுதலும்' என்பர். இதனால் இராம. 'கை-ஒழுக்கம்' என உரை கண்டனர் எனலாம்.

பரிமேலழகர் 'ஆடற்குவேண்டும் கைத்தொழில்-வெல்லும் ஆயம் படப் பிடித்தெறிவல்' என மணக்குடவருரைக்கு விளக்கம் போலக் கூறினர்.

கவிராசர் உரை இக்குறட்கு நேர் உரையாகாது கருத்துரையாக விளக்குகிறது.

இவ்வுரையாசிரியர்களில் பரிப்பெருமாள், பரிமேலழகர் பழைய உரையாசிரியர் ஆகிய இம்மூவரும் அரசற்கு அறிவுறுத்தியதாகவும் ஏனோர் பொதுமையிற் கூறியதாகவும் உரைப்பர்.

இவருள் 'கை சூதாடும் கைத்திறன்' என்னும் உரையே சிறந்தது 'கட்சி' யென்பதும் ஏற்புடையது. அனைத்தும் சூதாட்டத்திற்கே உரியன ஆதலின் ஏனைய உரைகள் ஏற்புடைய ஆகா.

இராம.: 'கவறுங்கழகம் - சூதாடும் சேர்க்கை. அதாவது சூதாடும் கூட்டம்' என்பர் கவறும் என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டுரைப்பர். இங்ஙனம் கவறு என்னும் பெயரடியாகப் பெயரெச்ச முதலான வினை வேறுபாடுகள் பிறந்து இலக்கிய ஆட்சியில் இருப்பனவாக அறியக் கூடவில்லை, அன்றியும் ஆசிரியர் எண்ணும்மை கொடுத்தமையும் எண்ணுக. 'கை—கட்சி' என்பதைக் காட்டிலும் 'தம் கைத்திறன்' என்னும் உரையே சூதின் நுட்பம் உணர்த்துவது ஆதலால் அதுவே சிறந்தது.

கவறு முதலிய இம்மூன்றன் கூட்டமே சூதாயினும் வேறோதியது அடிக்கடி கவறுபிடித்தும் விழுங்கவறு கண்டு மகிழ்தலும், பின்னர் கழகத்துப் பலகாற் செல்லப்பழகுதலும், பின்னர் அதன் நுட்பமாகிய பிடித்தெறிதலின் நுட்பமும் முறையே வளர்ச்சியைக் குறிப்பதாதலின் இங்ஙனம் கூறினார் எனலாம்.

94.6. அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார். (936)

உரைப்பகுதி :

**அ) மணக்.**: தமக்கு உளதாகிய இந்திரியங்களும் மனமும் இன்புற்று நிறையப்பெறார்; அதுவேயன்றி, அல்லற்படுவதும் செய்வர்; சூதாகிய மூதேவியாலே மறைக்கப்பட்டார், எ—று.

மறைத்தல்-நற்குணங்களைத் தோன்றாமல் மறைத்தல்.

**ஆ) பரிதி** : சூது கொண்டு திரிவானாகில் பசியிலே அசனம் பண்ணார்[1]; கிலேசமுறுவர்[2] மூதேவியால் மூடப்பட்டார், எ-று.

**இ) பரிப்.**: தமக்கு உளது ஆகிய இந்திரியங்களும் மனமும் இன்புற்று நிறையப் பெறார்: அதுவே அன்றி அல்லல்படுவதும் செய்வர் ; சூது ஆகிய மூதேவியால் மறைக்கப்பட்டார், எ—று.

மறைத்தல் நற்குணங்கள் தோன்றாமை மறைத்தல். மேல் சூது ஆடல் ஆகாது என்றார் அதனால் குற்றம் என்னை என்றார்க்கு இவை இரண்டு குற்றமும் உள ஆம் என்று கூறப்பட்டது

**ஈ) காளி.**: பிறிது ஓர் செல்வம் அடையாமையே அன்றித் தன் வயிறார உண்டு சேறலும்[3] இலர்; இன்னும் மற்று இதுவேயும் அன்றிப் பெருந்துயரம் உறுவர்; யார் எனின் சூது என்று எடுத்து உரைக்கப் படுகின்ற இம்மூதேவியால் சூழ்ந்து கொள்ளப்பட்டவர் எ-று.

**உ) பரிமேல்.**: தன் பெயர்சொல்லல்[4] மங்கலமன்மையிற் சூது என்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார் இம்மைக்கண் வயிறாரப்பெறார், மறுமைக்கண் நிரயத்துன்பம் உழப்பர், (எ-று).

---

1. அசனம் பண்ணார் - உணவு உண்ணார் 2. கிலேசமுறுவர் - துன்பமுறுவர்
3. சேறலும் - செல்லுதலும்
4. தன்பெயர் சொல்தல் - மூதேவி என்று தன்பெயரைச் சொல்லல்

செல்வங்கெடுத்து நல்குரவு கொடுத்தற்றொழில் வேறுபடாமையின் 'சூது என்னும் முகடி' என்றும், வெற்றி தோல்விகள் நோக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு[5] 'அகடாரார்' என்றும் பொய்யும் களவும் முதலிய[6] பாவங்கள் ஈட்டலின் ஆண்டு[7] 'அல்லல் உழப்பர்' என்றுங் கூறினார் வயிறாராமை[8] சொல்லவே, ஏனைப் புலன்கள் நுகரப்பெறாமை சொல்ல வேண்டாவாயிற்று. உழப்பர் என்பது எதிர்காலவினை.

> **காரி.**: மூடப்பட்டார் எழுவாயாகியதால் அல்லலுழப்பர் என்பது பயனிலையாதல் நோக்கிப் பெயா என்னாது, எதிகால முற்றுச சொல் என்றார்,

ஊ) **கவிராசர்** : சூதாடுகிறவன் இம்மையிலே வயிறு நிறையச் சாப்பிடாமல் எந்நேரமும் துக்கப்படுவன்: மறுமையில் நரகத்திலே வீழ்வன், எ-று.

எ) **பழைய 2**: வயிற்றிற்குச் சோறு முண்ணார்: அல்லலும் உழப்பர்: சூதாகிய மூதேவியால் விழுங்கப்பட்டவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'அகடு'**

'தமக்குள்ளதாகிய ஐந்திந் திரியங்களும் மனமும்' என **மணக்குடவர்** உரைப்பதால, அகடு - உள்ளேயுள்ளது எனப் பொருள் கண்டு அதன் விளக்கமாக இவற்றைக் கூறினார் போலும் எனலாம். 'பசியிலே அசனம் பண்ணார்' என்ற **பரிதியுரை** 'வயிறு' என்னும் பொருளது என்று கருதலாம். **பரிமேல்.** 'சூது என்னும் முகடி' என்பதற்குக கூறும் நயம் நுகர்ச்சிக்குரியதாதலோடு, முகடி-அமங் கலபபெயர் அதனைக் கூறுதல் மங்கலமன்மையின் 'சூது' என்றார் என்ற மரபு அறியத்தக்கது. **தேவநேயர்** கூறும் சொன்னயமும் இன்புறத்தக்கதே.

இவற்றுள் அகடு-வயிறு; அல்லல் – இம்மையிலும் வறுமைத் துன்பம் மறுமையிலும் துன்பம் என்பதை வலியுறுத்தும் உரைகள்

5. ஈண்டு - இம்மையில்
6. முதலிய என்றமையின் - கொலை முதலானவற்றையுங் கருதுக
7. ஆண்டு - ஈண்டு என்பதன் எதிர்ச்சொல். மறுமையில் பொருள்
8. வயிறாராமை – வயிறு நிறைய உண்ணாமை

சிறந்தன. சொன்னயங் கூறுவதில் பரிமேலகழரும் தேவ-
நேயரும் கூறுவன சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

அல்லல் உழப்பர் :

செற்றதும் பகைஞர் நட்டார் செய்தபே ருதவி தானுங்
கற்றதுங் கண்கூ டாகக் கண்டதுங் கலைவ லாளர்
சொற்றது மானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றது முணரா ராயி னிறுதிவே றிதனி னுண்டோ. கம்ப. 4:67

ஓ) மேற்கோள்பகுதி :

சுவாமி.: செயப்பாட்டுவினை வினைமுதலாய் வந்ததற்கு
மேற்கோள். -இ. கொ.,78

மூகடியான் மூடப்பட்டார் என்பதை முகடி மூடினார் எனத்
தொகுத்தல் கூடாது பொருள் வேறுபடுதலான் என்பார். ஷ.

94.7 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின் (937)

உரைப்பகுதி :

அ) மணக்.: சூது கழகத்தின்கண்ணே காலைப்பொழுது புகு-
வானாயின், அது தொன்றுதொட்டு வருகின்ற செல்வத்தினையும்
தனக்கு இயல்பாகிய குணத்தினையும் கெடுக்குப், எ-று.

ஆ) பரிதி.: பழகிய செல்வமும், பண்பும் கெடுக்கும் சூதாடு
மிடத்திற் செல்லின், எ-று.

இ) பரிப்.: தோன்றின நாள்தொட்டு வருகின்ற செல்வத்
தினையும் தமது இயல்பு ஆகிய குணத்தினையும் கெடுக்கும் சூது;
கழகத்தின் கண்ணே காலைப்பொழுது புகுவன் ஆயின் அப்புகல்
எ-று.

மேல் கூறிய இன்புறுதல்[1] வாயலர்[2] ஆயினும், தோன்றின
நாள் தொட்டு வருகின்ற செல்வம் உடையார்க்கும் உளது ஆகுமே
என்றார்க்கு அவை இரண்டும் போம் என்று கூறப்பட்டது,

ஈ) காளி.: தம் குலத்தோடு பழகி வருகின்ற செல்வத்தையும்
கெடுத்துத் தாம் ஒழுகி வருகின்ற மரபினையும் கெடுத்துவிடும்;
தாம் என்செயின்? காலையே தாம் செய்யும் கருமக்கடன்[2] ஒழிந்து
சூதாடு களரிக்கண்[3] சென்று புகூஉம் செய்தி ஆயின், எ-று,

1. மேல்கூறிய இன்பம் — முற்கூறப்பட்ட அருளானும் வருமின்பம்
2. வாயலர் — பொறுந்தாராயினும்
3. களரி — களம்

உ) பரிமேல்.: அறம் பொருள் இன்பங்கட்கு அடைத்தகாலப்[4] அரசனுக்குச் சூதாடு களத்தின்கண் கழியுமாயின், அக்கழிவு தொன்று தொட்டுவந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும், (எ-று).

பழகிய என்பது பண்புடனும் இயையும்[5]. தான் செய்து கொள்ளும் அறமுதலியவேயன்றி முன்னோரைத் தொடங்கி வருகின்ற செல்வமும் முன் செய்த நல்வினையின் பயனாய பண்பும் இலவாம் என்பதாம்

ஊ) கவிராசர் : ஒருவன் அறம்பொருள்இன்பங்கள் செய்யாமல் சூதாடுகிறதிலே பொழுது போக்கினானாகில், அந்தச் சூது அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கடிக்குப், எ-று.

ஏ) பழைய2: அறம் பொருள் இன்பங் கல்வி முதலிய தொழிலிற் காலம் போக்காது அரசன் சூதாடுமிடத்திற் காலம் போக்குமாயின், பழகித் தொன்றுதொட்டு வந்த செல்வத்தையும் நற்குணத்தையும் கெடுக்கும்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'பழகிய செல்வம்'**

'தொன்று தொட்டுவரும் செல்வம்' **மணக்.**; 'பழகிய செல்வம்' **பரிதி.**; 'தோன்றியநாள் தொட்டு வரும் செல்வம்' **காளி**; **பரிமேல்.**; **பழைய.**

**'காலை'**

காலைப் பொழுது' **மணக்.**; 'காலையே சென்றுபுகின்' **காளி.**; 'காலை-காலம்' எனப்பொருள் கண்டு 'அறம் பொருளின்பங்கட்கு அடைத்த காலம்' என்பர் **பரிமேல்.**, **கவிராசர்.** இவற்றோடு 'கல்வி'யையும் உடன் கூறும் **பழைய வுரை** 'இளமையிலேயேபுகுவராயின்' என்பர் **கா.சு.**; 'காலையே புகுவராயின்' **சாமி.சிதம்.**; 'விடியற்காலையிலிருந்து நாள் முழுதும் ஆடினால்' **மு.கோ.**; 'வாழ்க்கையின் காலை வேளை' **இராம.**; 'இளம்பருவத்தே கழகத்திற் சேர்ந்து விடுவானானால்' **வரத.**; 'அறம் பொருளின்பங் கல்வி தேடவேண்டிய காலத்தே'

4. அடைத்த காலம் — ஒதுக்கிய காலம்
5. பழகிய செல்வமும் பழகிய பண்பு என இயைக்க.

என்பது 'பயனை மிகத்தோட வேண்டிய காலத்தே' என்ற கருத்தை வழங்குவது. 'இளமைப்பருவத்தே' என்பது வாழ்க்கையின் தொடக்கத்திலேயே' எனப்படுவது 'அதிகாலையிலே' என்பது எப்போதும் என்ற பொருளதாய் 'விடிந்தால் போதும் ஊர்சுற்றப் போவான்' என்பதொரு வழக்கத்தை நினைவூட்டுவது. இவ்வேற்று கருதி எற்றன கொள்க.

94 8. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
அருள்கெடுத்(து)
அல்லல் உழப்பிக்கும் சூது. (938)

உரைப்பகுதி :

அ) **மணக்.**: சூதுமுற்படப் பொருளைக் கெடுத்து, அதன்பின்னர்ப் பொய்யை மேற்கொள்ளப்பண்ணி, அருளுடைமையைக் கெடுத்து அல்லற்படுத்துவிக்கும், எ–று

ஆ) **பரிதி.**: சூதுபொருளைக் கெடுத்துப் பொய் சொல்விக்கும்; அருளைக் கெடுத்துத் துயரமும் செய்யும், எ–று.

இ) **பரிப்.**: முற்படப் பொருளைக் கெடுத்து அதன் பின் பொய்மையை மேற்கொள்ளுவிக்கும்: பின் அருளைக் கெடுத்து அதன்பின் அல்லல் படுத்துவிக்கும் சூது, எ–று.

சூது ஆடினார் அல்லல் உழப்பர் என்றார்: பொருள் கேடு வருவது அல்லது அருள் கெடுவது உண்டோ என்றார்க்கு அத்துணை வருமாறு இது என்று கூறப்பட்டது.

ஈ) **காளி.**: ஒருவர்க்கு முன் நின்ற பொருளையும் கெடுத்துப் பொய்ம்மையும் அவன்பால் கொளுவி,[1] வறியோர்க்கு ஒன்று ஈதல் மரபு ஒன்றுள்ள அருளினையும் கெடுத்துப், பின்னும் தமக்கு ஒண்ணா[2] அரும்துயர் உறுவிக்கும் சூதானது, எ–று.

உ) **பரிமேல்**: சூது, தன்னைப்பயின்றவன் பொருளைக் கெடுத்து பொய்யை மேற்கொள்ளப் பண்ணி, மனத்தெழும் அருளைக்கெடுத்து, இவ்வாற்றான் அவனை இருமையினும் துன்பம் உறுவிக்கும், (எ-று)

இத்தொழில்கள் மூன்றற்கும்[3] சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றம் என்பன முறையே கருவிகளாகவும் கொள்க முன்னதனான்[4] இம்மையினும், ஏனையவற்றான்[5] மறுமையினுமாம்[6].

---

1. கொளுவி - உறுத்தி
2. ஆற்ற ஒண்ணா - பொறுக்க இயலாத
3. பொருள் கெடுத்தலும், பொய் மேற்கொள்ளுதலும் ஆகிய மூன்று தொழில்கள்,
4. முன்னதனான் - பொருளைக் கொடுத்தலால்
5. ஏனயவற்றான் பொய்மேற்கொள்ளுதல் அருள் கெடுத்தலால்,
6. ஆம் - துன்பமாகும்

'பொருள் கொடுத்து' என்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு மேற்கொளீஇ என்புழி மேற்கோடலாகிய வினைமுதல்வினை.

**ஊ) கவிராசர் :** சூதாடினவனுக்கு அச்சூது செய்கிற காரியம், அவன் பொருளையெல்லாங் கெடுத்துப்போட்டு, பொய் சொல்லத் தக்கதாகப் பண்ணி, தயையும் கெடுத்து, இம்மையிலேயும் மறுமையிலேயும் துக்கடபடப் பண்ணுதலாம், எ-று.

**ஏ) பழைய 2 :** பொருள்கெடுத்துப் பொய்யை மேற்கொள்ளப் பண்ணி மனத்தின் அருளைக் கெடுத்துப்பின் இம்மை மறுமையினும் அல்லல் உழப்பச் செய்யுஞ் சூது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**பரிமேலழகர்** கூறும் கருவி, கருத்தாக்கள் இவையென்னுங் குறிப்புச் சிறந்தது.

## 94.9. உடைசெல்வம் ஊணொளி கல்விஎன் றைந்தும்
## அடையாவாம் ஆயம்கொளின். (939)

உரைப்பகுதி:

**அ) மணக்.:** உடையும், செல்வமும், உணவும், புகழும், கல்வியும் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சூதினைக் கொள்ளின் சாராவாம்,[1] எ-று,

செல்வம் பொன்னும் மணையும், பூமியும் அடிமையும் முதலாயின.

**ஆ) பரிதி.** உடைமை, செல்வம், அசனம்[2], புகழ், கல்வி இந்த ஐந்து காரியமும் சூது விரும்புவார்க்கு இல்லை, எ-று.

**இ) பரிப்.:** உணவும் ஆடையும் செல்வமும் புகழும் கல்வியும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருளும் சேரா ஆம்: கவற்றைக் கையகத்துக் கொளின், எ-று.

செல்வம்-பொன்னும் மணையும்பூமியும் அடியாரும் முதலாயின, மேல் சூது ஆடினார் இன்பு உற்று நிறைவு பெறார் என்றார். அதற்குக்காரணம் என்னை என்றாற்கு இன்பத்திற்குக் காரணம் ஆகிய இவை ஐந்தும் அடையார் என்று காரணம் கூறிற்று.

**ஈ) காளி.:** உடுப்பனவும், உடைய பல செல்வமும், உண்பனவும் ஊன்று தோற்றமும்[3], கல்விகளும் என்று இவ்வைந்தும் இவனை அணுகாவாம்; சூதின் கருவி இருந்து நின்று ஆயம் கைவிடமாட்டாமல் கைக்கொண்டு ஒழுகப் பெறுவோர்க்கு, எ-று.

---

1. சாராவாம்—அடையாவாம் 2. அசனம்—உணவு

3 ஊன்று தோற்றமும்— நிலைபெறுதற்குரிய தோற்றமும் (பலரறியத்தோன்றும் தோற்றம்)

ஆயம் கொளின் என்பது கவற்றினது ஆயம் என்றது.

இவ்வாறு நட்பின்கண் சூதும், கள்ளும் மருவற்க[4] என்பது உணர்த்தி மற்று அனைவர்க்கும் முந்துஉற மருவுதற்கு இனிய யாக்கை உறுதிக்கு வாய்ப்பு உடைமை மருந்து ஆகலான் மற்று இவற்றின் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) **பரிமேல்.:** அரசன் சூதினைத் தனக்கு வினோதத் தொழிலாக விரும்புமாயின், அவனை ஒளியுப்[5] கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் என்று இவ்வைந்துஞ் சாராவாம், (எ—று).

ஆயம் ஆகுபெயர்[6], இச்சிறப்புமுறை செய்யுள் நோக்கிப் பிறழ நின்றது[7], செல்வம்—அறுவகை உறுப்புக்கள்[8], ஊணுடை என்பன வற்றால் துப்புரவுகளெல்லாம் கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெறாமையின் இவை[9]யுளவாகா என்பதாம் இவை நான்கு பாட்டானும் சிறுமை பல செய்து அவற்றான் இருமையும் கெடுதல் கூறப்பட்டது

ஊ) **கவிராசர்:** ஒருவன் சூதை விநோதமான தொழில் என்று ஆடினானாகில், அவனுடைய பிரகாசமும், கல்வியும், செல்வமும், ஆகாரமும், உடையும் ஆகிய இந்த ஐந்து வகையும் கெட்டுப் போம், எ—று.

ஏ) **பழைய 2:** அரசன் சூதினைத் தனக்கு வினோதத் தொழிலாக விரும்புமாயின், உடையாடையுஞ் செல்வமும் உண்பதும் ஒளிநிறத்தலும் கல்வியும் என்று சொல்லப்பட்ட ஐந்துஞ் சாராவாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உடை, செல்வம், பொருள், நிலபுலம், அனைத்தையுங் கூறுவர் **பரிதி.:** இவற்றுள் 'அரசர்க்கு' என்பாரை விட 'அனைவர்க்குப்' என்பார் உரை சிறந்தது.

---

4 மருவற்க—பொருந்தற்க

5. ஒளி—அரசர் பாலுள்ள கடவுட்டன்மை, புகழ் வடிவு (சீவக., 248, நச்சி.உரை)

6. ஆயம் என்பது ஆதாயத்தினைத் தரும் சூதினை உணர்த்துதலால் காரியவாகு பெயர்.

7. சிறப்புமுறையாவது மதிப்பினால் கல்விச்சிறப்பும், கல்வியால் பொருட்சிறப்பும், பொருளால் உண்டற் சிறப்பும், உண்டலால் உடல்வலிமை உண்டாவது வாயிலாக உடையின் சிறப்பும், அமைந்திருப்பதாம். உடையில்லாதானுக்கு உண்டியும், உண்டியில்லாதானுக்குச் செல்வமும், செல்வம் இல்லாதானுக்குக் கல்வியும், கல்வியில்லாதானுக்கு மதிப்பும் இல்லையாம் என்பது

8. செல்வம்—படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆகியவை 6 உறுப்புக்கள்.

9. இவை - ஒளி, கல்ளி, செல்வம் ஊண், உடை என்பன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

**முற்றும்:**

ஓதலும் ஓதி உணர்தலும் சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும்—சூது
பொரும் என்னும் சொல்லினால் புல்லப் படுமேல்
இருளாப ஒருங்கே இவை. —அறநெறி., 147

உருவழிக்கும் உண்மை நலனழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும்—ஒருவர்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. —நளவெண்பா.,

அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு மழகும்வென் றியுந் தத்தங்
குடியு மானமுஞ் செல்வமும் பெருமையுங் குலமுமின்பமுந் தேசும்
படியு மாமறை யொழுக்கமும் புகழுமுன் பயின்றகல் வியுஞ்சேர
மடியு மான்மதி யுணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம் வையார்.
- பாரதப்.,

94.10. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற் றுயிர். (940)

உரைப்பகுதி :

**அ) மணக்.** : பொருளை இழக்குந்தோறும் பொருளைக் காதலிக்கும் சூது போல, துன்பத்தை உழக்குந்தோறும இன்பத்திலே காதலுடைத்து உயிர்; இவை இரண்டினுக்கும் அஃதியல்பு, எ—று.

**ஆ) பரிதி** .: தோற்கத் தோற்கச் சூதிலே ஆசைப்படுமாப் போலே பொருள் தோற்கத் தோற்கத் துன்பம் மிகுத்துத் தோன்றும், எ—று.

**இ) பரிப்** .: பொருளை இழக்கும்தோறும் பொருளைக் காதலிக்குச் சூதுபோலத் துன்பம் உழக்குந்தோறும் இன்பத்திலே காதல் உடைத்து உயிர்; இவை இரண்டினுக்கும் அஃது இயல்பு, எ-று

ஈண்டு உயிர்க்கு அஃது ஆகல் கூறியது எற்றுக்கு எனின், இவை இரண்டையும் ஒன்றை ஒன்றாகக் கூறின் அல்லது பிறிது உவமிக்கப்படும் பொருள் இல்லை என்றற்கு எனக்கொள்க மேல்[1] ஒன்று எய்தி நூறு இழக்கும் என்றார். அஃது என்னை? ஒரு கால் தோறறவன் பின்பு தவிரானோ என்றாற்கு இது கூறப் பட்டது

1. மேல் — 932 குறளில்

ஈ) **காளி** .: கற்றல் கேட்டல் கடன் அறிந்து ஒழுகுதல் என்னும் இவை காதலியாது சூதினால் தன் கைப்பொருள் இழத்தல் கண்டு வைத்தும் அங்ஙனம் இழத்தொறும் இயற்றல் காதலிக்கும் சூதே போலும் பெரிதும் துன்பப் உழத்தோறும் உழத்தொறும் காதல் உடைத்தாவது இச்சூது ஆடும் உணர்விலி, என்னை பாவம்; எ-று.

காதற்று என்பது காதலை உடைத்து என்றது. உயிர் என்பது இவனை ஒரு மகன் என்று கூறுதற்கு நாணி உயிர் என்றது.

உ) **பரிமேல்** : சூதாடலான் இருமைப்பயன்களையும் இழக்குந்தோறும் அதன்மேல் காதல் செய்யும் சூதன்போல், உடம்பான் மூவகைத் துன்பங்களையும்[2] அனுபவிக்குந்தோறும் அதன்மேல் காதலையுடைத்து உயிர் எ று.

சூது—ஆகுபெயர்[3]. உயிரினது அறியாமை கூறுவார் போன்று சூதனது அறியாமை கூறுதல் கருத்தாதலின் அதனை யாப்புறுத்தற் பொருட்டு உவமமாக்கிக் கூறினார். இதன் எதிர்மறை முகத்தால் சூதினை வெறுத்தொழிவானை ஒக்கும் உடம்பினை வெறுத்தொழியும் உயிரெனவும் கொள்க. இதனால் அஃது ஒழிதற்கு அருமையும் ஒழிந்தாரது பெருமையும் கூறப்பட்டன.

> **காளி** : தொறு—தான் சரர்ந்த இடத்தைப் பலவாக்கி யாண்டாண்டு என்பது பட நிற்பதோர் இடைச்சொல் இழத்தொறும் உழத்தொறும் என நின்றன. இழக்குந்தொறும் உழக்குந்தொறும் என நின்றன. "இறைத்தொறும் ஊறும் கிணறு" எனபதும் அது, "இடந்தொறும் வாரணம்" என்னும் கோவையாருள் 'தொடர்ந்தொறும்[4]' என்பதும் அது.

ஊ) **கவிராசர்** : சூதாடுகிறவனுக்குக் கைப்பொருளையெல்லாம் இழந்துபோம் அளவும் சூதாடவேண்டும் என்று விருப்பம் உண்டாயிருக்கும். அதுபோல உடம்பாலே மூவகைத்துன்பங்களையும் அனுபவிக்கும் அளவும் அந்த உடம்பின் மேலே சீவனுக்கு ஆசையுண்டாயிருக்கும் எ று.

ஏ) **பழைய 2** : பொருள் தோற்கும் தோறும் வெல்வோம் என்று காதலைத் தரும் சூதுபோல, உடம்பு துன்பம் அனுபவிக்குந்தோறும் உடம்பின்மேற் காதல் விடாது உயிர்.

---

2. மூவகைத் துன்பங்கள் — தன்னைப்பற்றியும், தெய்வத்தைப் பற்றியும், பிறவகைப் பற்றியும் வருந்துன்பங்கள்.

3. சூது என்னும் பண்புப்பெயர் அதனை உடையவனை உணர்த்தினமையால் பண்பா பெயர்

4. திருக்கோவையார் 253.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறள் உரை வேற்றுமை மிகுதியும் உடையது; பலருரைகளைப் பல்காற் பழகினும் தெளிவு அரிதிற்றோன்ற நிற்பது; அருமைப்பாடுடையது. பழைய உரைகளை உரைப்பகுதியில் காணலாம். ஆதலால் அவற்றைவிடுத்து பின்னோருரைகள் மாறுபடுகின்ற இடங்களை மட்டும் சுட்டிச் செல்லுதல் விளக்கத்திற்கு உதவியாம். ஆதலால் அவற்றை மட்டும் குறித்துப் பார்ப்போம்.

கா சு. 'இழத்தொறூஉம் சூது காதலித்நல், உயிர் உடலால் துன்பங்களை நுகர நுகர உடலைக் காதலிப்பது போலாம்' என்பர். இவ்வுரைக்கு 'ஒருவன்' என்ற தோன்றா எழுவாய் வருவித்து முடித்தலும், உடலால் உடம்பில் என்ற சில வருவித்தும் முடித்தல் வேண்டும், குறள் பொருளை உவமாகக் கூறவும் அதனியைபின்மையைத் தெரிந்து உவம உருபைப் பிரித்துக் 'காதற்றுப் போகலாம்' எனக் கூட்டி உரை கூறப்படுகிறது. பழைய உரையும் இவ்வாறே.

**சபாபதி :** இருமைப்பயன்களையும் இழக்குந்தோறும்' எனவும், சூதனே போலயெனவும் உயிரானது உடம்பால் வாதம் முதலிய மூவகைத் துன்பங்களையும் கூறுந்தோறும் அதன் மேலலேயே (உடம்பின் மேலேயே) ஆசையுடையது' என்பர்.

**குழந்தை** 'பொருளை யிழத்தொறூஉம் அதை விரும்பும் சூதாட்டத்தைப் போல, துன்பப்படுந் தோறும் இன்பத்தை விரும்புவது உயிர்' என்பர்.

**சாமி - சிதம் :** 'பொருளையிழக்குந்தோறும் அப்பொருள் மேல் ஆசையையுண்டாக்குப் சூதேபோல உயிர் துன்பம் உழத்ந்தொறூஉம் ஆசையை உடையது' என்பர்.

**சி இ** 'பொருளையிழக்கும் தோறும் விருப்பப்படும் சூதாட்டத்தைப் போல துன்பத்தின்கண் வருந்துந்தோறும் உயிர் விரும்பப்படுந் தன்மையது' என்பர்.

இராம. 'இழக்க இழக்க ஆடுகிறவனுக்கு ஆசையதிகப்படுகிற சூது போல, நோய் மிக மிக உயிர்க்கு உடல் மீதுள்ள ஆசைமிகும் என்பர்.

வரத. 'துன்பம் உழத்தொறூஉம் இன்பம்பெறலாம் என்ற எண்ணத்தோடு வாழக்கருதுவது உயிரியல்பு. அது போலப் பொருளையிழக்குந்தோறும் பின்பு வெற்றி பெறலாம் என்ற விருப்பத்தை யுண்டாக்குவது சூது என்பதாம்' என்பர்

இவ்வுரைகளில் பொருளால் வேறுபட்டவை, 'இழத்தொறூஉம்' 'காதலிக்கும்' என்பவற்றிற்கேற்ற செயப்படுபொருளும், 'சூது' 'காதற்று' என்பவற்றின் சொற்பொருளுமாம்.

'இழத்தொறூஉம்'

'பொருளை இழத்தொறூஉம்' மணக்குடவர் முதலிய அனைவரும் கூறுவர் 'இருமையின்பங்களையும் இழத்தொறூஉம்' என்பவர் பரிமேலழகரும் சபாபதியும் ஆவர்.

'சூதினைக் காதலிக்கும்' என்பவர்கள் பரிமேல்., பரிதி., கவிராசர், கா.சு., சி.இ., சபாபதி முதலானோர். 'இயற்றலைக் காதலிக்கும்' என்பவர் காளிங்கர். 'வெற்றி பின்னால் பெறலாம்' என்பர் வரத.

இவற்றுள் 'இழத்தொறூஉம்' என்பதற்கு முதலிற் பொருளையும் அடுத்து அதனாற் பெறக் கடவதாகிய இன்பத்தையும் இழக்கும் என்ற உரை சிறந்தது. அங்ஙனமே 'காதலிக்கும்' என்பதற்குப் 'பொருளை' என்பதைக் காட்டிலும் 'சூதினைக் காதலிக்கும்' என்றல் சிறந்தது. சூது-சூதன் என்றது. பண்பாகு பெயர் என்பர். சூது பண்பின் பெயரா? தொழிலின் பெயரா? சூது ஆடுதல் என்பதாலும், சூது சொக்கட்டான் துக்கமற்றார் ஆடுந்தொழில் என்ற முதுமொழி அதனைத் தொழில் என்றே குறிப்பதாலும் சூது-தொழில் என்றே கருத நேருகிறது. ஆதலால் தொழிலாகு பெயர் எனலாமே. தொழிலும் பண்பாதலின் பரிமேலழகர் இங்ஙனம் கூறினார் என்றல் அமைவுடையதாகலாம்.

சூது காதலிக்கப்படுவததேயன்றிக் காதலிப்பதன்றே என்ற ஐயம் பரிமேலழகர்க்குத் தோன்ற அதனால் ஆகுபெயராக்கிச் சூதன்-சூதாடி என்றனர். இங்ஙனமன்றி 'காதலிக்கும் சூதேபோல்' என 'வீடுமெழுகிற்று' என்பனபோலச் 'செயப்படுபொருளைச் செய்தது போலத் தொழிற்படக்கிளத்தலும் வழக்கியல் மரபாதலின்' அவ்விதிப் படி வந்ததென்றலும் இயைவதாகலாம் எண்ணித்துணிக.

## 94. சூது

| | வேண்டற்க | ஒன்றெய்தி | உருளாயம் | சிறுமை | கவறும் | அகடாரார் | பழகிய | பொருள் | உடைச்செல்வம் | இழத்தொறூஉம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 7 | 4 | 9 | 10 | 2 | 5 | 6 | 3 | 8 |
| பரிதி. | 7 | 8 | 6 | 2 | 5 | 1 | 4 | 3 | 10 | 9 |
| பரிப். | 1 | 7 | 4 | 9 | 10 | 2 | 5 | 6 | 3 | 8 |
| காளி. | 8 | 6 | 7 | 2 | 5 | 1 | 4 | 3 | 10 | 9 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

94-வது அதிகாரம் முற்றிற்று.

# 95. மருந்து

அ) மணக்.: மருந்தாவது யாக்கை நோயுறாமல் செய்யும் திறம் கூறுதல், மேல் கடியப்படுவன கூறினார் இனி கடியப்படாத உணவும் தன்னளவில் மிகுமாயின் துன்பம் பயக்குமாதலான், அதுவும் அளவறித்து உண்ண வேண்டும் என்று அதன்பின் இது கூறப் பட்டது.

ஆ) பரிதி.: மருந்தாவது ஆகாரங்களின் மிகுதியாகவே நோய் கொண்டு மருந்து கொடாமல் நியமத்திலே நடப்பது நெறி, எ-று.

இ) பரிப்.: மருந்து ஆவது யாக்கை நோய் உறாமல் செய்யும் திறன் கூறுதல், மேல் கடிய வேண்டுவன கூறினார்: இனிக் கடியப்படாத உணவும் தன் அளவின் மிகும் ஆயின் துன்பம் பயக்கும் ஆதலான் அதுவும் அளவு அறிந்து நுகர வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: பழவினையானும்[1] காரணங்களானும்[2] மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வரும்; அவற்றுள் பழவினையான் வருவன அதன் கழிவின்கணல்லது[3] தீராமையின் அவை ஒழித்து ஏனையகாரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம் கூறுகின்றார். காரணங்களாவன உணவு செயல்களது ஒவ்வாமை யாகலின் பிணிகளும் காரணத்தான் வருவனவாயின.

---

1 பழவினை — முற்பிறப்புக்களிற் செய்த கருமம்

2 காரணங்களான்—தெய்வத்தாலும் தன்னாலுமாகிய காரணங்கள்

3 அதன் கழிவின்கணல்லது - வினைகளின் நீக்கத்தில் அல்லது

ஊ) கவிராசர் : அஃதாவது - முன்செய்த பொல்லாங்குகளி-னாலேயும், உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன ஒவ்வா-தாகிய காரணங்களிலேயும் மனுஷர்க்கு வருகிற வாதம், பித்தம், சிலேத்துமம்[4] என்னும் வியாதிகளைத் தீர்க்கும் மருந்தினுடைய கூறுபாடு.

ஏ) பழைய 2 : அஃதாவது, பழவினையாலும் தற்காரணத்தினாலும் வரும் வியாதி தீர்க்கும் மருந்தின் திறங் கூறுகின்றது தற்காரண மாவது உண்பன, தொழில் செய்வன முதலிய என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் 'அற முதலிய மூவகைப் பொருளுக்கும் தடையாய்ப் பகைபோல் நின்று வருத்தும் பலவகை நோய்களையுந் தடுப்-பனவும் தீர்ப்பனவுமான பல்வேறு நலப்பொருளின் தொகுதி' என்பர்

இராம.: 'நோய் வந்தால் அதைத் தீர்க்கும் வைத்தியம். நோய் வராமல் தடுக்கக்கூடிய பொது விதிகளையே முதற்கட் கூறி நோய் வந்தால் வைத்தியர்களிடம் சென்றே தீர்த்துக் கொள்க என்பதனைக் கூறுவது' என்பர்

வரத.: 'நோயைத் தடுக்கவும், போக்கவும், உதவுவது; நோய்க் காரணங்கள் ஊழ் வினையான் வருவது, பெற்றோர்களால் வழி வழி வருவது; உணவு ஒழுக்கம், இவற்றான் வருவது என மூன்று வகை. இவற்றுள் மூன்றாவது காரணத்தான் வரும் நோய்களே மருந்தால் விலகுவன. ஏனையவற்றை 'அவ்வப்போது தனிக்கத் தான் மருந்து பயன்படும். நோயின்றி வாழ்தற்குரிய வழிகளை இந்த அதிகாரம் கூறுகிறது. தமிழில் மருந்து என்ற சொல் உண்ணும் அமுதத்திற்கும், மருந்திற்கும் பெயர். ஆதலால் உணவில் நோயில் லாமல் வாழக்கூடிய வழிவகைகளையே இந்த அதிகாரம் சொல்கிறது என்பர்.

கா,சு.: 'முன் நினைப்பில்லாமல் வருவித்துக் கொண்ட நோயைத் தீர்க்கும் மருந்து' என்பர்.

சி.இ.: 'மருந்தின் திறம், எனவும், குழந்தை 'உணவின் மீதுள்ள ஆசையால் மீதூண் விரும்பலானும், பசியின்றியே உண்பதாலும் வரும் நோய்களைத் தீர்க்கும் மருந்தின் சிறப்பு' என்பர். மற்றும் இவ்வதிகாரம் நோய்க்காரணம், வருமுன் காக்குமுறை; மருத்துவ முறை இவைகளைக் கூறுவது என்றும் கூறுவர்.

---

4 சிலேத்துமம் — கபம் சம்பந்தமான நோய்

**மு.ரா, அரு.:** கன்மவினை உடலைவிட்டு உயிர் நீங்கினால் தான் நீங்கும். உணவாலும் செய்கைகளாலும் வருவன மருந்தால் நீங்கும் ஆதலால் மருந்தின் திறங்கூறுவது இவ்வதிகாரம்' என்பர்.

இங்ஙனம் பல உரைப்பர். இவற்றுள் 'நோய் வகைகளைப் பிரித்து அது தீரும் உபாயமும், நோய் வராமலே தடுக்கும் முறையுங் கூறுவது மருந்து' என்பதே சிறந்த உரை.

பிற்கால உரைகளில் **தேவநேயர்** உரை ஏற்புடையது. **வரதராசனார்** உரையும் சிறந்தது.

95.1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (941)

உரைப்பகுதி :

அ) **மணக்.;** உணவும் உறக்கமும் இணைவிழைச்சும் தன்னுடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும், நூலோரால் எண்ணப்பட்ட வாதமும் பித்தமும் சிலேட்டுமமுமாகிய மூன்றும் நோயைச் செய்யும் எ-று.

ஆ) **பரிதி.:** ஆகாரம் மிகுந்தாலும் குறைந்தாலும் வாத பித்த சிலேட்டுமம் மிடைப்படுத்தும்[1] எ-று.

இ) **பரிப்.:** உணவும், உறக்கமும், இணை விழைச்சும் தன் உடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும் நூலோரான் எண்ணப்பட்ட வாதமும் பித்தமும் சீதமும் ஆகிய மூன்றும் நோயைச் செய்யும், எ-று.

மேல் உணவு மிகின் நோய் செய்யும் என்றார்: அதுவே அன்றி மற்று உள்ளவை மிகினும் இவை மூன்றும் குறையினும் நோய் ஆகும் என்றது.

ஈ) **காளி.:** இவ்வாறு மாறுபாடு வகுத்து உண்பது[2]; அது தானும் அளவின்கண் மிகினும் குறையினும் மருந்து நூல் வல்லோர் ஆகிய மருத்துவர் அனைத்து நோய்க்கும் அடியுரம்[3] ஆக, நூல்நெறியின் சூழ்ந்த வாதம் முதலிய மூன்று நோயினையும் செய்யும் எ-று.

1. மிடைப்படுத்தும் - மிகுவிக்கும்
2. மாறுபாடு வகுத்து உண்பது - வாத, பித்த, சிலேத்துமங்களுக்கு உள்மாறுபாட்டிற்கு ஏற்ப வகுத்து உண்ணுதல்
3. அடியுரம் - பயிருக்கு இடப்படும் கீழுரத்தைப்போல உணவு நோய்க்கு ஆதாரமான எருவாகும்

நூலோர் என்பது மருத்துவர். வளி என்பது வாதம்.

உ) **பரிமேல்.:** உணவும் செயல்களும் ஒருவன் பகுதிக்கு ஒத்த அளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், ஆயுள்வேதப்[4] உடையாரால் வாதம் முதலாக எண்ணப்பட்ட மூன்று-நோயும் அவனுக்குத் துன்பம் செய்யும், (எ-று)

நூலோர் எண்ணிய எனவே, அவர் அவ்வாற்றான் வகுத்த வாதப் பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதி[5] என்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற்றிற்கு உணவு ஒத்தலாவது சுவை வீரியங்களானும்[6] அளவானும் பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது மனம் மொழி மெய்களால் செய்யும் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே ஒழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல் செயின், அவை தத்தம் நிலையின் நில்லாவாய் வருத்தும் என்பதாம். காரணம் இரண்டும் அவாய்நிலையான் வந்தன[7] முற்றும்மை விகாராத்தால் தொக்கது. இதனால் யாக்கைகட்கு இயல்பாகிய நோய் மூவகைத்து[8] என்பதூஉம் அவை துன்பம் செய்தற்குக் காரணம் இருவகைத்து[9] என்பதூஉம் கூறப்பட்டன. இன்பம் செய்தற்குக் காரணம் முன்னர்க் கூறுப.

**காளி.:** மூன்றும் என்பது மூன்று என முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

ஊ) **கவிராசர்.:** வாதம், பித்தம், சிலேத்துமம் என்று சொல்லப்பட்ட மூன்றும் அதிகமானாலும் குறைச்சலாளாலும் உபத்திரவப்படுத்தும், எ-று

ஏ) **பழைய2.:** உணவுஞ்செயலும் ஒருவன் பகுதிக்கு ஒத்த அளவின்றி மிகுந்தாலும் குறைந்தாலும் ஆயுள் வேதமுடையவர் எண்ணிய வாத பித்த சேத்துமம்[10] என்னும் மூன்றும் அவனுக்கு நோய் செய்யும்.

---

4 ஆயுள்வேதம் - மருத்துவ நூலுக்குள்ள ஆரியப்பெயர்

5. ஐப்பகுதி - சிலேட்டுமம்

6 சுவை, வீரியங்களானும் அளவானும் - உணவின் சுவை, வன்மை அளவொத்தல்

7. மூன்றும் என்னும் இனைத்தென்றறி பொருளில் வந்த முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது

8. மூவகைத்து - வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்று வகை

9. இருவகைத்து – உணவு, செயல் என்ற இரண்டு வகை

10. சேத்துமம் - சிலேத்துமம்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

"நூலோர் எண்ணி வளிமுதலா மூன்று மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்பது குறள் கிடந்தவகையான் பொருள் கொள்ளும் முறை! இதனாற் போந்த கருத்து வாத—பித்த—சிலேட்டுமங்கள் தத்தம் அளவில் நில்லாது மிகுதலும் குறைதலுமே நோய்க்குக் காரணம் என நோய் முதல் நாடும் முறையை உணர்த்துவதாம். கவிராசர் கருத்தும் இது,

**மணக்குடவர்** உரை நோய்முதல் வாதபித்த சிலேட்டுமம் மிகுதிக் குறைவால். அவற்றின் காரணம் உணவு உறக்கம் இணைவிழைச்சு இவற்றின் மிகுதியும் குறைவும் என்கிறது. இது வள்ளுவர் நோய்முதல் மட்டும் சொல்ல இதுநோய் முதலுக்கு முதல்சொல்கிறது.

**பரிப்பெருமாள் உரை** : மணக்குடவரைக்கு அரண் செய்வ-தாக உணவின் மிகுதி குறைவேயன்றி உறக்கம் இணை விழைச்சாதிகளும் வாத முதலியவற்றை மிகவும் குறையவும் செய்யும். அதனால் நோய் உண்டாம்' என்பது.

**பரிதி** : 'வாதபித்த சிலேட்டுமங்கள் தன்னிலையில் - தம்மளவில் நிற்காமல் மிகுதலும் குறைதலுமே நோயின் காரணம்' எனக் கூறினர். வாதபித்த சிலேட்டுமங்கள் மிடைப்படுத்தலே நோயாவது நோய் என்பது இவற்றின் வேறன்று என்பதைக் கருதிவாளா விடுத்தனர், ஆதலால் இவருரை ஏற்புடையதன்று எனல் தகாது.

**காளிங்கர்** 'நோய் செய்வன வாதபித்தங்களின் மிகுதியும் குறையுமே' என ஆசிரியர் வழி நின்று வரையறுத்துணர்த்திக் காரணத்தின் காரணத்தைச் சொல்லாது விட்டார்.

**பரிமேலழகர்** : 'வாதம் முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பம் செய்யும் வாத முதலிய மூன்றையுமே நோய்' என்றார். இம்மூன்றும் உடம்பிலிருந்து உடம்பு வளரவும் வாழவும் துணை செய்யம் நற்பொருள்களே; அவற்றையே நோயெனல் தகாது. இவை மூன்றும் எவ்வெவ்வகையில் உடம்பிற்கு உதவுகின்றன என்பதைத் தேவநேயர் எடுத்துக் காட்டியுள்ளமையும் இணைத்து எண்ணுக. உணவு முதலியவற்றால் மிகினும் குறையினும் நன்மை செய்யும் அவைகளே நோயையுண்டாக்குகின்றன என்பதையுன்னிப் பரிமேலழகர் கருத்தும் பிற விளக்கங்களும் ஏற்புடை-யதன்மையைத் துணிக.

**தேவநேயர்** : 'வாதத்தின் தொழில்கள் பேச்சும் மூச்சும் உட்பொருளிட மாற்றமும், வெளியேற்றமும், தனித்தும் பிற தாதுக்களோடு கூடியும் நிகழ்த்துதல். உணவைச் செரிக்கச் செய்வது பித்தநீர்; தசைநார்களின் மழமழப்பான இயக்கத்திற்கு உயவு நெய் போலப் பயன்படுவது கோழை என வாத முதலிய மூன்று நோயின்மைக்குக் காரணங்காட்டுவர்.

**இராம. பரிமேலழகர்** கருத்தை மறுத்து 'வளி-காற்று' எனப் பொருள். 'காற்று நீர் உணவு என்ற மூன்றும் அளவில் மிகாமலும் குறையாமலும் இருப்பின் நோயணுகாது' என விரிவான விளக்கந் தந்து அரண் செய்வர்.

'தருமன் முதலிய ஐவர்', 'பிரமன் முதலிய மூவர்' எனின் பாண்டவர்களையும், மும்மூர்த்திகளையும் குறிக்குமேயன்றித் தருமன் என்பது இயமனுக்கும் ஒரு பெயர் ஆதலால் யமன் காலன், காலதூதன் என்ற மூவரையும் எனல் அறிவுக்கு ஏலாதது போல வளி முதலாமூன்று மருத்துவ நூலிற் கூறிய வாதபித்த கோழைகளையே குறிக்குமன்றியும் காற்று, உணவு, நீர் இவற்றை யுணர்த்தும் எனல் சிறிதும் சாலாது என்க. பிற்கால உரைகளும் முன்னோர் கருத்தை ஒட்டிச் செல்வன ஆதலால் தேவநேயர் உரையே சிறந்தது

ஒ) ஒப்புமைப்பகுதி :

**நோய்**

நோய்க்கிடம் கொடேல், -ஆத்தி., 76

ஓ) மேற்கோள்பகுதி :

**பெருங்.** மாட்டெறிந்தொழுகல் என்னும் தந்திரவுத்திக்கு மேற்கோள் -வீர. 180,

95. 2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய(து)
அற்றது போற்றி உணின். (942)

உரைப்பகுதி :

**அ. மணக்.** : யாக்கைக்கு மருந்தென்பது ஒன்றுவேண்டா; குற்றமற முற்காலத்து அருந்திய உணவு அற்றமை அறிந்து பாதுகாத்து உண்பனாயின், எ-று.

இஃது இவ்வாறுசெய்யின் மருந்து தேடவேண்டாம் என்றது.

**ஆ) பரிதி .:** செரித்தால் சாமம் பார்த்து அன்னம் இரண்டு கூறும் தண்ணீர் ஒரு கூறும் வாயுசஞ்சரிக்க ஒரு கூறும் வாதபித்த சிலேட்டுமத்திற்கு வேண்டாக்கறியை விட்டு அசனம் பண்ணக்கடவன், எ—று

**இ) பரிப் :** மருந்து ஒன்றும் வேண்டா ஆம் உடம்பிற்கு : முன் காலத்து அருந்திய உணவு அற்றமை அறிந்து நுகர்வது பாதுகாத்து நுகர்வான் ஆயின், எ — று.

இவ்வாறு செய்வன் ஆயின் மருந்து தேட வேண்டா என்றது.

**ஈ) காளி .:** 'வேண்டாதாம்' 'அற்றமை' பாடம்.

தாம் அங்ஙனம் உண்பது இங்ஙனம் அற்றமை குறிக்கொண்டு ஒழுகப்பெறின், உறுவது ஓர் நோய் இன்மை தமது யாக்கைக்கு இனி, வேறு மருந்து ஒன்று நாவினால் சொல்லலும் வேண்டாதாய் விடும், எ-று.

**உ) பரிமேல் .:** ஒருவன் முன் உண்டது அற்றபடியைக் குறிகளான்[1] தெளிய அறிந்து பின் உண்ணுமாயின் அவன் யாக்கைக்கு மருந்து என்று வேறு வேண்டாவாம், (எ-று).

குறிகளாவன யாக்கைநொய்ம்மை[2] தேக்கின் தூய்மை[3] கரணங்கள் தொழிற்குரியவாதல்[4], பசிமிகுதல் எனஇவை முதலாயின. பிணிகள் யாக்கைய வாகலின், 'யாக்கைக்கு' என்றார். உணின் என்பது அதன் அருமை தோன்ற நின்றது.

**ஊ) கவிராசர் :** ஒருவன் முன்சாப்பிட்ட வஸ்துக்கள் செரித்ததைக் குறிப்பால் அறிந்து, பிறகு சாப்பிட்டால், அவனுக்கு மருந்து என்கிறது வேண்டாம், எ-று,

**ஏ) பழைய 2:** 'அற்றமை போற்றி' பாடம்

ஒருவன் முன் உண்டது செரித்தபடி அறிந்துபின் உண்ணுமாயின் அவன் யாக்கைக்கு மருந்துண்ண வேண்டுமென்று சொல்ல வேண்டா.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மருந்துகளைப் பற்றியும் உண்ணுகிற முறை, விளையும் பயன், நோய் இலக்கணம், நோய் கண்டார் இயல்பு, இவைகளைக்

---

1. குறிசுள் - நோபின் அடையாளங்கள் 2. யாக்கை நொய்ம்மை - உடல் மெலிவு
3. நோக்கின் தூய்மை - பார்வையின் நிறைவு
4. காரணங்கள் - தத்தம் தொழிற்குரிய வன்மையைப் பெறுதல்

குறிப்பன மருத்துவநூல்கள். அவைகளைப் போலக்கூறாமல் விரி-வஞ்சி மருந்தே வேண்டாமைக்கு உரிய வழிவகைகளைக்குறிப்பர் ஆசிரியர் என்க.

பழைய உரைகளில் வேறுபாடில்லையாயினும் **பரிதியார்** உரை உண்ணும் முறைகளை மட்டும் உணர்த்துகிறது. **தேவநேயர்** உரை காலத்தையும் நன்குவிளக்குகிறது. இயற்கை வைத்திய முறையில் மருந்தாவனவற்றையும் விளக்குகிறது. **வரதராசனார்** உரை உணவையறிதல்—உணவின் அளவு, தன்மை, பயன் அறிதல், அற்றது அறிதல்-பசிக்குறியால் உடல் தெளிவு, வலிவு, மெலிவுகளை அறிதல் முதலியவற்றையும் உணர்த்தும்.

உரைகள் விளக்கங்களாலும் பாகுபடுத்து முறையினாலும் சிறிது வேறுபடினும் கருத்தால் ஒத்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**முற்றும் ;**

மனமெய்ம் மொழிகள் வருந்தாமல் வகுத்துத் தொழிலை மாறுபடா
இனிய உணவை மிகப்பசித்த இடத்தின் உடற்குப் பொருந்த உ்ணின்
முனிசெய் பிணிகட் கிடனின்றாம் முறைகள் பிறழ்ந்து வந்துவிடின்
புனித முடைய வயித்தியரால் வழிநின்ற வற்றைப் போக்குகவே.

— விநா. அரசி., 142

95.3 அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. (943)

உரைப்பகுதி:

**அ) மணக்.:** முன்பு உண்டது அற்றால்[1], பின்பு உண்ணுங்கால் இத்துணை அறும்[2] என்று தான் அறித்து உண்க; அஃது உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்கு உரியவழி, எ-று.

**ஆ) பரிதி.:** முன்னாட்கொண்ட அசனம் செரித்தது பார்த்துத் தன் பசியறிந்து உண்க. நோயற்றுச் சிறிது நாள் உடம்பு சுகமாயிருக்க வேண்டில், எ-று.

**இ) பரிப்.:** முன்பு உண்டது அற்றால் பின்பு உண்ணுங்கால் இத்துணை அறும் என்பதூஉம் தான் அறிந்து உண்க: அஃது

1. அற்றால்—சிரணித்தால்
2. அறும்—சிரணிக்கும்

உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்கு உரிய வழி அது ஆம், (எ-று).

மேல் அற்றது போற்றி உண்க என்றார்: இது போற்றுதல் ஆவது அளவு அறிந்து உண்டல் என்று கூறப்பட்டது.

**ஈ) காளி.:** ஒருவன் தான் முன்னம் உண்டது வெந்து அற்றால் அவ்வறவுதான் பொய்ப்பசியோ மெய்ப்பசியோ என்று சிறிது தாழ்க்க நின்று, ஓர்ந்து தெளிந்த பின்னர் உண்க; அங்ஙனம் உண்ணவே அது கொண்டு தன் உடம்பு நிலைதளராமல் உறுதிக்கண்நெடிது கொண்டு செலுத்துவது ஓர் நெறியினைப் பெறலாம், எ-று.

**உ) பரிமேல்.:** முன் உண்டது அற்றால் பின் உண்பதனை அறுமளவு அறிந்து அவ்வளவிற்றாக[3] உண்க. இறப்பவும்[4] பலவாய பிறயாக்கைகளில் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுடயாக்கையைப் பெற்றான் அதனை நெடுங்காலங்கொண்டு செலுத்துநெறி அதுவாகலான், (எ-று).

இம்மை மறுமை வீடுபேறுகள் எய்தற்பாலது ஈது ஒன்றுமே யாதலின் 'உடம்புபெற்றான்' என்றும், அது நெடிதுநின்றுழி அவை பெருகச் செய்துகொள்ளலாமாகலின் 'நெடிதுய்க்குமாறு' என்றும் கூறினார். பெற்றால் என்று பாடம் ஓதுவாரும் உளர்[5].

**ஊ) கவிராசர்.:** முன் சாப்பிட்டது செரித்தபிறகு மட்டாகச் சாப்பிட்டால், அவன்சரீரம் வியாதியில்லாமல் நெடுநாள் நிற்கும், எ-று)

**ஏ) பழைய 2:** முன்னுண்டது செரித்தாற் பின் உண்பதனைச் செரிக்கும் அளவு அறிந்து உண்க. அப்படி அறிந்து உண்பானாகில் உடம்பு பெற்றான் அவ்வுடம்பினை நெடுங்காலம் வைத்திருப்பான்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

"அவ்வறவு தான்" என்ற காளிங்கர் உரை அவர் கண்ட பாடம் அளவறிந்து என்பதன்று; 'அறவறிந்து' என்பதாகலாம்; 'அஃது உடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு பெறலாம்' எனப் 'பெறலாம்' என்ற வினைமுற்றுவருவித்து முடிப்பதையும் பெற்றான் பெறலாம் என ஆண் பாலுயர்திணைப் பெயர் செய்யுமென் முற்றுக் கொண்டு முடிந்ததையும் உணர்ந்து 'பெறலாம்' என்பது 'பெற்றான்' என்ற மூலத்தின் சொற்பொருள் அன்று என்பதையும் தெளிக.

---

3. அவ்வளவிற்றாக—சீரணிக்கும் அளவினையுடையதாக
4. இறப்பவும்—மிகவும்
5. இவ்வாறு பாடங் கொண்டவர் பரிதியார்

இராம. பொதுவாகக் கருத்தில் ஏனையுரைகளோடு மாறுபட்டில ராயினும் 'நெடி + துய்க்குமாறு' எனப்பிரித்து 'அவ்வுடலை நீண்ட காலம் அனுபவிக்கும் வழி' என்றுரைப்பர். அங்ஙனம் பிரித்தல் இலக்கண மரபுமன்று. ஆட்சியும் இல்லாதது. அங்ஙனமே 'அற்றால்' என்பதற்கு 'அப்படித்தான் என்பதும்' என்கின்றனர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

**அற்றால் அளவறிந்து உண்க:**

பாலோடாயினும் காலமறிந்துண். —கொன்றை, 50

**முற்றும்:**

நொறுங்கத் தின்றவன் நூற்றாண்டிருப்பான். —பழ

ஓ) மேற்கோள்பகுதி:

**தெய்வச்.:** ஏனெயெச்சம் வினைமுதலானும் என்ற சூத்திரத்தில் அன்னமரபினால் கொள்ளப்படுவனவற்றிற்கு 'அற்றால் அளவறிந்து உண்க' என்பதை மேற்கோள் காட்டுவர். —தொல் சொல் ,225

**நச்சி.:** வினையெஞ்சுகிளவியும் வேறுபல் குறிய என்பதனால் ஆல் ஈறாதலுக்கு 'அற்றால் அளவறிந்து உண்க' என்பது மேற்கோள். —தொல். சொல்.,230

**மயிலை .:** வான்பான்பாக்கு இன வினைஎச்சம்; 'இன என்றதனால் 'அற்றால் அளவறிந்து உண்க' என்றற் றொடக்கத்தனவும் இவ்வாய்பாடுகளிலே அடக்கிக் கொள்க! என்பர்.

— நன்., 342

**சங்கர .:** ஆய்தமாகிய சார்பெழுத்து உயிர்போல அலகுபெற்றதற்கு மேற்கொள். - நன் , 60

**வினையெச்சவாய்பாடுகள் உணர்த்தும் சூத்திர உரையில் 'இன' என்றமையால் 'அற்றால் அளவறிந்து உண்க' எனச் செயின் என்னும் வாய்ப்பாடு போல் எதிர்காலம் காட்டுவனவும் கொள்க என்பர். —நன்.,343.**

95.4. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. (944)

உரைப்பகுதி :

அ) மணக். : முன்பு உண்ட உணவு அற்றதனை அறிந்து, பின்பு அறுமளவும் கடைப்பிடித்து, உண்ணுங்கால் ஒன்றினோடு ஒன்று மாறுகொள்ளாத உணவினை மிகவும் பசித்து உண்க, எ-று.

மாறுகோடலாவது நெய்யும் தேனும் இனியவாயினும் தம்மில் அளவொக்குமாயின் கொல்லும் அது போல்வதாம். இஃது உண்ணுங் கால் அளவறிந்துண்ணலேயன்றி மாறற்ற உணவை உண்ண வேண்டும் என்றது.

ஆ) பரிதி : அசனம் செரித்ததும் அசனம் பண்ணினவன் நோய் அறுப்பான், நித்தியம் ஒருபொழுது அசனம் பண்ணிவருவானாகில் அவனுக்கு வியாதியில்லை, எ-று.

இ) பரிப் : முன்பு உண்ட உணவு அற்றதனை அறிந்து பின்பு அறும் அளவும் கடைப்பிடித்து உண்ணுங்கால் ஒன்றினோடு ஒன்று மாறுகொள்ளாத உணவினை மிகவும் பசித்து உண்க, எ-று.

மாறுகோடல் ஆவது நெய்யும் தேனும் இனிய ஆயினும்[1] தம்மில் அளவு ஒக்கும் ஆயின் கொள்ளும் : அது போல்வன.

இஃது உண்ணுங்கால் அளவு அறிந்து உண்ணலே அன்றி மாறு அற்ற உணவை உண்ண வேண்டும் என்றது

ஈ) காளி. : தான் முன் காலத்து உண்டது அற்றது அறிந்து பின்னும் தான் உண்ணும் முறைமைக்கு மாறு அல்லவற்றை முதிரப் பசித்தும் அரதி[2] அறவே உண்க எ-று.

உ) பரிமேல். : முன் உண்டது அற்றபடியை அறிந்து, பின் மிகப்பசித்து உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக் கொண்டு[3] உண்க.

---

1. "தேனெய் கூட்டி யுண்டிறந்தோ னொருவ னுலகினில்வந் தீது தீதென் றுரைத்தல் ஒக்கும்" - சிவஞான சித்தியார் சௌத்-மதம்றுத்தல்,செய்.3.
2. அரதி — வெறுப்பு
3. 'குறித்துக்கொண்டு' என்றும் பாடமுண்டு. குறிக்கொண்டு—திட்டமிட்டு, கவனித்து

அற்றதறிந்து என்னும் பெயர்த்துரை[3] அதனை யாப்புறுத்தற்[4] பொருட்டு உண்டது அற்றாலும் அதன்பயனாகிய இரதம்[5] அறாதாகலான் அதுவும்[6] அறல்வேண்டும் என்பார். 'மிகப்பசித்து[7] என்றார். பசித்தல் வினை ஈண்டு உடையான்மேல் நின்றது.[8] மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும்[9] காலவியல்போடு மாறுகொள்ளாமையும் சுவை வீரியங்களான் தம்முள் மாறுகொள்ளாமையும்.[10] அவையாவன : முறையே வாத பித்த ஐகளானாய பகுதிக்கு அடாதவற்றைச்[11] செய்வனவாதலும், பெரும்பொழுது[12] சிறுபொழுது[13] என்னும் கால வேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து[14] நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக்குறிக்கொள்ளாது[15] மனம்பட்டவாற்றால் துய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், 'கடைப்பிடித்து' என்றார்.

ஊ) **கவிராசர் :** முன்சாப்பிட்டது செரித்ததை அறிந்து, பிறகு பசிக்கிற போது உண்ணுகிறதிலே, தன் சரீரத்திற்கு மிதமான பதார்த்தங்களைச் சாப்பிடவேணும், எ-று.

ஏ) **பழைய 2:** முன்உண்டது செரித்தபடி அறிந்து, மறவாது கடைப்பிடித்து, வயிற்றுக்கு மாறுகொள்ளாத உணவுகளை மிகவும் பசித்த பின் உண்க.

---

4. பெயர்த்துரை — மட்டும் உரைத்தல் 5. யாப்புறுத்தல் — வலியுறுத்துதல்

6. இரதம் — சுவை 7. அதுவும் — இரதமும்

8 'துவரப்பசித்து' என்றும் பாடமுண்டு.

9. பசித்து என்னும் சினைவினை பசித்து உடையனாகிய முதலின் மேல்நின்றது

10 உண்பான் பகுதியோடு மாறுகொள்ளுதல் — உண்பவன்வாதபித்த சிலேத்துமங்களோடு உடம்புக்கும் பொருந்தாத உணவை உண்ணுதல்,

11 சுவை வீரியங்களான் தம்முள்மாறுகொள்ளுதல்—சுவையாலும் உண்ணும்பொருள்களின் வன்மையாலும், மாறுகொள்ளாதிருத்தல். எ-கா : தேனையும், நெய்யையும் அளவொக்கக் கலந்துண்டல் அது உயிர் கொல்லியாகும்.

12 அடாதவற்றை—பொருந்தாதவற்றை

13 பெரும்பொழுது—கார், கதிர், முன்பனி, பின்பனி, வேனில்

14 சிறுபொழுது — மாலை, யாமம், வைகறை, ஏற்பாடு, காலை, நண்பகல்

15 'தம்முள் ஒத்து' என்றும் பாடமுண்டு

16 'குறித்துக் கொள்ளாது' என்றும் பாடமுண்டு,

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**'கடைப்பிடித்து'** பின்பு அறுமளவும் கடைப்பிடித்து' என்னும் **மணக்குடவர்** உரை. 'பசித்தபின் உண்ணும் ஒருவன் பின்பு எவ்வளவு உண்டால் செரிக்குமென்ற அளவையையும் கடைப் பிடித்து' என்னும் கருத்தினது. இதனை இவர் பின் எழுதும் 'உண்ணுங்கால் அளவறிந்துண்ணல்' என்ற விளக்கத்தாலும் கடைப் பிடித்தல்-அளவு கடைப்பிடித்தல் என்பதே எனத்துணியலாம்.

**பரிதியுரை** 'ஒருபோது யோகியே' என்ற மரபு பற்றிய கருத்துரை

**காளிங்கர்** 'பின்னும் தான் உண்ணு முறைமைக்கு மாறு அல்லவற்றை' என்பதைக் 'கடைப்பிடித்து' என்பதன் பொருளாகக் காட்டுவர். **பரிமேலழகர், தேவநேயர்** 'குறிக்கொண்டு' என்பர். இப்பகுதிக்கு இவர் தரும் விளக்கவுரை மிகச்சிறப்பானது. **குழந்தை** 'கடைப்பிடித்து உண்க' எனக்கூட்டி 'உறுதியாக' எனப்பொருள் உரைப்பர். **வரத.** 'உண்ண வேண்டிய உணவில் அளவு முதலாயினவற்றை 'உறுதியாக கடைப்பிடித்து' என்று உரை கண்டு 'உணவின் சுவை கருதாது, அதன் சத்தையும் அதனால் பெரிதும் நன்மையையும் உறுதியாகக் கருதி' என்பர்.

**இராம:** 'மாறல்ல கடைப்பிடித்து' எனக்கூட்டி 'மாறுபாடில்லாத உணவுகளை ஆராய்ந்து நிச்சயப்படுத்திக் கொண்டு' என்பர்.

இவற்றுள் 'கடைப்பிடித்து' என்பதை நினைக்காமலே பொருளற்ற தொடராக மறந்தார் நீங்க பொருள் செய்தவர்களில் 'அறும் அளவு கடைப்பிடித்து' என்னும் உரையும் 'மாறற்றவை-களை ஆய்ந்து உறுதி செய்து கொண்டு' என்ற உரையும் அவற்றின் கொண்டு கூட்டும் ஏற்புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

**துவரப் பசித்து துய்க்க :**

மீதூண் விரும்பேல்.

—ஆத்தி, 91

ஓ) மேற்கோள்பகுதி :

**மயிலை.:** கடைப்பிடி என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள்.

—நன்., 451

95.5. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு. (945)

உரைப்பகுதி:

**அ) மணக்.:** சுவையும் வீரியமும் மாறுபாடில்லாத உணவை நீக்கி உண்பானாயின், தன்னுயிர்க்கு வரும் இடையூறு இல்லை, எ.று.

மாறுபாடு-பலாப்பழந் தின்றால் சுக்குத்தின்றல்.

**ஆ) பரிதி.:** தன் சரீரத்திற்கு மாறுபாடு இல்லாத உண்டியை விரும்பின் ஊறுபாடில்லை உயிர்க்கு, எ-று

**இ) பரிப்.:** சுவையும் வீரியமும் மாறுபாடு இல்லாத உணவை நீக்கி உண்பான் ஆயின் தன் உயிர்க்கு வரும் இடையூறு இல்லை, எ-று.

மேல் மாறுபடாத உணவை உண்ண என்றார்: இதனானே எவ்விடத்தும் மாறு ஆகாமை வருதலின் அஃது எய்தியது விலக்கிச் சுவையும் வீரியமும் மாறுபட்டன நுகர வேண்டும் என்றது. அஃதாவது பலாப்பழம் தின்றால் சுக்குத் தின்றல்.

**ஈ காளி.:** கைப்பு, புளிப்பு, தித்திப்பு, காழ்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்று சொன்ன அறுவகைச் சுவையும் இப்படி மாறுபட வகுத்து உண்ணாது ஒருபடியே உண்ணும் சில்சுவை உண்டியை[1] ஒழித்து மருத்துநூல் கூறியாங்கு உண்ணப்பெறின் ஓர் இடையூறுபடுதல் இல்லை மக்கட்கு, எ-று.

**உ) பரிமேல்.:** அம்மூவகை மாறுகோளும்[2] இல்லாத உணவைத் தன் உள்ளம் வேண்டிய அளவினானன்றிப்[3] பிணிவாரா அளவினால் ஒருவன் உண்ணுமாயின் அவன் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல் உண்டாகாது, (எ-று).

உறுவதனை ஊறு என்றார்; அஃது இன்பத்திற் செல்லாதாயிற்று இல்லை என்பது தொடர்பாகலின்[4]. துன்பமுறுவது உயிரேயாதலின் அதன்மேல் வைத்துக் கூறினார். மாறுபாடில்வழியும் குறைதல் நன்று என்பதாம். இவை நான்கு பாட்டானும் உண்ணப்படுவனவும், அற்றதளவும், காலமும், பயனும் கூறப்பட்டன.

---

1 சில்சுவை உண்டி—சிலவாகிய சுவை வாய்ந்த உணவு

2 மாறுகோளும்—மாறுபாடு

3. தன்னுள்ளம் வேண்டிய அளவினானன்றி—மனவிருப்பம்போல் அல்லாமல்

4 உறு என்ற முதனிலைத் தொழிற்பெயர் முதல்-நீண்டு துன்பத்திற்குப் பெயராயிற்று ஊறு என்பது துன்பம் இன்பம் என இரண்டையும் உணர்த்துமாயினும் ஈண்டு இல்லை என்ற முடிக்குஞ் சொல்லால் துன்பத்தையே உணர்த்திற்று.

**ஊ) கவிராசர் :** வாதம், பித்தம், சிலேத்துமம் என்னப்பட்ட மூவகையும் அதிகப்படாத வஸ்துக்களை, தன் மனது வேண்டியபடியல்லாமல், வியாதி வாராதபடிக்குச் சாப்பிட்டால், அவனுக்கு வியாதிகளாலே துக்கமும் வாதையும்[5] வாரா, எ—று.

**ஏ பழைய2:** வாத பித்த சிலேத்துமங்கள் மாறுபாடில்லாத உண்டியை மிகாமல் மறுத்துண்பானாயின் அவன் உயிருக்கு இடையூறு வாராது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

**மணக்குடவர் உரை** 'சுவையும் வீரியமும் மாறுபாடில்லாத உணவை நீக்கி' உண்பானாயின் எனவே மாறுபட்ட உணவை உட்கொள்வானாயின் என்ற பொருளைத் தந்து **வள்ளுவர்** கருத்தொடு மாறு கொள்ளும்.

**பரிப்பெருமாள்** 'எவ்விடத்தும் மாறு ஆகாமைவருதலின் அஃது எய்தியது விலக்கிச் சுவையும் வீரியமும் மாறுபட்டன நுகர வேண்டும்' என்பதாய் இக்கருத்தை வலியுறுத்துவர்.

**காளிங்கர்:** 'அறுவகைச் சுவையுள் ஒன்றனையே எஞ்ஞான்றும் உண்ணாது கலந்து மாறி மாறி உண்ணின்' என்பது படவுரைப்பர். இது ஒரே சுவையுணவையுண்ணுதலை ஒழித்துக் கலப்புணவை வலியுறுத்துகிறது. கலப்புணவு உடற்கு நன்மையாவது வலிவு தருவது ஆனால் சுவைக்கலப்பைக் கருதுகிறார். சுவையைச் சொல்லுவதால் தன்னினமுடித்தலான் வீரியக் கலவையும் கொள்ளில் நலமாகும்.

**பரிமேலழகர்** 'மாறுபாடு முன் 944ம் குறளிற் கூறப்பட்ட காலம் பற்றியும், பகுதி பற்றியும், சுவை வீரியங்கள் பற்றியும் மாறுபடுகை. மறுத்து உண்ணின்—தன் மனம் விருப்பிய அளவன்றிப் பிணிவாரா அளவு அறிந்துண்ணின்' என்பர். இவர் நோக்கின்படி மாறுபடாத சுவையுணவு வீரிய உணவையும் விருப்பம் போல விலாப்புடைக்க உண்ணாமல் பிணிவாரா அளவு அறிந்து உண்ணின் என்பது. கா.சு. கருத்தும் இதுவே.

**கவிராசர்** 'வாதபித்தங்கள் மாறுபடாவகை விருப்பம் போல உண்ணாமல் வியாதி வராதபடி உண்டு' என்பர். **பழைய உரையும்** அப்படியே,

**தேவநேயர்** 'உடற்கூற்றுக்கு மாறுபடாத உணவைக் குறைத்துண்பானாயின்' என்பர்.

---

5. வாதை — துன்பம்

**வரத.:** 'கால நிலைக்கும், உடல் நிலைக்கும் பாறுபடாத உணவை உடலின் வளர்ச்சியளவு அறிந்துண்ணின்' என்பர்.

**இராம.:** உண்டி + மறுத்தல் — உண்டெனச் சாப்பிடும் ஆசையை விலக்கல்.

இவற்றுள் **'மாறுபாடில்லாத' 'மறுத்துண்ணின்'** என்ற இருதொடர்களே கருத்து வேறுபாடு உடையவை. 'தன்சரீரத்திற்கு மாறுபாடில்லாத' என்பது செய்ப்படுபொருள் வருவித்துரைத்தலால மாறுபட்டவை சுவையும் வீரியமும் 'அறுவகைச் சுவைகளில் மாறுபாடில்லாதவை;வாத முதலிய மூன்றற்குமாறுபாடில்லாதவை; காலம் பகுதி, சுவை யிவற்றான் மாறுபாடில்லாதவை என மாறுபடுகின்றனர் 'மறுத்து' என்பது 'நீக்கி', 'விலக்கி', ஒழித்து என்றெல்லாங் கூறுவர்

இவற்றுள் சுவையானும் வீரியத்தானும் கலந்த உணவினை விரும்பி மிகுதியாக உண்ணாமல் மிகாமல் மறுத்து என்னும் பொருள் சிறந்தனவாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

லங்கணம் பரம ஔஷதம். —பழ,

95.6 இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இறையான்கண் நோய். (946)

உரைப்பகுதி :

**அ) மணக்.:** அறும் அறவறிந்து உண்பவன்கண் இன்பம்போல உண்டாம்; மிக உண்பான்கண் நோய், எ-று.

**ஆ) பரிதி.:** தீபாக்கினி அறுந்து அசனம் பண்ணுவாரிடத்தில் இன்பம் போலே நின்றது, வெகுவான் இரைதினனும் பேரிடத்திலே நோய், எ-று.

**இ) பரிப்.:** அறும் அளவு அறிந்து உண்பவர்கள் இன்பம் போல உண்டாம்: மிக உண்பான்கண் நோய், எ-று.

மேல் கூறியவாற்றான் உண்ணாதாற்கு நோய் உண்டாம் என்றது.

**ஈ) காளி :** 'இழிபறிந்து' பாடம்.

அளவின்கண் இழிவது ஆகிய இழிவு அறிந்து உண்போன் யாவன்? அவன்மாட்டு இன்பம்போல

இனிது நிற்கும்; யாவர் மாட்டு யாது எனின்? அங்கி அளவு அறியாத மிகுபேரிரையானிடத்து நோயானது, எ-று.

உ) பரிமேல் .: அக்குறைதலை நன்று என்றறிந்து அவ்வாறே உண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலைநிற்குமாறுபோல், மிகப் பெரிய இரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும்.

அவ்வாறே உண்டல்-உண்ணலாமளவின் சிறிதுகுறைய உண்டல் இன்பமாவது வாதமுதலியமூன்றும் தத்தம் நிலையில் திரி-யாமையின் மனமொழிமெய்கள் அவன்வயத்தவாதலும் அதனான் அறமுதலிய நான்கும் எய்தலுமாம். இரையை அளவின்றி எடுத்து அதனான் வருந்தும் விலங்கொடு ஒத்தலின் இரையான் என்றார். விதியெதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு.

காரி .: விதி, எதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு.

ஊ) கவிராசர் .: பசி அறிந்து சற்றுக் குறையச் சாப்பிடுகிறவனிடத்திலே இன்பம் நீங்காது நிற்கும்; அதுபோலே, வெகுவாகச் சாப்பிடுகிறவன் இடத்திலே வியாதி நீங்காமல் நிற்கும், எ-று.

ஏ) பழைய2 : தனக்குச் செரிக்கும் அளவறிந்து உண்பவனி-டத்து உண்டாகிய இன்பம் போல, இடைவிடாது நிற்கும், செரிக்கும் அளவறியாது மிகப் பெரிய இரையை விழுங்குவானிடத்து நோய்-களும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

### 'இழிவு'

'அறும் அளவு', 'பசியறிந்து' என்பன மணக்குடவர், கவிராசர் உரைகள். 'தீபாக்கினி' அதாவது 'உணவுகளைச் செரிப்பிக்கும் பித்த நீரின் அளவு' பரிதியார் உரை. இவற்றி-னும் உண்டு செரித்துக் குறைந்ததைக் காட்டிலும் சிறிது குறை-வாகவே உண்டல் என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன.

இழிவறிந்துண்பான்கண் இன்பம் உண்டாதல் உறுதி: அது போலக் கழிபேரிரையான்கண் துன்பம் உண்டாதலும் உறுதி என எதிர்மறை உவமை காண்க.

இராம 'உண்டது அறுதற்குமான கழிவு' என்பர். இரைக்குடல் வேறு; மலக்குடல் வேறு; மலக்குடல் கழிவினைக் கழிக்காவிடின் இரைக்குடலிலே செரித்த பொருள் தங்கி நோயையுண்டாக்கும். ஆதலால் கழிந்த அளவு உண்ணுக என்றுரைப்பர். இங்ஙனம்

அளந்துண்ணல் கூடாமையின் பரிமேலகழர் போன்றோர் உரைகள் சிறந்தன.

வரத. 'இழிவு-அளவிற்குக் குறைவாக' என்பர். ஆசிரியர்கள் 'இரை' என்பதற்குக் காட்டும் நயம மிக இனிமையானது.

ஒ) ஒப்புமைப்பகுதி :-

ஓ) மேற்கோள்பகுதி :

நச்சி.: எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்தே என்பதற்கு மேற்கோள். —தொல். சொல்.,61

காரி.: விதி எதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியதற்கு மேற்கோள். —மாறன்,109.

95. 7. தீயளவன்றித் தெரியான்பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். (947)

உரைப்பகுதி :

அ) மணக்.: பசியின் அளவன்றி ஆராயாதே மிகவுண்பானாயின் நோய் மிக உண்டாம், எ—று.

இது நோய் தீர்ந்தாலும் பசியளவு அறியாதே உண்பானாயின் மீண்டும் நோயாமாதலான், அளவறிந்து உண்ணல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி .: உதராக்கினி[1] அளவை யறியாமல் கறிபதார்த்தம் உருசியறிந்து புசித்தான் மூன்று வகை நோயால் மிடைப்படுவான் எ-று

இ) பரிப் .: வயிற்றில் தீயினது அளவு அன்றி ஆராயாதே மிக உண்பான் ஆயின் மிக நோய் உண்டாம், எ-று.

இது நோய் தீர்ந்தாலும் தீ அளவு அறியாது உண்பான் ஆயின் மிண்டும் நோய் வரும். ஆகலான் அளவு அறிந்து உண்ண வேண்டும என்றது. பொரிக் கஞ்கிக்கூழ் ............

ஈ) காளி .; இவ்வாறு தனது அங்கிக்குத் தக்க அளவு என்பது ஒன்று இன்றிப் பின்னும் அவ்வுண்பதனை மற்று இது உண்டிக்குத் தகும் தகாது என்று தெரிந்து உணரானுமாய் முன் கூறியாங்குக் கழிபேர் இரையாகப் பெரிது உண்ணுமாயின் அவன்கண் வரும்நோய் ஒரளவு இன்றி உளதாம், எ—று.

1. உதராக்கினி — வயிற்றுத் தீ

உ) **பரிமேல்.:** தன் பகுதியும் அதற்கு ஏற்ற உணவும் காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத்தீயளவன்றி ஒருவன் மிக உண்ணுமாயின் அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும், (எ-று).

தெரியாமை வினைக்குச் செய்படுபொருள்கள் அதிகாரத்தால் வந்தன. நோய் சாதியொருமை. இவை இரண்டுபாட்டானும் அவ்வகை உண்ணாவழிப்படும் இழுக்குக் கூறபட்டது.

ஊ) **கவிராசர்.:** தன் சரீரப் பிரகிருதியும்[2] அதற்கேற்ற உணவும் அது சாப்பிடுகிற காலமும் அறிந்து உண்ணாமல், வேண்டிய பொழுது வேண்டிய வஸ்துவைத் தன் வயிறு நிறைய உண்டால் அவனுக்கு இலக்கமில்லாத வியாதிகள் வரும்.

எ) **பழைய 2.:** 'பெரிதுண்பான்' பாடம்.

தன் வயிற்றில் நிற்கும் நெருப்பின் அளவும் பசியளவும் அதற்கேற்ற உண்ணும் உணவின் அளவும் ஆராய்ந்து அறியான் பெரிது உண்ணுமாயின் அவன் நோய் அளவிலாமற் படுவான்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நோய் தீர்ந்தாலும் பசி அளவு அறியாதே உண்பானயின் மீண்டும் நோய் உண்டாம்' என்ற **மணக்குடவர்** உரையின் கருத்து விளங்கவில்லை. நோய் என்றது பசியையா? அன்றி இதுபோலப் பலகாலும் அளவறியாது உண்டமையால் உண்டான நோயா? எது என்பதை உணரக்கூடவில்லை.

'தன் உடலியற்கையையும், அதற்கேற்ற உணவை-பசியின் அளவையும், காலத்தையும் ஆராயது எண்ணின்' என்ற **பரிமேலழகர்** உரை விளக்கமானது.

**தேவநேயர், பரிமேலழகர்** முதலானோர் உரைகள் 'தெரியான் தீயளவன்றிப் பெரிதுண்ணான்' எனக்கொண்டு கூட்டிக்காணப்பட்டவை. **மணக்குடவர்** தெரியான் என்பதை ஆராயாது என வினையெச்சமாக்கிக் கொண்டனர். **பழைய உரைகாரர்** 'வயிற்றுத் தீயின் அளவு, பசியளவு அதற்கேற்ற காலயளவு, உண்ணும் உணவின் அளவு, இவைகளை ஆய்ந்து அறியாமல்' என்பர். இவற்றுள் **பரிமேலழகர் பழைய உரைகள்** சிறந்தன.

2. சரீரப் பிரகிருதி — உடலோடு கூடிய உயிர்

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பெரிதுண்ணின் நோயாளவின்றிப் படும் :**

உண்டி வெய்யோர் உறுபிணி எளிது. - முதுமொழி., 8 : 7

95.8. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 948

உரைப்பகுதி :

அ) **மணக்.:** நோயினையும் ஆராய்ந்து, நோய்வருவதற்குக் காரணத்தையும் ஆராய்ந்து அந்நோய் தீர்க்கும் நெறியையும் ஆராய்ந்து, அது தீர்க்குங்கால் தப்பாமற் செய்க, எ-று.

இது நோய் தீர்க்குமாறு கூறிற்று.

ஆ) **பரிதி .:** மூன்றுவகை நோயை நாடி, நோய்வந்த காரணத்தையும் நாடி, அது பொறுக்கிற வகையையும் நாடி, போகிற-வகையையும் பார்ப்பான் பரிகாரி[1], எ-று.

இ) **பரிப் .:** நோயினையும் ஆராய்ந்து நோய் வருவதற்குக் காரணமும் ஆராய்ந்து உறும்நோய் தீர்க்கும் நெறியும் ஆராய்ந்து தப்பாமல் செய்க, எ-று.

இது நோய் தீர்க்கும் ஆறு கூறிற்று.

ஈ) **காளி :** இவன் உற்ற நோய் இது என்று மருத்து நூல் முறையினால் ஆராய்ந்தும், இவற்கு இந்நோய் வருவதற்குக் காரணம் யாது என்று இங்ஙனம் தெரிந்து நோக்கிப் பின்னும் அந் நோயினை இனிது ஆத் தணிக்கும் திறம்[2] அறிந்தும், அவர் இடங்களில் செயல் விழையாமல்[3] வாய்ப்பச் செய்க, எ—று.

உ) **பரிமேல் :** மருத்துவனாயினான் ஆதுரன்[4]மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளால் இன்னது என்று துணிந்து, பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய்-நாடி பின் அதுதீர்க்கும் உபாயத்தினை அறிந்து, அதனைச் செய்யும்வழிப் பிழையாமல் செய்க, எ-று.

1. பரிகாரி — நீக்குபவன்
2. தணிக்கும் திறம் — நீக்குந் திறம்
3. செயல் விழையாமல் — மாறுபாடான செயல்கள் ஏற்படாமல்
4. ஆதுரன் — நோயால் பீடிக்கப்பட்டவன்

காரணம் உணவு செயல் என முற்கூறிய[5] இரண்டும். அவற்றை ஆயுள் வேதமுடையார் நிதானம் என்ப. அவை நாடுதற்பயன நோயினையும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருந்துசெய்தல், உதிரங் களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய[6] செயல்களெல்லாம் அடங்குதற்கு. 'அது தணிக்குர்வாய்' என்றார் "கழுவாயுமுள"[7] என்றார்பிறரும். பிழையாமை-பழையமருத்துவர் செய்துவருகின்ற முறைமையில் தப்பாமை.

**ஊ) கவிராசர்** : வைத்தியனானவன் வியாதியஸ்தனைப் பார்த்து, இது இன்ன வியாதி என்றும் இன்னதினாலே வந்ததென்றும் அறிந்து துணிந்து, அது வருத்துகிற உபத்திரவம்[8] தீர்க்கும் வழியையும் அறிந்து, பிறகு மருந்து கொடுக்கவேணும், எ-று.

**எ) பழைய 2** : மருத்துவனாயினான், நோயுடையானிடத்து நிகழ்கின்ற நோயின் குறிகளான் இன்னதென்று உணர்ந்து, பின், அது வருவதற்குக் காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, பின், அதுதீர்க்கும் உபாயத்தினை யறிந்து அதனைச் செய்யும் வழி பிழையாமல் வாய்ப்பச் செய்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

**தேவநேயர்** உரை 'நோய் நாடும் வழி முறைகள் நோயாளியின் சொல், நாடி, உடற்குறிகள், சிறுநீர், கழிபொருள் என்ற நான்கு என்பர். இவற்றுடன் நாடி பேசும் காலங்களையும் குறிப்பர். அனைவரும் நோய் இன்னது எனத் துணிவகை கூறக் நா சு. மருந்து செய்யுமிடத்து நாடுவன கூறுகிறார். இதன் உரைகள் அனைத்தும் மருத்துவன் செயற்றிறங்களை வகுக்கின்றன என்பதில் மாற்றமில்லை.

## ஓ) ஒப்புமைப்பகுதி :

**நோய்முதல் நாடுதல் :**

---

5 முற்கூறிய — 941-ஆம் குறளிற் கூறின

6. முதலிய என்றமையின் பற்றிடல் (சுக்கு மிளகு முதலிய பொருள்கள் அரைத்து மேலே பூசுதல்) கலிக்கமிடுதல் (கண்ணுக்கு போடுதல்) நசியம்வார்த்தல் (மூக்கில் ஊத்துதல்) முதலியவற்றையுங் கொள்க,

7. புறம்., 34. 8. உபத்திரவம்—துன்பம்

நோய்முதல் நாடின். - பெருங். 1 35:58

நோய்முதல் உரைப்ப. - பெருங். 1.36;294

**முற்றும் :**

அரும்பிணி யுறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல - நற்., 136:2-3

நோயைத் துணிந்தே உறுநோய்முதல் நாடி அந்நோய்க்கு
ஆய மருந்தே அறிந்தூட்டும் அஃது உண்டு காட்டில்
பாய மறுக்கும் படியாம்அது பல்லு யிர்க்கும்
கூயத்தின் என்னை குரவர் உபதேசம் என்றாள். - நீல., 723

95.9. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 949

உரைப்பகுதி :

அ) **மணக்.:** நோயுற்றவனது அளவும், நோயினது அளவும், அதுபற்றிய காலமும் அறிந்து. அதற்குத் தக்கவாறு மருந்து; செய்க: ஆயுள் வேதம் வல்லவன்[1], எ-று.

ஆ **பரிதி .:** வியாதிகொண்டவன் குணமும், வியாதியின் பேரும் காலத்தையும் விசாரித்துச் செய்வான், எ-று.

இ) **பரிப் .:** நோய் உற்றவன் அளவும். நோயின் அளவும், அது பற்றிய காலமும் அறிந்து அதற்குத் தக்க ஆறு மருந்து செய்க ஆயுரு வேதம் வல்லார், எ று.

மேல் வாய்ப்பச் செய் என்றார் இது வாய்ப்பச்செய்யும் ஆறு கூறிற்று.

ஈ) **காளி .:** நோய் உற்றவனது வன்மையும், மென்மையும், அவனுக்குச் சென்ற வயது அளவு ஆம் பிறவும், அவன் உற்ற நோயாவது அவன் அனுபவத்திற்கு வந்து அடிக்கொண்ட முகமோ என்றும், இடம் கொண்டநோய் தலைசாய்ந்த முகமோ என்றும் இந்நோய் நிலை அளவு அறிந்தும், காலம் கார், கூதிர், முன்பனி, பின்பனி, சீரிளவேனில், வேனில் என்னும் அறுவகைப் பருவத்-துள்ளும் இப்பருவத்து இந்நோய்க்கு இம்மருந்து செய்தால் தீரும், விகற்பிக்கும்[2] என அறிதலும் யாரோ எனின்? வாகடம்[3] முதலிய

---

1. ஆயுள் வேதம் வல்லபன்—மருத்த்வ நூற் புலவன்
2. விகற்பிக்கும்—ஒன்று இடக்க ஒன்று செய்தல்
3. வாகடம்—வைத்திய நூல்

மருத்து நூல்களை மாசு அறக் கற்றவரே: இத்துணையும் குறிக்கொண்டு மற்று இதன் பின்னரே மருந்தினைச் செய்வானாக, எ-று.

**உ) பரிமேல்.:** ஆயுள் வேதத்தினைக் கற்ற மருத்துவன் அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால், ஆதுரன் அளவினையும் அவன்கண் நிகழ்கின்ற நோயின் அளவினையும் தன்செயற்கு ஏற்ற காலத்தினையும் அந்நூல் நெறியால் நோக்கி அவற்றோடு பொருந்தச் செய்க, எ-று.

ஆதுரனளவு - பகுதி பருவம் வேதனை வலிகளின் அளவு[4]. பிணியளவு - சாத்தியம்[5], அசாத்தியம்[6], யாப்பியம்[7] என்னுஞ் சாதிவேறுபாடும், தொடக்க நடுவீறு என்னும் அதன் பருவ வேறுபாடும்[8] வன்மைமென்மைகளும் முதலாயின. காலம் - மேற் சொல்லியன[9] இம்மூன்றும்[10] பிழையாமல் நூல்நெறியானும் உணர்வு மிகுதியானும் ஆராய்ந்து செய்க என்பார், கற்றான் கருதிச் செயல்' என்றார். இவை இரண்டு பாட்டானும் அவ்விழுக்குப் பட்டுழி[11] மருத்துவன் தீர்க்குமாறு கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்.:** வியாதியஸ்தன்குணத்தையும், வியாதியினுடைய குணத்தையும், அது தன்னாலே தீர்க்கிறதுக்கேற்ற காலத்தினையும் வைத்தியசாத்திரம் படித்தவன் அறிந்து செய்யவேணும் எ-று.

**ஏ) பழைய 2.:** ஆயுள் வேதத்தினை, வாகட சாத்திரத்தினைக் கற்ற மருத்துவன், நோய் தீர்க்கும் உபாயத்தினைக் கருதிச் செய்யுமிடத்து, நோயுற்றவன் அளவினையும், அவன்கண் நிகழ்கின்ற நோயினளவினையும், தன் செயற்கேற்ற காலத்தினையும், அந்நூல் நெறியால் நோக்கி அவற்றொடு பொருந்தச் செய்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

---

4, நோயுற்றவனுடைய இடம், வயது, அவன்படும் துன்பம், வலி இவற்றின் அளவு

5, சாத்தியம்—தீர்வது 6, அசாத்திம்—தீராதது

7 யாப்பியம்—பெரும்பான்மை, சிறுபான்மை, தீர்க்கத்தக்கதென்ற வேறுபாடுகள்

8. அதன் பருவ வேறுபாடும்—நோய் தோன்றிய காலவேறுபாடு

9. மேற்சொல்லியன அற்றததறிந்து என்னும் குறளிற் விசேடவுரையில் கூறிப் பெரும்பொழுது, சிறுபொழுது

10. இம்மூன்றும்—உற்றான் அளவும், பிணி அளவும், காலமும்

11, அவ்விழுக்குப்பட்டுழி—அளவறியாது உண்டு நோயால் வருந்தும்பொழுது

இக்குறள் மருந்து செய்முறை கூறுவது எனனும் உரைகள. நோய் உற்றவன் அளவு அறிதல் என்பது, நோயுற்றவன் இத்துணைப்பேர் என்று தொகை அறிதலா? அவனுடைய வலிமை மென்மை அறிதலா? அல்லது அவனுடைய வயது முதலியனவா? என்ற விளக்கத்தை அவாவி நிற்கின்றன, இதனை வகுத்து விளக்கும் காளிங்கர், பரிமேலழகர் உரைகளும் அதன் வழிவருவனவும் சிறந்தன.

வரத.: 'உற்றான் அளவு முதலியவற்றைக் கற்றவனாகிய மருத்துவன் கருதி - தன் அனுபவங்களை ஒட்டிச் செயல்' என்பர். இவ்வுரையாற் போந்த நயம் கல்வியறிவோடு அனுபவ அறிவும் வேண்டும் என்பது. கற்றவன், கருதிச் செயல் - தன்னனுபவத்தை ஒட்டிச் செய்க. எனவே மீளவும் செயப்படுபொருள் வருவிக்க வேண்டாமையும், ஏட்டறிவுமட்டுமன்றித் தன்பட்டறிவும் துணைக்கொண்டு செய்க என்பது தானே பெறப்படுதலானும் இவ்வுரையும் ஏற்புடையதாகும். ஏனையோர் கற்றான்-மருத்துவ நூல்களைக் கற்றவன்; உற்றான அளவு முதலியவற்றைக் கருதிச் செயல் என்றனர். படிப்பறிவும் பட்டறிவும் இணையச் செய்யும் மருத்துவமே ஏற்றமுடைத்தாதல் காண்க.

95.10. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பானால் கூற்றே மருந்து. (950)

உரைப்பகுதி:

அ) மணக்.: நோயுற்றவனும், நோய்தீர்க்குமவனும், மருந்தும், அதற்குத்தக்க மருந்தினைக் காலம் தப்பாமல் இயற்றுவானும் என்று இவ்வகைப்பட்ட நான்கு திறத்தது மருந்து, எ-று.

ஆ) பரிதி.: வியாதிகொண்டவர்க்கும் பண்டிதர்க்கும் மருந்திற்கும் பரிகாரம் பண்ணுவார்க்கும் நந்நான்குகுணமுண்டு. அது ஏதென்றால் வியாதியாளர்குணம் திடவான்[1], பதார்த்தவான்[2], கிரமத்திலேவருபவன்[3], கிளையுள்ளவன்[4] ஆக நான்கு. வைத்தியன் குணம் கற்றவன்[5] தெய்வசகாயம் உள்ளவன்[6], கண் ஆனி உள்ளவன்[7]

1 திடவான்—வலியுள்ளவன் 2. பதார்த்தவான்ன — உன்பொருளுடையான்
3, இரமத்திலே வருபவ—முறையாக உன்ண்பவன்
4, இளையுள்ளவன்—சுற்றமுள்ளவன்
5. வைத்தியம் குணம் கற்றவன்—வைத்திய நூல் படித்தவன்
6, தெய்வசகாயம் உள்ளவன்—தெய்வ நம்பிக்கை உள்ளவன்
7. கண் ஆனி உள்ளவன்—கருவிழி யுள்ளவன்

கோவணசுத்தமுள்ளவன்[8] ஆக நான்கு. மருந்தின்குணம் எளிதாய், ஒருமருந்தாய், சுத்தமுள்ளதாய், தப்பாமல் பொறுப்பதாய் உள்ள நான்கு. பரிகாரம் பண்ணுவிப்பான் குணம் வியாதியாள்பவன்மேல் பத்தி, வைத்தியன் சொன்ன கிரமத்திலே வருபவன், சோம்பின்மை உள்ளவன், கொடையுள்ளவன் ஆக நான்கு. இந்த நான்கு பேருக்கும் பதினாறு குணம் வேணும் மருந்து என்னும் அதிகாரம், எ-று.

இ) பரிப்.: நோய் உற்றவனும், நோய் தீர்க்கும் அவனும், அதற்குத் தக்க மருந்தும் அதனைக் காலம் தப்பாமல் இயற்றுவானும் என்று இவ்வகைப்பட்ட நான்கு திறத்தது மருந்து, எ-று.

எனவே இந்நான்கினும் ஒன்று தப்பும் ஆயின் நோய் தீராது என்றவாறு ஆயிற்று இது மருந்தின் பகுதி கூறிற்று.

துன்ப இயல் முடிந்தது.

ஈ) காளி.: நோயினை உற்றோன் தானும், இந்நோயான் இடர் உறக்கடவோம் அல்லேம் என்று மற்று இது தீருமளவு முயற்சியும் உணவும் குறியும் முதலிய இவ்வாறு மொழிவோம் என்னும் அறிவு உடையோன் தானேயும், ஒரு மருந்து ஆகும் இது அல்லது மருந்தாவது ஒருநோய்க்குப் பலமருந்து உளவாயினும் உற்றான் அளவும் பின் அளவும் காலமும் நோக்கினால் இவற்றுடன் பொருந்தினது யாது? மற்று அதுவும் தனி மருந்து ஆகும். இது அல்லது உழைச் செல்வான்[9] அவனது தாயினும் இனிய தன்மையன் ஆகிய உற்ற இடத்து உதவும் பெற்றியோன் யாவன்? மற்று அவன் தானும் ஒரு மருந்து ஆகும். எனவே, இந்நான்கு பகுதியும் உடையது யாது மற்று அதுவே மருந்து என்று இயம்பப்படுவது. ஆதலால் இந்நான்கினுள் ஒன்று உதவான் ஆயின் மற்று அதுவே கூற்றம், எ-று.

இனி, மற்று இவ்வாறு நல்லாரோடும் நல்லவற்றோடும் மருஉதலும்,[10] தீயாரோடும் தீயவற்றோடும் மருவாமையும் பெரும்பாலும் குடிப்பிறந்தோர்க்கு அல்லது வாராமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல்.: பிணிக்கு மருந்தாவது அதனை உற்றவன் அதனைத்தீர்க்கும் மருத்துவன் அவனுக்குக் கருவியாகிய மருந்து அதனைப் பிழையாமல் இயற்றுவான் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது, (எ-று).

---

8, கோவண சுத்தமுள்ளவன்—ஒழுக்கமுள்ளவன்

9. உழைச்செல்வான்—நோயாளியின் பக்கதிலிருந்து கவனிப்பவன்

10, மருஉதலும்—பொருந்துதலும்

நான்கு என்னும் எண் வருகின்றமையின், அது நோக்கி அப்பால் என்றொழிந்தார். நாற்கூற்றது என்பது விகாரமாயிற்று[11] அவற்றுள் உற்றவன் வகை நான்காவன: பொருளுடைமை, மருத்துவன்வழி நிற்றல், நோய்நிலை உணர்த்தல்வன்மை, மருத்துத்துன்பம் பொறுத்தல் என இவை தீர்ப்பான்வகை நான்காவன: நோய்கண்டு அஞ்சாமை[12], ஆசிரியனை வழிபட்டோதிய கலவியும் நுண்ணறிவும் உடைமை, பலகாலுந்தீர்த்துவருதல், மனமொழிமெய்கள் தூயவாதல் என இவை. மருந்தின்வகை நான்காவன: பலபிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்துதல் என இவை. இயற்றுவான் வகை நான்காவன: ஆதுரன்மாட்டு அன்புடைமை, மனமொழிமெய்கள், தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமை என இவை. இவையெல்லாம் கூடியவழியல்லது பிணி தீராமையின், இத்தொகுதியையும் 'மருந்து' என்றார். ஆயுள்வேதமுடையாரும் இவை கால்களாக நடக்கும் என்பதுபற்றிப் பாதம் என்றும் இவை மாறுபட்ட வழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமாம் என்றும் கூறினார். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன.

**காரி**: நாற் கூற்றது என்பது, கூற்று எனச் செய்யுட்டொடை காரணமாக விகாரமாயிற்று.

ஊ) **கவிராசர்**: வியாதிக்கு மருந்தாவது, அந்த வியாதியஸ்தன் அதைத் தீர்க்கப்பட்டவன், அவனுக்கு ஆயுதமாகிய மருந்து அண்டையிலே இருக்கிறவன் என்னும் நாலு பகுதியையுடைய நான்கு திறத்தது, எ-று,

எ) **பழைய2**: பிணிக்கு மருந்தாவது; நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், நோயினைத் தீர்க்கும் மருந்து, அதற்குக் கருத்தனாகத்திரிபவன்[13] (?) என்று சொல்லப்பட்ட நான்கு கூறுபாட்டினையுமுடையது மருந்து.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் மருந்து மட்டும் மருந்தாகாது. நோயுற்றவனும் ஒரு மருந்தாவன்; மருத்துவனும் மருந்தாவன்; காலந்தவறாமல்

11. நாற்கூற்றது எனத் திரிந்து வரவேண்டிய தொடர் நால்கூற்று எனச் செய்யுள் நோக்கி விகாரப்பட்டது. காரி. காண்க.
12. 'பல பிணி நோய் கண்டன் கஞ்சாமை' என்றும் பாடமுண்டு.
13. கருத்தனாகத் திரிபவன்—தலைவனாகத்திரிபவன்

மருந்துண்ணச் செய்யும் மருத்துவ உதவியாளனும் ஓர் மருந்தாவன் என நான்கும் மருந்து' என்கிறது. மருந்தொன்றும் மருந்தாக மதிக்கப்படுவார் மூவரும் சேர்ந்து மருந்து நான்காகிறது.

**பரிதி. பரிமேல்.** ஆகிய இருவரும் முற் கூறிய உற்றவன் முதலிய நான்கும் நந்நான்கு வகைப்படும் எனப்பிரித்து விளக்கந் தருவர். அவற்றை அவரவர் உரைக்கிடையிற் காணலாம், **காளிங்கர்** 'நோயினையுற்றோன் தானும் இந்நோயால் இடர் உறக்கடவேம் அல்லேம் என்றும் இது தீருமளவும் முயற்சி உணவு குறி இவ்வாறும் ஒழிவேம் என்றும் அறிவுடையோன் தானேயும் என்ற வரையுள்ள உரைப்பகுதி நன்கு விளங்கவில்லை. ஆனால் முற் கூறியாங்கு நான்கு குணங் கூறாமல் **காளிங்கர்** இரண்டு குணமே கூறுதல் காண்க. முதற்கூறிய **பரிதி பரிமேலழகர்** கூறுவன தனித்தனியே நான்காதலையும் அவற்றுட் சில வேறுபட்டிருத்தலையும், மனமொழி மெய்கள் தூயவாதலாகிய குணம் தீர்ப்பானுக்கும் உழைச்செல்வானுக்கும் பொதுவாதலையும் எண்ணிப் பார்க்க. இங்ஙனம் பிரித்து, விரித்து ஓதிய ஆசிரியர்கள் கண்ட நூற்சான்று யாதென அறியக்கூடவில்லை. **வரத.** நாற்கூற்றுப் பதினாறையும் **பரிமேலழகர்** கூறுவதாகக் காட்டியிருந்தால் நல்லது. தேவநேயரும் பரிமேலழகர் கூறியதையே கூறினர். ஆயினும் 'அப்பாற் நாற்கூற்று என்பதற்கு' **பரிமேலழகர்** கூறிய உரையையும் சிறப்பையும் 'அப்பாலைந்தும்' 'அப்பாலேழும்' எனவரு **தொல்காப்பிய** நூற்பா யாப்பைக் காட்டி மறுப்பர். ஆனால் விளக்கந் தந்திலர். **பரிமேலழகர்** 'அப்பால் அந்த நாற்பகுதியினையுடைய', 'நாற்கூற்று—உற்றவன் முதலான நான்கு கூற்றினது மருந்து' என்று உரை கண்டு நான்கு என்னும் தொகைப் பெயர் 'அப்பால்' என்ற சுட்டுப்பெயர்க்குப் பின் வருதலின் எங்ஙனம் இயையும் என்று ஐயுற்று, செய்யுளாதலின் இங்ஙனம் வருதலுமாகும் என எண்ணி இங்ஙனம் கூறினர் போலும். இதனை அப்பாலைந்தும்' 'ஏழும்' என்பன மறுப்பது யாங்ஙனம்? என்று ஆய்த்தூண்டுகிறது; அப்பால்நாற்கூற்றே என்பது 'அப்பால் ஐந்து' என்பது போல வந்த ஒரு யாப்பமைதியே; இதற்கு வேறுரையும் சிறப்பும் வேண்டா என்பது மறுப்பின் கருத்தாயின் மருந்து, நால்வகை, அவற்றுள் ஒவ்வொன்றும் நன்னால் வகை என்னும் பொருட் பகுதியை அடக்கி நிற்கிறது என்றால் சிறப்புத் தருவதொன்று தானே; ஆதலால் இவ்வுரையை மறுக்க அவ்வழிக்குத் துணையாகாது எனலாம். இங்ஙனம் பிரித்து பதினாறுவகை கோடல் பரிமேலழகருடைய சொந்தக் கருத்துமன்று; அவருக்குமுன்

**பரிதி, காளிங்கர்** தந்த கருத்துக்கள். அவற்றை இதனுள் அடக்கிக் காட்ட முயன்ற குறிப்பே இவருடையது. ஆதலால்; எண்ணி யின்புறுக:

**'உழைச் செல்வான்'**

'மருந்தினைப் பிழையாமல் இயற்றுவான்' என்பர் **பரிமேலழகர்**. இவர் கருத்து மருந்து அரைப்பவன், புடம் போடுகிறவன், காய்ச்சுகிறவன், ஆகிய ;செய்பவ்னைக காட்டுகிறது.

''பரிகாரம் பண்ணுகிறவன்' என்பர் **பரிப்பெருமாள்**. **'நோயாளனுக்குக்கூட இருந்து உதவுபவன்' என்பர் காளிங்கர். இவர்கள் கருத்து வேளைத்தவறாமல் மருந்து கொடுத்தல், உடை மாற்றுதல், படுக்கை மாற்றுதல் முதலிய செய்து கொண்டு நோயால் வருந்துங் காலத்துத் துணை புரியும் உதவியாளனைக் குறிப்பது. இம்மூன்றுரைகளில் மருந்தாவான் மருந்து செய்பவனாக இருத்தலே சிறந்த உரை.**

ஒ) ஒப்புமைப்பகுதி :

காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்
மேய்ப்பாட்ட தென்றுண்ணா ளாயினாள் — தீப்புகைபோல்
மஞ்சாடு வெற்ப மறைப்பினும் ஆகாதே
தஞ்சாதி மிக்கு விடும். — பழ.நா.,148

ஓ) மேற்கோள்பகுதி :

**மயிலை** .: சிறப்பினால் உயர்திணை அஃறிணையானதற்கு மேற்கோள். - நன்.,318

## 95. மருந்து

| | மிகினும் | மருந்தென | அற்றால் | அற்றது | மாறுபாடு | இழிவறிந்து | தீயளவு | நோய்நாடி | உற்றான் | உற்றவன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மணக்.** | 6 | 1 | 2 | 3 | 4 | 5 | 10 | 7 | 8 | 9 |
| **பரிதி.** | 5 | 2 | 1 | 10 | 8 | 4 | 3 | 7 | 6 | 9 |
| **பரிப்.** | 6 | 1 | 2 | 3 | 4 | 5 | 10 | 7 | 8 | 9 |
| **காளி.** | 3 | 7 | 1 | 6 | 2 | 4 | 5 | 8 | 9 | 10 |
| **பரிமேல்.** | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

**95-வது அதிகாரம் 'மருந்து' முற்றிற்று.**

# நூலோதி


1. அகநானூறு, களிற்றியானை நிரை, சோமசுந்தரனார், பொ, வே. உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை 1970.

2. அகநானூறு, மணிமிடைபவளம், நித்திலக்கோவை, சோம சுந்தரனார், பொ. வே. உரை, தி. தெ.சை.சி நூ.ப.க, லிமி., சென்னை, 1970.

3. அடயோக பிரதீபிகை, மொழிபெயர்ப்பு, குப்புசாமி. ராஜு, த., தஞ்சை.

4. அறநெறிச்சாரம், முனைப்பாடியார், எஸ்.பி.சி.கே. அச்சகம் வேப்பேரி, 1972.

5. ஆசாரக்கோவை, பதவுரை விளக்கவுரைகளுடன், தி. தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை,1968.

6. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்.

7. இலக்கணக்கொத்து மூலமும் உரையும், சுவாமிநாததேசிகர், ஆறுமுகநாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

8. இலக்கண விளக்கம், வைத்தியநாததேசிகர், தஞ்சை சரசு–வதி மகால்,1973.

9. இலக்கண விளக்கம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்—மூல மும் உரையும், வைத்தியநாத தேசிகர், திருவாரூர், தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை. 1973.

10. இன்னாநாற்பது, மூலமும் உரையும், தி. தெ. சை. சி. நூ. ப.க, லிமி., சென்னை. 1971.

11. இனியவை நாற்பது, மூலமும் உரையும், தி.தெ.சை.சி.நூ, ப.க., லிமி, சென்னை,1971.

12. உண்மை விளக்கம், மனவாசகங் கடந்தார், சிவஞானபோத யந்திர சாலை, சிந்தாதிரிப்பேட்டை.

13. உதயணகுமார காவியம், சோமசுந்தரனார் பொ.வே.,விளக்கவுரை,தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை, 1970.

14. உரைவேற்றுமை, சாரங்கபாணி, இரா., செல்வி பதிப்பகம் காரைக்குடி.

15. கம்பராமாயணம், பதிப்பாசிரியர் குழு, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, அண்ணாமலை நகர்.

16 கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும் சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை சி. நூ.ப.க,லிமி., சென்னை,1970.

17. குண்டலகேசி, சோமசுந்தரனார். பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., சென்னை,1970.

18. குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ. வே., உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க, லிமி., சென்னை, முதலாம் பதிப்பு, மறுஅச்சு, 1972.

19. கௌடலீயம் பொருணூல், தமிழ் மொழிபெயர்ப்பு, கதிரேசச்செட்டியார், பண்டிதமணி, மு., இராமாநுஜாசாரியார், பி,ஸ்ரீ., அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1955

20. சட்தரிசன சங்கிரகம்.

21. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், சோமசுந்தரனார், பொ. வே., விளக்கவுரை. தி.தெ.சை.சி. நூ.ப.க., லிமி., சென்னை 1726.

22. சிவபெருமான் இரட்டைமணிமாலை, 11—ஆம் திருமுறை ஸ்ரீ குமரகுருபரன்சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1971.

23. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி—க, அரசு, புலவர், சோமசுந்தரனார், பொ.வே., உரை,தி.தெ.சை.சி. நூ.ப,க.,லிமி., சென்னை,1967.

24. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி—உ, அரசு, புலவர், சோமசுந்தரனார், பொ. வே., உரை.தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

25. சுக்கிரநீதி (தமிழ்), கதிரேசச் செட்டியார், பண்டிதமணி,மு., மொழிபெயர்ப்பு, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, 1926.

26. சூதசங்கிதை. தேவராஜபிள்ளை, ரிப்பன் அச்சியந்திரசாலை சென்னை.

27, சூடாமணி நிகண்டு, மண்டலபுருடன், வித்தியாநுபாலன யந்திர சாலை, தங்க சாலைத் தெரு, சென்னைப் பட்டினம்.

28. சூளாமணி மூலமும் உரையும், பகுதி—க, சோமசுந்தரனார், பொ.வே., தி.தெ.சை.சி.நூ.க., லிமி., சென்னை, 1970.

29. சூளாமணி மூலமும் உரையும், பகுதி—உ, சோமசுந்தரனார் பெ.வே.,தி,தெ.சை,சி.நூ.க., லிமி., சென்னை, 1962.

30. செந்தமிழ், தொகுதி 1, பகுதி 8, மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

31. சேந்தன் திவாகரம், சேந்தனார், மனோன்மணி விலாச அச்சுக்கூடம். சென்னை, 1904.

32. தத்துவார்த்த சூத்திரம்.

33. தண்டியலங்காரம், தண்டியாசிரியர், சுப்பிரமணியதேசிகர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1960.

34. தனிப்பாடல் திரட்டு, சந்திரசேகர கவிராஜபண்டிதர் (பதிப்பு) வித்தியாரத்தினாகரம் அச்சகம், சென்னை, 1902.

35. திருக்கலம்பகம், உதீசிதேவர், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை

36. திருக்குறள் உரை விளக்கம், வரதராசன், ஜி., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1958

37. திருக்குறள் எளிய பொழிப்புரை. இலக்குவனார், சி., வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1963.

38. திருக்குறள், கவிராசபண்டிதர், சாது அச்சுக்கூடம், சென்னை 1949.

39. திருக்குறள், குழந்தையுரை, குழந்தை, புலவர், பாரி நிலையம், சென்னை, 1967.

40, திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயன், ஞா-, நேசமணி பதிப்பகம். காட்பாடி விரிவு, 1969.

41. திருக்குறள் தெளிபொருள் வசனம், அருணாசலக் கவிராயர், மு.ரா. , மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை.

42. திருக்குறள் தெளிவுரை, வரதராசனார், டாக்டர் மு., தி.தெ.சை,சி.நூ.ப.க.,லிமி., சென்னை.

43. திருக்குறள் நயவுரை, கோவிந்தசாமி, மு., பாரி நிலையம் சென்னை, 1962.

44. திருக்குறள் பரிமேலழகருரையுடன் குறிப்புரையும், கோபால கிருஷ்ணமாசாரியர், ஸ்ரீ உ.வே.வை.மு., சென்னை, 1965,

45. திருக்குறள் புது உரை, இராமலிங்கன், நாமக்கல், வெ., சென்னை,

46. திருக்குறள் பொழிப்புரை, சுப்பிரமணியபிள்ளை, கா., தி.தெ.சை,சி.நூ.ப.க.லிமி., சென்னை, 1955,

47. திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் நூல்நிலையம், அடையாறு வெளியீடு, சென்னை, 1961.

48. திருக்கோவையார், மாணிக்கவாசகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திரசாலை, தங்கசாலைத் தெரு, சென்னை.

49. திருநூற்றந்தாதி, அவிரோதி ஆழ்வார், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1905.

50 திருமந்திரம், திருமூலர், திருவாவடுதுறை ஆதீனம், தண்ட பாணிதேசிகர் உரையுடன்.

51. திருவந்தாதி.

52. திருவருட்பயன், உமாபதிசிவாசாரியார், கோ. சண்முக சுந்தர முதலியார், சென்னை.

53, திருவாசகம், மாணிக்கவாசகம், தண்டபாணி தேசிகர் செய்த பஞ்சாக்கர விளக்கவுரையுடன். திருவாவடுதுறை ஆதீனம்,

54. திருவிசைப்பா, 9—ஆம் திருமுறை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.

55. திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர், தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.

56. திருவெம்பாவை (சமணநூல்), திருக்குறள் மூலமும் கட்டுரைகளும், ஜைன இளைஞர் மன்றம். சென்னை.

57. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது.

58. தேவாரம், அப்பர் சுவாமிகள், 4, 5, 6, ஆம் திருமுறை—தலமுறை, ஸ்ரீகுமர குருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 1971

59. தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஏழாம் திருமுறை—தலமுறை, ஸ்ரீகுமர குருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 1971.

60. தேவாரம், திருஞானசம்பந்த சுவாமிகள் 1,2,3-ஆம் திருமுறை தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம். 1971.

61. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

62. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1972.

63. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணருரை தி தெ. தி.தெ.சை.சி.நூ ப.க.,லிமி.. சென்னை, 1961.

64. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணருரை, தி.தெ.சை.நூ.ப.க., லிமி., சென்னை,

65 தொல்காப்பியம் சொல்லதிகாரம், கல்லாடனாருரை தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி.,சென்னை, 1963.

66. தொல்காப்பியம், சொல்லதிகாரம். சேனாவரையர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை, 1970.

67. தொல்காப்பியம், சொல்லதிகாரம். தெய்வச்சிலையார் உரை, தி.தெ.சை.சி.நூ.ப க., லிமி., சென்னை, 1963.

68. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியருரை. தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1962.

69. தொல்காப்பியம், பொருளதிகாரம். இளம்பூரணர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1969.

70. தொல்காப்பியம், பொருளதிகாரம் (செய்யுளியல்). நச்சி னார்க்கினியருரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1965.

71. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ.சை.சி,நூ.ப க., லிமி., சென்னை, 1971.

72, தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, தி.தெ.சை,சி.நூ.ப.க., லிமி., சென்னை 1971.

73. தொன்னூல் விளக்கம், திறனாய்வு மூலம் விளக்கம், சுப்பிரமணியன், டாக்டர் ச.வே., தமிழ்ப் பதிப்பகம் சென்னை, 1978.

74. தோத்திரத் திரட்டு.

75. நரிவிருத்தம், திருத்தக்கதேவர், 'செந்தமிழ்' வெளியீடு, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

76. நற்றிணை நானூறு, நாராயணசாமி ஐயர், பின்னத்தூர், அ., உரையும் விளக்கமும், தி. தெ.சை. சி. நூ. ப. க.,

77. நன்னூல், காண்டிகையுரை, சடகோபராமானுஜாசாரியார் வை, மு, கிருஷ்ணமாசாரியார். சே., 18—ஆம் பதிப்பு, சென்னை, 1958.

78. நன்னூல், மூலமும் விருத்தியுரையும், புத்தம்புத்துரை சிவஞானசுவாமிகள், ச. தண்டபாணி தேசிகர் குறிப்புரை கள், பாரிநிலையம், சென்னை, 1968.

79. நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள், துறை மங்கலம், மைலம் மடம் பதிப்பு.

80. நாலடியார், பாலசுந்தரப்பிள்ளை, தி.சு., உரை, தி.தெ. சை,சி நூ.ப.க., லிமி, சென்னை, 1968.

81. நான்மணிக்கடிகை, பதவுரை விளக்கங்களுடன், தி. தெ. சை சி.நூ ப.க., லிமி., சென்னை 1966.

82. நீலகேசி, சோமசுந்தரனார், பொ. வே., விளக்கவுரை, தி. தெ சை சி.நூ ப.க.லிமி , சென்னை. 1964,

83. நேமிநாதம், குணவீரபண்டிதர், கோவிந்தராசமுதலியார், கா. ர., குறிப்புரைகள், தி. தெ சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை - 1964.

84. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி - உ, சோமசுந்தரனார், பொ. வே, உரை, தி. தெ. சை சி. நூ. ப. க., லிமி., சென்னை 1971.

85. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி—க, சோமசுந்தரனார், பொ, வே. , உரை, தி. தெ. சை. சி. நூ. ப க மி., லி., சென்னை, 1968.

86. பதிற்றுப்பத்து, மூலமும் விளக்க உரையும், துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1968.

87. பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ. வே., உரை, தி. தெ. சை. சி. நூ. ப.க., லிமி., சென்னை 969.

88. பழமொழி நானூறு, முன்றுறையரையனார், இராசமாணிக்கம் பிள்ளை, புலவர், ம., உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1967

89. புறநானூறு. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., விளக்கவுரை, தி தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை 1970.

90. புறநானூறு மூலமும் பழைய உரையும், சாமிநாதையர் உ., வே., பதிப்பு, சென்னை 1971.

91. புறப்பொருள் வெண்பாமாலை, ஐயனாரிதனார், சோமசுந்தரனார் பொ. வே., விளக்கவுரை தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை—1967.

92. பிரயோகவிவேகம் மூலமும் உரையும், சுப்பிரமணிய தீட்சிதர், தஞ்சை சரசுவதி மஹால். 1973

93. பெருங்கதை, சாமிநாதையர், உ. வே., பதிப்பு, டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல்நிலையம், 4-ஆம் பதிப்பு, திருவான்மியூர், சென்னை 1968.

94. பொன்வண்ணத்தந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார், ஸ்ரீ குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1972.

95. மணிமேகலை, மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், சோம சுந்தரனார், பொ. வே., விளக்கவுரை, தி. தெ. சை. சி. நூ.ப.க., லிமி., சென்னை, 1971.

96. மதுரைத் தமிழ்ப்பேரகராதி, கோபாலகிருஷ்ணக்கோன், இ. மா., வெளியீடு, மதுரை, 1956.

97. மாறனலங்காரம், காரிரத்னக்கவிராயர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, 1915.

98. முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், திருப்பாற்கடல் நாத கவிராயர் உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1972.

99. முத்திநிச்சயப் பேருரை, தண்டபாணிதேசிகர், ச., குறிப்புரையுடன். குருஞான சம்பந்தர், தருமபுர ஆதீனம், 1942.

100. மேருமந்திரபுராணம், வாமனமுனிவர், சாது அச்சுக்கூடம் சென்னை, 1922

101. யசோதர காவியம், துரைச்சாமிப்பிள்ளை ஔவை சு. உரை, தி. தெ, சை. சி. நூ. ப, க., லிமி., சென்னை, 1970.

102. யாப்பருங்கலக் காரிகை

103. வள்ளுவம், மாணிக்கம், வ. சுப. , பாரி நிலையம், சென்னை, 1969.

104. வள்ளுவர் கண்ட நாடும் காமமும், மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. , சென்னை, 1954.

105. வள்ளுவர், நேரிசை, அரஞ்சண்முகனார், ஸ்ரீ கிருஷ்ண விலாசம் அச்சுயந்திரம், 1919.

106. வளையாபதி, சோமசுந்தரனார், பொ. வே. விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

107. வில்லிபாரதம், வில்லிபுத்தூர் ஆழ்வார், ஆறுமுகநாவலர் பதிப்பு. வித்தியாநுபாலன யந்திர சாலை.

108. வீரசோழியம், புத்தமித்திரனார், பெருந்தேவனார் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை; 1970,

109. Tamil Lexicon, University of Madras. 1960.

# முதற்குறிப்பகராதி


| குறள் | எண் : பக்க எண் |
|---|---|
| அகடாரார் | 418 |
| அஞ்சும் | 231 |
| அமரகத்து | 97 |
| ஆய்ந்தாய்ந்து | 37 |
| ஆயும் அறிவினர் | 371 |
| அரம்பொருள் | 293 |
| அருமறை | 184 |
| அழச்சொல்லி | 44 |
| அழிவந்த | 79 |
| அழிவினவை | 22 |
| அற்றதறிந்து | 440 |
| அற்றம் | 181 |
| அற்றால் | 437 |
| அறவினையும் | 345 |
| அறிவிலார் | 176 |
| அறிவிலான் | 174 |
| அறிவின்மை | 171 |
| அன்பிலன் | 228 |
| அன்பின்விழையார் | 352 |
| ஆற்றுவார் | 303 |
| இகல்காணான் | 215 |
| இகலானாம் | 217 |
| இகலிற்கு | 214 |
| இகலின் | 209 |
| இகலெதிர் | 207 |
| இகலென்ப | 199 |
| இகலென்னும் | 203 |
| இமையாரின் | 339 |
| இருமனப் | 375 |

| | |
|---|---|
| இல்லாள்கண் | 334 |
| இல்லாளை | 337 |
| இழத்தொறும் | 425 |
| இழிவறிந்து | 445 |
| இளைதாக | 270 |
| இறந்தமைந்த | 324 |
| இன்பத்துள் | 206 |
| இனம்போன்று | 120அ |
| இனையர் | 30 |
| ஈன்றாள் | 385 |
| உட்கப்படாஅர் | 381 |
| உட்பகை | 282 |
| உடம்பாடு | 296 |
| உடுக்கை | 25 |
| உடைசெல்வம் | 423 |
| உண்ணற்க | 384 |
| உயிர்ப்ப | 273 |
| உருளாயம் | 409 |
| உலகத்தார் | 194 |
| உள்ளற்க | 51 |
| உள்ளொற்றி | 395 |
| உற்றவன் | 453 |
| உற்றான் | 451 |
| உறல்முறையான் | 287 |
| உறின்நட்டு | 92 |
| உறுவது | 94 |
| ஊதியம் | 49 |
| எட்பக | 295 |
| எண்சேர்ந்த | 347 |
| எரியால் | 315 |
| எல்லைக்கண் | 77 |
| எனைத்தும் | 113 |
| ஏதிலார் | 160 |
| ஏந்திய | 322 |
| ஏமுற்றவரினும் | 256 |

| | |
|---|---|
| ஏவவும் | 186 |
| ஒருமைச் | 153 |
| ஒல்லும்கருமம் | 109 |
| ஒன்றாமை | 289 |
| ஒன்றெய்தி | 408 |
| ஓதிஉணர்ந்தும் | 151 |
| கல்லாத | 179 |
| கல்லான் | 245 |
| கவறும் | 415 |
| கழாஅக்கால் | 167 |
| கள்ளுண்ணாப் | 402 |
| களித்தறியேன் | 397 |
| களித்தானை | 399 |
| கனவிலும் | 111 |
| காணாச் | 237 |
| காணாதாற் | 189 |
| குடிப்பிறந்து | 42 |
| குணனிலனாய்க் | 241 |
| குணனும் | 39 |
| குன்றன்னார் | 319 |
| கூற்றத்தைக் | 311 |
| கெடல்வேண்டின் | 308 |
| கெடாஅ | 83 |
| கெடுங்காலை | 54 |
| கேட்டினும் | 47 |
| கேளிழுக்கம் | 81 |
| கையறியாமை | 389 |
| கொடுத்தும் | 239 |
| சிறுமை | 412 |
| சீரிடம் | 118 |
| செப்பின் | 291 |
| செய்தேமம் | 100 |
| செயற்கரிய | 3 |
| செறுவார்க்குச் | 243 |

| | |
|---|---|
| சொல்வணக்கம் | 132 |
| தந்நலம் | 366 |
| தன்துணை | 260 |
| தீயளவன்றித் | 447 |
| துஞ்சினார் | 391 |
| தேறினும் | 263 |
| தொழுதகை | 134 |
| நகுதற் | 13 |
| நகைவகையர் | 105 |
| நட்டார் குறை | 343 |
| நட்டார்போல் | 130 |
| நட்பிற்கு உறுப்பு | 66 |
| நட்பிற்கு வீற்றிருக்கை | 28 |
| நவில்தொறும் | 11 |
| நாடாது | 34 |
| நாணாமை | 148 |
| நாணென்னும் | 387 |
| நிழல்நீரும் | 277 |
| நிறைநீர | 7 |
| நிறைநெஞ்சம் | 369 |
| நீங்கான் | 233 |
| நோய்நாடி | 449 |
| நோவற்க | 265 |
| பகல்கருதிப் | 202 |
| பகைஎன்னும் | 251 |
| பகைத்திறம் தெரிதல் | 249 |
| பகைநட்பாக் | 258 |
| பகைநட்பாம் | 139 |
| பயன்தூக்கிப் | 355 |
| பருகுவார் | 90 |
| பலநல்ல | 124 |
| பழகியசெல்வமும் | 420 |
| பழகியநட்பு | 69 |
| பழமை எனப்படுவ | 64 |
| புணர்ச்சி | 15 |
| பெண்ஏவல் | 341 |

| | |
|---|---|
| பெரிதினிது | 164 |
| பெரியாரைப் போணாது | 305 |
| பேணாது | 331 |
| பேதை பெருங்கெழீஇ | 102 |
| பேதைமை ஒன்றோ | 72 |
| பேதைமையுள் | 147 |
| பொதுநலத்தார் | 365 |
| பொய்படும் | 157 |
| பொருட்பெண்டிர் | 357 |
| பொருட்பொருளார் | 360 |
| பொருள்கெடுத்துப் | 422 |
| மருந்தென | 435 |
| மருவுக | 58 |
| மனத்தின் | 128 |
| மனம்மாணா | 285 |
| மனையாளை | 336 |
| மனைவிழைவார் | 329 |
| மாறுபாடில்லாத | 442 |
| மிகச்செய்து | 137 |
| மிகன்மேவல் | 212 |
| மிகினும் | 432 |
| முகத்தின் | 125 |
| முகநக | 20 |
| மையல் | 162 |
| யாண்டுச்சென்றி | 313 |
| வகைஅறிந்து | 267 |
| வகைமாண்ட | 317 |
| வரைவிலா | 373 |
| வரைவின் மகளிர் | 350 |
| வலியார்க்கு | 225 |
| வழிநோக்கான் | 235 |
| வாள்போல் | 280 |
| வில்லேர் | 253 |
| விழைதகையான் | 70 |
| விழையார் | 85 |
| வெண்மை | 178 |
| வேண்டற்க | 406 |

# பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 4 | நட்கப்பட்டாதார் | நட்கபடாதார் |
| | 11 | கூறுகின்றனரார் | கூறுகின்றார் |
| 3 | 15 | எனையப்பத்து | ஏனையபத்து |
| 4 | 7 | செய்துபோடற்கு | செய்துகோடற்கு |
| 5 | 21 | யாதனும் | யாதானும் |
| 6 | 4 | குறுதிக்கலப்பானும் | குருதிக்காப்பானும் |
| | 26 | எனச் | எனக் |
| 7 | 17 | நிர்மைபோல | நீர்மைபோல |
| 8 | 4 | நாடோறு | நாடோறுங் |
| | 18 | வெளவும் | வெனவும் |
| 10 | 13 | பந்தமிலாளர் | பந்தமி லாளர் |
| 12 | 11 | நல்லறிருவக் | நல்லறிவைக் |
| 12 | 13 | கொடுக்கிறப்போல | கொடுக்கிறதுபோலே |
| | 15 | தம்முட | தழ்முடன் |
| | 21 | இவையணைத்தும் | இவையனைத்தும் |
| 13 | 1 | ஒதி | ஓதி |
| 14 | 8 | அமைநாது | அமையாது |
| 19 | 2 | ஒரிடத்திருத்தல் | ஓரிடத்திருத்தல் |
| | 28 | அழுது | அமுது |
| 26 | 23 | இடிந்தவர் | இழந்தவா |
| 29 | 6 | நருமத்திலேயும் | தருமத்திலேயும் |
| 34 | 2 | இன்பத்துன்பக் | இன்ப துன்பக |
| 37 | 3 | செயிறு | செயினு |
| 41 | 3 | ஈண்க | ஈண்டுக் |
| 43 | 23 | வாளா | வாளாக் |
| 45 | 5 | ஆராய்ந்மி | ஆராய்ந்து |
| 47 | 17 | கூறிந்று | கூறிற்று |
| 48 | 17 | அளப்பாதாகிய | அளப்பதாகிய |

| | | | |
|---|---|---|---|
| 49 | 2 | சோல் | சொல் |
| 52 | 15 | கொள்ளதொழிக | கொள்ளாதொழிக |
| 53 | 15 | அறுதல் | ஆறுதல் |
| 54 | 3 | கருத்தின | கருத்தினை |
| 55 | 15 | செடுங்காலத்து | கெடுங்காலத்து |
| 56 | 3 | ஊசலாடுல் | ஊசலாடும் |
| 59 | 3 | விலைகொடுந்தும் | விலைகொடுத்தும் |
| 71 | 8 | உரிமையசல் | உரிமையால் |
| 76 | 12 | ஒகாரம் | ஓகாரம் |
| 77 | 19 | நின்றாது | நின்றாரது |
| 80 | 19 | பொறுக்குப் | பொறுக்கும் |
| | 25 | சிறத்தன | சிறந்தன |
| 83 | 24 | உண்டாயி | உண்டான |
| 88 | 13 | சொற்தொடர் | சொற்றொடர் |
| 90 | 16 | இல்லாதார் | இல் லாதார் |
| 96 | 12 | கொடுக்கபெறுவர் | கொடுக்கப்பெறுவர் |
| (அ.கு) 98 | 14 | தலையாட்த்தினையும் | தலையாட்டத்தினையும் |
| 103 | 4 | ஒதுவாரும் | ஓதுவாரும் |
| | 25 | எதின்மைக்கு | ஏதின்மைக்கு |
| 105 | 22 | வேழம் பழம் | வேழம்பரும் |
| 107 | 10 | நீதிச்சுடும் | தீச்சுடும் |
| 108 | 19 | பகுத்துதலும் | புகுத்துதலும் |
| 109 | 2 | கட்டாமல் | காட்டாமல் |
| 112 | 18 | ணவிலேயும் | கனவிலேயும் |
| 117 | 24 | எண்ணதிற் | எண்ணத்திற் |
| 119 | 6 | உள்ளவார் | உள்ளவர் |
| 124 | 15 | மன்ன | மனம் |
| 128 | 16 | ஒம்பிக் | ஓம்பிக் |

| | | | |
|---|---|---|---|
| 130 | 9 | ‘பாற்று’ன்னும் | ‘பாற்று’ என்னும் |
| 136 | 19 | தச்சி | நச்சி |
| 142 | 14 | இலி | இனி |
| 144 | 5 | நீமை | தீமை |
| 145 | 25 | மேதைமை | பேதைமை |
| 156 | 15 | தீண்டகாலம் | நீண்டகாலம் |
| 163 | 1 | ஒருடைமை | ஓருடைமை |
| 170 | 16 | விற்றறிவினாக | சிற்றறிவினனாக |
| 175 | 1 | முன்முன்செய்த | முன்செய்த |
| | 12 | புல்லறியுடையார் | புல்லறிவுடையார் |
| 177 | 21 | இவ்வுருபுடையதை | இவ்வுருபுயுடையதை |
| 180 | 22 | சுண்ணும் | கண்ணும் |
| 183 | 7 | கெரள்ளுதல் | கொள்ளுதல் |
| 188 | 26 | வினைப்பதுபோல | விளைப்பதுபோல |
| 199 | 3 | என | எனப் |
| 202 | 5 | சுருதி | கருதி |
| 203 | | தொக்கள | தொக்கன |
| 213 | 9 | அறிவுனையுடையார் | அறிவினையுடையார் |
| 223 | 18 | பகையுணர்துவதாகக் | பகையுணர்த்துவதாகக் |
| 234 | 11 | ஒதி | ஓதி |
| 240 | 14 | வேண்டும் | வேண்டும் |
| 241 | 21 | குறைளுசைகளான் | குறளுரைகளான் |
| 262 | 32 | உறவாக்கள் | உறவாக்கல் |
| 264 | 18 | விட்டுக் | விடுக |
| 266 | 21 | நொந்தைத்தாமாக | நொந்ததனைத்தாமாக |
| 281 | 26 | வான்போல | வான்போல |
| 286 | 20 | ஒர்க | ஓர்க |
| 287 | 5 | தீமைசெய்யத்துண்டும் | தீமைச்செய்யத்தூண்டும் |
| 288 | 20 | தோன்றினாயின் | தோன்றினானாயின் |
| 305 | 13 | முன்றனுருபு | மூன்றனுருபு |

| | | | |
|---|---|---|---|
| 307 | 24 | சுட்டனவாய் | சுட்டளவாய் |
| 308 | 23 | கொவ்ளப்படும் | கொள்ளப்படும் |
| 315 | 17 | பிழைத்தனால் | பிழைத்ததனால் |
| 315 | 18 | உபிர்க்கேடு | உயிர்க்கேடு |
| 317 | 18 | குற்றினையோரும் | குற்றிளையோரும் |
| 326 | 11 | சாப்புடையார் | சார்புடையார் |
| (அகு) 327 | 2 | ஆக்கம் சிதைத்தல் | ஆக்கம் |
| 331 | பக்க எண் | 231—331 | |
| | | 232—332 | |
| | | 233—333 | |
| | | 234—334 | |
| | | 235—335 | |
| | | 236—336 | |
| 339 | 24 | இல்லாருடைய | இல்லாளுடைய |
| 342 | 22 | இவனினும் | இவளினும் |
| 342 | 23 | எண்ணி | எண்ணிய |
| 344 | 19 | அற்றார் | ஆற்றார் |
| 351 | 30 | மயக்கற்க | பயங்கற்க |
| 357 | 18 | கிடந்தது | கிடந்து |
| 358 | 14 | மயக்கம் | முயக்கம் |
| 359 | 26 | மடமீதில் | மடிமீதில் |
| 360 | 13 | ஷ | ஷை |
| 367 | 27 | என்பவாற்றால் | என்பனவற்றால் |
| 370 | 29 | சிலம்புணர் | சலம்புணர் |
| 372 | 32 | சிலம்புர் | சலம்புணர் |
| 382 | 28 | திருவாகம் | திருவாசகம் |
| 386 | 14 | யிருக்குகும்? | யிருக்கும் |
| 390 | 23 | தமில் | தமிழ் |
| 397 | 8 | வுலகெலா | குலகெலா |

| | | | |
|---|---|---|---|
| 406 | 2 | ஆகுபெர் | ஆகுபெயர் |
| 407 | 22 | பெருன் | பொருள் |
| 413 | 15 | தீவினைகனையும் | தீவினைகளையும் |
| 414 | 32 | ஒர்தியே | ஓர்தியே |
| 422 | 1 | மிகத்தோட | மிகத்தேட |
| 427 | 24 | உழத்ந்தொலும் | உழத்தொறும் |
| 433 | 21 | குறைச்சலாளாலும் | குறைச்சலானாலும் |
| 436 | 18 | தேக்கின் | நோக்கின் |
| 438 | 21 | முன்னுண்டது | முன்னுண்டது |
| 445 | 1 | பாறுபடாத | மாறுபடாத |
| | குறள் 446 | இறை | இரை |
| 447 | 25 | மிண்டும் | மீண்டும் |
| 448 | 20 | பலகானும் | பலகாலும் |
| 449 | 2 | நோயாளவின்றிப் | நோயளவின்றிப் |
| (அ.கு.) 453 | 2 | உன்பொருளுடையான் | உண்பொருளுடையான் |

# திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்

| | | ரூ. பை |
|---|---|---|
| 1. | குறள் கண்ட பொருள் வாழ்வு (டாக்டர் தி. முருகரத்தனம்) | 5. 00 |
| 2. | குறள் கூறும் இறைமாட்சி (டாக்டர் தி. முருகரத்தனம்) | 7. 00 |
| 3. | வள்ளுவர் வகுத்த அரசியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்) | 6. 00 |
| 4. | வள்ளுவர் வகுத்த பொருளியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்) | 6. 00 |
| 5. | குறள் கூறும் சமுதாயம் (செல்வி. காமாட்சி சீனிவாசன்) | 10. 00 |
| 6. | திருக்குறளும் விவிலியமும் (இரண்டாம் பதிப்பு) (செல்வி. காமாட்சி சீனிவாசன்) | 10. 00 |

7. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் – அறம் 10. 00
(கோ. வ. பதிப்பு)

8. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - பொருள் 15. 00
(கோ. வ. பதிப்பு)

9. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் – காமம் 10. 00
(கோ வ. பதிப்பு)

10. திருக்குறள் உரைக்களஞ்சியம் - பாயிரவியல் 20. 00
(முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

11. திருக்குறள் உரைக்களஞ்சியம் - இல்லறவியல் 30. 00
(முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

12. குறள் கூறும் அரசு 8. 00
(டாக்டர். தி. முருகரத்தனம்)

13. திருக்குறள் உரைக்களஞ்சியம் - துறவறவியல்
ஊழியல் 30. 00
(முதுப்பெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

14. திருக்குறள் உரைக்களஞ்சியம் - காமத்துப்பால்
களவியல், கற்பியல் 60. 00
(முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

15. திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால் :
அரசியல் 120. 00
(முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

16. திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால்
அங்கவியல் - பகுதி 1 100. 00
(முதுபெரும்புலவர் – க. தண்டபாணிதேசிகர்)

17. திருக்குறள் உரைக்களஞ்சியம் - அங்கவியல் 70-00
பகுதி-II

அடுத்து வருவன :-

18. திருக்குறள் உரைக்களஞ்சியம் - ஒழிபியல்

19. திருக்குறளும் உறுதிப்பொருள்களும்
(கருத்தரங்கக் கட்டுரைகள்)